தமிழ்நாடு அரசு

மேல்நிலை

முதலாம் ஆண்டு

சிறப்புத் தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

உலகின் தலைசிறந்த செவ்வியல் மொழியான தமிழின் படைப்புக்கலைகளையும் நவீன கணித் தமிழையும் இன்றைய இளம்தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி, அவர்தம் படைப்பார்வத்தைத் தூண்டும் கருவியாக இப்பாடநூல்

அறிவு விளக்கேற்றும்
ஆசிரியர்களுக்கும்
ஆற்றலின் சுடர்களாம்
மாணவர்களுக்கும்



நுழையும்முன்
பாடப்பகுதி குறித்த அறிமுகம்

கற்றல் நோக்கங்கள்
பாடப்பகுதியின் இன்றியமையாத குறிக்கோள்களின் பட்டியல்

அறிவோம் தெளிவோம்
பாடப்பொருள் சார்ந்த புதிய செய்திகளைப் பற்றிய விளக்கம்

படிப்போம் சுவைப்போம்
பாடப்பொருள் சார்ந்து சுவையான செய்திகள்

தெரியுமா?
அரிய செய்திகள் அடங்கிய கருத்துக்கோவை

படைப்பு முகம்
இலக்கியப் படைப்பாளிகள் குறித்த அறிமுகம்

படிப்போம் பகிர்வோம்
பாடப்பொருள் குறித்த கருத்துப் பகிர்தல்

கண்ணாடி
பாடப்பொருள்சார்ந்து, தம் உள்ளம் உணர்ந்தவற்றைத் தெள்ளெனக் காட்டும் பயிற்சிக்களம்

படிப்போம் பயன்படுத்துவோம்
மேல் நிலைக்கல்விக்கான உயர்நிலைத் திறன்களை, வெளிப்படுத்தும் சிறப்புத்தமிழ்ப் பெட்டகம்

இணையச் செயல்பாடுகள்
காலத்தின் பாய்ச்சலுக்கு ஈடுகொடுக்கும் தொழில்நுட்பம்

TN_QR_TAM

பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

நேஷனல் லா ஸ்கூல் ஆஃப் இந்தியா யுனிவர்சிட்டி
National Law School of India University – NLSIU

- பெங்களூருவில் உள்ள நேஷனல் லா ஸ்கூல் ஆஃப் இந்தியா யுனிவர்சிட்டி.
- இந்திய பார் கவுன்சில், கர்நாடக பார் கவுன்சில், பெங்களூரு பல்கலைக் கழகம், கர்நாடக அரசு ஆகியவற்றின் முயற்சியால் 1987ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சட்டக் கல்வி நிறுவனம்.
- இந்தக் கல்வி நிறுவனத்தின் வேந்தர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி. இந்திய பார் கவுன்சலின் தலைவர்தான், இக்கல்வி நிலையத்தின் பொதுக் கவுன்சில் தலைவர்.
- இங்குப் படிக்கும் மாணவர்களுக்கு, ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், ஹார்வர்டு, யேல், கொலம்பியா, மிச்சிகன் போன்ற புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் படிக்க வாய்ப்பு உண்டு.
- படித்து முடித்த மாணவர்களுள் பலர் உயர்நீதிமன்றங்களிலும் உச்ச நீதிமன்றத்திலும் வழக்கறிஞர்களாகப் பணிபுரிகிறார்கள்.
- ஐந்து ஆண்டு ஒருங்கிணைந்த இளநிலை சட்டப்படிப்பில் மேல்நிலைக் கல்வி முடித்த மாணவர்கள் சேரலாம். கிளாட் (CLAT) நுழைவுத் தேர்வு மூலம் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.
- விவரங்களுக்கு: www.nls.ac.in

ஐ.ஐ.டி.டி.எம்.
Indian Institute of Tourism and Travel Management – IITTM



- சுற்றுலாத் துறையில் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்காக, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டூரிஸம் அண்ட் டிராவல் மேனேஜ்மெண்ட் (Indian Institute of Tourism and Travel Management – IITTM) கல்வி நிலையங்கள் குவாலியர், புதுதில்லி, புவனேஸ்வரம், கோவா, நெல்லூர் ஆகிய மையங்களில் செயல்பட்டு வருகின்றன.
- இங்கு பி.பி.ஏ. (Tourism and Travel) மூன்று ஆண்டு படிப்பில், மேல்நிலைக் கல்வி முடித்த மாணவர்கள் சேரலாம்.
- இப்படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள், நுழைவுத் தேர்வை (IGNTU – IITTM Admission Test – IIAT) எழுத வேண்டும். இந்திரா காந்தி நேஷனல் டிரைபல் யுனிவர்சிட்டியுடன் (Indira Gandhi National Tribal University) இணைந்து இந்த நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது.
- இத்தேர்வில் தகுதிபெறும் மாணவர்களுக்குக் குழு விவாதமும் நேர்காணலும் இருக்கும்.
- இந்தக் கல்வி நிலையத்தில் டூரிஸம் மற்றும் டிராவல் மேனேஜ்மெண்ட் (Tourism and Travel Management) தொடர்பான எம்பிஏ படிப்பும் உள்ளது.
- விவரங்களுக்கு : www.iittm.ac.in

அரசு திரைப்படக் கல்லூரி
M.G.R. Government Film and Television Institute

- சென்னையில் 1945ஆம் ஆண்டில் அடையாறு திரைப்படக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1959இல், இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபிலிம் டெக்னாலஜி என்று பெயர் மாறியது.
- 2006ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர் அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனமாகப் பெயர் மாற்றப்பட்டது.
- தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு(Cinematography), டிஜிட்டல் இன்டர்மீடியட் (Digital Intermediate), ஒலிப்பதிவு (Audiography), திரைக்கதை மற்றும் இயக்கம் (Screen Play Writing and Direction), ஃபிலிம் படத்தொகுப்பு (Film Editing), அசைவூட்டல் மற்றும் காட்சி நுட்பங்கள் (Animation and Visual Effects) ஆகிய பாடப்பிரிவுகளில் நான்கு ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்புகளைப் படிக்கலாம்.
- இங்குப் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகம் பட்டங்களை வழங்கும்.
- விவரங்களுக்கு : www.tn.gov.in.www.tnmfau.ac.in

பணிவாய்ப்புகள்

ஆசிய இதழியல் கல்லூரி (Asian College of Journalism)

தொலைக்காட்சி (Television), அச்சு ஊடகம் (Print), புதிய ஊடகம் (New Media) வானொலி (Radio) ஆகிய பிரிவுகளில் 10 மாத முதுகலைப் பட்டயப் படிப்புகள்

முப்பருவப் பயிற்சி

முதல் பருவம்

தமிழ் / ஆங்கில வழி இதழியல் மாணவர்களுக்கான பொது வகுப்புகள் ஒளிபரப்பு, இணையம், அச்சு ஊடகங்கள் குறித்த அடிப்படைக் கல்வி

இரண்டாம் பருவம் மற்றும் மூன்றாம் பருவம்

ஆங்கிலம்/தமிழ் உள்ளிட்ட பலமொழி மாணவர்களுக்கு அவர்கள் தெரிவு செய்யும் மொழியில் கற்பிக்கப்படும் பின்வரும் 16 விருப்பப்பாடங்களில் எவையேனும் மூன்று பாடங்களைத் தெரிவு செய்து கற்கலாம்.

1 . ஒளி இதழியல் (Photo Journalism)
2 . திரைப்படம் (Cinema)
3 . விளையாட்டு (Sports)
4 . அரசியல் (Politics)
5 . கலை & பண்பாடு (Art and Culture)
6 . அடையாளங்கள் (Identities)
7 . பன்னாட்டு நிகழ்வுகள் (International issues)
8 . வணிகம் (Business)
9 . பாலினப் படிப்புகள் (Gender Studies)
10. சுற்றுச்சூழலியல் (Ecology)
11. குடியுரிமை (Citizenship)
12. நலவாழ்வு (Health)
13. அறிவியல் (Science)
14. நகர படிப்புகள் (Urban Studies)
15. பொருளாதாரம் (Economics)

சிறப்புகள்

சார்க் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், இதழியல் கற்பதற்கென இக்கல்லூரி உருவாக்கப்பட்டது. இந்தக் கல்லூரியில் (ACJ) பயிலும் மாணவர்களுள் சிறப்பிடம் பெறும் மாணவர்கள், ஐக்கிய அரசில் (United Kingdom) உள்ள கார்டிஃப் பல்கலைக் கழகத்தில் (Cardiff University, Wales) ஓர் ஆய்வறிக்கை (dissertation) ஒப்படைத்து அந்தப் பல்கலைக் கழகம் வழங்கும் முதுகலை இதழியல் (M.A.–Journalism) பட்டத்தைப் பெறலாம்.

சேர்க்கை முறை – மூன்று நிலை

முதல் நிலை	–	விண்ணப்ப பரிசீலனை
இரண்டாம் நிலை	–	ஆங்கில அறிவுக்கான தேர்வு பொது அறிவு கட்டுரைத் தாள்
மூன்றாம் நிலை	–	நேர்முகத் தேர்வு (சென்னையில் நடைபெறும்)

படிப்புதவித் தொகை

சார்க் நாடுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் SAF – மதன் ஜித்சிங் படிப்புதவித் தொகை திட்டத்தின்கீழ் 10 மாதங்கள் வழங்கப்படும் படிப்புதவித் தொகை பின்வரும் நிதிஉதவிகளை உள்ளடக்கியது.

1 . கல்விக்கட்டணம்
2 . தனது சொந்த சார்க் நாட்டுக்கான விமானக் கட்டணம்
3 . தங்கும் செலவுகள்
4 . உணவுச் செலவுகள்
5 . கைச் செலவுகள்

ஐக்கிய அரசின் (UK) வேல்ஸ் நகரிலுள்ள பல்கலைக் கழகம் இந்த முதுகலைப் பட்டத்தை அங்கீகரித்துள்ளது.

- விவரங்களுக்கு : www.asianmedia.org

கவிதையியல்

- இதழ்களில் வெளியாகும் கவிதைகளைப் படித்துச் சுவைக்கும் திறன்.
- கவிதையின் பல்வேறு வடிவங்களை அறியும் திறன்.
- தாமே கவிதைகளைப் படைக்கும் திறன்.
- தமது படைப்புகளை இதழ்களில் வெளியிடும் திறன்.
- கவிதைகளைப் படித்துத் திறனாய்வு செய்யும் திறன்.
- கவிஞராக, திரைப்படப் பாடலாசிரியராக உருவாகும் திறன்.
- நாட்டுப்புறப் பாடல்வழி, தமிழர் பண்பாட்டை அறியும் திறன்.
- தனிப்பாடல்களைக் கற்பதனால், சொற்களஞ்சியம்பெருக்கும் திறன்.
- வாழ்வியல் உண்மைகளைச் சித்தர் பாடல்வழி அறியும் திறன்.
- சிற்றிலக்கியங்களின் வகைமைகளைத் தெரிந்து கொள்ளும் திறன்.

கதையியல்

- கதையைப் படித்துப் புரிந்துகொள்ளும் திறன்.
- கதையின் வடிவ மாறுதல்களை அறியும் திறன்.
- தமிழ்ப் பண்பாட்டை வெளிப்படுத்தும் கதைகளை அறியும் திறன்.
- இந்திய மொழிக்கதைகள், அயலகக் கதைகள் ஆகியவற்றைப் படிக்கும் திறன்.
- தம் சொந்த முயற்சியால், இதழ்களில் கதை எழுதும் திறன்.
- கதை எழுதுவதற்குரிய உத்திகளைப் புரிந்துகொள்ளும் திறன்.
- கதையைப் படித்துத் திறனாய்வு செய்யும் திறன்.

அரங்கவியல்

- நாடக அரங்கங்களின் அமைப்பைப் புரிந்துகொள்ளும் திறன்.
- நாடகத்தமிழின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளும் திறன்.
- நாடக உரையாடல் எழுதும் திறன்.
- ஊடகங்களுக்குத் தாமே சொந்தமாக நாடகங்கள் படைக்கும் திறன்.
- நாடகத்தில் நடிப்பதற்குரிய திறன்.
- சிறந்த பேச்சாளர்களின் பேச்சுத்திறனை அறிந்துகொள்ளும் திறன்.
- சிறந்த பேச்சாளராக உருவாகும் திறன்.
- எங்கும் எப்போதும் தயக்கமின்றித் தம் கருத்தை வெளிப்படுத்தும் திறன்.
- ஊடக நிகழ்ச்சிகளில் தொகுப்பாளராக உருவாகும் திறன்.

சிறக்கும் திறன்கள்

இலக்கணவியல்

- இலக்கணத் தெளிவுடன் மொழியைக் கையாளும் திறன்.
- தொடரமைப்புகளை அடையாளம் காணும் திறன்.
- ஊடகங்களில், தொடர்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தும் திறன்.
- படைப்பாளரின் மொழிநடையை அறியும் திறன்.
- அகராதியில் சொல்லுக்குரிய பொருளை விரைவாகக் கண்டறியும் திறன்.
- சொற்களை அகரவரிசைப் படுத்தும் திறன்.
- தாமே சொந்தமாக அகராதி உருவாக்கும் திறன்.
- மொழிபெயர்ப்பின் நுட்பங்களை உணர்ந்துகொள்ளும்திறன்.
- எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் மொழிபெயர்க்கும் திறன்.
- மொழிபெயர்ப்பு இலக்கியங்களை விரும்பிப் படிக்கும் திறன்.
- பிறமொழிகளில் உருவான படைப்புகளை ஒப்பிடும் திறன்.

ஊடகவியல்

- ஊடகங்களின் வகைமைகளை அறியும் திறன்.
- நாள்தோறும் இதழ்களைப் பயன்படுத்தும் திறன்.
- தம் படைப்புகளை ஊடகங்களில் வெளியிடும் திறன்.
- நேர்காணலில் உள்ள நுணுக்கங்களை அறிந்துகொள்ளும் திறன்.
- ஊடகத்துறையின் பணிவாய்ப்புகளை அறிந்துகொள்ளும் திறன்.
- செய்தி நிறுவனங்கள் குறித்து அறிந்துகொள்ளும் திறன்.
- சிறந்த ஊடகவியலாளராக உருவாகும் திறன்.
- திருத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி, மெய்ப்புத் திருத்தும் திறன்.
- ஊடகவியல் தொடர்பான உயர்கல்வி வாய்ப்புகளை அறியும் திறன்.

கணித்தமிழியல்

- இணையத்தின் வகைமைகளை அறிந்துகொள்ளும் திறன்.
- இணையத்தின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளும் திறன்.
- தமிழை உள்ளீடு செய்யும் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் திறன்.
- கணினியில் தமிழின் பங்களிப்பினை அறிந்து, பயன்படுத்தும் திறன்.
- பாடப்பொருளுக்குத் தேவையான தரவுகளைப் பதிவிறக்கம் செய்யும் திறன்.
- தேவையான தரவுகளைப் பெற உரலிகளைப் பயன்படுத்தும் திறன்.
- தமிழில் தட்டச்சு செய்யும் திறன்.
- வலைப்பூ உருவாக்கும் திறன்.
- தம்முடைய படைப்புகளை வலைப்பூவில் பதிவேற்றும் திறன்.
- கணினிக்குரிய கலைச்சொற்களை அறியும் திறன்.
- பாடப்பொருளுக்குரிய காணொலி உருவாக்கும் திறன்.

பொருளடக்கம்

இயல்	பொருண்மை	பாடத்தலைப்புகள்	ப. எண்
1	கவிதையியல்		
		கவிதை – ஒரு பார்வை	2
		நாட்டுப்புறப்பாடல்கள்	13
		தனிப்பாடல்கள்	15
		சித்தர் பாடல்கள்	16
		சிற்றிலக்கியங்கள்	18
2	கதையியல்		
		தமிழ்ச் சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்	32
		சிறுகதை வாசிப்பும் திறனாய்வும்	35
		சிறுகதை எழுதும் கலை	37
		சிறுகதைகள்	
		யானையின் சாவு	45
		பூ உதிரும்	49
		இறுக மூடிய கதவுகள்	57
		நசுக்கம்	64
		அயலகத் தமிழ் எழுத்தாளர் சிறுகதை	
		'பேபி' குட்டி	71
		அயலகச் சிறுகதை	
		பசி	75
		இந்தியமொழிச் சிறுகதை	
		அஷமஞ்சா பாபுவின் நாய்	79
		குறுங்கதை	
		ரப்பர் பந்து	89
		நுண்கதைகள்	
		பனித்துளியின் பேச்சு	91
		ஒற்றைக்குரல்	92

இயல்	பொருண்மை	பாடத்தலைப்புகள்	ப. எண்
3	அரங்கவியல்		
		நாடகக் கலை	100
		தெருக்கூத்தில் கட்டியக்காரன்	107
		நாடகவியல் ஆளுமைகள்	110
		'ஒரு ரூபாய்' (ஒற்றை நடிகர் நாடகம்)	113
		பேச்சுக் கலை	119
4	இலக்கணவியல்		
		இலக்கண வரலாறு	134
		தொடரியல்	142
		அகராதிக் கலை	157
		மொழிபெயர்ப்புக் கலை	162
5	ஊடகவியல்		
		இதழ்களின் அமைப்புமுறை	180
		தமிழ் இதழ்கள் – ஒரு சந்திப்பு	188
		சமுதாய முன்னேற்றத்தில் இதழ்கள்	193
		ஊடகவியலில் தமிழ் ஆளுமைகள்	198
6	கணித்தமிழியல்		
	இணையக்களம் –	இணையம் கற்போம் உலகை அறிவோம்	218
	இலக்கியக்களம் –	பனையோலைப் பாட்டனும் மின்னூல் பேரனும்	225
	உள்ளீட்டுக்களம் –	தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பம்	231
	செயற்களம் –	இணைய ஊடகம் – உருவாக்கமும் பயன்பாடும்	235

9AJ914

மின் நூல்

9AT52R

மதிப்பீடு

B145_11_ADT_TM

இணைய வளங்கள்

இயல் ஒன்று

கவிதையியல்

9B314E

தமிழ் தொன்மையான கவிதை மரபைக் கொண்டது. இயற்கையோடு இயைந்த வாழ்வியல் அனுபவங்களைக் கவிதையில் முன்வைத்ததில் மற்ற உலகமொழிகளைவிடத் தமிழ் முதன்மை பெறுகிறது.

அத்தமிழ்க் கவிதையின் ஊற்றிலிருந்து சில துளிகளைப் பருகுவதற்காக, கவிதையியல் என்னும் இப்பாடப்பகுதி அமைந்துள்ளது. இவ்வியலில் இடம்பெற்றுள்ள கவிதை- ஒரு பார்வை என்னும் கட்டுரை கவிதையைச் சுவைக்கவும் படைக்கவும் தூண்டுகிறது. நாட்டுப்புறப்பாடல்கள் மக்கள் மொழியில் வாழ்க்கை நிகழ்வுகளை நமக்குள் இசைக்கிறது. சித்தர் பாடல்கள் மெய்யியல் சிந்தனையை வளர்ப்பதாகவும், தனிப்பாடல்கள், கருத்துக் கருவூலமாகவும் சொற்களஞ்சியத் திறனைப் பெருக்குவதாகவும் அமைந்துள்ளன. சிற்றிலக்கியப் பாடல்கள், அன்பின் மேன்மையைப் பேசுகின்றன.

கற்றல் நோக்கங்கள்

- தமிழ்க் கவிதைகளின் வகைமைகளை அறிந்துகொள்ளுதல்.
- தமிழ்க் கவிதைகளின் பன்முகப்பட்ட பாடுபொருள்களைப் புரிந்துகொள்ளுதல்.
- தமிழ்க் கவிதைகளின் உத்திகளைப் பயன்படுத்த அறிதல்.
- மரபு மற்றும் புதுக்கவிதைகளைப் படைக்கும் திறன் பெறுதல்.

பாடப் பகுதி

- கவிதை–ஒரு பார்வை
- நாட்டுப்புறப்பாடல்கள்
- தனிப்பாடல்கள்
- சித்தர் பாடல்கள்
- சிற்றிலக்கியங்கள்
- ஒவியப்பா

இயல் ஒன்று

கவிதை – ஒரு பார்வை

கவிதை ஒரு மொழியின் மேன்மையான வெளிப்பாடு. மொழியின் அனைத்துக்கூறுகளையும் கொண்டு உருவாகும் கலை கவிதையைப்போல வேறேதுமில்லை. அதனால்தான் ஒரு மொழியின் மாண்பும் செறிவும் அழகும் அம்மொழியின் கவிதைகளைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன. தமிழ்ச்சமூகத்தின் பாரம்பரியம் மிக்கப் பண்பாட்டின் வேர்கள், தமிழ்க் கவிதைகளின் வழியாகவே கிளை விரிக்கின்றன.

தனது கவிதை இலக்கியத்தால்தான், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் வைத்து, தமிழ் போற்றப்படுகிறது. உலகின் பிற மொழிகளோடு ஒப்பிடுகையில் தமிழ்க்கவிதைகளின் தொன்மை, மரபு, பிறமொழிச்சார்பின்மை, இடையறாத தொடர்ச்சி ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை. அதைப்போலவே இயற்கை சார்ந்த மக்கள் வாழ்வியலைக் கொண்ட கவிதைகள், தமிழில் தான் முதலில் எழுதப்பட்டன.

சங்ககாலக் கவிதைகள்

சங்ககாலக் கவிதைகள் தமிழரின் உயர்ந்த நாகரிகச் செழுமைக்கு அடிப்படையாக அமைந்தவை. இவை அகம், புறம் சார்ந்த வாழ்வியல்நெறிகள், கலைகள், கல்வி, அரசியல், பொருளாதாரம், வணிகம், வேளாண்மை குறித்த பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

அகம்: மாந்தர், அகமனத்தில் துய்க்கின்ற காதல், அன்பு, கருணை முதலான உணர்வுகளை வெளிப்படுத்துவது அகத்திணை.

புறம்: மாந்தர், புறவாழ்வில் கொண்டாடுகின்ற வீரம், கொடை, புகழ் முதலான பண்புகளை வெளிப்படுத்துவது புறத்திணை.

அகம், புறம் சார்ந்த சங்ககாலக் கவிதைகள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய பா வகைமைகளில் அமைந்தவை.

சிறகிழந்த நாரை

எட்டுத்தொகையில் ஒன்றான குறுந்தொகையில், தலைவி மீதான தலைவனின் அன்பும், சிறகிழந்த நாரையாய்த் தலைவிக்காக அவன் வருந்துவதையும் காட்டும் பரணரின் ஓர் அகத்திணைப்பாடல்,

குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை ஆரிரைக் கணவந் தாங்குச்
சேயள் அரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.

குறுந்தொகை.128

கீழ்க்கடலில் எழுந்த அலைக்கு அருகில் நின்ற, முதுமையால் சிறகிழந்த நாரையொன்று, சேரனது மேல்கடற்கரையிலமைந்த தொண்டியென்னும் நகரில் உள்ள பெறற்கரிய உணவாகிய அயிரை மீனைப்பெற வருந்தியிருந்தது. அதுபோல, பெறற்கரியவளாகிய தலைவியைப் பெறும்பொருட்டுத் தலைவனின் நெஞ்சமும் வருந்தியிருந்ததாம்.

நீரும் நிலனும்

எட்டுத்தொகையில் ஒன்றான புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுரை கூறுவதாக அமைந்த ஒரு புறப்பாடல்,

……………….

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
…………………..

புறம்.18

உணவு கொடுத்தவரே உயிர்கொடுத்தவர். இந்த உடலானது, உணவினாலானது. உணவு என்பது யாது? நிலத்தொடு நீர் சேர்வதுதான். அப்படி இணைத்து வேளாண்மைக்கு உதவுக. அவ்வாறு உதவியவரே உலகத்தில் உயிரையும் உடலையும் நிலைநிறுத்தி வாழ்வித்தவராவர் என்று நீரின்றி அமையாத உடல்குறித்துக் கூறி, நீர்வளம் பெருக்க, பாண்டிய மன்னனை அறிவுறுத்துகிறார்.

அறநிலைக் கவிதைகள்

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வாழ்வியல் அறங்களைக் கற்பிப்பவை. இவை வெண்பா என்னும் யாப்பு வகைமையில் அமைந்தவை. உலகளாவிய அறிஞர்களால் ஒப்பற்ற நூலென ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறள், கீழ்க்கணக்கு நூல்களுள் குறிப்பிடத்தக்கது .

காப்பியக் கவிதைகள்

மன்னர்களைப் பாடிய காலம் மாறிக் குடிமக்களைக் கவிதையின் பாடுபொருளாய்க் கொண்டெழுந்தவை தமிழ்க்காப்பியங்கள். காப்பியக்கவிதைகள் காதல், வீரம், அறம் என அனைத்தையும்பாடிச்செல்கின்றன. உரையொடு கலந்த கவிதைகளை அறிமுகம் செய்தவை இவை. பிறப்பின் வேற்றுமையொழிப்பு, பசியின்றிவாழ்தல்,வாழ்வின் நிலையாமைஎனக் காப்பியக்கவிதைகளின் தளம் பரந்துபட்டது. மாந்தருக்கு அறமே நிலையானது என்பதைக் குறிக்கும் மணிமேகலைக்காப்பியத்தில் அமைந்த கவிதை இங்கு நோக்கத்தக்கது.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது

மணிமேகலை, சிறைசெய்காதை 135–138

பக்திக் கவிதைகள்

காப்பியக் கவிதைகளுக்குப் பின் இயற்றப்பட்ட தமிழ்க்கவிதைகளின் பாடுபொருள், கடவுளை நோக்கியதாக அமைந்திருந்தது. இறையுணர்வோடு அன்பையும் அறத்தையும் இக்காலக்கவிதைகள் வெளிப்படுத்தின. இறைவன்மீது காதல் கொண்டு எழுதப்பட்ட இக்கவிதைகள் இன்றும் மாறாத்தன்மையோடு பக்தி மணம் வீசிக்கொண்டிருக்கின்றன.

சிற்றிலக்கியக் கவிதைகள்

பக்திவழியே பயணித்துக்கொண்டிருந்த தமிழ்க்கவிதைகள் பின்னர், சிற்றிலக்கியங்கள் என்னும் விமர்சனப்பாங்கு கொண்ட புதியவடிவில் மக்களிடம் பேசத்தொடங்கின. சிற்றிலக்கியத்தின் வடிவங்களான, கோவை, உலா, அந்தாதி போன்றவை கடவுள், அரசன், சிற்றரசர்கள், வள்ளல்களைப் புகழ்ந்தன. எனினும் பள்ளு, குறவஞ்சி போன்றவை எளிய மக்களின் வாழ்வியலையும் எடுத்தியம்பின.

தனிப்பாடற் கவிதைகள்

புலவர் பெருமக்கள் தம் கவிப்புலமையைக் காட்ட நல்லதொரு களமாகத் தனிப்பாடல்கள் பயன்பட்டன. சிலேடை, விடுகதை, சொற்புதிர் போன்ற சிந்தைக்கு விருந்தாகும் வகையில் புலவர் பெருமக்கள் பாடிச்சென்ற பாடல்கள் தனிப்பாடற் திரட்டுகளாக நமக்குக் கிடைக்கின்றன.

தமிழ்க் கவிதையின் மரபு வடிவம்

தமிழ் யாப்பிலக்கணத்தின்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கூறுகளுடன் அமைந்த பாவினங்களை மரபுப்பாடல் என்கிறோம். சங்க காலம் தொடங்கி இன்றைய நவீனகாலம் வரையிலும் மரபுக்கவிதைகள் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா முதலிய மரபார்ந்த பா வடிவங்களிலும் கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி போன்ற

வடிவங்களிலும் மரபுக் கவிதைகள் அமைகின்றன. இன்றளவும் தமிழில் மரபு மாறாத கவிதைகள் எழுதப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய வடிவ முன்னெடுப்புகள்

காலத்திற்குக் காலம் செய்யுள் வடிவில் மாற்றங்கள் நேரலாம்;தமிழ்மொழி வளர்ச்சிக்கு இத்தகைய மாற்றங்கள் பயன்படுமானால் அவற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்று கருதியே தொல்காப்பியர்,

விருந்தே தானும் புதுவது புனைந்த

யாப்பின் மேற்றே (தொல் – செய். 231)

என்று, 'விருந்து' என்பதைப் 'புதுமை' என்னும் பொருளில் கூறியுள்ளார். தற்காலத்தின் சிறுகதை, நாவல், புதுக்கவிதை முதலியவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உலகளவில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகக் கவிதையின் வடிவத்திலும் பாடுபொருளிலும் மாற்றம் ஏற்பட்டது.தனிமனித வாழ்வியல், சமூக வாழ்வியல் போன்றவை நவீனக்கவிதைகளின் பாடுபொருள்களாயின. புதுக்கவிதை, ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்றியூ, குக்கூ என நவீன வடிவங்களிலும் தமிழ்க்கவிதைகள் பயணிக்கத் தொடங்கின.

புதுக்கவிதை

தொன்று தொட்டு வரும் மரபு வடிவத்தில், இன்றும் தமிழ்க் கவிதைகள் எழுதப்பட்டு வருகின்றன; எனினும் யாப்பிலக்கண வரையறைக்கு உட்படாமல் சுதந்திரமான வெளிப்பாட்டோடும் கட்டற்ற தன்மையோடும் இன்றைய புதுக்கவிதை எழுதப்படுகிறது. இஃது உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், சிலேடை, முரண், இருண்மை முதலான பல்வேறு உத்திகளைத் தன்னகத்தே கொண்டு, கவிஞனின் விரிசிந்தனைக்கேற்பப் புதுப்புது வடிவமெடுக்கிறது. யாப்பிலக்கணம் அறிந்தோருக்கு மட்டுமே என்றிருந்த கவிதையின் தன்மையை மாற்றி, பொதுவாசகர்களும் கவிதையைப் படிக்கவும் படைக்கவும் புதுக்கவிதை வாய்ப்பளிக்கிறது.

சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது

சொற்புதிது சோதிமிக்க நவகவிதை.

என்று பாரதியார் பாடுவதைப் புதுக்கவிதைக்குரிய விளக்கமாகக் கொள்ளலாம். புதுக்கவிதையில் கவிஞன் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன் மனத்தில் தோன்றியதை, அதே உணர்வுடன் வெளிப்படுத்த முடிகிறது. இதில் சமூக அவலங்கள், சமகால நிகழ்வுகள், எதிர்பார்ப்புகள், இலக்குகள் என அனைத்தும் பாடுபொருள்களாகின்றன.

பாரதி தந்த புதுமை

பாரதியார்தாம் முதன்முதலில் தமிழ்க்கவிதைகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். அவரின் கவிதை வடிவம் தமிழின் மரபான செய்யுள் வடிவமும் நாட்டார் பாடல்களின் ஓசை வடிவமும் கலந்தது. என்றாலும் உலகளவில் தோன்றிய நவீன கவிதைப் போக்கினை உள்வாங்கிக்கொண்ட அவர் உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் மரபுக்கும் புதுக்கவிதைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். தம் காலத்தில் மட்டுமல்லாது இன்றும் அவர் தமிழ்க்கவிதையின் வலிமையான குரலாக ஒலிக்கின்றார். இவர் 'காட்சி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை, தமிழில் புதுமையான வடிவத்தில் அமைந்த முதல் வசன கவிதையாகும்.

காட்சி

தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,

ஞாயிறு நன்று, திங்களும் நன்று.

வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன.

மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது.

கடல் இனிது, மலை இனிது, காடு நன்று.

இவ்வாறு பாரதியின் முயற்சியால் தமிழில் கட்டற்ற கவிதை வடிவம் பிறந்தது.

பாரதியின் காலம்

பாரதி வாழ்ந்த காலம் இந்திய வரலாற்றில் திருப்பங்கள் நிறைந்தது. மக்கள், அந்நியர்

ஆட்சிக்கு எதிராக விடுதலை வேட்கையோடு போராடியகாலம். பாரதி அச்சூழலில்மொழியை மக்களுக்கான குரலாகப் பயன்படுத்தத் துணிந்தவர். இதனால், பாரதியின் கவிதைகள் விடுதலைக்கான குரலாக ஓங்கி ஒலித்தன. இவர்தம் கவிதைகளில் தேசவிடுதலை, பெண்விடுதலை, சமுதாயவிடுதலை இம்மூன்றும் பாடுபொருள்களாயின. அவர் கவிதையைச் சமூகமாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினார். நாட்டுப்புறச் சிந்து இசையின் அடிப்படையில் அமைந்த கவிதைகளைப் பாடியதனால் 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்பட்டார். மக்களோடு நேரடியாகப் பேசும் முறையில் கவிதைகளைப் படைத்தார். இவர் ஷெல்லியின் கவிதைகளால் கவரப்பட்டு, தமது பெயரை 'ஷெல்லிதாசன்' என மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசன் காலம்

'பாரதியின் கவிதாமண்டலத்தைச் சேர்ந்தவர்' என்று பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் பாரதிதாசன். இவர், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் வளர்ச்சி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல் முதலான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், புவியை நடத்து; பொதுவில் நடத்து போன்ற பொதுவுடைமைக் கருத்துகளையும் மக்களாட்சித் தத்துவங்களையும் தமது பாடல்களில் வலியுறுத்தியவர். சந்த அமைப்புகளிலும் இசையிலும் பாரதியைப் போலவே நல்ல தேர்ச்சி பெற்றவர். மக்கள் இலக்கிய வடிவங்களான கும்மி, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு போன்ற வடிவங்களிலும் கவிதை பாடியவர். பழைய யாப்பு வடிவில் ஆசிரியப்பாவையும் ஆசிரிய விருத்தங்களையும் பாடினார். சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதை,

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பாநீ

என்ற பாடலின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

பாரதிதாசன் தன்மொழி, தன்னாடு, தன்மக்கள் எனப் பாடியதால் இரஷ்யக் கவிஞரான 'இரசூல் கம்சதோவ்' என்பவரோடு ஒப்பிடப்படுகிறார். பாரதிதாசனைப் பின்பற்றி எழுதிய வாணிதாசன், முடியரசன், சுரதா போன்றோர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

மணிக்கொடி காலம்

பாரதியைத் தொடர்ந்து தமிழில் பல்வேறு கவிஞர்கள் புதுக்கவிதை எழுத முற்பட்டனர். புதுக்கவிதை முன்னோடிகளான ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராசகோபாலன், க.நா. சுப்பிரமணியன், புதுமைப்பித்தன் போன்றோர் மணிக்கொடி இதழில் புதுக்கவிதைகளை எழுதினர். ந.பிச்சமூர்த்தி 'புதுக்கவிதையின் தந்தை' என அறியப்படுகிறார். இக்காலகட்டத்தில் கிராம ஊழியன், கலாமோகினி ஆகிய இதழ்களும் வசன கவிதைகளை வெளியிட்டன.

எழுத்து காலம்

புதுக்கவிதை மறுமலர்ச்சியும் வலிமையும் பெற்றதில் எழுத்து இதழின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சி.சு. செல்லப்பா தொடங்கிய 'எழுத்து' இதழ் புதுக்கவிதையின் சோதனை முயற்சிகளை வெளியிட்டது. 'பெட்டிக்கடை நாரணன்', 'விஞ்ஞானி' போன்ற கவிதைகளை ந. பிச்சமூர்த்தி எழுதினார்.

எழுத்து இதழ் புதிய கவிஞர்களின் கவிதைகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்தது. புதுக்கவிதை குறித்த பல திறனாய்வுக் கட்டுரைகளும் அதில் வெளியாகின. மயன், சிட்டி, வல்லிக்கண்ணன், வேணுகோபாலன், டி.கே.துரைஸ்வாமி (நகுலன்), தருமுசிவராமு (பிரமிள்), சி.மணி, சுந்தரராமசாமி (பசுவய்யா), எஸ். வைத்தீஸ்வரன் போன்றோர் எழுத்து இதழில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அக்காலத்தில் தமிழில் புதுக்கவிதைத் தொகுப்பாகப் 'புதுக்குரல்கள்' என்னும் நூல் வெளிவந்தது. இக்கவிதைத் தொகுப்பு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பாரதியைப் பின்பற்றியது. 24 கவிஞர்களால் எழுதப்பட்ட 63 கவிதைகளைக் கொண்டது.

கசடதபற காலம்

1970இல் வெளிவந்த 'கசடதபற' என்னும் இதழ் ஞானக்கூத்தன், கலாப்பிரியா, கல்யாண்ஜி போன்ற புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இக்காலகட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த நகர வாசகர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தின.

வானம்பாடி காலம்

1971இல் கோவையிலிருந்து 'வானம்பாடி' இதழ் வெளிவந்தது. இதில் எழுதிய கவிஞர்கள் 'மானுடம் பாடவந்த வானம்பாடிகள்' என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டனர். அவர்கள் சமூக நலனில் அக்கறை கொண்டு தம்கவிதைகளை உருவாக்கினர். சிற்பி, மீரா, நா. காமராசன், மு. மேத்தா, புவியரசு, இன்குலாப், தமிழன்பன், கங்கைகொண்டான், அக்னிபுத்திரன், சக்திக்கனல், சிதம்பரநாதன் போன்றோர் இக்காலத்தில் குறிப்பிடத்தக்கக் கவிஞர்களாவர்.

இதே காலகட்டத்தில், அப்துல் ரகுமான், அபி போன்ற கவிஞர்கள் இயக்க அடையாளங்கள் இல்லாமல் தனித்துவத்தோடு கவிதைகள் எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்கவிதையின் உத்திகள்

உவமை

தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை உணர்த்துவது உவமை ஆகும். பொருள் உணர்த்தும் முறைகளில் உவமை முதலிடம் பெறுகிறது.

ஒரு உலோபி
பஞ்சத்தில் காக்கும்
பணப்பையைப் போல்
கோடை மேகம்

–வைரமுத்து

கோடையின் வறட்சியில் வானமெங்கும் கருக்காத மேகங்கள் இருந்து பயனில்லை. கருணை இல்லாத கருமியின் பணப்பை போல என்று அழகாய்ப் பேசுகிறது இவ்வுவமை.

உருவகம்

உவமையும் பொருளும் வேறுவேறல்ல, ஒன்றே எனக்கருதுமாறு செறிவுற அமைவது உருவகமாகும்.

வாழ்க்கையும் காவிரி
அதிலெங்கும் கிளிக்கூண்டு;
வார்த்தையே மணல்
ஓசையே ஜலம்
என் தீராத வேட்கையே
குவிக்கும் விரல்கள்
பாட்டென்னும் கூண்டொன்று அமைத்தேன்
அழகென்னும் கிளியை அழைத்தேன்
ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்
அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்

–ந .பிச்சமூர்த்தி

படிமம்

உவமை, உருவகம் என்பன மேன்மேலும் இறுகிய நிலையில்தான் படிமம் தோன்றுகிறது. முற்றுருவகப் பாங்கில் அமைந்து, தெளிவானதோர் அகக் காட்சியை வழங்கும் ஆற்றலுடையதே படிமம் ஆகின்றது.

விடிவு
பூமித் தோலில்
அழகுத் தேமல்
கதிர்கள் கமழ்ந்து
விரியும், பூ
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி

– பிரமிள்

குறியீடு

ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக அக்கருத்தைத் தன்னகத்தே மறைமுகமாகக் கொண்ட சொற்களையோ, காட்சிகளையோ குறியீடாகப் பயன்படுத்தி எழுதப்படும் கவிதை.

சமரச வேசமிட்ட குரங்கினிடம்

அப்பத்தைப் பறிகொடுத்த

பூனைகள் நாம்.

– அப்துல்ரகுமான்

அங்கதம்

அங்கதம் என்பது நகைப்புடன் கூடிய எள்ளலாகும். இது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வதாகவும், சமகால நிகழ்வுகளில் எதிரிடைப் பதிவுகளாகவும் அமையும். குற்றங்களைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் சுட்டித் திருத்தவல்ல திறனுடையது அங்கதம்.

திண்ணை இருட்டில்

எவரோ கேட்டார்

தலையை

எங்கே வைப்பதாம்

என்று

எவனோ ஒருவன்

சொன்னான்

களவு போகாமல்

கையருகே வை !

–ஞானக்கூத்தன்

முரண்

ஒன்றுக்கு ஒன்று எதிரானவற்றைக் கொண்டு அமைப்பது முரண் என்னும் உத்தியாகும். மரபுக் கவிதைகளில் இது முரண்தொடை எனக் கூறப்படும். மாறுபட்ட இரு பொருள்களை அடுத்தடுத்து இணைத்துப் பார்ப்பதில் சுவையும் கூடும்; நினைவிலும் நிற்கும்.

என் கவிதை

கை குலுக்கும்

காலில் விழாது

உடுத்திக்கொள்ளும்

போர்த்திக்கொள்ளாது

– மு. மேத்தா

சிலேடை

சிலேடை என்பது ஒரு சொல் இருபொருள்பட வருவதாகும். பொதுவாகப் புதுக்கவிதை சொல்லலங்காரத்தை விரும்புவதில்லை. எனவே, சில கவிதைகளில்தான் சிலேடை உத்தியைக் காணமுடிகின்றது.

என்னை

எவரெஸ்டாகப் பார்க்கும்

எந்த ஊரின் பார்வையில்

என் வீழ்ச்சி

மிகப் பெரிய வீழ்ச்சியே

எனினும்

இது இயல்பானது

தடுக்க முடியாதது

. . . என் வீழ்ச்சி

நீர்வீழ்ச்சியே

என்னும் மீராவின் கவிதையில் 'வீழ்ச்சி' என்னும் சொல் 'வீழ்தல்' என்னும் பொருளிலும், 'நீர்வீழ்ச்சி' என்பது 'அருவி' என்னும் பொருளிலும் சிலேடைகளாக வந்துள்ளன.

இருண்மை

சொல்லுக்கும் அஃது உணர்த்தும் பொருளுக்கும் இடையிலான தொடர்பு தெளிவற்றிருக்கும். படிப்பவர்தம் அறிவுக்கும் உணர்வுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அது வெவ்வேறு பொருளைத் தரும்.

நான் ஒரு உடும்பு

ஒரு கொக்கு

ஒரு ஒன்றுமேயில்லை

– நகுலன்

இவ்வாறு புதுக்கவிதைகள் பல்வேறு உத்திகளைக் கொண்டு அமைகின்றன.

புதுக்கவிதையின் உள்ளடக்கம்

இயற்கை மரபு

தமிழ்க்கவிதை சங்ககாலம் முதலே இயற்கையோடு இணைந்த வாழ்வியலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இயற்கையின் அழகை உருவகப்படுத்தும் தமிழ்க்கவிதை மரபு புதுக்கவிதையிலும் தொடர்கிறது.

கவிஞர் சிற்பி, தம் கிராமத்து நதியினைப் பற்றிப் பாடும்போது,

இது

நான் தவழ்ந்த கோரைப்பாய்

முகம் பார்த்த கண்ணாடி

என் காதலின் வீணை

நினைவுகளைப் பொதிந்து வைத்த

வெள்ளித்தாள்.

என்று அழகுபட எழுதுகிறார். கோரைப் பாயாகவும் கண்ணாடியாகவும் வீணையாகவும் வெள்ளித்தாளாகவும் நதியை அவர் உருவகப்படுத்தியுள்ளார்.

மனிதநேயம்

தமிழ்க்கவிதைகள் மனித நேயத்திற்கு முக்கியத்துவம் தருபவை.

ஆட்டுக்குட்டியை

மடியில் போட்டு

ஈத்திக் கொண்டிருக்கும்

அம்மாவும்

பசுவிற்கு

உண்ணி பிடுங்கி நிற்கும்

அப்பாவும்

படித்ததில்லை...

உயிர்களிடத்தில் அன்பு வேணும்

– இளம்பிறை

அழகியல்

கவிதையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்வதற்கும் சுவைப்பதற்கும் அழகியல் உணர்வு தேவை. ஒரு மொழியின் வெளிப்பாட்டுத் தரத்தினை மதிப்பிட அதன் அழகியல் பதிவுகளே அடிப்படையாகும்.

கல்யாண்ஜியின் கடிதப்பெட்டியிலோ ஒரு அழகிய கவிதையே கடிதமாக வந்து கிடக்கிறது.

தினசரி வழக்கமாகிவிட்டது

தபால் பெட்டியைத்

திறந்து பார்த்துவிட்டு

வீட்டுக்குள் நுழைவது.

இரண்டு நாட்களாகவே

எந்தக் கடிதமும் இல்லாத

ஏமாற்றம்

இன்று எப்படியோ

என்று பார்க்கையில்

அசைவற்று இருந்தது

ஒரு சின்னஞ் சிறு

இறகு மட்டும்

எந்தப் பறவை

எழுதியிருக்கும்

இந்தக் கடிதத்தை.

ஓர் ஓவிய வீட்டின் தனிமை அனுபவத்தை அழகுபடப்பேசுகிறது இக்கவிதை.

பட வீட்டின் தனிமை

சுவரில் தொங்கும்

வரைபட மர நிழலும்

ஒற்றைக் குடிசையும்

கொஞ்சம் பூக்களும்

ஒரு வானமும்.

கண்கள் பூக்கள் மீதிருக்க

மனம் தேடிப் போகிறது

வரைபட வீட்டின்

தனிமையை.

–சல்மா

நம்பிக்கைத் தளிர்கள்

வெற்றிக்கு அடித்தளமாக அமைவது தன்னம்பிக்கையே. ஒவ்வோர் இலையுதிர்கால வீழ்ச்சிக்குப் பிறகும் புதியதளிர்களோடு வரும் வசந்தகாலம் போல ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் வெற்றியின் தளிர்கள் தழைக்கும் என்ற நம்பிக்கையைப் பேசுகிறது இக்கவிதை.

புதுத் தளிர்களால்
கொண்டாடக் காத்திருக்கிறது தரு
ஒரு பாடலுடன் வரவிருக்கிறது குயில்
உடன் தளர்ந்து விழும் சருகுகளைத் தொடர்ந்து
ஒரு பழுப்பாடை தரித்து
என் பயணமும்
இலையுதிர் காலம் எனினும்
சருகாவதில்லை வேர்கள்

– இன்குலாப்

பெண்ணுரிமை

பெண்களுக்கு வழங்கும் மதிப்பில்தான் ஒரு நாகரிக சமுதாயத்திற்கான அளவுகோல் உள்ளது. தமிழ்க்கவிதைகள் பெண்விடுதலைக்குத் தொடர்ந்து குரல் கொடுத்துவருகின்றன. தமிழ்க் கவிதைப் போக்கில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் ஒன்று பெண்களின் பங்களிப்பு. பெண்கள் சந்திக்கும் பல்வேறு அனுபவங்கள் கவிதைகளாகின்றன.

நாளும் கிழமையும்
நலிந்தோர்க்கு இல்லை
ஞாயிற்றுக்கிழமையும்
பெண்களுக்கில்லை

– கந்தர்வன்

ஏடுகளில்
முன்பக்கத்தில்
அட்டையில்!
வீடுகளில்
பின்பக்கத்தில்
அடுப்பங்கரையில்!

– காசி ஆனந்தன்

யானைக் கதை

முன்பு ஒருநாள்
தன் அம்மா சொன்ன
கதைக்குள் இருந்த யானை ஒன்றை
என் அம்மா எனக்குப் பரிசாகக்
கொடுத்தாள்
வெகுகாலம் கழித்து வெயில் தாளாமல்
யானையுடன் கடலுக்குச் சென்றேன்
மலைமலையாய் அலையெழுப்பி
நீருக்குள் புதைத்துப் புரட்டி
கிண்டிக் கிளறி வெளியே என்னைத்
தூக்கி எறிந்தது கடல்
கரைந்து மீந்த பாதித் தும்பிக்கையுடன்
கடலும் வானமும் ஒன்றாகக் கலந்து
பிளிறியது
சோகத்துடன் திரும்பினேன்
ஊரே கூடி என்னை வேடிக்கைப்
பொருளெனப் பார்க்க
குழம்பிப் பின் திரும்பினேன். . .
தெருவெல்லாம்
அலையலையாய் என்பின்னே
தொடர்ந்துவர
கடலில் கரைந்த ஒற்றை யானைக்கு
ஓராயிரம் தும்பிக்கைகளென
என் மகள் ஊருக்கெல்லாம்
ஒரு கதை சொல்லிச் செல்கிறாள்.

– மாலதி மைத்ரி

விளிம்பு நிலை மாந்தர்

எண்பதுகளின் பிற்பகுதியில் தமிழில் விளிம்புநிலை மாந்தருக்கான கவிதைகள் எழுதப்பட்டன. இக்கவிதைகள் விடுதலையை, சுயமரியாதையை மீட்டெடுப்பதற்கான குரலாக வெளிப்படுகின்றன.

தேசமெங்கும் இரட்டை வாழிடங்களில் உள்ள விளிம்பு நிலை மாந்தரின் வலிகளைப் பதிவு செய்கிறது இக்கவிதை ...

எட்டாத தொலைவில் நின்று
பனையோலைகளில் தேநீர் அருந்துகையில்
உதட்டிலிருந்து வழியும் சாதியின் வலி
காலணிகளற்ற பாதங்களை நனைக்க
என் கிராமத்தின் ஓவியம்
தன்னைச் சட்டமிட்டுக் கொள்கிறது
ஒருபோதும் உறங்காத ரெட்டை வாழிடத்தில்

–சுகிர்தராணி

திருநங்கையர்

திருநங்கையரின் கோணத்திலிருந்து பேசும் இக்கவிதைகள் அழகான படிமங்களோடு வெளிப்படுகின்றன. அவர்களை ஏற்றுக்கொண்டு, அரவணைத்துச் செல்லவேண்டுமென்கிற உணர்வை நமக்குள் ஏற்படுத்துகின்றன.

சந்திப்பிழை

காலமழைத் தூறலிலே
களையாய்ப் பிறப்பெடுத்தோம்
தாய்ப்பாலின் சரித்திரத்தில்
சதிராடும் புதிரானோம்
விதை வளர்த்த முள்ளானோம்
விளக்கின் இருளானோம்
சந்திப்பிழை போன்ற
சந்ததிப்பிழை நாங்கள்
காலத்தின் பேரேட்டைக்
கடவுள் திருத்தட்டும்

– நா. காமராசன்

உனக்குத் தெரிவதில்லை

சில சமயங்களில் உனக்குத் தெரிவதில்லை
சிறிய எறும்புகளை மிதித்தபடி நீ நடந்து போவதை
சில சமயங்களில் நீ உணர்வதில்லை
பசும்புல்லை நசுக்கியபடி கடந்து போவதை
தெரிந்தும் உணர்ந்தும்
கடந்து போகிறாய்
என் அந்தரங்கத்தை மிதித்தபடி...
யார் எவர் என்று தெரியாமல்
தொடர்ந்து மிதிபட்டே வருகிறோம்
நானும் இருண்ட என் எதிர்காலமும்!!

– லிவிங் ஸ்மைல் வித்யா

புதிய வடிவங்கள்

உலகளாவிய கவிதை வடிவங்களைப் பின்பற்றித் தமிழ்ச்சூழலுக்கேற்ற உள்ளடக்கங்களுடன் ஹைக்கூ, லிமெரிக், லிமெரைக்கூ, சென்ரியூ ஆகிய வடிவங்களில் கவிதைகள் எழுதப்படுகின்றன.

துளிப்பா – ஹைக்கூ

16ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் தோன்றிய பழைமையான 'ரென்கா' பாடல் மரபிலிருந்து 'ஹைக்கூ' கவிதை உருவானது. இக்கவிதை வடிவத்தினைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பாரதியார். ஹைக்கூ கவிதை மூன்று வரிகளால் ஆனது. முதல் இரண்டு வரிகளில் கூறப்படும் கருத்தை மூன்றாவதுவரி விடுவிக்கும். மிக நுணுக்கமான ஒரு காட்சி அல்லது ஓர் அனுபவப் பதிவைக் கொண்டிருக்கும் ஹைக்கூ, கடைசி வரியில் படிப்பவரின் மனத்தில் வெளிச்சமான ஓர் உணர்வை ஏற்படுத்திவிடும்.

தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்

அகதி முகாம்
மழையில் வருகிறது
மண்வாசனை

பள்ளிக்குப் போகாத சிறுமி
செல்லமாய்க் குட்டும்
ஆலங்கட்டி மழை

– அறிவுமதி

அடிவிழ அடிவிழ
அதிரும் பறை
தலைமுறைக் கோபம்

– மித்ரா

குட்டிமீன்
கடித்துச் சென்றது
தூண்டில்காரன் காலை

கோடை மரம்
கொஞ்சம் இலை
நிறைய வானம்

– வைகறை

ஆயிரம் முட்கள் இருந்தும்
ஒரு தூண்டில் முள்ளிடம்
தோற்றுவிடுகிறது மீன்

மிதித்து விடாதே
அழகாயிருக்கிறது
குழந்தையின் நிழல்

நிழலில் கொஞ்சம் இளைப்பாறலாம்
விழித்ததும் வெட்ட வேண்டும்
இதே மரத்தை

– பனிமலர் என்னும் கவிதைத்தொகுப்பிலிருந்து

நகைப்பா – சென்ரியூ

சென்ரியூ கவிதை என்பது ஹைக்கூ கவிதையின் பரிணாமமாகும். ஹைக்கூவின் கட்டுப்பாடுகளை உதறிவிட்டு, அது சுதந்திரமாக இயங்குகிறது. ஹைக்கூவின் தத்துவமும் கருத்தாழமும் அதில் குறைவு. அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் குறும்புத்தனமும் நகைச்சுவையும் கலந்து சென்ரியூ எழுதப்படுகிறது.

அடடே!
இந்தப்பழம் இனிக்கும்
ஏணியுடன் அதே நரி

– தமிழன்பன்

மதில்மேல் பூனை
இரண்டு பக்கமும்
நாய்கள்

–அமுதபாரதி

இயைபுக் குறும்பா – லிமெரிக்

லிமெரிக் கவிதை ஐந்து அடிகளைக் கொண்டிருக்கும். முதல், இரண்டாம் மற்றும் கடைசி அடிகளில் உள்ள கடைசிச்சொற்கள் தம்முள் ஒலி ஒற்றுமை கொண்டு, மழலையர் பாடல்கள் போல் இருக்கும். இவை நகைச்சுவை, எள்ளல் ஆகிய கூறுகளைக் கொண்டமைபவை. ஈழத்துக் கவிஞர் மகாகவியின் லிமெரிக் கவிதையொன்று....

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்.
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான் போனான் முச்சூலன்

இக்கவிதையில் இன்றைய சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் ஊழல், நையாண்டி செய்யப்படுகிறது.

இயைபுத்துளிப்பா – லிமெரைக்கூ

ஹைக்கூ கவிதையின் மூவடி எல்லையையும், லிமெரிக் கவிதையின் இயைபையும் கொண்டது லிமெரைக்கூ. இது வாழ்வியலை நகைச்சுவையோடு வெளிப்படுத்துவது. தமிழில் முதலில் லிமெரைக்கூ எழுதியவர் ஈரோடு தமிழன்பன். அவரது லிமெரைக்கூ கவிதைகளுள் சில...

வானம் கூட்டுள் வருமா?
பறக்க மறந்து ஒடுங்கி இருந்தால்
சிறகு பெருமை தருமா?

குழந்தை வளர்ந்த தொட்டில்
கிழிந்து கந்தல் ஆன பின்னும்
பாடும் தாய்மை மெட்டில்

மீராவின் குறும்பாக்கள்

ஈழத்துக் கவிஞர் மகாகவி எழுதிய லிமெரிக் கவிதைகளினால் பெரிதும் கவரப்பட்ட கவிஞர் மீரா, அதன் தாக்கத்தில் குறும்பாக்களை எழுதினார். லிமெரிக்கின் ஓசை இயைபுகளை மாதிரியாகக் கொண்டு எழுதப்பட்ட அக்கவிதைகள், 'குக்கூ' எனும் தலைப்பில் தொகுப்பாக வெளிவந்துள்ளன.

ஆயிரம் ஈக்கள்
மொய்க்கும் ஆசையில்
வானத் தட்டில்
இராத்திரிக் கிழவி
சுட்டு வைத்த
ஒற்றைத் தோசையில்

மொழிபெயர்ப்புக்கவிதை

மொழிபெயர்ப்பின் வாயிலாக நம்மை வந்தடையும் கவிதைகளை வாசிக்கும்போது, நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள், காட்சிப் பதிவுகள், கருத்தாக்கங்கள், கேள்விகள், அதிர்வுகள் ஆகியன புதிய தேடல்களைத் தரக்கூடியவை. அவ்வகையில் அமைந்த ஒரு மராத்தியக் கவிதையின் தமிழ்மொழிபெயர்ப்பு...

என் பசி

ஒத்துக்கொள்கிறேன்
நான் உன் அடிமை என்பதை.
உணர்ந்து கொண்டேன்
இழந்துபோன
என் உரிமைகளை.

நானே வலிய வந்து
ஏற்றுக்கொண்டு விட்டேன்
–என் சுதந்திரம்
பறிக்கப்பட்டதை–

என்னைக் கட்டிப்போட்டிருக்கும்
சங்கிலியின் மறுமுனை
உன் வசம்.
நீ ஆட்டுகிறாய்

என்னை ஆட்டுவிக்கிறாய்
காட்சிப்படுத்துகிறாய்
என்னைக்
காட்சிப் பொருளாக்கும்
கண்காட்சிகளை
என் சம்மதத்துடனேயே
அரங்கேற்றுகிறாய்

என்னை விடுவிக்க
என் மீது கொண்ட
அபரிதமான உன் காதலால்கூட
என் கட்டுகளை அவிழ்க்கும்
நாட்களைப் பற்றிப் பேசாதே.

கெட்டுப்போன
எச்சில் பருக்கையை
என் தட்டில் பரிமாற
காத்திருக்கும்
ராட்சதக் கைகள்

என்ன செய்யட்டும்
இருந்துவிட்டுப் போகிறேன்
உனக்கு மட்டுமேயான
அடிமையாக.

களைத்துப் போய்விட்டேன்.
கண்டவர்கள்
கால்களை எல்லாம்
நக்கி நக்கி
வறண்டு போய்விட்டது
என் நாக்குகள்.
அதில் பிறக்கும்
என் வார்த்தைகள்
வலிமை குன்றிவிட்டன
எழுந்து நிற்க முடியாமல்
சரிந்து விழுகின்றன.
பற்களுடன் உரசியபின்னும்
என் நாக்குகளுக்குக்
கிடைக்கவில்லை
வார்த்தைகளின்
ஒலிச்சுவடு.

என் உதடுகளைப்
பற்றிக்கொள்ள துடிக்கும்
வார்த்தைகள்
எல்லா இடங்களிலும்
பலகீனமாய் எதிரொலிக்கின்றன.

எதுவும் மிச்சமில்லை
என்வசம் இப்போது.
கண்களில்
தென்படும் கடைசி
எதிர்பார்ப்பைத்தவிர

உன் தட்டில்
எஞ்சி இருக்கும்
கடைசிப் பருக்கையைத்
தருவாயா
என் பசித்தீர்க்க?

– மராத்தியில் கவிதா மகாஜன்
– தமிழில் புதியமாதவி

இவ்வாறாகத் தமிழ்க்கவிதை தன் ஆதி மரபிலிருந்து இன்றைய நவீனம்வரை உன்னதமான வெளிப்பாட்டுடன் வளர்ந்து வருகின்றது.

தமிழ் வாழ்வின் பண்பாட்டுத் தளத்தில் கிளைத்து விரியும் தமிழ்க்கவிதைகள், உலகளாவிய கவனத்தையும் சிறப்பையும் பெற்றுவருகின்றன.

நாட்டுப்புறப்பாடல்கள்

சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, கலை ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியே நாட்டுப்புறப் பாடல்கள். இவை, நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள், உழைக்கின்றபோது களைப்புத் தோன்றாமல் இருப்பதற்காகவும் தம் வாழ்வில் பெறும் அனுபவங்களை வெளிப்படுத்துவதற்காகவும் பாடப்படுகின்றன. இப்பாடல்கள், மக்களது உணர்வுகளையும் மனப்பதிவுகளையும் எத்தகைய புனைவுகளுமின்றி இயல்பாகப் பதிவு செய்கின்றன.

இப்பாடல்கள் காலத்தால் முந்தியவை என்றாலும் இன்றும் நம் வாழ்க்கையில் மண்ணின் மணம் மாறாமல் இசைத் தன்மையோடு ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை நாடோடிப்பாடல், பாமரப்பாடல், மரபுவழிப்பாடல், ஏட்டிலெழுதாக் கவிதை, மக்கள்பாடல், பரம்பரைப்பாடல், நாட்டார்பாடல் என்று பல்வேறு பெயர்களில் மக்கள் அழைக்கின்றனர்.

மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்த நாட்டுப்புறப்பாடல்கள் தாலாட்டுப்பாடலாக, தெம்மாங்குப்பாடலாக, விளையாட்டுப்பாடலாக, கும்மிப்பாடலாக, ஒப்பாரிப்பாடலாக, தொழிற் பாடலாக, வழிபாட்டுப்பாடலாகப் பல்வேறு வடிவங்களில் எட்டுத்திக்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. வில்லிசை, பொம்மலாட்டம், தெருக்கூத்து, கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மியாட்டம் ஆகிய நாட்டுப்புறக்கலை வடிவங்களில் நாட்டுப்புறப்பாடல் தன் ஆற்றலை வெளிக்காட்டுகிறது.

விறகொடிக்கும் பெண்

வேகாத வெயிலுக்குள்ளே – ஏ தில்லலோ லேலோ
விறகொடிக்கப் போற பொண்ணே – ஏ தில்லலோ லேலோ
காலுனக்குப் பொசுக்கலையோ – ஏ தில்லலோ லேலோ
கத்தாழ முள்ளு குத்தலையோ – ஏ தில்லலோ லேலோ
காலு பொசுக்கினாலும் – ஏ தில்லலோ லேலோ
கத்தாழ முள்ளு குத்தினாலும் – ஏ தில்லலோ லேலோ
காலக் கொடுமையாலே – ஏ தில்லலோ லேலோ
கஷ்டப்படக் காலமாச்சு – ஏ தில்லலோ லேலோ
கஷ்டப்பட்டுப் பாடுபட்டு – ஏ தில்லலோ லேலோ
கழுத்தொடிய சுமக்கும் பொண்ணே – ஏ தில்லலோ லேலோ
எங்கே போய் விறகொடிச்சி – ஏ தில்லலோ லேலோ
என்னசெய்யப் போற பொண்ணே – ஏ தில்லலோ லேலோ
காட்டுக்குள்ளே விறகொடித்து – ஏ தில்லலோ லேலோ
வீட்டுக்கத சொமந்து வந்து – ஏ தில்லலோ லேலோ
கால்ரூவாய்க்கு வெறகு வித்து – ஏ தில்லலோ லேலோ
கஞ்சிகண்டு குடிக்கணுமே – ஏ தில்லலோ லேலோ

நாட்டுப்புறப் பாடல்கள் உள்ளத்து உணர்வுகளை வடிகட்டாமல் அப்படியே கொட்டும் பாடல்கள். அதனால் அவற்றில் இயல்பான சொல்வளமும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பும் நிறைந்திருக்கும். அத்தகு பாடல்களுள் ஒன்று இது.

தாயை இழந்த மகள் பாடுவது

பூமியிலே விட்டாலே – என்
பொற்பாதம் நோகுமென்பாய்.
தரையிலே விட்டாலே – என்
தங்கக்கால் நோகுமென்பாய்.

மார்மேலே தொட்டி கட்டி – எனக்கு
மடிமேல் நடை பழக்கி,
தோள்மேலே தொட்டிகட்டி – எனக்குத்
துடைமேல் நடை பழக்கி

நெய் ஊட்டி வளர்த்த – உன்
நேசத்தை நான் மறவேன்
பால் ஊட்டி வளர்த்த –உன்
பாசத்தை நான் மறவேன்

கள்ள நிழலாச்சே – இனி எனக்குக்
கண்டவர்கள் தாயாச்சே
வேலி நிழலாச்சே – இனி எனக்கு
வேண்டியவர்கள் தாயாச்சே

குடத்தோடே தண்ணீர் – எனக்குக்
குளிரத்தான் வளர்த்தாலும்
தாய்வளர்த்த தண்ணீர்போல்
தாகந் தணியா தெனை.

தெரியுமா?

சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற கவிதை நூல்கள்

1968 – வெள்ளைப் பறவை – அ. சீனிவாச ராகவன்

1978 – புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் – வல்லிக்கண்ணன்

1982 – மணிக்கொடி காலம் – பி. எஸ். ராமையா

1999 – ஆலாபனை – அப்துல் ரகுமான்

2002 – ஒரு கிராமத்து நதி – சிற்பி. பாலசுப்பிரமணியம்

2004 – வணக்கம் வள்ளுவ! – ஈரோடு தமிழன்பன்

2006 – ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு. மேத்தா

2009 – கையொப்பம் – புவியரசு

2017 – காந்தள் நாட்கள் – இன்குலாப்

தனிப்பாடல்கள்

தமிழில் தனிப்பாடல்களின் வரலாறு தனித்துவமானது. சங்ககாலப் பாடல்களைத் திரட்டித் தொகுத்தது போல இன்று வரையிலும் புதிய தடங்களில் பல திரட்டுகள் வெளிவருகின்றன. தனித்தனிப் புலவர்களால் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களைத் தனிப்பாடல் என்கிறோம். புலவர்கள் தம் உள்ளக்கருத்தை எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் விருப்பம் போல எழுதிய பாடல்கள் இவை. இவற்றைத் தமிழறிஞர்களும் சுவைஞர்களும் பெரிதும் முயன்று, தேடித் 'தனிப்பாடல்கள்' என்ற தலைப்பில் தொகுத்திருக்கிறார்கள். இப்பாடல்களில் பலவித உணர்ச்சிகள், ஓசை விளையாட்டு, சொல் விளையாட்டு, விடுகதை என அத்துணை சுவைகளும், நயங்களும் காணக்கிடக்கின்றன.

தனிப்பாடலில் சொல்விளையாட்டு

முற்பாதி போய்விட்டால் இருட்டே யாகும்
முன்னெழுத் தில்லாவிட்டால் பெண்ணே யாகும்
பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லாம்
பிற்பாதியுடன் முன்னெழுத்து இருந்தால் மேகம்
சொற்பாகக் கடை தலைசின் மிருகத்தீனி
தொடர்இரண்டாம் எழுத்து மாதத்தில் ஒன்றாம்
பொற்பார்திண் புயமுத்து சாமி மன்னா
புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே

– அழகிய சொக்கநாதர்

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அழகிய சொக்கநாதர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர் பாடிய தனிப்பாடல்கள் இருபத்தைந்திற்கும் மேற்பட்டவை. முத்துசாமி என்பார் இவரை ஆதரித்தவர் ஆவார். இவர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். காந்திமதி அம்மை மீது பிள்ளைத்தமிழ் மாலை, அந்தாதி போன்றவற்றைப் பாடியுள்ளார்.

பொருள்

முத்துசாமி வள்ளலே! இக்கதையின் உட்பொருளை ஆராய்ந்து சொல்லுக. ஒரு சொல்லின் முதற்பாதியை நீக்கிவிட்டால் இருப்பது 'அல்' என்னும் சொல். அதற்கு இருள் என்பது பொருள். அச்சொல்லின் முதலெழுத்தாகிய 'பு' என்னும் எழுத்தை நீக்கிவிட்டால் 'தையல்' ஆகும். அச்சொல்லுக்குப் பெண் என்பது பொருள். அச்சொல்லின் பிற்பாதியை நீக்கிவிட்டால், 'புதை' என்னும் கட்டளையிடும் சொல்லாகும். அச்சொல்லின் பிற்பாதி எழுத்துடன் முன்னெழுத்தாகிய 'பு' சேர்த்தால் மேகம் என்னும் பொருள்படும் 'புயல்' ஆகும். அந்தச் சொல்லின் முதல் எழுத்தாகிய 'பு' வையும் கடை எழுத்தாகிய 'ல்' என்பதையும் சேர்த்தால் விலங்குகள் தின்னும் 'புல்' ஆகும். அச்சொல்லின் இரண்டாம் எழுத்தாகிய 'தை' மாதத்தில் ஒன்றாகும். 'புதையல்' என்ற சொல்லைப் பலவாறு பிரித்துப் பல அரிய பொருள் விளங்குமாறு சொல் விளையாட்டில் ஈடுபடும் புலவர் தமிழ்ச்சொல் வளத்தின் மாண்பினைப் புலப்படுத்துகிறார்.

தனிப்பாடலில் விடுகதை

பத்துக்கால் மூன்றுதலை பார்க்கும்கண் ஆறுமுகம்
இத்தரையில் ஆறுவாய் ஈரிரண்டாம் – இத்தனையும்
ஓரிடத்தில் கண்டேன் உகந்தேன் களிகூர்ந்தேன்
பாரிடத்தில் கண்டே பகர்

– சுந்தர கவிராயர்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் சுந்தரகவிராயர். உழவுத்தொழிலின் உயர்வை நன்குணர்ந்தவர். எட்டையபுரம் அருணாசலத்துரை, தையூர் முத்து முதலானோர் இப்புலவரை ஆதரித்துள்ளனர்.

பொருள்

இவ்வுலகில் பத்துக்காலும் மூன்று தலையும் பார்க்கும் கண் ஆறும் முகம் ஆறும் வாய் நான்கும் ஆகிய இத்தனையும் உடைய ஒன்றை ஓரிடத்திலேயே பார்த்தேன்; அதன்மீது விருப்பம் கொண்டேன்; மகிழ்ச்சி அடைந்தேன். இவ்வுலகில் இந்தப் புதுமையைக் கண்டு என்னவென்று கூறுவாயாக.

நயம்

இரு காளையை ஏரில் பூட்டி ஓட்டும்போது, இரு காளையின் கால் எட்டும், ஓட்டும்

மனிதன் கால் இரண்டும் ஆகப் பத்துக் காலும், காளையின் தலை இரண்டும், மனிதன் தலை ஒன்றும் ஆக மூன்று தலையும் இருக்கும்.

இரு காளையின் கண்கள் நான்குடன் ஏர் ஓட்டுபவன் முகத்திலுள்ள இரு கண்களும் சேர்த்து ஆறு ஆவன காண்க. காளை, மனிதன் முகங்களோடு கொழுமுகம் மூன்றும் சேர்த்து முகம் ஆறும், காளைகள், மனிதன் ஆகியோரின் மூன்று வாயோடு நாழிவாய் ஒன்றும் சேர்த்து வாய் நான்காவதும் காண்க.

(உழவுத்தொழிலின் மேன்மை)

சித்தர் பாடல்கள்

'சித்து' என்ற சொல் அறிவு என்னும் பொருளைக் குறிக்கும். சித்தர் என்னும் சொல் அறிவுடையோர் என்ற பொருளைத் தரும். சித்தர் இலக்கியம் சடங்குகள், சம்பிரதாயங்கள், சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றிற்கு எதிரான விமர்சனத்தை முன்வைத்தது. அதே சமயம் மெய்யியல் அனுபவங்களையும் முன்வைத்தவர்கள் சித்தர்கள். உருவ வழிபாடுகளை எதிர்த்துள்ளனர். சாதி, சமய ஏற்றத்தாழ்வையும் எதிர்த்துள்ளனர். வானவியல், யோகாசனம், வர்மம், பஞ்சபட்சி சாஸ்திரம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்தனர். பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி சித்தர்களின் கொடையாகும். சித்தர்கள் தமது கண்டுபிடிப்புகளையும் ஆற்றல்களையும் மக்களின் நன்மைக்கே பெரும்பாலும் பயன்படுத்தினர். இவர்கள் தம்பாடல்களின்வழி சமூகத்தில் நிலவிய மூடப்பழக்கவழக்கங்களை எதிர்த்தவர்கள். சித்தர்கள் பெரிதும் மனித வாழ்வின் நிலையற்ற தன்மையைக் கூறி, மனத்தையும் உடலையும் யோகப்பயிற்சியால் ஒருமுகப்படுத்தலாம் என்னும் தத்துவத்தைத் தந்துள்ளனர். சித்தர்கள், மருத்துவத்தில் 'சித்தமருத்துவம்'

என்ற தனிப்பிரிவு தோன்றும்படி பல்வேறு நோய்களையும் அவை தீர்க்கும் மருந்துகளையும் கண்டறிந்தவர்கள்.

இடைக்காட்டுச் சித்தர் பாடல்

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை

விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே!

பாலிற் சுவைபோலும் பழத்தில் மது போலும்

நூலிற் பொருள்போலும் நுண்பொருளைப் போற்றீரே!

எள்ளில் தைலம்போல் எங்கும் நிறைபொருளை

உள்ளில் துதித்தே உணர்வடைந்து போற்றீரே!

–இடைக்காட்டுச் சித்தர்

ஆசிரியர் குறிப்பு

இடைக்காடு என்ற ஊரில் பிறந்ததனால் இவர் இடைக்காட்டுச் சித்தர் என்று அழைக்கப்பட்டார். இவர் போகர் என்ற சித்தரின் சீடர். 'இடைக்காடர் ஞான சூத்திரம் எழுபது' என்பது இவருடைய நூல். மெய்ப்பொருளின் தன்மையினையும் பிறவியற்ற பேரின்ப நிலையை எய்தும் வழியினையும் இவர் பாடியுள்ளார்.

பொருள்

நம் கண்ணில் இருக்கும் கருமணி போன்றவனை; நாம் கருதுகின்ற மாபெரும் ஒளியைப் போன்றவனை; விண்ணில் விளங்கும் சுடர் போன்றவனை; திருவிளக்கின் ஒளியாய்த் திகழ்பவனை எந்நாளும் போற்றுவீராக. பாலில் மறைந்துள்ள சுவை போலவும் பழத்தில் மறைந்துள்ள இனிமை போலவும் நூல்களில் மறைந்துள்ள நுட்பமான கருத்துகள் போலவும் உலகப் பொருள்களில் எல்லாவற்றிலும் நுட்பமாய் மறைந்திருக்கும் இறைவனைப் போற்றுவீராக. எள்ளின் உள்ளிருக்கும் எண்ணெய்யைப்போல எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை உள்ளத்தில் இருத்தி, உணர்வுடன் போற்றுவீராக.

குதம்பைச் சித்தர் பாடல்

வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி – குதம்பாய்!
பட்டயம் ஏதுக்கடி.

மெய்ப்பொருள் கண்டு விளங்கும்மெய்ஞ் ஞானிக்குக்
கற்பங்கள் ஏதுக்கடி – குதம்பாய்!
கற்பங்கள் ஏதுக்கடி.

முத்தமிழ் கற்று முயங்கும்மெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி – குதம்பாய்!
சத்தங்கள் ஏதுக்கடி.

– குதம்பைச் சித்தர்

ஆசிரியர் குறிப்பு

இவருடைய பாடல்களில் 'குதம்பாய்' என்று மகடூஉ முன்னிலை வருவதால், இவர் 'குதம்பைச் சித்தர்' என்று அழைக்கப்பட்டார். இவர் பாடல்களில் சித்தர்களின் இயல்புகள் பேசப்படுகின்றன.

பொருள்

குதம்பாய்! உலகம் நிலையற்றது. வெட்டவெளியாகிய உலக இயக்கமே நிலையானது என்ற கொள்கையுடைய சான்றாண்மை உடையோருக்கு அதற்கான உரிமை ஆவணம் எதற்கு? மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்த மெய்ஞ்ஞானியர்க்குப் புறஉடலுக்கு வலிமை தரும் காயகற்ப மருந்துகள் எதற்கு? மூன்று தமிழையும் கற்று மெய்ப்பொருளோடு இணைந்துவிட்ட மெய்ஞ்ஞானிகளாகிய சித்தர்களுக்குச் சத்தமிட்டுப் பாடும் வெற்றுக்கூப்பாடுகள் எதற்கு?

சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கிய வரையறை

பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனையும் உணர்த்துவதற்காக எழுந்தன. இவற்றுள் ஒன்றோ பலவோ குறைந்து வரும் தன்மையில் அமைந்த இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள். சிற்றிலக்கியங்கள் தொல்காப்பியம் கூறும் 'விருந்து' என்னும் வனப்பினுள் அடங்கும். சிற்றிலக்கியம் 96 வகையின என்பர். தூது , உலா, பரணி, குறவஞ்சி, பள்ளு , அந்தாதி, கோவை, கலம்பகம் , பிள்ளைத்தமிழ், சதகம் போன்றன சிற்றிலக்கிய வகைகளுள் சில. சிற்றிலக்கியங்களின் காலத்தைக் குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கிவிட இயலாது. சங்கம்முதல் இன்றுவரை பெரிதும் சிறிதுமாக இவ்வகை இலக்கியம் தொடர்ந்து எழுதப்பட்டு வருகிறது. இவை வட்டாரச் சார்புடையவை. பல்லவர்கள் காலத்தில் பக்தி இலக்கியங்கள் செழித்தோங்கியதைப் போல, நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் செழித்தன.

ஆசியா உம்மா பாடல்கள்

சூஃபித்துவம்

மெய்ஞ்ஞானத்தேடலையும்மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம். அதன் தொடக்கப் புள்ளியாக அலி இபின் அபி தாலிஃப் கருதப்படுகிறார். சூஃபித்துவத்தின் ஆணிவேர், இசுலாத்தின் அடிப்படையான மனிதநேயத்திலும் ஆன்மீகத்திலும் வேரூன்றியுள்ளது. தத்துவக்கோட்பாடுகளையும் அறிவு சார்ந்த தருக்கங்களையும் தாண்டி, ஆழ்ந்த அன்பையும் பக்தியையும் வலியுறுத்தும் அகத்தரிசனமே சூஃபித்துவத்தின் அடிப்படை எனலாம். தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபிக்களின் நோக்கமாகும்.

ஆசியா உம்மாவின் பேரானந்தக் கண்ணிகள்

எத்தனையோ ஓதிடினும் எவ்விதங்கள் கற்றாலும்
சித்தந் தெளியார்க்கு சித்தி ஜெயமோ பேரானந்தமே!

பணமும் சனமும் பண்பான ஆஸ்திகளும்
ஜனங்களை விட்டேகையிலே சதமோ பேரானந்தமே!

ஆண்என்பதும் பெண்என்பதும் ஆதியன்றி
வேறொன்றில்லை
தான்என்பதை யறிய தவமருள் பேரானந்தமே!

மூலப்பொருளை நன்றாய் மவுனமுடனே யறிந்தால்
வாலைப்பிராயம் வந்து வாய்க்குமே பேரானந்தமே!

– செய்யிது ஆசியா உம்மா

ஆசிரியர் பற்றி

சீதக்காதி மரபு வந்த ஹபீபு முகம்மது மரைக்காயருக்கும் ஹபீபு உம்மாவுக்கும் மகளாகப் பிறந்தவர் செய்யிது ஆசியா உம்மா. இவர் கல்வத்து நாயகத்தின் சீடர். இவர் மெய்ஞ்ஞான தீப இரத்தினம், மாலிகா இரத்தினம் ஆகிய பாடல்களை அரபுத்தமிழ் வடிவத்தில் இயற்றினார். இவை 'மெய்ஞ்ஞானப் பாடல்' எனும் தொகுப்புநூலில் இடம்பெற்றுள்ளன.

தெளிவுரை

- எத்தனை வேதங்களை எம்முறையில் கற்றாலும் அறிவில் தெளிவு அடையாதவர் தெளிவு அடைவதே பேரின்ப நிலையாகும்.

- சேர்த்த பொருட்செல்வங்களும் இந்த உலகில் சேர்ந்த உறவினர்களும் நேர்மையாகச் சேர்த்த சொத்துகளும் இறுதி நாளில் இவ்வுலகை விட்டுப் பிரிகையில் நிலைத்து நம்மோடு வருவதில்லை. பேரானந்த நிலையே இறுதியில் நிலையானது.

- ஆண் என்பதும் பெண் என்பதும் அன்றிலிருந்து இன்றுவரை இருக்கின்ற பழைமைதானே தவிர, வேறில்லை. 'தான்' என்பதை அறியும் நிலையே பேரானந்தமாகும்.

- உலகில் மூலப்பொருளை, மௌனமாய் உணர்ந்து அறிந்தால், என்றும் இளமையாய் இருக்கும் நிலை உண்டாகும். அதுவே அமைதி நிலையாகும்.

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று கீர்த்தனை. கீர்த்தி என்னும் சொல்லுக்குப் புகழ், இசை எனப் பல பொருளுண்டு. கீர்த்தனை என்பதை இசைப்பாடல் என்பர். இசைக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் இது கீர்த்தனை எனப் பெயர்பெற்றது.

'சிந்து' என்ற பாடல் வகையே கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ளது.



கீர்த்தனைகளில் சுரத்தைவிடச் சொற்களுக்குத்தான் முதன்மை அளிக்கப்படுகிறது. இப்பாடல்கள் பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற மூன்று நிலைகளில் அமையப்பெறும். பதினேழாம் நூற்றாண்டில் தோன்றி, வளர்ந்த இச்சிற்றிலக்கிய வடிவம் பிற்காலத்தில் மக்களின் சிக்கல்களையும் பேசத் தொடங்கியது.

குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள்

தாய்தந்தையரை வணங்குதல்

உடல்உயிர் சகலமும் நீர்தந்ததே யன்றி
உண்டோ இனிவேறு
அடரும் உலகெலாம் உமக்களித் தாலுமே
ஆமோ கைம்மாறு.

தேனினும் அமிர்தினும் இனிதே எனக்குநீர்
செப்பிய தாலாட்டு
வானினும் அமரர்க்கு வருமோ இதுபோல்
மங்களத் திருப்பாட்டு.

இரவு முழுதுமே தூங்கா திருந்துநீர்
எந்தனைக் காத்தீரே
அரவு முதற்பல ஜெந்துக் களால்வரும்
ஆபத்தைத் தீர்த்தீரே.

தோளினும் மார்பினும் இடையினு மேயெனைத்
தூக்கிக்கொண் டலைந்தீரே
நீள்பஞ்ச காலத்தில் உள்ளசோ றெனக்கிட்டு
நீர்பசித் துலைந்தீரே.

மண்பிள்ளை ஆயினும் தன்பிள்ளை யென்றெனை
மகிழ்ந்தா தரித்தீரே
பண்புடன் என்பொருட் டாகநீர் பலரையும்
பணிந்துப சரித்தீரே

எனக்கொரு சுகம்வரில் உமக்குவந் ததுபோல்
எக்களிப் படைந்தீரே
எனக்கொரு துயர்வரில் உமக்குவந் ததுபோல்
ஏங்கிஉள் ளுடைந்தீரே.

இளமைப் பருவத்தில் என்னால்வருந் துன்பம்
எல்லாம் பொறுத்தீரே
தளர்ந்த பருவத்தில் உம்மால்வருந் துன்பம்
சகிப்பது பெருஞ்சீரே.

– மாயூரம் வேதநாயகர்

இத்தகைய கீர்த்தனைப்பாடல்களைச்சமரச நோக்கோடு பாடியவர் மாயூரம் வேதநாயகர். இவர் பாடிய இசைப்பாடல் நூல் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்' ஆகும். இந்நூலின் பெயருக்கு ஏற்ப, எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான இசைப்பாடல்களைப் பாடியுள்ளார். சமுதாயக்கருத்து, அறநெறிக்கருத்து, தாம் வாழ்ந்த காலத்துச்சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இந்நூலில் 192 கீர்த்தனைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

வேதநாயகர் இவற்றை, தேவதோத்திரக் கீர்த்தனைகள், ஈசுவர வருடத்துப் பஞ்சத்தைப் பற்றிய கீர்த்தனைகள், ஹிதோபதேசக் கீர்த்தனைகள், உத்தியோக சம்பந்தக் கீர்த்தனைகள், குடும்ப சம்பந்தக் கீர்த்தனைகள் என ஐந்தாக வகைப்படுத்தியுள்ளார்.

வேதநாயகர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள குளத்தூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே ஆங்கிலப் பயிற்சி பெற்றமையால், ஆங்கில அரசாங்கம் இவரை மாவட்ட நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக அமர்த்தியது. பின்பு, தரங்கம்பாடி, சீர்காழி, மாயூரம் ஆகிய இடங்களில் மாவட்ட நீதிமன்றத்தில் முன்சீப்பாகப் பணியாற்றினார். கி.பி. (பொ.ஆ.) 1876 ஆம் ஆண்டு வெளியான இவரின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் புதினம் தமிழில் வெளியான முதல் புதினம் ஆகும்.

மாயூரம் வேதநாயகர்

பாடல் பொருள்

❖ என் உடல் உயிராகிய அனைத்தும் நீங்கள் தந்ததேயன்றி வேறில்லை. இதற்கு இப்பரந்த உலகம் முழுவதையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

❖ எனக்காக நீங்கள் பாடிய தாலாட்டுப் பாடல் தேனைவிட, அமிழ்தத்தைவிட மிகவும் இனிமையானது. இத்தகைய மங்களத் திருப்பாட்டு வானோர்க்கும் கிட்டாதது ஆகும்.

❖ இரவு முழுவதும் தூங்காமல் இருந்து, நீங்கள் என்னைக் காத்தீர்கள். பாம்பு முதலாகிய பல உயிரிகளால் எனக்கு வரும் துன்பத்தைப் போக்கினீர்கள்.

❖ செல்லும் இடங்களுக்கெல்லாம் தோளிலும் மார்பிலும் இடையிலும் என்னைத் தூக்கிச் சென்றீர்கள். மிகுந்த வறுமையுற்ற காலத்தில் உங்கள் பசியை மறைத்து எனக்குச் சோறளித்தீர்கள்.

❖ எத்தகைய குறைகள் இருப்பினும் உங்கள் பிள்ளை என்பதால் என்னை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டீர்கள். எனக்காக நீங்கள் பலரையும் பணிந்து பண்புடன் மரியாதை செய்தீர்கள்.

❖ எனக்கோர் இன்பம் வந்தால் அது உமக்கே வந்ததாக அகம் மகிழ்ந்தீர்கள். துன்பம் வந்தாலோ உமக்கே வந்ததாக இரங்கி மனமுடைந்தீர்கள்.

❖ இளமைப் பருவத்தில் என்னால் ஏற்பட்ட துன்பங்களைப் பொறுத்தீர்கள். நீங்கள் முதுமையுறும் காலத்தில் உங்களால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வது நான் பெற்ற பெரும்பேறாகும்.

ஓவியப்பா

கவிபாடும் புலவர்களை, அவர்களின் கவிபாடும் திறனுக்கேற்ப ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். பொருளடி, பாவணி முதலியன தந்து, மற்றொருவன் பாடுக என்ற உடனே பாடுவோன் ஆசுகவி. பொருட்செல்வம், சொற் செல்வம், தொடை விகற்பம் செறிய, உருவகம் முதலிய அலங்காரத்தோடு இனிய ஓசையுடன் அமுதமுறப் பாடுவோன் மதுரகவி. மாலைமாற்று, சுழிகுளம், நாகபந்தம், சக்கரம், எழுகூற்றிருக்கை முதலிய மிளிர கவி பாடுவோன் சித்திரகவி. மாலை, யமகம், கலம்பகம், தசாங்கம், புராணம் முதலியன விரித்துப் பாடுவோன் வித்தாரகவி. இத்தகைய கவிகளைப்பாடுவோர் பனுவர் எனப்பட்டனர்.

சித்திரகவியை 'ஓவியப்பா' என்றும் கூறுவர். சித்திரகவி என்பது தமிழில் காணப்படும் இலக்கிய வகைமைகளுள் ஒன்று. தொல்காப்பியம் குறிப்பிடும் 'வண்ணங்கள்' சித்திரகவிகளின் தோற்றுவாய். திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட 'திருவெழுகூற்றிருக்கை' ஓவியப் பாங்குடன் அமைந்த சித்திரகவி. இவரைப் பின்பற்றி அருணகிரிநாதரும் சித்திரகவிகளைப் பாடியுள்ளார். இவர்களின் வரிசையில் பாம்பன் சுவாமிகளும் சித்திரகவிகள் படைத்துள்ளார்.

ஓவியப்பாவின் வகைகளுள் 'நாகபந்தம்' என்பதும் ஒன்று. நாகப்பிணை என இதனைத் தனித்தமிழ்ச் சொற்களால் குறிப்பிடலாம். இரண்டு, நான்கு, எட்டு என நாகப்பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருப்பது போலப் படம் வரையப்படும். பாடல் ஒன்றின் எழுத்துகள் நாகங்களின் தலையிலிருந்து வால் வரையில் உள்ள கட்டங்களில் எழுதப்பட்டிருக்கும். எந்த நாகத்தின் தலையிலிருந்து படித்தாலும் அதே பாடல் வரும்படி பாடலின் அமைப்பு இருக்கும். இவ்வாறு அமைக்கும்போது, கவிதையின் மொத்த எழுத்துகளும் சித்திரத்திற்குள் சுருங்கித்தோன்றும். சொல்வளம் மிக்கவர் இதனைப் பாடுவர்.

இரட்டை நாகபந்தம்

இரண்டு பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்புணர்ந்து விளையாடுவன போலச் சித்திரம் வரைந்து, அப்பாம்பின் உருவங்களில் கணக்கிட்ட அறைகள் வகுத்துச் சந்திகளில் நின்ற அறைகளில் பொதுவான எழுத்துகளமையப் பாடப்படுவது, இரட்டை நாகபந்தம் ஆகும். இப்பாடலைப் பாம்பின் தலைப்பகுதியிலிருந்து தொடங்கி வால்பகுதி வரைசென்று பொருள்காண வேண்டும்.

"வாலு ளிருமூன்றும் தலையி லிரண்டெழுத்தும்
மூலைக ணான்கும் வயிறிரண்டும் ஐவைந்தாய்
நாலெட்டு நாலைந்தே ழாகி நடைபெறுமே
சேலிட்ட கண்ணாவின் சீர்."

மேற்கண்ட வெண்பாவிலிருந்து இரட்டை நாகபந்தம் இயற்றுதலின் வரையறையை அறியலாம். இவ்வெண்பாவில் கூறப்பட்ட விதிகளின் அடிப்படையில் நாமும் இவ்வாறான பந்தங்களை உருவாக்கலாம். இவ்வகையில் அமைந்த பாடல்களிரண்டை அறிவோம்,

"அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் மருவாச்சீர்ச் சீரே – பொருவிலா
வொன்றே யுமயா ளுடனே யுருத்தரு
குன்றே தெருள வருள்"

"மருவி னவருளத்தே வாழ்சுடராய் நஞ்சு
பெருகொளியான் மேயபெருஞ் சோதித்– திருநிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி"

மேற்கண்ட பாடல்கள் இரண்டும் இரட்டை நாகபந்தம் என்ற அடிப்படையில் அமைந்த பாடல்களாகும். இப்பாடல் இரட்டை நாகச் சித்திரத்தில் பொருந்தும் விதத்தினை இங்கு நோக்குவோம்.

பாடலின் பொருள்

இரக்கத்தின் அழகிய வடிவமாக உள்ளவனே! திருச்சிற்றம்பலத்தில் நடனம்புரியும் இறைவனே! தேவர்களின் அறிவிற்கு எட்டாத (அறியவொண்ணாத) சிறப்பினையுடைய புகழை உடையோய்! பார்வதி தேவியுடன் கூடிய உருவத்தோடு அடியவர்களுக்குக் காட்சியளிக்கும் மலை போன்றவனே! நாங்கள்தெளிந்த மெய்யறிவைப் பெற அருள் செய்வாயாக.

மருவினவர் உள்ளத்தே வாழ்சுடரே! அடைந்தவர் மனத்திலே குடிகொண்டிருக்கும் ஒளியுருவமானவனே! விடத்தாலுண்டாகிய மிக்க ஒளியோடு பொருந்திய பெருஞ்சோதி வடிவமே! அழகிய நிலவின் ஒளி பொருந்திய பரந்த வானமும் சுருங்கும்படி மேலோங்கிய ஒளியே! திருமேனியாக வாய்ந்தோய்! மனமயங்கும் காலத்தை நீக்கி அருள்வாயாக!



இரட்டை நாகபந்தம்

கலைச்சொற்கள்

Ability	-	ஆற்றல்
Abstraction	-	பொதுமைப்படுத்துதல்
Adjustment	-	பொருத்தப்பாடு
Affection	-	உணர்வுநிலை
Allegory	-	உள்ளுறை உவமம்
Alliteration	-	மோனை
Attitude	-	மனப்பான்மை
Balance	-	சமநிலை
Beauty	-	அழகு
Characteristics	-	சிறப்பியல்புகள்
Cognition	-	அறிவுநிலை
Concept	-	பொதுமைக் கருத்து
Conclusion	-	முடிவு
Conflict	-	முரண்பாடு
Consciousness	-	நினைவு நிலை
Creating the atmosphere	-	சூழ்நிலை காட்டும் முறை
Creativity	-	படைப்பாற்றல்
Critic	-	திறனாய்வாளர்
Diction	-	சொல்வளம்
Didactic	-	அறங்கூறும் கவிதை
Disposition	-	மனநிலை
Doctrine	-	கோட்பாடு
Emotion	-	உள்ளக்கிளர்ச்சி
Empathy	-	பிறர்நிலையில் தன்னைவைத்துப் பார்த்தல்
Environment	-	சூழ்நிலை
Epic	-	பெருங்காப்பியம்
Essence	-	பிழிவு

Explanatory - விளக்கமுறை
Feeling - உணர்ச்சிக்கூறு
Figures of speech - அணிகள்
Hyperbole - உயர்வு நவிற்சி
Hypothesis - கருதுகோள்
Ideal level - குறிக்கோள் நிலை
Image - படிமம், உருக்காட்சி
Imitative - போலச் செய்தல்
Impulse - உள்தூண்டல்
Initiative - தான் தொடங்காற்றல்
Inspiration - அகத்தெழுச்சி
Intellect - அறிவாற்றல்
Introduction - அறிமுகம்
Introspection - அகக்காட்சி
Irony - வஞ்சப்புகழ்ச்சி
Knowing - அறிவுக்கூறு
Meanings - சொற்பொருள்
Memorization - மனப்பாடம் செய்தல்
Metonymy - ஆகுபெயர்
Metaphor - உருவகம்
Method - முறை
Metre - யாப்பு
Mood - உட்பாட்டுநிலை
Motive - ஊக்கி
Onomatopoetic - ஒலிக்குறிப்புள்ள
Perception - புலன்காட்சி
Personality - ஆளுமை
Phonetic Power - ஓசையாற்றல்
Poem - பாட்டு
Poetic - கவிதை மதிப்பு
Poetic Sympathy - கவிப்பரிவு
Poetic Value - கவிதை மதிப்பு
Poetry - கவிதை
Power - ஆற்றல்
Practice - பயிற்சி
Prose - உரைநடை
Prose poetry - வசனகவிதை
Prosody - யாப்பிலக்கணம்
Rhyme - எதுகை
Rhythm - ஒலிநயம்
Semantic Power - பொருளாற்றல்
Sensation - புலன் உணர்வு
Sentiment - பற்று, சுவை
Simile - உவமை
Stanza - பாசுரம், செய்யுள் பத்தி
Stimulus - தூண்டல்
Subjective - அகப்பொருள் கவிதை
Symbol - குறியீடு
Sympathy - பிறர்மீது இரக்கங்காட்டல்
Tendency - உளப்போக்கு
Theory - கொள்கை
Thought - எண்ணம்
Understanding - புரிந்துகொள்ளுதல்
Value - மதிப்பு
Verse - செய்யுள்
Willing - முயற்சிக்கூறு

அறிவோம் தெளிவோம்

இந்தியாவின் நாட்டுப்பண்ணை எழுதிய இரவீந்தரநாத்தாகூர் (1861–1941) இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசிய கவிஞர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது "கீதாஞ்சலி " என்ற தொகுப்பிற்காக 1913இல் அவ்விருது வழங்கப்பெற்றது. மக்கள் இவரை அன்புடன் குருதேவ் என்று அழைத்தார்கள். அவருடைய மற்றொரு பாடலான "அமர் சோனார் பங்களா" நமது அண்டை நாடான வங்காளதேசத்தின் நாட்டுப்பண்ணாக உள்ளது.

நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியக் கவிஞர்

கொல்கத்தாவைச் சேர்ந்த தாகூர், தமது எட்டாவது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். பதினாறாவது வயதில் இவரது முதல் கவிதைத் தொகுப்பினை பானுசிம்கா (சூரிய சிங்கம்) என்னும் புனை பெயரில் வெளியிட்டார். தாகூர் பிரித்தானிய அரசை எதிர்த்து நாட்டின் விடுதலையை ஆதரித்தார். அவரது பெயரும் புகழும், அவரது படைப்புகள் வாயிலாகவும், அவர் நிறுவிய விசுவபாரதி பல்கலைக்கழகம் என்னும் கல்வி நிறுவனத்தின் மூலமும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

கண்ணாடி

9BBH62

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. ஏட்டிலெழுதாக்கவிதை என அழைக்கப்படுவது

அ) நாட்டார் பாடல்கள் ஆ) சங்கப்பாடல்கள்

இ) கீர்த்தனைகள் ஈ) காப்பியப்பாடல்கள்

2. அழகிய சொக்கநாதர் இப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர்

அ) சித்திரகவி ஆ) சிலேடைப் பாடல் இ) அந்தாதிப்பாடல் ஈ) நாட்டுப்புறப்பாடல்

3. இரவு என்பதனைக் குறிக்கும் இரு சொல் இணையைத் தேர்ந்தெடுக்க

அ) கங்குல், பகல் ஆ) நிசி, பகல் இ) கங்குல், அல் ஈ) அல், பகல்

4. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க

அ) சங்ககாலக் கவிதைகள் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் பதிவுகளை வெளிப்படுத்துகின்றன.

ஆ) சங்ககாலக் கவிதைகள் அறத்தை மட்டுமே பேசுகின்றன.

இ) சங்ககாலக் கவிதைகள் பக்திக்கவிதைகள் என்றழைக்கப்பட்டன.

ஈ) சங்ககாலக் கவிதைகள் பெரும்பாலும் குடிமக்களையே பாடுபொருளாகக்கொண்டன.

5. கூற்று: மெய்ஞ்ஞானத் தேடலையும் மறைபொருள் சார்ந்த ஆன்மீக உட்பரிமாணத்தையும் குறிப்பதே சூஃபித்துவம்.

காரணம்: தூய்மையான ஆன்மீகத் தேடலில் மானுட இருப்பினை மீட்பதே சூஃபித்துவம்.

அ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி.

இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

6. பொருத்துக

1. பாடுக என்றதும் பாடுவோன் – அ) சித்திரகவி

2. அலங்காரத்தோடும் ஓசையோடும் பாடுவோன் – ஆ) வித்தாரகவி

3. ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு பாடுவோன் – இ) மதுரகவி

4. விரிவாகப் பாடுவோன் – ஈ) ஆசுகவி

அ) 1–ஈ, 2– இ, 3–ஆ, 4–அ ஆ) 1–ஆ, 2–அ, 3–இ, 4–ஈ

இ) 1–ஈ, 2– இ, 3–அ, 4–ஆ ஈ) 1–இ, 2–அ, 3–ஈ, 4–ஆ

நிரப்புக

7. கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ள பாடல் வகை________.

8. வேதநாயகர் எழுதிய தமிழின் முதல் புதினம் ________.

9. நமக்காகத் தம் பசியைத் தொலைத்தவர்கள் ________.

10. முற்றுருவகப்பாங்கில் அமைந்து தெளிவானதோர் அகக்காட்சியை வழங்குவது_______.

11. படிப்பவர்தம் அறிவிற்கும் அனுபவத்திற்கும் ஏற்ப வெவ்வேறு பொருளைத் தரும் உத்தி ________.

12. 'பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர்' எனப் பாரதியாரால் முன்மொழியப்பட்டவர் __________

13. 'எழுத்து ' கால புதுக்கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு _________.

14. 'மானுடம் பாட வந்தவர்கள்' என்று தங்களை அழைத்துக்கொண்ட கவிஞர்கள் --------.

15. 'ரென்கா' பாடல் மரபிலிருந்து தோன்றியது ________ கவிதைவடிவம்.

குறுவினா

1. தொடக்க காலத்தில் தமிழில் புதுக்கவிதை முயற்சியை மேற்கொண்ட கவிஞர்கள் யாவர்?

2. எழுத்து இதழில் கவிதை படைத்தவர்களை எழுதுக.

3. கசடதபற இதழில் வெளியான கவிதைகளின் தன்மையை விளக்குக.

4. வானம்பாடி இதழ் எங்கு, எப்போது வெளிவந்தது?

5. வானம்பாடிக் கவிஞர்களைப் பட்டியலிடுக.

6. நாட்டுப்புறப்பாடல் என்பது யாது?

7. 'பூமியிலே விட்டாலே
   பொற்பாதம் நோகுமென்பாய்' – யார் யாரிடம் கூறியது?

8. சுந்தர கவிராயர் கண்ட மூன்று தலைகள் எவை எவை ?

9. கொழுமுகம் என்பது யாது ?

10. தனிப்பாடல்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகின்றோம் ?

11. குதம்பைச்சித்தர் பெயர்க்காரணம் கூறுக.

12. சிற்றிலக்கிய வகைகளுள் எவையேனும் நான்கனை எழுதுக.

13. இளமைப் பருவத்தில் நம்மால் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டவர்கள் யாவர்?

14. சித்திரகவியின் தோற்றுவாய் பற்றி எழுதுக.

15. இரட்டை நாகபந்தம் என்றால் என்ன?

சிறுவினா

1. புதுக்கவிதையில் படிம உத்தியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. புதுக்கவிதை வலிமை பெறுவதற்கு உதவிய இதழ்கள் யாவை?
3. புதுக்கவிதையில் குறியீடு – குறிப்பு வரைக.
4. ஹைக்கூவின் வடிவம் குறித்து எடுத்துக்காட்டுடன் எழுதுக.
5. சென்ரியு கவிதைக்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
6. நாட்டுப்புறப்பாடல்கள் எந்தெந்தக் கலைவடிவங்களில் முகம் காட்டுகின்றன?
7. நாட்டுப்புறப்பாடல் பகுதியில் அமைந்துள்ள உவமையை விளக்குக.
8. 'புதையல்' என்னும் சொல்லில் மறைந்துள்ள சொற்களைப் பட்டியலிடுக.
9. சுந்தரகவிராயர் கண்ட புதுமையான காட்சியைப் பற்றி எழுதுக.
10. வரையறு : சூஃபித்துவம்.

நெடுவினா

1. புதுக்கவிதையின் உத்திகளைத் தொகுத்து எழுதுக.
2. லிமரிக், லிமரைக்கூ – வேறுபடுத்துக.
3. பல்வேறு காலகட்டங்களிலான புதுக்கவிதையின் வளர்ச்சியினைத் தொகுத்து வரைக.
4. விறகொடிக்கும் பெண்ணின் வாழ்வியலை நாட்டுப்புறப்பாடல் வழிநின்று விளக்குக.
5. தாயன்பின் பெருமைகளை மகள் எங்ஙனம் எடுத்துரைக்கிறாள்?
6. 'கண்ணுள் மணியை'– பாடல் வழியாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
7. பேரானந்த நிலைகுறித்து ஆசியா உம்மா கூறும் வழிமுறைகளைத் தொகுத்தெழுதுக.

படிப்போம் பயன்படுத்துவோம்

1. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

கடலிடை எழுகதிர்த் திங்கட் காட்சி
மலையிடை ஒழுகும் அருவி வழங்கும்
செங்கண் கருங்குயில் சிறகடி பட்டே
பொன்னுதிர் வதுபோல் பூக்கள் உதிரும்
பூக்கொய் தோகையர் புதரிடை மயில்கள்
கழையாடு கூத்தன் கல்லாக் கடுவன்
முட்பலா தூக்கி முன்வரு மந்தி
முழவினை ஆர்க்கும் கூத்த முதியவள்
மான்பயில் சாரல் மலைவழி தாண்டி

ஊணுக் காக ஒவ்வொரு நாளும்
பழுமரம் தேடும் பறவையைப் போலக்
கண்டதும் கேட்டதும் கற்றதும் எண்ணி
மண்டிய இருள்சூழ் மலர்தலை உலகில்
எண்ணி யெண்ணி இரவும் பகலும்
செஞ்சொல் உவமை சீர்தளை கூட்டிப்
பாப்புனைந் தளிக்கும் பைந்தமிழ்ப் புலவ!

– வாணிதாசன் கவிதைகள்

வினாக்கள்

1. பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகளைக் குறிப்பிடுக.
2. பண்புத்தொகைக்கு எடுத்துக்காட்டுத் தருக.
3. கழையாடு கூத்தன், எழுகதிர்– இலக்கணக் குறிப்பு தருக.
4. உணவு என்னும் பொருள் தரும் சொல்லைப் பாடலிலிருந்து எழுதுக.
5. பைந்தமிழ்ப் புலவனின் செயல் யாது?

2. கீழ்க்காணும் குறிப்புகளைப் படித்துக் கட்டங்களை நிரப்புக. (ஒரு பொருள் பல சொல்)

1				2	
■		■			4
				6	■
		■	7		
	3	8			9
5	■			10	

இடமிருந்து வலம்

1. நிலவையும் சந்திரனையும் குறிக்கும் வேறு சொல். (4)
2. வயலையும் கழனியையும் குறிக்கும் வேறு சொல். (2)
7. மேகத்தையும் காரையும் குறிக்கும் வேறு சொல். (3)
8. உண்மையையும் மெய்யையும் குறிக்கும் வேறு சொல். (3)
10. வேளாண்மையையும் விவசாயத்தையும் குறிக்கும் வேறு சொல். (3)

கீழிருந்து மேல்

3. தீயையும் அனலையும் குறிக்கும் வேறு சொல். (4)
5. களிப்பையும் மகிழ்ச்சியையும் குறிக்கும் வேறு சொல். (4)

வலமிருந்து இடம்

4. குழந்தையையும் மகவையும் குறிக்கும் வேறு சொல். (3)
6. அழகையும் கவினையும் குறிக்கும் வேறு சொல். (3)

மேலிருந்து கீழ்

9. உலகத்தையும் ஞாலத்தையும் குறிக்கும் வேறு சொல். (2)

3. கீழ்க்காணும் தொடர்களில் ஒவ்வொரு சொல்லாக நீக்கினாலும், முழுமையாகப் பொருள் அமையும்படி தொடர் உருவாக்குக.

எ.கா. உடற்பயிற்சி செய்வது உடலுக்கும் மனத்துக்கும் நல்லது.		• உடற்பயிற்சி செய்வது மனத்துக்கும் நல்லது. • உடற்பயிற்சி செய்வது நல்லது. • உடற்பயிற்சி நல்லது.
1	மங்கல இசை முழங்க விழா இனிதே தொடங்கியது.	
2	நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும் என்பார்கள்.	
3	குழந்தை மழலை மொழியில் கொஞ்சிப் பேசியது.	
4	அந்தப் பாடலைப் பாடியவர் யார்?	
5	நாள்தோறும் விடுப்பு எடுக்காமல் பள்ளிக்கு வருக.	

4. கீழ்க்காணும் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் பத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

எ.கா. கோட்பாடுகள்

கோ, கோட்பாடு, பா, பாட்டு, பாடு, கோடு, கோடுகள், கோள், கள், கடு, கட்டு.

1. நடைமுறைக்கல்வி – 2. விடுகதைகள் – 3. பாடநூல்கள் –

4. தமிழ்க்கலைக்களஞ்சியம் – 5. முகவரிச்சீட்டுகள் –

5. கீழ்க்காணும் கவிதைகளின் பாடுபொருள்/கருத்தைக் கண்டறிக.

எ.கா. வயலைப் பிரிக்கும் வரப்பு கரையைத் தாண்டி விளையாடும் எலிகள் – பொ.குமார் கருத்து – இயற்கைக்குப் பிரிவினை இல்லை	அடர்ந்த இருட்டு தனியாய்ச் செல்கையில் கூடவே மின்மினி – மு. முருகேஷ்	தோப்பை விற்றபின் வாங்கிய வீட்டில் தொட்டிச் செடிகள் – தமிழ் மணவாளன்
அசை போடாமல் நிற்கிறது வைக்கோலைத் தின்ற வயல் பொம்மை – அரவிந்தன்	குழந்தைகள் விளையாடும் மரத்தடி பழத்தை நழுவ விடுகிறது அணில் – லிங்குசாமி	என்ன செய்து கிழித்தாய்? நாள்தோறும் கேட்கும் நாள்காட்டி – பல்லவன்

6. சொற்களஞ்சியப் பெருக்கம்

எ.கா. உறை என முடியும் சொற்களைக் கண்டறிக

1. உடற்பாதுகாப்புக்காக அணியும் கவசம் - மெய்யுறை

2. உவமையில் ஓர் வகை - உள்ளுறை

படை என முடியும் பின்னொட்டுச் சொற்களைக் கண்டறிக.

1. பரிசு பெற்ற புலவர், மற்றொருவரை வழிப்படுத்துவது _________படை.

2. ஒளிவுமறைவின்றி நடைபெறும் செயலுக்குக் கூறுவது__________படை.

3. உறக்கத்தைக் குறிக்கும் சொல்_________படை.

4. பண்டைய அரசர்களின் பாதுகாப்புக்குதவியவை_____ ,______ , ____, ____படைகள்

5. உழவர் பயன்படுத்தும் கலப்பையைக் குறிப்பது_______ படை.

7. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கவிதை எழுதுக.

1. ஒவ்வோர் அடியிலும் மூன்று சொல் அமையும்படியும் மூன்றாவது சொல், மை என முடியுமாறும் எழுதுக.

எ.கா. சொல்லில் வேண்டும் இனிமை
சொல்லும் பொருளும் புதுமை

2. ஒவ்வோர் அடியிலும் மூன்று சொல் அமைத்து, அவற்றுள் ஏதாவது ஒரு சொல்லில் விலங்கு / பறவையின் பெயர் இடம்பெறுமாறு எழுதுக.

எ.கா. கூவும்போது குயில் அழகு
ஆடும்போது மயில் அழகு

3. மழை, நட்பு, குழந்தை, தொழிலாளி ஆகிய கருப்பொருள் சார்ந்து ஹைக்கூ கவிதை எழுதுக.

எ.கா. எழுத நினைத்த கவிதை
மறந்து போயிற்று
குழந்தை சிரித்தது

8. கீழ்க்காணும் ஓவியத்திற்குக் கவிதை ஒன்று இயற்றுக.

9. இதழ்களில் வெளிவரும் புதுக்கவிதைகளைத் தொகுத்துத் தொகுப்பேடு உருவாக்குக.

10. அண்மையில் நடைபெற்ற, உன் மனத்தை நெகிழச்செய்த நிகழ்வினை நவீன வடிவில் கவிதையாக்குக.

இணையச்செயல்பாடு

நூல்கள் பல அறிவோம்

பிடிக்கும் நூலைப் படித்துப் பார்ப்போமா!


distribute this file, provided this header page is kept intact.

திருக்குறள்

1. அறத்துப்பால்

1.1 கடவுள் வாழ்த்து

1.1.1 கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1
கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2
மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி/ விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'projectmadurai' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. இப்போது திரையில் நூல்களின் பட்டியல் தோன்றும். அதன் அருகில் pdf, Unicode, kindle (6–inch) ஆகிய மூன்று தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.
3. அப்பட்டியலில் தேவைப்படும் நூலைத் தேர்வுசெய்து வாசிக்கலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1

படி 2

படி 3

நூல்கள் பல அறிவோம் இணையப் பக்கத்தின் உரலி

http://www.projectmadurai.org/pmworks.html

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இயல் இரண்டு

கதையியல்

9BKS7P

தமிழில் கதைஇலக்கியம் குறித்த சான்றுகள் தொல்காப்பியத்தில் கிடைப்பதன் மூலம், அதன் தொன்மையை நாம் அறியலாம். தமிழின் மரபுப்பண்புகளோடும் மேலைநாட்டினரிடமிருந்து பெறப்பட்ட வடிவநேர்த்தியோடும் தமிழ்ச்சிறுகதைகள் தோன்றி வளர்ந்தன.

இப்பாடப்பகுதியில் தமிழ்ச்சிறுகதைகளின் வளர்ச்சி குறித்தும், பல்வேறு காலகட்டங்களில் எழுதிய படைப்பாளர்கள் குறித்தும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. நல்ல கதை இலக்கியங்களை படிப்பதற்கும் திறனாய்வு செய்வதற்குமான வழிகாட்டல், பொருத்தமான எடுத்துக்காட்டுகளோடு அமைந்துள்ளது. சிறுகதை எழுதுவதற்காக வழங்கப்படும் பயிற்சி, சிறந்த படைப்பார்வத்தை உண்டாக்கும். மேலும், இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள சிறுகதைகள், அயலக எழுத்தாளர் சிறுகதை, அயலகச் சிறுகதை, மொழிபெயர்ப்புச் சிறுகதை, குறுங்கதை, நுண்கதைகள் ஆகியன படிப்போருக்குப் புதிய திறப்புகளை ஏற்படுத்தும்.

கற்றல் நோக்கங்கள்

- ***தமிழ்ச் சிறுகதையின் தோற்றம், வரலாறு, இன்றைய வளர்ச்சிப்போக்கு ஆகியவற்றை அறிந்துகொள்ளுதல்.***
- ***சிறுகதையின் வடிவம், கதைப்பின்னல் மற்றும் எழுதும்முறை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல்.***
- ***பல்வேறு வடிவங்களில் அமைந்த சிறுகதைகளை வாசித்தல்.***
- ***சிறுகதைகளைத் திறனாய்வு செய்தல், சிறுகதை எழுதுதல் ஆகிய திறன்களைப் பெறுதல்.***

பாடப் பகுதி

- தமிழ்ச்சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்
- சிறுகதை வாசிப்பும் திறனாய்வும்
- சிறுகதை எழுதும் கலை
- யானையின் சாவு – சார்வாகன்
- பூ உதிரும் – ஜெயகாந்தன்
- இறுக மூடிய கதவுகள் – ஆர். சூடாமணி
- நசுக்கம் – சோ. தர்மன்
- 'பேபி' குட்டி – கே. பாலமுருகன்
- பசி – தாமரைச்செல்வி
- அஷமஞ்சா பாபுவின் நாய் – சத்யஜித் ரே
- ரப்பர் பந்து – எஸ்.ராமகிருஷ்ணன்
- பனித்துளியின் பேச்சு– ஹெச்.ஜி.ரசூல்
- ஒற்றைக்குரல் – இளங்கோ கிருஷ்ணன்

இயல் இரண்டு

1. தமிழ்ச்சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும்

ஆதிமனிதன் தனது அனுபவத்தை அல்லது நடந்த நிகழ்வை அடுத்தவரிடம் விவரித்த போது கதைசொல்லுதல் என்னும் கலை ஆரம்பித்தது. அதைச் சொல்பவர் தமது சொல்லும் திறனுக்கேற்ப உவமைகளோடும் வருணனைகளோடும் சொன்னபோது, அது கேட்பவரைக் கவர்ந்திழுக்கிற ஒரு வலிமையான தொடர்பு வடிவமாக உருவானது.

தொடக்கத்தில் தமிழ்மரபில் கதைகள் வாய்மொழியாகவே சொல்லப்பட்டன. பின் உரைநடை கலந்த கதைப்பாடல்கள் கதைகளைத் தந்தன. மொழியின் வரிவடிவம் செழுமைப்பட்ட பிறகு, கதை இலக்கியம் எழுத்தில் பதிவானது.

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்

"பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்"

(பொரு. செய். 1420)

என்ற அடிகளைத் தமிழின் உரைநடை மரபை உணர்த்தும் அடிகளாகக் கொள்ளலாம்.

பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும் என்பதற்கு, கற்பனை கலந்த புனைவு மொழியாக, அதாவது 'யானையும் குருவியும் தமக்குள் நட்புப் பாராட்டிப் பேசிக்கொள்வதைப் போல' எனவும், பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பதற்கு, 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு' எனவும் உரையாசிரியர் விளக்கம் தருவர்.

மரபிலிருந்து மேற்கூறிய இரு கூறுகளையும் எடுத்துக்கொண்டு பாரதியார் தமது கதையை உருவாக்கினார். அவரது 'காக்காய் பார்லிமெண்ட்' கதையில் காகங்களின் பேச்சு 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சாக' இருக்கின்றன. இந்த மரபுக்கூறுகளுடன் அமைந்த அவருடைய 'ஆறில் ஒரு பங்கு' (1910) கதை, தமிழின் தொடக்ககாலக் கதைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சிறுகதையை மேலைநாடுகளின் இலக்கிய வடிவமாகத் திறனாய்வாளர்கள் வரையறுக்கின்றனர். உலகச் சிறுகதைகள் அமைந்த வடிவத்தைப் பின்பற்றியே தமிழ்ச் சிறுகதைகளும் எழுதப்பட்டன. சிறுகதை என்பது ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒரு பொருள் பற்றி மட்டுமே எழுதுவது. எந்த நோக்கத்தோடு கதை எழுதப்படுகிறதோ, அதை நோக்கியே கதையின் அனைத்துக் கூறுகளும் செல்லும் ஓர்மை கொண்டது. வாசகன் ஊகித்தறிய முடியாத ஒரு திருப்பத்தை இறுதியில் கொண்டு முடிவது. இந்த வரையறைக்கு உட்பட்டே திறனாய்வாளர்களால் சிறுகதையின் வடிவம் மதிப்பிடப்படுகிறது.

தமிழில் மேற்கூறிய சிறுகதைக்கான வடிவ அமைதியுடன் வெளிவந்த முதல் சிறுகதையாக, வ.வே.சு. என்றழைக்கப்பட்ட வரகனேரி வேங்கடேச சுப்ரமணியம் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்' (1915) அறியப்படுகிறது. ஓர் அரசமரம் பேசுவதுபோல் அமைந்த இக்கதை, அதன் சமகாலச் சிக்கலை நுட்பமாகப் பேசிச்செல்கிறது. அ.மாதவையாவின் சிறுகதைகளும் தொடக்ககாலச் சிறுகதைகளாக அறியப்படுகின்றன.

தமிழ்ச்சிறுகதைப் படைப்பாளர்களைப் பொதுவாக ஐந்து தலைமுறையினராக நாம் பிரித்து மதிப்பிடலாம்.

முதல் தலைமுறை

தமிழ் நவீன இலக்கியத்தைத் தொடக்கத்திலேயே செழுமைப்படுத்தியவர் புதுமைப்பித்தன். அவரது சமகால

புதுமைப்பித்தன்



ந. பிச்சமூர்த்தி

மௌனி

கு.ப. ரா.

எழுத்தாளர்களான ந. பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப. ராஜகோபாலன், பி.எஸ்.ராமையா, சிதம்பர சுப்பிரமணியன் ஆகியோரைத் தமிழ்ச்சிறுகதையின் முன்னோடிகளாகக் கொள்ளலாம். இவர்கள் அனைவரும் சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த மணிக்கொடி இதழில் எழுதியவர்கள். இக்காலகட்டம் 'மணிக்கொடி காலம்' என்றே அழைக்கப்பட்டது. நா.பார்த்தசாரதி, அகிலன் ஆகியோர் புகழ்பெற்ற இலட்சியவாதக் கதைகளைப் படைத்தனர். இக்காலகட்டத்தில் எழுதிய கல்கி, பொழுதுபோக்குத் தன்மை கொண்ட கதைகளைத் தந்தார்.

இரண்டாம் தலைமுறை

புதுமைப்பித்தனைத் தொடர்ந்து லா.ச. ராமாமிர்தம், க.நா. சுப்ரமணியம், சி.சு. செல்லப்பா, எம்.வி. வெங்கட்ராம், ஆர். சண்முகசுந்தரம் போன்ற படைப்பாளிகளிடம் இருந்து சமரசமில்லாத சமூக விமர்சனக் கதைகள் எழுந்தன. பெண்களால் எழுதப்படும் பெண்ணுலகச் சித்திரிப்புக் கதைகள் குமுதினி, டி.பி. ராஜலெட்சுமி, கி. சரஸ்வதியம்மாள் போன்றவர்களால் எழுதப்பட்டன.



லா.ச. ரா.

மூன்றாம் தலைமுறை

இக்காலகட்டத்தில் முன்னோடிகள் போட்ட பாதையில் வேகம் பிடித்த தமிழ்ச் சிறுகதை, அதன் உச்சங்களைத் தொட்டது. எளிய மனிதர்களின் பண்புநலன்களை நுட்பமாகப் பதிவுசெய்த கு.அழகிரிசாமி, கவித்துவமான சொற்சித்திரங்களைப் படைத்த நகுலன், மனித உறவுகளையும் மனச்சலனங்களையும் சித்திரித்த தி. ஜானகிராமன், சிறந்த வடிவ ஓர்மையுடன் எழுதிய சுந்தர ராமசாமி, பெருநகர

அறிவோம் தெளிவோம்

உலக அளவில் சிறுகதையின் வடிவக் கூறுகளைக் கொண்ட கதைகள் 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருந்தாலும், 19ஆம் நூற்றாண்டில்தான் முழுவீச்சில் வெளிப்படத் தொடங்கின.

அமெரிக்க எழுத்தாளர்களான எட்கர் ஆலன்போ, ஓ ஹென்றி, நதானியல் ஹாதர்ன், வாசிங்டன் இர்விங் போன்றோர் சிறுகதையின் முழுமையான வடிவச் சிறப்போடு அமைந்த சிறுகதைகளைத் தந்தனர். குறிப்பாக ஓ ஹென்றியின் கதைகளில் வரும் கடைசித் திருப்பம் இன்றுவரை உலகப்புகழ் பெற்று விளங்குகின்றது.

பிரெஞ்சு எழுத்தாளர்களான போம்பெவல், மாப்பஸான், மெரிமீ, பால்சால்க் போன்றோர் சிறுகதையின் தொடக்ககால நிலையில் அதன் அனைத்துச் சாத்தியங்களோடும் படைத்துக் காட்டியவர்கள். குறிப்பாக, இன்றளவும் மாப்பஸான் கதைகள் உலகப்புகழ் பெற்று விளங்குகின்றன. தமிழின் சிறந்த சிறுகதை எழுத்தாளரான புதுமைப்பித்தன் தமிழகத்தின் மாப்பஸான் என்று அழைக்கப்படுவது, மாப்பஸான் கதைகளின் வீச்சினைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

உலகச் சிறுகதை ஆசிரியர்கள்

ரஷ்ய எழுத்தாளர்களான ஆண்டன் செகாவ், துர்கனேவ், கோகல் ஆகியோர் புகழ்பெற்ற சிறுகதைகளை எழுதியவர்கள். செகாவ் சிறுகதை வடிவத்தை மிகச்சிறந்த கலைவடிவமாக்கியவர். இவர் தம் சிறுகதைகள் நகைச்சுவையும் அங்கதமும் கலந்தவை. ரஷ்ய சிறுகதையின் தந்தை எனப் போற்றப்படும் கோகலின் 'மேலங்கி' என்னும் சிறுகதை எண்ணற்ற எழுத்தாளர்களை உருவாக்கிய கதை எனலாம்.

நடுத்தர வாழ்வை எழுதிய அசோகமித்திரன் ஆகியோரின் படைப்புகள் வெளிவந்தன.

வலியும் அவமானமும் நிறைந்த வாழ்வியலைப் பதிவுசெய்த ஜி.நாகராஜன், தம் கிராமியப் பின்புலத்தைக் களமாக்கிக் கொண்டு வட்டார மொழியில் கதைசொல்லும் கி.ராஜநாராயணன், பெருநகர வாழ்வியலைப் பெரிதும் எழுதிய இந்திரா பார்த்தசாரதி, கற்பனை தவிர்த்த இயல்புவாதப் படைப்புகளைத் தந்த நீல.பத்மநாபன், குழந்தை உளவியலைக் கதைகளாக்கிய சார்வாகன், குறியீட்டுத் தன்மையுடன் எழுதிய ந.முத்துசாமி, வறுமையைச் சித்திரித்த ஆ. மாதவன், நாஞ்சில் நாட்டு (குமரி மாவட்டம்) மக்களின் வாழ்வை எழுத்தில் பதிவு செய்த மா.அரங்கநாதன், ஒரு பார்வையாளனாக வாழ்வை நேரடியாகப் பதிவுசெய்த கரிச்சான்குஞ்சு, எளிய மனிதர்களின் மனவோட்டங்களை எழுதிய சா. கந்தசாமி போன்றோரின் படைப்புகள் வெளிவந்தன.

முற்போக்கு எழுத்துகளால் மக்களுடன் நேரடியாக விவாதித்த ஜெயகாந்தன், தம் கூர்மையான படைப்புகளால் பெரும்புகழ்பெற்றார். தொ.மு.சி ரகுநாதன், கே. முத்தையா, டி. செல்வராஜ், சு. சமுத்திரம், பொன்னீலன்,பா.செயப்பிரகாசம்போன்றோரும் சிறந்த முற்போக்கு இலக்கியங்களைத் தந்தனர். ஆர். சூடாமணி, ராஜம்கிருஷ்ணன், கோமகள், லட்சுமி, அநுத்தம்மா போன்றோர் இக்காலகட்டத்தில் எழுதிய பெண் எழுத்தாளர்கள்.

ராஜம்கிருஷ்ணன்

நான்காம் தலைமுறை

இத்தலைமுறை எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் மென்மையான மொழியில் வாழ்வின் நுட்பமான தருணங்களை எழுதினர். வண்ணநிலவன், வண்ணதாசன், விட்டல்ராவ், பூமணி, நாஞ்சில்நாடன், ஆதவன், பிரபஞ்சன், திலீப்குமார், ஜெயந்தன், தஞ்சை பிரகாஷ், தோப்பில் முகமது மீரான், ராஜேந்திர சோழன், சூர்யகாந்தன், சி.ஆர். ரவீந்திரன், சி.எம்.முத்து போன்றோர் சிறந்த படைப்புகளைத் தந்தனர்.

மேலாண்மை பொன்னுச்சாமி

ஜெயகாந்தனுக்குப்பின் எழுதிய சிறந்த முற்போக்குப் படைப்பாளிகளாகக் கந்தர்வன், ச. தமிழ்ச்செல்வன், மேலாண்மை பொன்னுச்சாமி, தனுஷ்கோடி ராமசாமி, வேல. ராமமூர்த்தி, சோலை சுந்தரபெருமாள், தேனி சீருடையான் போன்றோரைக் குறிப்பிடலாம். மிகநவீனமான புனைவு நடையைக் கொண்டவர் சுஜாதா.

பெண்ணியவாத எழுத்தாளர்களாக அம்பை, திலகவதி போன்றோர் அறியப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்த வாஸந்தி, சிவசங்கரி, இந்துமதி ஆகியோரது படைப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

ஐந்தாம் தலைமுறை

எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோகன் ஆகியோர் இலக்கிய வாசிப்பைப் பொது வாசகர்களுக்கும் கொண்டு சென்றவர்கள். பவா செல்லத்துரை, கோணங்கி, பெருமாள்முருகன், மு. சுயம்புலிங்கம், கோபிகிருஷ்ணன், இரா. முருகன், சுப்ரபாரதிமணியன், யூமாவாசுகி, சு.வேணுகோபாலன், கண்மணி குணசேகரன், போன்றோர் இக்காலக்கட்டத்தில் முக்கியமான படைப்பாளர்கள். தமிழில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை எழுதும் எழுத்தாளர்களில் சிவகாமி, பாமா, சோ. தர்மன், இமையம், அழகிய பெரியவன், ஆதவன் தீட்சண்யா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தற்காலத்தில், தமிழ்ச் சிறுகதைத் தளத்தில் வாழ்வின் தருணங்கள், நுட்பமாக இலக்கியத் தரமுடையதாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. இன்றைய தமிழ்ச் சிறுகதைகள் ஆங்கிலத்திலும் பல்வேறு இந்தியமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகமெங்கும் வாசிக்கப்படுகின்றன. அதன்மூலம் உலகளாவிய இலக்கியத் தளத்தில் தமக்கென்று ஓர் உயர்ந்த இடத்தைத் தமிழ்ச்சிறுகதைகள் பெற்றிருப்பது பெருமைக்குரியதாகும்.

2. சிறுகதை வாசிப்பும் திறனாய்வும்

வாசிப்பு

வாசிப்பு என்பது, ஓர் உன்னதமான தனி அனுபவம். சமூக அனுபவங்கள் கூட்டுத்தொகுப்பாகப் படைப்புகளில் வெளிப்படுகின்றன. அவற்றை வாசிக்கும் ஒரு வாசகன் தன் வாசிப்பின் ஊடாக ஒட்டுமொத்த சமூக அனுபவக்களத்திற்குள் பயணிக்க முடியும். இடம், காலம், மொழி கடந்த அந்த மானுட வாழ்வியல் பதிவுகளிலிருந்து தனக்கான உன்னதங்களை அவன் எடுத்துக் கொள்கிறான். ஆக, வாசிப்பு நிறைந்த ஒரு சமுதாயமே மரபின் பண்பாட்டுக் கூறுகளோடு இயைந்த ஒரு நவீனத்தைத் தகவமைத்துக்கொள்ள முடியும்.

வாசிப்பின் படிநிலைகள்

இலக்கிய வாசிப்பு என்பது, ஒரே மையத்திலேயே எப்போதும் இயங்குவதில்லை. அது பல்வேறு வாசிப்புப் படிநிலைகளின் ஊடாகக் கடந்து கொண்டே இருக்கிறது. ஒரு நல்ல வாசகனின் வாசிப்புத்தரம் என்பது, குழந்தை இலக்கிய வாசிப்பிலிருந்து பொழுதுபோக்கு, சாகசம், குற்றவியல், மெல்லுணர்வு, இலட்சியவாதம் ஆகியவற்றின் வழியாகச் செவ்வியல் வாசிப்பை நோக்கி நாளும் வளர்ந்துகொண்டே செல்லும் தன்மையுடையது.

குழந்தை இலக்கியம்

குழந்தை இலக்கியமே வாசிப்பு அனுபவத்தின் தொடக்கம். சிறுவயதில் கேட்ட பாட்டி கதைகள், கிராமிய மரபுக்கதைகள் போன்றவையே நம் வாசிப்பைத் தொடங்கிவைக்கின்றன.

பொழுதுபோக்குக் கதைகள்

அச்சுத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த பிறகு, பொழுதுபோக்குக் கதைகள் நம்மை ஆக்கிரமித்துக் கொண்டன. பொழுதுபோக்கிற்காகக் கதைகள் எழுதும் வணிக எழுத்தாளனுக்கு நம்மிடம் பகிர்ந்து கொள்ள எந்தவொரு வாழ்வியல் பொருளும் இல்லை. நம்மை மகிழ்விப்பது மட்டுமே அவர்களது நோக்கம். நல்ல வாசகனால் இந்தப் பொழுதுபோக்குப் புள்ளியை எளிதில் கடக்க முடியும்.

சாகசக் கதைகள்

குழந்தைப்பருவ வாசிப்பிலிருந்து இளமையை நோக்கி நகரும் பருவத்தில் விசித்திரங்களை, சாகசங்களை நோக்கி மனம் விரிகிறது. வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் மனநிலையின் கதைவடிவமே சாகசக்கதைகள். இம்மாதிரியான கதைகளே கனவுகளை உருவாக்கக் கூடியவை.

குற்றக் கதைகள்

இளம்பருவத்தினருக்கு நெருக்கமான சாகசத்திலிருக்கும் வீரத்தன்மையைக் கொச்சைப்படுத்திக் குற்றங்களைப் பேசும் கதைகள், துப்பறியும் போர்வையில் வலம் வருகின்றன. இவற்றின் மலினத்தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மெல்லுணர்வுக் கதைகள்

குமரப்பருவம் தொடங்கி, வளர்ந்து செல்லும் ஆண் பெண் ஈர்ப்பு சார்ந்த மெல்லுணர்வுகளை இவ்வகைக் கதைகள் கொண்டுள்ளன. இவை வாசிப்பு அனுபவமுள்ள அனைவரையும் கவரக்கூடிய தன்மை வாய்ந்தவை.

இலட்சியவாதக் கதைகள்

தன் மனவெழுச்சிகளுக்கு அப்பாற்பட்டு, சமூகப் பொறுப்புணர்வுமிக்க இலட்சியவாத

எழுத்துகளை வாசிப்பதென்பது, வாசிப்பு மனநிலையின் முக்கியமான கட்டம். சமூகச்சிக்கல்கள் சார்ந்து வாசிப்பு இயங்குவது இந்நிலையில்தான். இதன் வழியாகத்தான் சீரிய செவ்விலக்கிய வாசிப்புக்கு வந்துசேர முடியும்.

செவ்விலக்கிய வாசிப்பு

குழந்தைப்பருவம் தொடங்கி தனது வாசிப்பு அனுபவத்திலிருந்து செவ்வியல் இலக்கிய வாசிப்பிற்கு வர, சமூக வாழ்வியல் இலட்சியவாதக் கதைகளே துணை புரிகின்றன.

இலட்சியவாதக் கதைகள் வாழ்வினை எளிமைப்படுத்திச் சொல்லிச் செல்பவை. சீரிய இலக்கியங்கள் வாழ்வின் அனைத்துச் சிக்கல்களையும் ஊடுருவி, தங்கள் கனவுகளை அடைபவை. இவ்வகையான வாசிப்புப் படிநிலைகளின் வழியாக நமது வாசிப்பு வளர்ந்து வந்துள்ளது.

திறனாய்வு

சிறுகதைகளைப் படைப்பது ஒரு தனிக்கலை. அதைப்போலவே அவற்றை வாசித்து ஆய்வு செய்வதும் அதன் படைப்புக்குச் சமமான ஒரு தனிக்கலை. ஒரு கதையை நாம் உள்வாங்கிக் கொள்ள, கீழ்க்காணும் கூறுகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

களமும் சூழலும்

ஒரு கதையின் வரலாற்றுச் சூழல் மற்றும் சமூகச்சூழல், அது நிகழும் களம் ஆகியவற்றைப் புரிந்துகொண்டால் மட்டுமே கதையின் தளத்திற்குள் சென்று நாம் அதை உணரமுடியும்.

கதையின் மையம்

கதை பல்வேறு நிகழ்வுகளின் தொகுப்பாகச் சென்றாலும், எந்த மையத்தை நோக்கி அது இயங்குகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். அப்போதுதான் அதன் நோக்கு, சார்பு ஆகியவற்றைப் புரிந்து கொள்ளமுடியும்.

நிறுவும் நோக்கு

கதைப்பின்னலின் இறுதியில் அக்கதை எந்நோக்கை நிறுவுகிறது என்ற அடிப்படையில்தான் அக்கதையின் இலக்கியத்தன்மையை மதிப்பிட இயலும்.

விளைவு

ஒரு கதையைப் படித்து முடித்தவுடன் அதனால் மகிழ்வோ கோபமோ ஏற்படவேண்டும். நம் உணர்வுகளைக் கிளறி நமக்குள் அதிர்வையோ ஒரு புதிய தூண்டுதலையோ அது ஏற்படுத்தவேண்டும்.

வாசகர், தம்வாழ்வின் நிகழ்வுகளோடு கதையை ஒப்பிட்டுப்பார்த்து, தம்மைக் கதைக்குள் காண்பவராகவோ, தாம் கதைக்குள் வாழ்பவராகவோ மாற வேண்டும். ஒரு சிறந்த சிறுகதை வாசிக்கப்பட்டபின் மனத்துக்குள் தங்கிவிடவேண்டும். ஒரு நல்ல சிறுகதை நல்ல விளைவுகளை ஏற்படுத்த வல்லது.

அழகியல்

ஒரு கதையை உவமை, உருவகங்களோடு சொல்வது வாசகரைக் கவர்ந்து ஆர்வமாக வாசிக்கச் செய்யும். ஒவ்வொரு வரியும் வாசகரைக் கைபிடித்துக் கதைக்களத்திற்குள் அழைத்துச் செல்லவேண்டும். கதையின் ஓர்மையோடு வாசகனை ஒன்றச்செய்ய, அழகியல் ஒரு சிறந்த கருவியாகும்.

திறனாய்வு – ஒரு திறந்த பார்வை

ஓர் இலக்கியத்தைத் திறனாய்வு செய்ய, எவ்வித முன்முடிவும் சார்பும் இல்லாத ஒரு திறந்த பார்வை ஆய்வாளருக்குத் தேவை. அவர் முதலில் ஆய்வு மனப்பான்மையைத் தவிர்த்து, ஒரு முழு வாசகனாக மட்டுமே படைப்பினை அணுக வேண்டும்.

படைப்புக் களத்தின் அனைத்துக் கூறுகளோடும் திளைத்தும் மருகியும் அனுபவித்த ஒரு வாசகனால் மட்டுமே படைப்பின் தன்மையை நேரிய முறையில் வெளிப்படுத்த இயலும்.

மேற்கண்ட கூறுகளின் அடிப்படையில் ஒரு சிறுகதையைத் திறனாய்வு செய்து, நம் இலக்கிய ரசனையை வளர்த்துக் கொள்ளலாம்.

3. சிறுகதை எழுதும் கலை

சிறுகதை என்பது ஒரு புத்திலக்கிய வடிவம். மரபான இலக்கியம் ஏற்கெனவே சமூகத்தில் உள்ள கருத்துகளையும் நம்பிக்கைகளையும் வலியுறுத்தும் போக்கு கொண்டது. ஆனால் புத்திலக்கியம் அவற்றை ஒட்டியோ, மறுத்தோ மறுபரிசீலனை செய்து பேசும் போக்கைக் கொண்டது.

சிறுகதைக்கென்று ஒரு தனித்த வடிவச்சிறப்பு உண்டு. சிறிய கதைகளாக இருப்பனவற்றை எல்லாம் நாம் சிறுகதைகள் என்று சொல்லிவிட முடியாது. நீதிக்கதைகள், உதாரணக்கதைகள், உருவகக்கதைகள், பஞ்சதந்திரக்கதைகள் மற்றும் ஈசாப் குட்டிக்கதைகள் போன்றவை எல்லாம் சிறிய கதைகள்தாம் என்றாலும் அவை சிறுகதைகள் அல்ல.

ஒரு சிறிய கதையைச் சிறுகதையாக்குவது கதையின் முடிவில் உள்ள திருப்பம் என்று சொல்லலாம். சிறுகதையின் நோக்கம் ஒரு கதையின் மையக்கருத்தைச் சொல்வது மட்டுமன்று. ஒரு திருப்பத்தைச் சொல்லி, அதன்மூலம் வாசகனைக் கதையனுபவத்தில் பங்கேற்கச் செய்வதும்தான்.

அச்சு ஊடகப் பெருக்கத்தினால் சிறுகதைகள் நிறைந்திருக்கின்ற இக்காலத்தில் வாசகனின் ஆர்வத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, வாசகன் ஊகிக்க முடியாத அல்லது அவன் ஊகிப்பதற்கு மாறான ஒரு திருப்பத்தோடு சிறுகதை அமைவது அவசியமாகிறது.

சிறுகதையின் ஓர்மை

வாழ்க்கைச் சம்பவங்களில் நம் உணர்வுகளை வெகுவாகப் பாதித்த ஒரு நிகழ்வு, ஒரு பொருள், ஒரு சிக்கல், ஒரு கருத்து ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துச் சிறுகதையின் கருப்பொருள் அமையலாம்.

எந்த நோக்கத்துடன் ஒரு கதை எழுதப்படுகிறதோ அதனை நோக்கியே கதையின் அனைத்து அம்சங்களும் அமைந்திருப்பதே ஓர்மை. ஒரு கதையின் எல்லாக் கூறுகளும் அதன் முடிவில் வரும் திருப்பத்தைச் சிறப்பாக நிகழ்த்த உதவினால் அதுவே ஓர்மையுள்ள சிறுகதை.

சிறுகதையின் வடிவம்

சிறுகதையின் வடிவம் பின்வரும் நான்கு அடிப்படைகளைக் கொண்டதெனக் கூறலாம்.

1. சிறுகதையின் போக்கு ஓர்மை கொண்டதாக இருக்கவேண்டும். தேவையில்லாத எந்தவொரு விவரமும் அதில் இருக்கவேண்டியதில்லை. அது நேராக ஒரு முடிவை நோக்கிச் செல்வது நன்று.
2. முடிவில் உள்ள திருப்பம், வாசிப்பவன் ஊகிக்கமுடியாத ஒன்றாக இருக்கவேண்டும். அத்திருப்பத்தில்தான் சிறுகதையின் வெற்றி உள்ளது.
3. வாசகனை எந்த அளவுக்குக் கற்பனை செய்ய வைக்கிறதோ அந்த அளவிற்குச் சிறுகதை வெற்றி பெறுகிறது.
4. ஒரு சிறந்த சிறுகதை அதன் கடைசிவரிக்குப் பிறகே வாசகனின் மனத்தில் மீண்டும் தொடங்குகிறது.

சிறுகதை வடிவத்தின் உறுப்புகள்

சிறுகதை வடிவத்தின் உறுப்புகளாகக் கீழ்க்காண்பவற்றை நாம் வரையறுக்கலாம்.

மையக்கதைப்பாத்திரம்

இது யாருடைய அல்லது யாரைப்பற்றிய கதை என்ற கேள்விக்கான விடையாக இருப்பது. மையக்கதைப்பாத்திரத்தை நோக்கி வாசகனின் கவனம் இருப்பதாகக் கதை அமையவேண்டும்.

எதிர்க்கதைப்பாத்திரங்கள்

இவை மையக்கதைப்பாத்திரத்திற்கு எதிர்நிலையில் அமையும் பாத்திரங்கள். இவர்கள் அளிக்கும் பாதிப்பு மூலம்தான் கதையின் நெருக்கடி, சிக்கல் ஆகியவை உருவாகின்றன.

கதைக்களம்

கதை நடக்கும் சூழல், காலம் ஆகியவையே கதைக்களம். அக்கதை எங்கே நடக்கிறது, எப்படி நடக்கிறது என்ற கேள்விக்குக் கதையில் பதில் இருக்கவேண்டும். அதற்கேற்பக் கதையின் புனைவுகள் அமையவேண்டும். அச்சூழல் சமகாலமாகவோ இறந்தகாலமாகவோ எதிர்காலமாகவோ இருக்கலாம். கதையின் மையக்கருவையும் கதை மாந்தர்களையும் ஒரு வாழ்க்கைச் சூழலில் நம்பகமாகப் பொருத்திக் காட்டவேண்டியது அவசியம்.

கதைமுடிச்சு

கதை எதைப்பற்றியது என்பதுதான் கதைமுடிச்சின் அடிப்படை. கதையின் சிக்கல் உருவாகும் இடமாக இதைக்கொள்ளலாம்.

திருப்பம்

கதையின் சிக்கல் எவ்வாறு அவிழ்க்கப்படும் என்று வாசகன் ஊகிக்கிறானோ அதிலிருந்து விலகி, ஒரு புதியகோணத்தில் அதை அவிழ்ப்பதே திருப்பமாகும்.

சிறுகதை எழுதுவதற்கான கருவிகள்

சிறுகதை நேர்த்தியாக அமைவதற்குக் கதை சொல்லுவதில் கீழ்க்காணும் கருவிகளைப் பயன்படுத்துதல் நலம்.

1. சித்திரிப்பு

கதைநிகழும் களம், காலம், சூழல், கதைமாந்தரின் தோற்றம், குணம் ஆகியவற்றினை வாசகர் காட்சிப் படிமமாகத் தம்முள் புரிந்துகொள்ளும் வண்ணம் குறைந்த வரிகளில் பதிவுசெய்தல். இந்தச் சித்திரிப்புகளின் வழியாகத்தான் வாசகரின் மனத்தில் கதை நகர்ந்து செல்லும்.

அ. புறச்சித்திரிப்பு

சாலைவிபத்தில் மாட்டிக்கொண்டு, கையில் அடிபட்ட ஒருவர் அதை இவ்வாறு விவரிக்கலாம்.

"காலையில் நெடுஞ்சாலையில் யாருமே இல்லை. சன்னமான மழை ஒரு பாலிதீன் திரை போலக் கரிய தார்ப்பரப்பை மூடியிருந்தது. கார்களின் முன்வெளிச்சம் நீரின் அடியில் தெரிவதுபோலக் கலங்கித் தெரிந்தது. நான்

படிப்போம் சுவைப்போம்

சிறுகதையின் உயிர்

தமிழின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான தி. ஜானகிராமன் சிறுகதை எழுதுவது பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

'சிறுகதையில் வரும் கதையோ நிகழ்ச்சியோ ஒரு க்ஷணத்திலோ, நிமிஷத்திலோ, ஒரு நாளிலோ, பல வருடங்களிலோ நடக்கக்கூடியதாக இருக்கலாம். காலையில் தொடங்கி இரவிலோ, மறுநாள் காலையிலோ அல்லது அந்த மாதிரி ஒரு குறுகிய காலத்திலோ முடிந்துவிட வேண்டும் என்று அவசியமில்லை. சொல்லப்படவேண்டிய பொருளின் ஓர்மைதான் முக்கியமானது.

எட்டு நாளில் நடந்த சங்கதியை முதல் நாளிலிருந்து வரிசையாகச் சொல்லிக்கொண்டு போகலாம். இரண்டாவது, மூன்றாவது, நாலாவது நாளிலிருந்தோ அல்லது கடைசிக் கணத்திலிருந்தோ ஆரம்பித்து, பின்பார்வையாகப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகலாம். நடந்தது, நடக்கப் போவது இரண்டுக்கும் இடையே ஒரு வசதியான காலகட்டத்தில் நின்று கொண்டு, நிகழ்ச்சியைச் சித்திரித்துக் கொண்டு போகலாம். எப்படிச் சொன்னாலும் ஒரு பிரச்சினை, ஒரு பொருள், ஓர் உணர்வு, ஒரு கருத்துதான் ஓங்கியிருக்கிறது' என்ற நிலைதான் சிறுகதைக்கு உயிர்.'

இருபக்கமும் பார்த்தேன். வண்டிகள் வரும் ஒலி கேட்கவில்லை."

இங்குப் புறக்காட்சி விவரிக்கப்படுகிறது. இந்த விவரிப்பில் சாலை குறித்த தகவல் மற்றும் சாலையின் தோற்றம் குறித்த உவமை அழகுறச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆ. அகச்சித்திரிப்பு

விபத்தின்போது அவரின் மனவோட்டத்தைக் கீழ்க்காணும் வரிகள் சித்திரிக்கின்றன.

'என் மனத்தில் காலைநேரக் கவலைகள். ஆபீஸில் ஒரு சின்ன நிதிச்சிக்கல். ஒரு தைரியத்தில் சட்டென்று சாலையைக் கடந்தேன். யாரோ கையை ஓங்கித் தட்டுவது போலிருந்தது. சுழன்று விழுந்தேன். ஒரு கார் என்னைத் தாண்டிச் சென்றது. அதன்பின் விளக்குகளின் சிவப்பு சீறிச்சீறி அணைவதை மட்டும்தான் கண்டேன். ஒருகணம் என் மனத்தில் எதுவுமே இல்லை.'

2. கதைமாந்தர் உரையாடல்

கதை நிகழ்வுகளின் போக்கிற்குப் பொருந்துவதாகவும் அந்தக் கதைமாந்தர்களின் மொழியிலும் உரையாடல் இயல்பாக அமையவேண்டும். கதைமாந்தர் பேச்சினை இரட்டை மேற்கோள் குறிக்குள் அடைத்துச் சொல்லவேண்டும்.

எ.கா. 1 "இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?"

"முடியாது. என்ன பண்ணுவ?"

எ.கா. 2 "இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?" – அவளை அவன் முறைத்துப் பார்த்தவாறே கேட்டான்.

"முடியாது. என்ன பண்ணுவ?" என்றவாறு சடக்கெனக் கழுத்தை வெட்டிக்கொண்டு அறைக்குள் சென்றாள் அவள்.

எடுத்துக்காட்டு 1-இல் கதைமாந்தர் பேச்சுமட்டும் இருக்க, எடுத்துக்காட்டு 2-இல் அவர்களது உரையாடல் உணர்வுகளோடு கலந்திருப்பதைக் காணலாம்.

3. குறியீடு

கதையின் நிகழ்ச்சிப் போக்கு, கதைமாந்தரின் உள்ள உணர்வு போன்றவற்றை நேரடிச் சொற்களில் உரைப்பதைவிட, அந்தக் களத்தில் கிடைக்கிற குறியீடுகளைப் பயன்படுத்திச் சொல்லுதல் வலிமையான வெளிப்பாட்டுக்கு உதவும்.

(எ.கா.) "அவன் கடற்கரையில் அமர்ந்திருந்தான். அவன் விரல்கள் புரிபடாத கோடுகளை மணலில் வரைந்து கொண்டிருந்தன. அலைகளின் பேரோசை காற்று வெளியெங்கும்."

இந்நிகழ்வில் கதைமாந்தரின் மனப்போராட்டத்தை மணலில் வரைந்த விரல்களும் எழுந்து ஆர்ப்பரிக்கும் கடலின் பேரோசையும் நுட்பமாய் வெளிப்படுத்துவதை அறியலாம். இதில் மணலில் வரையும் விரல்களும் கடலின் ஓசையும் குறியீடுகள்.

கதை சொல்லுதலின் நோக்குநிலை

கதையின் நிகழ்வுகள் யாருடைய பார்வையிலிருந்து சொல்லப்படுகின்றன என்பதே நோக்குநிலை.

1. கதைமாந்தர் நோக்கில் சொல்லிச் செல்லும் முறை

கதைமாந்தரின் பார்வையிலிருந்து அவர்களது போக்கிலும் மொழியிலும் கதையை நகர்த்திச் செல்லும் முறை. இம்முறையில் கதையில் வரும் ஓர் உறுப்பினரே 'நான்' 'எனது' என்ற பான்மையில் கதையினைச் சொல்லிச் செல்வார்.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆர். சூடாமணியின் 'இறுக மூடிய கதவுகள்' கதை இம்முறையில் சொல்லப்படுகிறது.

2 கதையாசிரியரின் நோக்கில் சொல்லிச்செல்லும் முறை

கதைமாந்தர்களின் அகமன ஓட்டங்கள், புறச்செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலமும் கதைமாந்தர்களின் உரையாடல்கள் மற்றும் சூழல் வருணனைகள் மூலமும் கதையைக் கதாசிரியரே சொல்லிச் செல்லும் முறை.

நம் பாடப்பகுதியில் உள்ள 'யானையின் சாவு', 'நசுக்கம்', 'பூ உதிரும்', 'அஷமஞ்சா பாபுவின் நாய்' போன்ற கதைகள் இம்முறையில் அமைந்தவை.

கதை சொல்லுதலின் உத்திகள்

ஒரு கதையைச் சொல்லிச் செல்லும்போது கதை நிகழும் இடம், காலம், நிகழ்வுகளின் தன்மைகளுக்கேற்ப, வரிசைப்படியோ வரிசைகளை மாற்றியோ பின்வரும் உத்திகளைப் பயன்படுத்திக் கூறலாம்.

அ. இயல்பான வரிசையில் சொல்லும் முறை

கதை நிகழும் வரிசையிலேயே பகுதி பகுதியாகப் பிரித்துக் கொண்டு, இயல்பாகச் சொல்லிச் செல்லும் முறை.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஜெயகாந்தனின் 'பூ உதிரும்' கதையை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

ஆ. இடையில் பிரித்துச் சொல்லும் முறை

கதையைச் சொல்லிச் செல்லும்போது, அதன் ஒரு புள்ளியில் உட்சென்று மற்றொரு துணைநிகழ்வைச் சொல்லி, மீண்டும் கதைக்கு வருவது.

(எ.கா.) கந்தர்வன் எழுதிய 'சாசனம்' கதையிலிருந்து ....

'சிமிண்டுத் திண்ணையில் பகல் பூராவும் அப்பா உட்கார்ந்திருப்பார். எப்போதாவது பர்மாக் குடையை விரித்து நடப்பார். ஒரு நாளைக்கு இத்தனை தடவை என்று எண்ணிவிடலாம் இறங்கி நடப்பதை.

அப்பா நடந்திருக்க வேண்டிய நடையெல்லாம் தாத்தா நடந்திருந்தார். சமஸ்தானத்தில் தாத்தா இந்தப் பிரதேசத்தின் பேஷ்கார்.

மஹாராஜா இந்தப் பக்கமாய் ஒரு முறை திக்விஜயம் செய்தபோது தாத்தா ஒவ்வொரு வேளை விருந்தையும் ஒரு உற்சவமாய் நடத்தியிருக்கிறார். மஹாராஜாவின் நாக்கு அது வரை அறிந்திராத ருசியும் பண்டமும் விருந்துகளில்.... மரியாதை காட்டி வெகுவாய்ப் பின்னால் வந்து கொண்டிருந்த தாத்தாவை அழைத்து விரலை அவ்வப்போது நீட்டிக் கொண்டே வந்தார் மஹாராஜா. பின்னால் அந்த நிலங்களெல்லாம் தாத்தாவுக்குச் சமானமாய் வந்தன.'

அப்பாவைப் பற்றி சொல்லப்படும் கதையில் ஒரு புள்ளியில் உள்ளே நுழைந்து தாத்தா குறித்த நிகழ்வுகள் சொல்லப்படுவதை இம்முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இ. பின்னோக்கு முறை

தற்போதைய கதைப்போக்கிற்குக் காரணமாக, ஏற்கெனவே நடந்த ஒன்றைக் காட்டிக் கதையின் வளர்ச்சியை வலிமையாகக் கொண்டு செல்வது.

(எ. கா.) நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆர். சூடாமணியின் 'இறுக மூடிய கதவுகள்' கதையில் முன்னர் நடந்த காட்சியாகச் சொல்லப்படும் கீழ்க்காணும் வரிகளைப் பின்னோக்கு முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இளைய அம்மா. பயம் கலந்த ஒரு சந்தோசத்தில் உருவமே வேறாகி, ஒளியால் நிறைந்தது போன்ற அம்மா. அவள் அணைப்பினுள் எட்டு வயது பையன்.

"செல்லப்பா அங்கிளை உனக்குப் பிடிச்சிருக்குதா கேசவா?"

"ஓ, ரொம்பப் பிடிக்குமே"

"எனக்கு... எனக்குக் கூட அவரைப் பிடிக்குதுடா கண்ணா!"

"நல்ல அங்கிள் அவரு"

"அவரை... அந்த நல்ல அங்கிளை உனக்கு அப்பாவாய்ப் பண்ணட்டுமா?"

பையன் முகத்தில் ஒன்றும் புரியாத வெற்றுப்பார்வை. அது ஒரு தடை என்பதுபோல் அம்மாவின் முகத்தில் கணநேரத் தடுமாற்றம்.

"என்னம்மா?"

"அவரை நான் கல்யாணம் செய்துக்கட்டுமா?"

இப்போது அதிர்ச்சியே வடிவாய் உருமாறும் மகன்.

"ஊஹூம், கூடாது, அது தப்பு!"

"உனக்கு ஒரு அப்பா கிடைப்பாருடா கண்ணா"

"என் அப்பா செத்துப்போயிட்டார். நீ என் அம்மா, அம்மால்லாம் தப்புச் செய்யக் கூடாது..."

மறுப்பில் தலையாட்டும் மகன்.

ஈ. முன்னோக்கு முறை

எதிர்வரும் காலத்தில் நடைபெறப்போகும் நிகழ்வுகளாகக் கற்பனையில் எண்ணிப் பார்த்தல். இது கதைமாந்தரின் பார்வையிலோ கதையாசிரியரின் பார்வையிலோ சொல்லப்படலாம்.

எ.கா. சுந்தர ராமசாமியின் 'பிரசாதம்' கதையிலிருந்து ...

அடுத்த நாள், குழந்தையைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்கு நடந்து போகிற காட்சியை ஒரு தாய் தன் கணவனிடம் விவரிக்கிறாள்.

'நாளை விடியக் கருக்கலில் எழுந்திருக்க வேண்டும். சுடு தண்ணீரில் குழந்தையைக் குளிப்பாட்ட வேண்டும். பட்டுச்சட்டை போட்டு, கலர்நூல் வைத்துப் பின்ன வேண்டும். அந்தப் பின்னலில் ஒரு ரோஜா – ஒன்றே ஒன்று – அதற்குத் தனி அழகு. நாம் இருவரும் குழந்தையைக் கோயிலுக்கு எடுத்துச் செல்கிறபொழுது தெருவில் சாணி தெளிக்கும் பெண்கள், கோலம் இழைக்கும் பெண்கள் எல்லோரும் தலைதூக்கித் தலைதூக்கிப் பார்க்க வேண்டும். அவர்கள் தலைதூக்கிப் பார்ப்பதை நான் பார்க்க வேண்டும். நான் பார்த்து, உங்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் எல்லோரும் பார்ப்பதைப் பார்க்கவேண்டும். பார்த்துவிட்டு என்னைப் பார்க்க வேண்டும்.'

உ. காட்சித்துணுக்கு முறை

கடந்தகால நிகழ்வுகளை அல்லது நினைவுகளை, புகைப்படப் பிரதிகளை அடுக்கிக் காட்டுவதுபோலக் காட்சித் துணுக்குகளாகச் சொல்லிச் செல்லும் முறை. இதை ஒரு விரைவான பின்னோக்குமுறை என்றும் கூறலாம்.

(எ.கா.) நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஆர். சூடாமணியின் 'இறுக மூடிய கதவுகள்' கதையில் மகனின் நினைவுக்காட்சிகளாகச் சொல்லப்படும் கீழ்க்காணும் வரிகளைக் காட்சித்துணுக்கு முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

'புரண்டு படுத்தேன். மறுபடியும் அரைத்தூக்க நிலை. கண்களுள் மீண்டும் இளம் அம்மாவின் முகம். அதில் ஒருவித ஆவல். உதடுகள் ஏதோ சொல்கின்றன. சிறுவனின் கண்களில் அதிர்ச்சி. மறுப்புக்குறியில் தலை இடவலமாய் அசைகிறது'

சிறுகதையின் மொழிநடை

ஒரு சிறுகதை, அக்கதையின் மையப்பொருள், சூழல் மற்றும் கதைக்களம் ஆகியவற்றிற்குப் பொருந்தும்படியான மொழிநடையில் அமைதல் நலம்.

1. பொதுமொழியில் சொல்லும் முறை

அனைத்துப்பகுதிகளிலும் வாசிக்கப்படுகிற, பொதுமொழியில் கதை சொல்லும் முறை. இது எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் அமையலாம்.

நம் பாடப்பகுதியில் அமைந்துள்ள 'இறுக மூடிய கதவுகள்', 'பூ உதிரும்' போன்ற கதைகளை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

2. வட்டாரமொழியில் சொல்லும் முறை

அந்தந்தப் பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்கு மொழியில் கதை சொல்லும் முறை. இம்முறையில் பெரும்பாலும் பேச்சு வழக்கே பயன்படுத்தப்படும்.

(எ.கா.) கி. ராஜ நாராயணனின் 'நிலைநிறுத்தல்' – கதையிலிருந்து ...

"மூதேய் மூதேய் வெறுவாக்கலங்கெட்ட மூதேய்." எப்பேர்க் கொத்தி வேலையாளாய் இருந்தாலும் வசவு வாங்காமல் தீராது அவரிடம்.

இது சாதாரணம்; பெரிய முதலாளிக்கேண்ணு உள்ள கெட்டவார்த்தை வசவுகள் இருக்கு. அதோடு எத்தனையோதயா அவரிட்டெ அடியும் வாங்கி இருக்கான் இந்த மாசாணம் பயல்.

இப்பொ அவன் வாங்கின வசவுக்கு ஒரு காரணமும் கிடையாது. "சுண்ணாம்பு எடுத்துட்டுவாலே மாசாணம்"ண்ணாரு எடுத்துட்டு வந்தான்.

ஒரு பிஞ்சு சுண்டைக்காய் அளவுதான் வெத்திலையில் வைத்துக் கொண்டாரனும்; மஞ்சாடி கூடீரப்படாது, வசவுதான்.

3. பொது மற்றும் வட்டார மொழியில் சொல்லும் முறை

கதாசிரியரின் விவரிப்பைப் பொதுவான மொழியிலும் கதை மாந்தர்களின் உரையாடலை வட்டாரத்தின் பேச்சுவழக்கிலும் கலந்து அமைக்கலாம். பெரும்பாலான கதைகள் இம்முறையில் எழுதப்பட்டு வருகின்றன.

நம் பாடப்பகுதியில் அமைந்த 'நசுக்கம்' சிறுகதையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

எழுத்தின் இரகசியம்

எழுத்தின் இரகசியம் எழுத்தில்தான் உள்ளது. எனவே, சிறுகதை வடிவத்தின் அனைத்துக் கூறுகளையும் தன்வயப்படுத்தி, சுயமான படைப்பூக்கத்துடன் கதைகள் வெளிப்படவேண்டும். எந்தவொரு படைப்பாக இருந்தாலும் அதன் களத்தில் நின்று, உணர்வுப்பூர்வமான மொழியில் சமூக உயர்வினை நோக்கி எழுதப்படும் போது அது வெற்றிகரமாக அமையும்.

படிப்போம் சுவைப்போம் — **தமது சிறுகதைகள் பற்றிப் புதுமைப்பித்தன்**

கதைகேட்பதும் கதைசொல்லுவதும் தொன்றுதொட்டு வந்தபழக்கம். 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா இருந்தான்' என்று ஆரம்பிக்கும் இளமை மாறாத கதைகள் முதல் இன்று இருக்கும் எழுத்தாசிரியர்களின் கனவுகளான சிறுகதைகள்வரை, எல்லாம் மனித உள்ளத்தின் அடையமுடியாத ஆசைகளின் எதிரொலி. கதை என்றால் என்ன? எதுதான் சிறுகதை? சிறுகதையின் எல்லை என்ன? சிறுகதைக்கென்று தனிப்பட்ட ரூபம் ஒன்று உண்டா? இதற்கெல்லாம் சூத்திரங்கள் ஒன்றும் கிடையாது. சிறுகதையின் எல்லை வளர்ந்துகொண்டே வருகிறது. ஒவ்வொரு கதை ஆசிரியனும் எடுத்தாண்ட ரூபங்கள் எண்ணிறந்தன.

அச்சுப்பிழை பார்க்கிறவர்களை ஒதுக்கிவிட்டால் என் கதையின் முதல் வாசகன் நான்தான். அவ்வளவு ரசித்துப் படிப்பேன். வேகமாக எழுதிக்கொண்டு போவதனால், எழுதியதில் அங்கொன்றும் இங்கொன்றும்தான் என் ஞாபகத்தில் இருக்கும்.

நான் இப்பொழுது பிரசுரித்துள்ளவற்றின் அளவுக்கு ஏறக்குறைய சமமான எண்ணிக்கையுள்ள கதைகள் அவை எழுதப்பட்ட காலத்திலிருந்த பத்திரிகை காரியாலயங்கள் எல்லாவற்றையும் சேத்திர தரிசனம் செய்துவிட்டு திரும்பியவை ஆகும். எழுத்துக்குப் பயிற்சி மிகவும் அவசியம். முடுக்கிவிட்ட எந்திரம் மாதிரி தானே ஓர் இடத்தில் வந்து நிற்கும். இது என் அனுபவம். இதுவரை நான் கையாண்டுவரும் இந்த முறை பிசகியதே இல்லை. என் கதைகளிலே ஏற்றத்தாழ்வு உண்டு. அவற்றிற்குக் காரணம் வார்ப்புப் பிசகு அல்ல. அதை எழுதத் தூண்டிய மன அவசரத்தின் உத்வேகத்தைப் பொறுத்தது கதையின் கவர்ச்சியில் காணும் ஏற்றத்தாழ்வு.

நான் முன்விசாரித்த உதாரணங்களே போதும் என் கதைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு எடுத்த எடுப்பில் எழுதியும் வெற்றி காணுவதற்குக் காரணம் என் நெஞ்சில் எழுதாக் கதைகளாகப் பல எப்பொழுதும் கிடந்துகொண்டே இருக்கும். அந்தக் கிடங்கில் இருந்து நான் எப்பொழுதும் எடுத்துக்கொள்ளுவேன். கதை எழுதும் சிலர் அவற்றை விவரப்பட்டியல் எழுதி ஒரு மூலையில் போட்டுவைப்பார்கள்; நான் அப்படியல்ல. ஞாபக மறதிக்கு அரிய வசதியளிப்பேன். எழுத்துரூபத்தில் அமையும்வரை மனதில் உறுத்திக்கொண்டுக் கிடக்கும் நிலையில் இருந்த கதைகள் யாவும் இவற்றைவிடச் சிறந்த ரூபத்தில் இருந்தன என்பது என் நம்பிக்கை.

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிறுகதைக்கான வடிவ அமைதியுடன் வெளிவந்த முதல் தமிழ்ச் சிறுகதை

   அ) காக்காய் பார்லிமெண்ட்   ஆ) குளத்தங்கரை அரசமரம்   இ) துன்பக்கேணி   ஈ) விடியுமா?

2. ஒரு சம்பவம், ஒரு மனநிலை, ஒரு சிக்கல் என ஒருபொருளைப் பற்றி மட்டுமே அமையும் ஓர்மை கொண்டது   அ) கவிதை   ஆ) சிறுகதை   இ) புதினம்   ஈ) கட்டுரை

3. பொருந்தாத இணையைக் கண்டறிக.

   அ) புதுமைப்பித்தன் – ந.பிச்சமூர்த்தி   ஆ) கந்தர்வன்–மேலாண்மை பொன்னுசாமி

   இ) ராஜம்கிருஷ்ணன் – கோமகள்   ஈ) கி. இராஜநாராயணன்–ஆதவன்தீட்சண்யா

4. பொருத்துக

ஆசிரியர் பெயர்	**எழுத்தின் தன்மை**
அ) தி. ஜானகிராமன்	– 1. குறியீடு
ஆ) ந. முத்துசாமி	– 2. விளிம்புநிலை
இ) பாமா	– 3. கரிசல்
ஈ) கி. இராஜநாராயணன்	– 4. மனச்சலனம்
	– 5. சொற்சித்திரம்

   அ) அ– 1 ஆ– 3 இ– 4 ஈ– 2

   ஆ) அ– 4 ஆ– 1 இ– 2 ஈ– 3

   இ) அ– 5 ஆ– 1 இ– 4 ஈ– 3

   ஈ) அ– 4 ஆ– 1 இ– 5 ஈ– 2

5. கூற்று : கதையின் நிகழ்வுகள் யாருடைய பார்வையிலிருந்து சொல்லப்படுகின்றன என்பதே நோக்குநிலை

   காரணம் : கதை சொல்லுதலின் நோக்கு நிலை சிறுகதைகளுக்கான உத்திகளுள் ஒன்று

   அ) கூற்று சரி, காரணம் தவறு

   ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

   இ) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமன்று

   ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு

6. பின்வரும் கூற்றுகளில் தவறானவற்றைச் சுட்டுக.

   1. வாசகனை எந்த அளவிற்குக் கற்பனை செய்யவைக்கிறதோ அந்த அளவிற்குச் சிறுகதை வெற்றிபெறுகிறது.
   2. சிறுகதையின் போக்கு ஓர்மை கொண்டதாக இருக்கவேண்டியதில்லை.

3. சிறுகதையின் முடிவில் உள்ள திருப்பம் வாசிப்பவன் ஊகித்து அறியும் ஒன்றாக இருக்கவேண்டும்.

4. ஒரு சிறந்த சிறுகதை அதன் கடைசி வரிக்குப் பிறகே வாசகனின் மனத்தில் மீண்டும் தொடங்குகிறது.

அ) 2, 3 ஆ) 1, 2 இ) 1, 3 ஈ) 2, 4

7. தொடக்ககாலத் தமிழ் மரபில் கதைகள் இவ்வாறு சொல்லப்பட்டன.

அ) எழுத்து வழியாக ஆ) அச்சுவழியாக இ) வாய்மொழியாக ஈ) சைகை வழியாக

8. தொடக்ககாலத்தில் சிறுகதைகளுக்கான முக்கியத்துவம் கொடுத்த இதழ்

அ) வானம்பாடி ஆ) கசடதபற இ) மணிக்கொடி ஈ) எழுத்து

9. வாசிப்பு அனுபவத்தின் தொடக்கமாக அமைவது

அ) சாகசக்கதைகள் ஆ) பொழுதுபோக்குக் கதைகள்

இ) குழந்தை இலக்கியம் ஈ) மெல்லுணர்வுக் கதைகள்

10. இவர்களில் யார் ஆண் எழுத்தாளர் இல்லை

அ) யூமாவாசுகி ஆ) பூமணி இ) அம்பை ஈ) சுஜாதா

குறுவினா

1. தமிழ்ச்சிறுகதைகளின் முன்னோடிகளாக அறியப்படுபவர்கள் யாவர்?
2. சிறுகதையில் 'ஓர்மை' என்றால் என்ன?
3. காட்சித்துணுக்கு முறை என்பது யாது?
4. இரண்டாம் தலைமுறை சிறுகதை ஆசிரியர்களாக அறியப்படுபவர்கள் யாவர்?
5. இப்ப அவன் வாங்கின வசவுக்கு ஒரு காரணமும் கெடயாது. "சுண்ணாம்பு எடுத்துட்டுவாலே மாசாணம்" ண்ணாரு. – இதைப் பொதுமொழி நடையில் எழுதுக.

சிறுவினா

1. சாகசக்கதைகளை வரையறு.
2. சிறுகதை வடிவத்தின் உறுப்புகளை எழுதுக.
3. கதை சொல்லுதலின் நோக்கு நிலையினை விளக்குக.
4. அகச்சித்திரிப்பு, புறச்சித்திரிப்பு வேறுபடுத்துக.
5. சிறுகதை வடிவத்தைக் கலை வடிவமாக்கிய ரஷ்ய எழுத்தாளர்கள் குறித்து எழுதுக.

நெடுவினா

1. கதைசொல்லுதலின் உத்திகளை விளக்குக.
2. சிறுகதையின் மொழிநடை குறித்து ஆய்க.

சிறுகதை

யானையின் சாவு

– சார்வாகன்

ரங்கநாதனுக்குக் கோபமும் எரிச்சலும் அத்துமீறிக் கொண்டு வந்தது. குழந்தையின் முதுகில் அங்கேயே ஓர் அறை வைக்கக் கையை ஓங்கிவிட்டான். ஒருவரையொருவர் இடிச்சு மோதிக்கொண்டு வேர்வை நெடியும் தூசியும் பல்வேறு அழுகல் கறிகாய் வாசனைகளும் நிறைந்த நட்டநடுக் கடைத்தெருவில் செல்லுலாய்டு பிளாஸ்டிக் பொம்மைகளைப் பரப்பி வைத்திருந்த அந்தக் கிழவனை விட்டு நகரமாட்டேன் என்று சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த குழந்தையின் கையை ஆத்திரத்துடன் அமுக்கிப் பிடித்தான். அகத்திலே உடைப்பெடுத்துவரும் கோபத்தினால் கண்களைச் சுருக்கி 'புஸ்புஸ்'ஸென்று மூச்சு விட்டுக்கொண்டு "நீ வரயா இல்லை நான் ஒன்னை இங்கியே விட்டுட்டுப் போயிடட்டுமா?" என்று சீறினான். குழந்தை அவனை நிமிர்ந்து பார்த்தது. தும்பியின் சிறகைப் போலிருந்த அதன் கண்கள் பளபளத்தன. ஈனக் குரலில், "எனக்கு யானை வேணும்ப்பா" என்று கெஞ்சியது.

அவன் காஞ்சிபுரம் கோவிலில் குழந்தைக்கு யானை காட்டினதிலேயிருந்து இரவும் பகலும் இதே பல்லவிதான். எனக்கு யானை வேணும்ப்பா! தன் பொருளாதார நிலையில் யானையைக் கட்டித் தீனி போட்டு மாளாது என்று குழந்தையைப் புரிந்து கொள்ள வைக்க அவனுக்கு ரெண்டு வாரங்கள் ஆச்சு. நாலு நாளாய்த்தான் யானையை மறந்திருந்தான். இப்போ மறுபடி பிடிச்சுக் கொண்டது.

நடைபாதையோரத்தில் வியாபாரம் செய்யும் கிழவனை வெறுப்போடு பார்த்துவிட்டு, "இங்கே யானை இல்லை. வா வீட்டுக்குப் போகலாம்" என்று குழந்தையின் கையை இழுத்தான். "அதோ இருக்கே" குழந்தை கையை நீட்டி ஒரு மூலையைக் காண்பித்தது. அது காட்டிய இடத்தில் நிசமாகவே ஒரு யானை இருந்தது. கிளிப்பச்சை நிறத்தில் உடம்பு, முதுகில் தங்கவர்ணத்தில் வேலைப்பாடுகளும், ரோஸ் நிற வாயும், நல்ல எலுமிச்சை மஞ்சளில் தந்தமும் கொண்டு தும்பிக்கை ரோஸ் நிறமான பின்பாகம் தெரியத் தூக்கி சலாம் போடும் நிலையில் நின்று கொண்டிருந்தது அந்த யானை. அத்தனை குப்பை சாமான்களுக்கிடையேயும் அதைக் கண்டுபிடித்து விட்ட குழந்தையின் கண் தீட்சண்யத்தை மனசில் சபித்துக்கொண்டே அதை வாங்கி விடலாம் என்று ஜேபியில் கைவிட்டான். அவன் பார்வை அந்த யானைமேல் பாய்ந்தது. அழகுணர்ச்சி மிக்க அவனுக்கு – அழகுணர்ச்சி தன்னிடம் நிறைய இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்த அவனுக்கு – அந்தப் பிளாஸ்டிக் யானை துதிக்கையைத் தூக்கி ரோஸ் வாயைக் காட்டி அவனை ஏளனம் செய்வது போலிருந்தது. யானைக் குலத்தையோ ஐராவதம் முதல் வரதர்கோவில் யானைவரை இதுவரை உலகத்தில் இருந்த, இனிமேல் இருக்கப் போகிற அத்தனை யானைகளையும், அதோடு தன்னையும் பரிகாசம் செய்வது போலிருந்த அந்தப் பச்சையானை மேல் அவனுக்குத் திடீரென்று அளவுக்கு மிஞ்சின கோபமும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தது.

" 'சீ' இது வாணாம், அசிங்கம், யானை எங்கியாவது பச்சையாவா இருக்கும்? நான் ஒனக்கு நல்ல கருப்பு யானை வாங்கித்தரேன், இப்போ வீட்டுக்குப் போலாம் வா'', என்று மறுபடியும் குழந்தையை இழுத்தான். குழந்தை நிமிர்ந்து கண்களை அகல விரித்துக்கொண்டு அவனைப் பார்த்தது.

"நெஜம்மா"

"நெஜம்மாத்தான், நீயே பாரு."

அவன் வாக்குக் கொடுத்தபின் இருவரும் வீட்டைப் பார்க்க நடந்தனர்.

அவன் யானையை மறந்தாலும் அவனை மறக்க விடவில்லை அந்தக் குழந்தை. "எங்கே யானை? எங்கே யானை? வாங்கித்தரேன்னியே" என்று அவனை அரிச்சு எடுத்து விட்டது. "இந்த ஊர்லே நல்லதாக் காணும், நான் வெளியூர் போய் வரப்போ வாங்கி வரேன், ப்ராமிஸ்" என்று சத்தியம் செய்தபின் அதன் துளைச்சல் நின்றது.

சொன்ன வாக்கை அவன் நிறைவேற்றியும் விட்டான். அது மரயானை. அப்படியொண்ணும் பிரமாதக்கலாசிருஷ்டியாகப் பிரமிப்பூட்டும் வகையில் இல்லாது போனாலும் கருப்பாக, கிட்டத்தட்ட கருப்பாக இருந்தது. தும்பிக்கை இருந்தது. வெள்ளைத் தந்தமும் இருந்தது. ரோஸ் வாய் இல்லை. யானைக் குலத்தையும் அவனையும் ஏளனம் செய்யவில்லை.

அதை வாங்கி வந்தது முதல் வேறொரு விபரீதம். குழந்தை எப்போ பார்த்தாலும் யானையோடேதான். சாப்பிடும்போது அதுக்கும் சோறு வைக்க வேணும். அது தூங்கினப்புறந்தான் குழந்தை தூங்கமுடியும். அந்த யானையின் விருப்பு வெறுப்புகளும் பிடிவாதமும் கோபமும் விளையாட்டும் அந்த வீட்டின் நடைமுறை வாழ்க்கையையே உலுக்கி விட்டது.

அவனுக்கென்னமோ இது விபரீதமாகத்தான் பட்டது. என்னதான் குழந்தை யென்றாலும் ஆறு வயசாச்சே. அந்தப் பொம்மை யானை ஓர் உயிருள்ள யானை மாதிரி, அதுவும் செல்லம் கொடுத்துக் கெட்டுப்போன ஒரு குழந்தை யானை மாதிரி வீட்டில் லூட்டியடிப்பது அவனுக்குச் சரியானதாகப்படவில்லை. அது பொம்மை மரம். கல்கண்டு சாப்பிடாது; ஹார்லிக்ஸ் குடிக்காது; வேர்க்கடலையும்; கரும்பும் கேட்காது என்று ஒண்ணுக்குப் பத்துத்தரமாகச் சொல்லிப் பார்த்தான். இது யானைதான். பொம்மையில்லை என்று ஒருநாள் பூராவும் குழந்தை அழுது ஆர்ப்பாட்டம் செய்தது. மறுநாள் குழந்தையும் யானையும் அவனோடு பேசவில்லை.

அவனுக்கு மனது ரொம்பவும் கஷ்டமாகப் போய்விட்டது. மூணாவது நாள் அவன் குழந்தையைக் கூப்பிட்டு, "இது நெஜ யானைதான், நான்தான் இதுக்கு முன்னாலே சரியாப் பாக்கலை" என்று மன்னிப்புக் கேட்கும் முறையில் சொன்னவுடன் பார்க்க வேணுமே குழந்தையின் உற்சாகத்தை. "பாத்தியா நான் சொன்னா தெரியலியே, தும்பிக்கை இருக்கு, தந்தம் இருக்கு, காதைப் பாரு மொறமாட்டம், கருப்பு ஒடம்பு. இதைப் போயி ஆனை இல்லையின்னா – ஆனைக்கி ஒம் மேலே ரொம்ப ஆசையாம், எப்பிடித் தடவிக் குடுக்க வருது பாத்தியா...? என்று அடுக்கிக் கொண்டே போனது.

அன்று முதல் அந்த யானைக்கு ரெண்டு விளையாட்டுத் தோழர். குழந்தையும் ரங்கநாதனும். அதைக் குளிப்பாட்டுவார்கள். அதற்குச் சோறு போடுவார்கள். அதோடு காட்டில் வேட்டைக்குப் போவார்கள். காயம் பட்டால் கட்டுக் கட்டி விடுவார்கள். கோபம் வந்து அடிப்பார்கள். சோறு போடாமல் தண்டனை கொடுப்பார்கள். செய்த தப்புக்கு அது வருந்தி கெஞ்சி மன்னிப்புக் கேட்க வரும்போது அதற்குப் புத்தி சொல்வார்கள். அதுக்குக் கோபம் வரும்போது அதன் கையில் அகப்படாது ஒளிந்து கொள்வார்கள். அது சுமுகமாய் இருக்கும்போது சர்க்கஸ் வித்தைகள் கற்றுக் கொடுப்பார்கள். இப்படியாக எல்லாம் இருவரும் சேர்ந்தே செய்து வந்ததன் பலனாக ரங்கநாதனுக்கு அந்த யானை ரொம்ப ரொம்பப் பழக்கமாகிவிட்டது. அதனுடைய மனநிலைகள், விருப்புவெறுப்புகள் எல்லாம் அவனுக்கு அத்துபடியாகிவிட்டன. சிலசமயம் குழந்தை இல்லாதபோதுகூட அந்த யானை அவனோடு விளையாட வரும். அல்லது முரண்டிக்கொண்டு நிற்கும்.

மறுபடியும் அவன் வேலை நிமித்தமாக வெளியூர் போக வேண்டியிருந்தது. திரும்பி வரும்போது வழிநெடுக அவனுக்குக் 'குழந்தை யானை' ஞாபகம்தான். புது விளையாட்டு ஒன்றைக்கூட கற்பனை செய்து வைத்திருந்தான். யானையை மீன் பிடிக்க வைக்கவேணும். சேற்றிலிருந்து அசரை

மீனை அது தும்பிக்கையால் துழாவித் துழாவி எடுத்துக் கொடுக்க வேணும். பிறகு அது பெரிய மடுக்கரையில் உட்கார்ந்தபடி தூண்டிலிக்குப் பதில் தும்பிக்கையில் புழுவை வைத்துப் பிடிக்கவேணும் இன்னும் எத்தனையோ.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீடுபோய்ச் சேர்ந்தபோது குழந்தையையும் காணோம்! யானையையும் காணோம். வெளியே எங்கோ விளையாடப் போயிருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டான். சாயங்காலம் அவன் வெளியே போய்விட்டு வந்தபோது நேரம் அதிகம் ஆகிவிட்டிருந்தது. குழந்தையும் தூங்கப் போய்விட்டிருந்தது. புது விளையாட்டை நாளைக்குக் கற்றுக் கொடுக்கலாம் என்று ஆறுதல் சொல்லிக் கொண்டான்.

மறுநாள் காலை ரங்கநாதன் குழந்தையைப் பார்த்தவுடன் அவன் கேட்ட முதல் கேள்வி "யானை எங்கே"தான். ஏனென்றால் அதன் கையில் யானையைக் காணோம். "அது எங்கேயோ" என்று அசுவாரசியமாகப் பதில் சொன்னது குழந்தை. அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை. ஏமாற்றமும் கோபமுமாக வந்தன.

"காணாமே போக்கிட்டியா, இல்லே காட்டுக்கு ஓடிப்போயிடுச்சா?" என்று கேட்டான். அவன் காதுக்கு அது சாதாரணக் கேள்விபோல் தொனிக்கவில்லை. அதட்டலா? அழுகையா?

"ஊகும் இங்கேதான் எங்கேயாவது கெடக்கும்" என்று சொல்லிக்கொண்டே குழந்தை பல் தேய்க்கப் போய்விட்டது.

"ஏய், புது யானை வெளையாட்டு கண்டுபிடிச்சிருக்கிறேன், மீன் பிடிக்கிற வெளையாட்டு" என்று சொன்னபடியே ரங்கநாதன் குழந்தையைப் பின் தொடர்ந்தான்.

மூலையில் அழுக்குத் துணிகளிடையே யானை கேட்பாரற்றுக் கிடந்ததைக் கண்டான்.

"ஐயோ பாவம், ஒடம்பு சரியில்லை போலிருக்கே, காச்சல் வந்துட்டுதோ, ஆஸ்பத்திரிக்குப் போலாமா, மருந்து குடுக்கலாமா? ஏய்! இதோ, இங்கே இருக்குபாரு!, யானை" எனப் பரிவுடன் சொல்லிக்கொண்டே யானையை எடுக்கக் குனிந்தவன் குழந்தையின் பதிலைக் கேட்டுச் சடாரென்று நிமிர்ந்தான்.

"நீ என்னப்பா, அதுக்கு ஒண்ணும் வராது.

அது என்ன நெஜ யானையா? பொம்மைக்குப் போயி காச்சலும் பேதியும் வருமா?" என்று சொல்லிவிட்டுக் குழந்தை அலமாரியைத் திறந்து, "அப்பா, நீ இதைப் பாத்தியா, நெஜ டயரு போட்டிருக்கே, எப்பிடி ஒடுது பாக்கறியா" என்று சொன்னபடியாகச் சிவப்பு நிறமான, குட்டி டயர் போட்ட தகரக் கார் ஒண்ணை எடுத்து வெற்றிகரமாக அவனுக்குக் காண்பித்து, "நான் தரமாட்டேன், எதிர் வீட்டம்மா எனக்குத்தானே குடுத்தாங்க" என்று பெருமை பேசியது குழந்தை.

அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை. குழந்தையைப் பார்த்தான். குறும்புச் சிரிப்போடு பின்னம்புறம் ஒளிக்க முயன்றுகொண்டிருந்த அதன் கையிலிருந்து கார் எட்டிப் பார்த்து பளபளவென்று பல்லைக் காட்டி இவனை ஏமாளி செய்து கொண்டிருந்தது.

தலையைத் திருப்பிக் கீழே பார்த்தான். செத்துப்போன யானையின் சடலம், "நான் வெறும் மரம், யானையில்லை" என்று முனகிவிட்டு மறுபடியும் செத்துப்போச்சு. அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை.

"என்னப்பா சொல்றே?" என்று காரைத் தரையில் தேய்த்துக் கொண்டே கேட்டது குழந்தை.

அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை.

படைப்பு முகம்



சார்வாகன் (1929 – 2015): மருத்துவம், இலக்கியம் ஆகிய இரண்டு துறைகளிலும் சாதித்தவர். ஒரு சிறந்த எழுத்தாளராக அறியப்பட்ட பழைமையைக் கேள்விக்குள்ளாக்கும் அங்கத எழுத்துக்குச் சொந்தக்காரரான சார்வாகனின் கதைகள் தனித்தொகுப்பாக வெளிவந்துள்ளன.

படிப்போம் பகிர்வோம்

1. நீங்கள் சிறுவயதில் விளையாடிய ஒரு பாவனை விளையாட்டினைப் பற்றி எழுதுக.
2. கீழே கொடுக்கப்பட்டுள்ள அப்துல் ரகுமானின் பௌர்ணமிப்பிறை என்னும் கவிதையை யானையின் சாவு கதையோடு ஒப்பிட்டு எழுதுக.

    பௌர்ணமிப்பிறை
    குழந்தைகளே! உங்கள் விரல்களை
    நாங்கள் பிடித்துக் கொள்கிறோம்
    எங்களை உங்கள் தேவ தேசத்திற்கு
    அழைத்துச் செல்லுங்கள் – அப்துல் ரகுமான்

3. 'யானையின் சாவு' கதையில் ரங்கநாதனின் மனநிலையும் குழந்தையின் மனநிலையும் வேறுபடும் பாங்கினை எழுதுக.
4. யானையின் சாவு சிறுகதையினைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் ஒரு பக்க அளவில் சுருக்கி எழுதுக.
5. அவனுக்கு ஒண்ணும் புரியவில்லை ... என்ற யானையின் சாவு கதையின் முடிவு வரியிலிருந்து ரங்கநாதனும் சிறுவனும் தொடர்ந்து பேசிக்கொள்வது போல் கற்பனை உரையாடலை அமைத்திடுக.

பூ உதிரும்

– ஜெயகாந்தன்

பெரியசாமி வாயைத் திறந்து பேச ஆரம்பித்தால், அதுவும் அந்த நரைத்துப்போன, சுருட்டுப் புகையால் பழுப்பேறிய பெரிய மீசையை முறுக்கிக் கொண்டு பேச ஆரம்பித்துவிட்டால்..... நிச்சயம் அவர் பேசுகின்ற விஷயம் இந்த நூற்றாண்டில் நிகழ்ந்த இரண்டு உலக மகா யுத்தங்களிலும் நேச தேச ராணுவத்தினர் புரிந்த வீரதீரச் சாகசங்கள் பற்றியதாகத்தான் இருக்கும்.

அரும்பு மீசைப் பிராயத்தில் முதல் மகா யுத்தத்திலும், கரு கருவென முறுக்கு மீசை வளர்ந்த நடுத்தர வயதில் இரண்டாவது மகா யுத்தத்திலும் சமராடி வந்தவர் அவர். சுதந்திரமும் அமைதியும் நிலவும் ஒரு நாட்டின் பிரஜையாய் நரைத்த மீசையுடன் தளர்ந்த உடலுடன் இப்போது வாழ்ந்த போதிலும் அவரது பட்டாளத்துக்கார மனத்துக்கு அடிக்கடி பழைய நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக் கொள்வதில் ஒரு போதை இருந்தது. அதில் ஒரு புத்துணர்ச்சியும் பிறந்தது.

தன் மகனை ராணுவ வீரனாக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கண்டு பயந்த அவர் மனைவி மரகதம் உறவினர்கள் மூலம் கிழவரின் முடிவை மாற்ற முயன்றாள்.....

"எதுக்குங்க பட்டாளமும்....கிட்டாளமும்? பையன் பத்து படிச்சி பாஸ் பண்ணி இருக்கு. ஏதாவது கெவுருமெண்டு உத்தியோகம் ஒண்ணு பாத்து வெச்சி, கலியாணம் காட்சி நடத்தி பேரன் பேத்தியைக் கொஞ்சிக்கிட்டிருக்காம--- பையனைப் பட்டாளத்துக்கு அனுப்பறது சரியில்லீங்க அவ்வளவுதான்......" என்று கூறிய அந்த உறவினர்களையும், அவர்கள் அவ்விதம் வந்து யோசனை கூறக் காரணமாயிருந்த மனைவியையும் பார்த்து மீசையை முறுக்கிக் கொண்டு லேசாய்ச் சிரித்தார் பெரியசாமி. பிறகு அவர்கள் சொல்வதைச் சற்று ஆழ்ந்து சிந்தித்தார். அதில் பொருளிருப்பதாகத் தோன்றவில்லை அவருக்கு. குறுகிய பாசம் என்பதைத் தவிர வேறு காரணமில்லை என்றே தோன்றியது.

அவர்களுக்கு அவர் சொன்னார்: "உங்களுக்குத் தெரியாது.... ம்.... நான் வாழ்நாள் பூராவும் வெள்ளைக்காரங்ககிட்டே அடிமைச் சிப்பாயாவே காலங் கழிச்சவன்.... அப்பல்லாம் ஒரு சாதாரண வெள்ளைக்கார சோல்ஜருக்கு இருந்த மதிப்புக்கூட ஒரு கறுப்பு மேஜருக்கு கிடையாது, ஒரு சுதந்திர நாட்டு ராணுவத்திலே ஒரு சாதாரண சிப்பாயாக இருக்க மாட்டோமான்னு ஏங்கினது எனக்கில்லே தெரியும்? இப்ப எம்மகனுக்கு அந்தச் சான்ஸ் கெடைக்கிறதுன்னா அதெ விடலாமா? பட்டாளத்துக்குப் போனா, சாகறது தான் தலை விதின்னு நெனச்சிக்காதீங்க. பட்டாளத்துக்குப் போகாதவங்களுக்கும் சாவு உண்டு... வாழ்கையிலே ஒரு பொறுப்பு' அநுபவம், தேசம்ங்கிற உணர்வு... ம்... ஒரு 'டிஸிப்ளின்' எல்லாம் உண்டாகும் பட்டாளத்திலே.. இதெல்லாமில்லாம சும்மா வெந்ததைத் தின்னுட்டு வேளை வந்தா சாகறதிலே என்னா பிரயோசனம்?... சொல்லுங்க" என்று அவர் கேட்கும் போது தந்தையின் அருகே நின்றிருந்த சோமநாதன், தந்தையின் இதயத்தையும் எண்ணத்தையும் சரியாகவும் முழுமையாகவும் புரிந்துகொண்டான். "அப்படிச் செத்துப் போனாத்தான் என்னப்பா? பட்டாளத்துக்குப் போறவன், ஊருக்கு லீவில் வந்து உடுப்பைக் காமிச்சுப்பிட்டுப் போனாப் போதுமா? சண்டைன்னு வந்தா சாகவும் தான் தயாராப் போகணும்" சோமநாதன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, கிழவரின் சுருட்டுக் கறையேறிய கரிய உதடுகள் உணர்ச்சி மிகுந்து துடித்தன.

"சபாஷ்' "என்று பெருமிதத்தோடு அவனைப் பாராட்டுகையில் அவர் கண்களில் அதீதமானதோர் ஒளி சுடர்விட்டது.

தந்தை தன் சொல் வலியால், தாயின் ஆசீர்வாதத்துடனும் பத்து வருஷங்களுக்கு முன் பட்டாளத்தில் சேர்ந்தான் சோமநாதன்.

முதன்முறை, லீவில் வீட்டுக்கு வந்திருக்கும்போதுகூட, காலையில் ஐந்தரை மணிக்குமேல் அவனால் படுக்கையில் படுத்திருக்க முடியாது. எங்கோ நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் தனது ராணுவ முகாமில் முழங்குகின்ற காலை நேர எக்காளத்தின் ஓசையைக் கேட்டவன் போன்று, அந்தப் பழக்கத்தால் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து விடுவான் சோமநாதன். பின்னர், காலை நேர உலாப் போய்விட்டு, தேகப்பயிற்சி செய்து முடித்தபின் என்ன செய்வதென்று புரியாமல் நாள் முழுதும் பேப்பர் படித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது அவனுக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

இரண்டாவது முறை அவன் லீவில் வந்தபோது அதற்கொரு பரிகாரம் காண்பதுபோல் தோட்ட வேலை செய்ய ஆரம்பித்தான். அதன் விளைவாய் அவர்கள் வீட்டை சுற்றிலும் கட்டாந்தரையாகக் கிடந்த 'தோட்டம்' சண்பகமும், ரோஜாவும், மல்லிகையும் சொரியும் நந்தவனமாக மாறி, அவனது நினைவாய் இன்றும் மலர்களை உதிர்த்துக் கொண்டிருக்கிறது.....

"ம்...சும்மாக் கெடந்த தோட்டமெல்லாம் செம்பகமும் ரோஜாவும் வெச்சிப் பூ மண்டிப் போவுது...ஊரிலே இருக்கிற பொண்ணுங்க எல்லாம் வந்து அள்ளிக்கிட்டுப் போவுதுங்க... போறதுங்க சும்மா போவுதா? "பூ இருக்கிற வீட்டிலே பொண்ணு இல்லியான்னு" பரியாசம் பண்றா ஒரு குட்டி..."

"அதாரு அந்த வாயாடி?... பொண்ணு இல்லே, நீதான் வந்து இருவேன்னு சொல்றதுதானே?..." என்று நரைத்த மீசையில் வழக்கம்போல் கை போட்டார் பெரியசாமி.

"அப்பிடித்தான் நானும் நெனச்சிக்கிட்டேன். அதை அவகிட்டே எதுக்குச் சொல்வானேன்... நேத்து கோயில்லே அவ ஆயியைப் பார்த்துச் சொன்னேன்... அவளுக்கு வாயெல்லாம் பல்லாப் போச்சு... நம்ப பயலுக்குப் பொண்ணு கொடுக்கக் கசக்குமோ, பின்னே?..." என்று மலர்களின் நடுவே மலர்ந்த முகத்தோடு, பல இரவுகளாய்த் தூங்காமல் கட்டிய மனக் கனவுகளைக் கணவனிடம் உதிர்க்கும் மனைவியின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டார் பெரியசாமி.

"சரி, சரி' இந்தத் தடவை நம்ப வீட்டிலே கலியாணம் தான்... நீ போயி மசிக்கூடும் காகிதமும் எடுத்து வையி... பையனுக்குக் கடுதாசி எழுதணும்" என்று உற்சாகமாய்க் கூவினார் பெரியசாமி.

வழக்கமாய், தந்தையின் கடிதம் கண்ட ஒரிரு வாரங்களுக்குள்ளாகவே ஊருக்கு வந்துவிடும் சோமநாதன், அந்தத் தடவை இரண்டு மாதங்களுக்குப் பிறகே வர முடிந்தது.

அப்பனும் மகனும் பேசிக் கொண்டிருக்கையில் இடையில் வந்து கலந்துகொள்ளத் தைரியம் இல்லாத மரகதம் தூரத்திலோ, அறைவாயிலிலோ நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருப்பாள்.

சோமநாதன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த நேரம்போக, தான் பேச நேர்ந்தபோதெல்லாம் மகனின் கலியாண விஷயமாகவே பேசினார் பெரியசாமி.

அவன் தனக்கொரு கலியாணம் என்பது பற்றி அதுவரை யோசித்ததில்லை. ஆனால், தகப்பனார் பேசுகிற தோரணையைப் பார்த்தால், தனக்கு யோசிக்க அவகாசமே தரமாட்டார் போலிருந்தது. இதில் யோசிக்கத்தான் அப்படி என்ன இருக்கிறது? சமாதானச் சூழ்நிலையில் வாழும் ஒரு தேசத்தின் ராணுவ உத்தியோகஸ்தன் கல்யாணம் செய்து கொள்ளலாம்... அவ்விதம் திருமணம் புரிந்துகொண்டு எத்தனையோ பேர் குடும்பத்தோடு அங்கேயே வந்து வாழ்கிறார்களே...என்பதையெல்லாம் நினைவு கூர்ந்து 'சரி' என்று ஒப்புக்கொண்டான்.

... அந்தத் தடவை லீவிலேயே அவனுக்கும் அவளுக்கும் கலியாணம் நடந்தது.

பூப்பறிக்க வந்த கௌரி பூந்தோட்டத்தின் சொந்தக்காரியானாள். ஒரு பலனும் கருதாமல் சோமநாதன் தன் கையால் நட்டுத் தண்ணீர் பாய்ச்சியதற்குப் பிரதியாக மலர்களை மட்டுமில்லாமல் அவனுக்கொரு மனைவியையும் கொண்டுவரத் தூதாகியிருக்கும் மகிழ்ச்சியில் சண்பகமும் ரோஜாவும் பூத்துக் குலுங்கிச் சிரித்தன. எத்தனை காலைகள் எத்தனை மாலைகள், எத்தனை இரவுகள் இவர்கள் இருவரும் அங்கேயே கழித்து, என்னென்ன பேசி, என்னென்ன கனவுகளை வளர்த்தார்கள் என்று அந்தச் சண்பகத்துக்குத் தெரியும்; அந்த ரோஜாவும் மல்லிகையும் அறியும்.

கடைசியில் ஒரு நாள்......

இரண்டு மாதங்கள் அவள் இதயத்தோடு இணைந்திருந்து, கனவோடும் கற்பனையோடும் கலந்து உடலால் மட்டும் விலகும்போது 'அடுத்த தடவை லீவுக்கு வந்து திரும்பும்போது உன்னை என்னோட அழைச்சுக்கிட்டுப் போவேன்' என்று வாக்குறுதி தந்து அவன் அவளைப் பிரிந்து சென்றான்.

கௌரியைப் பிரிந்து சென்ற பதினைந்தாம் நாள் அவளுக்கு அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

அவனிடமிருந்து மறு கடிதம் வரும்வரை, தனது தனியறையின் ஏகாந்தத்தில்.... அவனே வந்து எட்டிப் பார்ப்பது போல், ஜன்னலருகே வளைந்திருக்கும் சண்பக மரக் கிளையில் பூத்துச் சிரிக்கும் மலர்களுக்கு அந்தக் கடிதத்தில் இருந்த ரகசியங்களைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தாள் கௌரி.

சண்பகத்துக்குப் பக்கத்தில், மலர்ச்சியின் ரகசியத்தை மறைத்துக்கொண்டு,.....முற்றாக மறைக்க முடியாமல்.... தாங்கொணாத் தவிப்புடன், கனத்துக் கிடக்கும் மொட்டுக்களைத் தாங்கி நிற்கும் ரோஜாவைப் பார்த்து அவள் சிரிக்கும் போது 'உன் கதை இன்னும் ஒரு மாதத்தில் தெரியும்? என்று 'பளீரென'ச் சிரித்துச் சிதறிய முல்லைக் கொடியிலிருந்து பூக்கள்

உதிர்ந்த ரகசியம் அவளுக்கு அப்போது புரியவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பின், சண்பகத்தையும் ரோஜாவையும் மடி கனக்கக் கட்டிக்கொண்டிருக்கும் உணர்வுடன் மனமும் உடலும் கூசிச் சிலிர்க்க அந்த விஷயத்தை அவனுக்கு அவள் எழுதும்போது..... சுவரில் தொங்கும் சோமுவின் படம் அவளைப் பார்த்துச் சிரிக்கும்போது அவன் படத்தைக்கூட பார்க்கமுடியாமல் அவள் முகத்தை மூடிக்கொண்டாள். முகத்தை மூடிய கரங்களையும் மீறி வழிந்த நாணம் அவள் காதோரத்தில் சிவந்து விளிம்பு கட்டி நின்றது.

அவள் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டு, அந்தப் படத்தைக் கையிலெடுத்தாள். அவனது மாயப் புன்னகை, அவள் இதயத்தை ஊடுருவியது.

திடீரென்று அவளுக்கு உடல் சிலிர்த்தது. நெஞ்சில் நிலைத்த அவன் நினைவு வயிற்றில் புரண்டது போலிருந்தது.....

"நீங்க எப்ப வருவீங்க?" என்று அந்தப் படத்தை முகத்தோடு அணைத்துக்கொண்டு அமைதியாய், சப்தமில்லாமல் தொண்டை அடைத்துக் கரகரக்க அவள் கேட்டபோது, தன் விழிகளில் சுரந்த கண்ணீரை அவளால் அடக்க முடியவில்லை.

"எப்ப வருவீங்க.... எப்ப வருவீங்க?" என்று துடித்துக் கொண்டிருந்த அவள் இதயத்திற்கு அவனிடமிருந்து பதில் வந்தது.

"........ ஏழாம் மாதம் பூச்சூட்டலுக்கு வருவேன். மூன்று மாதம் லீவு கிடைக்கும். உன்னோடயே இருந்து குழந்தை பிறந்த பிறகு, என் மகனின் பூமாதிரி இருக்கிற பாதத்திலே முத்தமிடணும்னு என் உதடுகள் துடிக்கிற துடிப்பு....' என்று தன் கணவன் தனக்கெழுதிய கடிதத்தைப் பெரியசாமிக்கும் மரகதத்துக்கும் படித்துக் காட்டிக்கொண்டிருந்த கௌரி "அவ்வளவுதான் முக்கிய விஷயம்" என்று கடிதத்தை மடித்துக்கொண்டு தன் அறைக்குள் ஓடி விட்டாள்.

அதில் தான் அவன் என்ன வெல்லாம் எழுதியிருந்தான்'

கௌரி..... ரொம்ப ஆச்சரியமா இல்லே? நமக்கு ஒரு குழந்தை பொறக்கப் போவுது.....' இப்பவே உன்கிட்டே ஓடி வரணும்னு மனசு துடிக்குது. சரி ஏழாம் மாதம் தான் நான் வரப் போறேனே; தாய்மைக் குரிய காணிக்கைகளைத் தராமலா விடுவேன்....?'

ஏழாம் மாதம் வந்துவிட்டது. பெரியசாமி எதிர்பார்த்ததுபோல் அந்தக் கடிதம் வந்தது.

'...எல்லையில் ஏற்பட்டிருக்கும் யுத்தமும் தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும் பத்திரிகை மூலம் அறிந்திருப்பீர்கள். போர் வீரனுக்குரிய கடமையை ஆற்ற வேண்டிய சந்தர்ப்பத்தில் நான் வரமுடியாது. வர விரும்புவது சரியுமில்லை. அதனாலென்ன? நம் வீட்டில் தான் கொள்ளைப் பூ இருக்கின்றது. பூ முடித்துக் கொள்ளப் பெண்ணும் இருக்கிறாள். மகிழ்ச்சியுடன் சுபகாரியங்களைச் சிறப்பாகச் செய்யவும். நான் வராததற்காக வருந்தாதீர்கள். அங்கு நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு மகிழ்ச்சியுடனிருக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு இங்கு நான் உற்சாகமாக இருப்பேன் என்று எண்ணிக் குதூகலமாய் இருக்கவும்...'

தந்தைக்கு எழுதிய கடிதத்தோடு கூட மனைவிக்குத் தனியாய் இன்னொரு கடிதம் எழுதியிருந்தான் அவன். அந்தக் கடிதம் பொய்மைகலந்த குதூகலத்தோடும், தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் விதத்தில் உற்சாகம் மிகுந்திருப்பது போலும் அமைந்திருந்தது.

சில மாத பந்தத்திலேயே அவனை நன்கு புரிந்து கொண்டவளாகையால், எந்தச் சூழ்நிலையில், எவ்வித மனோ நிலையில் இக்கடிதம் எழுதப்பட்டிருக்கும் என்பதை கௌரி உணர்ந்தாள். இதன் மூலம் அவள் மனம் ஆறுதலடையும் என்று நம்பி அவனால் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை நெஞ்சோடு

அணைத்துக்கொண்டு--அவனதுசிறுபிள்ளைத் தனமான வார்த்தைப் பிரயோகங்களுக்காகச் சிரிக்க முயன்று, அதில் மறைந்திருக்கும் துயரத்தின் கனத்தைத் தாங்க மாட்டாதவளாய்--மனம் பொருமி அழுதாள் கௌரி..

சில நாட்களுக்குப் பின் அவனுடைய வேண்டுகோளின்படி அவர்கள் குதூகலமாகவே இருக்க முயன்று, அப்படி இருந்தும் வந்தார்கள்.

பெரியசாமி 'யுத்தம்' என்று தெரிவித்த அன்றிலிருந்தே மிகவும் துடிப்புடன் காணப்பட்டார். பக்கத்திலிருப்போரிடம் காலையிலும் மாலையிலும் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டு, ஒரு கையால் மீசையை முறுக்கியவாறே செய்தி விளக்கம் கூற ஆரம்பித்து, இரண்டாவது அல்லது முதல் மகா யுத்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கதையாகச் சொல்லத்தான் அவரால் முடிந்தது.

அவர் கொஞ்சங்கூடக் கவலை இல்லாமல் இப்படி இருப்பது கண்டு முணுமுணுத்துக் கொண்ட மரகதத்தின் குரல் அவர் காதில் விழுந்தது.

அவர் மனைவியைப்பார்த்துச் சிரித்தார்; "போடி...போ' போர் வீரனின் சங்கீதமே பீரங்கி முழக்கம் தான்' உனக்கெங்கே அது தெரியும்...உன் வம்சமே தொடை நடுங்கிக் கும்பல், உன் பையன் வருவான் சிங்கம் மாதிரி, அவனைக் கேளு, சொல்லுவான்..."என்று அவர் சொன்னதைக் கேட்டு சிரித்தவாறு அங்கு வந்த கௌரி, "அவங்க மகன் சிங்கமா இருந்தா, அந்தப் பெருமை அவங்களுக்கு இல்லையா?" என்றாள்.

"ம்... ம்... பெருமை இல்லேன்னு யாரு சொன்னா? அந்தப் பெருமைக்குக் காரணம் எங்க வம்சம்னேன்... நீ நாளைக்குப் பெத்துக்கப் போறியே அந்தப் பயலுக்காகவும் தான் சொல்றேன்...வீரன் மகன் வீரனாகத்தான் இருப்பான்"என்று அவர் சொன்னபோது, அவளுக்கு வயிற்றில் என்னவோ செய்தது... அந்த இன்பக்கிளுகிளுப்பில்தலை குனிந்தவாறு தன் அறைக்குப் போனாள் கௌரி.

நேற்று கௌரிக்குப் பூச்சூட்டல் . அடர்ந்து நீண்ட கூந்தலில் சண்பகத்தை அடுக்கடுக்காக வைத்துத் தைத்து, இடையிடையே மல்லிகையை விரவி ரோஜாவைப் பதித்து -- 'இந்த அலங்காரத்தில் கௌரியைப் பார்க்க அவன் இல்லையே' என்ற குறை

ஒவ்வொருவர் மனத்திலும் ஏதோ ஒரு விநாடியில் நெருடி மறைந்து கொண்டு தானிருந்தது.

...... தனியறையில் அமர்ந்து, தலையில் கசங்கிப் போன மலர்களைக் களைந்து கொண்டிருக்கிறாள் கௌரி.

அப்பொழுது ஜன்னலுக்கு வெளியே அவனே வந்து எட்டிப் பார்ப்பதுபோல் சண்பகமரக் கிளையின் பூவடர்ந்த கொப்பொன்று அவளுக்கு எதிரே தெரிந்து கொண்டு தானிருந்தது...

'நேற்று இந்நேரம் இதே போல் செடியிலும் மரத்திலும் மலர்ந்திருந்த பூக்கள் தானே இவையும்?...' என்ற எண்ணம் தொடர்பின்றி அவள் மனத்தில் முகிழ்த்தபோதிலும், அந்த எண்ணத்தைத் தொடர்ந்து பிறந்த அடுத்த விநாடியே சில மாதங்களுக்கு முன்பு சோமநாதன் தோட்டத்தில் அவளிடம் சொன்ன வார்த்தைகளின் தொடர்ச்சியே இது என்று அவளுக்கு விளங்கியது.

அன்று... சோமநாதன் கோவாவில் நடந்த யுத்த நிகழ்ச்சிகளை அவளிடம் வீரரசம் மிகுந்த கதையாகச் சொல்லிக்கொண்டிருந்தான். அந்தக் கதைக்குப் பின்னால் உள்ள எத்தனையோ தாய்மார்களின் கண்ணீரும், இளம் பெண்களின் சோகங்களும் அவளுக்குப் புலனாயின.

அவள் கெஞ்சுகின்ற குரலில் அவனிடம் கேட்டாள், "இந்தப் பட்டாளத்து உத்தியோகத்தை நீங்க விட்டுட்டா என்ன? கோரமான சண்டையிலே பொன்னான உயிரையும், இன்பமான வாழ்க்கையையும் எதுக்குப் பலியிடணும்?

அவள் சொல்லிக் கொண்டிருந்ததை எல்லாம் மௌனமான யோசனையுடன்

அவன் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு பக்கத்திலிருந்த ரோஜாச்செடியிலிருந்து ஒரு பெரிய பூவைப் பறித்தவாறே அவன் சொன்னான், "சண்டை வேண்டாம்கிறதுதான் நம்மோட கொள்கை. ஆனா சண்டைன்னு வந்துட்டா, சண்டை போடாமே உயிருக்குப் பயந்து சமாதானம் பேசறது கோழைத்தனம். ஆனா, நீ கேக்கறது இந்தச் சண்டையிலே எதுக்குப் பொன்னான உயிரை இழக்கணும்கறது தானே?..." என்று கேட்டுவிட்டுக் கையிலிருந்த ரோஜாவை அவள் கூந்தலில் சூட்டிய பின், ஒரு விநாடி அமைதியாக அவள் முகத்தையும், மலர் சூடிய கூந்தலின் அழகையும் பார்த்தான்; தொடர்ந்துசொன்னான் அவன்; "இதோ இந்தப்பூ, செடியிலே இருக்கறப்போ நல்லாத்தான் இருந்தது. இது நல்லா இருக்கே பறிக்காம இருப்போம்னு விட்டுட்டா, அது உதிராம இருக்கப் போகுதா? இப்ப நான் அதைப்பறிச்சு உன் தலையிலே வெச்சிருக்கேன்...நீ அதைப் பறிச்சி உனக்கு இஷ்டமான ஒரு தெய்வத்துக்கு மாலை கட்டிப் போடறே... அதிலேதான் அந்தப் பூவுக்கு... உதிர்ந்து போகிற சாதாரணப் பூவுக்கு ஒரு மகத்தான அர்த்தம் இருக்கு... இல்லியா?... அது மாதிரிதான், மனுஷன்னுபொறந்தா.. பூத்திருக்கிறமலர் உதிர்ந்து போகிறமாதிரி... மனுஷனும் ஒரு நாளைக்கு செத்துத்தான் போவான்... அப்படி விதிமுடிஞ்சி, வியாதி வந்து சாகிற மனுஷன் அந்த உயிரை, தான் நேசிக்கிற தேசத்துக்காக, தான் விரும்பும் ஒரு லட்சியத்துக்காக அர்ப்பணம் பண்ணினா, அவன் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இருக்கு இல்லியா?'

கௌரியின் கண்கள் கலங்குவதையும் உதடுகள் சிவந்து துடிப்பதையும் கண்ட சோமநாதன் 'பூ-உதிரும்' என்பது மட்டுமல்ல; புதிய புதிய பூக்கள் மலரும் என்பதும் உண்மை என்று கூறிவிட்டுப் பேச்சை வேறு விஷயங்களில் திருப்பினான்.

'ஐயோ இதை ஏன் இப்போது நான் நினைக்கிறேன்... அவர் போர் முனையில் இருக்கும் இந்த நேரத்திலா எனக்கு அந்த நினைவு வரவேண்டும்' என்று ஒரு விநாடி துணுக்குற்று, கட்டிலின் தலை மாட்டில் தொங்கும் கணவனின் படத்தைப் பார்க்கப் பார்க்க விகசிக்கும் அந்த மாயப் புன்னகையைப் பார்ப்பதற்காகப் படத்தருகே போய் நின்றாள் கௌரி.

அப்போது அறைக்கு வெளியே...

"சொல்லுங்க, கடுதாசியிலே என்ன சேதி?.... பேச மாட்டீங்களா? ஐயோ தெய்வமே'..... கௌரி.... ஈ....." என்று தாய்மையின் சோகம் வெடித்துக் கிளம்பிய பேரோசை கேட்டுக் கௌரி அறைக் கதவை திறந்தாள்..... அப்படியே விழி பிதுங்கிச் சிலையாய் நின்றாள்.....

வராந்தா ஈஸிசேரில் கையில் பிரித்த கடிதத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து கண்களை இறுக மூடிக்கொண்டிருக்கும் பெரியசாமியின் காலடியில், தரையில் நெற்றியை 'மடார் மடா'ரென முட்டிக்கொண்டு கதறுகிறாளே மரகதம்.

செம்பில் வார்த்து விட்ட சிலை மாதிரி உணர்ச்சி மிகுதியால் உப்பிக் கனத்து இறுகிச் சிவந்த அவர் முகத்தில் சருமம் துடித்தது. மூடிய இமைகளின் வழியே கோடாய் வழிந்த கண்ணீர் நரைத்துப்போன மீசையின் மேல் வடிந்து நின்றது.....

"மகனே, சோமு..." என்று வானத்தை நோக்கி இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு எழுந்தார். வராந்தாவில் சுவரில் தொங்கும் மகனின் போட்டோவை நோக்கி நடந்தார்.

"ஐயா, நீ வீரனய்யா'...." என்று ஒற்றை மரமாய் மகனின் படத்தின் முன் நிமிர்ந்து நின்று ராணுவ முறையில் 'சல்யூட்' வைத்தார்.

விறைத்து நின்று வீர வணக்கம் செய்த கரத்தைக் கீழிறக்கிய போது முதுமையின் தளர்ச்சி முழுவதையும் திடீரென அனுபவித்த உணர்வுடன் தளர்ந்து உட்கார்ந்தார் பெரியசாமி.

"எனக்கு வேறொருமகன் கூட இல்லையே..." என்று வாய்விட்டுப் புலம்பினார்....அந்த

வார்த்தைகளைக்கேட்டு எரித்து விடுவது போல் பெரியசாமியைப் பார்த்த மரகதம், அவரைச் சபிப்பதுபோல் ஆங்காரத்துடன் இரண்டு கைகளையும் அவரை நோக்கி நீட்டியவாறு விரித்த கூந்தலும் வெறித்த விழிகளுமாய் அலறினாள்: "பாவி'....வேறே மகன் நமக்கு கிடையாது-வேண்டாம் பட்டாளத்துக்குன்னு அடிச்சிக்கிட்டேனே கேட்டீங்களா? பட்டாளம் பட்டாளம்ன்னு நின்னு என் அருமைப் புள்ளையெக் கொன்னுட்டீங்களே.... ஐயோ' உங்க பாவத்துக்கு வேறே ஒரு மகன் வேணுமா? பட்டாளத்துக்கு அனுப்பி வாரிக் குடுக்கறத்துக்குத் தானே இன்னொரு மகன் இல்லேன்னு அழறீங்க?" என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவர் இதயத்தில் குத்துவது போல் கேட்டாள்.

"ஆமாம்' அதற்குத்தான்...." என்று பெரியசாமி, சுருட்டுப் புகையால் பழுப்பேறிய மீசையை முறுக்கிக் கொண்டே மரகதத்தின் கண்களுக்குள் பார்த்தவாறு சொன்னார். அவர் கண்களில் சுரந்த கண்ணீர் இமை விளிம்பில் பாதரசம்போல் ஜொலித்தது....

அப்போது அறை வாசலில் 'தடா'லெனச் சப்தம் கேட்கவே திரும்பப் பார்த்து மயங்கி விழுந்த கௌரியைத் தூக்குவதற்காக ஓடினார் பெரியசாமி.

மரகதத்தின் அலறல் தெருவையே திரட்டியது'

பூவின் மேல் ஆசைப்பட்டுப் பூப்பறிக்க வந்த கௌரி, பூவிழந்து விட்டாள்....

ஆனால் சோமுவின் கைகளால் நட்டு வளர்க்கப்பட்ட அந்தச் செடிகளும் மரங்களும் அவன் நினைவாய் இப்போதும் மலர்களைச் சொரிந்து கொண்டு நிற்கின்றன.

அவற்றைப் பறித்து ஆரமாய்த் தொடுக்கவும் சோமுவின் படத்திற்கு அழகாய்ச் சூட்டவும் அவனது நினைவையே வழிபட்டு நிற்கவும் அவளிருக்கிறாள்.....

சோமுவின் படத்துக்கு மாலையிட்டு விளக்கேற்றி வணங்கிக் கொண்டிருந்தாள் கௌரி..... மாலை மாலையாய்க் கண்ணீர் வழிந்து, அவள் உடலை நனைக்கிறது.

"நான் வழிபடும் உங்கள் நினைவுக்கு அஞ்சலியாய்ச் சமர்ப்பித்த இந்தப் பூக்களுக்கு ஒரு அர்த்தமிருப்பதுபோல், உங்கள் மரணத்திற்கு ஒரு அர்த்தமிருப்பதுபோல், இரண்டு மாதங்களேயானாலும்

படிப்போம் சுவைப்போம்

களம் கண்டு வா மகனே!

புறநானூறு

இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்த உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
'செருமுக நோக்கிச் செல்க' என விடுமே!
'கெடுக சிந்தை ; கடிதுஇவள் துணிவே;
மூதின் மகளிர் ஆதல் தகுமே'

– புறநானூறு: 279

பாடியவர்: ஒக்கூர் மாசாத்தியார்

பாடற்பொருள்

ஒரு பெண்ணின் தந்தை முதல் நாள் போரில் இறந்தான். அடுத்த நாள், அவளுடைய கணவனும் போரில் வீரமரணம் அடைந்தான். அவர்கள் இருவரையும் போரில் இழந்த பெண், மூன்றாம் நாளும் போர் முரசின் ஒலி கேட்டு, தன்னுடைய ஒரே மகனையும் போர்க்களத்திற்குச் செல்லும்படி விருப்பத்துடன் அனுப்புகின்றாள். தன்மகனுக்கு ஆடையுடுத்தி, அவனுடையதலைமுடிக்கு எண்ணெய் தேய்த்து, வீரமொழிகளைக் கூறி வழியனுப்புகிறாள்.

வீரபுருஷனோடு வாழ்ந்த எனது சாதாரண வாழ்க்கைக்கும் ஒரு மகத்தான அர்த்தம் காண்கிறேன் நான்...... நாளைப் பிறக்கப் போகும் நம் மகன் வாழ்க்கையும் அர்த்தம் நிறைந்திருக்கும்---- அவன் ஒரு வீரனின் மகன்' உங்கள் தகப்பனார் இன்னொரு மகன் இல்லையே என்று வருந்துகிறார். அந்தச் சிங்கம் குகைக்குள் இருந்து இன்னும் வெளியே வரவில்லை...... இந்த நாட்டின் பெண் குலம் உள்ளவரை வீரருக்கா பஞ்சம்'..... உங்கள் அம்மாவின் கண்ணீருக்குத்தான் மாற்றே இல்லை..... அவர்கள் எவ்வளவு பாக்கியசாலி...." என்று எவ்வளவு விஷயங்களை அவனோடு அவள் மௌனமாய்ப் பேசுகிறாள்.....

திடீரென்று அடிவயிற்றில், விலாப் புறத்தில் சுருக்கெனக் குத்தி வலிக்க கணவனின் படத்தின் முன் கைகூப்பி நின்றிருந்த கௌரி, கட்டிலின் மீது சாய்ந்து படுத்தாள்.....

அவள் கண் முன்னே நூறு வண்ணங்களில் ஆயிரக் கணக்கான பூக்கள் மலர்ந்து ஜொலிக்கின்றன.

வெளியே திண்ணையிலிருந்து மீசையை முறுக்கியவாறு பெரியசாமி தன் மகன் யுத்த களத்தில், மறைந்திருந்து குழியிலிருந்து மேலேறி வந்து, முன்னேறி வந்து கொண்டிருக்கும் எதிரிகளில் ஆறுபேரை ஒரே கணத்தில் சுட்டுக் கொன்றதையும், அப்போது தூரத்திலிருந்து வந்த குண்டொன்று அவன் உயிரைப் பறித்துச் சென்றதையும் பத்திரிகையில் படித்து யாருக்கோ விளக்கிக் கொண்டிருக்கிறார்.

ஆம்; ஒரு வீரனின் மரணத்தில் உள்ள சோகம் பனிப்படலம் போல் மறைந்து போகும். அவன் வாழ்ந்தபோது புரிந்த வீர சாகசமே, காலம் காலமாய்ச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

படைப்பு முகம்



ஜெயகாந்தன் (1934–2015): 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவராய்ப் போற்றப்படுபவர். இலட்சக்கணக்கான வாசகர்களைத் தம் படைப்புகளின் வழியே சென்றடைந்தவர். இந்திய அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதான ஞானபீட விருதினை (2002) தமது ஒட்டுமொத்தப் படைப்பிலக்கியங்களுக்காகப் பெற்றவர். சாகித்ய அகாதெமி, பத்மபூஷன் விருது ஆகிய விருதுகளையும் பெற்றவர். இவரது 'ஒரு மனிதன் ஒரு வீடு ஓர் உலகம்', 'சில நேரங்களில சில மனிதர்கள்', 'கங்கை எங்கே போகிறாள்?', 'சுந்தர காண்டம்', 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்' போன்ற படைப்புகள் குறிப்பிடத்தக்கவை.

படிப்போம் பகிர்வோம்

1. நீங்கள் அறிந்த, நாட்டுக்காகப் போராடி வீரமரணம் அடைந்த இராணுவ வீரர் ஒருவரைப் பற்றி எழுதுக.
2. பூ உதிரும் கதையில் வரும் பெரியசாமியின் மன உறுதிக்கும் கௌரியின் மன உறுதிக்கும் உள்ள ஒற்றுமையை விளக்குக.
3. பூ உதிரும் என்ற தலைப்பின் வழியாக ஜெயகாந்தன், வாழ்வின் பொருளை விளக்கும் பாங்கினை எழுதுக.
4. இராணுவ வீரரின் வாழ்வியல் ஒழுக்க நெறிகளைப் பட்டியலிடுக.

இறுக மூடிய கதவுகள்

– ஆர். சூடாமணி

பார்வை மங்கியது. எதிரில் கிடந்த அம்மாவின் முகம் பனிப்படலத்தினூடே மொத்தையாய்த் தெளிவின்றித் தெரிந்தது. கண் டாக்டர், மருந்து போட்டுக் கண் பார்க்க விரித்து வைத்தால் இருக்குமே, அந்த மாதிரி.

கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

இந்தக் கண்ணீர் ஏதோ நிமோனியாவில் காய்ச்சல் தகிக்க ஆக்ஸிஜன் குழாயினால் மூச்சு விட்டுக் கொண்டு நினைவின்றிப் படுத்திருக்கும் அம்மாவுக்காக மட்டும்தானா?

எனக்காகவும்தான்.

மற்றவருக்காக அழும்போது அந்த அழுகை பெரும்பாலும் நமக்காகவேதான் இருக்கிறது. நாம் அவருக்குச் செய்யத் தவறிய கடமைகளுக்காக, அவரிடம் காட்டாத அனுதாபத்துக்காக, அவரைப் புரிந்துகொள்ளாமல் போனதற்காக.

அம்மாவுக்கு மாநிறம். இப்போது காய்ச்சல் வேகத்தில் கறுப்பாகவே தெரிந்தாள். கரிய முகத்தில் ஜுரப் பளபளப்பு. கரிய முடியில் தலை சாமான் வைத்துக் கட்டியது போல், வகிட்டையொட்டி நெற்றியின் மேல் விளிம்பில் இருபுறமும் வெள்ளை முடி. திலகமில்லாத வெறும் நெற்றி. எனக்கு நினைவு தெரிந்த நாளாக வெறுமையாய் இருந்து வரும் நெற்றி.

டாக்டர் இனி அதிக நம்பிக்கை இல்லை என்று சொல்லிவிட்டார். அதாவது, "பார்ப்போம் மிஸ்டர் கேசவன். நம்மாலான முயற்சியெல்லாம் செய்யறோம். காட் இஸ் க்ரேட்" என்று சொன்னார்.

அறைக் கதவிடை சலனம். வேகமாய்த் திரும்பிப் பார்த்தேன். என் மனைவிதான். என் முகம் விழுந்து விட்டதா? என் ஏமாற்றத்தை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

"யாரை எதிர்பார்க்கிறீங்க?"

"ம்? யாரையுமில்லே"

"இந்த நேரத்துக்கு நான்தான் வருவேன்னு உங்களுக்குத் தெரியும்"

"ஆமாம்"

"பின்னே?"

"பின்னே? ஒண்ணுமில்லே"

"நாலுநாளா கவனிக்கிறேன். வீட்டிலேயும் சரி, இங்கேயும் சரி, அடிக்கடி வாசல் பக்கமே பாத்துக்கிட்டிருக்கீங்க. யாரை எதிர்பார்க்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கக் கூடாதா?"

அவள் குரலில் சற்று சூடு உறைத்தது. நியாயம் இருக்கும் இடத்தில் சூடு அவசியம் இருக்கும். அன்பான மனைவி. முகம்கோணாமல் என் தாயைக் கவனித்துக் கொள்பவள். நான் யாரை எதிர்பார்க்கிறேன். யாருக்கு அம்மா உடல்நிலைபற்றி எழுதி அனுப்பியிருக்கிறேன் என்று அறிந்துகொள்ள அவளுக்கு உரிமையில்லையா என்ன? ஆனால், அது அம்மாவின் உரிமையில் குறுக்கிடுவதாயிருந்தால்? யாருக்கும் தம் அந்தரங்கத்துக்கான உரிமை உண்டல்லவா?

"முக்கியப்பட்ட யாருமில்லை நீலா" என்று பொய் சொன்னேன்.

"இருந்தாலும் எனக்குச் சொல்றது! யாரது?"

"எங்களோட ஒரு பழங்காலக் குடும்ப நண்பர். அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர். சொந்தமின்னு அதிகமா யாருமில்லாத எங்களுக்கு, அவரை ஒரு சொந்தக்காராய் நினைச்சு, அம்மா முடியாமல் படுத்திருக்கிறதைத் தெரிவிச்சிருக்கேன்.

அவ்வளவுதான்." என்றேன். அதில் அதிக சிரத்தை இல்லாதவன்போல்.

மிஸ்டர் செல்லப்பா இந்த ஊரில் இருந்ததே எனக்குத் தற்செயலாய்ச் சென்றமாதம்தான் தெரியவந்திருந்தது. அப்போதிலிருந்தே அம்மாவிடம் சொல்லலாமா என்ற எண்ணம். அவரை வீட்டுக்கு அழைக்கவேண்டும் என்ற துடிப்பு. என் நினைவில் தெரிந்த வாலிப செல்லப்பா வெளியூருக்கு மாற்றலாகிச் சென்று, இப்போது வயோதிகச் செல்லப்பா தம் இலாகாவின் தலைவராய்ச் சென்னைக்கே வந்து சேர்ந்திருக்கிறார். முடி பஞ்சாய் நரைத்திருக்குமோ? வழுக்கை? கைத்தடி? சேசே! அவருக்கு ஐம்பத்தைந்து ஐம்பத்தாறு வயதுக்குமேல் இருக்காது. நிமிர்ந்த உடலும் சுறுசுறுப்பான நடமாட்டமும் கருமை மாறாத தலைமுடியுமாய் நாற்பது என்று மதிக்கத்தக்க எத்தனையோ ஐம்பத்தைந்துகளை நான் பார்த்ததில்லையா என்ன? இது ஓர் அசட்டுத்தனம், நமக்கு முந்தைய தலைமுறை என்றதுமே தொண்டுக்கிழமாய்க் கற்பனை செய்து கொள்வது. குழந்தை கண்களுக்குத்தான் முப்பது என்றாலே முதுமை. என் வயதிலுமா?

அவரை நான் வீட்டுக்கு அழைக்கவில்லை. அம்மாவிடம் சொல்லக்கூட இல்லை. சொல்லவேண்டுமென்று நினைத்துக்கொண்டே இருக்கையில் அம்மா கடுமையான நிமோனியாவில் படுத்துவிட்டாள்.

அம்மா முகத்தைப்பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். மனம் உணரும் உணர்ச்சிகளை எல்லாம் பேச நாவுக்குத் திறமையில்லை. ஆனால், கண்களுக்கு உண்டு. உணர்ச்சிகள் வெள்ளமிட்டு வரும்போது கண்களால் மட்டும்தான் பேசமுடிகிறது. புலன் ஆற்றல் ஒன்று இடம் மாறிப்போகிறது.

"என்ன அப்படியே உட்கார்ந்திருக்கீங்க? எழுந்து வீட்டுக்குக் கிளம்புங்க. நான்தான் வந்திட்டேனே !"

நான் மெல்ல எழுந்துகொண்டேன். "அப்பப்பா! இன்னிக்கு அந்த ரெண்டு வாலுங்களையும் ஸ்கூலுக்கு அனுப்பறதுக்குள் போதும்போதும்னு ஆயிடுச்சு. அப்பா லீவு போட்டுருக்காரே, நாங்க மட்டும் போடக்கூடாதா?ன்னு ஒரேரகளை.சாயங்காலம் அதுங்க வர்றப்பக் கொஞ்சம் அதட்டி கொஞ்சம் நயமாய்ப் புத்திசொல்லி, டிபன் சாப்பிட்டிட்டுப் பாடம் படிக்கச்சொல்லுங்க" என்றாள் நீலா.

"ஆஸ்பத்திரிக்கு வந்து பாட்டியைப் பார்க்கணும்னு அருண் நேத்தே சொன்னான். சாயங்காலம் அழைச்சிட்டு வரட்டுமா? பார்த்திட்டு உன்கூட வீட்டுக்குத் திரும்பிடட்டுமே?"

அவள் கணநேரம் யோசித்தாள். "எதுக்கு... இப்ப எதுக்குங்க? சின்னப்பையன். இந்த ஆக்ஸிஜன் குழாயை எல்லாம் பார்த்துப் பயந்துப்பான். நாலுநாள் போகட்டுமே, அதுக்குள்ள அத்தைக்கும் கொஞ்சம் குணம் தெரிஞ்சு டாக்டர் ஆக்ஸிஜனை எடுத்திடலாமில்லையா?"

ஆக்ஸிஜன் எடுத்துவிடலாம் என்பது உண்மை. குணம் தெரிவதால்தானா? இன்னொரு சாத்தியக்கூறு பற்றி நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. எங்கள் மௌனத்துள் அது ஆயிரம் நாவுகளோடு பதுங்கியிருந்தது.

நீலா பகலுணவு சாப்பிட்டாகிவிட்டது. கையில் கொண்டுவந்திருந்த புத்தகத்தையும் பிற்பகல் காபி இருந்த பிளாஸ்க்கையும் மூலையிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டுக் கட்டிலில் நெருங்கிக் குனிந்து, என் தாயின் பிரக்ஞையற்ற வடிவைச் சிலகணங்கள் உற்றுப் பார்த்தாள். நோயாளியின் உடலில் எவ்வித மாற்றமும் இல்லை. எங்கள் கண்கள் சந்தித்தபோது பேச இவ்வளவுதான் விஷயம்.

"அப்ப, நான் கிளம்புறேன் நீலா."

"ம், ஸிஸ்டர் வந்து இன்ஜெக்சன் போட்டுட்டாங்க, இல்லே?"

"ஆச்சு, டாக்டர் பன்னிரண்டு மணிக்குத் தான் வருவாராம்."

"நான் பாத்துக்கறேன்."

தெருவில் இறங்கினேன். முற்பகல் வெயில் சுள்ளென்று உறைத்தது. நான் வீடுவந்து



சேர்ந்தபோது மணி பத்தரை. ஆஸ்பத்திரியில் இருந்து நடக்கும் தூரத்தில்தான் வீடு. குளித்தேன். ஹாட்ஃபிளாஸ்கில் நீலா எனக்கு வைத்திருந்த உணவை உண்டுவிட்டு ஆயாசத்துடன் படுத்துக்கொண்டேன். ஆயாசம் வெயிலினால்; ஐந்துநாட்களாய் ஆபிசுக்கு லீவுபோட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாய் அலைவதனால்; அம்மாவைப் பற்றிய கவலையினால்; மனபாரத்தால்.

இரவுமுடிய ஆஸ்பத்திரியில் அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கண்விழித்து இருந்ததால் இப்போது கண்கள் எரிந்தன. மூடிக்கொண்டேன். விட்டு விட்டுத் தூக்கம். அதில் கனவென்று சொல்லமுடியாத தாறுமாறான பிம்பங்கள், அமுங்கிஅமுங்கி வெளிவரும் அம்மாவின் முகம். கூடவோர் எட்டுவயதுச் சிறுவன். ஒருவினாடி கண்களைத் திறந்துவிட்டு மூடினேன். மறுபடியும் தூக்கமா? இப்போது வேறொரு முகம். சிவந்த நீளவாட்டு முகம். இதமான புன்சிரிப்பு. பிரகாசக் கண்களில் ஆழமான பார்வை. சுருட்டை கிராப். நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்த முகமும் நழுவியது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன்.

புரண்டு படுத்தேன். மறுபடியும் அரைத்தூக்க நிலை. கண்களுள் மீண்டும் இளம் அம்மாவின் முகம். அதில் ஒருவித ஆவல். உதடுகள் ஏதோ சொல்கின்றன. சிறுவனின் கண்களில் அதிர்ச்சி. மறுப்புக்குறியில் தலை இடவலமாய் அசைகிறது. மறுபடியும் விழித்துக்கொண்டேன். உடல் முழுவதும் வியர்வை. ஆழ்ந்த, தொடர்ச்சியான உறக்கமில்லாததால் ஓய்வெடுத்த உணர்வே இல்லை. எழுந்து உட்கார்ந்து கடிகாரத்தைப் பார்த்தேன். பிற்பகல் மூன்று மணி. போய் முகம் கழுவிக்கொண்டு காஸ் அடுப்பை ஏற்றிப் பாலைக் காய்ச்சி உப்புமா செய்தேன்.

வாசல்மணி ஒலிப்பது கேட்டது. ஓடிப்போய்க் கதவைத்திறந்தேன். தபால்காரர். ஒரு நண்பர் வீட்டுத் திருமணத்துக்கு வந்திருந்த அழைப்பிதழைக் கொடுத்துவிட்டுப் போனார்.

நான் எதிர்பார்த்தவர் வரவே மாட்டாரா? என் அம்மாவின் உயிர் பிரியுமுன் அவள்



முகத்தையாவது அவர் பார்க்கட்டும் என்று எண்ணி அவள் உடல்நிலை பற்றியும் மற்ற விவரங்களையும் அவருக்கு எழுதியிருந்தேனே, அந்த அற்பப்பணி செய்வதுகூட எனக்குக் கொடுத்து வைக்கவில்லையா? நேரில் போய்ச் சொல்லலாமென்றால் காலையும் மாலையும் அவர் வீட்டில் இருக்கும்போது நான் ஆஸ்பத்திரியில் அம்மாவுடன் இருக்கிறேன். பகல் முடிய எனக்கு நேரம் இருக்கும்போது அவர் அலுவலகம் போயிருப்பார். நீலாவைப்போய்ச் சொல்லச்சொல்லலாம் என்றால் அவளுக்கு இவ்விஷயத்தின் முக்கியத்துவம் தெரியாது. அதை அவளுக்கு விளக்க எனக்குத் தயக்கம்தான். இன்று மாலை ஆஸ்பத்திரிக்குப் போனபின் சிறிதுநேரம் பணிப்பெண் எவளையாவது அறைக்குள்ளேயே இருக்கச் சொல்லி விட்டு, நானேபோய் அவரிடம் சொல்லிவிட்டு வந்தால் என்ன? டாக்டரின் முகமோ 'இன்னும் அதிக காலம் இல்லை' என்று சொல்லிவிட்டது. இன்னும் இரண்டு நாள்கள் ஞாயிற்றுக் கிழமைக்காக காத்திருந்தால் காலம் கடந்துவிடலாம்.

மாலை நாலரை மணிக்கு என் குழந்தைகள் பத்மாவும் அருணும் பள்ளியிலிருந்து திரும்பினார்கள். அவர்களுக்குச் சிற்றுண்டியும் காப்பியும் கொடுத்துவிட்டு நீலாவிற்குத் தனியாய் எடுத்து வைத்துவிட்டு நானும் உட்கொண்டேன்.

"பாட்டி இன்னிக்கு எப்படிப்பா இருக்காங்க?" என்றான் அருண்.

"அப்படியே தான், புதுசா ஒன்னுமில்லை"

"நான் உங்கக்கூட ஆஸ்பத்திரிக்கு வந்து பாட்டியைப் பார்க்கறேம்ப்பா"

"அண்ணா வந்தா நானும் வருவேன்" என்றாள்.

"ரெண்டு பேருமே இப்ப வேண்டாம்டா கண்ணு". பத்மாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன்.

"ஒருநாள் ரெண்டுநாள் பாட்டிக்கு எப்படி இருக்குன்னு பார்த்துக்கிட்டு நானே உங்களை அழைச்சுக்கிட்டுப் போறேன்".

"இப்ப கொஞ்ச நேரத்தில் நீங்க ஆஸ்பத்திரிக்குப் போயிடுவீங்க. நாங்க ரெண்டு பேரும் தனியாத்தானே இருக்க வேண்டி இருக்குது?"

"தனியென்ன? ஒரு அரை மணிநேரம் பக்கத்து வீட்டு ஆன்டிகிட்டப் போய் இருக்கப் போறீங்க? அரை மணியில் அம்மா ஆஸ்பத்திரியிலிருந்த திரும்பி உங்களை வந்து அழைச்சுக்கிட்டு இங்கே வந்துடப் போறாங்க."

"நீங்க எப்பப்பா மறுபடியும் ராத்திரியிலே வீட்டிலே இருப்பீங்க? எனக்குக் கதை சொல்லுவீங்க?" என்றபடி என்மேல் நெருங்கி ஒன்றிக்கொண்டாள் பத்மா. அவள் தலைமுடியைக் கோதி முத்தமிட்டேன்.

"பாட்டி ஆஸ்பத்திரியில் இருக்கிற வரைக்கும் நான் அவங்கக்கூடத் துணைக்குத் தங்கி இருக்க வேணாமா கண்ணு? சொந்த மனுசங்க யாரானும் கூடவே இருக்கணும்னு டாக்டருங்க சொல்றாங்களே. அதனாலே தானே அம்மாவும் நானும் மாத்தி மாத்திப் பாட்டியோடு இருக்கோம்".

"ஊஹூம், நீங்க இங்க தான் இருக்கணும். ஆஸ்பத்திரிக்குப் போகக்கூடாது".

அழத்தொடங்கிய குழந்தையைத் தேற்றிச் சமாதானப்படுத்தினேன். "அழக் கூடாதும்மா கண்ணு, சமர்த்தில்ல? ராத்திரியில் பாட்டி கண்விழித்துப் பார்த்து, 'அய்யோ நம் மகன் இங்கே இல்லையே' அப்படினு வருத்தப்படக் கூடாதில்லையா? பாட்டி வீட்டுக்கு வந்ததுமே நானும் வந்துடுவேனே! அப்புறம் ராத்திரியெல்லாம் வீட்டில்தான் இருப்பேன். பத்மாவுக்கு ஒவ்வொரு ராத்திரியும் புதுபுதுக் கதையெல்லாம் சொல்லுவேன்..."

இந்தக் குழந்தை சொல்வதைக் கேட்டு நான் ஆஸ்பத்திரிக்குப் போகாமலே இருந்தால் எவ்வளவு தவறாக, அநியாயமாக இருக்கும்! குழந்தைகளுக்கு என்ன தெரியும்?

அவர்களுடைய பேச்சில் எதைப் பெரிதாய் எடுத்துக் கொண்டு மதிப்பளிக்க வேண்டும் என்னும் அறிவும் தெளிவும் பெரியவர்களுக்கல்லவா இருக்க வேண்டும்?

அம்மா ஏன் அந்த எட்டுவயது சிறுவனின் பேச்சைக் கேட்டாள்?

மறுபடியும் மாலையில் ஆஸ்பத்திரி. அம்மாவின் பிரக்ஞையற்ற உருவம்.

"டாக்டர் வந்தாரா நீலா?"

"ம்..."

"புதுசா ஏதானும் சொன்னாரா?"

"ஊஹூம், மருந்துகள், இன்ஜெக்ஸன், ஆக்ஸிஜன், காட் இஸ் கிரேட் எல்லாமே வழக்கம்போல்"

சற்று தயங்கிவிட்டு"அவர் வந்திருக்காரா? அதான், நான் சொல்லி அனுப்பினேன்னு சொன்னேனே, அந்தாளு" என்றேன்.

"யாரும் வரலே" என்றவள் என்னைக் கூர்ந்து பார்த்தாள். " முக்கியப்பட்டவரில்லை" என்கிற ஒருவருக்காகவா இப்படிப் பறக்கிறாய்? என்னை நம்பச்சொல்கிறாயா? என்று கேட்கும் பார்வை.

நான் தலையைத் திருப்பிக்கொண்டேன். நீலாவுக்குச் சொல்ல வேண்டியதுதான். ஆனால், அவளுக்குச் சம்பிரதாய மனம். அம்மாவைப் பற்றிக் குறைவாக நினைத்து விட்டால்?"

"அப்போ நான் வீட்டுக்குப் போகவா?"

"ம், கிளம்பு. குழந்தைங்க எதிர்பார்த்துக்கிட்டிருக்கும்"

அவள் போனபின் அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன். அம்மா சலனமின்றிப் படுத்திருந்தாள். செயற்கைச் சுவாசத்தில் நோயின் முனகல்கள் ஏதுமில்லை. மார்பு சீராய் ஏறி இறங்கியது. ஒருகால் இந்த மயக்கத்தின் திரைக்குப் பின்னே, ஆழ்மனத்தில், வேறேதோ ஒரு காலத்தில் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறாளா?"

நெற்றியின் கோடுகள். வாழ்வின் தடங்கள்.

அதில் ஒரு தடத்தில் நிற்கும்அம்மா. இளைய அம்மா. பயம் கலந்த ஒரு சந்தோசத்தில் உருவமே வேறாகி ஒளியால் நிறைந்தது போன்ற அம்மா. அவள் அணைப்பினுள் எட்டு வயதுப் பையன்.

"செல்லப்பா அங்கிளை உனக்குப் பிடிச்சிருக்குதா கேசவா?"

"ஓ, ரொம்பப் பிடிக்குமே"

"எனக்கு... எனக்குக் கூட அவரைப் பிடிக்குதுடா கண்ணா!"

"நல்ல அங்கிள் அவரு"

"அவரை... அந்த நல்ல அங்கிளை உனக்கு அப்பாவாய்ப் பண்ணட்டுமா?"

பையன் முகத்தில் ஒன்றும் புரியாத வெற்றுப்பார்வை. அது ஒரு தடை என்பதுபோல் அம்மாவின் முகத்தில் கணநேரத் தடுமாற்றம்.

"என்னம்மா?"

"அவரை நான் கல்யாணம் செய்துக்கட்டுமா?"

இப்போது அதிர்ச்சியே வடிவாய் உருமாறும் மகன்.

"ஊஹூம், கூடாது, அது தப்பு!"

"உனக்கு ஒரு அப்பா கிடைப்பாருடா கண்ணா"

"என் அப்பா செத்துப்போயிட்டார். நீ என் அம்மா, அம்மால்லாம் தப்புச் செய்யக் கூடாது..."

மறுப்பில் தலையாட்டும் மகன்.

அந்தத் தலையாட்டலில் ஒரு வாழ்க்கைக் கதையை இறுக மூடிப் பூட்டிவிட்டதை அந்தச் சிறுவன் அறியமாட்டான். நான்தான் அதை அறிந்து, உணர்ந்து, நொந்து, வெட்கி அதற்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தேன்.

குழந்தைகளின் உலகம் சுயத்தில் தொடங்கிச் சுயத்தில் முடிகிறது. தம்முடன் சம்பந்தப்படுத்தித்தான் எதையும் அவர்களால் பார்க்கமுடியும். என் அம்மா, என் அப்பா, என் தம்பி, என் நண்பன், என் டீச்சர்.

மனிதர்களைத் தனிமனிதர்களாய்ப் பார்க்கும் ஆற்றல் ஒரு குழந்தைக்கு எப்படிச் சாத்தியமாகும்? அவனைப் பொறுத்தவரை அம்மா ஒரு பெரியவள். தன் அம்மா, தன்னைப் பார்த்துக் கொள்கிறவள், தன் பாதுகாப்பான பின்னணி.

அம்மாவை முப்பது வயதான வாலிப மங்கையாக, எதிர்பார்ப்புகள் நிறைந்தவளாக, வருங்காலம் தன்முன் நீண்டு கிடக்கக் காண்பவளாக, இனம் கண்டுகொள்கிற முதிர்ச்சியும் விலகி நின்று வெறும் பார்வையாளராய்ப் பார்க்கும் தெளிந்த கண்ணோட்டமும் ஒரு குழந்தைக்கு எப்படி வரும்?

அந்தக் குழந்தையின் பேச்சை நீ ஏனம்மா கேட்டாய்? தன் அம்மா என்பதற்குமேல் நினைக்கத் தெரியாத குழந்தையின் பேச்சை நீ ஏன் கேட்டாய்? விதவை மறுமணம் தவறு என்று கருதும் ஒரு மரபுச் சமுதாயத்தின் வார்ப்படமான குழந்தையின் பேச்சை ஏன் கேட்டாய்? முதலில் ஒரு குழந்தையிடம் யோசனை கேட்பதே தவறில்லையா? குழந்தையைக் குழந்தையாகவே வைத்துவிட்டு உன் இதயம் காட்டிய வழியில் நீ சென்றிருந்தால், அந்தக் குழந்தை முதலில் முரண்டிருக்கலாம். ஆனால், நான் புரிந்துகொண்டிருப்பேன். மகிழ்ந்திருப்பேன். இரண்டு பேரின் சந்தோஷ வாய்ப்பைக் கெடுத்துவிட்ட குற்றச்சுமையை நெஞ்சில் தாங்கி இப்படி வருஷக்கணக்காய்ப் பரிதவித்துக் கொண்டிருக்கமாட்டேன்.

எல்லாம் வேறுவிதமாய் நடந்திருந்தால்!

அம்மாவின் நெற்றியில் குங்குமம். சிரிப்பில் சந்தோஷம். முகத்தில் பிரகாசம். முதுமையும் மரணமும் யாருக்கும் நேர்வதுதான். ஆனால் தனிமை இருந்திருக்காது. நாளுக்குநாள் வளர்ந்து பெரியவனாகித் தன் வாழ்வை நோக்கிக் கிளை பிரிந்து போகும் மகன் – அடுத்த தலைமுறையினன் – எத்தனை பாசமிருந்தாலும் எந்த அளவுக்குத் தோழனாயிருக்க முடியும் பெற்றவளுக்கு?

அம்மாவின் தலைமுடியைத் தடவிக்கொடுத்தேன். கன்னத்தை மெல்லத் தீண்டினேன். கையைப் பற்றினேன். எதற்குமே அவளிடம் எதிர்விளைவு இல்லை. உடம்பில் அசைவில்லை.

அம்மா, அம்மா உன்னை எப்படி எட்டுவேன்? உன்னுடன்தான் எத்தனையோ பேசவேண்டும். எனினும், என் நாவு புரளவில்லை. நான் பேசினாலும் உனக்குக் கேட்காது. ஆனால், உன் மனம் உணர்கிறதா? என் அன்பை, என் துயரத்தை, என் கழிவிரக்கத்தைப் பேச்சின்றியே புரிந்துகொள்கிறாயா? இப்போது உடல் குலுங்க நான் மௌனமாய்க் கொட்டும் இந்தக் கண்ணீர் உனக்காக மட்டுமல்ல. எனக்காகவும்தான் என்பதை நீ உணர்கிறாயா அம்மா? உணர்ந்து என்னை மன்னிக்கிறாயா?

நெடுநேரம் ஆகியிருக்குமென்று நினைக்கிறேன். தலை நிமிர்ந்து, மூக்கை உறிஞ்சி கண்களைத் துடைத்துக் கொண்டேன். குளியலறைக்குச் சென்று வாளியிலிருந்து சிறிது நீரை முகத்தில் இறைத்துக் கழுவிக் கொண்டேன். மணி எட்டை நெருங்கியிருந்தது. ஒரு நர்ஸை அழைத்து அம்மாவின் பக்கத்தில் அமர்த்திவிட்டு, மிஸ்டர் செல்லப்பாவின் வீட்டுக்கே நான் போய்...

எண்ணம் முடியவில்லை. எதிரே அறைக்கதவுக்கு வெளியே நின்றிருந்தவரை என் கண்கள் கண்டுகொண்டன.

சிவந்த நீளவாட்டு முகத்தில் இப்போது சில சுருக்கங்கள். சுருள் முடியில் அங்கங்கே நரை. எனினும் அந்த முகத்தின் நேர்த்தியை இதமான புன்சிரிப்பை, ஒளிமிக்க விழிகளை, எட்டுவயதுப் பையனுக்குப் பரிச்சயமான அவன் அப்பாவின் நண்பரை, எனக்கும் அடையாளம் தெரிந்தது.

பேசத்தெரியாமல் அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன். வந்துவிட்டார். வந்துவிட்டார், வந்துவிட்டார்.

"கேசவ்? கேசவன்தானே? நான் செல்லப்பா"

அந்தக் குரலும் மாறவில்லை.

"தெரியும்" என்று எப்படியோ தடுமாறிக் கூறினேன்.

"நான் ரெண்டு வாரமா ஊர்ல இல்லை. இன்னிக்குச் சாயங்காலம்தான் வந்தேன். உன்– உங்க – லெட்டரைப் பார்த்தேன். உடனே கிளம்பி வந்தேன்."

அவர் கண்கள் படுக்கைமீது கிடந்த உருவத்தில் சென்று நிலைத்தன. உதடுகள் லேசாய்த் துடிப்பது தெரிந்தது. அவர் பார்வையில் ஒரு வாழ்நாளின் உணர்ச்சிகள் அனைத்தும் ஒருங்கே கட்டவிழ்ந்து உடைந்தன. கணப்பொழுதில் அம்மாவுடன் அவர் அங்கே தனியாய் இருந்தார். இது அவ்விருவருடைய கணம். அவர்களுடையதாய் இருந்திருக்க வேண்டிய எத்தனையோ ஆண்டுகளின் ஒரு சின்னஞ்சிறு கடைசிப் பிரதி.

"உள்ளே வந்து உட்காருங்க சார். நான் இதோ வந்துடறேன்" என்றுகூறி அந்த அறையை விட்டு நான் வெளியேறினேன்.

படைப்பு முகம்

ஆர்.சூடாமணி (1931–2010): நடுத்தர மக்களின் வாழ்க்கையையும் குறிப்பாகப் பெண்களின் நிலையையும் தமது எளிமையான மொழியில் எழுதியவர். உளவியல் எழுத்தாளர் என்று போற்றப்படும் இவர், ஆங்கிலத்திலும் பல படைப்புகளைத் தந்துள்ளார்.

படிப்போம் பகிர்வோம்

1. இறுக மூடிய கதவுகள் என்னும் சிறுகதை கதை மாந்தர் நோக்கில் கதை சொல்லும் முறையில் அமைந்துள்ள பாங்கினை விளக்குக.
2. "பாடாத தேனீ பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ" என்ற பாரதிதாசனின் கவிதையோடு இறுக மூடிய கதவுகள் கதையின் கருப்பொருள் பொருந்தும் தன்மையை ஒப்பீடு செய்க.
3. கனவென்று சொல்லமுடியாத தாறுமாறான பிம்பங்கள், அமுங்கி அமுங்கி வெளிவரும் அம்மாவின் முகம். கூடவோர் எட்டுவயதுச் சிறுவன். ஒருவினாடி கண்களைத் திறந்துவிட்டு மூடினேன். மறுபடியும் தூக்கமா? இப்போது வேறொரு முகம். சிவந்த நீளவாட்டு முகம். இதமான புன்சிரிப்பு. பிரகாசக் கண்களில் ஆழமான பார்வை. சுருட்டை கிராப். நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்த முகமும் நழுவியது.

   ---இறுக மூடிய கதவுகள் கதையின் இப்பகுதியில் காட்சித் துணுக்கு முறை என்ற கதைசொல்லும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது, இதுபோன்று இக்கதையில் வரும் வேறு உத்திகளைக் குறிப்பிட்டு எழுதுக.
4. இறுக மூடிய கதவுகள் கதையில் "உள்ளே வந்து உட்காருங்க சார், நான் இதோ வந்துடுறேன். என்று கூறி அந்த அறையை விட்டு நான் வெளியேறினேன்." என்று கதை முடியும் இடத்திலிருந்து கேசவன் அறையைவிட்டு வெளியேறியபின் அவனது அம்மா சுயநினைவு திரும்பி, செல்லப்பாவுடன் உரையாடுவது போல் கற்பனையாகக் கதையை நீட்டி எழுதுக.
5. அவரை... அந்த நல்ல அங்கிளை அப்பாவாய்ப் பண்ணட்டுமா... ஊஹூம் கூடாது என்பதற்குப் பதிலாகச் சரி என்று கூறுவதாகக் கொண்டு கற்பனைக் கதையைத் தொடர்க.

நசுக்கம்

– சோ. தர்மன்

கட்டடங்களை விட்டுத் தூரத்தில் இருந்த சிமெண்ட் களத்தில் எல்லோரும் கூடியிருந்தார்கள். அந்தச் சதுர வடிவ குறைந்த உயரமுள்ள சிமெண்ட் மேடை நிரம்பி வழிந்தது. ஒவ்வொருவர் பக்கத்திலேயும் முதல்நாள் அவர்கள் திரி சொருகி வைத்துவிட்டுப் போன வட்ட வளையங்கள் அடுக்கடுக்காய்க் குமிந்திருந்தன. வட்டவட்டமாய் இருக்கும் அந்தத் தகர வளையங்களுக்குள் மருந்தடைத்து திரி சொருகி வைத்துவிட்டுப் போன பட்டாசுகள், அவற்றை வளையத்திற்குள்ளிருந்து வெளியே எடுத்து களத்தில் காயப்போட வேண்டும். ஃபோர்மென் சங்கரன் சுற்றிச்சுற்றி வந்தார்.

"டேய், கீழ தட்டாத, தூர்மண்ணு உதிந்திடும். பிதுக்கி எடு, யேல, பிரக்கா சொல்றது காதுல ஏறுதா ஏறலியா?"

பிரக்கன் பரக்கப்பரக்கப் பார்த்தான்.

"ஏணேய், வேல்ச்சாமிண்ணே ஃபோர்மேன் அண்ணாச்சி இன்னக்கி காலாங் காத்தாலயே பிதுக்கச் சொல்றாரு"

எல்லோரும் சிரித்துக் குலுங்கினார்கள்.

கருப்பாயி வாயடங்கிப் போனாள்.

"என்னல, களத்தில ஒரே சிரிப்பாணியும் கும்மாளமும். எல்லாத்தையும் உதுத்து காயப் போடலன்னா இன்னக்கி வேலைக்கு வளையம் தரமாட்டான். தூக்குச் சட்டியத் தூக்கிட்டுப் போயிர வேண்டிதான்" சங்கரனின் அதட்டலை அவர்கள் சட்டை செய்யவில்லை.

மருந்து கலந்து வெற்றுக்குழாய்களுக்குள் அடைத்துக் கொடுக்கும் ஃபோர்மேன் கொலம்பான் அங்கு வந்தான். கருத்த அவன் உடம்பில் ஒட்டியிருந்த அலுமினியப் பவுடர் வெயிலில் மினுமினுத்தது.

"ஆரு வெள்ளக்காரத் தொரையா? என்ன... தொரை... வளையம் குத்த ரெடியா இருக்கா?"

"எப்பவும் நான் ரெடிதான்." மேலோரத்தில் டிப்பிங் என்று சொல்லக்கூடிய, திரிகள் செய்யும் வேலை மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. நீளமான நூல்களைக் கருமருந்தும் பசையும் கலந்த வாளிக்குள் ஒரு பொடியன் முக்கி முக்கிக் கொடுக்க அதை இழுத்துக் கொண்டேபோய் நீளவசத்தில் கட்டப்பட்டிருக்கும் கம்புகளில் காயப் போட்டான். அவர்களின் முகமெல்லாம்கூட கருமருந்துகளின் கோடுகள். கோமாளி வேசக்காரனைப்போல.

கம்புகளில் தொங்கும் பசையும் கருமருந்தும் கலந்த நூல்கள் காயக்காய விறைப்பேறித் திரிகளாகும். மெல்லிய வெள்ளைத்தாளுக்குள் வைத்துச் சுருட்டி குரோஸ் போடவேண்டும். வெடியின் சைஸ்களுக்குத் தக்கபடி அளந்து அறுத்து மருந்து தொட்டு வெடிக்குள் சொருக வேண்டும். கழிவுத் திரிகள் ரொம்ப வந்தால் சம்பளம் கட். விறைப்புக் குறைவாக இருந்தால் மூணு குரோஸ் கணக்கு கட்.

"என்ன... உதுத்தாச்சா... எல்லாத்தையும் அள்ளி காயப் போடுங்கள ஏ, மிக்கேலு வெத்து வளையங்களைப் பெரக்கி அங்க போடு. குனிஞ்சு போடு, வீசி எறிஞ்ச சாம்பலாகிருவ."

மெதுவாய் முணங்கிக்கொண்டு மிக்கேலு குனிஞ்சு வெத்து வளையங்களை எடுத்தாள். அவளுடைய இரு கைகளிலும் தோள்வரை வளையங்கள் நிறைந்தன. அவள் சல்சல் என்று தட்டி ஆட்டம் போட்டு நடித்துக்காட்டினாள்.

அண்ணாச்சி எல்லாத்தையும் உதுத்து காயப்போட்டாச்சு

வெத்து வளையங்களையும் பெறக்கிக் குமிச்சாச்சு. குத்துறதுக்கு வளையம் குடுங்க.

பச்சையைக் கண்ட வெள்ளாடுகளாய் மேற்காமல் ஓடினார்கள். கருமருந்துக் கலவை அடைத்த திரி சொருகாத வளையங்கள் அம்பாரமாய்க் குமித்து வைக்கப்பட்டிருந்தன. ஃபோர்மேனின் அதட்டல் கட்டிடங்களில் ஒலித்தது.

யே... செயிண்ட் ஆறாயிரம், பிசிலி நாலாயிரம், கோவா நாலாயிரம், துக்கடா எட்டாயிரம், ஸாடா ஆயிரம் கணக்குப் பண்ணி எடுக்கணும்.

ஆளாளுக்கு நூறு எரநூறு என்று எடுத்து அடுக்கினார்கள். இனி ஒவ்வொரு வளையத்தின் மேலும் காவிகலந்த மண் பூசப்பட்டு, அது உலர்ந்த பின்னால் இரும்பு ஊசியால் குத்தி அந்த மண்ணை டியூப்புக்குள் இறக்கவேண்டும். இந்த இரும்பு ஊசி போடுகிற துவாரத்தின் வழியேதான் திரி சொருக வேண்டும். கட்டியான மருந்தில் திரியின் முனையைத் தொட்டு உள் இறக்கவேண்டும்.

அவர்கள் வட்டமாய் உட்கார்ந்து வளையம் குத்திக்கொண்டிருந்தார்கள். வெயில் ஏறிக்கொண்டிருக்க அவர்களைப் பார்ப்பதற்கு தரையில் சிதறிய தானியங்களைப் பொறுக்கும் கோழிகளைப் போலிருந்தது. அவர்களின் விரல்கள் பம்பரமாய்ச் சுழன்றன. குனிந்த தலை நிமிரவில்லை.

யே... அமுக்கிக்குத்து. காவிமண்ணும் அடிவரைக்கி போகணும். ஏலே ஊசிய திருக்கி எடுல. மண்ணு புடுங்கி பிசிறடிக்கக் கூடாது.

அண்ணாச்சி அவன் புதுப்பையன். சரியா குத்தத்தெரியாது.

குத்தறதுக்குச் சொல்லிக் கொடுக்கணுமாக்கும். ஏய், தங்கமாடத்தி அவனுக்குச் சொல்லிக்குடு. சம்முகவடிவு நிய்யும் கொஞ்சம் கவனிச்சுக்கோ.

குத்திமுடித்த வளையங்களைக் களத்தில்போய்க் காயவைத்துவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அந்தக் களத்தில் ஆரத்தித் தட்டுகளாய் வளையங்கள் நிறைந்துகொண்டே வந்தன. இடுப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் மாறிமாறி உட்கார்ந்து கொண்டார்கள். எல்லாம் குத்திமுடித்தபின் அவர்கள் திரிக்கட்டுகள் வாங்குவதற்காக ஓடினார்கள். நல்ல விறைப்பான கட்டுகளை எடுப்பதற்காகச் சண்டை போட்டார்கள். திரிசுற்றும் சண்முகையா நல்ல விறைப்பான கட்டுகளைத் தனியே கொண்டுவந்து சரோஜாவிடம் காணாமல் நீட்டினான். சிரித்துக்கொண்டே வாங்கிய அவள், அவன் கன்னத்தில் பசையை இழுகிவிட்டு ஓடினாள். சண்முகையாவிற்கு உச்சி குளிர்ந்தது.

செயிண்ட் என்று சொல்லக்கூடிய சிவப்புக் கலரில் இருக்கும் பெரியவெடி, ஸாடா சிவப்புக்கலர் ஊசிவெடி, பிசிலி, வரிவரியாய்ப் பலகலரில் துக்கடா, சிவப்பாய் இருக்கும் சீனிவெடி இவற்றிற்கான திரிவகைகளைத் தரம்பிரித்தார்கள். இனித் திரிசொருக உட்கார்ந்துவிட்டால் எந்திரிக்கக்கூட மனசு வராது. மத்தியானக் கஞ்சியை முடித்துக்கொள்ள தூக்குவாளிகள் இருக்கும் இடம்தேடிப் போனார்கள். கடனுக்கு வடை விற்கும் வடைக்காரப் பாட்டி பெரிய்ய பெட்டியுன் தயாராய் உட்கார்ந்திருந்தாள். பூந்தோட்டத்துக் கிணற்றில் கால்கை கழுவப்போன பயல்களைத் தோட்டத்துக்காரர் விரட்டிக் கொண்டிருந்தார்.

யே... சின்ன சிறுக்கிவில்லைகளா... போறிகளா கால ஒடிக்கவா, மேல பூரா ஒண்ர கோட்ட கருமருந்த சொமந்துகிட்டுக் கழுவ வந்தீட்டகளாக்கும். நீங்க கைவச்ச எடத்தில ஆடுமாடுகூட தண்ணி குடிக்கமாட்டேங்குது. ஓடுங்கல. ஒங்க தொட்டிக்கு.

கரம்பைக் கட்டியின் எறி பிசகிக்கீழே விழுந்து சிதறியது.

ஒருநாளைக்காவது கருமருந்தக் கலந்து கிணத்துல ஊத்துனாத்தான் இந்த பய வசத்துக்கு வருவான். பிரக்கனின் வசவோடு அவர்கள் வெளியேறி நடந்தார்கள். கைக்கழுவ தண்ணீர் தொட்டியில் இல்லை.

அடர்ந்த வேப்பமரத்தின் குளிர்ச்சியில் வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். மூக்கிலும் முகங்களிலும் கைகளிலும் மின்னும்

அலுமினியப் பவுடர் கலந்த கருமருந்து ஒட்டியிருந்ததை யாரும் சட்டை செய்யவில்லை.

நேத்து என்னல, சினிமாவுக்கு வாரமினுட்டு வரல.

படம் நல்லாருந்ததா?

இந்தால இந்த ஊறுகாயக் கடி. நல்லாருக்கு

கூட்டமான கூட்டம். பெரிய வெக்கக்கேடு. படத்துக்கு வரிசையில நிக்கன், வேர்வை மேலெல்லாம் வடியுது. சுத்தி நிக்கிறவன் அவ்வளவு பேரும் எம்மூஞ்சியவே பாக்கிறான். கருமருந்து கொச்சவாட, மொச்சுமொச்சுன்னு மூக்கைத் தொளைக்குதுண்ணு ஒருத்தன் சொல்லவும் எனக்கு வெக்கமாப் போச்சு. பேசாம அங்னனயே நாக்கப் புடுங்கிட்டு செத்துரலாம் போலருந்தது.

என்ன செய்ய. நம்மள நம்ம ஆத்தா அந்த நேரத்துல பெத்துப் போட்ருக்கா. இத விட்டாலும் வேற பொசகலும் கெடயாது. விடிஞ்சா ஆரு வேலக்கி கூப்டுவானு ஒக்காந்திட்லருக்கணும்.

இந்தச் சனியன் பிடிச்ச வீச்சம் நமக்கு ஒண்ணுமே தெரிய மாட்டேங்குது. யாராவது வேத்தாள்ட்ட மொகங்குடுக்க முடியல. அவன் முகத்தச் சுளிக்கிறதப் பாத்து வெக்கமாத்தான் இருக்கு.

அவர்கள் திரிகளைப் பசைகலந்த கட்டி மருந்துக் கிண்ணத்தில் முக்கி டியூப்களில் சொருகிக் கொண்டிருந்தார்கள்.

யேலேய்... திரிய அமுக்கிச் சொருகு. புடுங்கிப் பாப்பான். பொசுக்குனு வந்துச்சு கணக்குல நாலு வளையத்த கொறச்சு எழுதிப்புடுவான்.

சங்கரனின் அதட்டல் இனி ஓயாமல் கேக்கும்.

அந்தச் சின்னச்சின்னக் கட்டிடத்தில் ஒவ்வொன்றிலும் நாலுபக்கமும் வாசல். வாசலுக்குப் பக்கத்திலயே தண்ணீர் தொட்டிகள். அந்த அறைகள் ஒவ்வொன்றிலும் சிறிசும் பெரிசுமாய் தீப்பெட்டிக்குள் குச்சிகளாய் நிறைந்து கிடந்தார்கள். புதுப்பையன் கேட்டான்.

"இந்தச் சின்ன ரூம்புக்கு எதுக்கு நாலுபக்கமும் வாசல்."

"அதுவா இன்ஸ்பட்ரு வர்றன்னைக்குப் பாரு தெரியும்."

அந்த ரூமே அதிர எல்லாரும் பலமாய்ச் சிரித்தார்கள். அவனுக்குச் சிய்யென்றிருந்தது. எதுக்குடா கேட்டோமென்று பேசாமல் உட்கார்ந்திருந்தான். முகத்தைச் சுளித்துக்கொண்டு பிரக்கனைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

"இது தெரிஞ்சிருந்தா அவன் ஏழாம் வகுப்பில் பெயிலாகிருப்பானா?"

"இங்க வந்து நம்மளோட கருமருந்தைத் திங்க வருவானா?"

"சீ. சும்மாகிட நாயே, ஒனக்கு அனையம் தெரியுமோ. நிய் படிச்சுக் கிழிச்சிறக்கூடாது. எதுக்கு இங்க வந்த."

பிரக்கனின் அதட்டலில் பச்சை டவுசர் வாயடங்கிப் போனான்.

இந்தவொரு சின்ன ரூமுக்குள்ள நாலுபேருதான் ஒக்காந்து வேலபாக்கணும்.அந்த நாலுபேரும் ஒரே எடத்துல ஒக்காரக்கூடாது. ஒவ்வொரு வாசல் பக்கத்திலேயும் தனித்தனியா இருந்துதான் வேல பாக்கணும். ஒரு வளையம் சொருகி முடிச்சாச்னா ஒடனே களத்துல கொண்டுபோயி வச்சிரணும். திரி சொருகுன வளையம் ரூமுக்குள்ள கண்டிப்பா இருக்கக் கூடாது. களத்துல போயி வளையத்தை வச்சிட்டு அல்லது வெளியே போயிட்டு ரூமுக்குள்ள யாருவந்தாலும் வாசல் ஓரத்ல இருக்கிற தண்ணித் தொட்டியில கால முக்கிக் கழுவிட்டுத்தான் உள்ள வரணும்.

"இல்லாட்டா? "

"இல்லாட்டா ஒங் கால்ல ஒட்டியிருக்கிற மண்ணு இந்த சிமிண்டுத் தரையில ஒரசி, ஒட்டியிருக்கிற கருமருந்துல தீப்புடிச்சு

வளையமெல்லாம் வெந்து நீயும் கருகிப்போவ, நானும் கருகிப் போவன். சங்கிலிப்பயல் வெந்து மகிந்து கருகிக் கிடந்தாப்ல."

புதுப்பையன் மிரள மிரளப் பார்த்தான். எல்லோரும் ஏளனமாகச் சிரித்தார்கள். ஒரு வாசல் மட்டுமே லேசாய்த் திறந்திருக்க மூன்று வாசல்களும் பூட்டியிருந்தன. தண்ணித் தொட்டி வரண்டு அசிங்கங்கள் நிரம்பிக் கிடந்தன. தண்ணீரைக் காணோம். சுவரில் தொங்கிய நான்குபேர் மட்டும் என்ற போர்டில் கருமருந்தால் நாலுக்குப் பக்கத்தில் சைபரைப்போட்டு நாற்பதுபேர் மட்டும் என்று எவனோ கிறுக்கியிருந்தான்.

திரிசொருகிய வளையங்கள் களத்தில் நிறைந்து கொண்டே வந்தன. பார்ப்பதற்குக் கரிசலில்தரையைக்கீறிக்கொண்டுதலைநீட்டும் முளை விதைகளைப் போல் இருந்தது.

வாசலில் வந்துநின்ற ஒரு சின்னப்பையன் சரோஜாவிடம் ஒரு பொட்டலத்தைக் கொடுத்தான். மடிப்பை நீக்கியதும் அதில் நான்கு சுசியங்களும் வடைகளும் இருந்ததைப் பார்த்தாள்.

ஆரு குடுத்தா?

சம்முயாண்ணங் குடுத்து ஒங்கிட்ட குடுக்கச் சொல்லுச்சு.

ஆரு திரி சுத்துற சம்மியாவா?

பயல் தலையாட்டிவிட்டு வேகமாய் ஓடினான்.

ஏலேய் வேலுச்சாமி... சரோஜாவுக்கு நல்ல திரி எப்டி வந்ததுன்னு தெரிஞ்சு போச்சா.

அவள் வெட்கத்துடன் மடியில் வைத்தாள்.

யேய்... ஒத்த வளையத்துக்குமேல உள்ள இருக்கக்கூடாது. பாத்துட்டன் பெறவு கணக்குல கொறச்சிருவன். எம்மேல சடைக்கப்படாது. சொருகி முடிச்ச வளையமெல்லாம் ஒடனே களத்துக்குப் போயிரணும்.

சங்கரனின் அதட்டலைக் கேட்டதும் வளையங்களைத் தூக்கிக் கொண்டு எல்லா ரூமிலிருந்தும் பையன்கள் களத்திற்கு ஓடினார்கள்.

யக்கா ரெண்டு வளையங் கெடக்கு... திரி காணல. ஃபோர்மேன்ட்ட கேட்டா கூப்பாடு

போடுவாரு. கொஞ்சம் திரி குடுக்கா. அடுத்த ரூம் தங்கராசு வாயெல்லாம் பல்லாக நின்றான்.

எனக்கு ஒரு வளையம் சொருகிக் குடுத்துட்டு திரி வாங்கிட்டுப்போ.

யக்கா குடுக்கா.

அப்ப அந்த ரெண்டு வளையத்தையும் எடுத்துக்கிட்டு இங்க வா. திரி தரேன். ஃபோர்மேன் பார்த்தா கூப்பாடு போடுவாருக்கா.

நிய் சும்மா பயப்படாம வா.

தங்கராசும் சரோஜாவும் எதுத்து எதுத்து உட்கார்ந்து கொண்டார்கள். தங்கராசு ஒன்பதாம் வகுப்பைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தன் தம்பியுடன் சேர்ந்து வேலை செய்கிறவன். வயதுக்கு மீறின உயரம். களையான குழந்தை முகம்.

ஒங்க அக்காள பொண்ணு கேட்டு வந்தாகள என்னாச்சு?

அந்தக் கூத்த ஏங் கேக்க. போன மாசம் உருளக்குடியிலிருந்து ஒரு மாப்ள வந்தான். பையனும் நல்ல பையன். பெருங்கொண்ட சம்சாரி. வீட்ல ஒரே பையனாம். காட்டுவேல செய்யுமான்னு கேட்டாக. நாலு ஆளக் கூட்டிக்கிட்டு தனது வேலைக்காவது போகணுமின்னு சொன்னாக. அக்கா ஒரேயடியா தலையக் குலுக்கிட்டா.

அவமேலயும்குத்தமில்ல.சம்சாரிவீட்டுக்கு வாக்கப்பட்டுப் போனா காட்டு வேல செஞ்சுதான் ஆகணும். வெயில்ல நின்னுதான் சாகணும். இந்தத் தீப்பெட்டி ஆபிஸ், வேட்டாவிஸ்ல வேல செஞ்சு சொகங்கண்டுட்டா ஒரு சிறுக்கி கூட வெயில்ல நிக்கமாட்டா. இப்ப வேற எங்கயும் போகவேண்டாம். என்னயப்போயி வெயில்ல நில்லுன்னா நிக்க முடியுமா? கறி எளகும்.

முந்தா நாளும் ஒரு மாப்ள வந்துச்சு.

எந்தூர்லருந்து வந்துச்சு

வரதம்பட்டி. அம்மா வழில கொஞ்சம் சொந்தம். மாப்ள கவுருமெண்ட் வேல பாக்காராம். சூட்டு கீட்டு போட்டு ரொம்ப போடுசா இருந்தாரு.

அப்ப எப்பக் கலியாணம் வச்சிருக்கிக?

எப்பக் கலியாணமா? பொண்ணு புடுச்சுப்போச்சு. எத்தன வரைக்கும் படிச்சிருக்குணு கேட்டாரு. படிக்கலண்ணு சொன்னதுதான். பச்சத்தண்ணிகூட குடிக்கல. நடையக் கட்டிட்டாரு.

வர்ற பயலுக்குப் பூராவும் பொண்ணு புடிக்கும். டீச்சரம்மா மாதிரி இருக்கா. படிச்ச மாப்ள வந்தா பொண்ணு படிச்சிருக்கான்னு கேக்கான். பட்டிக்காட்லருந்து சம்சாரி மாப்ள வந்தா காட்டு வேல செய்யுமான்னு கேக்கான். அங்கிட்டும் இல்லாம இங்கிட்டும் இல்லாம ரெண்டுங் கெட்டான் பொழப்பு, சோடனதான் பெரிய சோடனை. ஒவ்வொருத்தியும் சிமிட்டிட்டு அலையறதப் பாத்தா சினிமா நடிகை தோத்துப்போவா.

சொல்லிவிட்டு சரோஜா சலித்துக் கொண்டாள். சொருகிய வளையங்களைக் காலால் நகட்டிவிட்டு இடுப்பாற்றினாள்.

இங்கயே எவனாவது கெட்னா வெயில் படாம வேல பாக்கலாம். சாகும்மட்டும் ரெண்டுபேரும் கருமருந்தத் தின்னிட்டு சாகவேண்டிதான். நம்ம மிச்சம் வச்சிட்டுப் போற மருந்தத்திங்க நம்ம புள்ளைக வரும்.

வேலையை முடித்தவர்கள் வளையங்களை அடுக்கி வைத்துவிட்டு உப்புச் சோப்பு வாங்க ஓடிப்போய் வரிசையில் நின்றார்கள். தினமும் வேலை முடிந்ததும் துணிகளுக்குப் போடுகின்ற உப்புச்சோப்பு ஒரு துண்டு கிடைக்கும். அதைத் தேய்த்துக் குளித்தால்தான் மேல்பூராவும் ஒட்டியிருக்கின்ற அலுமினியப்பவுடர், சல்பர், கருமருந்து வாடை குறையும். அவர்கள் வரிசையில் இடம்பிடிக்கச் சண்டை போட்டார்கள். அதிலேயே சோப்பு வாங்கியவர்கள் தூக்குவாளியைத் தூக்கிக் கொண்டும் சட்டைதுணிமணிகளைக் கையில் பிடித்துக்கொண்டும் குறிஞ்சாக்குளம்

கண்மாய்க்கு ஓடினார்கள். போனவருடம் இதே மாதிரிதான் வரிசையில் நின்றான் செல்லையா பயல். துடுக்கான பயல். எடுத்தெறிந்து பேசுவதில் படுகில்லாடி. அவன்முறை வந்ததும் சொன்னான்.

சோப்பு முழுக்கட்டி கொடுக்கலாமில்ல. அரைக்கட்டி கைகழுவ மட்டும்தான் சரியாப்போகுது. விடிஞ்சு பாத்தா குளிச்ச ஒடம்பு மினுங்குது. அலுமினியப் பவுடர் போக மாட்டேங்கது.

சொல்லி வாய்மூடவில்லை. அவன் கன்னத்தில் பெரிய கணக்குப்பிள்ளையின் ஐந்து விரல்களும் தடம்பதித்திருந்தன.

ஒஞ்சோலியப் பாருடா நாயி, முழுக்கட்டி, அரைக்கட்டி – ஒனக்கு சோப்பும் கெடையாது. நிய் நாளையிலிருந்து வேலைக்கு வரவேண்டாம்.

சம்பளத்தக் கணக்குப் பாத்துக் கையில குடுங்க. இந்த மடம் இல்லாட்டி சந்தமடம்.

நாளைக்கு ங்கொப்பனக் கூட்டிட்டுவந்து வாங்கிட்டுப்போ

வேல செஞ்சது நானு. எங்கப்பனில்ல.

செல்லையாப் பயல் இப்போது கம்பி எண்ணுகிறான். தட்டப்பாறை மைனர் ஜெயிலில். கம்பெனியிலிருந்து குளோரேட் மூடையைக் களவாண்டு விட்டதாகக் குற்றம். அவன் தங்கச்சி இப்போது வேறு கம்பெனிக்கு நடக்கிறாள். அவள் இப்போது மருந்து களவாணி செல்லையாவின் தங்கச்சியாக மாறிப்போய் விட்டாள்.

பிள்ளைகளை ஏற்றிப்போகும் கம்பெனி பஸ் வாசலில் வந்து நின்றது. அதன் கண்ணாடியில் பட்டவெயில் மஞ்சளாய் மின்னியது. குளித்தும் குளியாமலும் வந்த சிறுவர்களும் சிறுமிகளும் இடம்பிடிக்கச் சண்டை போட்டார்கள்.ஆலமரத்தில் அடையும் குருவிகளைப்போல ஒரே சலசலப்பு. பஸ்ஸின் ஹாரன் பலமாய் ஒலித்தது.

புறப்படத் தயாராய் நின்ற பஸ்ஸை நோக்கி கையைக் காட்டியபடியே ஃபோர்மேன் சங்கரன் வேகமாய் ஓடிவந்தார். ஜன்னல்களின் வழியே எல்லாப் பிள்ளைகளும் எட்டிப்பார்த்தார்கள். உறுமிய பஸ் அமைதியானது.

குடோன்லருந்து சின்ன மொதலாளி இப்பத்தான் போன் பண்ணினாரு. பத்தாயிரம் பாக்கெட் அவசரமா வேணுமாம். நாளைக்கிக் காலைல லோடு ஏத்தியாகணுமாம். எக்ஸ்போர்ட் முடிச்சிட்டுப் போங்க ரொக்கக் காசு.

ரொக்கக் காசென்றால் வாரக்கடேசியில் வாங்கும் சம்பளக் கணக்கோடு சேராது. வேலை முடிந்ததும் உடனே கைக்கு வந்துவிடும். ஊர் போவதற்காக பஸ் சார்ஜ் கொடுக்கப்படுவதோடு டீ, காபி, பன், சேவு, பக்கடா, மிக்சர் ஓசியில் கிடைக்கும். கொஞ்சம்பேர் இறங்கிக்கொள்ள பஸ் புறப்பட்டுப்போனது.

அவர்கள் பாக்கெட் ரூமிற்குள் வட்டமாய் உட்கார்ந்தபோது ஒளித்து வைத்திருந்த பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் பொருத்தப்பட்டன. பல கலர்களில் அம்பாரமாய்க் குமித்து வைக்கப்பட்டிருந்த வெடிகளைச் சுற்றிலும் உட்கார்ந்து எண்ணிஎண்ணிப் பாக்கெட் போடத் தொடங்கினார்கள்.

அண்ணாச்சி மொதலாளிட்டச் சொல்லி ஒரு டியூப்லைட் போடச் சொல்லலாமில்ல. நல்ல வெளிச்சம் தெரியுமில்ல.

சும்மா வாய வச்சுகிட்டு இருடா. மேனேஜர் ரூமுக்கே கரண்ட் கிடையாது. சாயங்காலம் நாலு மணிக்குமேல வாட்ச்மேன் தவிர வேற ஆளே இருக்கக்கூடாதுங்கறாரு இன்ஸ்பெக்டரு.

யேய்... மிக்கேலு, தங்கமாடத்தி உள்ள தள்ளி உக்காருங்க. கதவப்பூராவும் சாத்திருவம். வெளிச்சம் தெரிஞ்சு வேண்டாதபய எவனாவது போன் பண்ணிட்டாப் போச்சு. ஜீப்புக்காரன் வந்தா பூட்டி சீல்வச்சுப்புடுவான். அன்னிக்கி அன்னிக்கே குடோனுக்குப் போயாகணும். இங்க என்னடான்னா லாரிவாடகை குடுக்க

வருத்தப்பட்டுப் பத்துநாள் வெடியும் குமிஞ்சுகிடக்கு. இது ஒரே வாடகையாப் போகுது. இங்கருந்து குடோனுக்குப் போற வாடக மிச்சம். புடுச்சிக்கிட்டா அம்புட்டுதான்.

எண்ணி அடைத்துப் பைகளை மடித்து, பின் அடித்து மடித்த பைகள் வரவர சங்கரன் கேஸ்பெட்டிக்குள் எண்ணிஎண்ணி அடுக்கிக் கொண்டே இருந்தார். அவர் மனசு சந்தோசத்தில் கனத்தது.

அண்ணாச்சி, பின்னு தீர்ந்துபோச்சு. வேற பாக்கெட் ஒடங்க.

எண்ணிமட்டும் வையுங்க. புதுப்பாக்கெட்டு ஒடச்சுக் கொண்டாரன்.

போனவேகத்தில் திரும்பி வந்தவரின் கையில் பின்னுப் பாக்கெட்டைக் காணோம். பதிலுக்கு நாலைந்து மெழுகுவத்திகள் இருந்தன.

பாக்கெட் தீர்ந்து போச்சு. ஸ்டோர்லயும் வேற ஸ்டாக் இல்ல. இதப்பொருத்தி தூர வச்சுகிட்டு பைய்ய நல்லா மடக்கி, ஒரு குலுக்குக் குலுக்கி லேசா வாட்டிட்டா பிளாஸ்டிக் இளவி ஒட்டிக்கிரும். இனி ஆயிரம் பாக்கெட் தான் வேணும். வெடிகள நல்லாக் குலுக்கிக்கோங்க. திரி வெளில நீட்டிட்டிருந்தாப் போச்சு.

கேஸ்பெட்டிகளின்மேல் பெயிண்டால் எழுதுகிறவன் வேகமாய் வந்தான். டப்பென்ற சத்தத்தைத் தொடர்ந்து டப்டப்டப் என்ற பெரிய சத்தம். புகைமூட்டத்தில் பூட்டிய கதவுகளைத் திறக்க முடியவில்லை. வெடிகள் வெடித்த சத்தத்தில் அலறல்களும் கூப்பாடுகளும் குறைந்து முனங்கல்கள் ஆயின.

வெந்து கருகி நீத்துப்போன பல உயிர்கள். விடிந்தபோது வெடிகளோடு வெடிகளாய் எட்டுக் குழந்தை வெடிகள். ஆறு பெரிய வெடிகள். மூன்று கிழட்டு வெடிகள் வெடித்துச் சிதைந்து கருகியிருந்தன. ஐந்து பொம்பிளை வெடிகளைப் பிரித்தறிய அடையாளங்கள் ஏதுமில்லை. கருகிய கட்டைகள் அவைகள்.

படைப்பு முகம்

சோ.தர்மன் (சோ.தர்மராஜ் – 1952): கரிசல் மண்ணின் வேளாண் வாழ்வியலை எழுதும் இவரது படைப்புகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான குரல் கூரான அங்கதத்துடன் வெளிப்படுகிறது. நகைச்சுவை உணர்வும் இயல்பான சூழல் சித்திரிப்பும் இவரது தனித்துவம். தூர்வை, கூகை, சூல் ஆகிய நாவல்களும் ஈரம், சோகவனம், வனகுமரன் ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் இவரது முக்கியமான படைப்புகள்.

படிப்போம் பகிர்வோம்

1. நசுக்கம் கதை உணர்த்தும் பட்டாசுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைத் தொகுத்து எழுதுக.
2. உங்கள் ஊரில் தொழில் சார்ந்து பாதிப்புக்குள்ளாகும் மக்களின் சிக்கல்களை ஆராய்க.
3. தொழிலகங்களில் கடைபிடிக்கவேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் என்னென்ன என்பதை அறிந்து எழுதுக.
4. 'நசுக்கம்' போன்றே சிறுகதை எழுதுவதற்கான, சிக்கல் நிறைந்த களம் இன்று இல்லை? – இக்கூற்றை உடன்பட்டோ மறுத்தோ உங்கள் கருத்தை எழுதுக.
5. 'நசுக்கம்' கதையின் முடிவை நீ விரும்பும் வகையில் மாற்றி எழுதுக.
6. வட்டார வழக்கில் உரையாடல்களைக் கொண்டது 'நசுக்கம்' சிறுகதை என்பதற்கு ஐந்து சான்றுகள் தந்து கருத்துரை தருக.

அயலகத் தமிழ் எழுத்தாளர் சிறுகதை

'பேபி' குட்டி

–கே. பாலமுருகன், மலேசியா

பெரிய மாமா வந்ததும் அதுவரை வீடு கனத்த துயரத்தைக் கெட்டியாகப் பிடித்து வைத்திருந்து திடீரென்று தளரவிட்டதைப் போல உடைந்தது. அப்பா கதறி அழும்போது உடன் யாராலும் அழாமல் இருக்க முடியவில்லை. இதுவரை எதற்குமே சட்டென அழாத ஒருவர். அப்படி அழுது கதறும்போது உடல் சிறுத்துக் குழந்தையாகி எல்லோரின் மடியிலும் விழுகிறார்.

மாணிக்கம் பக்கத்து வீட்டுக்காரர். அப்பாவிற்கு நெருக்கமான ஒரே ஆள் அவர்தான். அப்பாவிற்குச் சொல்லும்படியாக நண்பர்கள் அவ்வளவாக இல்லை. அடுத்தவீட்டில் யார் இருக்கிறார்கள் என்பதுகூட அப்பாவிற்குத் தெரியாது.

இரண்டு வயது குழந்தையின் மரணம் யாரையும் சமாதானப்படுத்தக் கூடியதல்ல. வருவோர் போவோர் அனைவரும் புலம்பியபடியே இருந்தனர். ஆகக் கடைசியாக ஒரு புலம்பலையே விட்டுப் போய்க்கொண்டிருந்தனர். வீட்டில் அவன் கடைசிப் பையன். அப்பா எப்படிப் பாட்டிக்குத் தாமதமாகப் பிறந்த கடைசிப் பையனோ, அதேபோலத் தம்பியும் அப்படித் தான். பின்கட்டிலிருந்து முன்வாசலுக்கு ஓடிவரும் சிறிய இடைவெளியில் சட்டென முடிந்து விட்ட வாழ்க்கை.

"சாக வேண்டிய வயசாடா இது...? என்ன விட்டுட்டுப் போய்ட்டியேடா," என அப்பா மீண்டும் தரையை ஓங்கியடித்தபடியே அழுதார்.

பேபி குட்டி தலைவிரித்த கோலமாய் அப்பொழுதுதான் வெளியில் வந்தாள். சிரிப்பே இல்லாத பொக்கை வாய். கண்கள் இரண்டும் உள்ளே சொருகிக் கிடந்தன. பேசுவதை உடனே புரிந்துகொள்ள முடியாது. ஒரு சொல்லை உச்சரிக்கவே நிதானமாக அடுக்குவாள். அவளுடன் உரையாடப் பொறுமை தேவைப்படும். ஆனால், ஓயாமல் வேலை செய்துகொண்டே இருப்பாள். அப்பாவின் அம்மா.

மெலிந்துபோன தேகம். அதன் மேலே எப்பொழுதும் தொங்கும் ஒரு கலர் துண்டு. வெளுத்தக் கைலி. தாடைவரை நீண்டு தொங்கும் காதுகள். ஆனால், தூரத்திலிருந்து வருபவர்களையும் பேசுபவர்களையும் அவளால் உன்னிப்பாகக் கேட்கவும் பார்க்கவும் முடியும். அவள் யாரையும் பொருட்படுத்தியதே இல்லை.

"அடியே பேபி குட்டி... உன் பேரனப் பாத்தியா?" என அவள் வயதை ஒத்த மூக்குத்திக் கிழவி தூரத்திலிருந்து அரற்றிக் கொண்டே ஓடிவந்தாள்.

பேபி குட்டி வீட்டுக்கு வெளியில் வந்து ஓரமாய் வைக்கப்பட்ட துடைப்பைக் கட்டையை எடுத்து வாசலைப் பெருக்கத் தொடங்கினாள். அது பேபி குட்டியின் அன்றாட வேலை. எந்தச் சலனமும் இல்லாமல் ஏற்கனவே சுத்தமாக இருந்த வாசலைப் பெருக்கினாள். அவளுடைய வேலைகளை யாருக்கும் விட்டுக்கொடுக்க முடிந்ததில்லை.

"இந்தக் கெழவிக்கு எத்தன வயசாகுது... போய்ச் சேர வேண்டியதெல்லாம் நல்ல திடக்காத்தரமா இருக்கு...கடவுளுக்கு என்ன கேடு? இந்தச் சின்ன பையனைக் கொண்டு போய்ட்டாரு..." வந்தவர்களில் யாரோ சொன்னது அங்கிருந்தவர்களின் மௌனத்தைக் கலைத்தது.

அவர்களில் சிலர் இப்பொழுது பேபி குட்டியை வைத்த கண் வாங்காமல் கவனித்தனர். ஒரு சிறு கவனம் திரும்புதல் அது. மரணத்திலிருந்து வாழ்வுக்குத் திரும்பும் கணம். அதுவரை சோகமாக இருந்தவர்களும் இப்பொழுது நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

"பாரேன்... இந்த வயசுலையும் இந்தக் கெழவினாலெ நல்லா ஆரோக்கியமா இருக்க முடியுது..."

"ஆமாம்....கிழவிக்குத் தொண்ணூறுக்கு மேல தாண்டிருச்சி..."

பேபி குட்டி பெருக்குவதை நிறுத்திவிட்டு அங்கே இருந்த நாற்காலிகளை அடுக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு நாற்காலியையும் அவளால் இயல்பாகத் தூக்கி நகர்த்த முடிந்தது. உடலில் இருந்த முதுமை செயலில் குறைவாகத் தென்பட்டது.

"பாட்டி! அங்க போய் உக்காரு... ஏன் தேவையில்லாத வேல செஞ்சிகிட்டு இருக்க?" பெரியசாமிக்கு உதவியாக வந்தவர் கத்தினார்.

பேபி குட்டி அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. எவ்வளவு சொற்களைக் கோத்துத் திரட்டி பேபி குட்டி காதில் திணித்தாலும் அது அவளுடைய மூளைக்குப் போய்ச் சேராது. அவளுடைய உலகத்தில் இயங்கிக் கொண்டே இருப்பாள். ஏற்கெனவே அடுக்கப்பட்டிருந்த நாற்காலிகளைத் தூக்கிக் கொண்டு போய் வேறு இடத்தில் அத்தனை பொறுப்புடன் அடுக்கத் தொடங்கினாள்.

பேபி குட்டியின் உண்மையான பெயர் குட்டியம்மாள். ஆனால், அப்பொழுதெல்லாம் பெண் குழந்தை பிறந்தால் பேபி என்றும் ஆண் குழந்தை பிறந்தால் 'போய்' என்றும் அடைப்பெயரிட்டு அழைப்பார்கள். அப்படியே அழைத்து அழைத்துத்தான் குட்டியம்மாள் பேபி குட்டியானாள்.

சுந்தரி அத்தை வந்து சேர்ந்த பிறகு வீடு மீண்டும் அலறத் தொடங்கியது. தம்பியை எட்டு மாதங்கள் வளர்த்தவள் அவள்தான். தேம்பித்தேம்பி அழுததில் திடீரென மூர்ச்சையுற்று விழுந்தாள். சிறிதுநேரம் எல்லோரும் பதறிப் போயினர். தண்ணீரை முகத்தில் அடித்து அவளை ஓரமாக உட்கார வைத்தார்கள். முகம் தொங்கிப் போய்க் கிடந்தது.

"யப்பா சொந்தக்காரனுங்க எல்லாம் வந்து எண்ணெய் வைக்கலாம்," எனப் பெரியசாமி சொன்னதும் படுத்திருந்த அத்தை உடனே விழித்தெழுந்து தம்பியின் பெட்டியருகே ஓடினாள்.

அவள் அச்சமயம் ஓடும்போது ஓர் ஆணாக மாறியிருந்தாள். மார்பில் அடித்துக் கொண்டே ஓடினாள். அவள் அப்படிச் செய்பவள் அல்ல. வீட்டில் மகன்கள் இருந்தாலே சத்தமாகப் பேசவோ யாரையும் கத்தி அழைக்கவோ விரும்பாதவள்.

"மகேனு மகேனு ஐயாவு வந்துருடா... அம்மாவெ விட்டுப் போவாதடா," எனப் பெட்டியின் வலப்பக்கத்தில் சரிந்தாள்.

அதுவரை நாற்காலியை அடுக்கிக் கொண்டிருந்த பேபி குட்டிக்கு அத்தையின் அலறல் கேட்டது. அத்தை பேபி குட்டிக்குச் செல்லமகள். பாசமாக வளர்ந்தவள். ஆனால், ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு பேபி குட்டியை அவள் அவ்வளவாகக் கண்டு கொள்ளவில்லை. அவ்வப்போது கடமைக்குக் கொஞ்சம் பணம் தருவாள். எப்பொழுதாவது பார்த்துவிட்டுப் போவாள். அதுவும் பேச்சில் கடுப்பு மட்டுமே மிஞ்சும்.

பேபி குட்டி தட்டுத் தடுமாறி அத்தையிடம் போனாள். அவள் பெட்டியைக்கூட கவனிக்கவில்லை. அமர்ந்திருப்பவர்களையும் தரையையும் தட்டித் தடவி அத்தையின் அருகே போய்விட்டாள். மெதுவாக அத்தையின் அருகில் அமர்ந்துகொண்டு அவளுடைய தலையை வருடினாள். விழியோரம் இலேசாகக் கண்ணீர் முட்டிக்கொண்டு கிடந்தது.

"சின்னப்பையன்... இன்னும் உலகத்தையே பாக்காதவன்," எனப் பேபி குட்டியின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்க முயற்சித்த அத்தை மீண்டும் கதறி அழுதாள். பேபி குட்டி அத்தையின் கையை விடமறுத்தாள்; கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அதில் ஒரு முரட்டுத்தனம் தெரிந்தது.



"கையெ விடும்மா..." அழுகையினூடாக அத்தை பேபி குட்டியின் கைகளை உதறித் தள்ளினாள். பேபி குட்டி சற்றுத் தடுமாறி கைகளை அத்தையிடமிருந்து எடுத்தாள்.

"குமாரு கெழவியெ கூட்டிட்டுப் போ."

குமார் தம்பிக்கு மூத்தவன். பேபி குட்டியைப் பிடித்து மேலே தூக்கினான். அவள் வர மறுத்தவள்போல முரண்டு பிடித்தாள்.

"பாட்டி ஏஞ்சி வாங்க," எனப் பதிலுக்கு அவனும் பலமாக இழுத்தான்.

பேபி குட்டி இருபத்து ஐந்து கிலோகூட இருக்கமாட்டாள். ஏதோ முனங்கியவாறு அவனுடைய இழுப்புக்குப் போனாள். குழந்தைகளின் மரணம் அத்தனை இயல்பானது அல்ல. ஒரு குழந்தையின் மரணத்திற்குமுன் அனைத்து மனங்களும் குழந்தையாகி விடுகின்றன. தம்பி இப்பொழுதுதான் பெட்டிக்குள் ஒளிந்துகொள்ளச் சென்றதைப்போலப் படுத்திருந்தான். அது விளையாட்டு. இன்னும் சிறிதுநேரத்தில் அது முடிந்துவிடும் என அனைவரின் மனங்களும் படபடத்துக் கொண்டிருந்தன.

"டேய் வீட்டு நிம்மதியையே கொண்டு போய்ட்டான்டா," என மீண்டும் அத்தை புலம்பினாள். அவள் குரல் சோர்வுற்றிருந்தது.

தம்பி ஒரேயொரு சிரிப்பில் அனைத்து இறுக்கங்களையும் உடைப்பவன். நம் வேலைகளையும் விட்டுவிட்டு உடனே கவனிக்கக்கூடிய அலட்டலே இல்லாத மெல்லிய சிரிப்பு. குழிவிழும் கன்னங்கள். பிஞ்சுக் கைகள்.

பேபி குட்டிக்கும் அவனுக்கும் நடக்கும் சண்டைதான் வீட்டிலேயே பிரபலமானவை. வீடுமுழுக்க அவனைத் துரத்திக் கொண்டு பேபி குட்டி ஓயாமல் ஓடுவாள். அவளிடமிருந்து ஒளிந்து கொள்வதே தம்பியின் பெரிய தந்திரமாக இருக்கும். பேபி குட்டி கொஞ்சநேரம் உறங்கிவிட்டாலும் அவளின் பொக்கை வாயில் எதையாவது செருகி விடுவான். அவள் திடுதிப்பென்று எழுந்து பார்ப்பாள்.

"நீ என்னிக்காவது என்னைக் கொன்னுருவடா!" என அதையும் முழுமையாக உச்சரிக்க முடியாமல் பேபி குட்டியின் வாய்க்குள்ளேயே கரைந்துவிடும்.

பேபி குட்டியைக் குமார் வீட்டின் ஓர் ஓரத்தில் உட்கார வைத்துவிட்டு மீண்டும் வாசலுக்கு வந்தான். பெட்டியை வாசலில் கிடத்தி யிருந்தார்கள். பிண ஊர்தி வந்ததும் வீடு மீண்டும் பரபரப்பானது. அவ்வளவாகப் பழக்கமில்லாத தூரத்து நண்பர்களும் சொந்த வீட்டின் சோகத்தைப்போல உணர்ந்தனர்.

பேபி குட்டி அவ்விடத்தை விட்டு மீண்டும் வாசலுக்கு வந்தாள். ஆங்காங்கே சிதறிக் கிடந்த சப்பாத்துகளை எடுத்து அடுக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு சப்பாத்தையும் குனிந்து எடுத்து அடுக்குவதைச் சிலர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அந்தக் கெழவியெ இழுத்துட்டுப் போய்க் கட்டி வச்சாத்தான் என்ன?" துரைசாமி அப்படிச் சொல்வார் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

துரைசாமி அப்பாவின் முதலாளி. இந்த வீட்டில் அதிகம் உரிமையுள்ள மனிதர். எல்லா விழாக்காலங்களிலும் இந்த வீட்டில்தான் இருப்பார். ஒரு முக்கியமான விருந்தாளி என்றே சொல்லலாம். ஒரு வருடத்தில் கைவிட்டு எண்ணக்கூடிய அனைத்துப் பண்டிகைகளின்போதும் தவறாமல் வந்து தன் உறவைப் புதுப்பித்துவிட்டுப் போய்விடுவார். அவருக்கு ஐம்பது வயது இருக்கும். எல்லோரும் அவருக்குக் கொஞ்சம் அடங்கிப் போவர்.

"டேய் குமாரு பாட்டியெ இழுத்துட்டுப் போய் வீட்டுக்குள்ள உடு... சாக வேண்டிய வயசுலே... உசுரை வாங்குது..." என அவர் சொன்னதும் உடனே குமார் எழுந்து நின்றான்.

எல்லோரும் பேபி குட்டியை அசூயையாகப் பார்த்தனர். குமார் மீண்டும் பேபி குட்டியின் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போனான். பேபி குட்டிக்கு வீட்டில் ஒரு மூலை உண்டு. சாமி அறைக்குப் பக்கத்தில் இருக்கும் சிறிய இடைவெளி. எல்லா வேலைகளும் முடிந்த பிறகு அவள் அங்குத்தான் இருப்பாள். வெறுமனே கவனித்துக் கொண்டிருப்பாள். எதுவுமே இல்லாத ஒன்றை அவள் கவனித்துக் கொண்டே இருப்பாள். அவளால் வெகுநேரம் ஓர் இடத்தில் அமரவும் முடியாது.

"பாட்டி இங்கையே இருங்க... போற வரைக்கும் வந்திடாதீங்க, ஒரே தொல்லையா இருக்கு," என அதட்டிவிட்டுக் குமார் வாசலுக்குப் போனான்.

எல்லாச் சடங்கும் முடிந்த பிறகு பெட்டியைத் தூக்கினர். கனத்த மனங்களால் அதைப் பார்க்க இயலவில்லை. எல்லோரும் வாய்விட்டு அழுதனர். அப்பா சாலையிலேயே படுத்துப் புரண்டார்.

வீட்டில் இருந்தவர்கள் எல்லோரும் வெளியில் போனதுடன் பேபி குட்டி எழுந்தாள். மெதுவாக நடந்து சென்று நாற்காலிக்குப் பின்னால் ஒளிந்தாள். பிறகு எழுந்துபோய் அறைக்கதவிற்குப் பின்னால் ஒளிந்தாள். அவள் வழக்கம்போல வீட்டுக்குள் தம்பியைத் துரத்துவதைப்போல ஓடத் தொடங்கினாள்.

படைப்பு முகம்

கே. பாலமுருகன் (1982): மலேசியத் தமிழ் எழுத்தாளர். தற்கால சமூக வாழ்க்கைச் சூழல்களைப் புதிய உத்திகளில் சொல்லி வருபவர். மலேசியத் தமிழிலக்கியச் சூழலில் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் மூலம் நன்கு அறியப்பட்டவர்.

படிப்போம் பகிர்வோம்

1. 'பேபிகுட்டி' கதை வெளிப்படுத்தும் உறவு நிலை உணர்வுகளைத் தொகுத்தெழுதுக.
2. இன்றைய சூழலில் முதியோரின் நிலை பற்றிய உன் மதிப்பீடு யாது?
3. 'பேபிகுட்டி' கதையில் அமைந்துள்ள மொழிநடை முறைக்குச் சான்று தந்து விளக்குக.

அயலகச் சிறுகதை

பசி

– தாமரைச்செல்வி, இலங்கை

சின்ராசு திண்ணையிலிருந்து இறங்கிவந்து குசினிக்குள் எட்டிப் பார்த்தான். அம்மாவைக் காணவில்லை. காலையில் தேநீருக்காக மூட்டிய அடுப்பு இப்போது அணைந்து போயிருந்தது. அம்மா சாப்பாடு எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஆக, இன்றைக்கும் காலையில் குடித்த தேநீருடன் பாடசாலை போக வேண்டியதுதான்.

வயிற்றுக்குள் கிர்ரென்ற இரைச்சல்......

ஏதாவது சாப்பிட முடியும் என்று காத்துக் கொண்டிருந்தவனுக்கு நிலைமை புரிந்துபோகப் பேசாமல்போய் அரைச்சுவரில் வைத்திருந்த புத்தகப் பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான்.

இந்தப் பத்து வயதில் குடும்பத்தின் நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டவன் அவன். உழைத்துத் தர, ஆண் துணை இல்லாத குடும்பம். மிகவும் சிறிய வயதில் தந்தையின் நேசத்தை அனுபவித்தது, கனவு மாதிரி இருந்தது. மனத்தின் ஆழத்தில் அந்த அனுபவம் இப்போதும் இனிமையாய்ப் பரவியிருந்தது.

அந்த ஆசியான அப்பா, ஆறு வருஷத்துக்கு முன்பு ஆனையிறவிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்குப் பலியானபோது, அழவும் தெரியாத பருவத்தில் அவன் இருந்தான். அம்மாதான், உழைத்து அவனை வளர்த்துக் கொண்டிருக்கிறாள்.

அநேகமான நேரங்களில், அம்மாவை அழுத முகத்துடன் அவன் பார்க்க நேரிடுகிறது. அம்மா எவ்வளவு பாவம்! அதனாலேயே அவன் அம்மாவிடம் எதையும் கேட்பதில்லை.

சின்ராசு புத்தகப் பையுடன் முற்றத்தில் நின்று சுற்றும்முற்றும் பார்த்தான். மேலே வானத்தில் ஏதோ இரைச்சல் கேட்பது போலிருந்தது. மனம் திடுக்கிட்டுப் போக நிமிர்ந்து பார்த்தான்.

பொம்பர் ஏதும் பறக்கிறதா என்று கலவரமாய் இருந்தது. பொம்பர் என்றாலே மனம் பயத்தில் படபடவென்று அடித்துக் கொள்ளும். நல்ல வேளை ... பொம்பர் ஒன்றும் பறக்கவில்லை. தூர எங்கேயோ மோட்டார் சைக்கிள் இரைகிறது போலும்.

அவன் நிம்மதியுடன் அம்மாவைத் தேடினான்.

"அம்மா.... அம்மோய்...."

கிணற்றடிப் பக்கத்திலிருந்து வந்த அம்மாவின் முகம் வாடிப் போயிருந்தது.

"நான் ஸ்கூலுக்குப் போட்டு வாறன் அம்மா ...."

"ஓமப்பு. கவனம். பொம்பர் ஏதுவும் வந்தால் பள்ளிக்கூடத்துக்க இருக்கிற பங்கருக்குள்ள ஓடிப் போய் இருக்க வேணும். என்னப்பன்..."

"நான் பிள்ளைக்கு மத்தியானம் சோறு காய்ச்சி வைக்கிறன். வந்தவுடன் சாப்பிடலாம். என்ன..." அவன் ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தலையாட்டினான்.

"பிள்ளைக்குப் பசிக்குதே..."

அம்மா ஆற்றாமையோடு கேட்டாள்.

"இல்லையம்மா... நான் போயிட்டு வாறன்."

அவன் செருப்புப் போடாத கால்களுடன் தெருவில் இறங்கி நடந்தான்.

அவனுக்குத் தெரியும். அம்மா தன்னைப் போக விட்டுவிட்டு அழுவாள் என்று.

குசினி–சமையலறை

அதற்காகவே தனக்குப் பசி இல்லாதது போலவும் முகத்தில் வாட்டம் இல்லாதது போலவும் காட்டிக் கொண்டான்.

தெருவில் வேகமாக நடக்க அவனால் முடியவில்லை. வயிற்றுக்குள் எதுவோ புரண்டது.

வெறும் வயிறு இரைந்தது.

இப்போது இரண்டு நாள்களாகக் காலையில் எதுவும் சாப்பிடாமல்தான் பாடசாலைக்குப் போகிறான். புல் பிடுங்கிற வேலை. நாற்று நடவு வேலை முடிந்துவிட்ட நேரம். இனி வயல்களில் அரிவு வெட்டு வரும்வரை அம்மா வேலைக்குப் போக இயலாது. வேலை கிடைக்காது.

இனி, அரிவு வெட்டு வரும்வரை இப்படித்தான். அரை வயிறு, கால் வயிறுமாக இருக்க வேண்டும்.

நேற்றாவது பாடசாலைவிட்டு வீட்டுக்கு வந்தபோது, சோறும் சம்பலும் இருந்தது. இன்றைக்கு அதுவும் இருக்குமோ தெரியவில்லை. பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்து சேர மூன்று மணியாகிவிடும். அதுவரை இந்தப் பசியை எப்படிப் பொறுத்துக் கொள்வது என்று அவனுக்கு யோசனையாக இருந்தது.

வயிற்றில் இரைச்சலுடன் பாடங்களையும் கவனிக்க முடியாது. குறைந்தது இரண்டு ஆசிரியர்களிடமாவது இன்றைக்கு அடி வாங்கப் போவது நிச்சயம்.

முடிந்தவரை வேகமாக நடந்தான். பாம்புக் கமத்துக் கோவிலடி கடந்து நடக்கும்போது அவனுடன் படிக்கும் குகன் தன் தமயனின் சைக்கிளில் அவனைக் கடந்தான்.

"சின்ராசு! கெதியாய் வாடா. நேராமாயிடும்."

குகன் சொல்லிவிட்டுப் போனான்.

எவ்வளவு வேகமாய் நடந்து வந்தும், பாடசாலை வாசலை அடைந்த நேரம் இரண்டாவது மணியும் அடித்து வாசல் கேற்றும் மூடப்பட்டுவிட்டது.

வெளியே நின்ற பத்துப் பதினைந்து மாணவர்களுடன், அவனும் பயத்துடன் நின்று கொண்டான்.

அதிபர் வந்து, தாமதமாய் வந்ததுக்குக் காரணம் கேட்டு, ஒவ்வொரு அடி அடித்து உள்ளே விட்டார்.

அவன் மௌனமாகத் தன் கையை நீட்டினான்.

"ஏன் பிந்தி வந்தனி?"

அதிபரின் அதட்டலில் கண் விளிம்பில் நீர் துளிர்த்தது.

"ஒரு கட்டை தூரம் நடந்து வாறன் சேர்."

"அப்ப வெள்ளன வெளிக்கிட்டு வாறதுதானே....."

அம்மா ஏதும் சமைக்கக்கூடுமோ என்று, சாப்பிடுவதற்காகப் பார்த்துக் கொண்டிருந்த காரணத்தைச் சொல்லமுடியவில்லை. பேசமால் நின்றான்.

"இனிமேல் கெதியாய் வர வேணும், ஓடு"

கையில் அடித்த அடி, ஏனோ உறைக்கவில்லை.

"பிரின்சிபல் அடிச்சது நோகுதேடா" என்று குகன் கேட்டபோது, இல்லை என்று சிரிக்க முயன்றான்.

வகுப்பில் பாடங்களைக் கவனிக்க முயற்சி செய்தும் முடியவில்லை. காதை அடைத்துக்கொண்டு வந்தது.

மத்தியானம் இடைவேளை மணி அடித்தது.

அந்த நேரம், அவனைப் பொறுத்தவரை மிகவும் தண்டனைக்குரிய நேரம். எல்லாப் பிள்ளைகளும் தாங்கள் கொண்டு வந்திருந்த சாப்பாட்டுப் பொதிகளை எடுத்துச் சாப்பிடும் நேரம்.

அவன் கடைசி வாங்கில் வேறுபக்கம் பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்பான்.

சாப்பாடுகளின் பலவகையான வாசனை வந்து, மூக்கை நிறைத்து, அவனது பசி இன்னும் கிளறப்படுகின்ற சோதனையான நேரம்.

இன்றும் அவன் கடைசி வாங்கில் வந்து அமர்ந்து கொண்டான். குகன் தனது சாப்பாட்டுப் பெட்டியுடன் அருகில் வந்து "வாவன் சின்ராசு.... என்னோட சாப்பிடலாம்" என்றான்.

"வேண்டாமடா. எனக்குப் பசிக்கேலை."

குகன் மற்றவர்களுடன் சாப்பிட முன் வாங்கில் போய் அமர்ந்தான். விறாந்தையில் சென்று கொண்டிருந்த புவனா ரீச்சர், "ஏன் சின்ராசு... சாப்பாடு கொண்டு வரேலையே..." என்று கேட்டார்.

"இல்லை ரீச்சர்" என்றபோது, உள்ளே அழுகை வந்தது.

ரீச்சர் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தவன், விறாந்தை ஓரம் ஓடிவந்த நாயின்மீது தன் பார்வையைத் திருப்பினான்.

எங்கே நின்றாலும், இந்த நேரத்திற்கு வகுப்புகளின் வாசலுக்கு இந்த நாய் வந்து விடும். 'வயிறு ஒட்டிய மெலிந்த நாய்; அதுவும் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ' என்று அவன் கவலையுடன் நினைத்துக் கொண்டான்.

அவன் காலுக்கு அருகில் வந்து நின்று, சாப்பிடும் மாணவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது அது.

அப்போது, திடீரென்று வானத்தில் ஒரு பேரிரைச்சல்... அடுத்தடுத்து இரண்டு விமானங்கள் வேகமாய்ச் சுற்றி வந்தன.

"அய்யோ... பிள்ளையள்... எல்லாரும் பங்கருக்குள்ள ஒடுங்கோ..." புவனா ரீச்சரின் குரல் சத்தமாய்க் கேட்டது.

அவ்வளவுதான். அடுத்த வினாடி சூழ்நிலை மாறிப் போனது. மாணவர்கள் பிரித்த சாப்பாடுகளை அப்படியே போட்டுவிட்டு ஓடத் தொடங்கினார்கள்.

ஒவென்ற அலறலும் அம்மா என்ற கதறலுமாகச் சிதறி ஓடினார்கள்.

குண்டு வீச்சு விமானங்களின் ஓசையும் இவர்களின் ஒவென்ற கூப்பாடும் சின்ராசுவை ஒரு நிமிஷம் திகைக்க வைத்தன.

ஓடியவர்கள் கைதவற விட்ட சாப்பாட்டுப் பொதிகள் சிதறி நிலத்தில் விழுந்ததைப் பார்த்ததும், அவன் மனம் பதறியது. அவன் காலடியில் விழுந்த பொதி விரிந்துக் கொள்ள இடியப்பமும்... பொரியலும்...

அந்த மெலிந்த நாய், வகுப்பறைக்குள் நுழைந்து கீழே விழுந்து கிடந்த உணவை அவசர அவசரமாகச் சாப்பிடத் தொடங்கிய நேரம், சின்ராசு தன் காலில் கீழே இருந்த உணவை ஒரு வினாடி தயக்கத்துடன் பார்த்தான்.

அடுத்த வினாடி, கால் மடித்துக் குனிந்து அமர்ந்தபடி, அந்த இடியப்பத்தை எடுத்து வாய்க்குள் திணித்துக் கொண்டான்.

விமானத்தின் இரைச்சலோ... அது மிகவும் சமீபமாகக் குத்தி எழும்பிய ஓசையோ அவனுக்குக் கேட்கவே இல்லை.

படைப்பு முகம்

தாமரைச்செல்வி (1953): போரின் அவலம், போர்ச்சூழல் முதலானவற்றை எதார்த்தமாகச் சித்திரிப்பதில் தனி முத்திரை பதித்தவர். இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், மூன்று குறுநாவல்கள், ஆறு நாவல்கள் என இவரது படைப்பின் பட்டியல் நீள்கிறது. இலங்கை அரசின் சாகித்ய விருது பெற்றவர்.

படிப்போம் பகிர்வோம்

1. 'பசி' கதையில் வரும் சின்ராசுவின் பாத்திரப்படைப்பை ஆராய்க.
2. பசி கதை உணர்த்தும் போர்ச் சூழலை விளக்குக.

தெரியுமா?

சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற சிறுகதைகள்

1970 – அன்பளிப்பு – கு. அழகிரிசாமி

1979 – சக்தி வைத்தியம் – தி. ஜானகிராமன்

1987 – முதலில் இரவு வரும் – ஆதவன் சுந்தரம்

1996 – அப்பாவின் சிநேகிதர் – அசோகமித்திரன்

2008 – மின்சாரப் பூ – மேலாண்மை பொன்னுச்சாமி

2010 – சூடிய பூ சூடற்க – நாஞ்சில் நாடன்

2016 – ஒரு சிறு இசை – வண்ணதாசன்

அறிவோம் தெளிவோம்

சிறுகதை குறித்து எட்கர் ஆலன் போ

அமெரிக்க எழுத்தாளரான எட்கர் ஆலன்போவின் கதைகள் சிறுகதையின் வடிவ மாதிரிக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்தவை. சிறுகதை குறித்த அவரின் பார்வை...

"சிறுகதையின் முதல் தொடர், படிப்பவர் கவனத்தை இழுத்துப் பிடிக்கவில்லையாயின், அக்கதை பயனற்றது. பயனற்ற ஒரு சொல்கூட கதையில் இடம்பெறுதல் கூடாது."



இந்தியமொழிச் சிறுகதை

அஷமஞ்சா பாபுவின் நாய்

– சத்யஜித் ரே

ஹஷிமாராவில் உள்ள ஒரு நண்பரின் வீட்டிற்குச் செல்லும்போது, அஷமஞ்சா பாபு தன் நெடுநாளைய அவாவினைத் தீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் அமைந்தது. பவானிபூர், மோஹினிமோஹன் சாலையில் உள்ள ஒரு சிறிய ஃப்ளாட்டில்தான் அஷமஞ்சா பாபு குடியிருந்தார். லஜ்பத் ராய் தபால் அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை, அலுவலகத்திற்குக் கல்கத்தாவின் நெரிசலான பஸ்ஸிலோ, ட்ரெய்னிலோ சண்டை போடாமல் வீட்டிலிருந்து கால்நடையாகவே ஏழு நிமிடத்தில் போய்விடலாம் என்று அமைந்தது அவர் அதிர்ஷ்டம்தான். எனவே பாபுவின் வாழ்க்கை கவலைகள் இல்லாதது, அவரும் 'வாழ்க்கை தனக்கு இவ்வாறு அமையாதிருந்தால்' என்றெல்லாம் யோசித்து அலட்டிக் கொள்கிறவரில்லை. ஆக மொத்தத்தில் இருப்பதில் சந்தோஷப்பட்டுக் கொள்கிறவர்.

அவரைத் தொந்தரவு செய்து கொண்டிருந்த ஒரே விஷயம், ஒரு துணை இல்லாததுதான். சில நண்பர்கள் மற்றும் சொந்தக்காரர்களோடு வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டிருக்கும் பிரம்மச்சாரியான அவருக்கு, ஒரு நாய், தனக்குத் துணையாய் இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. இரண்டுவீடு தள்ளி இருந்த தாசில்தார் வளர்ப்பதுபோல, அல்சேஷன் போன்ற பெரியவகை நாய்கள் அவருக்குத் தேவையில்லை. அவர் ஆசையெல்லாம், காலையும் மாலையும் அவர் பின்னால் சுற்றி வந்துகொண்டு, அவர் வேலைமுடிந்து வீட்டுக்கு வருகையில் வாலை ஆட்டியபடி வரவேற்று, அவர் இடும் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செய்யும் ஏதேனும் ஒரு சிறியவகை நாய். பாபுவின் ரகசிய ஆசை என்னவென்றால் அவர் தன் நாயிடம் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்பது. 'ஸ்டாண்ட் அப்!', 'சிட் டௌன்', 'ஷேக் ஹேண்ட்ஸ்!' – அவருடைய இக்கட்டளைகளை அது கேட்டு நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அஷமஞ்சாபாபு, நாய்கள் ஆங்கில இனத்தைச் சேர்ந்தவை என்று நம்ப விரும்பினார். ஆம், ஒரு ஆங்கில நாய், அதற்கு அவர் எஜமானன். அந்த எண்ணமே அவருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

மழை தூறலாக விழுந்துகொண்டிருந்த ஒருநாளில், ஹஷிமாராவில் உள்ள சந்தைக்கு ஆரஞ்சுப் பழங்கள் வாங்கச் சென்றிருந்தபோது, சந்தையின் மூலையிலுள்ள குட்டையான இலந்தை மரத்தடியில் பூட்டானைச் சேர்ந்த ஒருவன் கையில் சிகரெட்டோடு அமர்ந்திருந்தான். பக்கத்தில் காலணிகள் வைக்கும் அட்டைப்பெட்டியில் இருந்து நாய்க்குட்டி ஒன்று எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

'காலை வணக்கம்'' என்று ஆங்கிலத்தில் சொன்னான், கண்கள் சிரிக்கும்போது கீறலாக மாறின. பாபுவும் மறுபடி வணக்கம் சொல்ல வேண்டியதாயிற்று.

'பை டாக்? டாக் பை? வெரிகுட் டாக்', பெட்டியில் இருந்த நாயை எடுத்து தரையில் விட்டான், 'வெரி சீப், குட் டாக், ஹேப்பி டாக்'.

நாய்க்குட்டி வெளியே வந்ததும் தன் உடலில் இருந்த மழைத்துளிகளை உலுக்கி உதறிவிட்டு பாபுவைப் பார்த்துத் தன் இரண்டு இஞ்ச் வாலை வேகமாக ஆட்டியது. பாபு அதனருகில் சென்று குனிந்து தன் கைகளை நீட்டியதும் தன் இளஞ்சிவப்பு நாவால் அவர் கைகளை நக்கியது, நட்பான நாய்தான்.

"விலை என்ன? ஹவ் மச்?"

"டென் ருபீஸ்"

சிறிதுநேர விவாதத்திற்குப்பிறகு ஏழு ஐம்பதுக்கு இறங்கிவந்தான். காசைக் கொடுத்ததும் பாபு நாய்க்குட்டியை அதே பெட்டிக்குள் வைத்து, மழைத்துளி படாமலிருக்க மூடி, ஆரஞ்சுப் பழங்களை மறந்து வீட்டை நோக்கி நடந்தார்.

கல்கத்தாவுக்கு வந்ததும், அஷமஞ்சா பாபுவுக்கு நாய்க்குட்டிக்கு ஒருபெயர் வைக்க வேண்டுமென்று தோன்றியது. அது ஒரு ஆங்கிலப் பெயராக இருக்கவேண்டுமென்று நினைத்தார். ஒருநாள் அந்தக்குட்டியைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, திடீரென, அது பழுப்பு நிறத்தில் இருப்பதால் ப்ரௌனி என்பது பொருத்தமான பெயர் என்று அவருக்குத் தோன்றியது. பெயரை முடிவு செய்த கணமே, அதை நாய்க்குட்டியின்மேல் பரீட்சித்துப் பார்த்தார், உடனே அது பிரம்பு முக்காலியில் இருந்து தவ்வி, அவர் அருகில் வந்து வாலாட்டியது. அஷமஞ்சா பாபு இப்போது, "சிட் டவுன்." என்றார், உடனே அது பின்னங்காலில் உட்கார்ந்து வாயைத் திறந்து சின்னதாகக் கொட்டாவி விட்டது. அஷமஞ்சா பாபுவுக்கு, ப்ரௌனி நாய்களுக்கான போட்டி ஒன்றில் புத்திசாலித்தனத்திற்கான முதல் பரிசைத் தட்டிச்செல்வது கண்ணுக்குத் தெரிந்தது.

அவருடைய வேலைக்காரன் பிபினும் நாய்களை விரும்புபவனாக இருந்தது அவரின் அதிர்ஷ்டம். அஷமஞ்சா பாபு வேலைக்குப் போனதும், ப்ரௌனியைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவனாகவே ஏற்றுக்கொண்டான்.

***

அந்தச் சம்பவம் நடந்தது ஹஷிமாராவிலிருந்து வந்த மூன்றாம்மாதம். அதுவொரு சனிக்கிழமை.. அஷமஞ்சா பாபு அப்போதுதான் வேலையிலிருந்து திரும்பிவந்து, பழைய மரநாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தார். கட்டிலையும் பிரம்பு முக்காலியையும் தவிர அந்த அறையில் இருந்த ஒரே மரச்சாமான் அதுதான்; அது திடீரென அவருக்கடியில் உடைந்து, கைகால்களைப் பரப்பியபடி அவரைத் தரைக்கு அனுப்பியது. உண்மையில் அவருக்குப் பலமான அடி, சொல்லப்போனால் மரக்காலைப்போலத் தன் முழங்கையும் இடம்விட்டு நகர்ந்துவிட்டதோ என்று நினைக்கும்போது அந்த எதிர்பாராத சத்தம் வலியை மறக்கச் செய்துவிட்டது.

அது படுக்கையிலிருந்து வந்தது. ஒரு சிரிப்பொலி அல்லது சரியாகச் சொல்லவேண்டுமென்றால் அதுவொரு இளிப்பு, அது தோன்றிய இடம் சந்தேகமே இல்லாமல் ப்ரௌனி, கட்டிலில் உட்கார்ந்திருந்த அதன் உதடுகள் இன்னமும் வளைந்திருந்தன.

அஷமஞ்சா பாபுவுக்குப் பொதுஅறிவு சற்று விசாலமாக இருந்திருந்தால், நாய்கள் ஒருபோதும் சிரித்ததில்லை என்று தெரிந்திருக்கும். கொஞ்சமேனும் கற்பனைவளம் இருந்திருந்தால் இச்சம்பவம் அவர் தூக்கத்தைப் பறித்திருக்கும். இரண்டுமே அவரிடம் இல்லை என்பதால் அஷமஞ்சா பாபு *All About Dogs* என்ற புத்தகத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்தார். ஒரு மணிநேரம் தேடியும் அந்தப்புத்தகத்தில் சிரிக்கும் நாய் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனாலும் ப்ரௌனி சிரித்தது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. புத்தகத்தை மூடிவிட்டு ப்ரௌனியைப் பார்த்தார். அவர்களின் கண்கள் சந்தித்துக்கொண்டதும், ப்ரௌனி தன் முன்னங்காலை எடுத்துத் தலையணையில் வைத்து அவரைப்பார்த்து வாலாட்டியது, மூன்றுமாதத்தில் அதன் வால் ஒன்றரை இஞ்ச் வளர்ந்துவிட்டது.

இது நடந்த ஒரு வாரத்திற்குள் இன்னும் இரண்டு நிகழ்ச்சிகளில் ப்ரௌனிக்குச் சிரிப்பதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது. முதலாவது இரவினில் நடந்தது. ஒன்பதரை மணி வாக்கில். அஷமஞ்சா பாபு அப்போதுதான் ப்ரௌனி படுப்பதற்காக வெள்ளை விரிப்பொன்றைத் தரையில் விரித்திருந்தார். ஒரு கரப்பான்பூச்சி எங்கிருந்தோ பறந்து வந்து சுவரில் அமர்ந்தது. அஷமஞ்சா பாபு தன் செருப்பை எடுத்து அதன்மீது வீசினார். செருப்பு

குறிதவறி மாட்டப்பட்டிருந்த கண்ணாடியில் இறங்கி, அதைக் கீழேயனுப்பி நொறுக்கியது. இம்முறை ப்ரௌனி சிரித்த சிரிப்பு, அவருடைய கண்ணாடி உடைந்ததற்கான இழப்பீட்டைவிட அதிகமானது.

இரண்டாவதுமுறை வந்தது பெருஞ்சிரிப்பல்ல, சின்னதாய் ஒரு எக்கலிப்பு. எதுவும் நடக்கவில்லையே என்று அஷமஞ்சா பாபுவுக்குக் குழப்பமாக இருந்தது. பிறகு ஏன் இந்தச் சிரிப்பு? அவரின் வேலையாள் பிபின் வந்ததும் அதற்கான விடை தெரிந்துவிட்டது. அவரைப் பார்த்ததும் புன்னகையோடு ''உங்கள் காதுக்குப் பக்கத்தில் ஷேவிங் சோப்பு ஒட்டியிருக்கிறது அய்யா'', என்றான். கண்ணாடி உடைந்து போனதால் சன்னல் கண்ணாடியில்தான் அவர் சவரம் செய்ய வேண்டியிருந்தது, கைகளை வைத்துப்பார்த்து பிபின் சொன்னது உண்மை என்று தெரிந்துகொண்டார்.

அற்பமான விஷயங்களுக்குக் கூட ப்ரௌனி சிரிக்கிறது என்பது அஷமஞ்சா பாபுவுக்கு ஆச்சரியமாகப் பட்டது. தபால் அலுவலகத்தில் அவர் மேசையில் அமர்ந்திருந்தபோது, அவர் சிந்தனை மீண்டும் மீண்டும் ப்ரௌனியின் முகத்திலிருந்த சிரிப்பிலும் அந்த எக்கலிப்பின் ஒலியிலுமே இருந்தது.

***

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், இந்தச் சாகசத்துக்குத்துணையிருக்கும்படி மௌனமாக, துர்க்கையை வேண்டிக்கொண்டு, பேராசிரியர் சாட்டர்ஜியின் வீட்டுக்குக் கிளம்பினார். பேராசிரியர் தான் வாசித்துக்கொண்டிருந்த செய்தித்தாளை வைத்துவிட்டு வந்திருப்பவரைக் கவனித்தார்.

"உன் முகம் பரிச்சயமானதாகத் தெரிகிறது."

"நான் இங்கே பக்கத்தில்தான் இருக்கிறேன்."

"அப்படியா? என்ன விஷயம், சொல்லு."

"உங்கள் வீட்டில் ஒரு நாயைப் பார்த்திருக்கிறேன்: அதனால்தான்..."

"அதனாலென்ன? எங்களிடம் இரண்டு இருக்கிறது ஒன்றல்ல."

"ஓ... என்னிடமும் ஒன்று இருக்கிறது."

"உனக்கு என்ன ஊரிலுள்ள நாய்களை எண்ணும் வேலையா?"

அஷமஞ்சா பாபு அந்தக்கேள்வியில் இருந்த எள்ளலைக் கவனிக்கவில்லை. "நான் தேடிக்கொண்டிருப்பது உங்களிடம் இருக்குமா என்று பார்க்கவந்தேன்," என்றார்.

"என்ன அது?"

"உங்களிடம் நாய்கள் பற்றிய என்சைக்ளோபீடியா இருக்கிறதா?"

"இல்லை. என்னிடம் இல்லை. அது உனக்கெதற்கு?"

"அதிலே பாருங்கள்... என் நாய் சிரிக்கிறது. ஆகவே, நாய்கள் இப்படிச் சிரிப்பது இயற்கையானதுதானா? என்று தெரிந்துகொள்ளவேண்டும். உங்களுடைய நாய்கள் சிரிக்கின்றனவா?"

அறையில் மாட்டியிருந்த கடிகாரம் எட்டு அடித்து ஓயும்வரை பேராசிரியர் நிலைகுத்திய பார்வையில் அஷமஞ்சா பாபுவைப் பார்த்தார். பிறகு "உன் நாய் இரவில் சிரிப்பதுண்டா?" என்று கேட்டார்.

"நிச்சயமாக, ஆமாம், இரவிலும்தான்."

"போதைவஸ்துக்கள் எடுத்துக் கொள்வாயோ?"

அஷமஞ்சா பாபு தனக்குள்ள ஒரே கெட்டபழக்கம் புகைபிடிப்பதுதான் என்று அடங்கிய குரலில் சொன்னார் – நாய் வந்ததிலிருந்து அதையும்கூட வாரத்திற்கு மூன்று பாக்கெட்டிலிருந்து இரண்டாக்கி விட்டதைத் தெரிவித்தார்.

"ஆனாலும் உன் நாய் சிரிக்கிறது என்கிறாய்?"

"அது சிரிப்பதை என் கண்களால் பார்த்தும் காதால் கேட்டுமிருக்கிறேன்."

"கவனி". பேராசிரியர் சாட்டர்ஜி தன் கண்ணாடியைக் கழற்றினார், அதைத் தன் கைக்குட்டையால் துடைத்து, மீண்டும் மாட்டிக்கொண்டு அஷமஞ்சா பாபுவை உன்னிப்பாகப் பார்த்தார். பிறகு வகுப்பில் விரிவுரையாற்றும் தொனியில் உணர்ச்சி முழக்கமிட்டார்:

"இயற்கையின் அடிப்படை விதிகள் குறித்து உனக்கிருக்கும் அறியாமையைக் கண்டு வியக்கிறேன். அனைத்து ஜீவராசிகளிலும் மனிதனே சிரிக்கத் தெரிந்தவன். ஏன் அப்படி இருக்கிறது என்று கேட்காதே, ஏனென்றால் எனக்குத் தெரியாது. கடலில் வாழக்கூடிய டால்பின்களுக்கு நகைச்சுவை உணர்வு உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். டால்பின்கள் மட்டும் ஒரேயொரு விதிவிலக்காக இருக்கலாம். மனிதர்கள் ஏன் சிரிக்க வேண்டும் என்பதும்தெளிவாகப்புரியவில்லை.எவ்வளவோ தத்துவவாதிகள் ஏனென்று மண்டையை உடைத்துக்கொண்டு யோசித்திருக்கிறார்கள், ஆனால் விடை தெரியவில்லை. உனக்குப் புரிகிறதா?"

அஷமஞ்சா பாபுவுக்குத் தெளிவாகப் புரிந்தது; கூடவே அவர் இப்போது அந்த இடத்தைக்காலி செய்ய வேண்டும் என்பதும் புரிந்தது, ஏனென்றால் பேராசிரியர் மீண்டும் செய்திதாளுக்குப் பின்னால் காணாமல் போயிருந்தார்.

டாக்டர் சுகோமோய் பௌமிக், நகரத்தில் சிறந்த மிருக வைத்தியர். மற்றவர்கள் காதுகொடுத்துக் கேட்காததை நிச்சயம் ஒரு மிருக வைத்தியர் கேட்பார் என்ற நம்பிக்கையில் அஷமஞ்சா பாபு அவரிடம் ப்ரௌனியை அழைத்துச் சென்றார். ப்ரௌனி கடந்த நான்கு

மாதத்தில் பதினேழுமுறை சிரித்திருக்கிறது. அவர் கவனித்தவரை சிரிக்கும்படியாக ஏதாவது சொன்னால் ப்ரௌனி சிரிப்பதில்லை; கோமாளித்தனமான நிகழ்வுகளுக்கு மட்டுமே சிரிக்கிறது. எனவே, அஷமஞ்சா பாபு, ஒருமுறைக்கு இருபது ரூபாய் வாங்கினாலும் பரவாயில்லை என அந்த மிருகவைத்தியரைப் பார்க்கப் போகிறார். நாயின் தனித்தன்மையான குணத்தைச் சொல்லும்முன்பே தோற்றத்தைப் பார்த்தவுடன் பௌமிக்கின் புருவம் உயர்ந்துவிட்டது.

"நாட்டுநாய்களை நிறையப் பார்த்திருக்கிறேன், ஆனால் இதுபோலப் பார்த்ததில்லை." என்றார்.

நாயைத் தூக்கி மேசையின்மீது வைத்தார். ப்ரௌனி தன் காலடியில் இருந்த பித்தளை பேப்பர் வெயிட்டை முகர்ந்து கொண்டிருந்தது.

"என்ன சாப்பிடக் கொடுப்பீர்கள்?"

"நான் சாப்பிடும் எல்லாமும் சாப்பிடுவான் சார், உயர் ஜாதி நாய் இல்லையே!"

அஷமஞ்சா பாபு தான் அங்குவந்ததற்கான உண்மையான காரணத்தைச் சொல்ல ஆயத்தமானார். "நான் வந்து என் நாயிடம் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது... அதனால்தான் உங்களிடம் கொண்டுவந்தேன்."

"முக்கியத்துவமா?"

"இந்த நாய் சிரிக்கிறது."

"சிரிக்கிறதா...?"

"ஆமாம், சிரிக்கிறது. உங்களையும் என்னையும் போல."

"நம்பமுடியவில்லை! இப்போது சிரிக்கவைக்க முடியுமா, நான் பார்க்க வேண்டும்?"

அஷமஞ்சா பாபு டாக்டரிடம் ப்ரௌனி சிரிக்கச்சொன்னால்சிரிக்காது என்றும்ஏதாவது சிரிக்கும்படியான சம்பவம் நடக்கவேண்டும் என்று விளக்கினார். அதன்பிறகு டாக்டர் பௌமிக்குக்கு, அஷமஞ்சா பாபுவிடம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. "உன் நாய் ஏற்கெனவே போதுமான அளவு விநோதமாயிருக்கிறது; அது சிரிக்கிறது என்று சொல்லி இன்னும் விநோதமாக்க வேண்டாம்.

என்னுடைய இருபத்தியிரண்டு வருட அனுபவத்தில் சொல்கிறேன், நாய்கள் அழும், பயப்படும், கோபம், வெறுப்பு, நம்பிக்கையின்மை மற்றும் பொறாமையை வெளிப்படுத்தும். நாய்கள் கனவுகூடக் காணும் ஆனால் சிரிக்காது."

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, அஷமஞ்சா பாபு யாரிடமும் ப்ரௌனியின் சிரிப்புபற்றிப் பேசவேண்டாம் என்று முடிவெடுத்துவிட்டார். யாருக்கும் இந்த விஷயம் தெரியாமல் போனால்தான் என்ன? அவருக்குத் தெரியும். ப்ரௌனி அவருடைய நாய், அவரின் சொத்து. அவர்களின் தனிப்பட்ட உலகத்தில் வெளியாட்களை இழுப்பானேன்?

***

ஆனால்விஷயங்கள்நம்விருப்பத்திற்கேற்ப நடப்பதில்லை. ஒருநாள் ப்ரௌனியின் சிரிப்பு வெளியாள் ஒருவருக்குத் தெரிந்துவிட்டது.

சிலநாட்களாகவே அஷமஞ்சா பாபு, ப்ரௌனியை மதியநேரங்களில் விக்டோரியா மெமோரியல் அருகே நடைக்கு அழைத்துச்செல்லும் பழக்கத்திற்கு ஆளாயிருந்தார். ஒரு ஏப்ரல் நாளில், நடையின் நடுவே, திடீரென்று புயல்காற்று ஆரம்பமானது. அஷமஞ்சா பாபு வானத்தைப் பார்த்து, வீட்டுக்குத் திரும்புவது பாதுகாப்பானதல்ல, எந்தநேரமும் மழை வந்துவிடலாம் என்று கணித்தார். எனவே ப்ரௌனியுடன் பளிங்கு வளைவோடு கூடிய கருப்புநிறக் குதிரைவீரன் சிலையின் கீழ் ஒதுங்குவதற்காக விரைந்தார்.

இதற்கிடையே, மழை பெருந்துளிகளாக விழ ஆரம்பித்ததும் மக்கள் ஒதுங்க இடம் தேடத்தொடங்கினர். வளைவுக்கு

இருபதடி தள்ளி, வெள்ளைச்சட்டையும் ட்ரவுசரும் அணிந்த ஒரு குண்டான மனிதர் தன் குடையை விரித்தபோது திடீரெனக் காற்றின் வேகம்கூடி குடையைத் தலைகீழாக்கியது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அஷமஞ்சா பாபு வெடித்துச் சிரிக்க இருந்தார், ஆனால், ப்ரௌனி அவரை முந்திக்கொண்டு சத்தமாகப் புயல்காற்றின் சத்தத்தையும் மீறி வெடிவெடித்ததுபோலச் சிரித்தது அந்தப் பரிதாபமான நபருக்கும் கேட்டுவிட்டது. அம்மனிதர் குடையை மடிப்பதை விட்டுவிட்டு வியப்புடன் ப்ரௌனியைப் பார்க்க ஆரம்பித்தார். ப்ரௌனியால் தனது சிரிப்பை அடக்கமுடியவில்லை.

"சிரிக்கும் நாய்."

"ஆமாம், சிரிக்கும் நாய்." என்றார் அஷமஞ்சா பாபு.

"ஆனால், இது எவ்வளவு விநோதமானது."

தூறல் இப்போது கனமான மழையாகிவிட்டிருந்தது. அஷமஞ்சா பாபுவோடு மழைக்கு ஒதுங்கியிருந்த அக்கனவான் போக்கன்வாலா, பத்தே நிமிடத்தில் ப்ரௌனியைப் பற்றி என்னவெல்லாம் உண்டோ எல்லாமும் தெரிந்து கொண்டுவிட்டார். தான் எப்பேர்ப்பட்ட அதிசயச் சுரங்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று அஷமஞ்சா பாபுவுக்கே தெரியவில்லை, இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

***

சிரிக்கும்நாய் பற்றிய சம்பவத்தைக் கேள்விப்பட்டவர்களில் ஸ்டேட்ஸ்மேன் பத்திரிக்கையின் உயரதிகாரியும் ஒருவர். அஷமஞ்சா பாபுவைப் பேட்டியெடுக்கும்படி நிருபரான ரஜத் சௌத்ரியை அனுப்பினார்.

ஒரு நிருபர் தன்னைச் சந்திக்க நினைத்ததே அஷமஞ்சா பாபுவுக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது. அஷமஞ்சா பாபு, நிருபரைத் தனது படுக்கையறைக்குள் அழைத்து வந்தார். அந்த மரநாற்காலி இப்போது சரிசெய்யப்பட்டுப் புதிய கால் பொருத்தப்பட்டிருந்தது. அஷமஞ்சா பாபு நிருபரை அதில் அமரும்படி சொல்லிவிட்டுத் தான் படுக்கையில் அமர்ந்துகொண்டார். ப்ரௌனி, சுவரில் ஏறிக்கொண்டிருந்த எறும்புகளின் வரிசையொன்றைக் கவனித்துக் கொண்டிருந்தது; இப்போது உடனே படுக்கையில் தவ்வி அஷமஞ்சா பாபுவுக்கு அருகே அமர்ந்து கொண்டது.

ரஜத் சௌத்ரி தனது ரெக்கார்டரின் பொத்தானை அழுத்தப் போகும்போது ஒரு எச்சரிக்கையை முன்பே கொடுத்துவிடுவது நல்லது என்று அஷமஞ்சா பாபுவுக்குத் தோன்றியது. எனவே, "அதாவது சார், என்னுடைய நாய் முன்பெல்லாம் அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தது, ஆனால், கடந்த சில மாதங்களாகச் சிரிக்கவே இல்லை. ஒருவேளை நீங்கள் அது சிரிப்பதைப் பார்க்கவேண்டுமென வந்திருந்தால் அது உங்களுக்கு ஏமாற்றமாக அமையலாம்," என்றார்.

"அதனாலென்ன, பரவாயில்லை. நான் உங்களிடமிருந்து சில விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் அவ்வளவே. ஆரம்பிக்கும் முன், நீங்கள் உங்கள் நாயை என்னவென்று கூப்பிடுகிறீர்கள்?"

அஷமஞ்சா பாபு மைக்கின் அருகில் செல்வதற்காகக் கழுத்தை நீட்டி, "ப்ரௌனி" என்றார். "ப்ரௌனி..." நிருபரின் கழுகுக்கண்கள் நாய் தன் பெயரைச் சொன்னதும் வாலாட்டுவதைக் கவனித்தன.

"இவனுக்கு என்ன வயதாகிறது?"

"பதிமூன்று மாதம்."

"இந்த நாயை எ-எ-எங்கே கண்டெடுத்தீர்கள்?"

அவர் அப்படித் திக்கியது எதிர்பாராத விதமாக ப்ரௌனியின் அதிசயமான குணத்தை வெளிக்கொண்டு வர உதவியது. அந்தவகையில் போக்கன்வாலாவுக்கு அடுத்து ப்ரௌனியின்

மனிதர்களைப் போன்ற சிரிப்பைக் கண்ணால் பார்த்த வெளிநபர் ரஜத் சௌத்ரிதான்.

அடுத்துவந்த ஞாயிறு காலை, ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகை சிரிக்கும் நாய் பற்றியும் அதற்குச் சொந்தமானவரின் முகவரியையும் கொடுத்திருந்தது. அஷமஞ்சா பாபு ஸ்டேட்ஸ்மேனைப் படிக்கவில்லை.. அவரது அண்டை வீட்டுக்காரரான காளிகிருஷ்ண தத், மீன் மார்க்கெட்டில் வைத்து அதைப்பற்றிச் சொன்னார்.

"நீங்கள் ஒரு நல்ல குணமுள்ள மனிதர்," என்றார் திரு. தத். "இப்படி ஒரு பொக்கிஷத்தை ஒரு வருஷத்திற்கும் மேலாக வீட்டிலேயே வைத்திருக்கிறீர்கள், அதைப்பற்றி யாரிடமும் மூச்சுக்கூட விடவில்லையே? இன்றைக்குச் சாயங்காலம் போல உங்கள் வீட்டுக்கு வந்து உங்கள் நாய்க்கு ஒரு ஹலோ சொல்லியே ஆகவேண்டும்." அஷமஞ்சா பாபுவின் இதயம் கலவரமானது. நிச்சயமாக இதுவொரு பிரச்சினையாக ஆகப்போகிறது என்று அவருக்குத் தெரிந்தது. திரு.தத் போலவே அக்கம்பக்கத்தில் நிறையபேர் ஸ்டேட்ஸ்மேன் வாசிப்பவர்கள்தான், எல்லோரும் அவர் வீட்டுக்கு வந்து அவரது நாய்க்கு ஹலோ சொல்ல விரும்புவார்கள்.

அஷமஞ்சா பாபு உடனடியாகச் சுதாரித்துக் கொண்டு, அன்றைய நாளை வீட்டிலிருந்து தள்ளி இருந்தபடி கழிப்பது என்று முடிவு செய்தார். எனவே, ப்ரௌனியைத் தனது கக்கத்தில் இடுக்கியபடி, வாழ்வில் முதன்முறையாக ஒரு டாக்சியில் ஏறி, நேராக பாலிகஞ்ச் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கிருந்து போர்ட் கேனிங் செல்லும் ரயிலில் ஏறிக்கொண்டார். பாதிதூரம் சென்றதும் ரயில் பால்சிட் என்ற ஸ்டேஷனில் நின்றது. அந்த இடம் பார்க்கப் பிடித்திருந்ததால் அஷமஞ்சா பாபு அங்கேயே இறங்கிக் கொண்டார். அன்றைய நாள் முழுவதையும் அமைதியான மூங்கில் தோட்டத்திலும் மாந்தோப்பிலும் கழித்தபின் புத்துணர்ச்சியை உணர்ந்தார். ப்ரௌனியும் அந்த இடத்தை நன்றாக ரசிப்பது போலிருந்தது. அதன் இதழ்க்கடையில் தவழ்ந்த மெல்லிய புன்னகை இதற்குமுன் அஷமஞ்சா பாபுவே பார்த்திராதது. அதுவொரு மாசற்ற புன்னகை, அமைதியின், மனநிறைவின் புன்னகை. சுற்றியும் மரங்களடர்ந்த இதுபோன்ற இடத்தில் இவ்வளவு

அமைதியான நடத்தையை ஏழு வயது மனிதக் குழந்தையிடம் எதிர்பார்க்க முடியாது என்று அவருக்குத் தோன்றியது.

***

அஷமஞ்சா பாபு வீட்டிற்குள் நுழையும்போது மணி ஏழைத் தாண்டியிருந்தது. யாரேனும் அழைத்திருந்தார்களா என்று பிபினிடம் கேட்டார். குறைந்தது நாற்பது முறை அவரைத்தேடி வந்தவர்களுக்காகக் கதவைத் திறக்க வேண்டியிருந்தது என்றான். அஷமஞ்சா பாபுவால் தன்னுடைய முன்னெச்சரிக்கைக்காகத் தன்னைத்தானே பாராட்டிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஷூவைக் கழற்றியபடி பிபினிடம் ஒரு டீ கேட்டபோது யாரோ கதவைத் தட்டினார்கள். "அடச் சை!" என்று நொந்து கொண்டார் அஷமஞ்சா பாபு. கதவைத் திறந்ததும் அவர் பார்த்தது ஒரு வெள்ளைக்காரரை. "ராங் நம்பர்." என்று சொல்ல நினைத்து, பின்னால் நின்றிருந்த பெங்காலிக்காரரைப் பார்த்ததும் "யார் வேண்டும்?" என்றார்.

"நீங்கள்தான்," என்றார் இந்தியச் சுற்றுலாத்துறையைச் சேர்ந்த ஷ்யாமோல் நேண்டி, "அதாவது, உங்களுக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கும் நாய் உங்களுடையது என்றால், இன்றைக்குப் பேப்பரில் எப்படிச் சொல்லியிருந்ததோ அப்படியே இருக்கிறது. நாங்கள் உள்ளே வரலாமா?"

அஷமஞ்சா பாபு அவர்களைத் தனது படுக்கையறைக்குள் வரும்படி பெருந்தன்மையோடு அழைக்க வேண்டியதாயிற்று. அந்த வெளிநாட்டுக்காரர் நாற்காலியில் அமர்ந்து கொண்டார், திரு.

நேண்டி பிரம்பு முக்காலியில் அமர்ந்துகொள்ள, அஷமஞ்சா பாபு தன் கட்டிலில் அமர்ந்து கொண்டார். ப்ரௌனி சற்றே அசௌகரியமாகத் தென்பட்டது, அறையின் வாசற்படிக்கு வெளியிலேயே நின்று கொண்டது; அறைக்குள் இரண்டு அந்நியர்கள் இருப்பதை அது இதற்குமுன் பார்த்ததில்லை என்பதால் இருக்கலாம்.

"ப்ரௌனி! ப்ரௌனி! ப்ரௌனி! ப்ரௌனி!" வெளிநாட்டுக்காரர் அறைக்குள் அதை வரவைப்பதற்காக அதை நோக்கிக் குனிந்து மீண்டும் மீண்டும் கூப்பிட்டுப் பார்த்தார். ப்ரௌனி அந்த அந்நியரை உறுத்துப் பார்த்தபடி நகராமல் நின்றது.

யார் இவர்களெல்லாம்? என்று இயல்பாக அஷமஞ்சா பாபுவுக்குள் எழுந்த கேள்விக்கு திரு. நேண்டி பதிலளித்தார். அந்த வெளிநாட்டுக்காரர் அமெரிக்காவின் குறிப்பிடத்தகுந்த பணக்காரர், இந்தியாவுக்குப் பழைய ரோல்ஸ் ராய்ஸ் கார்களை வாங்குவதற்காக வந்திருக்கிறார்.

அந்த அமெரிக்கர் இப்போது நாற்காலியிலிருந்து எழுந்து குத்துக்காலிட்டு அமர்ந்தபடி நாய்க்கு முன்னால் விதவிதமான முகச்சேட்டைகளைச் செய்து கொண்டிருந்தார்.

மூன்று நிமிட தோல்விகரமான கோமாளித்தனங்களுக்குப்பின் முயற்சியைக் கைவிட்டு அஷமஞ்சா பாபுவைப் பார்த்து, "இதற்கு உடம்பு ஏதும் சரியில்லையா?" என்றார்.

அஷமஞ்சா பாபு இல்லையெனத் தலையசைத்தார்.

"இவன் உண்மையிலேயே சிரிப்பானா?" என்றார் அமெரிக்கர்.

அஷமஞ்சா பாபுவுக்கு அமெரிக்கப் பேச்சு புரியுமோ புரியாதோ என திரு.நேண்டி அவருக்காக மொழிபெயர்த்தார்.

"ப்ரௌனி சிரிக்கும்," என்றார் அஷமஞ்சா பாபு, "ஆனால், அது வேடிக்கையென்று எதையாவது உணர்ந்தால்தான்."

அஷமஞ்சா பாபுவின் பதிலை நேண்டி மொழிபெயர்த்துச் சொன்னபோது அமெரிக்கரின் முகத்தில் செம்மை படர்ந்தது. தெளிவாகத் தெரியாத சூழ்நிலையில், அந்த நாய் சிரிக்கக்கூடியது என்ற நிரூபணம் கிடைக்காத வரையில் அவர் அந்த நாய்க்காகப் பணத்தை வீசியடிக்க விரும்பவில்லை. பின்னால் அவரைத் தர்மசங்கடப்படுத்தக் கூடிய எந்தவொரு நிலையையும் அவர் உருவாக்கிக் கொள்ளத் தயாராக இல்லை. மேலும், தனது வீட்டில் சீனத்திலிருந்து பெரு வரை உள்ள அரிதான பொருட்களும், லத்தீன் மொழி மட்டுமே பேசக்கூடிய கிளியும் வைத்திருக்கிறார். "சிரிக்கும் நாயை வாங்குவதற்காக என்னுடைய செக் புத்தகத்தைக் கையோடு எடுத்து வந்திருக்கிறேன், ஆனால், அது உண்மையிலேயே சிரிக்கும் என்ற ஆதாரம் கிடைக்கவேண்டும்." என்றார்.

பிறகு தான் சொன்னதை நிரூபிக்கும் விதமாக தனது பாக்கெட்டிலிருந்து நீலநிற செக் புத்தகம் ஒன்றை வெளியிலெடுத்துக் காட்டினார். சிட்டி பேங்க் ஆஃப் நியூயார்க் என்று அதன்மேல் எழுதியிருந்தது.

"அதன்பிறகு நீங்கள் காற்றில் மிதப்பீர்கள்," தூண்டும் விதமாகக் கூறினார் திரு.நேண்டி. "அந்த நாயைச் சிரிக்க வைக்கும் விதம் உங்களுக்குத் தெரிந்தால் போதும். இந்தக் கனவான் 20,000 டாலர்கள் தரத் தயாராக இருக்கிறார். அதாவது இரண்டு லட்சம் ரூபாய்கள்."

திரு.நேண்டியின் வார்த்தைகள் அஷமஞ்சா பாபுவின் மனதில் உருவாக்கிய சித்திரங்கள், அவர் ஒரு விசாலமான குளிரூட்டப்பட்ட அறையில் இருக்கிறார், சுழலும் நாற்காலியில் அமர்ந்தபடி, கால்கள் மேசைமீது இருக்க, ஹசுநோ-ஹானாவின்* நறுமணம் அறையை நிறைக்கிறது. ஆனால், அடுத்த நொடி இந்தச் சித்திரம் திடீரென்று எழுந்த ஒரு ஒலியால்

ஊசியால் குத்தப்பட்ட பலூன்போல மறைந்தது. ப்ரௌனி சிரித்துக் கொண்டிருந்தது.

அது இதற்குமுன் சிரித்த எந்தச் சிரிப்பையும் போல் இல்லை. "ஆமாம் இந்த நாய் சிரிக்கிறது."

திரு. மூடி முழங்காலிட்டு அமர்ந்தபடி, பரவசத்தினால் உண்டான பதட்டத்தோடு அந்த அபூர்வமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். செக் புக் மீண்டும் வெளியே வந்தது, அதோடு, அவருடைய தங்க பார்க்கர் பேனாவும் வந்தது.

ப்ரௌனி இன்னமும் சிரித்துக் கொண்டிருந்தது. அஷமஞ்சா பாபுவுக்கு அதன் சிரிப்பிற்கான காரணம் புரியவில்லை, யாரும் திக்கவில்லை, யாரும் தடுமாறி விழவில்லை, யாருடைய குடையும் காற்றில் திரும்பவில்லை, சுவரில் உள்ள எந்தக் கண்ணாடியிலும் செருப்பு விழவில்லை. ஆனால் ஏன் ப்ரௌனி சிரிக்கிறது?

"திரு. மூடி இப்போது தரையிலிருந்து எழுந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டார். "அவர் தன்னுடைய பெயரை எப்படி எழுதுகிறார் என்று கேள்." என்றார்.

திரு.நேண்டி அக்கேள்வியை பெங்காலியில் ஒலிபரப்பிய பின்னரும் அஷமஞ்சா பாபு பதில் கூறவில்லை, காரணம் இப்போதுதான் அவர் ஒர் ஒளியைக் கண்டிருந்தார், அவ்வொளி அவரது இதயத்தை வியப்பினால் நிறைத்திருந்தது. தன்னுடைய பெயரை எப்படி எழுதவேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக, பெங்காலியில், "அந்தக் கனவானிடம் சொல்லுங்கள். உண்மையில் அந்த நாய் ஏன் சிரித்தது என்று தெரிந்தால் அவர் தனது செக் புத்தகத்தைத் திறந்திருக்க மாட்டார்." என்றார்.

வறண்ட குரலில் கூர்மையாக "ஏனென்று நீங்கள் சொல்லலாமே?" என்றார் திரு. நேண்டி. ப்ரௌனி ஒருவழியாகச் சிரிப்பதை நிறுத்தியிருந்தது. அஷமஞ்சா பாபு அதைத் தூக்கி, தன் மடியில் வைத்துக்கொண்டு, அதன் கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சொன்னார், "என்னுடைய நாய் ஏன் சிரிக்கிறதென்றால், இந்தக் கனவான் பணத்தால் எல்லாவற்றையும் வாங்கமுடியும் என்று நம்புகிறார்."

"ஓஹோ," என்றார் திரு. நேண்டி. "அப்படியென்றால் உன்னுடைய நாய் ஒரு தத்துவவாதி, அப்படித்தானே?"

"ஆமாம், சார்."

"அதன் அர்த்தம் அந்த நாயை நீ விற்கமாட்டாய் என்பதா?" நேண்டியின் முகம் இறுகியது.

"மாட்டேன் சார்."

திரு.மூடியிடம் ஷ்யாமோல் நேண்டி நாயின் உரிமையாளருக்கு அதை விற்கும் எண்ணம் இல்லை என்று மட்டும் சொன்னார்.

திரு.மூடி செக் புத்தகத்தை மீண்டும் தனது பாக்கெட்டில் வைத்துக்கொண்டு, முழங்காலில் இருந்த தூசியைத் தட்டிவிட்டு, அறையிலிருந்து வெளியேறும் வழியில் தலையை அசைத்தபடி கூறினார். "இந்த ஆள் பைத்தியமாகத்தான் இருக்கவேண்டும்."

அமெரிக்கரின் கார் சத்தம் தேய்ந்து மறைந்தபிறகு அஷமஞ்சா பாபு ப்ரௌனியின் கண்களைப் பார்த்தபடி கேட்டார், "நீ ஏன் சிரித்தாய் என்பதற்கு நான் சரியான முறையில் விளக்கம் கொடுத்தேன் இல்லையா?"

ப்ரௌனி ஆமோதிப்பாக மெல்லச் சிரித்தது.

***

* ஜப்பானிய பெர்ஃப்யூம். தாமரை மற்றும் அல்லி மலர்களிலிருந்து தயாரிக்கப்படும் புராதனமான வகை வாசனைத் திரவியம்.

வங்காள மூலமும் ஆங்கில மொழியாக்கமும் – சத்யஜித் ரே

தமிழில் – ஸ்ரீதர்ரங்கராஜ்

படைப்பு முகம்

சத்யஜித் ரே (1921–1992): உலகப்புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இயக்குநர். இவர் படைத்துள்ள சிறுகதைகளும் புதினங்களும் புகழ்பெற்றவை. குழந்தைகளுக்கான கற்பனை மற்றும் துப்பறியும் கதைகளையும் எழுதியுள்ளார். அறிவியல் புனைகதைகளில் இவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.



படிப்போம் பகிர்வோம்

1. அசமஞ்சாபாபுவின் நாய் சிறுகதையில் வரும் பின்னோக்கு உத்தியை எழுதுக.
2. பிரெளனி நாய்க்குட்டியின் முதல் மூன்று சிரிப்புகளுக்கும் கடைசி சிரிப்பிற்கும் உள்ள வேற்றுமையை விளக்குக.
3. அசமஞ்சாபாபுவிடம் காசோலையைக் கொடுத்துப் பிரெளனி நாய்க்குட்டியைத் திரு. மூடி பெற்றுச் செல்வதாக நினைத்து, கதையை நிறைவு செய்க.
4. அசமஞ்சாபாபுவின் பாத்திரப்படைப்பைத் திறனாய்வு செய்க..
5. 'அசமஞ்சாபாபுவின் நாய்' கதையின் கருப்பொருளும் சுவையும் குறையாமல் ஒரு பக்க அளவில் சுருக்கி எழுதுக.
6. பணத்திற்காக எதையும் செய்யலாமா? உன் முடிவிற்கான காரணங்களை 'அசமஞ்சாபாபுவின் நாய்' சிறுகதை கொண்டு விளக்குக.

அறிவோம் தெளிவோம்

ரே – இந்திய சினிமாவின் முகம்

உலக அளவில் இந்தியத் திரைப்படக்கலை புகழ்பெற காரணமானவர்களில் முக்கியமானவர் சத்யஜித் ரே. திரைப்பட இயக்குநர், எழுத்தாளர், இசையமைப்பாளர், தயாரிப்பாளர் எனப் பன்முகம்கொண்ட ரே, தன் திரைச் சாதனைகளுக்காக ஆஸ்கர், மகசேசே போன்ற உலகப்புகழ்பெற்ற விருதுகளைப் பெற்றவர். இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

'பதேர் பாஞ்சாலி'யில் ஒரு காட்சி

ரேயின் முதல் திரைப்படமான 'பதேர் பாஞ்சாலி' (1955) உலகளாவிய திரைக்கலை வல்லுநர்களால் வியந்து போற்றப்பட்டது .கேன்ஸ் திரைப்பட விழா, சான்ஃப்ரான்சிஸ்கோ திரைப்பட விழா உள்ளிட்ட பல உலகப் பட விழாக்களில் "பதேர் பாஞ்சாலி"திரையிடப்பட்டு விருதுகளைக் குவித்தது. பதேர் பாஞ்சாலிக்குப் பிறகு, தொடர்ந்து சிறந்த படங்களை இயக்கினார். அகந்துக், ஷகா புரொஷகா, ஞானஷத்ரு, சுகுமார் ராய், காரே பைரே, பிக்கூர் டைரி', பாலா, கூப்பி கைன் பாகா பைன், ரவீந்திரநாத் தாகூர், பரஷ் பதர், அபராஜிதோ உள்ளிட்ட 29 திரைப்படங்களையும் 8 ஆவணப்படங்களையும் இயக்கியுள்ளார். இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். ரே வாழ்ந்த காலத்திலேயே அவரைப் பற்றி 15க்கும் மேற்பட்ட ஆவணப்படங்கள் தயாரிக்கப்பட்டன.

குறுங்கதை

ரப்பர் பந்து

– எஸ்.ராமகிருஷ்ணன்

மரபான கதைசொல்லலில் நவீனப் புனைகதையின் வடிவத்தை இணைத்துக் குறுகிய வடிவில் தரும் முயற்சியே குறுங்கதை.

சி.எல்.பி. பள்ளியின் மைதானத்தில் தனது பன்னிரண்டு வயதில் தொலைத்த பந்தைத் தேடி, அறுபத்து ஏழாவது வயதில் ஊருக்குச் சென்றார் நாராயணன்.

அதைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை என்ற போதும் மனது அந்தப் பந்தை எப்படியாவது கண்டுபிடித்துவிட வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தது. அந்தப் பந்தை அவர் அடித்தபோது மாலை நான்கு மணியிருக்கும். ரப்பர் பந்து பறந்து வேப்பமரத்தின் பின்னால் போய் விழுந்தது. பின்பு அது எவர் கண்ணிலும் படவேயில்லை. என்னவாகியிருக்கும்.

யாராவது பந்தை எடுத்திருப்பார்கள். அல்லது அருகிலுள்ள கிணற்றினுள் விழுந்து கிடந்திருக்கக்கூடும். மரக்கிளையில் சிக்கி நின்றிருக்கவும் சாத்தியமுண்டு. அல்லது வானில் இருந்து அரூபத்தின் கை ஒன்று அந்தப் பந்தைப் பறித்துத் தனதாக்கிக் கொண்டிருக்கவேண்டும்.

இந்த நான்கில் அரூபத்தின் கையைத்தான் அவர் அதிகம் நம்பினார்.

மைதானத்தில் தன்னுடைய பந்தைத்

தொலைக்காத சிறுவர்கள் யாராவது உலகில் இருக்கிறார்களா என்ன?

அவர் தொலைத்த பந்தின் நிறம், அதில் ஒட்டியிருந்த தூசிவரை யாவும் நினைவில் அப்படியே இருந்தது. சி.எல்.பி. மைதானத்தில் புழுதி பறந்து கொண்டிருந்தது. அன்று தன்னோடு விளையாடிக் கொண்டிருந்தவர்களில் எவரையும் இன்றுவரை திரும்பச் சந்திக்கவேயில்லை.

மைதானம் காலியாகக் கிடந்தது. முன்பு பார்த்த மரங்கள் இல்லை. கிணறுகூட மூடப்பட்டு, அந்த இடத்தில் கழிப்பறைக் கட்டடம் ஒன்றிருந்தது.

மைதானத்தின் வெற்றிடம் விளையாட்டினை நினைவுபடுத்தியது.

அவர் பந்து விளையாட்டிலிருந்து விடுபட்டு நாற்பது வருடங்களுக்கும் மேலாகியிருந்தது.

திடீரெனக் காற்றில் கைவீசி ஒரு பந்தை அடித்தார். அது காற்றிலே ஓடி மறைந்தது.

நீண்ட பெருமூச்சின் நடுவே தூரத்துக் காட்சியொன்றைப் பார்த்தார்.

ஊதா நிற யூனிபார்ம் அணிந்த யாரோ ஒரு சிறுவன் தொலைந்த பந்தைத் தேடிக் கொண்டிருந்தான்.

மிக ஆறுதலாக இருந்தது. அவர் சந்தோஷத்துடன் வீடு திரும்பத் தொடங்கினார்.

படைப்பு முகம்

எஸ். ராமகிருஷ்ணன் (1966): நவீனத் தமிழ் இலக்கியத்தின் பிரபலமான எழுத்தாளரான இவர், புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், குழந்தைகளுக்கான ஆக்கங்கள், திரைக்கதை, திரைப்பட உரையாடல்கள் உள்ளிட்ட படைப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதோடு, தமது உரைகள், பத்திகள் மூலமாகச் சிறந்த இலக்கியங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியும் வருகிறார். இக்கதை 'நகுலன் வீட்டில் யாருமில்லை' என்ற தொகுப்பிலிருந்து தரப்பட்டுள்ளது.

படிப்போம் பகிர்வோம்

1. பல ஆண்டுகளுக்குப் பிறகு நீர் படித்த தொடக்கப் பள்ளிக்குச் செல்கிறீர். அப்போது உமக்குத் தோன்றும் எண்ண ஓட்டங்களை எழுதுக.

நுண்கதைகள்

பனித்துளியின் பேச்சு

– ஹெச்.ஜி. ரசூல்

இங்கு நவீனத் தமிழ்க் கதையின் புதிய வடிவமான நுண்கதைகள் தரப்பட்டுள்ளன.

கவிதை, கதை, நாவலுக்குமான வரையறைகளை அழித்துத் தொடக்கம், நடு, முடிவு என்றேதுமில்லா நேரற்ற வரிசை கொண்டவை நுண்கதைகள். இவை வேடிக்கை, விநோதம், பகடி, குறியீடு ஆகிய அம்சங்கள் நிறைந்தவை. மேலும், கவித்துவ மொழியையும் மெய்யியல் உள்ளடக்கத்தையும் கொண்டவை.

அதிகாலை வரவேற்று ஒரு கவிதையை வாசித்தது. பூவின் இதழ்களிலும் புல்லின் நுனியிலும் உட்கார்ந்திருந்த பனித்துளி தன்னில் பிரபஞ்சத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

குழந்தைகள் விளையாட்டுப் போக்கில் ஊதிப் பறத்திவிடும் குமிழியாகவும் அது இல்லை.

இருள் விலகத் தொடங்கியபோது, கர்வத்தோடு அருகே வந்த இளவெயில் சொன்னது.

உன்னை நான் சாப்பிடப் போகிறேன்.

எதுவும் பேசாமல் மவுனம் காத்தது பனித்துளி.

துளியாய் இருந்தபோது என்னைத் தொந்தரவு செய்தாய். ஆவியாகிக் காற்றில் கரைந்துவிட்டேன். இப்போது என்னை நீ என்ன செய்யமுடியும்?

படைப்பு முகம்

ஹெச்.ஜி. ரசூல் (1959 – 2017): பெண்கள் மீதான ஒடுக்குமுறை சார்ந்த கருத்துகளைத் தமது எழுத்துகளால் தகர்த்தெறிந்தவர் இவர். மைலாஞ்சி, பூட்டிய அறை, ஜனகணமன, என் சிறகுகள் போன்றவை இவரது புகழ்பெற்ற படைப்புகள். போர்ஹேயின் வேதாளம் இவரது நுண்கதைத் தொகுப்பு.

படிப்போம் பகிர்வோம்

உமக்குப் பிடித்த கவிதை ஒன்றினை நுண்கதையாக எழுதுக.

ஒற்றைக்குரல்

– இளங்கோ கிருஷ்ணன்

அவன் பாணன். செவியே மனமாய் வாழ்ந்து கொண்டிருப்பவன். ஒலியின் உதடுகள் பேசும் மர்ம மொழியின் வசீகரத்தில் புத்திசொக்கித் திரிபவன். திசையெங்கும் ஒரு வானம்பாடியாய்ச் சுற்றி அலைபவன்.

அலைதலின் வெம்மையில் நாவறள, அவள் வீட்டு வாசலில் போய் நின்றான். தாயே தாகமாய் உள்ளது சிறிது நீர் கொடுங்கள் என்றவன், அவள் உள்ளே செல்லும் போதுதான் அந்த வினோதத்தைக் கவனித்தான்.

திரும்பி வந்தவளிடம் "இரண்டு கால்களையும் நன்றாகவூன்றித்தானே நடக்கிறீர்கள்?" என்று கேட்டான். பிறகு, அவளின் காற்சிலம்புகளை வாங்கிக் காதருகே கொண்டுபோய் ஆட்டியாட்டிச் சோதித்தான்.

அவன் செய்கையின் காரணம் புரியாதவள் அவை மாணிக்கப் பரல்களால் ஆனவை என்றாள்.

அறிவேன் தாயே. இவை மாணிக்க அரிகள் என ஜதி சொல்கிறது. ஆனால், இரண்டிற்கும் ஓசை வேறுபடுகிறது. இரண்டிலுமுள்ள பரல்களில் ஒன்றே ஒன்று மட்டும் ஓசை எழுப்புவதே இல்லை என்று ஆச்சர்யப்பட்டவன் அதை அவளிடமே திருப்பித் தர, கைநழுவியது.

அது தரையில் மோதியபோது அந்த நகரம் ஒருமுறை நடுங்கியது.

படைப்பு முகம்

இளங்கோ கிருஷ்ணன் (1979): காயசண்டிகை, பட்சியின் சரிதம், பவீருக்கு ஆயிரம் வேலைகள் தெரியும் ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர். நுண்கதை வடிவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்த முயற்சி செய்பவர்களுள் ஒருவர்.

படிப்போம் பகிர்வோம்

1. ஒற்றைக் குரல் நுண்கதை படித்ததும் உன் நினைவில் வருகின்ற தமிழ் இலக்கிய நிகழ்வு பற்றி எழுதுக.
2. ஒற்றைக் குரல் கதையில் வரும் பாணனின் இயல்புகளை எழுதுக.

கண்ணாடி

9BUN9C

பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஜெயகாந்தனின் 'பூ உதிரும்' கதையின்படி கீழ்க்காண்பவை எதனோடு தொடர்புபடுத்தப்படுகின்றன?

   1. அரும்புமீசை - அ) சுருட்டுப்புகை

   2. முறுக்குமீசை - ஆ) முதல் உலகப்போர்

   3. நரைத்தமீசை - இ) இரண்டாவது உலகப்போர்

   4. பழுப்பேறியமீசை - ஈ) தளர்ந்த உடல்

   அ) 1- ஆ, 2- இ, 3- ஈ, 4-அ ஆ) 1-ஆ, 2- அ, 3-ஈ 4- இ

   இ) 1- அ, 2- இ, 3- ஈ, 4-ஆ ஈ) 1-இ, 2- ஆ, 3-ஈ 4- அ

2. "உனக்கு ஒரு அப்பா கிடைப்பாருடா கண்ணா" – யார்? யாரிடம் கூறியது?

   அ) அம்மா கேசவனிடம் ஆ) மரகதம் சோமநாதனிடம்

   இ) பேபிகுட்டி சிறுவனிடம் ஈ) சரோஜா பிரக்கனிடம்

3. 'நசுக்கம்' கதையில், 'அவள் சல்சல் என்று தட்டி ஆட்டம் போட்டு நடித்துக் காட்டினாள்'. இதில் 'அவள்' என்ற சொல் யாரைக் குறிக்கிறது

   அ) மிக்கேலு ஆ) சுந்தரி இ) தங்க மாடத்தி ஈ) நீலா

4. பட்டாசுத் தொழிலாளர்களுக்குச் சம்பளக் கணக்கில் சேராது தனியாக வழங்கப்படும் உடனடித் தொகை

   அ) போனஸ் ஆ) ரொக்கக் காசு இ) கூடுதல் ஊதியம் ஈ) ஊக்கத் தொகை

5. விளக்கம் கண்டு விடை எழுதுக

   'மரபான கதை சொல்லலில் நவீனப் புனைகதையின் வடிவத்தை இணைத்துக் குறுகிய வடிவில் எழுதப்படும் கதை'.______________

6. பொருந்தாததைக் கண்டறிக

   அ) பேபிகுட்டி - பாட்டி ஆ) சுந்தரி - அத்தை

   இ) குமார் - பக்கத்து வீட்டுக்காரர் ஈ) துரைசாமி - அப்பாவின் நண்பர்

7. ஹசுநோ ஹானா – என்பது

   அ) மருத்துவரின் பெயர் ஆ) நறுமணப் பொருளின் பெயர்

   இ) ஊரின் பெயர் ஈ) பத்திரிகையின் பெயர்

8. "உனக்கு என்ன ஊரில் உள்ள நாய்களை எண்ணும் வேலையா?" – யார்? யாரிடம் கூறியது?

அ) அஷமஞ்சா பாபு பிபினிடம் ஆ) நேண்டி அஷமஞ்சாபாபுவிடம்

இ) நேண்டி மூடியிடம் ஈ) பேராசிரியர் சாட்டர்ஜி அஷமஞ்சாபாபுவிடம்

9. விளக்கம் கண்டு விடை எழுதுக

தொடக்கம், நடு, முடிவு என்று எதுவுமில்லாத நேரற்ற வரிசை கொண்ட இக்கதைகள் வேடிக்கை, விநோதம், பகடி, குறியீடு ஆகிய அம்சங்கள் நிறைந்தவை. ______________________.

10. பொருந்தும் இணையைக் கண்டறிக

அ) ரப்பர் பந்து – ஹெச்.ஜி. ரசூல் ஆ) பூ உதிரும் – சோ. தர்மன்

இ) நசுக்கம் – ஜெயகாந்தன் ஈ) இறுக மூடிய கதவுகள்– ஆர். சூடாமணி

11. விளக்கம் கண்டு விடை எழுதுக

பெண்கள் மீதான ஒடுக்குமுறை சார்ந்த கருத்துகளைத் தமது எழுத்துகளால் தகர்த்தெறிந்தவர் இவர். மயிலாஞ்சி, பூட்டிய அறை, போன்ற படைப்புகளை எழுதியவர்._________________.

12. கீழ்க்காணும் தொடர்களைப் படித்து சரியான விடைக்குறிப்பைத் தேர்வு செய்க.

கூற்று (கூ): மருத்துவமனையில் இருக்கும் தன் பாட்டியைப் பார்க்க தன் மகன் அருணை அழைத்துவர வேண்டாம் என்று நீலா கூறினாள்.

காரணம் (கா) : மருத்துவமனையில் இருக்கும் பாட்டி ஆக்சிஜன் குழாய் உள்ளிட்ட கருவிகளோடு இருப்பதைப் பார்த்து அவன் பயந்துவிடுவான்.

அ) கூற்று சரி, காரணம் தவறு.

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம்.

இ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு.

குறுவினா

1. "இது நெஜ யானைதான், நான்தான் இதற்கு முன்னாலே சரியாப் பாக்கலை" –யார்? யாரிடம் கூறியது?

2. பிளாஸ்டிக் யானையின் தோற்றத்தைச் சார்வாகன் எவ்வாறு விவரிக்கிறார்?

3. எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு வழங்கப்பட்ட இந்திய அரசின் மிக உயர்ந்த இலக்கிய விருதுகள் யாவை?

4. 'இறுக மூடிய கதவுகள்' கதையில் வரும் செல்லப்பாவின் தோற்றத்தை விளக்குக.

5. நசுக்கம் கதையில் பட்டாசுத் தொழிலாளர்கள் வட்டமாய் அமர்ந்து பணிபுரியும் காட்சிக்குச் சொல்லப்படும் உவமை யாது?

6. நசுக்கம் கதையில் வரும் பட்டாசுத் தொழிற்சாலையின் பாதுகாப்புக் குறைபாடுகளைச் சுட்டுக.

7. பேபி குட்டி – பெயர்க் காரணம் தருக.

8. பங்கர், பொம்பர் என்பன யாவை?

9. பசி என்னும் சிறுகதை எந்த நாட்டின் பின்னணியை உணர்த்துகிறது?

10. அஷமஞ்சாபாபுவின் நீண்டநாளைய ஆசை யாது?

11. ப்ரௌனியை நட்பான நாய் என்று அஷமஞ்சாபாபு எண்ணியது ஏன்?

12. ரப்பர் பந்து கதையில் நாராயணன் தான் படித்த பள்ளிக்கு மீண்டும் சென்றதற்கானக் காரணம் என்ன?

சிறுவினா

1. ரங்கநாதன் கண்டுபிடித்த புது யானை விளையாட்டைப் பற்றி எழுதுக.

2. பெரியசாமியின் தோற்றம் குறித்து ஜெயகாந்தன் எவ்வாறு விளக்குகிறார்?

3. சோமநாதன் தான் பூச்சூட்டலுக்கு வரமுடியாமைக்கு எழுதிய காரணம் என்ன?

4. சோமநாதன் அமைத்த பூந்தோட்டம் பற்றி எழுதுக.

5. குழந்தைகளின் உலகம் குறித்து ஆர். சூடாமணி விளக்குவது யாது?

6. மாலையில் பணி முடித்த பட்டாசுத் தொழிலாளர்கள், தங்களைச் சுத்தம் செய்துகொள்ளப் படும் துயரங்களை எழுதுக.

நெடுவினா

1. 'பூ உதிரும்', 'யானையின் சாவு' ஆகிய கதைகளில் வரும் தந்தைப் பாத்திரப் படைப்புகளின் பண்புநலன்களை ஒப்பிடுக.

2. 'பேபிகுட்டி' கதையில் வரும் பாட்டியின் பேரனுடனான பாவனை விளையாட்டையும், 'யானையின் சாவு' கதையில் வரும் சிறுவனின் யானையுடனான பாவனை விளையாட்டையும் வேறுபடுத்தி விளக்குக.

3. 'இறுகமூடிய கதவுகள்' கதையில் வரும் அம்மாவின் தியாகத்தையும், 'பூ உதிரும்' கதையில் வரும் கௌரி என்னும் அம்மாவின் தியாகத்தையும் உன்பார்வையில் மதிப்பிடுக.

4. நசுக்கம் சிறுகதையில் இடம்பெறும் வட்டார மொழி வழக்குகளைத் தொகுத்து எழுதுக.

படிப்போம் பயன்படுத்துவோம்

1) கீழ்க்காணும் கதையை உம் கற்பனையில் நிறைவு செய்து, பொருத்தமான தலைப்பினை இடுக

எதையோ கண்டுபிடித்துவிட்டவள் போல் கணவனை அவசரமாக அழைத்தாள் அமுதா, ஐந்து வயது சிறுவனின் அம்மா.

"ஏங்க ! இங்க வாங்களேன், நம்ம பையன் பின் பக்கம் போய் ட்ரெயினைப் பார்க்கும் போதுதான் அப்படி மாறிடுறான். மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கிட்டு. மூலையில் போய் உட்கார்ரதுன்னு ..."

கடந்த இரண்டு வாரங்களாகவே தங்கள் மகனிடம் ஏற்பட்டிருக்கும் அந்த மாற்றம் கண்டு அவர்கள் மிகுந்த கவலையில் இருந்தனர். ஒரே சோகமாய் முகத்தை வைத்துகொண்டு அறையின் மூலையில் உட்கார்ந்து விடுகிறான்.

மருத்துவரிடம் காண்பித்தால், "ஒன்னும் பிரச்சினை இருக்கிற மாதிரி தெரியலையே! கேக்கிறதை வாங்கிக் கொடுங்க" என்கிறார்.

இப்போதுதான் அவர்களுக்குத் தெரிகிறது அவன் தொடர்வண்டியைப் பார்ப்பது. வீட்டுக்குப் பின்புறம் இருக்கும் தண்டவாளத்தில், காலையில் இரண்டும் மாலையில் இரண்டுமாகத் தொடர்வண்டிகள் செல்கின்றன . அதைப் பார்த்தபின்தான் குழந்தை அப்படி ஆகிறான். "அதிலென்ன இருக்கிறது? எப்போதும் பார்ப்பதுதானே!"

மாலை புகைவண்டி போகும் போது இருவரும் மகனைக் கவனித்தனர்.

தொடர்வண்டியில் உள்ளவர்களைப்பார்த்து அச்சிறுவன் கைகளை அசைக்க , வண்டியிலிருந்து யாருமே பதிலுக்குக் கையசைக்கவில்லை.

----

2) வழங்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் சிறுகதை ஒன்றினை எழுதுக

பெருநகரம் - அடுக்குமாடிக் குடியிருப்பில் சொந்த வீடு – கணவன் மனைவி - இரண்டு குழந்தைகள் - காரில் சென்று பெரிய வாணிக வளாகத்தில் பொருட்கள் வாங்குதல் – திரும்பும்போது சாலை ஓரத்தில் முதிய பெண்மணி ஒருவர் மயங்கிக் கிடத்தல் – அருகில் உள்ளவர்கள் தண்ணீர் தெளித்தல் – நடைபாதையில் முதல் நாளிலிருந்து யாரிடமும் எதையும் வாங்கிக்கொள்ள மறுத்துப் பட்டினியாகக் கிடந்தமை - பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டவர் என அறிதல் – இவர்கள் வற்புறுத்தி உதவுதல்- அடுத்த நாள் தன் சொந்த ஊரில் பல ஆண்டுகளாக ஆதரவற்று வாழும் தன் தாய் தந்தையரைப் பார்க்க அவன் கிளம்புதல். .

3) ஒரு கதையின் வரிகள் வரிசை மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. வரிசையைச் சரிசெய்து கதையைப் படிக்கவும்.

அ) சிறிது நேரம் படுக்கையிலேயே இருந்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்தான்.

ஆ) ஒரு கதவை கையால் அழுத்திக்கொண்டு இன்னொரு கதவினை இழுத்துப்பார்த்தான். கதவு திறந்து கொண்டது.

இ) அருணன் காலையில் தூக்கத்திலிருந்து விழித்தவுடன் எழுந்து தன் அறையின் கதவைத் திறக்க முயன்றான்.

ஈ) அலைபேசியில் யாரையாவது அழைக்கலாம் என எண்ணியபோது அதுவும் அறைக்குள் இல்லை. இரவில் அலைபேசியை வெளியே வைத்துவிட்டான் போலும்.

உ) கதவு திறக்கவில்லை. இழுத்தான். திறக்கவில்லை. தட்டிப்பார்த்தான். யாரும் வரவில்லை. வெளிப்பக்கம் தாழிட்டிருக்கிறார்களோ?

ஊ) அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படிச் செய்தார்கள்?

4) கொடுக்கப்பட்டுள்ள படத்திற்குப் பொருத்தமான கதை ஒன்றினை எழுதுக

5) உங்களின் மனம் கவர்ந்த இரண்டு சிறுகதை ஆசிரியர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதி வருக.

இணையச்செயல்பாடு

கதையியல்

கதை கதையாம் ! சிறு கதையாம் !



படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி/ விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'tamilvu' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.

2. திரையின் இடப்பக்கம் சிறுகதை – ஓர் அறிமுகம், சிறுகதை – தோற்றமும் வளர்ச்சியும், புதுமைப்பித்தனின் சிறுகதைகள் போன்ற தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்றைத்தேர்வு செய்ததும், கீழ்ப்பகுதியில் இருக்கும் பாடஅமைப்பு என்பதைச் சொடுக்கி, சிறுகதையின் வரலாற்றை அறிக.

எடுத்துக்காட்டாக, சிறுகதை – ஓர் அறிமுகம் என்பதில் உள்ள சிறுகதை இலக்கணம், புதினமும் சிறுகதையும், சிறுகதை வரையறை போன்ற உள்தலைப்புகளைப் படிக்கலாம். தன் மதிப்பீடு வினாக்களுக்கும் விடையளிக்கலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2



படி 3

கதையியல் இணையப் பக்கத்தின் உரலி

http://www.tamilvu.org/ta/courses-degree-p101-p1011-html-p10111nd-23794

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இயல் மூன்று

அரங்கவியல்

9C4JAZ

முத்தமிழான இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியவை சார்ந்த நிகழ்த்துக்கலைகள் அவற்றுக்காக வடிவமைக்கப்பட்ட அரங்கங்கள் வழியாகவே வெளிப்படுகின்றன. அத்தகைய கலைகளான நாடகக்கலை, பேச்சுக்கலை ஆகியன குறித்து 'அரங்கவியல்' பேசுகிறது.

நாடகக்கலைப் பகுதியில் வழங்கப்பட்டுள்ள நாடக அரங்க அமைப்புகள், நாடகக் கூறுகள், கட்டியக்காரன், நாடக ஆளுமைகள் குறித்த தகவல்கள் படைப்பாற்றலைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளன. வாசிப்பிற்கும் பயிற்சிக்கும் ஏற்ற, நாடக மாதிரி ஒன்று தரப்பட்டுள்ளது.

பேச்சுக்கலைப் பகுதியில், உலக அளவில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்திய ஆளுமைகளின் உரைகள், பேச்சாளர்களுக்கான பண்புகள், பேச்சின் கூறுகள், பேச்சு நடைகள் ஆகியன விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. பல்வேறு உரை வடிவங்களும் வகைகளும் உரிய பயிற்சிகளுடன் வழங்கப்பட்டுள்ளமை பயன்தரத்தக்கன.

கற்றல் நோக்கங்கள்

- நாடகக்கலை பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளுதல்.
- நாடகத்தின் வகைமைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- நாடகக்கலையின் கூறுகளைத் தான் படைக்கும் நாடகங்களில் பயன்படுத்துதல்.
- சிறுகதைகளையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் நாடகமாக்கும் திறன் பெறுதல்.

பாடப் பகுதி

- நாடகக்கலை
- தெருக்கூத்தில் கட்டியக்காரன்
- நாடகவியல் ஆளுமைகள்
- ஒரு ரூபாய் (ஒற்றை நடிகர் நாடகம்) – ஜெயந்தன்
- பேச்சுக்கலை

உரையாடல்

இயல் மூன்று

நாடகக்கலை

இடம் : வகுப்பறை

கதை மாந்தர்கள்: ஆசிரியர், மாணவ, மாணவியர்

ஆசிரியர்: வணக்கம் மாணவர்களே!

மாணவர்கள்: வணக்கம் அம்மா!

ஆசிரியர்: உங்களில் யாரெல்லாம் நாடகம் பார்த்திருக்கிறீர்கள்?

மாணவர்: எல்லாரும் நாடகம் பார்த்திருக்கிறோம் அம்மா.

தொலைக்காட்சி இருக்கும் வீடுகள் எல்லாவற்றிலும் நாள்தோறும் நாடகங்களைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்?

ஆசிரியர் : அப்படியா! நீங்கள் பார்த்த நாடகங்களின் பெயரை ஒவ்வொன்றாகச் சொல்ல முடியுமா? .

(மாணவர்கள், சில தொலைக்காட்சித் தொடர்களின் பெயர்களைச் சொல்கிறார்கள்)

ஆசிரியர்:சரி,அந்தத் தொலைக்காட்சிகளில் நீங்கள் காண்பனவற்றை 'நாடகம்' என்றுதான் சொல்வார்களா?

மாணவி: இல்லை. நாடகம் என்று சொல்லவில்லை; தொடர் என்றுதான் சொல்வார்கள்.

ஆசிரியர்: அவர்களே தொடர் என்று சொல்லும் போது, நீங்கள் மட்டும் நாடகம் என்று சொல்லலாமா?

மாணவி: தினந்தோறும் அவற்றைப் பார்ப்பவர்கள் பொதுவாக 'நாடகம்' என்றுதான் சொல்கின்றனர். அதனால் தான் நானும் நாடகம் என்று சொன்னேன்.

ஆசிரியர்: அவர்களுக்கு நாடகங்களின் வகைகள், உத்திகள் போன்றவை தெரியாததால் தொலைக்காட்சித் தொடர்களை நாடகம் என்று சொல்கிறார்கள். அவர்கள் பார்ப்பவை நாடகங்கள் அல்ல என்பதை நாடகக் கலையைப் பற்றித் தெரிந்து கொண்டபின் நீங்கள்தாம் உணரச்செய்ய வேண்டும்.

மாணவர்: நாங்கள் நாடகக் கலையை அறிந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறோம் அம்மா! எங்களுக்குச் சொல்லித்தாருங்கள்.

ஆசிரியர்: மாணவர்களே! இந்த நூலைப் பாருங்கள். என்ன நூல் இது?

மாணவி: இது நாடக நூல்.

ஆசிரியர்: எப்படிச் சொல்கிறாய்?

மாணவி: அடைப்புக்குறிக்குள் காட்சி, இடம், கதைமாந்தர்கள் எல்லாம் கொடுத்திருக்கிறார்களே! அப்படி இருப்பது நாடகநூல் தானே...! நூலகத்தில் இப்படி அச்சிடப்பட்ட நூல்களை நாடகம் என்ற பகுதியில் பார்த்திருக்கிறேன்.

ஆசிரியர்: ஓ!அப்படியா? உங்களுக்கு என் பாராட்டுகள். (நாடகநூலை உயர்த்திக் காட்டுகிறார்) நூலின் இடப்பக்க ஓரத்தில் ஒருவர் மாற்றி ஒருவர் பேசுவதாக இருப்பதுதான்

நாடகநூலின் தனித்த அடையாளம். அதற்குப்பெயர் உரையாடல் என்பதாகும். உரையாடல்தான் நாடகத்தின் அடிப்படை அலகு. இது நாடகம் என்னும் இலக்கிய வடிவத்தை உருவாக்குகிறது.

மாணவி : கதைமாந்தர்கள் தங்களுக்குள் பேசுவதுதான் உரையாடலா அம்மா?

ஆசிரியர்: பொதுவாக உரையாடலுக்கு இரண்டுபேர் வேண்டும். இரண்டு கதைமாந்தர்களோ, இரண்டுக்கும் மேற்பட்டவர்களோ உரையாடுவது உரையாடல்.

மாணவி: உரையாடல் இல்லாமல் நாடகம் இருக்காதா?

ஆசிரியர்: பொதுவாக நாடகங்கள் உரையாடல்களோடு அமைந்திருக்கும். உரையாடல் வேறு வடிவத்திலும் அமையலாம். உரையாடல் இல்லாமல் மௌனநாடகங்களும் நடைபெறுவதுண்டு.

ஒருவரே தமக்குள் பேசிக்கொள்வது போன்ற பேச்சுமொழியுடன் நாடகம் அமையலாம். பேச்சுமொழிக்குப் பதிலாக உடல்மொழி வழியாகவும் உரையாடலை நாடகம் உருவாக்கிக்கொள்ளும்.

மாணவி : உடல்மொழியா? அப்படியென்றால் என்ன அம்மா?

ஆசிரியர் : வாயால் பேசுவதை வாய்மொழி என்பதுபோல, மற்றவர்களுக்குப் புரிகிற உடலசைவுகளும் சைகைகளும் உடல்மொழி எனப்படும்.

மாணவர்: பேசும்போது உடலை அசைப்போமே அதுவா?

ஆசிரியர்: ஆம்! பேச்சுமொழிக்கு முன்பு சைகையில்தான் மனிதர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நாடகத்தில் உடல்அசைவும் உரையாடலும் இணைந்திருக்கும். இப்போது நாடகத்தின் புறவடிவத்தைத் தெரிந்து கொள்வோம். புறவடிவத்தில் காட்சி என்பது முக்கியமானது. காட்சியை நிகழ்வு என்றும் குறிப்பிடலாம்.

உங்கள் கையில் இருக்கும் நூலில் காட்சிகள் இருக்கின்றன அல்லவா?

மாணவர் : காட்சியுடன் அங்கம் என்றொரு சொல்லும் இருக்கின்றதே!

ஆசிரியர்: உரையாடல், காட்சி, அங்கம் ஆகிய மூன்றும் இணைந்தது நாடகம். இம்மூன்றையும் புறக்கட்டமைப்பின் கூறுகள் என்கிறோம். உரையாடல் என்பது சிறிய அலகு . உரையாடல்களால் ஆனது காட்சி. காட்சிகளால் ஆனது அங்கம். அங்கங்களால் ஆனது நாடகம்.

மாணவர்: காட்சியை நிகழ்வு என்று சொன்னீர்களே அம்மா!

ஆசிரியர்: ஆமாம், காட்சிதான் நிகழ்வு. ஓரிடத்தில் ஒருவர் மற்றொருவரோடோ, தமக்குள்ளேயோ பேசிக்கொள்ளும் உரையாடல், நிகழ்வாக மாறுகிறது. அந்த நிகழ்வுதான் நாடகத்தில் காட்சி என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

மாணவர் : காட்சியை எவ்வாறு வரையறை செய்வது அம்மா?

ஆசிரியர்: காட்சியை வரையறை செய்ய, களம் அவசியம். நாடகம் நிகழும் சூழலை உணர்த்துவது களம். இதனை வெளி என்றும் கூறலாம். இந்த நிகழ்வு முடியும்போது ஒரு காட்சி முடிந்துவிடுகிறது. அப்படி முடியும்போது, அந்நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் இடம் மாறலாம் அல்லது புதிதாக ஒருவர் உள்ளே வரலாம். இதனால் ஏற்படும் மாற்றத்தையே காட்சி மாற்றம் என்பர். உதாரணமாக நாம் பேசிக்கொண்டிருக்கும்போது தலைமையாசிரியர் வகுப்பறைக்குள் வந்தால், நாம் பேசும் பொருள் மாறும் அல்லவா? அப்படிமாறும் நிலைதான் காட்சிமாற்றம்.

மாணவர்: காட்சிகளை எவ்வாறு அமைப்பது?

ஆசிரியர்: நாடகம் பல காட்சிகளைக் கொண்டதாக இருக்கும்.

ஓர் ஓரங்க நாடகத்தில் கதைமாந்தர் ஒருவர் உணவகத்திற்குச் செல்வதாகக் கொண்டால்,

அதனை நம் கற்பனைக்கு ஏற்ப, சில காட்சிகளாக அமைக்கலாம். வீடு ஒரு காட்சி. வீட்டிலிருந்து உணவகத்திற்குச் செல்லும் சாலைப்பயணம் ஒரு காட்சி. உணவகம் சென்று உணவை வாங்கிச் சாப்பிடுவதும் அங்கே புதியவர் ஒருவரைச் சந்திப்பதும் மற்றொரு காட்சி. அவரோடு முரண்பாடு ஏற்படும்போது நாடகம் தொடங்கிவிடுகிறது. இப்படியான சில காட்சிகளால் நாடகத்தின் ஓர் அங்கம் முழுமையடைகிறது.

மாணவர்: ஒவ்வொரு காட்சியையும் இப்படி மாற்றிக்கொண்டிருக்கலாமா?

ஆசிரியர்: மாற்றலாம். கதைமாந்தர் நுழைவு, வெளியேற்றம், களமாற்றம் என்பவை காட்சியை மாற்றும். அதனால் காட்சி மாறக்கூடியது. ஆனால், ஓரங்கத்திற்குள் இடம்பெறும் காட்சிகளுக்குள் ஓர் ஒருங்கிணைவு இருக்க வேண்டும். அந்த இணைப்புச்சங்கிலிதான் நாடகத்தை உருவாக்குகிறது.

மாணவர்: நாடகத்தின் அங்கம் என்றால் என்ன?

ஆசிரியர்: நாடகத்தின் கதையைப் பிரித்து அமைக்கும் பிரிவு அங்கம் எனப்படும். பொதுவாக நாடகத்தின் கதையை ஐந்து அங்கமாகப் பிரிப்பர். இதனடிப்படையில் ஓர் அங்கம் மட்டுமே உள்ள நாடகத்தை ஓரங்க நாடகம் என்பர்.

மாணவர்: நாடகத்தில் அங்கங்களை எவ்வாறு முடிவு செய்வது?

ஆசிரியர்: பல அங்கநாடகம் ஒன்றில், தொடக்கத்தை முதல் அங்கத்திலும் வளர்நிலையை அடுத்த அங்கத்திலும் முடிவை மூன்றாவது அங்கத்திலும் அமைக்கவேண்டும். அப்படி அமைப்பதுதான் நல்ல நாடகத்தின் வடிவம். பொதுவாக மூவங்கங்களில் முழுமை அடையும் நாடகங்களே சிறந்த நாடகங்களாகக் கருதப்படுகின்றன. ஒரே அங்கத்திற்குள் தொடக்கம், வளர்நிலை, முடிவு என்று அமைக்கும் நாடகங்கள் ஓரங்கநாடகங்கள். பல அங்கங்களைக் கொண்டும் நாடகங்கள் வளரும். ஈரங்கம் என்ற அமைப்பு நாடகத்தில் இல்லை. மூன்று அங்கங்களில் முழுமையடையும் நாடகங்கள் மூவங்கநாடகங்கள், சிலர் ஐந்து அங்கங்கள்வரைகூட நாடகத்தை நீட்டிப்பதுண்டு. அவை ஐந்தங்க நாடகங்கள் ஆகும். ஐந்து அங்கங்களுக்குமேல் நாடகம் வளர்த்தெடுக்கப் படுவதில்லை.

மாணவி: சிறுகதை, கவிதை போன்றவற்றிற்கு உள்ளது போல நாடகத்திற்கென்று கட்டமைப்பு உள்ளதா?

ஆசிரியர்: இது நல்ல கேள்வி. இந்தக் கேள்வி மூலம் நாம் இதுவரை பார்த்த நாடகத்தின் புறக்கட்டமைப்பிலிருந்து அகக்கட்டமைப்பை நோக்கி நகர இருக்கிறோம். தொடக்கம், மோதல் , வளர்ச்சி , உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு ஆகிய ஆறும் அகக்கட்டமைப்புகள்.

மாணவி: நாடகம் குறித்த நேரத்தில் ஆரம்பித்தால், அது நாடகத் தொடக்கம். சரிதானே?

ஆசிரியர்: இது தொடக்கம் இல்லை. கருவையும் பாத்திரங்களையும் அறிமுகப்படுத்துவதாகவும் கதைக்கருவுக்குப் பொருத்தமான கேள்வியை எழுப்புவதாகவும் இருக்கும் நாடகத்தின் முதற்காட்சிதான் தொடக்கம்.

அறிவோம் தெளிவோம்

நொண்டி நாடகம்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நொண்டி நாடகங்கள் தோன்றின. திருக்கச்சூர் நொண்டி நாடகம், பழனி நொண்டி நாடகம், சீதக். காதி நொண்டி நாடகம் என்பன அவற்றுள் சில. நொண்டி நாடகத்திற்குரிய கதை பெரும்பாலும் கீழ்க்காணுமாறு அமைந்திருக்கும்.

'கதை மாந்தன், நெறி தவறிய தீயவனாக வாழ்ந்து , தண்டனைக்குட்பட்டு, கை கால்களை இழக்கிறான். பின்னர், தன் செயலுக்கு வருந்தித் தெய்வத்தை வேண்டி வழிபட, இழந்த உறுப்புகளை மீண்டும் பெறுகிறான்'.

மாணவர்: இவற்றைப் பற்றிச் சற்று விளக்கமாகக் கூறுங்கள் அம்மா?

ஆசிரியர்: நாடகம் என்பது அடிப்படையில் ஒரு விளையாட்டுப்போல. எந்தவொரு விளையாட்டுக்கும் இரண்டு அணிகள் வேண்டுமல்லவா. அதுபோல நாடகத்திற்கு இரண்டு அணிகள் வேண்டும். இரண்டு அணிகளும் ஒன்றையொன்று வெல்ல வேண்டும் என நினைக்க வேண்டும். அந்த நினைப்புக்குப் பின்னால் ஒரு கருத்தியல் முரண்பாடு இருக்கும்.

மாணவி: கருத்தியலா! அப்படியென்றால்?

ஆசிரியர்: ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விடயத்திலும் ஒரு கருத்து உண்டு. அவற்றை நேர்மறையான கருத்து, எதிர்மறையான கருத்து என வகைப்படுத்தலாம். நாடக ஆசிரியர்கள் இக்கருத்துகளை நேர்த்தியாக மோதவிட்டு, விளையாட்டுப்போல எக்கருத்து எதனால் வெல்கிறது எனக் காட்டுகிறார்கள். நாடகக் கதை மாந்தர்களிடையே எழும் இந்த முரண்பாடு அல்லது மோதல் நாடகத்தின் வளர்ச்சி நிலைக்கு அடித்தளமாக அமைகின்றது. அந்த மோதல் ஒன்றிரண்டு செயல்களால் வளர்ச்சி அடையும்.

மாணவி: வளர்ச்சி எவ்வாறு அமையும் ?

ஆசிரியர்: நாடகத்தின் கதைக்கருவிற்கு ஏற்பக் காட்சிகளும் கதைமாந்தர்களும் இணைந்து செயல்படுவதாக நாடகத்தின் வளர்ச்சி அமையும்.

வளர்ச்சியைத் தொடர்ந்தே உச்சம் அமையும். நாடகத்தின் வளர்ச்சியானது ஆர்வத்தொக்கலோடு உச்சத்தை நோக்கிப் பயணிக்கும்.

மாணவி: ஆர்வத்தொக்கலா? அப்படியென்றால்....

ஆசிரியர்: ஆர்வத்தொக்கல் என்பதை ஆங்கிலத்தில் சஸ்பென்ஸ் (suspense) என்கிறோம். நாடகத்தைப் பார்க்கும் பார்வையாளர்களிடம் ஆர்வத்தைத் தூண்டும் ஓர் உத்தியாக ஆர்வத்தொக்கலைக் கூறலாம். கதைமாந்தர் ஒருவர் இக்கட்டான சூழலில் மாடியின் மேலிருந்து கீழேவிழப்போகும் நிலையில், பார்வையாளரின் மனம் துடிக்குமே! திருடன் பிடிபடுவானா? தப்பிப்பானா? என மனம் அலைபாயுமே! இப்படிப்பட்டச் சூழல்களையே, ஆர்வத்தொக்கல் என்கிறோம். கவனம் சிதறாமல் நாடகத்தைப் பார்ப்பதற்கு இது உதவுகிறது.

மாணவி: ஆர்வத்தொக்கல் என்பதும் உச்சம் என்பதும் வேறு வேறா அம்மா ?

ஆசிரியர்: ஆம்! இரண்டும் வேறுவேறானவை, ஆர்வத்தொக்கல் என்பது, உச்சம் நோக்கி ஒரு நாடகத்தின் கதையை நகர்த்திச் செல்வதற்கான ஓர் உத்தி ஆகும். உச்சம் என்பது, நாடகத்தின் இறுதிக்காட்சியமைப்பாகும். ஆர்வத்தொக்கலை முடிவுக்குக்கொண்டு வருகின்ற இடமாக உச்சம் இருக்கிறது. நாடகத்தில் உச்சத்திற்குப் பின் என்ன என்ன வரும் என்று யாரேனும் சொல்ல முடியுமா ?

மாணவி: வீழ்ச்சியும் முடிவும் அம்மா.....

ஆசிரியர்: சரியாகச் சொன்னாய்! ஒரு நாடகத்தின் தொடக்கத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சிக்கல்கள் ஒவ்வொன்றாக அவிழ்க்கப்பட்டு, கதையை முடிவு நோக்கிக் கொண்டு செல்லும் கட்டமைப்பே வீழ்ச்சி ஆகும். ஒரு நாடகத்தின் முடிவு அழுத்தமானதாக, பார்வையாளர் மனத்தை விட்டு நீங்காததாக இருக்க வேண்டும். முடிவைப் பற்றிய குறிப்புகள் நாடகத்தில் ஆங்காங்கே வரலாம். முடிவு பார்வையாளர் எதிர்பாராத ஒன்றாக அமைதல் வேண்டும்.

மாணவன் : நாடகம் பற்றி நீங்கள் சொன்ன கருத்துகள் எல்லாம் அருமை. இவை தவிர வேறு என்னவெல்லாம் உள்ளன அம்மா?

ஆசிரியர்: கதைக்கரு, எதிர்நிலை, குறிப்புமுரண் போன்றனவும் நாடகத்தில் இன்றியமையாதனவாக உள்ளன. நாடகத்தின் உயிர் நிலையாக அமைவது கதைக்கரு. ஒரு நாடகம், பார்வையாளனுக்குச்

சொல்ல விரும்பும் கருத்து, அறம், செய்தி என்னவென்பதே அந்நாடகத்தின் கருவாகிறது. தனிமனிதனின் இயல்பு, பிறரோடும் தன்னோடும் மாறுபட்டு நிற்கும்போது, எழும் மனநிலை, சமூகம் பற்றிய மதிப்பீடு, அறிவியல், பொருளாதார, அரசியல் மாற்றங்கள், அகவாழ்வுச் சிக்கல்கள் போன்றவற்றிலிருந்து நாடகத்திற்கான கரு தோன்றும். ஒரு நாடகத்தின் முடிவில் பார்வையாளன் பெறுகின்ற உணர்வின் அடிப்படையில் அந்நாடகத்தினை இன்பியல் நாடகம், துன்பியல் நாடகம் என வகைப்படுத்தலாம்.

மாணவி: நாடகத்தில் எதிர்நிலை என்றால் என்ன அம்மா ?

ஆசிரியர்: பார்வையாளரின் மனத்தில் சோர்வை நீக்குவதற்கு நாடகங்களில் எதிர்நிலை என்னும் உத்தி பயன்படுத்தப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் காண்ட்ராஸ்ட் (contrast) என்பர். ஒரு காட்சி சிரிப்போடு அமைந்தால், அடுத்த காட்சியை அழுகையோடு அமைப்பர். பாத்திரப்படைப்பிலும் இதனை அமைத்துக்காட்டலாம்.

ஒரு கதைமாந்தர் அவசரப்படும் நிலையில் இருந்தால், மற்றொரு கதைமாந்தர் நிதானத்தன்மை கொண்டவராகக் காட்டப்படுவார். இது நாடகத்தின் சுவையைக் கூட்டும்.

மாணவர்: குறிப்புமுரண் என்றால்....

ஆசிரியர்: நாடகத்தில் இரண்டு கதைமாந்தர்கள் உச்சத்தில் தங்களுக்கு என்ன நடக்கப்போகிறது? எனத்தெரியாமல் இருப்பார்கள். ஆனால் பார்வையாளருக்கு நடக்கப்போவது முன்னதாகவே தெரிந்துவிடும். இதனையே குறிப்புமுரண் என்பர். நாடக ஆசிரியர்கள் குறிப்புமுரணை மிகநுட்பமாகப் பயன்படுத்துவார்கள். இதனை நாடகமுரண் என்றும் கூறுவர்.

வானொலி நாடகங்களை யாராவது கேட்டுள்ளீர்களா?

மாணவர்: வானொலியில் நாடகங்களும் ஒலிபரப்புவார்களா அம்மா?

ஆசிரியர்: ஆமாம்! வானொலியிலும் நாடகங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. மேடையில் நடிக்கப்படும் நாடகத்திற்கு நடிப்புக்குறிப்புத் தேவை. வானொலி நாடகத்திற்கு இது தேவையில்லை. ஆனால் நடிப்பையும் உடல்மொழியையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்த ஒலிக்குறிப்பு தேவை.

மாணவர்: வானொலி நாடகங்களைக் கேட்க மட்டும்தான் முடியும் அல்லவா?

ஆசிரியர்: ஆமாம்,வானொலி நாடகங்களில் உடலசைவு, முகச்சுழிப்பு போன்றவற்றை ஒலிக்குறிப்பு மூலமே வெளிப்படுத்த இயலும். எனவே, நாடக ஆசிரியர் நாடகத்தினை எழுதும் போதே மேற்கண்டவற்றைக் குறிப்பிட வேண்டும். மேடை நாடகத்திற்கும் இது பொருந்தும்.

மாணவி: கேட்பதற்கான வானொலி நாடகங்கள், நடிப்பதற்கான மேடை நாடகங்கள் தவிர வேறு நாடக வடிவங்கள் உள்ளனவா அம்மா?

ஆசிரியர்: மேடையேற்றும் நோக்கோடு மட்டுமே அமைந்த நடிப்பதற்கான நாடகங்கள், வாசிக்க மட்டுமே இயலும் படிப்பதற்கான நாடகங்கள், மேடையேற்றவும் வாசிக்கவுமான நடிப்பதற்கும் படிப்பதற்குமான நாடகங்கள் என்று நாடகங்களை வகைமைப்படுத்துவர். உங்களில் யாரேனும் மேடை நாடகங்களைப் பார்த்துள்ளீர்களா?

மாணவி: எங்கள் ஊர்த் திருவிழாவில் வள்ளித்திருமணம் என்ற நாடகத்தைப் பார்த்துள்ளேன் அம்மா. கோவிலுக்கு முன் பகுதியில் மேடை அமைத்து நடத்தினார்கள்.

ஆசிரியர்: ஆமாம்! என் சிறு வயதிலிருந்தே நானும் இந்த நாடகத்தினைப் பார்த்துள்ளேன். மேடை நாடகங்களில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுவது அவற்றின் மேடை அமைப்பாகும். மேடைகளை நாம் அரங்கம் என்றும் கூறுவோம். கோவில் விழாக்களின்போது தற்காலிக மேடைகளை அமைத்து நாடகங்கள் நடத்துவர்.



1. ஒருமுக எழினி



2. பொருமுக எழினி



3. கரந்துவரல் எழினி

மாணவி: சாலை ஓரங்களில் விழாக்கள், சொற்பொழிவுகள் நடைபெறும்போது மரச்சட்டத்தாலான மேடைகள் அமைந்திருப்பதைப் பார்க்கிறோமே!

ஆசிரியர்: ஆமாம், சரியாகச் சொன்னாய்! தொடக்க காலங்களில் மண்ணைக் குவித்து மேடைகளை அமைத்து நாடகங்களை நிகழ்த்தியிருக்கிறார்கள். நம் தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதையில், அரங்குகள் அமைய வேண்டியமுறை, அரங்கின் உயரம், திரைச்சீலைகளின் வகைகள், தூண்களின் நிழலைக்காட்டாது விளக்குகளை அமைக்க வேண்டியமுறை குறித்தெல்லாம் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

மாணவி: திரைச்சீலைகளா! அப்படியென்றால்?

ஆசிரியர்: நாடக அரங்கத்தின் முன்பகுதியில் தொங்க விடப்படும் மறைப்புத் திரையைத் திரைச்சீலை என்கிறோம். அத்திரைச்சீலை காட்சி மாற்றத்தின்போது அரங்கிலுள்ள பொருள்களைக் காட்சி அமைப்பிற்கு ஏற்ப மாற்றி வைப்பதற்குப் பயன்படுகிறது. பார்வையாளர்களுக்குமுன் திரைச்சீலைகளைத் தொங்கவைத்துவிட்டு, அரங்கில் காட்சிகளை ஏற்பாடு செய்வர். இத்திரைச்சீலைகளை மூன்று வகைகளாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஒரே பக்கத்தில் திரை இழுக்கப்படுகின்ற ஒருமுக எழினி, இருபக்கமும் திரையைத் திறக்கின்ற பொருமுக எழினி, மேலிருந்து கீழே இறங்குகின்ற கரந்துவரல் எழினி எனத் திரைச்சீலைகளில் இருக்கும் வகைகளைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இம்மூன்று திரைச்சீலைகளையும் பல்வேறு அரங்கங்களில் பயன்படுத்துகிறோம். திரைச்சீலைகள் இல்லாத நவீன அரங்கங்களையும் பயன்படுத்துகிறோம்.

மாணவர்: பல்வேறு அரங்கங்களா?

ஆம். பல்வேறு அரங்கங்கள் உள்ளன. அரங்கத்தில் பார்வையாளர்களை அமரவைக்கின்ற நிலையையும் காட்சிகள் நடக்கும் இடத்தையும் கருத்தில் கொண்டு, நாடக அரங்கங்களைப் படச்சட்ட அரங்கம், வட்டவடிவ அரங்கம், அரை வட்டவடிவ அரங்கம், சதுர அரங்கம், செவ்வக அரங்கம், முக்கோண அரங்கம், அண்மை அரங்கம், திறந்தவெளி அரங்கம் என வகைப்படுத்தியுள்ளனர்.

மாணவர்: படச்சட்ட அரங்கமா?

ஆசிரியர்: படங்களுக்குப் போடும் சட்டத்தைப் போன்று அமைந்திருப்பதைப் படச்சட்ட அரங்கம் என்பர். இந்த அமைப்பு நமக்கு ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்த பிறகு அறிமுகமானது. சென்னைக் கன்னிமாரா நூலக வளாகத்தில், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட முன்மேடை அமைப்போடு அமைந்த படச்சட்ட அரங்கம் உள்ளது. வட்ட வடிவில் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் அரங்கம் வட்டவடிவ அரங்கம். அரைவட்ட அரங்கம் இதில் பாதியாக அமைந்திருக்கும். அண்மை அரங்கம் பார்வையாளர்கள் நாடகத்தை அருகில் அமர்ந்து பார்ப்பதாக இருக்கும். திரையரங்குகள் போன்று செவ்வக வடிவில் அமைந்தவை செவ்வக அரங்குகள். மேற்கூரையோ அரங்கத்திற்கான தனித்த

வடிவோ இல்லாமல் மக்கள் கூடும் திறந்த வெளிகளில் அமைக்கப்படுபவை திறந்தவெளி அரங்குகள்.

மாணவர்: அரங்கங்களைப்போல நடிகர்கள் பற்றியும் கூறுங்கள் அம்மா?

ஆசிரியர்: காட்சிகளில் உணர்ச்சி, மகிழ்ச்சி, சோகம், அதிர்ச்சி, ஆறுதல், முயற்சி என்று மாறிமாறிக் காட்சிகள் வெளிப்படக் கதைமாந்தர்கள் உதவுகிறார்கள். நடிகர், நடிகையர், துணைமாந்தர்கள், கட்டியக்காரன் எனக் கதைமாந்தர்களை வகைப்படுத்தலாம்.

மாணவி: நாடகத்தில் நடிக்கிற நடிகர், நடிகைகள் தெரியும். கட்டியக்காரன் என்கிற கதைமாந்தரைப் பற்றிக் கூறுங்கள் அம்மா...

ஆசிரியர் : நாடகத்தின் கதை மாந்தர்களை அறிமுகப்படுத்துதல், நாடகத்தின் இடையிடையே மக்களை மகிழ்விக்கும் விதமாக நகைச்சுவை ஊட்டுதல், கதை ஓட்டத்திற்கு ஏற்பச் சிறுசிறு பாத்திரங்களை ஏற்று நடித்தல், நாடக நிகழ்வைகளை ஒருங்கிணைத்துச் செல்லுதல், நாடகத்தை முடித்துவைத்தல் என ஒரு நாடகத்தின் தொடக்கம்முதல் முடிவுவரை கட்டியக்காரனின் பங்களிப்பு இன்றியமையாதது.

மாணவன்: எங்கள் ஊர் திருவிழாவில் நடந்த நாடகத்தில் பபூனாக வந்தவர்தான் கட்டியக்காரனா?

ஆசிரியர்: ஆம். அவரே கோமாளியாகவும் மாறி நகைச்சுவையூட்டக் கூடியவர். அதனால், அவரைக் கோமாளி என்றும் பபூன் என்றும் சொல்கிறோம்.

மாணவி: கட்டியக்காரன் போல வேறு யாரெல்லாம் நாடகம் சிறப்பாக நடைபெறத் துணை செய்கிறார்கள்?

ஆசிரியர்: நாடகத்தில் நடிக்கக்கூடிய நடிகர், நடிகைகள் தமக்கு வழங்கப்பட்ட கதாபாத்திரத்தில் பொருந்தி, அதற்கேற்பத் தங்களின் நடிப்பாற்றலை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அவர்களை இயக்கக்கூடிய முழுப்பொறுப்பையும் ஏற்பவர் இயக்குநர் ஆவார். இயக்குநரை நெறியாளர் எனவும் அழைப்பர். அவரே நடிகர்களுக்கு உடல், குரல், மனப்பயிற்சிகளை அளித்து, அவர்களின் நடை, உடை, பாவனைகளை மாற்றச்செய்கிறார். அவர்களோடு இணைந்து மேடையில் காட்சிகளை உருவாக்கும் அரங்க அமைப்பாளர், நடிகர்களுக்கு உடைகளைத் தரும் ஆடைவடிவமைப்பாளர், ஒப்பனையாளர் போன்றவர்களும் பணியாற்றுகின்றனர். அதோடு இசைச்சேர்க்கை, ஒலி, ஒளியமைப்பு போன்ற பணிகளைச் செய்பவர்களும் நாடகத்தை மேடைக்குரியதாக ஆக்குவதில் பணியாற்றுகின்றனர். இவ்வளவுபேரும் சேர்ந்து, பணியாற்றி, உருவாக்கி அளிக்கும் நாடகக்கலை தனிநபர் கலையாகக் கருதப்படாமல் கூட்டுக்கலையாகக் கருதப்படுகிறது என்பதே அதன் சிறப்பு.

மாணவர்: இந்த நாடகக்கலையை நாங்களும் கற்றுக்கொள்ளலாமா அம்மா?

ஆசிரியர்: கண்டிப்பாக, நாமும் இதனைக் கற்றுக்கொள்ளலாம். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் நாடகப்பள்ளி இருக்கிறது. தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக்கழகத்திலும் நாடகப்புலம் இருக்கிறது. இவையல்லாமல் தனிநபர்கள் தங்களின் ஆர்வத்தால் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துகிறார்கள். ஒரு மாதம், இரண்டு மாதம் என நடக்கும் நாடகப்பட்டறைகளிலும் கூத்துப் பட்டறைகளிலும் கலந்து கொண்டு, அரங்கவியலை முறையாகக் கற்றுக்கொள்ளலாம்.

மாணவியர்: நமது பள்ளியில்கூட இப்பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாமா அம்மா?

ஆசிரியர் : நீங்கள் ஆர்வமாக இருப்பதால் உடனடியாகத் தலைமையாசிரியரிடம் சொல்லி, நாடகக்கலை வல்லுநர்களை அழைத்து, பள்ளியிலேயே நாடகப்பயிற்சிப்பட்டறைகளை நடத்த ஏற்பாடு செய்கிறேன்.

மாணவ, மாணவியர்: மிக்க மகிழ்ச்சி அம்மா!

(மகிழ்வோடு வகுப்பு நிறைவு பெறுகிறது)

தெருக்கூத்தில் கட்டியக்காரன்

தெருக்கூத்து – ஓர் அறிமுகம்

தமிழகத்தின் தொன்மையான கலைவடிவங்களுள் ஒன்று, கூத்துக்கலை. தெருவில் நடத்தப்படும் கூத்து என்பதால், இது தெருக்கூத்து என அழைக்கப்படுகிறது. பார்வையாளர்களுக்குக் கதை சொல்லல், நடித்தல், ஆடல், பாடல் எனப் பல கலைத்தன்மைகள் சேர்ந்த ஒன்றே கூத்துக்கலை. தெருக்கூத்தின் வேர், தமிழ்ப் பண்பாட்டிலும் ஊடுருவியுள்ளதைக் காணலாம். இது பெரும்பாலும். திருவிழாக்களிலும், சடங்கு சார்ந்த நிகழ்வுகளிலும், வழிபாடுகளிலும் நிகழ்த்தப்படுகிறது. மிகுந்த துடிப்போடு விளங்கும் இந்தக் கலையில், நடிப்புடன் கூடிய வசனம், ஆடல், பாடல் என அனைத்தும் உள்ளன. இக்கலை, இரவு ஒன்பது மணிக்குத்தொடங்கி, விடியற்காலை வரை தொடர்ந்து நடைபெறுவதும் உண்டு.

தெருக்கூத்துக் கலையானது நாட்டார் கதை, சீர்திருத்தக்கதை, விழிப்புணர்வுக்கதை, மகாபாரதம், இராமாயணக் கதைகள், புராணக்கதைகள், கதைப்பாடல்கள் ஆகியவற்றின் உள்ளடக்கத்தைக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. கூத்து தொடங்கும்முன் அரைமணி நேரத்திற்கு மிருதங்கம், ஜால்ரா உள்ளிட்ட இசைக்கருவிகள் அனைத்தும் ஒரு சேர ஒலிக்கும். இவ்வொலி, ஊராரை அழைப்பதற்கு உதவியாக இருக்கும். இதனைக் களரிகட்டுதல் என்பர். தென்னாற்காடு மாவட்டத்தில் இதனைத் தாளக்கட்டு என்பர். களரி கட்டுக்குப் பிறகு, பார்வையாளர்கள் முன் தோன்றுகிற, குறிப்பிடத்தக்க முதல் கதைமாந்தனைக் கட்டியக்காரன் என அழைக்கிறோம்.

கட்டியக்காரன், கூத்துக்களில் தன்னை அறிமுகப்படுத்துவதுடன் அவையோரை ஆயத்தம் செய்தல், கதைமாந்தர்களை அறிமுகப்படுத்தல், கதையை விளக்குதல், கதைமாந்தர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துதல், கூத்தின் ஒழுங்கமைப்பையும் காட்சி நிகழ்வுகளையும் எடுத்துக்கூறல், முக்கியத்துவம் மிகுந்த கதைமாந்தர்களுடன் உரையாடுதல், விமர்சனம் செய்தல், பார்வையாளர்களுடன் ஊடாடுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்யும் கதைமாந்தன் ஆவான்.

கூத்தில் இவனது நடிப்பும் பாடலும் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடியதாக அமையும். கட்டியக்காரன், தெருக்கூத்தைக் கட்டியாள்பவனாகக் கூத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை இயங்குவான். இவன், கதையின் முக்கிய கதை மாந்தர்களையும் அவர்களது

தெருக்கூத்தில் கட்டியக்காரன் என்னும் கதைமாந்தன்

கட்டியக்காரன் : அண்டம் நடுநடுங்க, ஆகாசம் கிடுகிடுக்க, கட்டியக்காரன் நான் இங்கு வந்தேனே... கட்டி ஆள இங்கு வந்தேனே...

(எனக் கட்டியக்காரன், தெருக்கூத்தின் முதல் கதைமாந்தனாகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு வருவான்.)

மன்னர் : காவலா!

கட்டியக்காரன் : மன்னா!

மன்னர் : நான் யாரென்று தெரியுமா?

கட்டியக்காரன் : எனக்குத் தெரியும்; ஆனால், இங்கு உட்கார்ந்து இருக்கிறவர்களுக்குத் தெரியாது. அதனால, நீங்களே சொல்லுங்க.

செயற்பாடுகளையும் மறைமுகமாகக் கேலி செய்வான்; கேள்விக்கு உட்படுத்துவான்.

தெருக்கூத்தில் கோமாளி, காவலன், மந்திரி, தோழி, குறிசொல்பவன் போன்ற பலவகையான துணைமாந்தர் வேடமேற்றுக் கட்டியக்காரன் இயங்குவான். பெண் பாத்திரமேற்றுப் பேச வேண்டியிருந்தால், துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு தோழியாக மாறுவான்; இடுப்பில் கட்டிக்கொண்டு பணிவுடன் பேசினால் காவலாளி; கழுத்தில் மாலை போட்டுக்கொண்டால் மந்திரி என்பதுபோலத் துணைமாந்தர் பலரின் வேடங்களை ஏற்றுக் கதையோட்டத்திற்கு ஏற்ப நடிப்பான்.

கட்டியக்காரனின் கூற்றிலும் தன்மையிலும், கூத்துக்குக் கூத்து வேறுபாடுகள் இருந்தாலும், கட்டியக்காரனின் தோற்றம், பாடும் முறை, கட்டியங்கூறும் வகை என்பனவற்றில் பெரிய வேறுபாடுகளில்லை. கட்டியக்காரன் இப்படி, இவ்வாறு, இந்த நேரங்களில் வரவேண்டும் என முறையான வரையறைகள் ஏதும் இல்லை.

இந்த நெகிழ்வுத்தன்மையுடன், அக்கூத்தின் கதையோட்டத்தையும் கதைமாந்தர்களையும் இறுதிவரை கட்டுக்கோப்பாகக் கொண்டுசெல்லும் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பாளானாக இவன் செயல்படுவான். மேலும், கூத்தின் தொடக்கம்முதல் முடிவுவரை எத்தனை நாள் கூத்து நடந்தாலும், ஏதேனும் ஓர் உருவத்தில் ஆடுபரப்பில் செயல்பட்டுக்கொண்டே இருப்பான். கட்டியக்காரன், கூத்து நிகழ்த்தும் வாத்தியாருக்கு நிகரானவன் என்பது, கூத்தில் அவனுடைய பொறுப்பை எடுத்துக்காட்டுகிறது.

கட்டியக்காரனின் உடை

கட்டியக்காரனுடைய உடை, முழுக்கால் சட்டையும் பல வண்ணங்கள் கொண்ட மேல் சட்டையும் கோமாளித் தொப்பியும் ஆகும். மற்றவர் கதைக்கு ஏற்பவும், பாத்திரத்தின் தன்மைக்கேற்பவும், உடலோடு ஒட்டிய முழுக்கால் சட்டை, அதன்மேல் குட்டைப் பாவாடை போன்ற உடையும் அணிவான். பாத்திரத்திற்கேற்ற மேல் உடையும் கட்டைகளால் ஆன மகுடம், மார்புப் பதக்கம், தோளணிகள் (புஜகீர்த்திகள்) போன்ற அணிகளையும் அணிவான். வண்ணக் காகிதங்கள், பாசிமணிகள், கண்ணாடித் துண்டுகள் போன்றவற்றால் அணிகலன்கள் அழகுபடுத்தப்பட்டிருக்கும். பெண் வேடம் புனையும்போது, சேலையும் இரவிக்கையும் அணிந்து குறைவான அணிகலன்களையும் அணிவான்.

கட்டியக்காரனுக்கு வழங்கும் வேறு பெயர்கள்

கட்டியக்காரன் கோமாளி, காவற்காரன், பஃபூன், சபையலங்காரன், விதூஷகன் போன்ற பல பெயர்களில் அழைக்கப்படுகிறான். கட்டியம் என்றால், அரசன் முன் புகழ்மொழி கூறுதல் என்று பொருள். தெருக்கூத்துக் கதைமாந்தர்களின் அருமை பெருமைகளைச் சொல்லிப் பார்வையாளர்களுக்கு அவர்களை அறிமுகப் படுத்துவதாலும் கட்டியக்காரன் எனப் பெயர்பெற்றுள்ளான்.

கூத்தில் மிகச் சுதந்தரமாக இயங்கும் கதைமாந்தன், கட்டியக்காரன் மட்டுமே. பார்வையாளர்கள், இரவு முழுவதும் உறங்காமல் விழித்திருப்பதற்காகக் கலகலப்பை ஏற்படுத்தியும் அவ்வப்போது நிகழ்கால நடப்புகளைச் சொல்லியும் கூத்தைக் கொண்டுசெல்வான்.

கட்டியக்காரன், கூத்து நடைபெறும் கால அளவுக்கேற்பக் கூத்தை நீட்டுவதற்கோ சுருக்குவதற்கோ ஏற்றார்போல், கதைமாந்தர்களை எல்லைக்குள் கொண்டுவந்து நிறுத்த வேண்டும். ஒப்பனை முடிந்து கதைமாந்தர் மேடைக்கு வரும்வரை பார்வையாளர்களோடு நாட்டு நடப்பையும் நகைச்சுவையையும் பகிரவேண்டும். இத்தனையும் நிறைவேற்றும் கட்டியக்காரன், கூத்தின் அனைத்துக் கூறுகளையும் தெரிந்தவனாக இருக்கவேண்டும். கூத்துக்கலையில் தேர்ந்த கட்டியக்காரன், பார்வையாளர்களின் குரலாக, மக்களின் குரலாக இறுதிவரை இயங்குகிறான்.

தெருக்கூத்தில் கட்டியக்காரன் பாடும் பாடல்

வந்தேனே கட்டியக்காரன்
வெட்டிவேர் மரிக்கொழுந்து
வீசுதே வாசம்
வேடிக்கை விநோதமுள்ள
கட்டியக்காரன் (வந்தேனே)

பல்லில் முத்து வரிசை
பளபளன்னவே
பாங்கியர் இருபுறம்
சாமரம் வீசவே (வந்தேனே)

கன்னத்தில் கனத்தமீசை
கையில் முறுக்கி
கபுதார் கபுதார் என்று
கையைக் கொட்டியே (வந்தேனே)

முறுக்கு மீசை முகத்தில்
பொறி பறக்க
அறிக்கை சொல்ல வேண்டியே
அன்புடன் வந்தேன் (வந்தேனே)

கோரைப் பல்லும் நீண்ட மூக்கும்
கோடையிடி போலக் காட்டி
தேரைப்போல் முதுகுடைய
தீரன் கட்டியக்காரன் (வந்தேனே)

செம்பட்டை மயிர் துலங்க
ஜெகத்தில் உள்ளோர் கலங்க
வெம்புடன்போலக் கட்டியன்
வீறுடனே வந்தேன் பாரீர் (வந்தேனே)

இத்தகைய கூத்துகள் தமிழகத்தின் வடபகுதிகளில் நடத்தப்படுகின்றன. தமிழகத்தின் தென்பகுதிகளில் இத்தகைய கூத்துகளுக்குப் பதிலாக ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தப்படுகின்றன. சங்கரதாச சுவாமிகள் இந்த ஸ்பெஷல் நாடக முறையை உருவாக்கினார். பின்பு நடிகர் நடிகையர்கள் ஒருவரோடு ஒருவர் வெவ்வேறு இடங்களில் மாறி மாறி இணைந்து நடிப்பது இந்நாடகத்தின் இயல்புகளுள் ஒன்றாகும்.

குறிப்பிட்ட ஊரில் நாடகம் நடத்துவதற்கு அவ்வூர் மக்கள் எந்தெந்த நடிகர்களை விரும்பி அழைக்கிறார்களோ அவர்களாக வந்து நாடகத்தில் நடிப்பார்கள். நாடகத்திற்கென்று தனியாக ஒத்திகை ஏதும் நடைபெறாது. கலைஞர்கள், பாடல்களையும் வசனங்களையும் சூழ்நிலைக்கேற்ப நிகழ்த்துவார்கள். நடிகர்கள் எல்லோருக்கும் எல்லா நாடகங்களும் தெரிந்திருந்தால் தான் ஸ்பெஷல் நாடகத்தில் நடிக்க முடியும். அவரவர்கள் கற்ற வித்தையின் மூலம் ஒருவரை ஒருவர் வெல்லும் நோக்கத்தில் நிகழ்ச்சியைப் பேசியும் பாடியும் நிகழ்த்துவார்கள். நகர்ப்புறங்களைவிடக் கிராமப்புறங்களில் ஸ்பெஷல் நாடகங்களுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு.

நாடகவியல் ஆளுமைகள்

சங்கரதாச சுவாமிகள் (1867 – 1922)



தமிழ் நாடக மரபைப் பின்பற்றியும் கால மாற்றங்களுக்கேற்ப நாடகம் படைத்தவர் சங்கரதாச சுவாமிகள். இசையை முதன்மைப்படுத்திக் கூத்து மரபுகளை உள்வாங்கி நாடகங்களைப் படைத்தார். பழங்கதைகளில் குறைவான நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு பாத்திரங்களின் தர்க்கத்திற்கு இடமளித்து நாடகங்களை உருவாக்கினார். சிறுவர்களைக் கொண்ட 'பாய்ஸ் கம்பெனி' என்ற பாலர் நாடகக்குழுவை இவர் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. இதைத் தொடர்ந்து பல குழுக்கள் உருவாயின. இவரைத் தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைப்பர்.

ஆட்டம், இசை, சிறிதளவு வசனம் என்று இருந்த தெருக்கூத்து நாடகங்களின் அமைப்பைக் குறைத்து, கற்பனைச் சிறப்பும் சந்தநயம் மிக்கதுமான பாடல்களை இவர் படைத்தார். நடிகர்கள் விருப்பம்போல் வசனங்களைப் பேசிவந்த நிலையை மாற்றி வரையறுத்த நாடகப் பிரதிகளை உருவாக்கினார். பழந்தமிழ் இலக்கிய வரிகளையும் உரையாடலில் பயன்படுத்தினார். இவரது நாடகங்களிலும் பாடல்களின் ஆதிக்கம் இருந்தது. இவர் பல புராண நாடகங்களையும், வரலாற்று நாடகங்களையும் எழுதியிருக்கிறார். இசையை, கருநாடக இசைக் கூறுகளை முதன்மைப்படுத்தி நாடகங்கள் நிகழ்ந்தன. இவர்காலத்தில் படிப்படியாக நகரங்களை நோக்கி நாடகங்கள் நகர்ந்தன.

மதுரகவி பாஸ்கரதாஸ் (1892–1952)

சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் இந்திய அளவில் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர், தமிழ் நாடகக் கலைஞர் மதுரகவி பாஸ்கரதாஸ். ஆங்கிலேய அரசின் அடக்குமுறையை எதிர்த்தார். நாடு முழுவதும் விடுதலை அரசியல் வீறுகொண்ட காலகட்டத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் மீதும் காந்தியடிகளின் அகிம்சைவழிப் போராட்டங்களின் மீதும் பற்றுக்கொண்ட இவர், தம் நாடகங்களில் பாடல்களின்வழி விடுதலைக்கருத்துகளைப் பொதுமக்களிடத்தில் கொண்டுசேர்த்தார்.

ஆங்கிலேய அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் நாடகங்களைக் கட்டுப்படுத்திய போது தேசிய விடுதலைக் கருத்துகளை நுட்பமாக இணைத்து நாடகப் பாடல்களை இயற்றிக் கவி புனைவதில், புதிய முறையை உருவாக்கினார். பகத்சிங் தூக்கிலேற்றப்பட்ட நிகழ்வு, காந்தியடிகள் பங்கேற்ற வட்டமேசை மாநாடு, பஞ்சாப் படுகொலை ஆகிய நிகழ்வுகளைக் கொண்டு இவர் இயற்றிய நாடகப் பாடல்கள் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்டன.

திரைப்படங்கள் அல்லாத அக்கால கட்டத்தில் மதுரகவியின் நாடகப்பாடல்களைப் புகழ்பெற்ற ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் (His Master's Voice) இசைத்தட்டு நிறுவனம் கிராமபோன் இசைத்தட்டுகளில் பதிவேற்றி உலகம் முழுவதும் கொண்டு சென்றது. புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான கே.பி. சுந்தராம்பாள்,

கிட்டப்பா, எம். எஸ். சுப்புலட்சுமி போன்றோரும் இவரின் நாடகங்களில் பாடி நடித்துள்ளனர்.

பம்மல் சம்பந்தனார் (1873 – 1964)

'தமிழ்நாடகத் தந்தை' என்றழைக்கப் பட்ட பம்மல் சம்பந்தனார் நாடக அமைப்பிலும் நடிப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் தமிழ் நாடகத்தை மேனாட்டு நாடகங்களுக்கு நிகராக மாற்றியவர். புராண, வரலாற்று நாடகங்களுடன் மக்களின் வாழ்க்கையை ஒட்டிய கதைகளைக் கொண்ட, இயல்பான பேச்சு மொழியில் அமைந்த சமூக நாடகங்களையும் இவர் நடத்தினார். பாடல்கள் மிகுந்திருந்த தமிழ் நாடகங்களில் உரையாடல்களை முதன்மைப் படுத்தினார்.

அரிச்சந்திரன் கதையை சந்திரஹரி என்று பொய் மட்டுமே பேசுகிற ஒருவனைப் பற்றிய கதையாக மாற்றியதன் மூலம் 'எதிர்க்கதை நாடகம்' என்னும் புதிய வகையையும் இவர் உருவாக்கினார். மொழிபெயர்ப்பு நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். இரவு முழுவதும் நடைபெற்ற நாடகங்களை மூன்று மணி அல்லது நான்கு மணி நேரத்திற்குள் முடிக்கும் முறையைக் கொண்டுவந்தார்.

1891இல் இவரால் ஏற்படுத்தப்பட்ட சுகுண விலாச சபை, தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பயில்முறை நாடகக் குழுவாகும். இவர் எழுதிய 94 நாடகங்களும் அச்சு நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள் மனோகரா, சபாபதி, சந்திரஹரி, சிறுத்தொண்டர் நாடகம், உத்தமபத்தினி போன்றவை குறிப்பிடத்தக்கன. நாடகத்தமிழ், நாடகமேடை நினைவுகள், பேசும்பட அனுபவங்கள் ஆகியன இவர் நாடகம் தொடர்பாக எழுதிய நூல்களாகும். 'இந்திய நாடக மேடை' என்ற இதழையும் இவர் வெளியிட்டார்.

பாலாமணி அம்மையார் (19ஆம் நூற்றாண்டின் இறுதி)

பாலாமணி அம்மையார் முதன் முதலாக முழுவதும் பெண்களே பங்கேற்ற 'பாலாமணி அம்மாள் நாடகக் குழு' வினைத் தொடங்கி நடத்தியவர். இவரின் குழுவில் எழுபது பெண்கள் இருந்தனர். 'நாடகஅரசி' எனச் சிறப்பிக்கப்பட்ட இவரது நாடகங்கள், சமுதாய சீர்திருத்தங்களையே உள்ளடக்கங்களாகக் கொண்டிருந்தன. நாடக மேடையில் பெட்ரோமாக்ஸ் விளக்குகளை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவரும் இவரே.

பாலாமணி அம்மையார் குறித்து, அவ்வை சண்முகம் "எனது நாடக வாழ்க்கை" என்ற நூலில் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார்.

"கும்பகோணத்தில் இரவு ஒன்பதரை மணிக்கு நாடகம் ஆரம்பமாகும். இதற்காகப் பார்வையாளர்களை ஏற்றிக்கொண்டு மாயவரத்திலிருந்து இரவு எட்டு மணிக்கு ஒரு ரயில் கும்பகோணத்திற்கு வரும். அதேபோல எட்டரை மணிக்குத் திருச்சியிலிருந்து ஒரு ரயில் வரும். அந்த ரயில்கள், கும்பகோணத்தில் நின்று விட்டு, இரவு மூன்று மணிக்கு மீண்டும் புறப்பட்டு, மாயவரத்துக்கும், திருச்சிக்கும் போய்விடும். பாலாமணி நாடகங்களைப் பார்க்க ரசிகர்களுக்காக ஆங்கில அரசு இத்தகைய சிறப்புத் தொடர்வண்டி விட்டது. அத்தொடர்வண்டியை, "பாலாமணி ஸ்பெஷல்' என்று அழைத்தனர்."

ஆர்.எஸ். மனோகர் (1925 – 2006)

தமிழ் நாடக உலகில் 'நாடகக் காவலர்' என்று போற்றப்பட்ட நடிகர் ஆர்.எஸ்.மனோகர் ஆவார். கல்லூரி நாடகத்தில் 'மனோகர்' கதாபாத்திரத்தில் நடித்ததால், அதையே தன் பெயராக மாற்றிக் கொண்டவர். இவரின் இயற்பெயர் 'ராமசாமி சுப்பிரமணியன்'

பல படங்களில் கதாநாயகனாக நடித்தார். ஆனாலும், நாடகத்தின் மீதான காதலால் 'நேஷனல் தியேட்டர்ஸ்' நாடக நிறுவனத்தை 1954இல் தொடங்கினார். 'இன்ப நாள்', 'உலகம் சிரிக்கிறது' ஆகிய சமூக நாடகங்களை அரங்கேற்றினார். பின்னர் பிரம்மாண்ட இதிகாச, வரலாற்று நாடகங்களை அரங்கேற்றினார். ராவணன், சூரபத்மன் உள்ளிட்ட எதிர்மறைக் கதாபாத்திரங்களைக் கொண்ட நாடகங்களைப் படைத்தார். சிறப்பான மேடை அமைப்பும், தந்திரக் காட்சிகளும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன.

இவரின் 'இலங்கேஸ்வரன்' நாடகம் வியக்கத்தக்க அளவில் தயாராகியிருந்தது. இலங்கையில் இந்த நாடகத்தைத் தொடர்ந்து 21 நாள்கள் தொடர்ந்து நடத்துவதற்கான வாய்ப்பு தேடி வந்தது. நாடகத்தைப் பார்த்து வியந்த மக்கள், இவருக்கு 'இலங்கேஸ்வரன்' என்ற பட்டத்தைக் கொடுத்து கவுரவித்தனர். இவரது நாடகங்களில் பன்முறை மேடையேறிய நாடகம் இது. 'சாணக்கிய சபதம்', 'சூரபத்மன்', 'சிசுபாலன்', 'இந்திரஜித்', 'நரகாசுரன்', 'சுக்ராச்சாரியார்' உள்ளிட்ட நாடகங்களும் குறிப்பிடத்தக்கவை. சொன்ன நேரத்துக்கு நாடகம் தொடங்கிவிடவேண்டும்; அனைத்தும் துல்லியமாக இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருப்பார். ஒவ்வொரு நாடகத்துக்கும் 30 நாள்கள் ஒத்திகை பார்ப்பவர். இவர் 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

தெரியுமா?

ஆண்டன் செகாவ்

(1860–1904)

ஆண்டன் செகாவ் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த நாடக ஆசிரியர் மற்றும் சிறுகதை எழுத்தாளர். இவர் புனைகதை இலக்கிய உலகில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். நாடக ஆசிரியராக இருந்து படைத்த, கடல் பறவை (*The Seagull*), அங்கிள் வான்யா (*Uncle Vanya*), மூன்று சகோதரிகள் (*Three Sisters*), செர்ரிப் பழத்தோட்டம் (*The Cherry Orchard*) ஆகிய நான்கு செவ்வியல் நாடகங்கள் மற்றும் அவரது சிறந்த சிறுகதைகள் ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்களிடம் தனி மரியாதையை ஏற்படுத்தின.

ஹென்ரிக் இப்சன் மற்றும் ஆகஸ்ட் ஸ்ட்ரின்ட்பெர்க் ஆகிய இருவருடனும் செகாவ் இணைந்து நவீனத்துவத்தை மேடைகளில் புகுத்தினார். நவீனத்துவத்தை நாடகங்களில் தொடங்கிவைத்ததில் இம்மூவரும் முக்கியமானவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். மேலும், செகாவின் இந்நாடகங்கள் மரபுவழி நடிப்புக்குப் பதிலாக, பார்வையாளர்களுக்கு "மனநிலை சார்ந்த அரங்கியல்" என்னும் நுட்பத்தையும், "நாடகத்தின் உரைகளுக்குள் ஆழ்ந்து போகும் நிலையையும்" கொடுத்தன.

படிப்போம் சுவைப்போம்

தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என அழைக்கப்பெற்ற திரு. சங்கரதாச சுவாமிகளும், கவிராயர் முத்துச்சாமியும் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது, கவிராயர், சுவாமிகளை நோக்கி, "சங்கரதாச சுவாமிகளே! உம்முடைய பாடல்கள் முள்ளும் முரடும்போல் இருக்கின்றன" என்றார். அவர் கூறியதனைக் கேட்டவுடன், சங்கரதாச சுவாமிகள் சிரித்துக்கொண்டே, "கவிராயர் பாடல்கள் கல்லும்கரடும்போல் இருக்கின்றனவே!" என்றாராம். இருவருமே புலவர்கள். புலவர்களின் சொல்லாடல், அவர்களின் பேச்சிலும் ஊடுருவியுள்ளதைக் காணலாம். முள்ளும் முரடும், கல்லும் கரடும் என்பன முரட்டுத்தனமான பாடலென்றும் கடினமான பாடலென்றும் பொருள் தோன்றும். ஆனால், உட்பொருள் அதுவன்று. முள்ளும் முரடும்போல் என்றால், பலாச்சுளைபோல் இனிக்கிறது எனவும், கல்லும் கரடும் என்றால், கற்கண்டைப்போல் இனிக்கிறது எனவும் பொருள்படும்.

– தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என்னும் நூலிலிருந்து டி. கே. சண்முகம்.

நாடகம்

'ஒரு ரூபாய்'

– ஜெயந்தன்

(ஒற்றை நடிகர் நாடகம்)

மேடையில் சவுக்குக் கழிகள் ஆங்காங்கே நடப்பட்டுள்ளன. அந்தக் கழிகளின் தலைப்பில் போதுமான நீளஅகலமுள்ள அட்டைகள் அறையப்பட்டுள்ளன. அட்டையில் எழுத்துகள் புளோரஸண்ட் மையால் எழுதப்பட்டுள்ளன. இந்தக் கழிகள் எல்லாவற்றையும் ஒரு நீள வடக்கயிறு இணைத்துக் கொண்டு சென்றிருக்கிறது. இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டுதான் நடிகன் 'பேருந்து நிலையத்திலிருந்து' 'வீடு' வரை பயணிக்கிறான்.

கயிறு, தரையிலிருந்து சுமார் நான்கடி உயரத்தில் இருக்கிறது. மேடையில் மெல்ல ஒளி வளரும்போதே, ஒரு 'கனமான' ஸ்பாட்லைட், கழிகளில் அறையப்பட்டுள்ள அட்டைகளின் மேல் விழுந்து, நகருகிறது. அது எல்லா அட்டைகளையும் காட்டி முடிக்கவும், மேடையில் ஒளி போதுமான அளவு வளர்ந்து நிற்கவும் சரியாக இருக்கிறது.

கழிகள் 'பேருந்து நிலையம்' மற்றும் 'வீடு' இரண்டின் முன் மட்டும் நாற்காலிகள் உள்ளன. பேருந்து நிலையம் முன்பு உள்ள நாற்காலியில் நடிகன் உட்கார்ந்திருக்கிறான். அவன் தலைநாட்டி, துடைகளில் முன்கை வைத்து, முகவாய் தாங்கி உட்கார்ந்திருக்கிறான். உடை, ஒரு சாதாரண பேண்டும் சிலாக் சட்டையும், வயது 32 லிருந்து 36 வரை.

இடையில், பின்னணியில் ஒரு பெரிய பேருந்து நிலையத்தின் இரைச்சலும் சத்தங்களும் அவை மெல்ல எழுந்து, உரத்து பின் மெல்ல அடங்குகின்றன. முகத்தில் சோகம். இருந்தாலும், விடுபட்டுத்தானே ஆக வேண்டும்? என்ற உணர்வுகூட, அவன் மெல்லக் கைகளை உதறி, இயல்பு நிலைக்கு வர முயல்கிறான்.

அவன்: ரொம்பப் பெரிய விஷயம் இல்லதான். ஆனாலும் (இடைவெளி)

நூத்து அம்பது ரூபா (இடைவெளி) பிக்பாக்கெட் ஆயிடுச்சு. எவனோ அடிச்சுட்டான். (நேரடியாக அவையைப் பார்த்து) இவ்வளவுதானே. ஒரு பிக்பாக்கெட் ஆயிட்டதுக்கா என்னமோ கப்பலே கவுந்து போயிட்ட மாதிரி உக்காந்து இருந்தே அப்படின்னு கேக்கறீங்களா? அது உங்க குற்றமில்லதான். அது இயற்கைதான்.



பேருந்து நிலையம்

என்னதான் இருந்தாலும் அடிபடுறது வேற ஒருத்தன், இல்லியா? இன்னொருத்தன் பட்ட அடிய புரிஞ்சுக்கறது கஷ்டம்தான்.... நீங்க சொல்றமாதிரி கப்பல் கவுந்து போகாம இருக்கலாம். ஆனா.... ஆனா ஒரு ரகசியம் சொல்றேன்.

ஒரு நகரமே காணாமப் போச்சு ஐயா. என்னோட மதுரை மாநகரமே காணாமப் போச்சு. கூடல் மாநகரமே காணாமப் போச்சு, வெளங்கல, இல்ல? சொல்றேன். அந்தப் பணத்த நான் ஒண்ணும் கைக்காவலுக்கு எடுத்துகிட்டு வரல. அதுக்குச் சரியான செலவு இருந்தது.

(அவன் முதலில் தனது சட்டைப் பையில் தேடிவிட்டு, பிறகு பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து, அந்தக் கழிமேலேயே சாய்ந்து கொண்டு படிக்கிறான்.)

Big Bag – பை ஒண்ணு

பச்சரிசி –1 கிலோ

குக்கர் கேஸ்கட்–1

பாரக்ஸ் – 1

டெரிபிளின் மாத்திரை – 5

வேணுவுக்கும் சாந்திக்கும் அல்வா, பக்கடா,

பச்சப்பழம் – 6

அம்மாவுக்கு வெற்றிலை, பாக்கு.

(அந்தக் கடிதத்தை மடித்து மீண்டும் சட்டைப் பையில் வைத்தபடி)

சரி, ஆனா இப்ப பச்சரிசி, மாத்திரை எல்லாம் இருக்கட்டும். என்னால எங்கம்மாவுக்கு வெத்தலபாக்கு வாங்க முடியுமா? அதுகூட வேணாம். நான் திரும்பி வீட்டுக்குப்போக டவுன் பஸ்ஸுக்கு ஒரு ரூபா வேணுமே, அதுக்குக் கருணை செய்யுமா இந்த நகரம்? அதோ எதிர்ல, சர்பத் கடையில நிக்கிறாரே அதோட முதலாளி, அவருகிட்டப் போயி, மெதுவா "சார், ஒரு விஷயம். பர்ஸ் பிக்பாக்கெட் ஆயிடுச்சி, வீடு தெப்பக்குளம் பக்கம், திரும்பிப்போகப் பஸ்ஸுக்கு ஒருரூபா வேணும். கொடுத்தா, நாளைக்கி வர்ரப்ப கொடுத்துடுவேன்னு சொன்னா, அவரு என்னா சொல்வாரு? ஒண்ணும் சொல்ல வேணாம். கொஞ்சம் மேலயும் கீழயும் பாத்துட்டு அப்புறம் கட்டக்குரல்ல, "எத்தினி பேரு இப்பிடிக் கௌம்பி இருக்கீங்கன்னு" கேட்காம விட்டா பெரிசு, இல்லியா?

என்னா கொடுமைங்க இது. ஒரு பிக்பாக்ட்காரனால, ஒருத்தன, அவன் ஊருக்குள்ள இருக்கப்பவே, ஊருக்கு வெளியே தூக்கி எறிஞ்சுட முடியுமா?

இது நான் பொறந்த ஊருங்க. எங்க ஊரு, எங்க ஊருன்னு ஆயிரம் தடவ சொல்லி மார்தட்டுன ஊருங்க. வெளியூர்ல இருக்கப்ப யாராவது சொந்த ஊர் எதுன்னு கேட்டா? ஊள்ளுக்குள்ள ஒரு பெருமையோட 'மதுரை'ன்னு சொல்லுவேன்.

இப்ப அந்த ஊருக்கு நடுவுல நிக்கிறப்பவே, அதுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லே. அது யாரோ, நான் யாரோ ! நீங்க உள்ளுக்குள்ள முணுமுணுக்கலாம். 'என்னய்யா பர்ஸ் போயிட்டா கையில பணம் இருக்காது. ஒண்ணும் வாங்க முடியாது. ஒண்ணும் செய்ய முடியாது. கஷ்டம்தான். ஆனா, அதுக்காக ஒருத்தன் இவ்வளவு அலட்டிக்கனுமானு கேக்கலாம்.



சர்பத் கடை

உண்மதான், உண்மதான். ஆனா, என் மனசு என்னமோ ஆறலிங்க. என்னால ஜீரணிக்க முடியலிங்க. ஒரு மனுஷனையும் அவனோட நகரத்தையும் சேத்துக் கட்டியிருக்க சங்கிலி ஒரு மணிப்பர்ஸ்தானா? அது போயிட்டா எல்லாம் போயிடுமா? என்ன வாழ்க்கை விதி இங்க அமல்ல இருக்கு?

(இப்போது அவன் இரண்டடி முன்னால் வந்து அவையிலிருந்து யாரோ பேசுவது போலவும் அதைக் கேட்பது போலவும் காது கொடுக்கிறான்.)

என்னா சொல்றீங்க?

தயவு செஞ்சு கொஞ்சம் சத்தமா பேசுங்க.

சரிங்க, சரிங்க. ம்….. சரிங்க, சரிங்க.

(முடிவாக) சரிங்க.

நீங்க முதல் வரிசையில இருந்து பேசுனதுனால, ஒங்க பேச்சு சபை முழுசுக்கும் கேட்டிருக்காது அதனால மொதல்ல, நீங்க சொன்னத சபைக்குச் சொல்லிடுறேன்.

(அவன் முற்றிலும் வேறொரு பாணியில் பேச ஆரம்பிக்கிறான்.)

மிஸ்டர், சிறுகதையைப் பத்தி சொல்வாங்க: முதல் பக்கத்துல ஒரு துப்பாக்கி தொங்குனா, நாலாவது பக்கத்துல அது வெடிச்சாகணும்னு. அந்த மாதிரி, ஒரு ஒற்றை நடிகன், நடிகை நாடகத்துல, முதல்ல ஒரு பேருந்து நிலையத்தையும் கடைசியில ஒரு வீட்டையும் போர்டு போட்டு காட்டிட்ட பின்னாடி, அதாவது இந்த நாடகத்தோட நீளம், இந்த ரெண்டுக்கும் இடைப்பட்ட பயணம்னு சொல்லிட்டுப் பின்னாடி, அந்தப் பயணத்த, அதாவது நாடகத்த, அதாவது ஒரு ஒற்றை நடிகன் நாடகத்த, இருபது, இருபத்தஞ்சு நிமிஷத்துக்குள்ள முடிச்சாகணும். நீ என்னடானா பொறப்பட்ட எடத்துல நின்னே அஞ்சு நிமிஷமா பேசிக்கிட்டு இருக்கியே. இப்படியே பத்துப் பதினைந்து நிமிஷத்த பாதி தூரத்துக்கே செலவழிச்சுட்டு, அப்புறம் நேரம் பத்தாம, வீட்டப் பாத்துக் குடுகுடுனு ஓடுவியா?

(தொண்டையைக் கனைத்துக் கொள்கிறான். பிறகு எழுத்து நடையில் பேசுகிறான்.)

அவையோர்களே! இப்போது அவர் சொல்லியது அனைத்தும் உங்களுக்கும் என்னவென்று தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவர் சொன்னதும் சரிதான். அது எனக்கும் தெரிந்த விஷயம்தான். ஆனாலும், அதை நான் அவ்வளவு கண்டிப்பாக அனுசரிக்காததற்குக் காரணம் இருக்கிறது. ஒரு கதையும் கருத்தும் என்று எடுத்துக் கொண்டால் அதை இரண்டு வகையில் சொல்ல முடியும்.

ஒன்று: நிகழ்ச்சிகளை வரிசையாகச் சொல்லி, கடைசியில் நாம வரவேண்டிய முடிவுக்கு, அதாவது கருத்து அடைவுக்கு வருவது.

இரண்டு: முதலிலேயே கருத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு அதை நியாயப்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளை வரிசையாகச் சொல்லிக்கொண்டு போவது. என்னுடைய கதை இரண்டாவது வகைகையைச் சேர்ந்தது. அதனால், அஸ்திவாரத்தைக் கொஞ்சம் பலமா போட்டுவிட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டும். இருந்தாலும், நன்றி ரசிகர் அவர்களே! நான் இப்போதே எனது பயணத்தைத் தொடங்குகிறேன்.

(மீண்டும் பழையபடி பழைய தொனியில்.)

ஒரு மனுஷனையும் அவனோட நகரத்தையும் சேத்துக் கட்டியிருக்க சங்கிலி அவனோட பர்ஸ்தானா? அது போயிட்டா எல்லாம் போயிடுமா? என்ன வாழ்க்கை விதி இங்க அமலில் இருக்கு. சரி, பொதுவான மனுஷ ஜாதிமேல வச்ச அக்கறை போதும். இப்ப சொந்த கவலைக்கு வர்றேன். கையில் காசுமில்லை, கடன் கொடுப்பார் யாருமில்லை. வீட்டுக்கே நடராஜா சர்வீஸ்லதான் திரும்பணும். வீடு, தெப்பக்குளம், தாமரை நகர். அஞ்சு கிலோ மீட்டராச்சும் இருக்காதா? நடந்துட முடியாதா? முடியுமா முடியாதாங்குற கேள்வியில்ல. முடிஞ்சாகணும். ஓகே. ஆனா நேரா விடுவிடுன்னு நடந்துடக் கூடாது. எப்பவும் டவுனுக்கு வந்ததும் காச வச்சுக்கிட்டு

நடந்து போற ருட்லயே இப்ப காசு இல்லாம நடந்து, இந்த அனுபவம் எப்படியிருக்கும்னு பாத்துடனும். சரி நடக்கலாம்.

(அவன் கயிற்றின் ஆரம்பத்தை வலது கையில் பிடித்துக் கொள்கிறான். பிறகு தேவாலயம் போர்டை நோக்கி மிக மெதுவாக நடக்கிறான். இங்கே நடிகன் நடக்காமலே நடக்கும் மௌன நாடக (Mime) நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.)

இந்தத் தேவாலயம் வந்தாச்சு. என்னப் பாத்ததும் தேவாலயம் வாசல்ல இருக்க பிச்சக்காரங்க எல்லாம் உஷாராயிடுறாங்க. தட்டுகள கையில் எடுக்கிறாங்க. அடப் பாவிங்களா, இப்ப, என் நெலம உங்க நெலமயவிட மோசமப்பா. இப்ப ஒங்ககிட்டனாலும் ரெண்டொண்ணு இருக்கும்!

இந்தக் கோயில் வாசல் வரிசையில் கூட நான் யாருக்கும் பிச்ச போட்டதில்லை. ஒரேயொரு தடவமட்டும், அந்தா, கடைசியில உக்காந்திருக்கானே தாடி ஆசாமி, அவனுக்கு 50 காசு போட்டுட்டேன். அதுல இருந்து அவன் புடிச்சுக்கிட்டான். எப்ப என்னப் பாத்தாலும் அவன் முகம் மலர்ந்திடும். அதுல நூறு பெர்சன்ட் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்பையும், முகமலர்ச்சியையும் கெடுக்க விரும்பாமயே, அப்புறம் ஒவ்வொரு தடவையும் காசு போட ஆரம்பிச்சேன். எனக்குக்கூட ஒரு ஆசை. ஒரு தடவ இவனுக்குக் காசு போடாம விட்டு இவன் ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு பார்க்கணும். ஆனா போடாம, இருக்க முடியாது. இப்ப ஒரு சான்ஸ், இவன் ரியாக்ஷன் எப்படியிருக்கும்னு பாத்துடலாமே.

(அவன் நான்கு அடிகள் நடக்கிறான். பின் சட்டென்று திரும்பிக்கீழ்நோக்கிப் பார்க்கிறான். பார்த்துத் திகைக்கிறான்.)

ஓ!, இது என்ன பார்வை! நான்தான் பிச்சைக்காரன் என்றால், நீ எனக்குமேல பிச்சக்காரனா போயிட்டியா? என்று கேட்கும் பார்வையா! அதுதான் அந்த அமரத்துவமான பொன் மொழியா! இருந்தத விட இப்ப ரெண்டு மடங்கு மூணு மடங்கு அதிகமாகத் தெரியுது. இப்பக் குடிச்சாகணுமென்னு வருது! இதுதான் மனுஷ புத்தி. இல்ல? சில மனுஷ பலவீனங்கள் அவன் மண்டைக்குள்ளயே உறஞ்சு கெடக்கு. The gone fish was so big – ஓடன முயல்தான் பெரிய முயல்.

(அவன் தொடர்ந்து நடக்கிறான்.)

ரெண்டு பக்கமும் கடைகள். வர்த்தக நிறுவனங்கள். பகல்லயே, பத்து பன்னென்டு டியூப் லைட் போட்டு ஜொலிக்கும் ஜவுளிக் கடையில இருந்து செருப்புக்கடை வரையிலும். ஆனா இன்னிக்கி எனக்கு எதுவுமே சம்பந்தமில்ல. எனக்குக் கொஞ்சம் தமாஸா கூட இருக்கு. இன்னைக்கு இவனுக யாராலயும் என்னைய ஒண்ணும் அட்ராக்ட் பண்ணிட முடியாதாக்கும். மேலக் கோபுர வாசல். இந்த வாசல் தெருவும் கீழக் கோபுர வாசல் தெருவும் சந்திக்கிற எடத்துல ஒரு நாலஞ்சு பழைய புஸ்தகக் கடை. எனக்குப் புதுப் புத்தகங்கள் பிரியம்தான். ஆனா, பழைய புஸ்தகம்னா கேரி.

ஆனா, இப்ப பயம். இந்தப் பழைய புத்தகக் கடையும் அந்தப் பாரதி புத்தக நிலையம் மாதிரி ஏதாவது ஏடாகூடமா கேட்டு வச்சா? மெதுவா நழுவுறேன்.

கீழக்கோபுர வாசல் இன்னம் நூறு நூத்தம்பது அடியிருக்கும். அய்யோ போச்சுடா! திண்டுக்கல் செல்வராஜு மாமா! செல்வராஜ் மாமா அடுத்தவன் பாக்கெட்ல கை வைக்கிற 65-வது கலைய அய்யம் திரிபுற அறிஞ்சவரு. 'தெரிந்தவன் என்று ஒருவன் கண்ணில் படுவது என்பதே தனக்குச் செலவு செய்வதற்காக' என்ற கொள்கையுடையவர். "வா! வா! வா! பாத்து எவ்வளவு நாளாச்சு. மொதல்ல டிபன் வாங்கிக்குடு." இது பாலபாடம். முடிஞ்சா ஒரு வேட்டி சட்டை கூட வாங்கிடுவாரு.



கீழக்கோபுர வாசல்

இந்தப் பிக்பாக்கெட் விவகாரம் எல்லாம் அவருக்கு அத்துப்படி. எனக்கு இத்தனை வருஷத்துக்குப் பின்னாடி இப்பதான் ஒரு தடவ நடந்திருக்கு. இனி வாழ்நாள் பூரா நடக்காதுனு நெனைக்கிறேன். ஏன்னா, இனிமே பர்ஸ் வச்சுக்கவே போறதில்ல. ஆனால், செல்வராஜ் மாமாவுக்கு எத்தினியோ தடவ பிக்பாக்கெட் போயிருக்கு. எவன் கிட்டயாவது திண்டுக்கல் போக டிக்கட்டுக்குப் பணம் கறக்கணும்னா இவருக்குப் பிக்பாக்கெட் ஆயிடும்!

இப்பநான் இவருகிட்ட உண்மையைச் சொன்னா, என்னாடா? மாப்ள நம்ம வழியிலயே வர்றானானுதான் நெனப்பாரு. அதோட இவருகிட்ட இன்னொரு நல்ல குணம். எவ்வளவு செலவு வச்சாலும் யாராச்சும் அகப்பட்டா, என்னப்பா ஒரு காப்பி வாங்கிக் குடுக்க அப்படிப் பேய்முழி முழிக்கிறான்னு சொல்லக் கூடியவர். (பதற்றத்துடன்) ஆக எப்படியும் இவருகிட்ட இருந்து தப்பிச்சாகணும். நான் சட்டுன்னு ரைட்ல அருணா ஜவுளிக்கடையப் பார்த்து நடக்குறேன்.

(அவன் கயிற்றை விட்டுவிட்டு நடு – முன் மேடைக்கு வருகிறான்.)

அங்க ஜவுளிக்கடை ஓரம், 'எதெடுத்தாலும் பத்து ரூபா' முன்னால வந்து நின்னுக்கிறேன். உடனே என்னோட ஊனக்கண் போயி, ஞானக்கண் திறந்துடுது.

(அவன் ஒரு மாதிரி உடம்பைக் குறுக்கிக் கொள்ளக் கண்கள் மட்டும் திசை மாறுகின்றன)

மாமா ரோட்டு நடுவுல வர்ராரு. பத்தடி, 15 அடி, 30 அடி, இப்ப சரியா என் முதுகுக்குப் பின்னாடி போய்க்கிட்டு இருக்காரு. 10, 20, 30, 40, 50 அடி, மாமா போயே போயிட்டாரு. போயிட்டாருனு தெரிஞ்சு தலையைத் திருப்பிப் பாக்குறேன். என் கண்கள் ஞானக்கண் இல்ல. பூனக்கண்ணுனு அப்பதான் தெரியுது. மாமாவும் ரெண்டு பேர் தள்ளி, 'எதெடுத்தாலும் பத்து ரூபா' பாத்துக்கிட்டு இருக்காரு. நான் நைசா நழுவுறேன்.

(மீண்டும் பழைய இடத்திற்குச் சென்று கயிற்றைப் பிடித்துக் கொள்கிறான். நடக்கிறான்.)

ஞாபகம் வருது. எங்க வீட்டுப் பக்கத்துல ஒரு குடிசை. அதுல ரெண்டு சிறுசுகளோட லெட்சுமி. ஒரு நாளு அவளோட 10 வயசுப் பையன் பள்ளிக்கூடத்துல சுற்றுலா போறாங்கனு 10 ரூபா கேட்டப்ப சொல்றா 'அட போடா, நான் ஒரு ரூவாயக் கண்டு ஒரு வாரம் ஆவுது தெரியுமா?' அவன் கிட்ட சொன்னது மட்டுமில்ல, மறுநாள் எங்க வீட்டுக்கும் வந்து, கண் கலங்க அதச் சொல்லிட்டுத்தான் 10 ரூபா கடன் வாங்கிட்டுப் போனா. ஒரு ரூபாய் இல்லாம ஒரு வாரமா ஒருத்தி – ரெண்டு பிள்ளைகளோட! அப்பக்கூட அது எனக்குப் பெருசா ஒரைக்கல. இப்பதான் அதோட முழு கனம் தெரியுது.

(அவன் 'கீழமாசி' வருகிறான்)

கீழமாசி வீதி வந்தாச்சு. இங்க இருந்துதான் வழக்கமா தெப்பக்குளம் பஸ் ஏறுறது. இப்ப, இன்னிக்கு இங்க இருந்துதான் எக்ஸ்ட்ரா நடை. விளக்குத்தூண் தாண்டி, கீழ வெளிவீதி போயி, அப்புறம் அங்க இருந்து நேரா நடையைக் கட்டணும். கீழவெளி வீதி வந்தாச்சு. மாலை மங்கிட்ட நேரம். பஸ் ஸ்டாண்டுல கொஞ்சம் பேரு நின்னுகிட்டு இருக்காங்க. ஒரு யோசன. யாராச்சும் தெரிஞ்சவங்க இருக்காங்களானு பாக்கலாமே. இருந்தா பேசிக்கிட்டு இருந்துட்டு, பஸ் வந்ததும் எனக்கும் டிக்கட் வாங்கிடுங்கனு சிம்பிளா சொல்லிட்டு ஏறிடலாமே. ஆனா அப்படி தெரிஞ்சவங்கதான் யாரையும் காணாம். அப்ப ஒரு நிகழ்வு. பஸ்சுக்கு நின்ன பெரியவர் ஒருத்தர் திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துடுறாரு. கூட இருந்த ஒரு சின்னப்பெண் அய்யோ தாத்தா, தாத்தானு கத்துறா. ஒரே பரபரப்பு. ரெண்டு பேரு அவரத் தூக்கி உக்கார வைக்கிறாங்க. ஒரு அம்மா என்னப் பாத்து; ஒரு சோடா வாங்கியாங்களேனு கெஞ்சற மாதிரி சொல்ல, என்னையறியாம நான் ஓடுறேன். கடை பக்கத்துலதான்.



சோடா கடை

சொன்னதும், கடைக்காரன் ஒரு சோடாவ கொடுக்குறான். கொண்ணாந்து கொடுத்ததும் பெரியவர் முகத்துல தெளிக்கிறாங்க. அவருக்குப் பிரக்ஞை வர்ரதுக்கு முன்னால எனக்கு வந்துடுது. அடடா! அந்தச்சோடா பாட்டிலுக்கும் காசுக்கும் நாமதான பொறுப்பு. அதுக்கு எங்க போறது? பெரிய வெக்கக்கேடா இல்ல போயிடும். அப்பதான் என் மண்டைக்குள்ளயும் ஒரு கிரிமினல் செக்ஷன் இருந்தது புரிஞ்சது. அந்தக் கூட்டத்தையும், இருட்டையும் பயன்படுத்திக்கிட்டு, மெல்ல நடையைக் கட்டிட்டேன். (மெல்லச் சிரிக்கிறான்) இருந்தாலும் நூறு இருநூறு அடி வரையிலும் பயம்தான்; கடைக்காரன் இல்லாட்டி யாராவது, சோடா வாங்கியாந்தது நீங்கதானேனு கூப்பிடுட்டா?

(மீண்டும் நடக்கிறான்)

தினமணி டாக்கீஸ் வந்தாச்சு, குருவிக்காரன் சாலை சந்திப்பு வந்தாச்சு, இன்னம் ரெண்டு பர்லாங்கு நடக்கணும். கை, கால் அசந்து வருது. (அவன் நடையில் களைப்பும் தளர்ச்சியும்) இனிமே கட்டடங்கள் கூட அவ்வளவு கிடையாது. ஆடிக்காத்து வேற. இந்தா, அதுவும் அது பங்குக்கு என்னையப் பதம் பாக்க வந்துருச்சு போல இருக்கே.

(காற்றின் பெரிய இரைச்சல் கேட்கிறது. அவன் காற்றையும், கண்ணில் விழும் தூசியையும் சமாளிக்க முடியாமல் தடுமாறுகிறான். பிறகு காற்று மெல்ல அடங்கப் பெருமூச்சு விடுகிறான்; நடக்கிறான்)

ஒரு வழியாக வீட்டுப் பக்கம் வந்தாச்சு, அந்தா வீடு.

(அவன் நின்று கண்கள் விரியப் பார்க்கிறான்)

அதென்ன வீட்டு முன்னால் அவ்வளவு கூட்டம்? என்ன நடந்திருக்கும்? யாருக்கும் ஒடம்பு சரியில்லயா? ஏதோ ரெண்டு போலீஸ் தொப்பி கூடத் தெரியுது.

(வேகமாக நடந்து வீட்டருகில் வருகிறான்)

யாரோ சொல்றாங்க, "என்னாது அந்தா அங்க வர்றது அவரு மாதிரியில்ல தெரியுது"

திடீர்னு கூட்டம் பூரா என் பக்கம் திரும்புது. என் மனைவி அழுது அடிச்சுக்கிட்டு ஓடி வர்றா. பின்னால என் அம்மா. பிள்ளைங்க. விஜி என் மேல விழுந்து, கட்டிப் பிடிச்சு அழுகுறா.

எனக்கு ஒண்ணும் வெளங்கல. என்னா என்னானு கேக்குறேன். அம்மாதான் "அட அய்யா, நீ பஸ்ல அடிபட்டு செத்துப்



வீடு

போயிட்டேனு சொல்லிட்டாங்க அய்யா"னு, சொல்லிட்டு அழுவுறாங்க.

விஷயம் இதுதான், என் பர்ஸ அடிச்சுட்டுப் போனவன் ஏதோ ஒரு பஸ்ல அடிபட்டுச் செத்துப் போயிருக்கான். அவன் கிட்ட என்னோட பர்ஸ். அதுல என் விலாசம். தகவல் கொடுக்க போலீஸ் என் வீட்டுக்கு வந்தாச்சு.

(அவன் அங்குள்ள நாற்காலியில் உட்காருகிறான். சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறான்.)

எல்லாரும் போயாச்சு. வீடும் நார்மல் ஆயிடுச்சு. பிள்ளைங்க, விஜி, அம்மா எல்லாரும் படுத்தாச்சு. எனக்குத்தான் தூக்கம் வரல. நடந்தது எல்லாம் வந்து, வந்து போவுது. ஆனா, இது அடிக்கடி வருது. லெட்சுமி சொன்னது. "அட போடா, ஒரு ரூவாயக் கண்டு வாரம் ஒண்ணாச்சு"

(அவன் நாற்காலியில் எவ்வளவு கால் நீட்டிச் சாய முடியமோ அவ்வளவு சாய்ந்து தலையைப் பின்புறமாகப் போடுகிறான். மெல்ல மேடையில் ஒளி குறைய, திரையும் இறங்குகிறது.)

ஜெயந்தன் (1937 – 2010)

ஜெயந்தன் என்னும் புனைபெயர் கொண்டவர் பெ.கிருஷ்ணன். இவர், திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்தவர். இவரது 'நினைக்கப்படும்' என்ற நாடகம் இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 'சிறகை விரி, வானம் உனது' என்னும் இவரது வானொலி நாடகம், அகில இந்திய வானொலியில் முதல் பரிசு பெற்றது. இவர், 'சிந்தனைக்கூடல்' என்னும் அமைப்பைத் தொடங்கி, இளைஞர்களுக்கு எழுத்துப் பயிற்சியையும் பேச்சுப் பயிற்சியையும் அளித்தவர்.

பேச்சுக்கலை

'வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்' என்று சொல்லக் கேட்டிருப்போம். பேச்சின் மூலம் எண்ண ஓட்டங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியும். தனிமனிதனின் தேவைக்கு மட்டுமல்லாமல் சமூகத்தின் தேவைக்கும் பேச்சுக்கலை அவசியமாகும். கருத்து வெளிப்பாட்டிற்கான பேச்சுமொழி, கலை வடிவமாக உருப்பெற்றுச் சமூகத்தின் மிக இன்றியமையாத அடையாளமாகவும் ஆளுமைத் திறனாகவும் வளர்ந்திருக்கிறது. இதன் காரணமாகவே

ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்து ஒன்றாம் புலவர்

வார்த்தை பதினாயிரத்து ஒருவர்

என்று ஔவையார் பாடியுள்ளார். கற்றறிந்த அறிஞர்கள் கூடியிருக்கும் உயர்ந்த சபைகளில் அமரும் தகுதி, நூறுபேரில் ஒருவருக்கே கிடைக்கும். ஆயிரம் பேரில் ஒருவரே கவிஞராகத் திகழ்வார். ஆனால், பத்தாயிரம் பேரில் ஒருவரே சிறந்த பேச்சாளராகத் திகழ்வார் என்று ஔவையார் வலியுறுத்தியுள்ளார். இத்தகைய ஆற்றல்வாய்ந்தது பேச்சுக்கலை.

பேச்சுக்கலையின் ஆற்றல்

பேச்சு, தனிமனிதனுக்குப் பயன்படுகிறது. பேச்சுக்கலை, தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் பயன்படுகிறது. அது, மக்களின் வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பேணிப்பாதுகாக்கிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தை வடிவமைக்க உதவுவது பேச்சுக்கலை ஆகும். உலகின் மிகச்சிறந்த தலைவர்கள் தங்கள் பேச்சாற்றலால் சமூகத்தில், அரசியலில் மிகப்பெரிய மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள்.

மன்னர் ஆட்சியை, ஏகாதிபத்திய ஆட்சியை, அந்நியர் ஆட்சியை, கொடுங்கோல் ஆட்சியை, முடியாட்சியை வீழ்த்தி மக்களாட்சியை

மலரச்செய்த ஆற்றல் உடைய கலை "பேச்சுக்கலை" ஆகும்.

மக்களாட்சி, தேசியம், பொதுவுடைமை, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், விழிப்புணர்வு முதலான பண்புகள் ஒரு நாட்டில் வளர்வதற்குத் துணையாக இருப்பது மனிதனின் தனித்திறமை வாய்ந்த பேச்சுக்கலையாகும்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சனிடம் நண்பர் ஒருவர், " நீங்கள் கால்மணி நேரம் சொற்பொழிவாற்ற எத்தனை நாள்கள் தயார் செய்வீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர், "இரண்டு வாரம்" என்றாராம். பிறகு, "ஒரு மணி நேரம் பேச ஒரு வாரம்" என்றாராம். பிறகு, "இரண்டு மணி நேரம் பேச வேண்டும் என்றால், எத்தனை நாள் தயார் செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு "இப்போதே பேசுகிறேன்" என்றாராம்.

பேச்சும் பேச்சுக்கலையும்

எண்ணத்தை வெளிப்படுத்த சைகை பயன்பட்டது. அழுகை, சிரிப்பு, அச்சம் முதலான உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயல்பாக எழுந்த ஒலிக்குறிப்புகள் ஒருவரின் எண்ணத்தையும் உணர்வையும் தெரிவித்தன. இனக்குழுக்களாக வாழ்ந்த மனிதச் சமூகம் பல நூற்றாண்டுகளாக ஒலியைத் தம் தேவைக்குப்

பயன்படுத்தி வந்தது. அதன் பக்குவப்பட்ட வடிவமாகப் பேச்சுமொழி விளங்குகிறது.

அன்றாடம் பேசுவது பேச்சு. அது மக்களை ஈர்க்கும் கலையாவது பேச்சுக்கலை. பேச்சில் உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது; ஆனால், மேடைப்பேச்சிலோ உணர்ந்ததனை, உணர்த்தும் வகையிலும் தெரிவித்தல் வேண்டும். மனிதர்களின் ஐம்புலன்களுக்கும் பணிகள் இருக்கின்றன. ஐம்புலன்களின் இயல்பான பணிகள் திறன் படைத்தாக மாறும்போது கலைசார்ந்ததாகச் செழிப்படைகின்றன. நாக்கு, சுவைத்தல் என்கிற பணியைச் செய்கிறது; பேசுவதற்கும் உதவுகிறது. அன்றாடத்தேவைக்கான பேச்சு இன்னும் கலைத்தன்மை சேர்ந்து பேச்சுக்கலையாகிறது. பேச்சில் அழகு, ஒழுங்கமைவு மற்றும் திறன்கள் இணையும்போது, அது கலை ஆகிறது. பேச்சு, கலைவடிவம் பெறுவதே பேச்சுக்கலையாகும். பேசுபவரின் திறன், மொழியின் திறன் இரண்டும் பேச்சுக்கலையின் அடிப்படைகளாகும். பேசுபவரின் ஒலிப்பு, பேச்சின் ஏற்ற இறக்கம், குரல்வளம் ஆகியவை பேசுபவரின் திறனாகும். அடுக்குமொழி, மரபுத்தொடர், கவிதை, பாட்டு, உரையாடல் ஆகியன மொழியின் வளங்களாகும். இவை சிறப்பாகப் பேசுவதற்கும் பேச்சானது, கலை வடிவம் பெறுவதற்கும் உதவுகின்றன. பேச்சும் மேடைப்பேச்சும் வெவ்வேறானவை.

பேச்சாளரின் பண்புகள்

கருத்துத்தெளிவு, சுருக்கம், தன்கருத்தில் என்றும் உறுதி, நூல்வழிக் கற்றது மட்டுமன்றித் தன்சுயசிந்தனைக் கருத்துகளை முன்வைத்தல், கேட்பவர்களுக்குப் புரியும் எளிய மொழிநடை, நகைச்சுவை உணர்வு, அவையறிந்து பேசுதல், நேரமறிந்து பேசுதல், உண்மையை மட்டுமே பேசுதல், சாதி, மத, மொழி, இன, தூண்டல்களும் வேறுபாடுகளும் இன்றிப் பேசுதல், பிறரது கருத்துகளை ஏற்கும் மனப்பான்மை, பிறரது நேரத்தை எடுத்துக்கொள்ளாமல், தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பேசி முடித்தல் போன்றவை பேச்சாளரின் தலைசிறந்த பண்புகளாகும்.

அறிவோம் தெளிவோம்

"மனிதனுக்கு உள்ள திறமைகளில் மிகுந்த போற்றுதலுக்குரியது பேச்சாற்றல். அதைச்சரியாகக் கைவரப் பெற்றவர்கள் அரசனைவிட அதிகாரம் பெற்றவர்கள். அந்தக் கலையைக்கற்றவர்கள் இந்த உலகில் விடுதலை பெற்ற ஆற்றலாக இயங்கக்கூடியவர்கள்"

– வின்ஸ்டன் சர்ச்சில்

குரலும் மொழியும்

- குரல்வளம் சிறப்பாக இருந்தால் பேச்சின் நடைநலமும் சிறக்கும்.
- ஒரே குரலில் சீராகப் பேசுவது பார்வையாளருக்கு விரைவில் சலிப்பை ஏற்படுத்திவிடும்.
- பேசும் கருத்திற்கு ஏற்ற உணர்ச்சியை வெளிப்படுத்துவதாகப் பேச்சின் வெளிப்பாடு இருக்க வேண்டும். மிகை உணர்ச்சி வெளிப்பாடுகளோ, உணர்ச்சியற்ற பேச்சோ இரண்டுமே தவிர்க்கப்பட வேண்டியவை.
- உச்சரிப்பில் தெளிவும் பேச்சில் உரிய ஏற்ற இறக்கமும் அமைந்திருத்தல் அவசியம்.
- பேசும் மொழியைப் பிழையில்லாமல் ஒலிக்கப்பழகிக்கொள்ள வேண்டும். பிழையான ஒலிப்பு, பேச்சையும் பேச்சாளரையும் நகைப்புக்குள்ளாக்கிவிடும்.
- உச்சரிப்புப் பிழையின்மை, மொழியழகு, சொற்குற்றம் இன்மை, சொல்லாட்சித் திறமை ஆகியனவற்றையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

பேச்சாளருக்கான தகுதிகள்

- பேசும் இடம், பங்கேற்பவர்கள் எண்ணிக்கை, பேச வேண்டிய கருத்து என்பனவற்றில் கவனத்தோடு இருக்க வேண்டும்.
- பேச்சை ஆரம்பிக்கும் முன்னர் நம் சிந்தனையில் சரியெனப் பட்டவற்றை நன்றாகச் சிந்தித்துப் பேசவேண்டும்.

• அவையை உயிரோட்டமுள்ளதாகவும் சுறுசுறுப்பானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

• பொருத்தமான கேள்விகளையும் பதில்களையும் முன்வைத்தல், பொருத்தமான நிகழ்வுகளையும் கதைகளையும் தம் பேச்சில் கூறுதல் நல்லது.

• பேசும் கருத்துகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு தொடக்கம்முதல் இறுதிவரை பேச்சின் அமைப்பை ஒரே சீராகப் பேணுதல் வேண்டும்.

• ஒரு கருத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிச் சலிப்படையச் செய்யக்கூடாது.

• பேச்சை முடிக்கும்போது நாம் இதுவரை பேசிய பேச்சின் சுருக்கத்தைச் சொல்லி முடிப்பது சிறப்பு.

• பேசும்போது தேவையற்ற மெய்ப்பாடுகளையும் உடல் அசைவுகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

• பேச்சில் 'போலச்செய்தல்' என்பதைத் தவிர்த்துத் தனக்கெனத் தனித்துவமான ஒரு நடையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

படிப்போம் சுவைப்போம்

அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தம் உரைகள் மூலம் சமத்துவத்தை எடுத்துரைத்த மார்ட்டின் லூதர் கிங் (Martin Luther king) சிறந்த பேச்சாளர். கறுப்பின மக்களுக்கு அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற அவரின் போராட்டங்கள் அவரின் சிறந்த உரைகள் மூலமே மக்களைச் சென்றடைந்தன. 1963 ஆம் ஆண்டு ஆற்றிய 'எனக்கொரு கனவு உள்ளது' (I HAVE A DREAM) என்ற உரை மிகச்சிறந்த உரையாக இன்றளவும் போற்றப்படுகின்றது.

• குறித்த நேரத்தில் பேச்சை ஆரம்பிக்கவும் முடிக்கவுமான பயிற்சியில் தேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

• பேசும்போது நம்முடைய பார்வையை அவையோர் அனைவரின் பக்கமும் செலுத்த வேண்டும்.

• பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் பேச்சுப் போட்டிகள், ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்துகொண்டு, மேடையில் அச்சம், கூச்சமின்றிப் பேசுவதற்குப் பழக வேண்டும்.

பேச்சின் முக்கூறுகள்

முறைப்படுத்தப்பட்ட உழைப்பும், சிறந்த திட்டமிடலும் ஒருவரின் வெற்றிக்கு அணி செய்கின்றன. பேசும் பொருளை ஒழுங்குமுறைக்குக் கொண்டுவந்து தொடக்கம், இடைப்பகுதி, முடிவு எனப்பகுத்துப் பேசுவதையே பேச்சின் கூறுகள் என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம்.

எடுத்தல்

பேச்சைத் தொடங்குவது எடுப்பு. தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும். தடங்கலின்றிப் பேச்சைத் தொடங்குவதே நல்ல அடித்தளமாகும். அவையோருக்கு வணக்கம் கூறி, சிறிய அறிமுகத்துடன் தொடங்க வேண்டும். அறிஞர்களின் மேற்கோள்கள், கவிதைவரிகள், ஆர்வத்தை ஏற்படுத்தும் செய்திகளோடு தொடங்கலாம். கேட்பவர்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதை மனத்திற்கொள்ள வேண்டும்.

தொடுத்தல்

தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும்முறை தொடுத்தல் எனப்படும். சொல்ல வேண்டிய கருத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்க வேண்டும். சிலர் பேசும்போது, என்ன தலைப்பில் பேச வந்தோம் என்பதையே மறந்து பேசிக்கொண்டிருப்பர்.

பேச்சு நன்றாக இல்லாவிட்டால் கேட்போரின் கவனம் சிதறிவிடும். பேச்சு கேட்பவர்களைக் கவர வேண்டும். பேச்சின் அடிப்படை, தெளிவாகப் பேசுதலாகும். ஆகையால் சொல் தெளிவும் கருத்துத் தெளிவும் மிக முக்கியமானவை. கருத்து, சுருக்கமாக இருக்கும்போது தான் பேச்சு சுவைக்கும்.

நாம் பேசும் பேச்சு, எளிமையான சொற்களைக் கொண்டதாகவும் பார்வையாளர்களின் ஆர்வம் குறையாமல் கருத்தைக்கொண்டு சேர்ப்பதாகவும் அமைதல் வேண்டும். மேலும் அது, கருத்தாழம் உடையதாகவும் தெளிவுடையதாகவும் கருத்து விளக்கமுடையதாகவும் அமையுமாயின் வெற்றியடையும்.

எண்ணங்களைச் சொல்லும் முறையால் அழகுபடுத்துவதே அணி எனப்படும். கேட்போர் சுவைக்கத்தக்க உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு நடைகள், சிறுசிறு கதைகள் முதலியன அமையப் பேசுவதே சிறந்த பேச்சாகும்.

உணர்ச்சி உள்ள பேச்சே உயிருள்ள பேச்சாகும். பேச்சாளர், தம் உணர்ச்சிப் பெருக்கில் பேசக்கூடாது. கேட்போரின் உள்ளத்தில் தாம்விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பேசுதல் வேண்டும்.

முடித்தல்

பேச்சை முடிக்கும்போதுதான், பேச்சாளர் தமது கருத்தை வலியுறுத்தவும் கேட்போர் மனத்தில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும். பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக்கூறி முடித்தல், அறிஞர்களின் கருத்தைக்கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் பல உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அது அழகாகவே இருக்கும்.

வடிவங்களும் வகைகளும்

பட்டிமன்றம், வழக்காடுமன்றம், சிறப்புரை, வரவேற்புரை, தொகுப்புரை, தலைமையுரை, ஏற்புரை, நன்றியுரை, சொற்பொழிவு, நகைச்சுவை மேடை, தொலைக்காட்சி விவாதமேடை, வானொலிஉரை, அரசியல் பேச்சு, தொலைக்காட்சிஉரை எனப் பலவகைகளையும் பல வடிவங்களையும் பேச்சுக்கலை கொண்டுள்ளது.

இலக்கியங்களில் பட்டிமன்றம்

தற்காலத்தில் 'பட்டிமன்றம்' என்று அழைக்கப்படுவது,முன்பு'பட்டிமண்டபம்'என்று அழைக்கப்பட்டது. பட்டிமண்டபம் என்ற சொல் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், கம்பராமாயணம் முதலான நூல்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில், "வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்" (5-102) எனவும் மணிமேகலையில் "பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏற்றுமின்"(1-16) எனவும் குறிக்கப்பட்டுள்ளது. திருவாசகத்தில் "பட்டிமண்டபம் ஏற்றினை" (சதகம் -41) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "பன்னஅரும் கலைதெரி பட்டிமண்டபம்" எனக் கம்பராமாயணத்திலும் வருகிறது. இதனால் கலைகளை ஆராயும் இடமே பட்டிமண்டபம் என்பது புலனாகிறது.

தற்காலத்தில் நடைபெறும் பட்டிமன்றத்திற்கும் வழக்காடுமன்றத்திற்கும் உள்ள வேற்றுமைகள் பின்வருமாறு:

மேடைப்பேச்சு நடை

பொதுவாக மேடைப்பேச்சில் கடின நடை, எளிய நடை, இலக்கிய நடை, அடுக்குமொழி நடை, கொச்சை நடை என ஐவகை நடைகள் உள்ளன.

பேச்சுக்கலையும் ஆளுமைகளும்

ஒரு பேச்சு எந்த மேடையில் நிகழ்த்தப்படுகிறதோ அந்த இடத்திற்கு மட்டுமே பொருத்தமாக இருந்தால், அது நல்ல பேச்சாக மட்டுமே இருக்கும். காலத்தை வென்று நிற்கும் சொற்பொழிவாக உயர முடியாது. எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் ஏற்றுக் கொள்ளும்படியான உண்மைகளை உள்ளடக்கி, இலக்கிய நயங்கள் மிளிர அமைக்கப்பட்ட உரைகளே தலையாய சொற்பொழிவுகளாக நிலைத்து நிற்கின்றன.

பட்டிமன்றம்	வழக்காடு மன்றம்
• நடுவரும் இருதரப்பிலும் மூன்றுபேர் என்னும் எண்ணிக்கையில் கருத்துகளை முன்வைப்பர். இந்த எண்ணிக்கை நேரத்திற்கும் சூழலுக்கும் தக்கவாறு மாறலாம்.	• நடுவரை நீதியரசர் என்போம். வழக்குத் தொடுப்பவர், மறுப்பவர் என மூவரைக் கொண்டு வழக்காடுவர்.
• பேசுபவரை நடுவர் மட்டுமே குறுக்கிட்டு, கருத்தைச்சொல்ல முடியும்.	• நடுவரும் வழக்கை மறுப்பவரும் வழக்குத் தொடுப்பவரைக் குறுக்கீடு செய்யலாம்.
• ஒரு தலைப்பில் மூவர் கருத்துகளை முன்வைப்பர்.	• ஒருவரே மூன்று நிலைகளில் வழக்கை முன்வைப்பர்.
• இரு அணியின் கருத்துகளையும் கேட்டபின் அவற்றுள் ஏதேனும் ஓர் அணிக்கு ஏற்புடைய தீர்ப்பை வழங்கலாம்.	• நடுவர் நீதியரசராக இருப்பதால் முன்னுரையோ அடித்தளமோ கூறமாட்டார்.
• நடுவர் இருதரப்பு கருத்துகளையும் விடுத்துத் தன்கருத்தைத் தீர்ப்பாகக் கூறலாம்.	• வாதிடுகின்ற இருவரின் கருத்துகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவார்.

விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு

விவேகானந்தர் அமெரிக்காவின் சிகாகோ நகரில் செப்டம்பர் 11, 1893 அன்று நடைபெற்ற உலகச் சமய மாநாட்டுக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து சில பகுதிகள் ...

அமெரிக்கச் சகோதர சகோதரிகளே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற, இப்போது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப் பழமைவாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்துச் சமயங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கானவர்களின் பெயரால் நன்றி கூறுகிறேன். இந்த மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களுள் சிலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை இவர்களைத்தான் சாரும் என்று உங்களுக்குக் கூறினார்கள்'. அவர்களுக்கும் என் நன்றி. பிற சமயக்கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்குப் புகட்டிய சமயத்தைச் சார்ந்தவன் நான், என்பதில் பெருமையடைகிறேன். எதையும் வெறுக்காமல் மதிக்கவேண்டும் என்னும் கொள்கைகளை நாங்கள் நம்புவதோடு, எல்லாச் சமயங்களும் உண்மை என்று ஒப்புக் கொள்ளவும் செய்கிறோம்.

என் அருமைச் சகோதரர்களே! பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும் கோடிக்கணக்கான மக்கள் இன்றளவும் நாள்தோறும் தொடர்ந்து பாடி வருவதுமான பாடலின் ஒருசில வரிகளை இங்கு உங்கள்முன் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே

துங்கமிகு நெறிபலவாய் நேராயும்

வளைவாயும் தோன்றி னாலும்

அங்கவைதாம் எம்பெரும! ஈற்றில்உனை

அடைகின்ற ஆறே யன்றோ!

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில் மிகமிகச் சிறந்ததாகக் கருதக்கூடிய இந்தப் பேரவை கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்திற்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

யார் எந்த வழியாக என்னிடம் வர முயன்றாலும் நான் அவர்களை அடைகிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளில் என்னை அடைய முயல்கிறார்கள். அவை எல்லாம் இறுதியில் என்னையே அடைகின்றன.

பிரிவினைவாதம், அளவுக்கு மீறிய சமயப்பற்று இவற்றால் உண்டான சமயவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன. அவை இந்தப் பூமியை நிரப்பியுள்ளன. உலகை இரத்தவெள்ளத்தில் மீண்டும் மீண்டும் மூழ்கடித்து, நாகரிகத்தை அழித்து, எத்தனையோ நாடுகளை நிலைகுலையச் செய்துவிட்டன. இந்தக் கொடிய அரக்கத்தனமான செயல்கள் இல்லாதிருந்தால் மனித சமுதாயம் இன்றிருப்பதைவிட பலமடங்கு உயர்நிலை எய்தியிருக்கும். அவற்றிற்கு அழிவுகாலம் வந்துவிட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் ஆரம்பத்தைக் குறிப்பிட முழங்கிய மணி, சமயவெறிகளுக்கும் வாளாலும் பேனாவாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும் ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

ஆபிரகாம் லிங்கனின் கெட்டிஸ்பர்க் உரை

கெட்டிஸ்பர்க்கில் *1863* நவம்பர் *19*ஆம் நாள் நடைபெற்ற நினைவுச்சின்னம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு லிங்கன் நிகழ்த்திய உணர்ச்சிமிகு உரை....



"எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு நமது முன்னோர் இந்தக் கண்டத்தில் சுதந்திரத்தை மனத்திற்கொண்டும் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்ற எண்ணத்திற்கு அர்ப்பணித்தும் ஒரு புதிய நாட்டை உருவாக்கினர்.

அப்படி உருவாக்கப்பட்ட, அர்ப்பணிக்கப் பட்ட ஒருதேசம் நீண்டகாலம் நிலைபெற்றிருக்குமா என்று பரிசோதனை செய்யுமொரு பெரும் உள்நாட்டுப் போரில் நாம் தற்போது ஈடுபட்டிருக்கிறோம். அந்தப்போரின் களத்திற்கு நாம் கொண்டு வரப்பட்டிருக்கிறோம். இந்தத்தேசம் வாழ்வதற்காகத் தங்களுடைய இன்னுயிரைத் தந்தவர்கள் இறுதிஓய்வு கொள்வதற்காக இந்தக்களத்தின் ஒருபகுதி மண்ணை அர்ப்பணிப்பதற்காக வந்திருக்கிறோம். நாம் இதைச் செய்வது பொருத்தமானதும் முறையானதுமாகும்.

ஆனால், ஒரு விரிவான பொருளில் பார்த்தால் நாம் இந்த மண்ணை வெறுமனே அர்ப்பணிக்க முடியாது; புனிதப்படுத்திவிட முடியாது. போரில் வீர மரணம் அடைந்த, உயிரோடு இருக்கிற மாவீரர்கள், நாம் நமது அற்ப அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கோ குறைப்பதற்கோ முன்னதாகவே தம் போராட்டத்தின்மூலம் இந்த மண்ணைப் புனிதப்படுத்தி விட்டார்கள். நாம் இங்கே என்ன சொல்கிறோம்? என்பதை உலகம் கவனத்தில் கொள்ளவோ நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கவோ செய்யாது. ஆனால், அது அவர்களின் வீரச்செயலை ஒருநாளும் மறக்காது.

அவ்வீரர்களின் முற்றுப்பெறாத பணிகளை, வாழ்ந்துகொண்டிருக்கும் நாம்தான் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இங்கே நாம் கௌரவப்படுத்திய வீரர்கள் எந்த நோக்கங்களுக்காகத் தம் அர்ப்பணிப்பை முழுஅளவில்

வழங்கினார்களோ, அந்நோக்கங்களை நிறைவேற்றும் மாபெரும் பொறுப்பு நம் முன்னால் உள்ளது. அவர்களின் உயிர்த்தியாகம் வீணாகிவிடாமல் அவர்தம் நோக்கங்களை நாம் முன்னெடுக்கவேண்டும். அப்போதுதான் கடவுளின் பெயரால் அமைக்கப்படுகிற சுதந்திரமான, மக்களால், மக்களுக்காக உருவாக்கப்படுகிற மக்களின் அரசை இந்தப் பூமியிலிருந்து அழித்தொழிக்க முடியாது."

திரு. வி. கலியாணசுந்தரனார்

"திரு.வி. கலியாண சுந்தரனாரின் உரை மேடையில் மெல்லிய பூங்காற்றாக வீசியது. அவர் உரையில் அதிர்வோ ஆர்ப்பாட்டமோ இருக்காது. எளிமையான கருத்துப் பொழிவில் எழில் சேர்ப்பார். கருத்துகளைத் தெள்ளிய நீரோடைபோலக் கேட்போர் இதயங்களில் பாயச் செய்வார்."

திரு.வி.க. தமிழ் மாணாக்கர் மாநாட்டில் 07.08.1923 இல் ஆற்றிய தலைமையுரையில் தமது பேச்சை முடிக்குமிடத்தில்

"சகோதரிகளே! சகோதரர்களே! இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளை இடுவதற்கு என் மனம் எழவில்லை. இதுகாறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவிமெடுத்த உங்களுக்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக.

வருங்கால உலகம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கம் செலுத்துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவுகொண்டு, அவற்றின் இயற்கை அமிழ்தை உண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பயன்படுத்த தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாய் இருக்கிறாள். அவளைப் பற்றியுள்ள பீடிகைகள் எல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்! எழுங்கள்! இளம்பரிதிகளே! சாதிவேற்றுமை, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் இரிந்து ஓட தமிழ்க்கதிர் பரப்பி எழுங்கள்! எழுங்கள்!" என எழுச்சியுடன் நிறைவு செய்துள்ளார். இவர், பேச்சின் தொடக்கமாக இருந்தாலும் முடிவாக இருந்தாலும் தம் கருத்தை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்தில் வெற்றியடைந்துள்ளார். இவரைத் 'தமிழ்த்தென்றல்' எனவும் அழைப்பர்.

பெரியாரின் இயல்பான பேச்சு

தமிழக வரலாற்றில் பல ஆண்டுகளாகச் சிந்தனை இன்றி உழன்ற மக்களைச் சிந்திக்க வைத்து, பகுத்தறிவுடன்வாழ வழிகாட்டிய தலைவர் தந்தை பெரியார். ஏதென்ஸ் நகரில் சாக்ரடீஸ் எப்படி வீதி விதியாகச் சென்று, இளைஞர்களைத் தம்கருத்துகள் மூலம் சிந்திக்க வைத்தாரோ, அதே போன்று மிகப்பெரிய சிந்தனை எழுச்சியைத் தமிழ்நாட்டு வீதிகளில் ஏற்படுத்தியவர் தந்தை பெரியார். அவர் பேச்சில் இலக்கிய நயம் இருந்ததில்லை, இயல்பான பேச்சுத்தமிழில்தான் உரையாற்றுவார். ஆனால், அந்த இயல்பான பேச்சுத்தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்தது. தமிழ்நாட்டில் அவர் ஏற்படுத்திய தாக்கம், அவர் உருவாக்கிய இயக்கம் அறிஞர்களை, தலைவர்களை, சிறந்த பேச்சாளர்களை மக்களுக்கு அடையாளம் காட்டியது. அவர்களுள் முதன்மையானவர் அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தால் 'அறிஞர்' எனப் பட்டமளித்துச் சிறப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா.

அண்ணாவின் அடுக்குமொழி

அண்ணா பேசும்போது உலக வரலாறும், உவமைகளும் அவரின் உரையில் தவழும். அவரின் மிகப்பெரிய சிறப்பு, ஒரு நாளில் இருவேறு கூட்டத்தில் பேசினாலும் கூறிய கருத்துகளை மீண்டும் கூறமாட்டார்; அதே உவமைகள் இருக்காது. மடைதிறந்த வெள்ளம்போல உரையாற்றும் ஆற்றல் பெற்றவர். சென்னைக் கன்னிமாரா நூலகத்தில் அவர் கைபடாத நூல்கள் இல்லை என்னும் அளவிற்குச் சிறந்த வாசிப்பாளர். அந்த

வாசிப்புதான் அவரின் தனித்துவமான உரைகளுக்குக் காரணம்.

காந்தியடிகள் மறைவுக்கு அண்ணா ஆற்றிய உரை

"ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுக்கும் அற்புதம் அவர் காட்டினாரில்லை. ஆனால், ஊமைகளாக இருந்து வந்த மக்களைப் பேச வைத்தார். உரிமை முழக்கமிடச் செய்தார். ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக்காட்டினார். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார். இந்தியா என்றோர் நாடுண்டு. அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு. பொன்னும் பொருளும் மிக உண்டு. போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில்பதினாறாம் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருக்கிறது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது இந்தியா என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது. விடிவெள்ளி தோன்றுவது போலத் திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தியடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே, இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிகஉண்டு என்று அறிந்துகொள்ள முடிந்தது. காந்தியடிகளின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டுவந்தது. தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அவருடைய உருவமோ உடலமைப்போ பேச்சோ நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனால், அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது".

இவ்வாறு, தம்முடைய மேடைப்பேச்சின் மூலம் மக்களைப் பெரிதும் ஈர்த்தவர் பேரறிஞர் அண்ணா. தமிழனுக்கு நாடக அரங்குகளும் திரைப்படக் கொட்டகைகளும் பொழுதுபோக்குகளாக இருந்த காலகட்டத்தில் புத்தொளி வெளிச்சமாக அண்ணாவின் மேடைப்பேச்சு மலரத்தொடங்கியது.

குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி அடிகளார் ஓர் ஆன்மீகவாதி. அறிவு பற்றிய பரந்த நோக்கினை ஆழ்மனச் சிந்தனையோடு அவரது பேச்சாற்றல் பதியச்செய்கிறது.

"மக்களாகப் பிறந்தோர், இயற்கை வழங்கிய அறிவு வாயில்களைப் பயன்படுத்தி, மக்களுக்குரிய தகுதியினைப் பெறுதல் வேண்டும். வாழ்க்கையின் இலட்சியமே மக்களை அறிவு நலமுடையராக்குதலும் பண்பு நலமுடையோராக்குதலுமே. இவ்விரண்டு குறிக்கோளும் இன்று அடையத்தக்க வழியில் மக்களுடைய வாழ்க்கை நடைமுறை இல்லை. ஆறு அறிவுடையவன் மனிதன்; அறிவு ஒரு கருவி; அறிவுடையவன் எல்லாம் உடையவன்; அவன் ஆவது அறிவான். செய்திகளைச் சேகரிப்பதுதான் அறிவா? நூலறிவு அறிவின் அளவுகோலா? 'வாழ்கின்றாய்வாழாதநெஞ்சமே' என்பார் மாணிக்கவாசகர் அறிவார்ந்த ஆள்வினையோடு வாழ்தல் வேண்டும். 1. வாழ்வதன்வழி முதல் அறிவு பெறுகிறான். 2. செய்யும் தொழிலின் மூலம் இரண்டாம் நிலை அறிவு பெறுகிறான். 3. தான்வாழும் காலத்தின் சூழ்நிலைத்தாக்கத்திலிருந்து காத்துக்கொள்வதன் மூலம் மூன்றாம் அறிவு பெறுகிறான். 4. நல்ல நூல்களைத் தேர்ந்து கற்பதன்வழி நான்காவது அறிவு பெறுகிறான். பட்டறிவு நூல்களைப் படிப்பது நம் காலத்தை மிச்சப்படுத்தும். 5. கலந்து கேட்டுப் பேசிப் பழகி, அதன் வழி பெறும் அறிவு ஐந்தாம் நிலையாகும். 6. இயற்கை இயக்கத்தின் மூலம் பெறும் அறிவு ஆறாவது அறிவாம். உடல் மனநலத்தைக் கெடுத்து இயக்க ஆற்றலைக் குறைப்பது கிரணம் எனும் உண்மையையும் ஓசோன் சார்ந்து சுறுசுறுப்பையும் உயிரியக்கத்தையும்

மிகுதிப்படுத்தும் என்பதையும் அறியும் அறிவே ஆறாவது அறிவாகும்.

நம் நாட்டில் பேசுகின்ற திறன் நிறைய வளர்ந்துள்ளது. இதை வைத்துக்கொண்டு அவனுக்கு நிறைய தெரிந்திருப்பதாக எண்ணுகிறோம். அறிவு ஒரு கருவியே. இதனைச் செயற்பாட்டுக்குத்தான் பயன்படுத்த வேண்டும். தான் கற்ற கருத்தைச் செயல்படுத்துவதில்தான் அறிவின் திறன் இருக்கிறது ".

என்.எஸ். கிருஷ்ணன்

திரைப்படத்தில் நகைச்சுவை குறித்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் பேச்சு கலைத்துறையின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது. நகைச்சுவை கலந்து உயர்ந்த கருத்தைக் கூறும் திறத்தினைக் கலைவாணர் உரை வெளிப்படுத்துகிறது.

"தற்போது சில படங்களில் வரும் வில்லன்களைப் பார்த்தால்கூட எனக்குக் கோபம் வருவதில்லை. காமெடியன்களைப் பார்த்தால் அவ்வளவு கோபம் வருகிறது. தலையை மொட்டை அடித்துக் கொண்டு, வந்து நின்று தாறுமாறாகத் தாளத்தைக் காலுக்குள் போட்டு மிதித்து ஆடுகிறார்கள். பயங்கரமாக மீசை வைத்துக்கொண்டு குழந்தைகளைப் பயங்காட்டுகிறார்கள். வாழைப் பழத்தோலில் கால் வைத்து வழுக்கி விழுகிறார்கள். அத்துடனாவது விடுகிறார்களா? இல்லை. விழுமுன் அழுகிறார்கள். அழுது முடிக்குமுன் சிரிக்கிறார்கள். வட்ட மேஜை மாநாட்டுக்கு மகாத்மா காந்தி போயிருக்கும் போது, "இந்த வெறும் வேஷ்டியுடன், இப்படியேவா, மன்னரைப் பார்க்கப் போகிறீர்கள்? நல்ல ஆடைகள் அணிந்து கொள்ள வேண்டாவா?" என்று அங்குள்ள ஒருவர் கேட்டாராம். அதற்கு அவர் என்ன சொன்னார்? சிரித்துக்கொண்டே," நான் என்ன செய்வேன்? எனக்குள்ளதையெல்லாம் சேர்த்துத்தான், உங்கள் மன்னர் அணிந்திருக்கிறாரே" என்று கேட்டுவிட்டாராம். கேள்வி கேட்டவருக்கு நாணமாகி விட்டதாம்!

காந்தியின் ஒரே பதிலில், மன்னரின் ஆதிக்கமும் காந்தியின் நகைச்சுவையும் நல்லறிவும் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது பார்த்தீர்களா? இந்த நூற்றாண்டுக்கு, குறிப்பாக இந்த வருஷங்களுக்கு, இத்தகைய நகைச்சுவைகள்தாம் தேவை! காமெடியனின் பொறுப்பு சாதாரணமானதல்ல! இவன் உலகின் தாய்! உலகம் அவன் குழந்தை! குழந்தையின் மகிழ்விற்காகத் தாய் போடும் ஆட்டத்தில் எவ்வளவு அன்பும் அர்த்த புஷ்டியான அறிவும் இருக்க வேண்டுமோ, அவ்வளவும் காமெடியனின் செயல்களில் இருக்க வேண்டும் என்பதே என் ஆசை, இலட்சியம்! "என்று பேசுகிறார்.

கலைத்துறைகள் சமூகப் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும். ஆன்மீகப் பொழிவாக இருப்பினும் நகைச்சுவைப்பொழிவாக இருப்பினும் அரசியல் பொழிவாக இருப்பினும் சொல்லவரும் கருத்தை மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிவு செய்தல் பேச்சுக்கலையின் இன்றியமையாத் தன்மையாகும்.

படிப்போம் சுவைப்போம்

பேச்சாற்றலின் வலிமை

பிரிட்டன் நாட்டு முதன்மை அமைச்சராய் இருந்தவர் டிஸ்ரேலி. அவர், பொதுக்கூட்டங்களில் பேசிப் பழக்கமில்லாதவர். முதன்முதலில், அவையினர் முன் பேசுவதற்காக அவர் எழுந்தபோது, உடல் நடுங்கியது; நா குழறியது; பேச முடியாமல், உடல் வியர்த்து, அமைதியாக உட்கார்ந்துவிட்டார். அதனால், அவையினரின் ஏளனப்பார்வைக்கு ஆளானார். இருந்தபோதிலும், அவர் கூட்டத்தினரைப் பார்த்து, "நான் எனது பேச்சின்மூலம் வெற்றி பெறுவேன். என் பேச்சைக் கேட்பதற்காகவே நீங்கள் எல்லாரும் காத்துக்கொண்டு இருப்பீர்கள்" எனச் சூளுரைத்தார்.

நாளடைவில், மிகச் சிறந்த பேச்சாளாராக மாறினார். ஒரு கருத்தைச் சார்ந்து, ஒட்டியும் வெட்டியும் பேசும் அவருடைய பேச்சு, அனைவரையும் கவர்ந்தது. உலகத்தின் மிகச் சிறந்த பேச்சாளர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டார். இருமுறை பிரிட்டன் நாட்டின் முதன்மை அமைச்சராகப் பதவியேற்றார்.

பேச்சுப் போட்டிகளில் வெல்வதற்கு மேற்கொள்ள வேண்டியவை.

• மாணவர்கள் நூலகம் சென்று முதலில் சிறிய வடிவிலான நூல்களை வாசித்தல் வேண்டும்.

• தமிழகத் தலைவர்கள், தேசியத் தலைவர்கள், துறைசார் அறிஞர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களை வாசிக்க வேண்டும்.

• இந்நூல்களைப் படிக்கின்றபோது நல்ல கருத்துகள், நல்ல கவிதைகளைக் குறிப்பெடுப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

• குறிப்புகளைப் பொருத்தமான தலைப்புகளின் கீழ்க் கொண்டுவந்து, பேசுகிறபோது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

• இணையத்தில் வெளிவருகின்ற பல்வேறு இளைஞர்களின் தன்னம்பிக்கையூட்டும் பேச்சுகளைக் கேட்டு, இனிய கருத்துகளைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

• உங்கள் ஊரில் நடைபெறும் தொடர் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், வழக்காடுமன்றங்கள் ஆகியவற்றைக் கேட்டு நற்கருத்துகளை மனத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பேச்சுக்கலை கல்லான மனத்தையும் கரையச் செய்யும்; இளகிய மனத்திற்கும் இரும்பின் வலிமையேற்றும்; ஒடுக்கப்பட்ட மக்களின் ஒடுங்கிய குரலையும் ஓங்கிச் சங்கொலியென முழங்கச் செய்யும்; வீரத்தீயை மூட்டிவிடும். பெருந்திரள் மக்களைத் தன்வயப்படுத்தும் அதிசயக்கருவி. இத்தகைய பேச்சுக்கலை உலகை உள்ளத்துள் உள்வாங்குகிறது. அறிவுத்தேனைத் தேடித்தேடிக் கலந்து, தான்உள்வாங்கிய உலகிற்குச்சுவை கூட்டுகிறது. இவற்றோடு தற்சிந்தனை என்னும் நறுமணத்தைச் சேர்க்கிறது.

உலகையே தன்னுடைய ஒலிகளுக்குள் சுழலவைத்துக் கேட்போரையும் சிறந்த ஆளுமைகளாக மாற்றுகிறது. இத்தகு பேச்சுக்கலை நம்மிடம் வளர்ந்தால் நாளைய உலகு நம் கையில்தான்.

கலைச்சொற்கள்

Act	–	அங்கம்
Action	–	செயல்/ நடிப்பு
Appropriateness	–	பொருத்தப்பாடு
Catastrophe	–	விளைவு அல்லது முடிவு
Cause and Effect	–	காரணகாரியம்
Character	–	பாத்திரம்
Climax	–	உச்சம்
Comedy play	–	இன்பவியல் நாடகம்
Complication	–	சிக்கல்
Conflict	–	முரண்
Contrast	–	எதிர்கதை
Crisis	–	சிக்கல்
Dialogue	–	உரையாடல்
Discussion	–	ஆய்வு
Dramatic Irony	–	நாடக முரண்
Economy	–	உரையாடல் சிக்கனம்
Falling Action	–	வீழ்ச்சி
Imitation	–	போலச்செய்தல்
Introduction	–	அறிமுகம்
Exposition		தொடக்கம்
Irresolution	–	முடிவின்மை
Motivation	–	தூண்டுதல் உணர்ச்சி
Pace	–	வேகம்
Parallellism	–	இணைக்கதை
Plot	–	கதைக்கோப்பு
Plot Structure	–	கதையமைப்பு
Resolution	–	சிக்கலின் தீர்வு
Rise and fall	–	ஏற்றஇறக்கம்
Rising Action	–	வளர்ச்சி
Setting	–	பின்னணி
Soliloquies	–	தனிமொழி
Stage Directions	–	மேடைநெறிக்குறிப்புகள்
Story	–	கதை
Techniques	–	உத்திகள்
Tragedy	–	துன்பவியல் நாடகம்
Tragicomedy	–	துன்பவியல் நகைச்சுவை
Turning point	–	திருப்பு முனை

கண்ணாடி

9CDFCH

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாடகத்தின் அடிப்படை அலகு

   அ) களம் ஆ) அங்கம் இ) காட்சி ஈ) உரையாடல்

2. நாடகத்தின் உயிர்நிலையாக அமைவது

   அ) தொடக்கம் ஆ) உச்சம் இ) கதைக்கரு ஈ) முடிவு

3. அரங்குகள் அமையவேண்டியமுறை பற்றிக் கூறும் சிலப்பதிகாரத்தின் காதை

   அ) விழாவறைக் காதை ஆ) வழக்குரைக் காதை

   இ) அரங்கேற்றுக் காதை ஈ) அடைக்கலக் காதை

4. பாலாமணி ஸ்பெசல் என்று அழைக்கப்பட்டது.

   அ) பெண்கள் நாடகம் ஆ) தொடர்வண்டி இ) புராண நாடகம் ஈ) ஸ்பெசல் நாடகம்

5. பாய்ஸ் கம்பெனி என்னும் நாடகக்குழுவை உருவாக்கியவர்

   அ) பம்மல் சம்பந்தனார் ஆ) சங்கரதாச சுவாமிகள்

   இ) மதுரகவி பாஸ்கரதாஸ் ஈ) ஆர்.எஸ்.மனோகர்

6. பொருத்துக.

   1. சங்கரதாச சுவாமிகள் – அ) நாடக அரசி

   2. பம்மல் சம்பந்தனார் – ஆ) தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

   3. ஆர்.எஸ்.மனோகர் – இ) நாடகக் காவலர்

   4. பாலாமணி – ஈ) தமிழ் நாடகத் தந்தை

   அ) 1- ஆ, 2-இ, 3-ஈ, 4-அ ஆ) 1- அ, 2-ஈ, 3-அ, 4-ஈ

   இ) 1- ஆ, 2-ஈ, 3-இ, 4-அ ஈ) 1- இ, 2-அ, 3-ஆ, 4-ஈ

7. கீழ்காண்பனவற்றுள் சரியான கூற்றுகளைக் கண்டறிக.

   1. வட்ட வடிவில் பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் அரங்கம் வட்டவடிவ அரங்கம்.

   2. படங்களுக்குப் போடும் சட்டத்தைப் போன்று அமைந்திருப்பது படச்சட்ட அரங்கம்.

   3. பார்வையாளர்களின் வீடுகளுக்கு அருகில் அமைந்திருப்பது அண்மை அரங்கம்.

   4. திரையரங்குகள் போன்ற வடிவத்தில் அமைந்தவை திறந்தவெளி அரங்குகள்.

   அ) 1 மற்றும் 3 சரி ஆ) 1 மற்றும் 2 சரி இ) அனைத்தும் சரி ஈ) 3 மற்றும் 4 சரி

8. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க

1. பாலாமணி அம்மையாரின் நாடகங்கள் சமூகச்சீர்திருத்தங்களை உள்ளடக்கங்களாகக் கொண்டிருந்தன.

2. பம்மல் சம்பந்தனார் எதிர்க்கதை நாடகம் என்னும் புதிய வகைமையை உருவாக்கினார்.

3. நேஷனல் தியேட்டர்ஸ் என்னும் நாடக நிறுவனத்தைச் சங்கரதாச சுவாமிகள் நிறுவினார்.

4. ஆண்டன் செகாவ் அமெரிக்க நாட்டைச் சார்ந்த நாடக ஆசிரியர்.

அ) 1, 3 சரி ஆ) 1, 2 சரி இ) 3, 4 சரி ஈ) அனைத்தும் சரி

9. "ஆயிரம் பேரில் ஒருவரே கவிஞர், பத்தாயிரம் பேரில் ஒருவரே பேச்சாளர்" என்று கூறியவர் ---- -------------.

10. மக்களாட்சியை மலரச் செய்த ஆற்றல் உடைய கலையாக அறியப்படுவது --------------.

11. முழுவதும் பெண்களைக் கொண்ட நாடகக்குழுவை நடத்தியவர் ----------------- .

12. களரி கட்டுக்குப் பிறகு தோன்றுகின்ற முதல் கதை மாந்தனை இவ்வாறு அழைப்போம் -----.

குறுவினா

1. நாடகத்தில் அங்கம் என்றால் என்ன?

2. நாடகத்தின் புறக்கட்டமைப்பின் கூறுகள் எத்தனை? அவை யாவை?

3. எவையெல்லாம் நாடகத்தின் கருவாகின்றன?

4. குறிப்பு முரண் என்பது யாது?

5. ஆர்.எஸ். மனோகர் அவர்களின் நாடகங்களுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.

6. தெருக்கூத்து என்றால் என்ன?

7. களரி கட்டுதல் என்றால் என்ன?

8. சிறந்த பேச்சாளராக வளர நீவிர் கையாளவேண்டிய உத்திகள் இரண்டனைக் கூறுக.

9. மேடைப்பேச்சில் குறிப்பிடப்படும் ஐவகை நடைகள் யாவை?

10. பேச்சுக்கலையின் வடிவங்களுள் எவையேனும் நான்கனைக் குறிப்பிடுக.

சிறுவினா

1. களம் – வரையறை செய்க.

2. ஆர்வத்தொக்கல், உச்சம் –வேறுபடுத்துக.

3. சிலப்பதிகாரம் குறிப்பிடும் மூவகை எழினிகள் யாவை?

4. நாடகத்தின் அகக்கட்டமைப்புகள் குறித்து எழுதுக.

5. பேச்சாளரின் பண்புகளுள் ஏவையேனும் நான்கினைக் கூறுக.

6. பேச்சுக்கலையில் குரலும் மொழியும் பற்றி விவாதிக்க.

7. கட்டியக்காரனுக்கு வழங்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

8. சங்கரதாச சுவாமிகள் – குறிப்பு வரைக.

9. எதிர்க்கதை நாடகம் பற்றி எழுதுக.

10. மதுரகவி பாஸ்கரதாஸ் விடுதலைக் கருத்துகளை மக்களிடம் எவ்வாறு கொண்டு சேர்த்தார்?

நெடுவினா

1. நாடகத்தில் அங்கங்களை எவ்வாறு முடிவு செய்வாய்?

2. நாடகக்கலை ஒரு கூட்டுக்கலை என்பதை நிறுவுக.

3. பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணிகள் குறித்து விளக்குக.

4. கூத்தில் கட்டியக்காரனின் பன்முகப்பட்ட பங்களிப்பை விவரி.

5. பேச்சின் முக்கூறுகள் யாவை? விளக்குக.

6. பட்டிமன்றம், வழக்காடு மன்றம் – வேறுபடுத்துக.

7. உம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள ஆளுமைகளுள் இருவர் பேச்சினைத் திறனாய்வு செய்க.

8. பேச்சாளருக்கான தகுதிகளாக நீவிர் கருதுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

படிப்போம் பயன்படுத்துவோம்

1. பேசுந்திறனை வளர்த்துக்கொள்ள ஒலித்துப் பழகுக.

நா நெகிழ்ப்பயிற்சி : ஒரே மாதிரியான சொற்கள் அல்லது ஒலிகளைப் பலமுறை கூறுவது

சாரைப்பாம்பு சரசரவென தரையின் மீது ஊர்ந்தது

உள்ளத்திலே கள்ளமில்லா வெள்ளை மனங்கொண்ட பிள்ளை

கொக்கு நெட்ட கொக்கு, நெட்ட கொக்கு இட்ட, முட்ட கட்ட முட்ட

யார் தைத்த சட்டை தாத்தா தைத்த சட்டை

நா பிறழ்பயிற்சி: ஒரே ஒலியுடைய சொற்களைக்கொண்டு, அடுத்தடுத்து வரும் தொடர்களை ஒலித்தல்

கடலோரத்தில் அலை உருளுது புரளுது தத்தளிக்குது தாளம் போடுது

ஓடுற நரியில ஒரு நரி கிழநரி மேலேழு ஓலை கீழேழு ஓலை

சின்ன சின்ன கண்ணனே சிரித்துவரும் மன்னனே

வெண்மையான வெண்ணெய்யைத் தின்னத் தின்னத் தருவாயே

2. கொடுக்கப்பட்டுள்ள விழாவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு தொகுப்புரை எழுதுக.

எனக்கல்ல !! உனக்காக !!

பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை.
நாட்டுநலப்பணித் திட்டம்

அரசு மேல்நிலைப்பள்ளி

சிறப்புமுகாம் – தொடக்க விழா

நாள்: 26.9.2018

இடம்: பள்ளிக்கலையரங்கம்
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து	மாணவத் தொண்டர்கள்
வரவேற்புரை	திட்ட அலுவலர்
தலைமையுரை	தலைமையாசிரியர்
முகாமைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றுபவர்	முதன்மைக்கல்வி அலுவலர்
வாழ்த்துரை	பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்
வாழ்த்துரை	தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
நன்றியுரை	மாணவத் தொண்டர், அரசு மேல்நிலைப்பள்ளி
நாட்டுப்பண்	மாணவர்கள்
தொகுப்புரை: நாட்டுநலப்பணித் திட்ட மாணவி	

3. கட்டங்களில் மறைந்துள்ள விடைகளைக் கண்டு வட்டமிடுக.

நூ	ல்	பெ	ரி	யா	ர்	க	ல்
ல	ம்	து	அ	ர	ங்	க	ணா
க	ள	ங்	க	ம்	க்	லை	ண்
ம்	க	ட	நா	தொ	டு	வா	அ
ம்	ள	த	த்	ம	த	ண	ர்
கு	ர	வ	சி	ட்	கா	ர்	ஞ
க்	ர்	ப	ஸ்	டி	ட்	கெ	றி
ஆ	ச்	சி	கா	கோ	ல்	வ	அ

அ) காட்சியை வரையறை செய்வது

ஆ) உரையாடல்களால் ஆனது

இ) SUSPENSE என்பதன் தமிழாக்கம்

ஈ) சில காட்சிகளால் ஆனது

உ) முத்தமிழுள் மூன்றாம் தமிழ்

ஊ) அடுக்குமொழியில் உரையாற்றுவதில் வல்லவர்

எ) நகைச்சுவை கலந்து உயர்ந்த கருத்தைக் கூறுபவர்

ஏ) சாக்ரடீசைப் போல், தம் பேச்சால் இளைஞர்களைச் சிந்திக்க வைத்தவர்

ஐ) ஆபிரகாம் லிங்கனின் தலைசிறந்த உரை நிகழ்ந்த இடம்

ஒ) விவேகானந்தரின் புகழ்பெற்ற உரை நிகழ்ந்த இடம்

4. உங்களைக் கவர்ந்த விடுதலைப் போராட்ட நிகழ்வொன்றை, ஓரங்க நாடகமாக எழுதி வருக.

5. நீவிர் விரும்பிய கதைமாந்தர் (இலக்கியம், நாடகம், திரைப்படம்) பேசுவது போல மெய்ப்பாடுகள் பொருந்த வகுப்பில் பேசிக்காட்டுக .

6. உங்கள் வகுப்பிலுள்ளோருடன் குழுவாக இணைந்து, நாடகம் ஒன்றை நிகழ்த்திக் காட்டுக.

7. உங்கள் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா அல்லது இலக்கிய மன்ற விழாவுக்கான தொகுப்புரை மாதிரி ஒன்றைத் தயாரித்து வருக.

8. உங்கள் ஊர்த் திருவிழாக்களிலோ வேறு இடங்களிலோ நீங்கள் கண்ட மேடை நாடகங்கள் பற்றி எழுதி வருக.

இயல் நான்கு

இலக்கணவியல்

9CHBEA

உலகில் வாழும் உயிரினங்களுள் மக்களினம் ஒன்றே மொழியாளுமை பெற்று விளங்குகிறது. தம் கருத்தைத் திறம்பட உணர்த்தும் பேச்சுத்திறன் பெற்றுள்ளமை, அவ்வினத்திற்குப் பெருமை சேர்க்கும் செயலாகும். மக்கள்தம் பயன்பாட்டால், நெடுங்காலம் நின்று நிலவும் மொழிக்குரிய இலக்கணம், சீரிய முறையில் வகுக்கப்பட்டமை மொழியின் சிறப்பை உணர்த்துகிறது.

இப்பாடப்பகுதி, இலக்கண நூல்களின் வகைமைகளை விளக்குகிறது; மொழிக்கு வளம் சேர்க்கும் தொடரமைப்புகளை, நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவுபடுத்துகிறது; சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு உதவும் அகராதிகளைப்பற்றி எடுத்துரைக்கிறது; நம் சமூக வாழ்விலும் தனி வாழ்விலும் நம்மோடு பின்னிப் பிணைந்துள்ள மொழிபெயர்ப்பு குறித்தும் விளக்குகிறது.

கற்றல் நோக்கங்கள்

- **மொழியின் கட்டமைப்பில், இலக்கணத்தின் தேவையை உணர்தல்.**
- **இலக்கணம் தோன்றிய சூழல், காலந்தோறும் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சிநிலை ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்.**
- **இலக்கண நூல்களின் வகைமையை அறிதல்.**
- **தற்கால வழக்கில் இலக்கணத்தின் பயன்பாடு அறிந்து, மொழியைச் சிறப்பாகக் கையாளுதல்.**

பாடப் பகுதி

- இலக்கண வரலாறு
- தொடரியல்
- அகராதிக் கலை
- மொழிபெயர்ப்புக் கலை

இயல் நான்கு

கட்டுரை

இலக்கண வரலாறு

இலக்கணத்தின் இன்றியமையாமை

ஒரு மொழிக்கு ஒழுங்கையும் சீர்மையையும் தருவது இலக்கணம். அஃது, ஒரு மொழியின் பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கிறது; மொழியின் இயக்கத்தைப் பல விதிகளாகப் பாகுபடுத்திக்காட்டுகிறது.

இலக்கணம், பழங்காலந்தொட்டே நம் தமிழ்மொழியின் அமைப்பையும் இலக்கிய மரபையும் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளது. அதுமட்டுமின்றி, காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கவும் அவற்றை எதிர்கொள்ளவும் செய்வதில் இலக்கணத்தின் பங்கு இன்றியமையாததாக உள்ளது.

நாம், தமிழில் திருத்தமாகப் பேசுவதற்கும் படிப்பதற்கும் பிழையின்றி எழுதுவதற்கும் அதன் இலக்கணத்தை நன்கு கற்றுக்கொள்ளல் வேண்டும். ஆழ்ந்த இலக்கண அறிவு பெற்றிருந்தால்தான், இலக்கியத்தின் பல நுட்பமான கருத்துகளைக் கூர்ந்து, உணர்ந்து சுவைக்க முடியும். ஆகவே, இலக்கணம் என்பது, ஒரு மொழியின் கண்ணாகும்.

இலக்கண நூல்களின் தோற்றம்

இலக்கியங்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியபோது, மொழியின் பொதுத்தன்மைகளைத் தொகுத்துப் பிறருக்கு உணர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இலக்கண நூல் எழுத விழைந்தவர்கள், தாம் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் உள்ள மொழி வழக்கு அனைத்தையும் அறிந்து, வகைப்படுத்திக்கூற முயற்சி மேற்கொண்டனர். இஃது, இலக்கணத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

தொல்காப்பியப் பாயிரத்தில், முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி எனக் கூறப்பட்டுள்ளமையும் நூலினுள் என்ப, என்மனார் புலவர், மொழிப, மொழிமனார் எனக் குறிப்பிட்டுள்ளமையும் தொல்காப்பியத்திற்குமுன் இலக்கண நூல்கள் இருந்தன என்பதை உறுதி செய்கின்றன. எனவே, பல நூல்கள் எழுதப்பட்ட பின்னர், நூல்களின் பண்பு நுவலும் இலக்கணங்களும் எழுதப்பட்டன. இலக்கணத் தோற்றம், இலக்கியத்தை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், வழக்குமொழியின் வாழ்வையும் வளத்தையும் போற்றுவதாகவும் அமைந்தது. இதனால்தான், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடித் தொல்காப்பியம் தொகுக்கப் பெற்றது' என எடுத்துரைக்கின்றது. இலக்கியங்கள் தோன்றிய பின்பே இலக்கணங்கள் தோன்றுகின்றன என்பதனை உணர்த்தும்வகையில்,

எள்ளினின் றெண்ணெய் எடுபடுவது போல
இலக்கியத் தினின்றும் எடுபடுவது இலக்கணம்

என்னும் பழைய வழக்குத்தொடரும் உள்ளது.

இலக்கண நூல்களின் வளர்ச்சி

தமிழில் இலக்கணநூல்கள் செய்யுள் வடிவத்தையும் உரைநடை வடிவத்தையும் கொண்டுள்ளன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், செய்யுள் வடிவில் இயற்றப்பெற்ற நூல். தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பல நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டுள்ளன. அவை, தொல்காப்பியத்தில் அமைந்துள்ள இயல்களை அடியொற்றித் தனித்தனிப் பகுதி இலக்கணநூலாகத் தோன்றியுள்ளன.

தொல்காப்பிய எழுத்து, சொல் ஆகிய அதிகாரங்களை அடிப்படையாகக்கொண்டு, நன்னூல், நேமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள்

தோன்றின. சொல்லதிகாரம் மட்டும் அமைந்த இலக்கண நூல்கள் பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து என்பனவாகும்.

பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இயல்களுள் அகத்திணையியல் சார்ந்து இறையனாரகப்பொருள், நம்பியகப்பொருள், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்கள் தோன்றின.

தொல்காப்பியப் புறத்திணையியல் சார்ந்து, புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரு படலம் ஆகிய இலக்கண நூல்கள் தோன்றின. செய்யுளியல் சார்ந்து யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலிய யாப்பிலக்கண நூல்களும் உவமவியல் சார்ந்து தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய அணியிலக்கண நூல்களும் எழுதப்பட்டன. இவற்றுள் சில இலக்கண நூல்கள், தொல்காப்பிய மரபை மட்டுமல்லாமல், வடமொழி இலக்கண மரபுகளைத் தமிழுக்குள் கொண்டுவரவும் முயன்றுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னர், உரைநடை வடிவில் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. இலக்கணச் சுருக்கம், இலக்கணச் சுருக்க வினாவிடை முதலான நூல்கள் உரைவடிவில் அமைந்தவை. கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூல், தமிழின் தனிச்சிறப்புகளைத் தமிழறியாத மேனாட்டினருக்கும் எடுத்துக்காட்டி, விளக்கியுள்ளது.

இனி, இவ்விலக்கண நூல்கள்பற்றித் தனித்தனியாகச் சில குறிப்புகளைப் பின்வருமாறு காணலாம்.

தொல்காப்பியம்

தொல்காப்பியம், ஐந்திலக்கணம் கொண்டு விளங்குகிறது. எழுத்து, சொல், பொருள் ஆகிய அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயலாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூல், எழுத்துகளாலும் சொற்களாலும் உருவாக்கப்படும் செய்யுளுக்கும் அதில் இடம்பெறும் பொருளுக்கும் இலக்கண வரையறைகளைத் தந்துள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரம், பழந்தமிழரின் நாகரிகத்தையும் அவர்தம் வாழ்வியல் நடைமுறைகளையும் எடுத்தியம்புகிறது. இவ்வதிகாரத்தில் அமைந்துள்ள இயல்களிலிருந்து இயற்கை, சுற்றுப்புறச்சூழல், அக்கால மக்களின் அகவுணர்வுகள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளமுடிகிறது. போர் நெறிகள் குறித்த செய்திகளைப் புறப்பொருள் பற்றிய இயலிலும் அன்பின் ஐந்திணை அவற்றின் முதல், கரு, உரிப்பொருள் ஆகியவற்றை அகப்பொருள் பற்றிய இயல்களிலும் அறியமுடிகிறது.

இந்நூலுக்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலானோர் உரை எழுதியுள்ளனர்.

தொல்காப்பியம்

வ.எண்	எழுத்ததிகாரம்	சொல்லதிகாரம்	பொருளதிகாரம்
1.	நூல் மரபு	கிளவியாக்கம்	அகத்திணையியல்
2.	மொழி மரபு	வேற்றுமையியல்	புறத்திணையியல்
3.	பிறப்பியல்	வேற்றுமை மயங்கியல்	களவியல்
4.	புணரியல்	விளிமரபு	கற்பியல்
5.	தொகைமரபு	பெயரியல்	பொருளியல்
6.	உருபியல்	வினையியல்	மெய்ப்பாட்டியல்
7.	உயிர்மயங்கியல்	இடையியல்	உவமவியல்
8.	புள்ளி மயங்கியல்	உரியியல்	செய்யுளியல்
9.	குற்றியலுகரப்புணரியல்	எச்சவியல்	மரபியல்

இறையனார் அகப்பொருள்

இறையனார் என்பவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் இந்நூல், அகப்பொருள் சார்ந்தது; களவியல் என்ற பெயராலும் வழங்கப்படுகிறது. இறையனார் அகப்பொருள், அகம் என்பதனைக் களவு, கற்பு என்று இரண்டாகப் பிரிக்கிறது. இந்நூலுக்கான மூலம், நமக்குக் கிடைக்கவில்லை; எனினும், நூலுக்குரிய முழுமையான உரைப்பகுதி கிடைத்துள்ளது. இறையனாரகப் பொருள் உரையே தமிழில் தோன்றிய முதல் உரை நூல் என்பர்.

புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருளைப்பற்றி வெண்பா யாப்பில் கூறும் நூல் புறப்பொருள் வெண்பா மாலை. இது புறப்பொருளுக்குரிய இலக்கணத்தையும் இலக்கியத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனை இயற்றியவர் ஐயனாரிதனார். போர் பற்றிய செய்திகளை இந்நூலில் அறியமுடிகிறது.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய பன்னிரு திணைகளின் இலக்கணத்தைத் துறைவகையோடு புறப்பொருள் வெண்பாமாலை விளக்குகின்றது.

தொல்காப்பியம், புறத்திணைகளின் எண்ணிக்கையை 7 எனக் குறிப்பிட, புறப்பொருள் வெண்பாமாலை 12 எனக் குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையிலேயே புறநானூற்றுக்குத் திணை, துறை வகுக்கப்பட்டுள்ளன.

யாப்பருங்கலக்காரிகை

யாப்பிலக்கணம் கற்பாருக்கு உறுதுணையாக அமைவது யாப்பருங்கலக் காரிகை. காரிகை என்பதற்குப் பெண் எனவும் பொருள் உண்டு. இந்நூலை அமிர்தசாகரர் இயற்றினார். இந்நூலுள் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் இயல்கள் அமைந்துள்ளன.

'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்' என்னும் கூற்று,

புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் திணைகள்

திணை	பொருள் விளக்கம்	திணை	பொருள் விளக்கம்
வெட்சி	பகைவரது ஆநிரை கவர்தல்	**தும்பை**	பகை மன்னர் இருவரும் போரிடுதல்
கரந்தை	பகைவர் கவர்ந்த ஆநிரை மீட்டல்	**வாகை**	போரில் வெற்றி பெற்ற மன்னரைப் புகழ்தல்
வஞ்சி	பகை நாட்டின்மீது போர் தொடுத்தல்	**பாடாண்**	ஒருவனுடைய கல்வி, புகழ், வீரம், செல்வம் முதலியவற்றைப் போற்றுதல்
காஞ்சி	பகைவரை எதிர்த்துப் போரிடுதல்	**பொதுவியல்**	வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளுக்குப் பொதுவானவற்றையும் அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுதல்
நொச்சி	பகைவரிடமிருந்து மதிலைக் காத்தல்	**கைக்கிளை**	ஒருதலைக் காமம்
உழிஞை	பகைவர், மதிலைச் சுற்றி வளைத்தல்	**பெருந்திணை**	பொருந்தாக் காமம்

யாப்பருங்கலக் காரிகையின் பெருமையையும் அதன் யாப்பைக் கற்பதின் கடினத்தையும் உணர்த்தும். இந்நூலாசிரியர், யாப்பருங்கலம் என்னும் மற்றோர் இலக்கண நூலையும் படைத்துள்ளார். இந்நூலுக்கு உரை எழுதியவர் குணசாகரர்.

வீரசோழியம்

தொல்காப்பியத்திற்குப் பின்னர், ஐந்திலக்கண அமைப்பிலமைந்த நூல், வீரசோழியம். இந்நூல், ஐந்து அதிகாரத்தையும் பத்துப் படலத்தையும் கொண்டுள்ளது. அதன் ஆசிரியர் புத்தமித்திரர். இந்நூல் வடமொழி, தமிழ்மொழி ஆகிய இரண்டுக்கும் இலக்கணம் கூற முற்படுகிறது.

தண்டியலங்காரம்

தமிழில் அணியிலக்கணம் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் முதல் நூலாகும். தண்டி என்பவரால் வடமொழியிலுள்ள காவ்யதர்சம் என்னும் நூலைத்தழுவி, இந்நூல்


தண்டியலங்காரம்
மூலமும் உரையும்
இவ்வுரை
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியும்
பாலவனத்தம் ஜமீந்தாருமாகவிருந்த
ராஜராஜ ஸ்ரீமாந்
இராமநாதபுரம்
பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்
விரும்பியவாறு
யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
அ. குமாரசுவாமிப்புலவர்
புதுக்கியது
இவை
சுன்னாகம்
கு. அம்பலவாணபிள்ளையால்
பதிப்பிக்கப்பட்டன
1926

எழுதப்பெற்றது. இந்நூல் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் இயல்களையும், 125 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. பொதுவணியியலில் செய்யுள் வகை, அதன் இலக்கணம் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. பொருளணியியலில், தன்மையணி முதல் பாவிகவணி வரை 35 அணிகளின் இலக்கணமும் கூறப்பட்டுள்ளன. சொல்லணியியலில் மடக்கின் வகைகள், அவற்றின் இலக்கணம், சித்திரகவிகளின் இலக்கணம், வழு, வழுவமைதி ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. பெருங்காப்பியத்தின் இலக்கணமும் இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலுக்குப் பின்னர், சந்திராலோகம், குவலாயனந்தம், மாறனலங்காரம் போன்ற அணியிலக்கண நூல்கள் தோன்றியுள்ளன.

நேமிநாதம்

எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும் மற்றொரு நூல் நேமிநாதம். இந்நூல், தொல்காப்பிய எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் சுருக்கமாகக் கூறுவதனால் 'சின்னூல்' என்று அழைக்கப்படுகிறது. வெண்பாவால் அமைந்த நேமிநாதம் நூலைக் கற்றபின்னரே, தொல்காப்பியத்தைக் கற்கும் நடைமுறை இருந்தமை இந்நூலின் சிறப்பைப் புலப்படுத்தும்.

அறிவோம் தெளிவோம்

பழையன கழிதலும் புதியன புகுதலும்

- அவன், இவன், உவன் என்பனவற்றுள் உவன் என்னும் சுட்டுப்பெயர் இன்று வழக்கில் இல்லை.
- நறுமணம் என்னும் பொருளைக் குறித்த 'நாற்றம்' என்னும் சொல், இன்று விரும்பத் தகாத மணத்தைக் குறிக்கிறது.
- தமிழில் மொழிமுதல் வாரா எழுத்துகளுள் ல, ர ஆகியன இன்று பலருடைய பெயர்களின் முதலெழுத்துகளாய் உள்ளன

இதனை எழுதியவர் குணவீரபண்டிதர் ஆவார். இவர், 'வச்சணந்தி மாலை' என்றழைக்கப்படும் வெண்பாப் பாட்டியல் நூலையும் இயற்றியுள்ளார்.

நன்னூல்

தொல்காப்பியத்திற்கு அடுத்ததாக மிகுதியாகப் பயன்பாட்டிலிருக்கும் இலக்கண நூல், நன்னூல். தொல்காப்பியம், தெளிவும் எளிமையும் கொண்டு விளங்க, நன்னூல் செறிவும் சுருக்கமும்கொண்டு விளங்குகிறது. நன்னூலில் எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் உள்ளன. இந்நூலுள் அமைந்துள்ள பொதுப் பாயிரம் (முகவுரை) நல்ல நூலுக்குரிய இலக்கணம், பத்து அழகு, பத்துக்குற்றம், நல்லாசிரியர், ஆசிரியர் ஆகாதவர் ஆகியோரது இலக்கணம், நல்ல மாணாக்கர், மாணாக்கர் ஆகாதவரின் இயல்புகள், பாடங்கற்பிக்கும் முறை, கற்கும் முறை ஆகியன குறித்து விரிவாகக் கூறியுள்ளது. தொல்காப்பியத்தின் பாயிர உரை மேற்கோள்கள், இந்நூலில் இலக்கணச் சூத்திரங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

நன்னூலின் எழுத்ததிகாரத்திலுள்ள பதவியல், தொல்காப்பியத்தின் வளர்நிலையாக அமைந்துள்ளது. இவ்வியல், சொற்களின் கட்டமைப்பைத் தெளிவாக விளக்குகிறது; பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் எனச் சொற்களைப் பகுத்து விளக்குகிறது.

இந்நூலின் சொல்லதிகாரத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள,

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

என்னும் நூற்பா, வழக்கிழந்த இலக்கணக் கருத்துகளை நீக்குவதும் புதிய வழக்குகள் சிலவற்றை ஏற்றுக்கொள்வதும் தவறல்ல; காலந்தோறும் ஏற்படும் மாற்றத்திற்குட்பட்டதே இலக்கணம் எனக்கூறி அமைகிறது. இந்நூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர் முதலானோர் உரை கண்டுள்ளனர்.

நம்பியகப்பொருள்

நம்பி என்பவரால் இயற்றப்பெற்ற இந்நூல் அகப்பொருள் சார்ந்தது. இந்நூல் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்தியலாகப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம், அகப்பொருள் இலக்கணத்தைக் கதை மாந்தர்களின் கூற்றுவகையாகக் கூற, நம்பியகப்பொருள் அகப்பொருள் இலக்கணத்தைத் துறைவகையாக விளக்கிக் கூறுகிறது. அகஇலக்கிய நூல்களுக்கு இதன் அடிப்படையிலேயே துறை வகுக்கப்பட்டுள்ளது.

இலக்கண விளக்கம்

இந்நூல் எழுத்து, சொல், பொருள் என மூவதிகாரமாகப் பகுக்கப்பட்டு, ஐந்திலக்கணமும் கூறுகிறது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி விரிவாக எழுதப்பட்டிருப்பதால் இந்நூலைக் 'குட்டித்தொல்காப்பியம்' என்றும் அழைப்பர். இந்நூலை இயற்றியவர் வைத்தியநாத தேசிகர் ஆவார்.

தொன்னூல் விளக்கம்

இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவரால் தமிழில் எழுதப்பட்ட இலக்கணநூல் தொன்னூல் விளக்கம். இந்நூல்

அறிவோம் தெளிவோம்

தமிழில் சொற்கள் அல்லது தொடர்களை இணைக்க உம் என்னும் இடைச்சொல் வரும். ஆனால், ஆங்கில மொழியில் பயன்படுத்தப்படும் and என்னும் சொல்லாட்சிக்கேற்ப, 'மற்றும்' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

(எ.கா.)

'பேரறிஞர் அண்ணா, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்'.

இவ்வாறு கூறுவது, ஆங்கிலமொழியின் தாக்கமே. இத்தொடரைப் 'பேரறிஞர் அண்ணா, தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்'. என எழுதுவதே ஏற்புடையது.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தை உடையதாகும். இந்நூலாசிரியர், தம்நூலில் நன்னூல் கருத்துகளையே பெரும்பான்மையாக எடுத்தாண்டுள்ளார்.

பாட்டியல் நூல்கள்

சிற்றிலக்கியங்களின் அமைப்பு முதலானவற்றை விளக்க, பாட்டியல் நூல்கள் தோன்றின. பாட்டியல் நூல்களுள் முதன்மையானதாகக் கருதப்பெறுவது 'பன்னிரு பாட்டியல்'. இஃது எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூவியலாக அமைந்துள்ளது. 'வச்சணந்தி மாலை' என்னும் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் என்பன, பாட்டியல் நூல்களுள் சிலவாகும்.

மொழிவளம் காக்கும் இலக்கணங்கள்

இற்றைக்காலத்தில் செய்யுள் வடிவில் இலக்கண நூல்கள் இயற்றப்பெறவில்லையாயினும் உரைநடை வடிவில் எழுதப்பட்டு வருகின்றன. காலந்தோறும் இலக்கியங்கள் புதுப்புது வடிவங்களில் மாற்றம் பெறும்போது, அவற்றிற்கான இலக்கணங்களும் தோன்றத் தொடங்கியுள்ளன. ஆகவே, இலக்கணத்தின் இன்றியமையாமையை உணர்ந்து, தமிழ்மொழியை வளம்பெறச் செய்வது நம் கடமையாகும்.



தொல்காப்பியத்திலிருந்து தோன்றிய சில இலக்கண நூல்கள்

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குட்டித்தொல்காப்பியம் என அழைக்கப்படும் நூல்-----------.

   அ) நன்னூல் ஆ) தொன்னூல் விளக்கம் இ) இலக்கண விளக்கம் ஈ) நேமிநாதம்

2. தண்டியலங்காரம் – தண்டி ; இறையனார் அகப்பொருள் – இறையனார்

   நம்பியகப்பொருள் – நம்பி ; வீரசோழியம் – ?

   அ) வீரசோழர் ஆ) குணவீரபண்டிதர் இ) புத்தமித்திரர் ஈ) வீரமாமுனிவர்

3. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்'– இத்தொடர் உணர்த்துவது

   அ) கவிதை எழுதுவது எளிது ஆ) கவிதை எழுதுவது அரிது

   இ) கவிதை எழுதக் காரிகைத் தேவையில்லை ஈ) பேரிகை கொட்டினால் பிழைக்கலாம்

4. அகப்பொருள் சாராத நூலைத் தேர்க.

   அ) களவியல் காரிகை ஆ) பன்னிரு படலம்

   இ) நம்பியகப்பொருள் ஈ) இறையனார் களவியல்

5. தொல்காப்பியம் கற்பதற்கு முன்னர், பயிற்சி பெற வேண்டிய நூல்------.

   அ) நன்னூல் ஆ) நேமிநாதம் இ) இலக்கண விளக்கம் ஈ) வீரசோழியம்

6. சரியாகப் பொருந்தியுள்ள விடைக்குறிப்பைத் தேர்க.

அ)		1	பகைவரிடமிருந்து மதிலைக் காத்தல்
ஆ)		2	பகைவரின் மதிலை வளைத்தல்
இ)		3	பகைவரின் ஆநிரை கவர்தல்
ஈ)		4	பகைவரிடமிருந்து ஆநிரை மீட்டல்

	1	2	3	4
அ)	2	3	1	4
ஆ)	1	2	3	4
இ)	4	1	2	3
ஈ)	3	4	2	1

7. படம் உணர்த்தும் இலக்கண நூல் வகையைக் கண்டறிக.

அ)

ஆ)

குறுவினா

1. ஒரு மொழிக்கு இலக்கணம் ஏன் தேவை?
2. 'சின்னூல்' என்றழைக்கப்படும் நூல் எது? ஏன்?
3. இறையனாரகப்பொருள் – குறிப்பு வரைக.
4. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' – இத்தொடர், இன்றைய நடைமுறை இலக்கணத்திற்குப் பொருந்தியிருப்பதற்குச் சான்று தருக.
5. வழுவற்ற தொடரைக் கண்டறிக.

   அ) தந்தையர் தமது பிள்ளைகளை வழிநடத்துவர்.

   ஆ) தந்தையர் தனது பிள்ளைகளை வழிநடத்துவர்.

   இ) தந்தையர் தம் பிள்ளைகளை வழிநடத்துவர்.

   ஈ) தந்தையர் தன் பிள்ளைகளை வழிநடத்துவர்.

சிறுவினா

1. தொல்காப்பியப் புறத்திணையியல் சார்ந்து, தனிநூலாகப் பிற்காலத்தில் வளர்ந்த இலக்கண நூல்கள் யாவை? அவை குறித்து எழுதுக.
2. அணியிலக்கணம் தோற்றம் பெற்றதில், தொல்காப்பியத்தின் பங்கு யாது?
3. நன்னூல் – குறிப்பு வரைக.
4. "நான் நாளை வருகிறேன்" என உங்கள் நண்பர் கூறுகிறார். அவர் பேசிய தொடரில் இலக்கணப்பிழை உள்ளதா? ஆம் எனில், அதனை விளக்கிக் கூறுக.
5. தொழிற்றுறை, தொழிற்துறை, தொழில்துறை – இவற்றுள் புணர்ச்சிவிதிப்படி அமைந்த சொற்றொடர் எது? ஏன்? அதற்கான இலக்கணம் தருக.

நெடுவினா

1. மொழிக்கு அரணாக அமைவது இலக்கணம் – இக்கூற்றை நடைமுறைப் பேச்சு வழக்குகள்கொண்டு விளக்குக.
2. தொல்காப்பிய இயல்களின் வளர்ச்சியாகத் தோன்றிய பிற்கால இலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

கட்டுரை

தொடரியல்

தொடரியல் – ஓர் அறிமுகம்

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர். தொடரமைப்பு, அதன் பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வது தொடரியல். தொடரியலின் சிறப்பு, ஒரு மொழியின் வளத்தைக் காண உதவுகிறது. ஒரு மொழியில் சொற்களும் அவற்றின் பொருள்களும் காலந்தோறும் சிறிது வேறுபடக் காணலாம். ஆனால், சொற்றொடர் அமைப்பில் பெரும் மாறுதல் ஏற்படுவதில்லை. அவ்வாறு மாறுதல் ஏற்படினும், அம்மொழியின் அடிப்படை இயல்புக்கு மாறாக அமைவதில்லை. ஆதலால், சொற்றொடர் அமைப்பு ஒன்றே அம்மொழியின் தனிச்சிறப்புகளை உணர்த்த வல்லதாய் உள்ளது.

தொல்காப்பியம் காட்டும் தொடரமைப்புகள்

நாம் பிறரிடம் பேசும்போது, தொடர்களாகத்தான் பேசுகிறோம். நாம் பயன்படுத்தும் தொடர்களில் இயல்பாகவே இலக்கணக்கூறுகள் அமைந்துள்ளன. அவற்றைத் தொல்காப்பியம் சில நூற்பாக்களில் சுட்டிக்காட்டியுள்ளது. அத்தகைய தொடரமைப்புகள், பின்வரும் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை விளக்குவதற்கான எடுத்துக்காட்டுகள், இலக்கியத்திலிருந்தும் நடைமுறை வழக்கிலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன.

- தொடரில் சொற்கள் அமைந்துவரும் நிலை
- திணை – பால் – எண் - தொடர்ப்பொருத்தம்
- ஒரு சொல் அல்லது தொடர் அடுக்கி வருதல்
- ஒரு தொடரை அடிப்படையாகக்கொண்டு செருகலும் விரித்தலும்
- தொடரில் முன் பின் மாற்றம்
- ஒரு தொடரை இரு வகையாக விளக்குதல்
- இலக்கணக்கூறு நோக்கில் மாற்றம் – தோன்றா எழுவாய்
- தொடரமைப்பில் ஆகுபெயர்

தொடரில் சொற்கள் அமைந்துவரும் நிலை

கண்ணன் வந்தான்; அவன் கடிதம் கொண்டு வந்தான்.

இங்குக் கண்ணன் என்பது, இயற்பெயர்; அவன் என்பது, சுட்டுப்பெயர். இவ்வாறு இயற்பெயரையுடைய ஒரு தொடரும், அதற்குரிய சுட்டுப்பெயரையுடைய மற்றொரு தொடரும் வரும்போது, அவை, அடுத்தடுத்து வருதல் வேண்டுமெனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

திணை – பால் – எண் – தொடர்ப் பொருத்தம்

ஒரு தொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண் ஆகியவற்றில் ஒத்திருத்தல் வேண்டும். அவ்வாறு வருவது, தொடர்ப் பொருத்தம் ஆகும். இதனைக் கீழ்க்காணும் பட்டியல்வழிப் புரிந்துகொள்ளலாம்.

தொடர்கள்	திணை	பால்	எண்
மாறன் சிரித்தான்	உயர்திணை	ஆண்பால்	ஒருமை
மணிமொழி பாடினாள்	உயர்திணை	பெண்பால்	ஒருமை
மக்கள் மகிழ்ந்தனர்	உயர்திணை	பலர்பால்	பன்மை
மான் துள்ளியோடியது	அஃறிணை	ஒன்றன்பால்	ஒருமை
மலர்கள் மலர்ந்தன	அஃறிணை	பலவின்பால்	பன்மை

மேற்கண்ட தொடர்களில், எழுவாய்ப் பெயரின் திணை - பால், வினைமுற்றின் திணை– பால் ஆகியன ஒத்திருக்கின்றன. இவைபோன்று தொடர்கள் அமைதல் வேண்டும். தம் மரபில் மயங்கி வருதல் கூடாது. இதனை,

'வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே'

(தொல். சொல். கிளவி. 11)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சில தொடர்களில், இருதிணைக்குரிய எழுவாய் விரவி வரும்போது, அத்தொடருக்குரிய பயனிலை எத்திணைக்குரிய முடிவு பெறும் என்பதில் தடுமாற்றம் ஏற்படலாம். கீழ்க்காணும் தொடரைக் காணுங்கள். சரியான வினைமுற்றைத் தேர்ந்தெடுங்கள்.

மன்னனும் நால்வகைப் படைகளும் விரைவாக முன்னேறிச்__________

(சென்றார்கள் / சென்றன)

விடை காண முடிந்ததா? இத்தொடரில், உயர்திணை எழுவாயும் அஃறிணை எழுவாயும் கலந்து வந்து ஒரு முடிவினைக் கொள்ளும்போது, அவை சிறப்பை நோக்கினால் உயர்திணையிலும், இழிவை நோக்கினால் அஃறிணையிலும் முடியும். ஆகவே, இத்தொடர் சிறப்பு நோக்கி மன்னனும் நால்வகைப் படைகளும் விரைவாக முன்னேறிச் சென்றார்கள் என உயர்திணை முடிவு பெறும். மேலும் சில தொடர்கள்:

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. (இழிவு நோக்கி அஃறிணை முடிபு)

இடையனும் ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் சென்றன. (அஃறிணை எழுவாய் மிகுதி)

ஆசிரியர்கள், மாணாக்கர்கள், கல்வி அலுவலர், தலைமையாசிரியர், நூல்கள் இப்பள்ளியில் இருக்கிறார்கள். (உயர்திணை எழுவாய் மிகுதி)

எனவேதான், திணை – பால் – எண் ஆகியவற்றிற்கேற்பத் தொடர்ப் பொருத்தம் அமைவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

வழுநிலை

ஒரு தொடரில் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று மாறுபட்டு, முன்நின்ற சொல்லுக்கு ஏற்றவாறு அமையாமல் இலக்கணக் குற்றம் தோன்ற வருவது வழுநிலை. வினா, விடை, மரபு ஆகியன இடம்பெறும் தொடரிலும் வழு தோன்றும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியன இடம்பெறும் தொடரில் வழு வருமிடங்களும் உள்ளன.

வழு – குற்றம் / பிழை

வழுநிலை	
அவன் வந்தது	(திணை வழு)
கண்மணி வந்தான்	(பால் வழு)
பறவைகள் பறந்தது	(எண் வழு)
நான் உண்டாய்	(இட வழு)
நாளை வருகிறேன்	(கால வழு)
இந்தச் சேவல் எத்தனை முட்டை போடும்?	(வினா வழு)
"உன் பெயர் என்ன" எனக் கேட்டால், "உடல்நலம் இல்லை" என விடையளிப்பது	(விடை வழு)
மயில் கூவும்	(மரபு வழு)

வழாநிலை	
அவன் வந்தான்	(திணை வழாநிலை)
கண்மணி வந்தாள்	(பால் வழாநிலை)
பறவைகள் பறந்தன	(எண் வழாநிலை)
நான் உண்டேன்	(இட வழாநிலை)
நாளை வருவேன்	(கால வழாநிலை)
இந்தக் கோழி எத்தனை முட்டை போடும்?	(வினா வழாநிலை)
உன் பெயர் என்ன? என் பெயர் மாசிலாமணி	(விடை வழாநிலை)
மயில் அகவும்	(மரபு வழாநிலை)

வழாநிலை

மணிமாலா பாடினாள் என்னும் தொடரில் இலக்கணக் குற்றமில்லை. இது வழாநிலைத் தொடராகும். 'மணிமாலா' என்னும் உயர்திணைப் பெண்பாற் பெயர், 'ஆடினாள்' என்னும் உயர்திணைப் பெண்பாற் விகுதியைப் பெற்று முடிந்துள்ளது. ஆகவே, நம் முன்னோர் எச்சொல்லை எப்பொருளால் குறித்தனரோ, அச்சொல்லை அப்பொருளிலேயே தொன்றுதொட்டு வழு இல்லாமல் கூறுவதே வழாநிலை. (இலக்கணக் குற்றமில்லாத நிலை)

வழுவமைதி

பசுவைப் பார்த்து, ''என் அம்மை வந்தாள்" எனக் கூறுவது உண்டு. பசு என்பது, அஃறிணையாயினும், அன்பு மிகுதியால் உயர்திணைக்குரிய பெயரைப் பெற்றுள்ளது. இத்தொடர், இலக்கணக் குற்றமுடையதாயினும் சான்றோரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றமையால் வழுவமைதி ஆயிற்று. இலட்சுமி எனப் பசுவைப் பெயரிட்டு அழைப்பது, ஆண் குழந்தையைப் பெண் குழந்தையைக் குறிக்கும் சொல்லாலும் (வாடி கண்ணே) பெண் குழந்தையை ஆண் குழந்தையைக் குறிக்கும் சொல்லாலும் (வாடா செல்லம்) கூறுவனவெல்லாம் வழுவமைதிகளே. இன்றைய நடைமுறைப் பேச்சில், இளைஞர்களும் இளம்பெண்களும் தங்களுக்குள் எதிர்பாலினரைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்துவதனைக் காணலாம். ஆகவே மொழி என்பது, இலக்கண வரம்புக்கு உட்பட்டதாயினும் சிலபோது விதிமீறல், வரம்பு மீறல் ஆகியன ஏற்படுகின்றன. அவை ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு இலக்கண நூலார் வகுத்ததே வழுவமைதியாம். காவிரி பொங்கி வருகிறாள் - இத்தொடர் வழுவமைதியா? காரணம் கூறுக.

வழு வருமிடங்கள்

எழுத்து வழு – திருகுறள் (ஒற்று மிகுத்து எழுதாமை.)

சொல் வழு – நான் சிரித்தான் (நான் சிரித்தேன் என எழுதாமை)

பொருள் வழு – கடற்கரையை உடைய வெற்பனே (நெய்தல் நிலத்திற்குரிய தலைவனைக் குறிக்காமல், குறிஞ்சி நிலத் தலைவனைக் குறித்தது).

யாப்பு வழு – 'வரிவளைக்கைத் திருநுதலாள். . .' (வெண்பாவில் கலித்தளை மயங்குதல் காய்முன் நிரை)

அணி வழு – 'இலங்கு வளை அன்ன நலங்கேழ் ஆம்பல் . . .' (வெள்ளாம்பல்

வழுவமைதி	வழுவமைதி வகை
மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்	திணை வழுவமைதி (உயர்திணையை அஃறிணையாக்குதல்) ஏன்? சிந்திக்க.
நரியார் வந்தார், கிளியார் பேசினார்	திணை வழுவமைதி (அஃறிணையை உயர்திணையாக்குதல்)
சிறுமியாக இருந்தபோது, நான் மணல் வீடு கட்டுவது இந்தக் கடற்கரைதான்.	கால வழுவமைதி (இறந்தகாலத்திற்கு எதிர்காலம் வருதல்)
வேல்விழி நினைத்தால், ஓட்டப்போட்டியில் முதற்பரிசுதான்.	இட வழுவமைதி (வேல்விழி என்னும் பெண், நான் நினைத்தால் எனத் தன்மையில் கூறாமல் படர்க்கையில் கூறுதல்.)
இவ்வழி அவ்வூருக்குப் போகும்	மரபு வழுவமைதி (இயங்காத பொருளை இயங்குவதாய்க் கூறுதல்.) வழி - நடந்து செல்லும் பாதை

பூவைச் சங்குக்கு உவமையாகக் கூறுதல் பொருத்தமில்லாதது.)

ஒரு சொல் அல்லது தொடர் அடுக்கி வரும் முறை

அடுக்கு என்பது, மீண்டும் மீண்டும் வருவதை அடிப்படையாகக் கொண்டது. அது சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் அமைந்து வரும்.

1. சொல் நிலையில் அடுக்குமுறை

ஒரு சொல் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டாக,

ஏஏ இஃதொத்தன் – இசைநிறை

என்ன என்ன - அசைநிலை

வருக வருக - பொருளொடு புணர்தல் ஆகியவற்றைக் கூறலாம்.

இசைநிறை, செய்யுளில் வரும் எனக் குறிப்பிட்டாலும், பேச்சு வழக்கிலும் வருமென்பதை மறுத்தல் இயலாது.

எ.கா. போ, போ என் கண்முன் நில்லாதே,

'இசைநிறை அசைநிலை பொருளொடு
புணர்தலென்(று)
அவைமூன் றுஎன்ப ஒருசொல் அடுக்கே'

(தொல். சொல்.எச்சம். 411)

என்னும் நூற்பாவின்வழி, சொல் அடுக்கி வருவதை அறியலாம்.

2. தொடர் நிலையில் அடுக்குமுறை

தொடர் நிலையில், வினையெச்சங்கள், வினைமுற்றுகள், வேற்றுமையுருபுகள் ஆகியன அடுக்கி வரும்.

அ) வினையெச்சங்கள் அடுக்கி வருதல்

ஒரு தொடரில் பல வினையெச்சங்கள் அடுக்கி வருவதும் உண்டு.

எ.கா. நான் ஊருக்குச் சென்று, பெற்றோரைப் பார்த்து, அவர்களுடன் உரையாடி, அறுசுவை உணவு உண்டு, எனது கல்லூரி விடுதிக்குத் திரும்பி வந்தேன்.

'பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே'

(தொல். சொல். வினை. 233)

ஆ) வினைமுற்றுகள் அடுக்கி வருதல்

ஒருதொடரில் பலவினைமுற்றுகள் அடுக்கி வந்தாலும் அவை ஒரு பெயரைக்கொண்டு முடிதல் வேண்டுமெனத் தொல்காப்பியம் கூறுகிறது.

எ.கா. வந்தாள், பார்த்தாள், மகிழ்ந்தாள் மலர்க்கொடி.

'அவைதாம்
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே'

(தொல். சொல். எச்சம். 429)

இ) வேற்றுமையுருபுகள் அடுக்கி வருதல்

ஒரு தொடரில் பல உருபுகள் அடுக்கி வந்தாலும், பொருள் உணர்த்தும்வகையில், முடிக்கும் சொல்லால் அமையும்.

எ.கா. பூனைக்குக் கிண்ணத்தில் பாலை ஊற்றி வைத்தான்.

இத்தொடரில் முறையே நான்காம், ஏழாம், இரண்டாம் வேற்றுமையுருபுகள் வந்துள்ளன.

ஈ) அடை, சினை, முதல் அடுக்கி வருதல் – வண்ணச் சினைச் சொல்

செங்கால் நாரை இத்தொடர், செம்மை + கால் + நாரை எனப் பிரியும். இத்தொடரில், அடையைக் (பண்பைக்) குறிக்கும் செம்மை என்னும் சொல் முதலிலும், சினையைக் (உறுப்பைக்) குறிக்கும் சொல் இரண்டாவதாகவும், முதலைக் (எழுவாயைக்) குறிக்கும் சொல் மூன்றாவதாகவும் வந்துள்ளன. கரிகால் வளவன், செங்கண் செழியன், மைவிழி மாதவி எனப் பெயர்கள் அமைந்துள்ளமையைக் காணலாம். பேச்சுவழக்கில் அழுமூஞ்சிப் பாப்பா, சுருட்டைத்தலைப் பையன் என வருவனவும் வண்ணச் சினைச் சொற்களே. இவ்வாறு அடை, சினை, முதல் ஆகியன மயங்காது முறையாக அடுக்கி வருவதனை,

'அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்'

(தொல். சொல்.கிளவி. 26)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

ஒரு தொடரை அடிப்படையாகக்கொண்டு இடைச்செருகலும் விரித்தலும்

ஒரு தொடரில் பெயரெச்ச, வினையெச்சங்கள், தாம் முடிக்கும் சொல்லுக்குமுன் இடையில் வேறு சொற்களும் வரலாம். இவ்வாறு வரும் சொல்லை இடைநிலை எனத் தொல்காப்பியர் குறித்துள்ளார். மொழியியலார், இடைச்செருகல் எனக் குறிப்பிடுகின்றனர்.

1. பெயரெச்சத் தொடரில் இடைநிலையாக (செருகலாக) வரும் சொல்

ஆடிய மயில் - ஆடிய அழகான மயில் (அழகான என்பது இடைச்செருகல்)

கிடைத்த நூல் - கிடைத்த அரிய நூல் (அரிய என்பது இடைச்செருகல்)

2. வினையெச்சத் தொடரில் இடைநிலையாக (செருகலாக) வரும் சொல்

படித்துக் கூறினான். - படித்துப் பொருள் கூறினான். (பொருள் என்பது இடைச்செருகல்)

உழுது வந்தான். - உழுது ஏரோடு வந்தான். (ஏரோடு என்பது இடைச்செருகல்)

இக்கருத்தைப் பின்வரும் நூற்பா குறிப்பிடுகிறது.

'தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் ஆயினும் இடைநிலை வரையார்'

(தொல். சொல்.வினை. 237)

(சிவணும் – பொருந்தும், வரையார் – நீக்கார்.)

'அறத்தை அரசன் விரும்பினான்' எனவும் 'உண்டது பசித்த யானை' எனவும் வரும் தொடர்களில், முறையே வேற்றுமையுருபும் முற்றுவினையும் அமைந்துள்ளன. அரசன், பசித்த என்னும் பிற சொற்கள் அவற்றோடு பொருந்தி வந்துள்ளன. இவ்வாறு பிற சொற்கள் நிற்றலை 'இடைப்பிறவரல்' என்பர். இதனை,

'உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன'

என நன்னூல் குறிப்பிடுகிறது.

இடைச்செருகலாக வந்த சொற்கள், பின்னாளில் பெயரடை, வினையடைகளாகத் தொடர்களில் அமைந்தன. சிலபோது, அடைகளாகப் பொருந்திவரும் சில தொடர்களில், பொருள் மயக்கம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாகப் புதிய மாணாக்கர் விடுதி என்னும் தொடரில், மாணாக்கர் என்னும் சொல் இடைச்செருகலாக வரும்போது, மாணாக்கர் புதியவரா, விடுதி புதியதா என்பதில் பொருள் மயக்கம் ஏற்படுகிறது.

புதிய மாணாக்கர் எனப் பொருள் கொள்ளும்போது, மாணாக்கர்தாம் புதியவர். புதிய என்னும் அடைமொழி, மாணாக்கருக்குத் தாம் பொருந்தியுள்ளது. புதிய விடுதி எனப் பொருள் கொள்ளும்போது, விடுதிதான் புதியது.

அறிவோம் தெளிவோம் **தொகைநிலையும் தொகா நிலையும்**

சொற்கள் தொடர்ந்துநின்று, பொருள் தருவது தொடர். இருசொல்லுக்கு இடையே ஏதேனும் ஓர் உருபு மறைந்து வருவது, தொகைநிலைத் தொடர். வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என அறுவகைத் தொகைகள் உள்ளன. (தொகை – தொக்கி வருதல்/ மறைந்து வருதல்)

தொகைநிலைக்கு எதிர்மறை தொகாநிலை. இரு சொல்லுக்கிடையே உருபு/ சொல் மறையாது வருவது. தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது உள்ளன. அவை: எழுவாய்த்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர் என்பன.

புதிய என்னும் அடைமொழி, விடுதிக்குத்தான் பொருந்தியுள்ளது. ஆகவே, இவ்வாறு வரும் தொடர்களைக் கண்டறிந்து, பொருள் மயக்கமின்றி எழுதுதல் வேண்டும்.

பெயரடையும் வினையடையும் அமைந்த தொடர்கள்

பெயரைச் சிறப்பித்து வருவது, பெயரடை. வினையைச் சிறப்பித்து வருவது, வினையடை.

நாம் பேசும்போது, இவைபோன்ற தொடர்களை மிகுதியாகப் பயன்படுத்துகிறோம். ஒரு நாள் முழுவதும், நீங்கள் பேசிய தொடர்களில் இடம்பெற்ற பெயரடை, வினையடைகளைப் பட்டியலிட்டுப் பாருங்கள். நாம் இத்தனை சொற்களைப் பயன்படுத்தினோமா! என வியப்படைவீர்கள்.

ஒரு தொடரை இருவகையாக விளக்குதல்

குறிப்பிட்ட ஒரு தொடரை இருவகையாக விளக்குவது குறித்தும் தொல்காப்பியர், சில நூற்பாக்களில் கூறியுள்ளார்.

(எ.கா.) புலி கொல் யானை. இத்தொடர் இருவகையில் பொருள் மாற்றமுடையதாக அமையும். புலியைக் கொன்ற யானை எனவும் புலியால் கொல்லப்பட்ட யானை எனவும் இரு மாறுபட்ட பொருளைத் தருகின்றது. இங்கு வினைமுதல் மாறுவதற்கேற்ப, வினை வடிவம் மாறுகிறது. இதனைத்,

'தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான' –

(தொல். சொல். வேற். மயங்கியல் 95)

என்னும் நூற்பா விளக்குகிறது. ஆகவே, தொடரில் பொருள் மயக்கம் தோன்றாத வகையில் ஏற்புடைய வேற்றுமையுருபுகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

தொடரில் முன் பின் மாற்றம்

ஒரு தொடரில் வேற்றுமையுருபு முன் பின்னாக வரும். அதாவது, தொடரின் இடையிலும் வரும், இறுதியிலும் வரும்.

எ.கா. உழுதான் வயலை (தொடரின் இறுதியில் ஐ உருபு வந்தது)

கணினியை இயக்கினான் (தொடரின் இடையில் ஐ உருபு வந்தது)

தமிழில் தொடரியலைவிட உருபனியல் கட்டமைப்புடன் விளங்குகிறது. தொடரியல் அமைப்பு, நெகிழ்வுத் தன்மை கொண்டுள்ளது.

பெயரடையும் வினையடையும் அமைந்த தொடர்கள்

குதிரை ஓடியது	= பெயர் + வினை
வெள்ளைக் குதிரை	= பெயரடை + பெயர்
வெள்ளைக் குதிரை ஓடியது	= பெயரடை + பெயர் + வினை
வெள்ளைக் குதிரை விரைவாக ஓடியது	= பெயரடை+ பெயர் + வினையடை+வினை

எடுத்துக்காட்டாக,

வைகறைச்செல்வி பாடம் படித்தாள் என்னும் தொடரைக் காண்போம்.

வைகறைச்செல்வி படித்தாள் பாடம்

படித்தாள் வைகறைச்செல்வி பாடம்

படித்தாள் பாடம் வைகறைச்செல்வி

பாடம் வைகறைச்செல்வி படித்தாள்

பாடம் படித்தாள் வைகறைச்செல்வி

மேற்கண்ட தொடர் நெகிழ்வுத் தன்மைகொண்டுள்ளதனை அறியலாம். இதுபோலச் சில தொடர்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றை இடம் மாற்றியமைத்தாலும் பொருள் மயக்கம் ஏற்படாது.

ஆங்கிலத்தில் தொடரியல் அமைப்பு, நெகிழ்வுத்தன்மை கொண்டதன்று. அம்மொழியில், ஒரு தொடரிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை இடம் மாற்றினால், பொருளும் மாறுபடும். (எ.கா.) *The cat killed the rat.*

தமிழில், உருபனியல் அமைப்புடைய தொடரில், சொற்கள் இடம் மாறினால், பொருள் மயக்கம் ஏற்படும். எடுத்துக்காட்டாக,

பொன்மணி பாடலைப் பாடினாள் என்னும் தொடரைக் காண்போம்.

பொன்மணி ஐ பாடல் பாடினாள்

(வேற்றுமையுருபு ஐ இடம் மாறியுள்ளது)

என்று மாற்றியமைத்தால், பொருள் மயக்கம் ஏற்படுகிறது. ஆகவே, தொடரியல் அமைப்பைவிட உருபனியல் அமைப்பு, கட்டமைப்பு உடையது என உணரலாம்.

இலக்கணக்கூறு நோக்கில் மாற்றம் – தோன்றா எழுவாய்

இலக்கணக்கூற்றின் அடிப்படையிலும் தொடரில் மாற்றம் ஏற்படும். எடுத்துக்காட்டாகத் திண்ணை மெழுகிற்று என்னும் தொடரைக் கூறலாம். இத்தொடரில் எழுவாய் இல்லை. ஆயினும், இத்தொடரிலுள்ள செயப்படுபொருளே (திண்ணை) எழுவாயாக வந்துள்ளது.

உண்மையில், நான் திண்ணையை மெழுகினேன் என்பதே சொல்லப்பட வேண்டிய தொடர். ஆனால், திண்ணை மெழுகிற்று எனக் கூறும்போது, நான் என்னும் எழுவாய் வெளிப்படையாக இல்லை. எழுவாய் மறைந்து வருவதனால், அதனைத் தோன்றா எழுவாய் எனக் குறிப்பர்.

மேலும், திண்ணை மெழுகப்பட்டது எனச் செயப்பாட்டு வினைத்தொடராக அமையும்போது, திண்ணை என்பது, எழுவாயாக அமைகிறது. ஆகவே, செயப்பாட்டு வினை இல்லாமலே செயப்படுபொருள், எழுவாயாக வரும் என்பதைத் திண்ணை மெழுகிற்று என்னும் தொடர் விளக்குகிறது.

மேலும் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

முள் குத்திற்று, வாள் வெட்டிற்று, எழுதுகோல் எழுதிற்று, கல் தடுக்கிற்று ஆகியனவற்றைக் கூறலாம். இக்கருத்தைச்

ஒலியனியல்

குறிப்பிட்ட ஒரு மொழியில் உள்ள பேச்சு ஒலிகளைக் குறிப்பது ஒலியனியல். ஒரு மொழியில் பொருள் வேறுபாட்டை உணர்த்தக்கூடிய மிகச்சிறிய ஒலிக்கூறே ஒலியன். எ.கா. பட்டம் – சட்டம் இச்சொற்களில் முதலில் அமைந்துள்ள பகரமும் சகரமும் (ப், ச்) பொருளை வேறுபடுத்துகின்றன. இவை ஒலியன்கள்.

உருபனியல்

ஒரு மொழியில் பொருள் உணர்த்தும் மிகச்சிறிய கூறு உருபன். இதனைப் பகுக்க முடியாது. ஒலியனை அடையாளம் காண்பதற்கு இரு ஒலிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும் தன்மை மட்டும் போதுமானது. உருபன்களை அடையாளம் காண வேண்டுமானால், அதன் வடிவமும் அதுஉணர்த்தும் பொருளும் தேவை.

'செயப்படு பொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே'

(தொல். சொல். வினை *246*)

என்னும் நூற்பா விளக்குகிறது. இதன் வாயிலாகத் தொல்காப்பியர், தொடரில் ஏற்படும் மாற்றங்களை இலக்கணக் கூற்றின் அடிப்படையில் விளக்க முடியும் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலத்தில் இதுபோலத் தொடர் வருவதுண்டு.

Peter opened the door. (*With Subject*)

The door was opened. (*Without Subject*)

தோன்றாச் செயப்படுபொருள்

ஒரு தொடரில் செயப்படுபொருள் வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம். அவ்வாறு மறைந்து வருவது தோன்றாச் செயப்படுபொருள். நான் படித்தேன் என்னும் தொடரில், பாடம் என்னும் செயப்படுபொருள் வெளிப்படையாகத் தோன்றவில்லை. நான் ஆடினேன் என்னும் தொடரிலும் நடனம் என்னும் செயப்படுபொருள் வெளிப்படையாகத் தோன்றவில்லை. இத்தொடர்களில் படித்தேன், ஆடினேன் என்னும் வினைமுற்றுகளே செயப்படுபொருளை உணர்த்திவிடுகின்றன.

உருபனியலை அடையாளங்காணல்

முருகனுக்குத் தந்தான், பசித்தவர்க்கு உணவளித்தான் என்னும் தொடர்களில் கு என்னும்வேற்றுமையுருபு கொடைப்பொருளையே குறிக்கிறது. இவ்வுருபை மேலும் பகுக்க முடியாது. கு என்னும் உருபை முருகன், பசித்தவர் ஆகிய சொற்களிலிருந்து பிரித்தாலும், பெயர்ச்சொற்கள் பொருளைத் தருகின்றன. ஆனால், கொக்கு, சுக்கு ஆகிய சொற்களிலுள்ள கு என்பதைப் பிரிக்க முடியாது. பிரித்தால் கொக், சுக் என்பன பொருள் தரா. ஆகவே,

முருகனுக்கு – கு என்பது ஓர் உருபன்.

கொக்கு – கு என்பது உருபன் அன்று. அது சொல்லின் உறுப்பே.

தோன்றாப் பயனிலை

ஒருதொடரில்பயனிலைவெளிப்படையாக வரவில்லையெனில், அதனைத் தோன்றாப் பயனிலை என்பர்.

எனக்குப் பசி (இருக்கிறது)

எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு கோவில் (இருக்கிறது)

என்னும் தொடர்களில், இருக்கிறது என்னும் பயனிலை வெளிப்படையாகத் தோன்றவில்லை. இவ்வினைமுற்று, தோன்றாப் பயனிலையாகும்.

முக்காலத்துக்கும் பொருத்தமுடைய வினைமுற்று

முக்காலத்தும் இருக்கும் ஒரு பொருளை விளக்கும்போது, அத்தொடரின் வினைமுற்று, செய்யும் என்னும் வாய்பாட்டில் அமைதல் வேண்டும் என வினையியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக,

நீர் குளிரும்

மலை நிற்கும்

ஞாயிறு தோன்றும்

ஐப்பசி மாதத்தில் அடைமழை பெய்யும்

நூலகம் காலை ஒன்பது மணிக்குத் திறக்கும்

ஆகிய தொடர்களைக் கூறலாம். இவையனைத்தும் செய்யும் என்னும் வாய்பாட்டால் அமைந்துள்ளன. இதுபோல் ஆங்கிலத்திலும் உண்டு. (எ.கா.) *The Sun rises in the east.*

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை

எம்முறைச் சொல்லு நிகழும் காலத்து

மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்

(தொல்.வினை. *240*)

தெரிநிலை வினைமுற்று

வினைமுற்றுச் சொற்கள் தெரிநிலை, குறிப்பு என இருவகைப்படும். ஒரு செயலைத் தெளிவாகத் தெரிவிக்கும் வினை, தெரிநிலை

வினைமுற்று. இவ்வினைமுற்றின் விகுதியானது திணை, பால், எண், இடம் ஆகியவற்றையும் உணர்த்துகிறது. எடுத்துக்காட்டாக, நடந்தான் என்னும் வினைமுற்றில் உயர்திணை(திணை), ஆண்பால்(பால்), ஒருமை(எண்), படர்க்கை(இடம்) ஆகியன உள்ளன. இஃது, இறந்தகாலத்தையும் குறிக்கிறது; செய்பவன், கருவி, காலம், நிலம், செயல், செய்பொருள் ஆகிய ஆறனையும் வெளிப்படையாக உணர்த்துகிறது.

எழுதினாள் – இவ்வினைமுற்று மேற்கூறிய ஆறனையும் வெளிப்படுத்துகிறதா ? கண்டறிக.

குறிப்பு வினைமுற்று

செயல் செய்பவரை வெளிப்படையாகக் காட்டிச் செயலையும் காலத்தையும் குறிப்பாகத் தெரிவித்து நிற்கும் வினைச்சொல்லே குறிப்பு வினைமுற்று. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயரின் அடியாகக் குறிப்புவினை தோன்றும். இவன் பொன்னன் என்பது, பொன்னை உடையவனாக இருந்தான், இருக்கிறான், இருப்பான் எனப் பொருளுணர்த்திச் செயலையும் காலத்தையும் குறிப்பாகவும் செயல் செய்பவனை வெளிப்படையாகவும் கூறுகிறது.

தொடரமைப்பில் ஆகுபெயர்

நாம் பேசும்போது, இயல்பாகவே நம்மையறியாமல் இலக்கணக்கூறுகளைப் பயன்படுத்திப் பேசுகிறோம். எடுத்துக்காட்டாக ஆகுபெயரைக் கூறலாம். கீழ்க்காணும் உரையாடல்களைப் படித்துப்பாருங்கள். அவற்றுள் ஆகுபெயர் இடம்பெற்றுள்ளதனை அறிந்துகொள்வீர்கள்.

(வீட்டில். . .)

அம்மா: கண்ணா, பள்ளிக்கு நேரமாகவில்லையா?

கண்ணன் : அம்மா, இன்று பள்ளிக்கு விடுமுறை.

(பேருந்து நிறுத்தத்தில். . .)

ஒருவர் : ஐயா, 47 சென்றுவிட்டதா?

மற்றொருவர் : இன்னும் வரவில்லை.

(பேருந்தில். . .)

நடத்துநர்: காந்தி மண்டபம் யாரு? இறங்குங்க.

(அலுவலகத்தில். . .)

மேலாளர் : அந்த நீலச்சட்டை இன்னும் வரவில்லையா?

(பள்ளியில். . .)

முகிலன்: மதி, பாரதியாரைப் படித்துவிட்டாயா?

மதியழகன் : ஓ! படித்துவிட்டேனே!

மேற்கண்ட உரையாடல்களில், பள்ளிக்கு விடுமுறை என்பது, பள்ளியைக் குறிக்காமல், அங்குப் படிக்கும் மாணாக்கருக்கு விடுமுறை என்பதனைக் குறிக்கிறது. இஃது, இடவாகுபெயர். இதுபோலவே மற்ற தொடர்களிலுள்ள ஆகுபெயர்களையும் கண்டறியுங்கள்.

ஆகுபெயர் என்பது, ஒரு பொருளின் இயற்பெயர், அதனைக் குறிக்காமல் அதனொடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருவதாகும். ஆகுபெயர் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் ஏற்கெனவே படித்திருக்கிறீர்கள். அவற்றை நினைவு கூருங்கள்.

தமிழில் ஆகுபெயர், தொடரியல் இலக்கணத்துடன் தொடர்புடையதாக உள்ளது. பெயர்கள் தொடரிலிருந்து வருவிக்கப்படுவதனால், அவற்றை வேற்றுமை மயங்கியலில் தொல்காப்பியர் அமைத்துள்ளார்.

பலவகைத் தொடர்கள்

இன்றைய வழக்கில், நாம் பேச்சிலும் எழுத்திலும் பலவகைத் தொடர்களைப் பயன்படுத்துகிறோம். செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத்தொடர், உணர்ச்சித் தொடர் ஆகியன நாம் படிக்கும் நாளிதழ், வார, மாத இதழ்கள், விளம்பரம், அறிவிப்பு ஆகியவற்றிலும் இடம்பெறுகின்றன. அவற்றைப் படித்துப் பார்ப்பதுடன் இருந்துவிடாமல்,

அவற்றின் தொடரமைப்பை அறிந்துகொள்ளவும், பிழை கண்டறிந்து திருத்தவும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

தொடர் வகையும் தொடரமைப்பும்

தொடர்கள், கருத்தை வெளிப்படுத்தும் வகையில் நால்வகையாக அமைந்து வருவதனை ஏற்கெனவே படித்திருப்பீர்கள். அவற்றை மீண்டும் நினைவுகூர்வோமா?

தொடர்வகைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

தொடர் வகை

- செய்தித் தொடர்
- வினாத் தொடர்
- விழைவுத் தொடர்
- உணர்ச்சித் தொடர்

தொடர்வகை	தொடர்
செய்தித்தொடர்	என் தந்தை தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.
வினாத்தொடர்	'ஆனந்தயாழை மீட்டுகிறாய்' என்னும் பாடலைப் பாடிய கவிஞர் யார்?
விழைவுத்தொடர்	மழை வருவதற்குமுன் வீட்டுக்குச் செல்க. (கட்டளை) நீடூழி வாழ்வாயாக! (வாழ்த்துதல்) வாய்மையையும் நேர்மையையும் பின்பற்றாதவர்கள் ஒழிக. (வைதல்) வயிறார உணவிடுக. (வேண்டுதல்)
உணர்ச்சித்தொடர்	ஐ! எவ்வளவு பெரிய யானை! (வியப்பு) அந்தோ! தாவரங்கள் நீரின்றி வாடுகின்றனவே! (துன்பம்/அவலம்) தலைவா, வருக! வருக! உன் வரவு நல்வரவாகுக! (மகிழ்ச்சி)

தொடரமைப்புகள்

தொடரமைப்புகளுள் சிலவற்றைத் தனிநிலை, தொடர்நிலை, கலவைத் தொடர்கள் என ஆங்கில இலக்கண அமைப்பையொற்றிக் கூறுகின்றனர். அத்தகைய அமைப்புடைய தொடர்கள், பெரும்பான்மையாகக் கதை, கட்டுரைகளில் இடம்பெறுகின்றன.

தனிநிலைத் தொடர்

கண்மணி நாளிதழ் படிக்கிறாள்.

(ஓர் எழுவாய், ஒரு பயனிலை)

கண்மணி நாளிதழையும், வளவன் வார இதழையும், முருகன் மாத இதழையும் படிக்கின்றனர்.

(பல எழுவாய்கள், ஒரே பயனிலை)

தொடர்நிலைத் தொடர்

நான் நன்றாகப் பொருளுணர்ந்து படித்தேன்; அதனால், தேர்வில் முதலிடம் பெற்றேன். (ஒரே எழுவாய், பல பயனிலைகள்)

நான் என்பது எழுவாய். படித்தேன், பெற்றேன் என்பன பயனிலைகள். அதனால் என்பது, இணைப்புச்சொல்.

இவ்வாறு, ஒன்றுக்கும் மேற்பட்ட தொடர்கள், அதனால், ஆகையால், ஏனெனில், ஏனென்றால் முதலான இணைப்புச் சொற்களால் இணைக்கப்பட்டு வருவதும், ஓர் எழுவாய், பல பயனிலைகளைக்கொண்டு முடிவதும் தொடர்நிலைத் தொடர்களாகும்.

கலவைத்தொடர்

தமிழில் பிழையின்றி எழுத வேண்டுமெனில், நல்ல தமிழ்நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் தொடரில், நல்ல தமிழ்நூல்களைப் படிக்க வேண்டும் என்பது, முதன்மைத் தொடர். தமிழில் பிழையின்றி எழுத வேண்டுமெனில் என்பது, சார்புத் தொடர். இவ்வாறு, பல தொடர்கள் கலந்து ஒரே தொடராக வருவது கலவைத் தொடராகும்.

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றும் பயிற்சியைக் கீழ்வகுப்புகளிலேயே மேற்கொண்டுள்ளோம். அவ்வாறு மாற்றம் பெறும் தொடர்களை வினை மாற்றம், கூற்று மாற்றம், ஒரு தொடரைப் பல்வகையாக மாற்றுதல் எனப் பகுத்துக் காணலாம்.

வினை மாற்றம்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றும்போது, பெயர்ச்சொற்கள் மாற்றம் அடைவதில்லை. வினைச்சொற்களே மாற்றம் அடைகின்றன.

- செய்வினை – செயப்பாட்டு வினை

பூங்குழலி யாழ் மீட்டினாள் – செய்வினைத்தொடர்

யாழ் பூங்குழலியால் மீட்டப்பட்டது – செயப்பாட்டு வினைத் தொடர்

தன்வினை – பிறவினை

தமிழழகன் கல்வி கற்றான் – தன்வினை

தமிழழகன் கல்வி கற்பித்தான் – பிறவினை

உடன்பாட்டு வினை– எதிர்மறை வினை

கலைச்செல்வி நேற்று வந்தாள் – உடன்பாட்டு வினை

கலைச்செல்வி நேற்று வந்திலள் – எதிர்மறை வினை

இன்றைய வழக்கில், இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் தொடர்களில் எதிர்மறைப் பொருளை உணர்த்த இல்லை என்னும் சொல் பயன்படுகிறது. எதிர்காலத்தில் எதிர்மறைப்பொருளை உணர்த்த ஆ என்னும் எதிர்மறை இடைநிலையுடன் சேர்ந்த மாட்டா (மாட்டு + ஆ) மாட்டாள் என்னும் சொல் வருகிறது.

இளமுருகன் நேற்று வரவில்லை (இறந்தகாலம்)

விண்ணரசி இன்று வரவில்லை (நிகழ்காலம்)

இனியன் நாளை வரமாட்டான் (எதிர்காலம்)

அல்ல என்னும் சொல்லும் ஐம்பால்மூவிடத்துக்கும் முக்காலத்திலும் எதிர்மறைப் பொருளில் வருகிறது.

நான் அல்ல, நீ அல்ல, நாங்கள் அல்ல, நீங்கள் அல்ல.

அவன் அல்ல, அவள் அல்ல, அவர் அல்ல, அது அல்ல, அவை அல்ல.

(நான் அல்லேன்; நீ அல்லை; நாங்கள் அல்லேம் என்பன இலக்கண வழக்கு.)

கூற்று மாற்றம்

ஒருவர் கூறியதனையே கூற்று என்கிறோம்.

- நேர்க்கூற்று – அயற்கூற்று

ஒருவர் பேசுவது, நேர்க்கூற்று எனவும், அவர் பேசியதனைப் பிறர் வாங்கி (எடுத்து)க் கூறுவது அயற்கூற்று எனவும் கூறுவர்.

"தேன்மொழி, நூலைக் கொடு" என்று, வளவன் கேட்டான். – நேர்க்கூற்று

நூலைத் தனக்குக் கொடுக்குமாறு தேன்மொழியை வளவன் கேட்டான். – அயற்கூற்று

ஒரு தொடரைப் பலவகைத் தொடர்களாக மாற்றுதல்

ஒரு தொடரைப் பலவகையாகவும் மாற்றலாம். எடுத்துக்காட்டாக, கதிரவன்

ஓவியம் வரைந்தான் என்னும் தொடரை வெவ்வேறு தொடராக மாற்றிப் பார்ப்போம்.

கதிரவன் ஓவியம் வரைந்தான் - செய்தித்தொடர் (உடன்பாடு)

கதிரவன் ஓவியம் வரைந்திலன் - செய்தித்தொடர் (எதிர்மறை)

கதிரவன் ஓவியம் வரைந்தானா - வினாத்தொடர்

கதிரவா, ஓவியம் வரை - கட்டளைத்தொடர்

கதிரவா, என்னே! உன் ஓவியத்தின் அழகு! - உணர்ச்சித்தொடர்

என மாற்றியமைக்கலாம். மேலும், அத்தொடரை ஓவியம் கதிரவனால் வரையப்பட்டது எனச் செயப்பாட்டு வினைத்தொடராகவும், கதிரவன் ஓவியம் வரைவித்தான் எனப் பிறவினைத் தொடராகவும் மாற்றலாம்.

மொழிநடை

கற்போர் உள்ளம் கவரும்வகையில் எழுதுவதே மொழிநடையாகும். மொழிநடை என்பது, தொடர்களில் உள்ள அமைப்பொழுங்கைக் குறிப்பது எனலாம். கட்டுரைகளையும் நூல்களையும் படைக்கும் படைப்பாளர்கள், தமக்கெனக் குறிப்பிட்ட ஒரு மொழிநடையைப் பின்பற்றுகின்றனர். அவர்களின் படைப்புகளில், தொடர்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. இனிய நடை, எளிய நடை, தனித்தமிழ் நடை, இலக்கிய நடை, மணிப்பிரவாள நடை, அடுக்குமொழி நடை, வினாவிடை நடை என்பன சில மொழிநடைகளாகும்.

வினாவிடை நடை

கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந்தன்மையது. கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டன? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மையூட்டினவர் எவர்? இயல்பாக அரும்பிய இவற்றின் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி. –முருகன் அல்லது அழகு, திரு. வி. கலியாண சுந்தரனார்

இவ்வுரைப்பகுதியில் வினா கேட்டு, அதற்கு விடை கூறுவது போன்ற தொடர்கள் அமைந்துள்ளன. பண்டைய இலக்கண உரைநூல்களில், இவ்வினா விடை நடையைப் பெரிதும் காணலாம். இதற்குத் தடைவிடை நடை என்றும் பெயர். (தாமே தடைகளை எழுப்பி, விடை கூறும் நடை). இவ்வுரைப்பகுதியின் மொழிநடைச் சிறப்பைப் பட்டியலிடுவோமா!

- சிறு சிறு தொடர்களாக அமைந்துள்ளன.
- வினாத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

தெரியுமா?

ஒரு வேர்ச்சொல்லிலிருந்து, எண்ணற்ற சொல் வடிவங்களை/சொல்லாக்கங்களை உருவாக்க இயலும்.

எ.கா. படி என்னும் வேர்ச்சொல்லிலிருந்து . . .

படித்த	படித்து	படித்தல்
படிக்கிறேன்	படித்தேன்	படிப்பேன்
படிக்கிறோம்	படித்தோம்	படிப்போம்
படிக்கிறாய்	படித்தாய்	படிப்பாய் . . .

மேலும், பல சொல் வடிவங்களைக் காண இந்த வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

www. tamilvu.org (தமிழ் இணையக் கல்விக்கழகம்)

- அழகு, கவின், வனப்பு என ஒரு பொருள் தரும் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- இயற்கை – செயற்கை, புனல் – நெருப்பு, ஞாயிறு – திங்கள், தண்மை – வெம்மை என எதிர்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

- காரிருள் நீழல், தேன் பூங்கா வனம், வான் பரந்த பொழில், கான் பரந்த தூறு என அடைமொழிகள் வந்துள்ளன.

- மலையும் ஆறும் காடும் கடலும், ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் என எண்ணும்மைகள் அமைந்துள்ளன.

- 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்னும் அழகிய தொடர் உள்ளது.

இவ்வாறு, இவ்வுரைப்பகுதியின் நடைச்சிறப்பை உய்த்துணரலாம். ஆகவே, நாம் பலவகை மொழிநடைகளையும் அறிந்துகொள்ள வேண்டுமானால், அறிஞர் பலர் எழுதியுள்ள பல நூல்களையும் படித்தல் வேண்டும்.

தொடரியலுக்கு வளஞ்சேர்க்கும் விகுதிகள்

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர், காலந்தோறும் மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்களிலும் இடம்பெறத் தொடங்கின. எடுத்துக்காட்டாகச் சங்கம் மருவிய காலத்தில் ஆளர், காரர் ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் சேர்ந்து, புதிய சொற்கள் உருவாகின.

மணிப்பிரவாள நடை

மணியும் பவளமும் கலந்ததுபோல் வடசொற்களையும் தமிழ்ச்சொற்களையும் கலந்து எழுதும் நடை. இடைக்காலத்தில் இந்நடை செல்வாக்குப் பெற்றிருந்தது. பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி முதலிய நூல்கள் இந்நடையில் அமைந்திருந்தன.

(காவலாளர் – மணிமேகலை), (கஞ்சக்காரர் – சிலம்பு).

பல்லவர்,சோழர்,நாயக்கர்காலங்களிலும் மொழியில் மாற்றங்கள் ஏற்பட்டன. நாயக்கர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட காரன், காரி, சாலி ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள், இக்காலத் தொடர்களிலும் மிகுதியாகப் பயன்படுகின்றன. இவை வடமொழியோடு ஒப்புமையாக்கப்பட்ட விகுதிகளாகும். எடுத்துக்காட்டாகப் பால்காரன், வீட்டுக்காரி, வண்டிக்காரர், புத்திசாலி, பலசாலி, பொறுமைசாலி, திறமைசாலி, மேலாளர், விற்பனையாளர், உரிமையாளர், கல்வியாளர், சிந்தனையாளர் ஆகியவற்றைக் கூறலாம்.

தொடர்களையும் அவற்றிற்குரிய இலக்கண விதிகளையும் அறிந்துகொள்வது மட்டுமன்றிப் பலவகைத் தொடர்களைப் பயன்படுத்திப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் செய்வோம். மொழியின் தொடரியல் அமைப்பைப் போற்றுவோம்.

படிப்போம் சுவைப்போம்

திருக்குறளில் தொடரமைப்புக் கூறுகள்

தோன்றா எழுவாய்	தோன்றாச் செயப்படுபொருள்	தோன்றாப் பயனிலை
'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சி யவர்க்கு' குறள். 352	'சென்ற இடத்தால் செலவிடா தீதொரிஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு' குறள். 422	'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை' குறள் .15
எது இன்பம் பயக்கும்? என்னும் வினாவுக்கு, மாசறு காட்சியவர்க்கு அக்காட்சி இன்பம் பயக்கும். இங்குக் காட்சி என்பது, தோன்றா எழுவாய்.	எதை உய்ப்பது அறிவு? என்னும் வினாவுக்கு, மனத்தை உய்ப்பது அறிவு என விடை வரும். இங்கு, மனம் என்பது, தோன்றாச் செயப்படுபொருள்.	கெடுக்க வல்லதும் மழை, காக்க வல்லதும் மழை. இங்கு வல்லது என்பது, தோன்றாப் பயனிலை. நாம்தான் அச்சொல்லை வருவித்துக் கொள்ளல் வேண்டும்.

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிலம்பரசன் அரசுப் பள்ளியில் படிக்கிறான். அவன் தம்பியும் அதே பள்ளியில் படிக்கிறான்– இத்தொடரமைப்பு--------------

   அ) இயற்பெயர் + இயற்பெயர் ஆ) இயற்பெயர் + சுட்டுப்பெயர்

   இ) சுட்டுப்பெயர் + இயற்பெயர் ஈ) சுட்டுப்பெயர் + சுட்டுப்பெயர்

2. செழியன் காலை எழுந்து, நூல் படித்து, உணவு உண்டு, பள்ளிக்குச் சென்றான் – இத்தொடரில் அடுக்கி வந்திருப்பது

   அ) வினையெச்சங்கள் ஆ) வினைமுற்றுகள் இ) பெயரெச்சங்கள் ஈ) வேற்றுமையுருபுகள்

3. வண்ணச் சினைச்சொல்லைக் குறிக்காத தொடர்------------

   அ) செங்கால் நாரை ஆ) கரிகால் வளவன் இ) அழகிய மரம் ஈ) பைந்தண்டுத் தாமரை

4. பாடும் குயில் – இப்பெயரெச்சத் தொடரில் இடையில் வருவதற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுக்க.

   அ) கரிய ஆ) சிவந்த இ) மெல்லிய ஈ) வெள்ளை

குறுவினா

1. தொடரில், வேற்றுமையுருபுகள் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
2. மான் மேய்ந்தது – இத்தொடரில், இரு சொல்லுக்கிடையே வேறு பல சொற்களை இணைத்துத் தொடர்களை உருவாக்குக.
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அடைமொழியுடன் வருமாறு தொடர்களை அமைத்துக்காட்டுக.
4. குழந்தை சிரித்தது – இத்தொடரைச் செயப்பாட்டு வினைத் தொடராக மாற்ற இயலுமா? காரணம் கூறுக.
5. பறவைகள் தம்கூட்டை நோக்கிப் பறந்து சென்றது – இத்தொடரில் அமைந்துள்ள பிழையைக் கண்டறிந்து, திருத்துக. இதுகுறித்துத் தொல்காப்பியம் விளக்குவதைக் குறிப்பிடுக.
6. வழுநிலை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

சிறுவினா

1. தொடர்ப் பொருத்தம் அமைந்து வருவதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. செயப்படுபொருளே எழுவாயாக வரும் என்பதைத் தொல்காப்பியம்வழி விளக்குக.
3. நாம் பேசும்போது, இயல்பாகவே ஆகுபெயரைப் பயன்படுத்துகிறோம் என்பதனை நடைமுறை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

4. ஏதேனும் ஒரு செய்தித்தொடரை உருவாக்குக. அத்தொடரை வெவ்வேறு தொடர்களாக மாற்றியமைத்துக்காட்டுக.

5. கீழ்க்காணும் உரைப்பகுதியின் மொழிநடைச் சிறப்பை விளக்குக.

"சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ! கைத் தோலுரியக் கல்லுடைக்கும்போது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ! சிறைக்கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். வள்ளுவர் குறள் படித்து உள்ளம் தழைத்தேன்".

நெடுவினாக்கள்

1. அண்மையில், நீங்கள் கேட்ட உரையாடலில் இடம்பெற்ற தொடர்களின் தொடரமைப்புகளை ஆராய்ந்து எழுதுக.

2. சொல் நிலையிலும், தொடர் நிலையிலும் சொற்கள் அடுக்கி வருவதனை நடைமுறை எடுத்துக்காட்டுகளோடு விளக்குக.

3. வழுநிலை, வழாநிலை, வழுவமைதி ஆகியவற்றுக்கு நடைமுறை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

படிப்போம் சுவைப்போம்

விருந்தொன்றில் கலந்துகொண்ட அனைவருக்கும் பழம்பால் வழங்கப்பட்டது. அங்கிருந்த புலவர், மற்றொருவரிடம், "பண்புத்தொகையா? உம்மைத்தொகையா?" என்று வினவினார். இவர், புலவர் கூறியதன் பொருள் புரியாமல் விழித்தார். "என்ன ஐயா, விளங்கவில்லையா?

பழம்பால் என்று கூறினால், பண்புத்தொகை. (பழைமை + பால்). அதாவது, பழைய பால்

பழம் பால் என்று கூறினால், உம்மைத்தொகை. (பழம் + பால்) அதாவது, பழமும் பாலும். புரிந்ததா" என்று புலவர் விளக்கினார். அவரின் சிலேடை நயத்தைக் கேட்டு, இவர் வியப்பில் ஆழ்ந்தார்.

(பால் பழம் எனக் கூறினால், உம்மைத்தொகை மட்டுமே வரும்.)

அறிவோம் தெளிவோம்

ஒரு சொல் இரு பொருள்

பெரும்புலவர் ஒருவர் விருந்துண்ணச் சென்றார். விருந்து முடிந்ததும், அவர் பருகுவதற்குப் பால் வழங்கப்பட்டது. அந்தப் பாலில் ஒரு சிற்றெறும்பு கிடந்தது. அதனைக் கண்டதும் அவர், "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்கிறான்" என்றார். அவர் கூறியதன் பொருள் விளங்காமல், அருகிலிருந்தவர்கள் வியப்புடன் நோக்கினர். அதற்கு அப்பெரும்புலவர், 'சீனி (சருக்கரை) யின் வாசத்தை அறிவது எறும்புதானே! அதனால், எறும்பைச் சீனிவாசன் என்று கூறலாமல்லவா! இந்தப் பாலில் எறும்பு இருப்பதைப் பாருங்கள். அதைச் சுட்டவே, "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்கிறான் என்று கூறினேன்" என விளக்கம் தந்தார்.

பாற்கடலில் சீனிவாசன் – இருபொருள்

- திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள இறைவன்
- சீனியின் வாசம் அறியும் எறும்பு

உரையாடல்

அகராதிக் கலை

கற்பனை உரையாடல்

இடம்: சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

உரையாடுவோர்: அமுதா, அந்தோணி, அப்துல்லா இவர்களுடன் அகராதி

அகராதி: மாணாக்கர்களே! என்ன தேடுகிறீர்கள்?

அமுதா: எங்கிருந்து வருகிறது குரல்? (அமுதா, அந்தோணி, அப்துல்லா ஆகிய மூவரும் சுற்றும்முற்றும் பார்க்கின்றனர்) .

அகராதி: நான்தான் அகராதி பேசுகிறேன். உங்களுக்கு என்ன வேண்டும்?

அந்தோணி: ஓ! பேசும் அகராதியா, மிக்க மகிழ்ச்சி. எங்களுக்குக் 'குவலயம்' என்னும் சொல்லுக்குப் பொருள் வேண்டும்.

அகராதி: குவலயம் என்றால் உலகம். வையம், ஞாலம், புவி, புவனம், அகிலம், அண்டம், பார், தரணி, பூமி ஆகிய சொற்களும் உலகம் என்னும் பொருளைத்தான் குறிக்கின்றன.

அப்துல்லா: அப்படியா! வியப்பாக உள்ளதே! உலகம் என்பதற்கு இத்தனை சொற்கள் இருக்கின்றனவா! அகராதியே! உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளோம். உன் தோற்றம் குறித்துச் சொல்வாயா?

அகராதி: ஓ! சொல்வேனே! அகரம், ஆதி என்னும் இரு சொற்களின் சேர்க்கையே நான். ஆதி என்பதற்கு முதல் என்னும் பொருளும் உண்டு. ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அகர வரிசையில் அமையும்படி தொகுத்து விளக்கும் நூல்தான் நான். என்னை அகரமுதலி எனவும் கூறுவர்.

அமுதா: அகராதியே! அயல்நாட்டவர்தாம் உன்னைத் தமிழுக்கு அறிமுகம் செய்தனரா?

அகராதி: இல்லை! இல்லை! தமிழில் சொல்லுக்குச் சொல் பொருள் விளக்கம் செய்யும்முறை தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கிவிட்டது. தொல்காப்பியர், உரியியலில் பல சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

அந்தோணி: அப்படியா! எங்களுக்குத் தெரியாதே. சரி, இதற்கு ஓர் எடுத்துக்காட்டைச் சொல்லேன்.

அகராதி: மாணாக்கர்களே! தொல்காப்பியர்,

'செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்'

என்ற நூற்பா மூலம் எளிதாகப் பொருள் விளக்கம் தருகிறார். அஃதாவது, செழுமை என்பது, வளமையையும் கொழுப்பு என்னும் பண்பையும் குறித்து வரும். மற்றோர் எடுத்துக்காட்டும் கூறுகிறேன். கேளுங்கள். 'ஐ வியப்பாகும்' என்பது ஒரு நூற்பா.

குழந்தைகள் வியப்பிற்குரிய பொருளைக் கண்டால் 'ஐ'யென ஒலி எழுப்புவது இயற்கையல்லவா? இந்த உரிச்சொல்லுக்குத்தான் தொல்காப்பியர் பொருள் விளக்கம் தருகிறார்.

அப்துல்லா: ஓ! அப்படியென்றால், தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லுக்குப்

பொருள் காணும் செயல்பாடு தொடங்கிவிட்டது. சரி, அகராதி என்ற சொல் தமிழில் எப்பொழுது பயன்பாட்டிற்கு வந்தது?

அகராதி: தமிழில் முதன்முதலாக அகராதி என்ற சொல்லைப் பயன்படுத்திய நூல், 1594இல் எழுதப்பட்ட 'அகராதி நிகண்டு' என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் சிதம்பரத்தில் வாழ்ந்த இரேவணச்சித்தர் ஆவார்.

அமுதா: அப்படியா! ஆனால், 'நிகண்டு' என்று கூறினாயே? அந்தச் சொல்லுக்குப் பொருள் என்ன?

அகராதி: சொல்கிறேன். 'நிகண்டு' என்பது, வடசொல். இச்சொல்லுக்குத் தமிழில் சொற்றொகை, தொகுப்பு அகராதி, தொகையகராதி, தமிழ்ப்பா அகராதி, தொகுதி, கூட்டம் எனப் பல பொருள்களுள்ளன. நிகண்டுகள், தமிழிலுள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்குட்படுத்தி, அவற்றிற்குரிய பொருளைப் பாடல் வடிவில் தந்தன. முதலில் தோன்றிய நிகண்டு சேந்தன் திவாகரம். நிகண்டு நூல்களுள் சிறந்ததாகச் சூடாமணி நிகண்டைக் கூறுவர்.

அமுதா: நிகண்டு என்றால் என்னவென்று புரிந்துகொண்டோம். ஆனால், எனக்கோர் ஐயம். தமிழிலுள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்கு உட்படுத்துதல் என்று கூறினாயே, அப்படி என்றால் என்ன?

அகராதி: சொல்கிறேன். தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம் முதலான பன்னிரு பெயர்த்தொகுதியில், தமிழிலுள்ள சொற்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாகச் சூடாமணி நிகண்டில், விலங்குகளின் இளமைப்பெயரை அறிய விரும்பினால், முதலில் விலங்கின் பெயர்த்தொகுதியைக் காண வேண்டும். பின்னர், விலங்கின் பிள்ளைமரபு என்னும் தலைப்பில் இடம்பெற்றிருக்கும் பல்வேறு விலங்குகளுக்குரிய இளமைப்பெயர்களைக் காணலாம். பறழ், பிள்ளை, குட்டி, குழவி, பார்ப்பு, குருளை, கன்று, மறி, போதகம் என்பனவெல்லாம் விலங்கின் இளமைப்பெயர்களே. அதுமட்டுமன்று, அப்பெயர்களுக்குரிய விலங்குகள் எவையெவை என்பதும் கொடுக்கப்பட்டிருக்கும்.

அந்தோணி: அடடே! இதுபோன்று ஒரு சொல்லுக்குரிய பல பெயரையும் அறிந்துகொண்டால், எங்கள் பேச்சிலும்

அறிவோம் தெளிவோம்

அகராதி வகைகள்

சிறுவர்க்கான அகராதிகள்	வணிகச் சொல் அகராதிகள்
எதுகை மோனை அகராதிகள்	கணினிச் சொல் அகராதிகள்
மரபுத்தொடர் அகராதிகள்	மருத்துவச் சொல் அகராதிகள்
வட்டாரவழக்கு அகராதிகள்	அலுவலகப் பயன்பாட்டுச் சொல் அகராதிகள்
கலைச்சொல் அகராதிகள்	ஆட்சிமொழி அகராதிகள்
பழமொழி அகராதிகள்	இணைய அகராதிகள்
மேற்கோள் அகராதிகள்	பொறியியற் சொற்சார்ந்த அகராதிகள்
ஒரு பொருட் பன்மொழி அகராதிகள்	தத்துவம்சார் அகராதிகள்
எதிர்ச்சொல் அகராதிகள்	சமயக் கருத்துசார்ந்த அகராதிகள்
ஒலிக்குறிப்பு அகராதிகள்	இலக்கியவியல் சார்ந்த அகராதிகள்
ஒலிப்பு அகராதிகள்	அயற்சொல் அகராதிகள்

எழுத்திலும் பல சொற்களைப் பயன்படுத்துவோம், அல்லவா?

அகராதி: உண்மைதான். சரியாகச் சொன்னீர்கள். உங்கள் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ள இதுவே சிறந்த வழி.

அப்துல்லா: அப்படியே செய்வோம். அண்மையில் பள்ளி சார்பாக எங்களைப் புத்தகக் கண்காட்சிக்கு அழைத்துச் சென்றனர். அங்குச் சதுரகராதி என்னும் பெயருடைய ஒரு நூலைப் பார்த்தோம். அதுவும் அகராதிதானோ?

அகராதி: ஆம். இந்தச் சதுரகராதியை உருவாக்கியவர் வீரமாமுனிவர். இவர், இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி. இவர் சதுரகராதியினை 1732ஆம் ஆண்டு தொகுத்தார். 'சதுர்' என்பதற்கு நான்கு என்பது பொருள். இந்நூலுள் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் வரிசைமுறையில் நான்காகப் பகுத்துச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார்.

வீரமாமுனிவர்

அமுதா: வீரமாமுனிவரைப்போல அயல்நாட்டவர் வேறு யாரேனும் இப்பணியில் ஈடுபட்டனரா?

அகராதி: ஆம். வீரமாமுனிவரைப் பின்பற்றி ஐரோப்பியர் பலர் தமிழ் அகராதிகளை உருவாக்கியுள்ளனர். அவர்களுள் பெப்ரீசியஸ், இராட்லர், வின்சுலோ, பெர்சிவல், ஜியு. போப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அந்தோணி: இவர்கள் மட்டும்தான் அகராதியை உருவாக்கினார்களா?

அகராதி: இல்லை, இல்லை. நான் அப்படிக் கூறவில்லை. அயல்நாட்டவர் மட்டுமல்ல, தமிழர்களும் அகராதிகளைத் தொகுத்துள்ளனர். சென்னைப்

பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பெற்ற தமிழ்ப்பேரகராதி (தமிழ் லெக்ஸிகன்) குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகராதியில், சொல்லுக்கான விளக்கங்கள் ஏழு கூறுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

அப்துல்லா: அப்படியா? அவை என்னென்ன?

அகராதி: சொல்கிறேன். அவை, 1. சொல் 2. சொல்லின் ஆங்கில ஒலிபெயர்ப்பு 3. இலக்கணப் பாகுபாடு 4. சொல்லின் தோற்றம் 5. இனச்சொற்கள் 6. தமிழிலும், ஆங்கிலத்திலும் சொல்லுக்குரிய பொருள் 7. சொற்பொருளுக்கேற்ற இலக்கிய மேற்கோள்கள் என அமைந்திருக்கும். ஏழாவதாகக் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள் வாயிலாக, அந்தச்சொல் எந்தெந்த இலக்கியத்தில் என்னென்ன பொருள்களில் வந்துள்ளது என அறிந்துகொள்ளச் செய்வதும் இவ்வகராதியின் சிறப்பு.

அந்தோணி: ஒரே சமயத்தில் பல விவரங்களை அறிந்துகொள்ளலாம் போலிருக்கிறதே! அந்த அகராதியைப் பார்க்க விரும்புகிறோம்.

அகராதி: இந்த நூலகத்திலும் காணலாம். இது, ஆறு தொகுதிகளாக வெளியிடப்பெற்றுள்ளது.

அப்துல்லா: அகராதிகளையும் நிகண்டுகளையும் தெரிந்துகொண்டோம். இவையன்றி நாங்கள் பயன்படுத்துவதற்கு வேறு பார்வை நூல்கள் உள்ளனவா?

தெரியுமா?

அகராதிகள்	நிகண்டுகள்
சதுரகராதி – வீரமாமுனிவர்	திவாகரம் – திவாகரர்
தமிழ் – ஆங்கில அகராதி - பெப்ரீஷியஸ்	பிங்கல நிகண்டு - பிங்கலர்
பட அகராதி – இராமநாதன்	சூடாமணி நிகண்டு – மண்டல புருடர்
தமிழ்ச்சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதி – ஞானப்பிரகாச அடிகள்	அகராதி நிகண்டு – சிதம்பர ரேவண சித்தர்
திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி – பரோ, எமினோ	கயாதர நிகண்டு – கயாதரர்
பழமொழி அகராதி – பெர்சிவல்	உரிச்சொல் நிகண்டு – காங்கேயர்

அகராதி: ஏன் இல்லை? கலைக் களஞ்சியங்கள் உள்ளனவே.

அமுதா: கலைக்களஞ்சியங்களா? அப்படி என்றால் என்ன?

அகராதி: 'செய்திகளைத் தொகுத்துத் தரும் பார்வை நூல்களைத்தான் கலைக்களஞ்சியம்' என்கிறோம். அறிஞர்கள், புலவர்கள், தலைவர்கள் ஆகியோர்தம் வரலாறுகள், தாவரங்கள், விலங்குகள் பற்றிய செய்திகள், புகழ்பெற்ற இடங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்கள் ஆகிய அனைத்துச் செய்திகளையும் உங்களுக்குத் தொகுத்துத் தரக்கூடிய நூல்கள் கலைக்களஞ்சியங்களே.

அமுதா: எங்கள் அறிவியல் ஆசிரியர், அறிவியல் கலைக்களஞ்சியம் என்ற நூலைப்பற்றிக் கூறியிருப்பது எனக்கு நினைவுக்கு வருகிறது.

அகராதி: ஆம். நான் ஏற்கெனவே கூறியதுபோல அறிவியல் தொடர்பான செய்திகளையெல்லாம் அந்தக் கலைக்களஞ்சியத்தில் நீங்கள் அறிந்து கொள்ளலாம். தமிழிலும் 'அபிதான சிந்தாமணி' என்ற கலைக்களஞ்சியம் உள்ளதே, உங்களுக்குத் தெரியுமா? இந்நூலில் புலவர்கள், பழம்பெரு இலக்கியங்கள், இலக்கியக் கதைமாந்தர்கள், கோவில்கள் ஆகியன பற்றிய விவரங்களும் செய்திகளும் நிறைந்துள்ளன.

அமுதா: தற்காலத்தில் கணினி பல துறைகளிலும் தடம் பதித்துள்ளது. அந்த வகையில் கணினித் துறையில் அகராதியின் பங்கு குறித்து அறிய விரும்புகிறோம்.

அகராதி: தமிழில் இன்று வெளிவந்துள்ள கணிப்பொறி மென்பொருள்கள் தம்முள் அகராதியினையும் கொண்டுள்ளன. கணினியில் தட்டச்சு செய்யும்போது, சரியான சொற்களுக்கான பரிந்துரைகளை இத்தகு அகராதிகள் தருகின்றன.

அமுதா: அகராதியே! இக்கால மக்களும் பண்டைய இலக்கிய இலக்கணங்களின் சொல்வளம், பொருளாழம் போன்றவற்றைத் தெளிவாக அறிந்து, சுவைத்து, மகிழத் துணை செய்வன அகரமுதலிகளே என்பதனை நன்கு உணர்ந்து கொண்டோம்.

அறிவியல் வளர்ச்சி எத்துணை விரைவாக இருந்தாலும் ஒரு மொழியின் உயிர், அதனைப் பேசும் மக்களிடத்தில்தான் உள்ளது என்பதையும் நன்றாகத் தெரிந்து கொண்டோம்.

மேலும், தாய்மொழியில் நிறைய சொற்களைத் தெரிந்து வைத்திருப்போர்க்குக் கல்விப்பயிற்சி மிகவும் எளிமையானதாக அமையும் என்பதையும் புரிந்து கொண்டோம்.

அந்தோணி: அதுமட்டுமா? ஒரு மொழியின் சொல்வளங்காட்டும் கண்ணாடியே அகராதி என்பதையும் உணர்ந்துகொண்டோம்.

அப்துல்லா: நாங்கள் ஒரு சொல்லுக்கான பொருளைத்தான் தேடி வந்தோம். ஆனால், ஒரு கட்டுரை எழுதுவதற்குரிய முழுமையான செய்திகளைப் பெற்றுள்ளோம். அகராதியே! உன்னுடன் கலந்துரையாடியதை எண்ணி, நாங்கள் மிகவும் மகிழ்கிறோம். நன்றி வணக்கம்.

அகராதி: நானும் மகிழ்கிறேன். நன்றி. மீண்டும் சந்திப்போம்.

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சரசுவதி மகால் நூலகம் அமைந்துள்ள இடம்---------.

   அ) சென்னை ஆ) திருச்சி இ) தஞ்சாவூர் ஈ) மதுரை

2. நிகண்டு என்பதன் பொருளைத் தராத சொல்--------.

   அ) தொகுப்பு அகராதி ஆ) தொகையகராதி

   இ) தமிழ்ப்பா அகராதி ஈ) இணைய அகராதி

3. 'பிள்ளை' என்னும் இளமைப்பெயர் கொண்ட விலங்கு-------.

   அ) முயல் ஆ) அணில் இ) எலி ஈ) குதிரை

4. 'நிலவு' என்னும் பொருள் தராத சொல்---------.

   அ) சந்திரன் ஆ) மதி இ) திங்கள் ஈ) ஞாயிறு

5. சதுரகராதியின் சொற்பொருள் விளக்க வரிசைமுறை

   அ) பெயர், பொருள், தொகை, தொடை ஆ) பெயர், தொடை, தொகை, பொருள்

   இ) பெயர், பொருள், தொடை, தொகை ஈ) பெயர், தொகை, தொடை, பொருள்

குறுவினா

1. அகராதி – பெயர்க்காரணம் தருக.
2. குவலயம் என்னும் பொருள் தரும் பல சொற்கள் யாவை?
3. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

   இயற்கை, இன்பம், இல்லுறை, இந்திரவிழா, இளவேனில், இருதிணை, இசைத்தமிழ்
4. பல்துறை அகராதிகளுள் நான்கனைக் குறிப்பிடுக.
5. தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லுக்குச் சொல் பொருள் விளக்கம் கூறும் முறை இருந்தமைக்குச் சான்று தருக.

சிறுவினா

1. நிகண்டு நூல்களின் அமைப்பை விளக்குக.
2. கலைக்களஞ்சியம் என்றால் என்ன? விளக்குக.
3. சதுரகராதி – குறிப்பு வரைக.
4. தமிழ்ப்பேரகராதியில் சொற்பொருள் விளக்கம் எவ்வாறு அமைந்துள்ளது?
5. அபிதான சிந்தாமணி – குறிப்பு வரைக.

நெடுவினா

1. ஒரு மொழியின் சொல்வளம் காட்டும் கண்ணாடியே அகராதி' – இக்கூற்றை மெய்ப்பிக்க.
2. கணினித்துறையில் அகராதியின் பங்கு குறித்து எழுதுக.

உரையாடல்

மொழிபெயர்ப்புக் கலை

வானொலி ஒலிபரப்பு

கல்வி நிகழ்ச்சி – நேர்காணல்

பங்கேற்பாளர்கள் : நேர்காணல் நிகழ்த்துபவர், ஆசிரியர் கவின்மலர், மாணாக்கர்

நேர்காணல் நிகழ்த்துபவர்: வணக்கம், அம்மா. வானொலிக் கல்வி நிகழ்ச்சிக்காக வருகைதரும் உங்களைப் பள்ளி மாணாக்கர்கள் சார்பில் வரவேற்கிறோம். பல்துறையிலும் வேலைவாய்ப்பு அளிக்கின்ற மொழிபெயர்ப்புக் கலையைப்பற்றி இன்று உரையாட உள்ளோம். உங்களுடன் மாணாக்கர்களும் தொடர்புகொண்டு பேசுவர்.

ஆசிரியர்: அனைவருக்கும் வணக்கம். இந்நிகழ்ச்சி வாயிலாக, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. 'பிறமொழிச் சாத்திரங்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்னும் பாரதியாரின் பாடலுடன் இந்நிகழ்ச்சியைத் தொடங்கலாமா? மொழிபெயர்ப்பு என்பது, ஓர் அரிய கலை. அதன் நுட்பங்களை உணர்ந்து மொழிபெயர்ப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நே. கா. நி: மொழிபெயர்ப்பு என்றால் என்ன? விளக்கமாகக் கூறுங்கள்.

ஆசிரியர்: ஒரு மொழியில் இருக்கின்ற செய்தியை வேறு மொழிக்கு மாற்றுவது மொழிபெயர்ப்பு. அவ்வாறு மொழிபெயர்க்கும்போது, முதல்மொழிக்கு நிகரான செய்தி, இரண்டாவது மொழியிலும் இடம்பெற வேண்டும்.

நே. கா. நி: முதல் மொழி என்று எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?

ஆசிரியர்: சொல்கிறேன். ஒரு பாடலை மொழிபெயர்க்க வேண்டுமெனில், அப்பாடல் இடம்பெற்றுள்ள மொழிதான் முதல்மொழி. அதனை மூலமொழியெனவும் தருமொழியெனவும் கூறலாம். அந்தப்பாடலை எந்த மொழிக்கு மொழிபெயர்க்கப் போகிறோமோ அஃது இரண்டாவது மொழி. இதனைப் பெறுமொழியெனவும் இலக்கு மொழியெனவும் சொல்லலாம்.

நே. கா. நி: நிகரான செய்தி என்று சொன்னீர்களே, கொஞ்சம் விளக்குங்கள்.

ஆசிரியர்: நிகர் என்பதற்கு நேரான அல்லது ஒப்பான என்று பொருள். நிகரான செய்தி என்பது, தருமொழியில் இருக்கின்ற சொல் அல்லது தொடருக்கு ஒப்பாகப் பெறுமொழியில் இருக்கின்ற சொல் அல்லது தொடர் என்று பொருள்.

நே. கா. நி: அப்படியா, ஓர் எடுத்துக் காட்டுடன் விளக்குங்கள்.

ஆசிரியர்: தமிழ் தெரிந்த ஒருவரை நோக்கி, "ஐயா, உட்காருங்கள்" என்று சொன்னால் உட்காருவார். ஆனால், ஆங்கிலம் மட்டும் தெரிந்தவர் பொருள் புரியாமல் விழிப்பார். அவருக்கு அருகிலிருப்பவர், 'please take your seat' என்று மொழிபெயர்த்துச் சொன்னால் புரிந்துகொள்வார்.

உட்காருங்கள் என்று சொல்வதும் 'please take your seat' என்று சொல்வதும் ஒரே பயனைத்தான் கொடுக்கும். அதனால், இவ்விரு தொடரும் ஒன்றுக்கொன்று நிகர் (Equivalent).

நே. கா. நி: மாணாக்கர்களுக்குப் புரியும்படி விளக்கினீர்கள். இதோ, மாணாக்கர் ஒருவர் நம்முடன் தொடர்பு கொள்ள வருகிறார்.

மாணாக்கர்: வணக்கம் அம்மா. என் பெயர் நளன். நான், அரசுப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன். 'Translation' என்னும் சொல் எந்த மொழியிலிருந்து வந்தது?

ஆசிரியர் : 'Translatio' என்னும் சொல், இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது. அதற்குக் 'கொண்டு சொல்லுதல்' என்று பொருள். தருமொழியில் இருக்கின்ற பொருளை அதற்கு இணையான பெறுமொழியில் உரைப்பது என்றும் சொல்லலாம். அவ்வாறு செய்யும்போது, செய்தியைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது. பொருள் மாறாமல் இருக்கவேண்டும். மொழிபெயர்க்கும் செயலில் தழுவல், சுருக்கம், மொழியாக்கம், நேர் மொழிபெயர்ப்பு என நான்கு வகையுண்டு.

நே. கா. நி: அவற்றைப்பற்றி விளக்கமாகக் கூறுங்கள்.

ஆசிரியர் : தழுவல் என்பது, நேரடியாக மொழிபெயர்க்காமல், மூலமொழிச் செய்தியைப் புரிந்துகொண்டு தழுவி எழுதுவதாகும். எடுத்துக்காட்டாக, வால்மீகி இராமாயணத்தைத் தழுவித் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்றாற்போல் கம்பர் எழுதிய இராமாயணத்தைச் சொல்லலாம். சுருக்கம் என்பது, படைப்பைச் சுருக்கி அறிமுகப்படுத்தும் நிலை. இதில் பொருத்தப்பாடு, கருத்துச் சிதையாமை, கோவை ஆகியனவற்றை அடிப்படையாகக்கொண்டு, கொஞ்சம் கட்டுப்பாடின்றி எழுதலாம். ஒரு கவிதையைக் கவிதையாகவும் உரைநடையாகவும் மொழிபெயர்ப்பது மொழியாக்கம். மூலமொழிச் செய்தியிலிருந்து சிறிதும் வழுவாமல் மொழிபெயர்ப்பது, நேரடி மொழிபெயர்ப்பு.

நே. கா. நி: தமிழில் மொழிபெயர்ப்பைப் பற்றிய குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

ஆசிரியர் : உண்டு. பழந்தமிழ் நூலான தொல்காப்பியம், மொழிபெயர்ப்புபற்றி விளக்கியுள்ளது. இதில் தொல்காப்பியர், மரபுநிலையறிந்து, அந்த மொழிவழக்குக்கு ஏற்றாற்போல் மொழிபெயர்க்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

நே. கா. நி: தொல்காப்பியர், எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்க விதி கூறியுள்ளார்?

ஆசிரியர் : வடமொழிச் சொற்களைத் தமிழில் பயன்படுத்த வேண்டிய சூழலில், வடமொழியிலிருக்கின்ற சிறப்பெழுத்துகளை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்திலேயே எழுதவேண்டுமென்றும், வடசொல்லின் வடிவம் சிதைந்தாலும் வடமொழிச் சொல்லாகவே கருத வேண்டுமென்றும் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக, 'வருஷம்' என்பது, வடமொழிச்சொல். இதற்கு நேரடியான தமிழ்ச்சொல் 'ஆண்டு'. ஆனால், அந்த வடசொல்லையே தமிழில் பயன்படுத்த வேண்டுமென்றால், அந்த மொழியின் சிறப்பெழுத்தான 'ஷ' என்னும் வடமொழி எழுத்தை நீக்கி, 'ட' என்னும் தமிழ் எழுத்தைச் சேர்த்து, வருடம் என எழுதவேண்டுமெனக் கூறுகிறார்.

நே. கா. நி: வடமொழியிலிருந்து மொழிபெயர்க்க, மாணாக்கர்க்கு ஒரு சொல் கொடுங்களேன்.

அறிவோம் தெளிவோம்

தொல்காப்பியர் கூறும் மொழிபெயர்ப்பு விதி

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து

அதர்ப்படை யாத்தலோடு அனைமர பினவே

— தொல். பொருள். மரபு 652

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

— தொல். சொல். எச்சம் 401

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்

— தொல். சொல். எச்சம் 402

ஆசிரியர்: பிரசங்கம், பிரச்சாரம் ஆகிய வடமொழிச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் சொல்லுங்கள்.

நே. கா. நி: அம்மா, மாணாக்கர் விடை தேடுவார்கள். நாம் தொடர்ந்துபேசலாம். மொழிபெயர்ப்பு எப்படி இருக்க வேண்டுமென நினைக்கிறீர்கள்?

ஆசிரியர்: மொழிபெயர்ப்பில் பொருள் பொருத்தப்பாடுதான் முதன்மையானது. அதனால், மூலமொழியின் செய்தியைப் புரிந்துகொண்டுதான் மொழிபெயர்க்க வேண்டும்.

நே. கா. நி: ஓர் எடுத்துக்காட்டு சொல்லுங்களேன்.

ஆசிரியர்: சில இடங்களில் அழகுக்காகப் புற்றரை (புல் தரை) வளர்த்திருப்பார்கள். அங்கு, ஓர் அறிவிப்புப் பலகையும் வைத்திருப்பார்கள். அதில், '*Keep off the Grass*' என ஆங்கிலத்திலும், 'புல்தரைமேல் நடக்காதீர்கள்' எனத் தமிழிலும் எழுதப்பட்டு இருக்கும்.

நே. கா. நி: ஆமாம். நான் கூடப் பார்த்திருக்கிறேன்.

ஆசிரியர்: புல்தரைமேல் நடக்காதீர்கள் என்றால், புல்தரைக்கு உள்ளே நடக்க வேண்டுமெனப் பொருளாகிவிடும், அல்லவா? புல்தரையில் நடக்காதீர்கள் என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பு.

நே. கா. நி: புரிகிறது, அம்மா. இதோ, மீண்டும் மாணாக்கர் ஒருவர் நம்முடன் தொடர்புகொள்ள வருகிறார்.

மாணாக்கர்: வணக்கம், அம்மா. என் பெயர் அமுதன். வடசொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் கேட்டீர்களே, பிரசங்கம் என்பது, சொற்பொழிவு; பிரச்சாரம் என்பது, பரப்புரை. நான் சொன்னது சரியா?

ஆசிரியர்: சரியாகச் சொன்னீர்கள் தம்பி. சரியான புரிதலோட மொழி பெயர்த்திருக்கிறீர்கள். மேலும், இவைபோன்ற வடசொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் அறிய, பேராசிரியர் நீலாம்பிகை அம்மையாரின் 'வடசொல் தமிழ் அகரவரிசைச் சுருக்கம்', என்னும் நூல் உங்களுக்கு மிகவும் பயன்படும்.

தெரியுமா?

மொழிபெயர்ப்பில் மரபின் இன்றியமையாமை

செந்தமிழ் மொழியில் பெருமதிப்புக் கொண்டு, அதனை ஐயந்திரிபறக் கற்று, இலக்கண இலக்கிய நூல்களை ஆக்கியவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் ஆவார். அவர் தமிழைக் கற்கத்தொடங்கிய காலத்தில், அதன் மரபு தெரியாது "கோழி தன் குட்டிகளைக் காப்பதுபோல்" என்று தம் சொற்பொழிவில் கூற, கோவில் வழிபாட்டிற்காகக் கூடியிருந்த அத்தனை பேரும் சிரித்தனர். வீரமாமுனிவர், சிரிப்பின் காரணத்தைக் கேட்டறிந்தார். தாம் செய்த பிழையை உணர்ந்தார்; தமிழை நன்கு கற்றார்; தமிழில் புலமை பெற்றார்; தமிழ் மரபைப் போற்றினார். (*'கோழி தன் குஞ்சுகளைக் காப்பதுபோல்' என்பதே மரபு.*)

நே. கா. நி: மாணாக்கர்களே, நூற்பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள். அம்மா! சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கக் கூடாது என்று சொல்கிறார்களே, ஏன்?

ஆசிரியர்: நல்ல வினா கேட்டீர்கள். எடுத்துக்காட்டுடன் சொன்னால் எளிதாகப் புரியும். '*Fish Seed*' என்னும் ஆங்கிலச் சொற்றொடரைத் தமிழில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் என்ன ஆகும் என்று பார்ப்போமா? *Fish* என்றால் மீன். *Seed* என்றால் விதை. அதனை மீன் விதை என்று சொல்லலாமா?

நே. கா. நி: நீங்களே சொல்லுங்களேன்.

ஆசிரியர்: மீன் விதையை வாங்கிக் குழிபறித்து நட்டால் மீன் மரமா முளைக்கும்? சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் எவ்வளவு இடர்ப்பாடு ஏற்படுகிறது எனப் பார்த்தீர்களா? அதனால், மொழிக்கான மரபைத் தெரிந்துகொண்டு, மொழிபெயர்க்க வேண்டியது இன்றியமையாதது. அந்த ஆங்கிலச் சொற்றொடரைத் தமிழில் 'மீன்குஞ்சு' என்று

மொழிபெயர்ப்பதுதான் சரியாக இருக்கும். இன்னொரு தொடரைச் சொல்கிறேன்.

நே. கா. நி: சொல்லுங்கம்மா. மொழி பெயர்ப்பதில் கவனம் தேவை என்பதை மாணாக்கர் புரிந்துகொள்வார்கள் .

ஆசிரியர்: 'High court bench' என்றொரு தொடர் இருக்கிறது. அதனை 'high Court' என்றால் உயர்நீதிமன்றம், 'bench' என்றால் இருக்கை எனச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்து, உயர்நீதிமன்ற இருக்கை எனச் சொல்லலாமா?

நே. கா. நி: இல்லை, 'உயர்நீதிமன்ற அமர்வு' என்றுதான் மொழிபெயர்க்க வேண்டும். அம்மா, நான் சொன்னது சரிதானே?

ஆசிரியர்: சரியாச் சொன்னீர்கள். அதனால், மொழிபெயர்ப்பாளருக்குத் துறைவாரியான கலைச்சொல் தெரிந்திருக்க வேண்டும் என்பது புரிகிறதல்லவா?

நே. கா. நி: நன்றாகப் புரிகிறதம்மா. மாணாக்கர்களுக்கு, ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்க ஒரு தொடர் கொடுங்கள்.

ஆசிரியர்: 'Trained staff', 'Training Staff'. இத்தொடர்களை மொழிபெயர்க்கச் சொல்வோம்.

நே. கா. நி: மாணாக்கர் விடை தேடட்டும். நாம்தொடர்ந்துபேசலாம். பண்பாடுதொடர்பான சொற்களை மொழிபெயர்ப்பதனைப் பற்றிச் சொல்லுங்களேன்.

தெரியுமா?

மொழிபெயர்ப்பு வகைகள்

பத்திரிகை மொழிபெயர்ப்பு

விளம்பர மொழிபெயர்ப்பு

வானொலி மொழிபெயர்ப்பு

கணிப்பொறி மொழிபெயர்ப்பு

இலக்கிய மொழிபெயர்ப்பு

அறிவியல் மொழிபெயர்ப்பு

ஆசிரியர்: பண்பாட்டுச் சொற்களை ஒலிபெயர்ப்பு செய்தாலே போதும். தாலி (thali), கோலம் (kolam) முதலான சொற்களைச் சொல்லலாம். இவைபோன்ற சொற்களை மொழிபெயர்ப்புக்குள் விளக்கினால் பொருளோட்டத்துக்குத் தடையாக இருக்கும். அதனால், கதையோட்டத்தில் தனியாக விளக்கவேண்டும்.

நே. கா. நி: அதனைப்பற்றி விளக்கமாகச் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: ஆங்கிலத்தில 'Glossary' என்று சொல்வார்கள். தமிழில் 'அருஞ்சொல் அகரமுதலி' என்று சொல்லலாம். 'Kolam' என்னும் சொல்லை ஆங்கிலத்தில்

"*kolam – A simple and sometimes elaborate pattern drawn in front of the house with white powder of rice flour – a symbol of auspiciousness*". என்று சொல்லவேண்டும்.

நே. கா. நி: மாணாக்கர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தமிழிலும் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: கோலம் என்பது, தமிழ்ப் பண்பாடு சார்ந்தது. இதனை வீட்டுக்குமுன் வாசலில் அழகுக்காக வரைவர். இது சிக்கல் கோலமா, பூக்கோலமா என்பதை நாம்தான் விளக்கவேண்டும். அரிசிமாவில் வரைவதாகவும் எறும்புமாதிரியான உயிரினங்களுக்கு உணவு தருவதாகவும் விளக்கலாம்.

நே. கா. நி: ஓ! அப்படியா! நன்கு புரியும்படி சொன்னீர்கள். இதோ, மாணாக்கர் ஒருவர் தொடர்புகொள்ள வருகிறார்.

மாணாக்கர்: வணக்கம், அம்மா. என் பெயர் இளம்பிறை. நீங்கள் மொழிபெயர்க்கச் சொன்ன சொற்களைச் சொல்கிறேன். 'Trained Staff' என்றால் பயிற்சி பெற்ற அலுவலர். 'Training Staff' என்றால் பயிற்சி தரும் அலுவலர். நான் சொன்னது சரியா எனச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: சரியாகத்தான் சொல்லி இருக்கிறீர்கள். வாழ்த்துகள்.

அறிவோம் தெளிவோம்

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள கணியன் பூங்குன்றனாரின் பாடலும் அதற்குரிய மொழிபெயர்ப்பு உரையும்

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன,
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம், ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

– கணியன் பூங்குன்றனார், புறம். 192

To us all towns are one, all men are our kin.
Life's good comes not from others gift, nor ill, likewise.
Pains and relief from pains are one's own.
Death's no new thing, nor our bosoms thrill when joyous life seems like a Luxion's draught nor in hate condemn it ill.
We seem this precious life of ours a ferry raft, borne on the waters of a mighty mountain stream and fight the boulders, mourning in vain, as laws ordain floating serves the raft.
Thus have we seen in vision of the wise we wonder not at greatness of the Great, still less despise us men of low state.

– Rao Saheb K. Kothandapani,
Controller of Emigration (Rtd.,)Madras.

நே. கா. நி: அம்மா, நாம் தொடர்ந்து பேசலாம். உறவுமுறைச் சொற்களை மொழிபெயர்க்கும்போது உண்டாகும் சிக்கலைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: நம் தாயுடன் பிறந்த ஆணைத் 'தாய்மாமன்' எனவும், தந்தையுடன் பிறந்த ஆணைச் 'சித்தப்பா', 'பெரியப்பா' எனவும் சொல்கிறோம். உறவுநிலையைச் சொல்ல, தமிழில் இவைபோன்று பல சொற்கள் உள்ளன. ஆனால், இச்சொற்களையெல்லாம் குறிக்க, ஆங்கிலத்தில் 'Uncle' என்று ஒரு சொல் மட்டுந்தான் இருக்கிறது.அதனால், உறவுமுறைச் சொல்லை மொழிபெயர்க்கும்போது கவனம் தேவை.

நே. கா. நி: ஒருவருடைய பெயரை மொழிபெயர்க்கலாமா?

ஆசிரியர்: சொல்கிறேன். எடுத்துக் காட்டாக, 'Sir.Franncis Day' என்னும் பெயரைச் 'சர். பிரான்சிஸ் நாள்' என மொழிபெயர்க்கக் கூடாது. ஒலிபெயர்ப்பு செய்யவேண்டும். 'Ramdeo sing' என்னும் பெயரை 'ராம்த்யோசிங்' என மொழிபெயர்க்காமல் 'ராம்தேவ்சிங்' என மொழிபெயர்க்க வேண்டும். கம்பர்கூட 'லக்ஷ்மன்' என்ற பெயரை 'இலக்குவன்' என்று ஒலிபெயர்ப்பு செய்துள்ளார்.

நே. கா. நி: ஒலிபெயர்ப்பு என்று சொல்கிறீர்களே, அதனைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: ஊர்ப் பெயர், கண்டுபிடிப்பு, உறவுச் சொற்கள் முதலியவற்றையெல்லாம் ஒலிபெயர்ப்புத்தான் செய்யவேண்டும்.புதிதாகக் கண்டுபிடிக்கும் அறிவியல் கருவிகளையும் சொற்களையும் உடனுக்குடன் மொழிபெயர்க்க முடியாதபோது, ஒலிபெயர்ப்பு செய்யலாம்.

நே. கா. நி: மாணாக்கர்களே! குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அம்மா, திருவள்ளுவர் பற்றி மொழிபெயர்க்க ஒரு தொடர் கொடுங்களேன்.

ஆசிரியர்: 'திருவள்ளுவர் சிறந்த கவிஞர். அவர் எழுதிய திருக்குறள் மிகவும்

புகழ்பெற்றது'. இந்த வரிகளை ஆங்கிலத்துக்கு மாற்றச் சொல்வோம்.

நே. கா. நி: மொழிபெயர்ப்பில் கலைச்சொல்லாக்கச் சிக்கலைப்பற்றிச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: கிரேக்க மொழியில் அரிஸ்டாட்டில் எழுதிய நூல் 'POETICS'. இதனைத் தமிழில், 'கவிதையியல்' எனப் பேராசிரியர் அ.அ. மணவாளன் மொழிபெயர்த்துள்ளார். அவர், கிரேக்கக் கலைச்சொற்கள் மிகவும் பழையனவாக இருந்தாலும், மிகவும் ஆழமானவை எனவும் அதற்கு ஏற்ற வடிவம் தமிழில் இல்லை எனவும் கூறியுள்ளார். கிரேக்கத்தில் கதை மாந்தர்களையும் அவர்களின் பண்புகளையும் 'Ethos' என்ற ஒரு சொல்லே குறிக்கிறது. ஆங்கிலத்திலும் 'Character' என்னும் ஒரு சொல், இரண்டையும் குறிக்கிறது. ஆனால், தமிழில் கதைமாந்தர் வேறு; கதைமாந்தர்களின் பண்புகள் வேறு. இதில் எந்தத் தடுமாற்றமும் வரக் கூடாது.

மாணாக்கர்: வணக்கம், அம்மா. என் பெயர் கவி. திருவள்ளுவரைப்பற்றிக் கேட்டீர்கள் அல்லவா? அதற்கான மொழிபெயர்ப்பு இதோ, '*Thirukural, written by the great poet thiruvalluvar, is very famous.*

ஆசிரியர்: நன்றாகச் சொன்னீர்கள். திருக்குறள், உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யூ. போப், ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த்ததுபோல, பலர் மொழிபெயர்த்துள்ளனர். மத்திய செம்மொழி நிறுவனம் சார்பில், பதினெட்டுப்பேர் ஆங்கிலத்தில் சுருக்கமாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். செல்பேசியில்கூட ஆங்கிலத்தில் திருக்குறளைப் படிக்கும் வகையில் வெளியிட்டிருக்கிறார்கள். டாக்டர் கார்ல் கிரௌல் என்பார், திருக்குறளைச் செருமானிய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறளை மாண்டரின் (சீன) மொழியில் மொழிபெயர்ப்பதற்குத் தைவானைச் சேர்ந்த கவிஞர் யூஸி என்பவருக்கு, 77.4 இலட்சத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.

நே. கா. நி: மரபுத்தொடர் மொழிபெயர்ப்புப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: 'கம்பி நீட்டினான்' என்பது, தமிழில் வழங்கும் ஒரு மரபுத்தொடர். இதனை மொழிபெயர்க்கும்போது, '*Lengthened the rod*' என்று மொழிபெயர்த்தால், ஆங்கிலத்தில் படிப்பவர்களுக்குப் புரியாது. இதனை '*He boted away*' என்றுதான் மொழிபெயர்க்க வேண்டும். '*Smell a rat*' என்னும் ஆங்கில மரபுத்தொடரை 'எலியை மோந்து பார்' என எழுதக்கூடாது. அதன் பொருள், 'ஐயமுற்றான்' என்பதுதான். அதனால், அந்தந்த மொழியில் மரபுத்தொடர் உணர்த்தும் பொருளைப் புரிந்துகொண்டு மொழிபெயர்த்தல் வேண்டும்.

நே. கா. நி: மரபுத்தொடரை எப்படி மொழிபெயர்ப்பது என்று சொன்னீர்கள். பழமொழிகளை மொழிபெயர்ப்பதுபற்றியும் சொல்லுங்களேன்.

தெரியுமா?

உமர்கய்யாம் பாடல்கள் பாரசீகப் புலவரால் எழுதப்பட்டவை. அவற்றை எட்வர்டு பிற்செரால்டு என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றைக் கவிமணி, தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

சுந்தர ராமசாமி தமிழில் எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' என்னும் நாவலை Black went worth என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

சூத்திரகரின் 'மிருச்ச கடிகம்' என்ற வடமொழி நாடக நூலை 'மண்ணியல் சிறுதேர்' எனப் பண்டிதமணி மு.கதிரேசனார் மொழிபெயர்த்துள்ளார்.

ஆசிரியர்: பழமொழியை மொழிபெயர்க்கும்போது, மொழிபெயர்க்கும் மொழியிலிருக்கின்ற ஒத்த வடிவத்தைத் தேடி எடுக்கவேண்டும். 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழியை நேரடியாக மொழிபெயர்த்தால் 'The same leg will be repeatedly injured' என்று தவறான பொருளைத் தந்துவிடும். அதனால், தமிழில் என்ன பொருளைத் தருகிறதோ, அதே பொருளில் ஆங்கிலத்திலும் 'sorrows never come in single' என மொழிபெயர்க்கலாம்.

நே. கா. நி: அப்படியென்றால், நேரடியாக மொழிபெயர்ப்பதுபோலப் பழமொழி இல்லையா?

ஆசிரியர்: இருக்கிறது. 'எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றினாற்போல' என்பதற்கு நேரடிப் பொருளாக 'Adding fuel to the fire' என்று எழுதலாம்.

நே. கா. நி: பழமொழியை மொழி பெயர்க்கும்போது, எதிர்கொள்ளக்கூடிய சிக்கலைப்பற்றிச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: பொதுமக்கள், வழக்கத்தில் பயன்படுத்துகின்ற சொல்லாக இருக்க வேண்டும். படித்தவுடன் எளிதாகப் பொருள் புரிதல் வேண்டும். முதலில் மொழிபெயர்த்த சொல், பொருந்தவில்லையெனில், திரும்பத் திரும்பச் சொற்களை மாற்ற வேண்டியதாக இருக்கும்.

நே. கா. நி: மொழிபெயர்ப்புச் சிக்கல் என எவற்றையெல்லாம் சொல்லலாம்?

தெரியுமா?

தமிழில் மொழிபெயர்ப்புக்கென வெளிவரும் இதழ், திசை எட்டும் அதன் ஆசிரியர் குறிஞ்சி வேலன்.

இணைய இதழ் www.thinnai.com தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகளில் வெளிவருகிறது.

ஆசிரியர்: மொழியின் தனித் தன்மை, தொடரமைப்பு மாறுபாடு, பண்பாட்டு இடைவெளி, உறவுமுறைச் சிக்கல், மரியாதை வழக்கு, இடக்கரடக்கல், மொழியியல் சிக்கல்கள், ஒருபொருட் பன்மொழி, பொருள் மயக்கம் இவையெல்லாம் மொழிபெயர்ப்புச் சிக்கலுக்குக் காரணமாக அமையும்.

நே. கா. நி: தமிழிலக்கியங்களை வேற்றுமொழி இலக்கியத்தோடு ஒப்பிட்டு மொழிபெயர்த்திருக்கிறார்களா?

ஆசிரியர்: இலக்கியங்கள் வாயிலாக அவற்றைப் படைத்த கவிஞர்களைக்கூட ஒப்பிட்டிருக்கிறார்கள். கம்பனுடன் மில்டனையும், பாரதிதாசனுடன் வோர்ட்ஸ்வொர்த்தையும் பேராசிரியர் அ. அ. மணவாளன் ஒப்பிட்டுள்ளார். அவை Epic Heroism in Milton and kambar, The Exordium of Ramayanam and Milton's Paradise, Wordsworth and Bharathidasan என்ற பெயரில் வெளிவந்துள்ளன. 'பாரதிதாசன் – கார்ல்சாண்ட்பர்க் ஓர் ஒப்பாய்வு' என்ற நூலை முனைவர் சண்முக. செல்வகணபதி எழுதியுள்ளார்.

பண்டைய தமிழ்ப் பாடல்களைக் கிரேக்கம் உட்பட பல்வேறு நாட்டு வீர உணர்ச்சிக் கவிதைகளுடன் ஒப்பிட்டு அறிஞர் க. கைலாசபதி 'Tamil Heroic Poetry' என்ற ஆய்வுநூலை எழுதியுள்ளார். இதனை கு. வெ. பாலசுப்பிரமணியன் 'தமிழ் வீரநிலைக் கவிதை' என மொழிபெயர்த்துள்ளார்.

நே. கா. நி: அறிவியல் செய்திகளை எப்படி மொழிபெயர்க்கலாம்?

ஆசிரியர்: உலக அளவில், அறிவியல் குறியீடுகளைப் பயன்படுத்துவதில் பொதுத்தன்மைகள் உள்ளன. அறிவியலில் ஒவ்வொரு தனிமத்தையும் அதனுடைய இலத்தீன் பெயரின் முதலெழுத்து அல்லது முதலெழுத்துடன் அடுத்துவரும் எழுத்தையும்கொண்டு எழுதவேண்டும். Hydrogen என்பதை H என்று குறிப்பிட வேண்டும். கணிதத்தில் π என்ற குறியீட்டை அப்படியே குறிப்பிட வேண்டும். வேதிச்

சமன்பாடுகளைக் குறிப்பிட SO_2, H_2O முதலான வாய்பாடுகள், ரோமன் எழுத்தில் எப்படி உள்ளதோ, அப்படியே தமிழிலும் பயன்படுத்த வேண்டும். தமிழில், புதிய சொல்லாக்க முயற்சியில் முன்னொட்டு, பின்னொட்டுகளை இணைத்துக் கலைச்சொல் உருவாக்குவது நடைமுறையில் உள்ளது. Meter என்பதை 'மானி' என மொழிபெயர்த்துப் பின்னொட்டாக வைத்து 'Electrometer – மின்மானி', 'Lactometer – பால்மானி', 'Thermometer – வெப்பமானி' எனப் புதிய கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நே. கா. நி: மொழி வளர்ச்சிக்கு இந்த மொழிபெயர்ப்பு எப்படிப் பயன்படுகிறது எனச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: வேற்றுமொழியில் காணப்படும் கருத்துவளர்ச்சி, நம் மொழியிலும் ஏற்படும். ஒரு நாட்டின் பண்பாட்டைப் புரிந்துகொள்ள முடியும். நம் இலக்கியத்தைப் பிறநாட்டு இலக்கியத்துடன் ஒப்பிட்டு ஆராயலாம். வணிக வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இருக்கும். ஒரு நாட்டில் கண்டுபிடித்த அறிவியல் செய்தி, மற்ற நாட்டுக்கும் பரவும். புகழ்பெற்ற நூல்களைப்பற்றியும், நூலாசிரியர்களைப்பற்றியும் தெரிந்துகொண்டு, பிறமொழி இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு நூல்களைப் படிக்க விரும்பலாம். தொழில்நுட்ப வளர்ச்சிக்குக்கூட மொழிபெயர்ப்பு உதவுகிறது.

நே. கா. நி: மொழிபெயர்ப்பினால் இவ்வளவு நன்மைகளா? வியப்பாக உள்ளது. இன்று பலதுறைகளிலும் கணினியின் பயன்பாட்டைக் காண்கிறோம். மொழிபெயர்ப்பில், கணினியின் பங்கு என்ன?

ஆசிரியர்: பக்கஅளவு மிகுந்த நூல்களை மொழிபெயர்க்க, நமக்குப் பல நாள்கள் ஆகின்றன. ஆனால், கணினி மிக விரைவாக மொழிபெயர்த்துவிடுகிறது. ஆயினும், அஃது ஓரளவு சிறிய அல்லது சில பிழைகளுடன் மொழிபெயர்க்கிறது. அங்கு, மொழிபெயர்ப்பாளரின் பங்கு தேவைப்படுகிறது. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் கணினிவழி மொழிபெயர்ப்பு செய்கிறார்கள். இயந்திர மொழிபெயர்ப்பு (machine translation), மாந்தர் – கணினி உரையாடல் ஆகியவற்றைத் தமிழில் நிகழ்த்தமுடியும். 'இயற்கைமொழிப் பகுப்பாய்வு' (Natural Language Processing) என்னும் தொழில்நுட்பம் செயல்படும்போது, கணினியே மூளையாக இருந்து செயல்படும்.

நே. கா. நி: திறன்பேசியில் பயன்படும் தமிழ் மொழிபெயர்ப்புச் செயலியைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.

ஆசிரியர்: நாம் பேசுகின்ற பேச்சைக் கணினிக்குப் புரியும்படி உள்ளீடாக மாற்றிக் கூகுளில் இணையவழி மொழிபெயர்ப்பு செய்யும்முறை உள்ளது. திறன்பேசியில்கூட மொழிபெயர்க்கும்முறை வந்துவிட்டது. மைக்ரோ சாப்ட் நிறுவனத்தினர், தமிழ் மொழிபெயர்ப்புச் செயலி ஒன்றை உருவாக்கி உள்ளனர். இது, வேற்றுமொழியில் பேசுபவர்களின் பேச்சைத் தமிழ் எழுத்துகளில் தரும். தொடரைத் தந்தால், அதற்குரிய தமிழ்ச்சொல்லைக் கொடுக்கும். இந்தச்செயலி, அறுபது மொழிகளுக்கு இத்தகைய வாய்ப்பை வழங்குகிறது. குறிப்பிட்ட தொடரைப் பதிவு செய்து, எந்த மொழியில் மாற்றவேண்டுமெனப் பதிவு செய்கிறோமோ அந்த மொழிக்கு மாற்றித் தரும்.தற்போது, மிகஎளியசிறுவரியை மட்டுமே மொழிபெயர்க்கிறது. காரணம், தமிழின் இலக்கண அமைப்பும் சொற்களஞ்சியமும்தான். இந்த மென்பொருளைத் திறன்பேசியிலும், கணினியிலும் நிறுவலாம்.

நே. கா. நி: மொழிபெயர்ப்புபற்றி அரிய பல செய்திகளை எடுத்துக்காட்டுகளுடன் விரிவாகவும் விளக்கமாகவும் சொன்னீர்கள், அம்மா. இந்நிகழ்ச்சி, மாணாக்கர்க்கு நல்ல பயனைத் தரும் என்று உறுதியாகக் கூறலாம். எங்களுடன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட உங்களுக்கும் நிகழ்ச்சியில் பங்குகொண்ட மாணாக்கர்க்கும் எங்கள் வானவில் பண்பலையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்: இந்நிகழ்ச்சியில் நானும் பங்கேற்றதனைக் குறித்து மகிழ்கிறேன்.

மிக்க நன்றி.

கலைச்சொற்கள்

தொடரியல்

Active Voice	– செய்வினை
Adjective	– பெயரடை
Adverb	– வினையடை
Affirmative Sentence	– உடன்பாட்டுத் தொடர்
Analysis of Sentence	– தொடரைப் பகுத்தல்
Complex Sentence	– கலவைத் தொடர்
Compound Sentence	– கூட்டுத்தொடர்
Concord of Agreement	– இசைவு
Conjunctions	– இணைப்புச் சொற்கள்
Direct Speech	– நேர்க்கூற்று
Exclamatory Sentence	– உணர்ச்சித் தொடர்
Idiomatic Phrases	– மரபுத்தொடர் சொற்றொடர்கள்
Indirect Speech	– அயற்கூற்று
Interchange of Active and Passive	– செய்வினை – செயப்பாட்டுவினை மாற்றம்
Interrogative Sentence	– வினாத் தொடர்
Intransitive Verb	– செயப்படுபொருள் குன்றிய வினை
Main Clause	– முதன்மைத் தொடர்
Negative Sentence	– எதிர்மறைத் தொடர்
Object	– செயப்படுபொருள்
Order of Words	– சொல்முறை
Passive Voice	– செயப்பாட்டுவினை
Plural	– பன்மை
Predicate	– பயனிலை
Prefix	– முன்னொட்டுச் சொல்
Punctuation	– நிறுத்தக்குறி
Sentence	– தொடர்
Simple Sentence	– தனித்தொடர்
Singular	– ஒருமை
Subject	– எழுவாய்
Subordinate Clause	– சார்புத் தொடர்
Suffix	– பின்னொட்டுச் சொல்
Syntax	– தொடரியல்
Synthesis of Sentence	– தொடரைச் சேர்த்தல்

The sequence of Tenses - காலமுடிபு

Thesaurus - தொகைச்சொல் நிகண்டு

Transformation of Sentence - தொடர் மாற்றம்

Transitive verb - செயப்படுபொருள் குன்றா வினை

மொழிபெயர்ப்புக் கலை

Analysis - பகுப்பாய்வு

Communication - தொடர்பாடல்

Component - கூறுபாடு

Concept - எண்ணக்கரு

Correlation - இணைபு

Correspondence - ஒத்தியைபு

Decoding - குறியவிழ்ப்பு

Dialect - கிளைமொழி

Efficiency - வினைத்திறம்

Equivalent Expressions - சமவலு மொழிவுகள்

Generative grammar - பிறப்பாக்க இலக்கணம்

Ideology - கருத்தியல்

Idioms - மரபுத்தொடர்கள்

Image - படிமம்

Perception - புலக்காட்சி

Pragmatic model - பயன்வழி மாதிரியுரு

Pragmatic translation - பயன்வழி மொழிபெயர்ப்பு

Process - நிகழ்முறை

Proverb - பழமொழி

Reference Books - பார்வை நூல்கள்

Relativity - தொடர்பியல்

Semantic relationship - சொற்பொருள் உறவு

Significance - பொருண்மை

Signified - குறிபடுபொருள்

Signifier - குறிப்பான்

Socio-relational patterns - சமுக உறவுக்கோலம்

Source books - மூல நூல்/ வளநூல்

Structuralism - அமைப்பியம்

Surface Level - மேற்பரப்பு மட்டம்

Syntactical elements - தொடர் இலக்கணக் கூறுகள்

Target Language - இலக்குமொழி

Technique - நுண்முறை

Traditional model - மரபுவழி மாதிரியுரு

கண்ணாடி

9CH7FX

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'டிரான்ஸ்லேசியோ'(Translatio) என்னும் சொல் இடம்பெற்றுள்ள மொழி

அ) தமிழ் ஆ) இலத்தீன் இ) ஆங்கிலம் ஈ) பிரெஞ்சு

2. கம்பராமாயணம், கீழ்க்காணும் மொழிபெயர்ப்பு வகைகளுள் ஒன்றைச் சார்ந்தது. அஃது எது?

அ) நேரடி மொழிபெயர்ப்பு ஆ) சுருக்கம் இ) மொழியாக்கம் ஈ) தழுவல்

3. மொழியாக்கத்திற்கு எடுத்துக்காட்டாக அமையாத பெயரைத் தேர்ந்தெடுக்க.

அ) சுவாமி வேதாசலம் – மறைமலையடிகள்

ஆ) சூரிய நாராயண சாஸ்திரி – பரிதிமாற் கலைஞர்

இ) தைரியநாதன் – வீரமாமுனிவர்

ஈ) கனக. சுப்புரத்தினம் – பாரதிதாசன்

4. சரியான மொழிபெயர்ப்புத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) Where do you stand in your family? – நீ உன் குடும்பத்தில் எங்கே நிற்கிறாய்?

ஆ) He is a man. – அவன் ஒரு மனிதனாக இருக்கிறான்

இ) Please lend me your ears. – அருள்கூர்ந்து உங்கள் செவிகளைக் கொடுங்கள்

ஈ) The Professor teaches Tamil. – பேராசிரியர் தமிழ் கற்பிக்கிறார்

5. சரியாகப் பொருந்தியுள்ள விடைக்குறிப்பைத் தேர்க.

அ) பகுப்பாய்வு – 1. Image

ஆ) படிமம் – 2. Efficiency

இ) வினைத்திறன் – 3. Idioms

ஈ) மரபுத்தொடர்கள் – 4. Analysis

	அ	ஆ	இ	ஈ
1.	3	1	2	4
2.	4	1	2	3
3.	1	2	4	3
4.	1	2	3	4

குறுவினா

1. மொழிபெயர்ப்பு என்றால் என்ன? சான்று தருக.
2. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கக் கூடாது என்பதைச் சான்றுடன் விளக்குக.
3. கீழ்க்காணும் வடசொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.
   சங்கீதம், கமலம், சர்வகலாசாலை, சிநேகம், மிருதங்கம்
4. தமிழில் மொழிபெயர்ப்புக்கெனத் தோன்றிய இதழ் ஒன்றைக் கூறுக.

சிறுவினா

1. பழமொழியை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சிக்கல்கள் யாவை?
2. மொழிபெயர்ப்பாளருக்குத் துறைவாரியான கலைச்சொற்கள் தெரிதல் வேண்டும் – இக்கூற்றைச் சான்றுடன் விளக்குக.
3. கீழ்க்காணும் சொற்களின் கலைச்சொல்லாக்க வடிவம் தருக.

   (Tele– **தொலை**; Mono– ஒற்றை/ தனி)

அ) Tele – vision	ஆ) Tele – scope	இ) Tele – film	ஈ) Tele – phone
உ) Tele – pathy	ஊ) Mono – cycle	எ) Mono – acting	ஏ) Mono – logue
ஐ) Mono – syllable	ஒ) Mono – rail		

4. ஒலிபெயர்ப்பு – சிறு குறிப்பு வரைக.
5. கீழ்க்காணும் கவிதை வரிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திடுக.

ஏனடா தம்பி, தயக்கம், எழுவாய்
பழங்கதை பேசிப் பயனிலை புதிதாய்ச்
செயப்படு பொருளைச் சிந்தையில் நிறுத்து
நன்மையை நாடு நாடு உன் நாட்டை
உண்மையைத் தழுவுநீ உன்னைத் திருத்திப்
பிறரைத் திருத்து பேணு பொதுநலம்
சுயநலம் தனைச்சுடு நினைவைச் சுத்தம்செய்
சிறுமையை நீக்கு சிந்திக்கப் பழகு
மூலையில் கிடந்து முடங்கியது போதும்
வெளியே புறப்படு விழிகளைத் திறந்தே

– மீரா கவிதைகள்

நெடுவினா

1. மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களைச் சான்றுகளுடன் விளக்குக.
2. மொழிவளர்ச்சிக்கு, மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது? விளக்குக.

படித்துப் பயன்படுத்துவோம்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்திப் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்றுத் தொடர்கள் உருவாக்குக.

   எ.கா. அழகு

   மயில் அழகான பறவை. (பெயரெச்சம்)

   தாமரை அழகாகப் பூத்திருந்தது. (வினையெச்சம்)

   மல்லிகைப் பூ அழகானது. (வினைமுற்று)

   அ. இனிமை   ஆ. மகிழ்ச்சி   இ. உயர்வு   ஈ. மென்மை   உ. சுறுசுறுப்பு

2. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.

1				2	6		8
		7					
			3				
4	5						
					10		
				12			
13							
	15			11		14	9

இடமிருந்து வலம்

1. மயில் கூவியது என்பது ---------வழு. (3)
5. ஒருவர், முன்னிரண்டடி பாட, அடுத்தவர் பின்னிரண்டடி பாடிப் பாடலை நிறைவு செய்வர். அவர்களை ----------ப் புலவர்கள் என்றழைப்பர். (4)
6. பள்ளி செல்ல விரும்பு; பாடம் வெல்லக் கரும்பு – இப்பாடலில் ஈற்றில் அமைந்துள்ள நயம்------.(3)
13. குளிர்ச்சியைக் குறிக்கும் வேறு சொல்-------------. (3)

மேலிருந்துகீழ்

2. அவள் கலகலவென நகைத்தாள். கலகல என்பது--------. (8)
4. உடலில் காயம் ஏற்பட்டவருக்கு உடனடியாகச் செய்வது-------------.(5)
5. காஞ்சி அணிந்து வந்தாள் என்பது ----ஆகுபெயர். (2)
7. மரம், செடி, கொடிகளைக் குறிக்கும் ஒரே சொல்------------.(4)
8. நாவல் என்பதற்குப்--------- என்று பொருள். (3)
10. சொல்லுக்குப் பொருள் காண உதவும் நூல்--------. (4)

வலமிருந்து இடம்

3. செம்மை என்பது ---------வண்ணம். (4)
11. நகைச்சுவையாகப் பேசுபவர்களைக் குறிக்கும்; ஆனால், தமிழ்ச்சொல்லன்று. (5)
12. நகரம் என்னும் சொல்லுக்கு எதிர்ச்சொல் (4)

கீழிருந்துமேல்

9. பொறாமைகொள்ளுதலின்தீமையைப்பற்றி வள்ளுவர் கூறும் அதிகாரம்-------.(6)
14. கவிஞரைக் குறிக்கும் வேறு சொல். (5)
15. நிலப்பகுதியைக் குறிக்கும் சொல். இடம் மாறியுள்ளது. (4)

3. கீழ்க்காணும் இரு படத்திற்கும் உரிய சொற்களை இணைத்தால், தொகைநிலைத் தொடர்கள் கிடைக்கும். அவற்றைக் கண்டறிக.

	+		ஆடுகொடி	வினைத்தொகை
	+			

	+			
	+			
	+			
	+			

4. *கீழ்க்காணும் தொடர்களில் எந்தப் பகுதியில் பிழை உள்ளது எனச் சுட்டிக்காட்டுக. காரணம் அறிந்து சரியான விடையையும் தருக.*

(எ.கா.) ஒவ்வொரு வீடுகளிலும் மரக்கன்று நடுதல் நன்று

-------- ---------- -------- ------ ----

1 2 3 4 5

> பகுதி – 2 இல் பிழை உள்ளது. ஒவ்வொரு என்பது, ஒருமையைக் குறிக்கும். எனவே, அது சுட்டும் பெயர்ச்சொல்லும் (வீடுகள்) ஒருமையிலேயே வருதல் வேண்டும். ஆகவே, **ஒவ்வொரு வீட்டிலும் மரக்கன்று நடுதல் நன்று** என்பதே சரியானது.

அ) தாயைக் கண்டதும் குழந்தைக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி

--------- -------- ---------- ------ -------

1 2 3 4 5

ஆ) கண்ணன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற முயற்சித்தான்

--------- ----------- ----- ----- ------------

1 2 3 4 5

இ) மாதவி மணிகளைக் கோர்த்து மாலை யாக்கினாள்

------- -------- --------- --------- ---------

1 2 3 4 5

ஈ) எனக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்தது மெய்யம்மை

-------- -------- -------- --------- ----------

1 2 3 4 5

உ) எனது தாய் எனது வீட்டிற்கு வந்தாள்

------- -------- ------- ------- ------

1 2 3 4 5

5. *கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து தமிழில் மொழிபெயர்த்திடுக.*

(i) *We have been preparing a good drama program since last week. It will be completed by the end of next week. This program will be approved by our Headmaster surely. Then we will play the same in front of the audience during our Annual day celebration.*

(ii) *Last year the Independence day was celebrated in our school in a grand manner. The retired District collector presided over the function. He delivered a good speech on the duty of every Indian. All the audience were enchanted by his speech.*

(iii) *கீழ்க்காணும் தமிழ் மரபுத்தொடருக்கேற்ற ஆங்கில மரபுத்தொடர்களை எழுதுக*

மதில்மேல் பூனை	கிணற்றுத் தவளை	குரங்கின் கை பூமாலை
பசுத்தோல் போர்த்திய புலி	முதலைக் கண்ணீர்	கரி பூசுதல்

செயல்திட்டம்

1. *உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள ஏதேனும் ஒரு தொழிலகம் தொடர்பான சொற்களைத் திரட்டி, அகராதி உருவாக்குக.*

2. *உங்கள் பாடநூலில், ஏதேனும் ஓர் இயலைத் தேர்ந்தெடுத்து, அதனுள் இடம்பெற்றுள்ள புதிய சொல்லாக்கங்களையும், தொடரமைப்புகளையும் தொகுத்து அட்டவணைப்படுத்துக.*

அறிவோம் தெளிவோம்

ஒரு சொல்லைப் பார்த்தவுடன் அது, தமிழ்ச்சொல் அல்லது வடசொல் என்று கூற இயலுமா?

வடசொல் என்பதைக் கண்டறிய, இதோ சில குறிப்புகள்

- தமிழ் எழுத்துகளின் வடிவம் இல்லாச் சொற்கள். (எ.கா.) புஷ்பம்
- தமிழில் மொழிமுதல் வாரா எழுத்துகளில் தொடங்குவன. (ரம்யா, லட்டு)
- தமிழில் மொழி இறுதியில் வாராச் சொற்கள் (எ.கா.) வீரேந்திரநாத்
- தமிழில் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு உட்படாத எழுத்துகள் தொடர்ந்து வருவன. (பக்தி)
- தனிக்குற்றெழுத்தை அடுத்து, ரகர ஒற்று அமைந்திருப்பன. (எ.கா.) தர்மம், நிர்வாகம்
- எதிர்ப்பொருளை உணர்த்தவரும் முன்னொட்டுடன் கூடிய வடசொற்கள். (எ.கா.) நீதி – அநீதி, நியாயம் – அநியாயம்
- அழுத்தமாக ஒலிக்கக் கூடிய சொற்கள். (எ.கா.) பாவனை
- வேர்ச்சொல் அல்லது காரணப்பெயர் இன்றி அமையும் சொற்கள் போன்று வருவனவெல்லாம் வடசொற்களே.

இணையச்செயல்பாடு

தொடரியல் மற்றும் பொருண்மையியல்

**இலக்கியங்கள் வழி
இலக்கணம் அறிவோம் !**



படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கம் செல்க .
2. திரையில் தோன்றும் விரிதரவு என்பதைத் தேர்வு செய்தவுடன், தொடரியல் மற்றும் பொருண்மையியல் என்னும் தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள, தொடரியலையும் உணர்பொருள், உவமை–உருவகம், ஒருபொருள் பன்மொழி ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள, பொருண்மையியலையும் தேர்வு செய்க.

   எடுத்துக்காட்டாக, உவமை–உருவகம் அறிவதற்கு நூல் ஒன்றைத் தேர்வுசெய்து, பாடல் எண்ணை உள்ளீடு செய்வதன்மூலம், அப்பாடலுக்குரிய உவமை–உருவகம் அறிந்து கொள்ளலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2



படி 3

தொடரியல் மற்றும் பொருண்மையியல் இணையப் பக்கத்தின் உரலி:

http://www.tamilvu.org

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இணையச்செயல்பாடு

தமிழ் மின் அகராதி

தமிழ்ச்சொல் அறிவோம்!!



படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி/ விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'tamillexicon' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.

2. இப்போது திரையில் தோன்றும் தேடுபெட்டியில் ஆங்கிலச் சொல்லை உள்ளீடு செய்து, அதற்கிணையான தமிழ்ச்சொற்களை அறிக.

   எடுத்துக்காட்டாக, 'lexicon' என்னும் சொல்லை உள்ளீடு செய்து சொற்களஞ்சியம், பேரகராதி, அகராதி போன்ற தமிழ்ச்சொற்களை அறிக.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1

படி 2



படி 3

தமிழ் மின் அகராதி இணையப் பக்கத்தின் உரலி

http://www.tamillexicon.com/?s=website&act=findout

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இயல் ஐந்து

ஊடகவியல்

இதழியல்

9D63HK

உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டு செல்லும் தொடர்புச் சாதனமே ஊடகம் . ஊடகத்தை அச்சு, காட்சி, கேள்வி மற்றும் இணையவழி ஊடகங்களாக வகைப்படுத்தலாம்.

இப்பாடப் பகுதியில் அச்சு ஊடகமான இதழ்கள் சமுதாயத்திற்கு ஆற்றிவரும் பணிகள், இதழ்களின் மொழிநடை, அதன் வகைகள், இதழியல் சார்ந்த செய்திகள், மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள், சிறந்த இதழியல் ஆளுமைகள் குறித்த தகவல்கள், ஊடகத்துறையில் பணியாற்ற விழைவோர்க்கான வழிகாட்டுதல்கள், ஆகியவை அமைந்துள்ளன.

கற்றல் நோக்கங்கள்

- இதழியலின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்.
- சமூக மேம்பாட்டிற்கு இதழ்களின் பங்களிப்பைப் புரிந்து கொள்ளுதல்.
- இதழ்களில் பயன்படுத்தப்படும் மொழிநடையை அறிந்து, தம் படைப்புகளில் பயன்படுத்துதல்.
- நிகழ்வுகளைச் செய்தியாக்கவும் கையெழுத்து இதழ் உருவாக்கவும் திறன் பெறுதல்.
- ஊடகவியல் துறையின் தமிழ் ஆளுமைகளைத் தெரிந்துகொள்ளுதல்.

பாடப் பகுதி

- இதழ்களின் அமைப்பு முறை
- தமிழ் இதழ்கள் – ஒரு சந்திப்பு
- சமுதாய முன்னேற்றத்தில் இதழ்கள்
- ஊடகவியலில் தமிழ் ஆளுமைகள்

கட்டுரை

இயல் ஐந்து

இதழ்களின் அமைப்புமுறை

ஊடகம்

உலகின் பல்வேறு இடங்களில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டுசெல்ல உதவும் கருவிகளே ஊடகங்கள். இவற்றை அச்சு, காட்சி, கேட்பு, இணையவழி ஊடகங்கள் என வகைப்படுத்தலாம். செய்திப் பதிவுகளையும் படங்களையும் உள்ளடக்கிய இதழ்களே அச்சு ஊடகங்கள். நிகழ்வுகளைக் காணொளிகளாக ஒளிபரப்பும் தொலைக்காட்சி, காட்சி ஊடகம். நிகழ்வுகளை உரை வடிவங்களாக ஒலிபரப்பும் வானொலி, கேட்பு ஊடகம். இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் அச்சு, காட்சி, கேட்பு ஆகிய ஊடகப்பதிவுகளை இணையவழி ஊடகம் ஒருங்கிணைக்கிறது . இவை அனைத்தின் வழியாகவும் செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன.

இதழ்கள்

நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இதழ்கள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. இதனால் பாரதிதாசனும்,

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே!

என்று இதழ்களின் பெருமையைப் பாடுகிறார்.

இதழ்களின் வகைகள்

நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை நாளிதழ்கள் எனவும் காலமுறைப்படி வெளியாகும் இதழ்களைப் பருவ இதழ்கள் எனவும் வகைப்படுத்தலாம். பருவ இதழ்கள் வாரம், வாரமிருமுறை, மாதம், மாதமிருமுறை, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு எனக் கால இடைவெளியை வரையறுத்துக்கொண்டு வெளிவருகின்றன.

நாளிதழ்கள்

நாளிதழ்கள், நாள்தோறும் காலை இதழ், மாலை இதழ் என இருவகையாக வெளிவருகின்றன. அவை, உலகெங்கும் நிகழும் நிகழ்ச்சிகளை நாள்தோறும் மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. நாளிதழ்களை உருவாக்குவதில் செய்தியாளர்கள், இதழாசிரியர்கள், பதிப்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் இன்றியமையாப் பணியாற்றுகின்றனர்.

பருவ இதழ்கள்

பருவ இதழ்கள், நாட்டு நடப்புகளை விவரித்து எழுதுகின்றன. இவை பல்வேறு துறை சார்ந்த பருவ இதழ்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக இலக்கிய இதழ்கள், அறிவியல் இதழ்கள், வேளாண் இதழ்கள், கலை இதழ்கள், சிறுவர் இதழ்கள், மகளிர் இதழ்கள், சமய இதழ்கள், சோதிட இதழ்கள், அரசியல் இதழ்கள், கல்வி இதழ்கள் ஆகியவற்றைச் சுட்டலாம்.

செய்தித்திரட்டும் வெளியீடும்

செய்திகளைத் திரட்டுபவர்கள், செய்தியாளர்கள். இவர்களை நிருபர்கள் எனவும் அழைக்கின்றனர். இவர்கள்

தங்கள் பகுதிசார்ந்த அரசு செயல்பாடுகள், மக்களின் தேவைகள், குறைகள், விபத்து, சமூக நிகழ்வுகள், வானிலை அறிக்கைகள், அறிவியல்சார் நிகழ்வுகள், அறிவிப்புகள், குற்றங்கள் எனப் பல செய்திகளைத் திரட்டித் தங்களுடைய அலுவலகத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைப்பர். செய்தியாளரால் திரட்டப்பட்ட செய்திகள், செய்திப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு, முதன்மைப் பதிப்பாசிரியராலும் ஆசிரியர் குழுவாலும் செம்மைப்படுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மக்கள் செய்தித்தொடர்பு அலுவலகம், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள் ஆகியவை முதன்மைச் செய்திக் களங்களாகக் கருதப்படுகின்றன. செய்தியாளர்கள், செய்தி திரட்டுவதற்காக எல்லா இடங்களிலும் பம்பரமாய்ச் சுழல்வார்கள். எனவேதான், புகை நுழையமுடியாத இடத்திலும் செய்தியாளர்கள் நுழைந்துவிடுவர் என்னும் சொல் வழக்கு ஏற்பட்டது.

இதழ் உருவாக்கம்

இதழாசிரியர்கள், செய்திகளின் முதன்மை கருதி எந்தச் செய்தியை எந்தப் பக்கத்தில் வெளியிடுவது என்று முடிவு செய்து இதழை வடிவமைப்பர். இதழ் சிறப்பான முறையிலும் குறித்த நேரத்திலும் வெளிவர வேண்டுமெனில் மாதிரித் திட்ட வரைவினை உருவாக்குவர். இந்த மாதிரித் திட்ட வரைவைச் செய்தியின் கட்டமைப்பு முறை என்பர். செய்தியின் மதிப்பை உயர்த்துவதில் இக்கட்டமைப்பு முறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. படிப்பவர்களின் உள்ளங்களைக் கவரும்வண்ணம் இதழ் கட்டமைப்பு இருத்தல் வேண்டும். ஒரு செய்தியின் வலிமையான கட்டமைப்பை நான்கு காரணிகள் உறுதிசெய்கின்றன. அவையாவன:

1. செய்தி எழுதுவதற்குக் கிடைக்கும் நேரம்.
2. செய்தியின் உருவ அமைப்பு.
3. செய்தித்தாளில் அவற்றை வெளியிடுவதற்குக் கிடைக்கும் இடம்.
4. செய்தி எழுதுபவரின் திறமை .

செய்தியின் பகுதிகள்

செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக்கொண்டு அமைகிறது.

1. தலைப்பு

செய்தியின் தலைப்பு, பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருக்கும். இது படிப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும், படித்தவுடன் செய்தியை உணரும் வகையிலும் இருக்கும். தலைப்புகள் ஒரு செய்தித்தாளுக்கு வடிவ அமைப்பையும் அழகையும் கொடுக்கின்றன.

தமிழ்நாடு மின் வாரிய இணையதளம் புதுப்பிப்பு

● தகவல்களை விரைவாகப் பெற முடியும்

தலைப்பின் நோக்கம்

"இதழ்களை, அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன" என்று ஆலன் ஹோம் கோம்ப் கூறுகிறார். செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர். செய்தியின் சிறப்புத்தன்மைகளைக் கூறுதல், இன்றியமையாமையை உணர்த்துதல், படிப்பவர்களைக் கவர்தல், விற்பனையை உயர்த்துதல் ஆகியவை தலைப்பின் நோக்கங்களாகும்.

அறிவோம் தெளிவோம்

மக்களாட்சியின் நான்காவது தூண்

'ஊடகம் மக்களாட்சியின் நான்காவது தூண்' என அழைக்கப்படுகின்றது. முதல் தூணாக அரசு நிருவாகமும் இரண்டாவது தூணாகப் பாராளுமன்றமும் சட்டமன்றமும் மூன்றாவது தூணாக நீதிமன்றமும் நான்காவது தூணாக ஊடகமும் குறிப்பிடப்படுகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான கருத்துரிமையைக் காத்தல், சமூகக் குற்றங்களை எதிர்த்தல், அரசுக்கு வழிகாட்டுதல், ஆலோசனைகளை வழங்குதல் போன்ற செய்திகளை வழங்குவதால் ஊடகம் நான்காவது தூணாகக் கருதப்படுகிறது.

தலைப்பின் வகைகள்

1. கூம்புத் தலைப்பு

கோபுர அமைப்பில் முதல் வரி சிறியதாகவும் தொடரும் வரிகள் அதனைவிட நீளமானவையாகவும் இருக்கும்.

2. தலைகீழ்க் கூம்புத்தலைப்பு

தலைகீழ்க்கோபுரம்போல இருக்கும்.

3. இடப்பக்கம் தள்ளிய தலைப்பு

இடப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

4. வலப்பக்கம் தள்ளிய தலைப்பு

வலப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

5. உடுக்குத் தலைப்பு

உடுக்கையின் உருவம்போலத் தலைப்பு இருக்கும்.

இவ்வாறு பலவகையான தலைப்பு வடிவங்கள் செய்தித்தாளில் இடம்பெறும்.

2. முகப்பு

தலைப்பைத் தொடர்ந்து இடம்பெறுவது முகப்பு. இதில் ஒரு செய்தியின் முதன்மையான உள்ளடக்கம் ஓரிரு சொற்றொடர்களில் அமையும்.

முகப்பின் தன்மை

செய்தியின் முகப்புப் பகுதி, சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இருத்தல் வேண்டும். இது செய்திக்கு உயிரோட்டம் தருகிறது; படிப்பவர்களின் ஆவலையும் தூண்டுகிறது.

இந்திய அஞ்சல் துறை
இணையத்தள வங்கி சேவை
நாடு முழுவதும் மார்ச் மாதத்தில் அமலப்படுத்த முடிவு

தமிழ்
ஊடகங்களில்
பணியாற்ற ஆசையா?

தமிழ் ஊடகங்களில்
பணியாற்ற
ஆசை

ஊடகங்களில் பணியாற்ற
ஆசையா?

ஊடகங்களில் பணியாற்ற
ஆசையா?

கணித்தமிழ் வழியாகக்
கன்னித்தமிழ்
பெருமையைக் காப்போம்

செய்தி விளக்கப்பகுதி

செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும். செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.

செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்குமுன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகச் செய்தியை முழுமையாகப் படித்து, படிப்பவர்களுக்கு எவை தேவை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்றாவதாகச் செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும்.

செய்தியின் விளக்கப்பகுதி, செய்தியைப் பொருள் மயக்கமின்றி உணர்த்துவதாகவும் புதுமையாகவும் சுவையூட்டுவதாகவும் விறுவிறுப்பாகவும் அமைவதன் மூலம் செய்தியின் மதிப்பு கூடுகிறது.

பக்க அமைப்புமுறை

செய்தித்தாளில் இடம்பெற வேண்டிய செய்திகள், எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்த இடத்தில் எப்படி அமைய வேண்டுமெனத் தீர்மானிப்பது, பக்க வடிவமைப்பு. செய்தித்தாளின் அனைத்துப் பக்கங்களும் மிகவும் இன்றியமையாதவையாக இருப்பினும், முதற்பக்கம் சிறப்பானதாகவும் பொலிவுடையதாகவும் அமைந்திருக்கும். முதற்பக்கத்தில் முதன்மையான அரசியல் செய்திகள், உள்ளத்தை உருக வைக்கும் நிகழ்வுகள், வண்ணப்படங்கள் போன்றவை இடம்பெற்றுப் படிக்கும் ஆவலைத் தூண்டும் விதமாக அமைந்திருக்கும். செய்தித்தாளை அச்சிடுவதற்கு முன்புவரை கிடைக்கக்கூடிய (கடைசி நேரச் செய்திகள்) இன்றியமையாத செய்திகள், முதற்பக்கத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும். மற்ற பக்கங்கள் முன்பே முழுமையாக முடிக்கப்பட்டிருக்கும். செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது.

1. சமநிலைப் பக்க அமைப்பு

முறையான ஓர் அமைப்பில் செய்திகள், படங்கள், கேலிச்சித்திரங்கள், துணுக்குகள், விளம்பரங்கள் ஆகியவற்றை ஒரே சீராக அமைப்பது.

2. மாறுபட்ட பக்க அமைப்பு

ஒரு பக்கத்தைச் சமநிலையில் அமைக்கின்றபொழுதே இடையிடையே மாறுபட்ட முறைகளில் செய்திகளையும் படங்களையும் அமைப்பது.

3. கலப்புநிலைப் பக்க அமைப்பு

சமநிலைப் பக்க அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைப்பது கலப்பு நிலைப் பக்க அமைப்பு. இதில், செய்திகள் மற்றும் உள்ளடக்கங்கள் இடம்பெறும் பக்கங்கள் ஒவ்வொரு நாளும் மாறுபடலாம்.

சமநிலைப்பக்க அமைப்பு

1. தலையங்கம்
2. கட்டுரை
3. வாசகர் கடிதம்

1. வணிகப்பகுதி

1. விளையாட்டு

பக்க அமைப்பின் நோக்கங்கள்

படிப்பவர்களைக் கவர்தல், செய்தியின் இன்றியமையாமையைக் காட்டுதல், படிப்பதற்கு ஏற்றவாறு அமைத்தல், சுவை கூட்டுதல், இதழை இனம் காட்டுதல், விரும்புவதைப் படிக்கச் செய்தல், பயனை மதிப்பிட உதவுதல், மிகுதியான செய்திகளைப் படிக்க வாய்ப்பளித்தல் முதலியன பக்க அமைப்பின் நோக்கங்களாகும்.

பத்தி அமைப்பு

இதழ்களில் பத்திகள் ஐந்து செ.மீ. நீளத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஒரு பத்திக்கும் இன்னொரு பத்திக்கும் தொடர்பு இருக்கவேண்டும். இரண்டு பத்திக்குமிடையே தொடர்பு விட்டுப்போகுமிடத்தில் துணைத் தலைப்பிட்டு இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

படங்கள்

நாளிதழ் வனப்பையும் செய்தி மதிப்பையும் கூட்டுவனவாகப் படங்கள் உள்ளன. ஆயிரம் சொற்களால் சொல்ல முடியாதவற்றை ஒரு படம் உணர்த்திவிடுகிறது. கற்றோர், எழுத்தறிவற்றோர், முதியோர், சிறுவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பார்த்துச் செய்திகளைப் புரிந்துகொள்ளப் படங்கள் உதவுகின்றன.

இதழ்களின் மொழிநடை

ஓர் இதழுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் முதன்மையானது, அதனுடைய மொழிநடையாகும். சிறப்பான மொழிநடை மக்களை வெகுவாக ஈர்க்கிறது. நாம் மற்றவர்களோடு பேசுவதற்குப் பயன்படுத்துவது பேச்சுத் தமிழாகும். விளம்பரத்திற்காகக் கையாளும் தமிழ், அழகாகவும் செறிவாகவும் இருக்கும். மேடை ஏறி முழங்கும் பேச்சாளர்கள் சிலர், பயன்படுத்தும் நடை இலக்கிய நயத்துடன் இருக்கும்.

மொழிநடை பொருளுக்கேற்பவும் வேறுபடுகிறது. பெரும்புலவர்கள் எழுதுகின்ற இலக்கியக் கட்டுரைகள் சொற்செறிவுடன் அமைந்திருக்கும். இதழ்களில் இடம்பெறும் புனைகதைகளில், அணி சேர்க்கும் அடைமொழிகளும் உவமைகளும் கையாளப்படும். சிறுகதைகளில் சொற்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படும். இதுபோலவே படிக்கத்தெரிந்தவர்கள் அனைவரும் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் இதழ்களில் மொழிநடை அமைந்திருக்கும்.

தலையங்க மொழிநடை

நாளிதழ், பருவ இதழ்களில் தலையங்கம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. நடைமுறையில், தலையங்கம் இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கம், செய்தித்தாளின் சமூகப் பார்வையையும் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

தலையங்கத்தின் இயல்புகள்

தலையங்கம், ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும். இதனை எழுதும்

அறிவோம் தெளிவோம் — **திரு.வி.க. வின் தமிழுணர்வு**

1. 'தேசப்பிதா காந்திஜி' யை முதன்முதலில் காந்தியடிகள் என்று குறிப்பிட்டு இதழ்களில் திரு.வி.க எழுதினார். சிலப்பதிகாரத்தில் வரும் கௌந்தியடிகளைப் படிக்கும்போது காந்தியை, காந்தியடிகள் என்று குறிப்பிட வேண்டுமென்று தோன்றியதாகத் தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.
2. அன்னிபெசண்ட் அவர்களை 'அன்னை வசந்தை' என்றே அவர் எழுதினார்.
3. 'வல்லரசு' என்ற புதிய அரசியல் பதத்தை முதன்முதலில் அவர் உருவாக்கினார்.
4. சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தைச் சேர்ந்த பி.வி. நரசிம்மன் என்பவர் முதன்முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளியிடாத நிலையில் தமது தேசபக்தன் இதழில் வெளியிட்டார்.

ஆசிரியர், தம் பொறுப்பினை உணர்ந்து எழுதவேண்டும். எதனைப் பற்றித் தலையங்கம் எழுதினாலும் தரவுகளைத் திரட்டிவைத்துக்கொண்டு நடுநிலையோடு எழுதுதல் வேண்டும். கட்டுரையைப்போல் விரிவாக இல்லாமல் சுவையாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைவது, தலையங்கத்திற்குச் சிறப்பைத் தரும். சிறந்த தலையங்கங்கள் பொருளுக்கேற்பத் தெளிவான நடையில், வலுவான கருத்துகளைக்கொண்டு அமைந்திருக்கும். ஒரு கொள்கை / கருத்தின் மீதான செய்தித் தாளின் நிலைப்பாட்டை இதன் மூலம் அறியலாம்.

இடம்பெறும் பிற செய்திகள்

இதழ்கள், நடப்புச்செய்திகளை வெளியிடுவதோடு அல்லாமல் கருத்துப்படம், நூல் மதிப்புரை, வாசகர் கடிதம், விளம்பரம் முதலிய பகுதிகளுக்கெனக் குறிப்பிட்ட பக்கங்களில் இடங்களை ஒதுக்கி அவை தொடர்பான செய்திகளை வெளியிடுகின்றன.

நூல் மதிப்புரை

நூல் மதிப்புரை என்பது, ஒரு நூலைப்பற்றிய திறனாய்வாகும். இது நாளிதழ்களில், ஒரு வாரத்தின் குறிப்பிட்ட நாளில் வெளியிடப்படுகிறது. இப்பகுதியில் புது நூல்களின் வரவு குறித்த அறிமுகங்கள் இடம்பெறும். சிறப்பான உள்ளடக்கங்கள் கொண்ட நூல்கள் குறித்து மதிப்புரைகள் எழுதப்படும். நூலின் விலை, கிடைக்குமிடம் ஆகிய விவரங்களும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

வாசகர் கடிதம்

வாசகர் கடிதம் என்ற பகுதி, படிப்பவர்களின் பின்னூட்டங்களைப் பதிவு செய்யும் ஒரு களமாக விளங்குகிறது. செய்திகள், பிற படைப்புகள் ஆகியவை வாசகர்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் அல்லது மறுப்புகள் இப்பகுதியில் வெளியிடப்படுகின்றன. வாசகர் கடிதம், அடுத்தடுத்து வரும் செய்திகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள இதழ்களுக்கு உதவுகிறது. மேலும், இப்பகுதி தீவிரமான அரசியல், சமூகச் சிக்கல் ஆகியவற்றைக் குறித்துக் கலந்துரையாடும் திறந்த மேடையாகவும் விளங்குகிறது.

விளம்பரம்

எந்த இதழைப் புரட்டினாலும் அதன் விற்பனை அளவிற்கும் புகழுக்கும் ஏற்ப விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருப்பதைக் காணலாம். விளம்பரம் என்பது, படங்கள் மற்றும் கவர்ச்சியான வாசகங்களைப் பயன்படுத்திப் பொருள்களை வாங்க மக்களைத் தூண்டும் முறையாகும். இதழ்களில் பல வகையான விளம்பரங்கள் வெளிவருகின்றன.

வணிக விளம்பரம், நிறுவன விளம்பரம், அறிவிப்பு விளம்பரம், தொழில் விளம்பரம், அரசு விளம்பரம், பங்குச்சந்தை விளம்பரம் போன்ற விளம்பரங்களை நாளிதழ்களில் காணலாம்.

இணைப்பு இதழ்கள்

தற்காலத்தில் ஒவ்வொரு நாளிதழும் வாரத்தின் ஏழு நாளிலும் ஒவ்வொரு வகையான இணைப்பிதழை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக சிறுவர் இதழ், அறிவியல் இதழ், மருத்துவ இதழ், கல்வி இதழ், பெண்கள் இதழ், தொழில் இதழ், வணிக இதழ், விளையாட்டு இதழ், இளைஞர் இதழ், சோதிட இதழ், சமய இதழ், வேலைவாய்ப்பு இதழ் முதலியவற்றைக் கூறலாம்.

பருவ இதழ்களின் அமைப்பு

பருவ இதழ்களில் அறிஞர்களின் நேர்காணல்கள், நடப்பு நிகழ்வுகள், கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள், உடல்நலம், வேளாண்மை, வேலைவாய்ப்பு மற்றும் திரைப்படச் செய்திகள் போன்றவை படிப்பவர்களின் மனத்தைக்

உங்கள் பார்வைக்குச் சில மின்னிதழ்கள்

நிலாச்சாரல்	http://www.nilacharal.com/
சொல்வனம்	http://solvanam.com/
வல்லினம்	http://vallinam.com.my/version2/
தமிழோவியம்	https://www.tamiloviam.com/

அறிவோம் தெளிவோம் — இதழியல் – சில முதன்மைகள்

1. இந்திய இதழியலின் தந்தை –ஜேம்ஸ் அகஸ்ட்டஸ் ஹிக்கி
2. இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இதழ் பெங்கால் கெஜட் (1780) (கல்கத்தா ஜெனரல் அட்வைசர்)
3. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் நாளிதழ் – மதராஸ் மெயில் (1868)
4. தமிழ்நாட்டில் வெளிவந்த முதல் தமிழ் நாளிதழ் – சுதேசமித்திரன் (1882)

கவரும்வகையில் வண்ணப்படங்களுடன் அமைந்திருக்கும்.

அட்டைப்படம்

பருவ இதழ்களில் அட்டைப்படங்களே இதழ்களின் வாயில்கள் எனலாம். அட்டைப்பகுதி, படிப்பவர் மனங்களைச் கவரும்வகையில் அமைதல் வேண்டும். இதழின் உள்ளடக்கச் செய்தியைத் தலைப்பாகக்கொண்டு, வண்ணப்படங்களுடன் அட்டைப்பகுதி அமைந்திருக்கும்.

இணைய இதழ்கள்

இன்று, மக்களிடையே செய்தியை விரைவாகக் கொண்டுசேர்க்கும் ஊடகமாக இணையத்தளம் செயல்பட்டு வருகின்றது. நவீன உலகில் அன்றாடச் செயல்பாடுகளில் தவிர்க்க முடியாத தேவையாக இணையம் உள்ளது. இணையத்தில் வெளியிடப்படும் இதழ்கள், கணினி வழியாகவோ திறன்பேசி வழியாகவோ மிக எளிதாக வாசகர்களைச் சென்றடையும் வலிமை வாய்ந்தவை. அச்சு இதழ்களைவிட இணைய இதழ்களின் பரவல் உலகளாவியது. முழுவதும் மின்பக்கங்ளைக் கொண்ட மின்னிதழ்கள், இணையத்தில் வெளியிடப்படுகின்றன.

இணையத்தில் அச்சிதழ்கள்

அச்சில் வெளிவரும் பெரும்பாலான நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் இணையத்திலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அவற்றில் எந்த ஓர் இதழையும் காலவாரியாக நாம் பதிவிறக்கம் செய்து படிக்கலாம். பெரும்பாலான வெளியீட்டு நிறுவனங்கள் இவற்றைக் கட்டணமின்றி வழங்குகின்றன. சில நிறுவனங்கள், கட்டணங்களைப் பெற்றுக்கொண்டு மின்னிதழ்களை வழங்குகின்றன.

இதழ்களின் பெருக்கமும் தேவையும்

தொடக்கக் காலத்தில் குறைவான இதழ்களே வெளிவந்தன. தற்போது நாளுக்குநாள் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகிவருகின்றது. எனவே, அவர்களின் தேவைக்கேற்ப இதழ்கள் வெளிவருகின்றன. ஒவ்வோர் இதழும் வாசகர்களை மனநிறைவு அடையச் செய்ய முயல்கின்றன. இதழ்கள் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டு வெளிவருகின்றன. மேலும், நடுநிலையோடு செய்திகளை வெளியிடுகின்றன; மக்களிடையே நாட்டுநடப்புகளை அறியவைத்து, அறிவாற்றலை மேம்படுத்துகின்றன; சமூக மாற்றங்களுக்கு அடித்தளமாகவும் உள்ளன.

இணைப்பு

அச்சுப்படிகளில் பிழை திருத்துதல்

இதழ்களை அச்சிடுவதற்குத் தயாரிக்கப்படும் அச்சுப்படிகளில் மெய்ப்புத்திருத்தும் முறைகள் அவற்றிற்குரிய குறியீடுகளுடன் இங்கே தரப்பட்டுள்ளன. இக்குறியீடுகள், இதழ் உருவாக்கத்தில் மட்டுமில்லாமல் அனைத்துவகை அச்சுப்படிகளில் பிழை நீக்கம் செய்யவும் பயன்படுகின்றன.

ஐவகையான அச்சுப்படித் திருத்தக்குறியீடுகள்

1. பொதுவானவை		
Dt	–	அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக
Stet	–	ஏற்கெனவே உள்ளதுபோலவே இருக்கட்டும்
^	–	சொல்லையோ எழுத்தையோ இந்த இடத்தில் சேர்த்துக்கொள்க
X	–	சரியாக விழாமல் உள்ள எழுத்துகளை மாற்றுக
//	–	செங்குத்தாக உள்ளவற்றைச் சரிசெய்க
[	–	புதிய பத்தி (New Paragraph) தொடங்குக
2. நிறுத்தக்குறியீடுகள்		
,/	–	கால்புள்ளியைச் சேர்க்கவும்
;/	–	அரைப்புள்ளியைச் சேர்க்கவும்
./	–	முற்றுப்புள்ளி இடவும்
?/	–	கேள்வி அடையாளம் இடவும்
!/	–	வியப்புக்குறியைச் சேர்த்துக் கொள்ளவும்
:/	–	இரண்டு புள்ளிகளைச் சேர்க்கவும்
'/	–	ஒற்றை மேற்கோள் அடையாளம் இடவும்
3. இடைவெளி தரவேண்டியவை		
	–	சொற்களை அல்லது எழுத்துகளை இடைவெளியின்றிச் சேர்க்க
#	–	பத்தி, வரி மற்றும் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக

4. இணைக்க வேண்டியவை		
	–	இடப்பக்கம் தள்ளவும்
	–	வலப்பக்கம் தள்ளவும்
T	–	மேலே உயர்த்தவும்
	–	கீழே தள்ளவும்
	–	பத்திகளை இணைக்கவும்
	–	சொல்லைப் பிரித்துத்தரவும்
	–	ஒற்றை மேற்கோள்குறியீடு இடுக
	–	இரட்டை மேற்கோள் குறியீடு இடுக
5.எழுத்துவடிவம்		
S.C	–	பெரிய எழுத்தில் உள்ளதைச் சிறிய எழுத்தில் மாற்றுக
Caps	–	பெரிய எழுத்தில் மாற்றுக
bold	–	தடித்த எழுத்தில் மாற்றுக
trs	–	சொற்கள், எழுத்துகளை மாற்றுக
l.c.	–	சிறிய எழுத்தில் அச்சிடுக

அச்சுப்பிழைத் திருத்துவோர் அச்சுப்படியில் பிழையுள்ள இடத்தில் ஒரு சாய்ந்த கோடிட்டு (/) அடித்தல் வேண்டும். வலப்பக்க, இடப்பக்க ஓரங்களில் அச்சுப்பிழைத் திருத்தக்குறியீடுகளை எழுதி, என்ன திருத்தம் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

உரையாடல்

தமிழ் இதழ்கள் – ஒரு சந்திப்பு

ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. வழியெங்கும் வண்ணத் தோரணங்களும் விதவிதமான கோலங்களும் மனத்தை மகிழ்வித்தன. கவின், கடைத்தெரு வழியாகச் சென்றுகொண்டிருக்கிறான். அப்போது பக்கத்து ஊரில் வசிக்கும் சிற்றப்பா மகள் கவிமதி எதிரே வருகிறாள் இருவரும் சந்தித்து உரையாடுகின்றனர்.

கவின்: கவிமதி! யாரைத் தேடுகிறாய்?

கவிமதி: கவின் உன்னைத்தான் காணவந்தேன். உங்கள் ஊரில் திருவிழாவா?

கவின்: ஆம், புத்தகத் திருவிழா.

கவிமதி: என்ன! புத்தகத் திருவிழாவா? உங்கள் ஊரில் புத்தகத் திருவிழா நடப்பதை நினைத்தால் மிகவும் பெருமையாக இருக்கிறது.

கவின்: சரி, வா, வீட்டிற்குச் செல்வோம். எங்கள் வீட்டில் உன்னைக் கண்டால் அனைவரும் மகிழ்வர்.

(இருவரும் பேசியபடி கடைத்தெருவழியே நடந்துசெல்கின்றனர். அப்போது யாரோ அழைப்பதுபோல் தோன்றியது. இருவரும் அழைப்பு வந்த திசையினை நோக்கித் திரும்பினர். அழைத்தது எதிரே இருந்த புத்தகக்கடையில் மிடுக்குடன் அச்சின் வாசனையோடு, புத்தம் புதியதாகப் படபடத்துக் கொண்டிருந்தது ஒரு நாளிதழ். அது யாரும் எதிர்பாராத நேரத்தில் சட்டெனப் பேசத் தொடங்கியது)

நாளிதழ்: நண்பர்களே! இங்கு வாருங்கள்.

கவின்: என்ன! எங்களை அழைத்தது நீயா? எதற்காக அழைத்தாய் நாளிதழே?

நாளிதழ்: நானும் பல நாளாக உங்களின் நட்பிற்காகக் காத்திருக்கிறேன். நீங்கள்தாம் என்னுடன் பேசாமலும் என்னைப் புரட்டாமலும் உங்கள் போக்கில் சென்று கொண்டிருக்கிறீர்கள்.

கவிமதி: நாங்கள் ஏன் உன்னுடன் பேச வேண்டும்?

நாளிதழ்: அன்றாடம் நடைபெறும் நாட்டுநடப்புகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள நினைக்கிறேன். என் வரிகளை நீங்கள் மேலிருந்து கீழாய் வாசித்தால் நான் உங்களைக் கீழிருந்து மேலாய் உயர்த்துவேன் தெரியுமா? இதனால் நமக்குள் நல்ல நட்பு மலர்வதுடன் உங்கள் அறிவாற்றலும் வளரும்.

கவிமதி: எப்படி?

நாளிதழ்: என்னை வாசித்தால் நீங்கள் திறம்படச் சிந்திப்பீர்கள். உலகின் பல இடங்களில் நடைபெறும் நிகழ்வுகள், அறிவியல் செய்திகள், பொருளியல் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், திரைப்படச் செய்திகள், கருத்துப்படங்கள், கல்விச் செய்திகள் முதலானவற்றை என்னிடமிருந்து உங்களால் பெற இயலும்.

கவின்: எங்கள் ஆசிரியர் சொல் விளையாட்டு ஒன்றை உருவாக்கி வரும்படி என்னிடம் கூறினார். அதற்கான வழிமுறையினை உன்னால் கூற இயலுமா?

நாளிதழ்: சொல் விளையாட்டிற்கான வழிமுறையினை இணைப்பு இதழாய் வெளிவரும் என் மகளாகிய சிறுவர் இதழில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே!

கவிமதி: சிறுவர் இதழில் வேறு என்னவெல்லாம் தெரிந்துகொள்ளலாம் ?

நாளிதழ்: சிறுவர் இதழில் சிறுவர்களுக்கான நன்னெறிக் கதைகள்,

ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், கணிதப்புதிர்கள், புதிர் விளையாட்டுகள், விடுகதைகள் போன்றவற்றை அறியலாம். மேலும், இவற்றில் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

(அப்போது, சிறுவர் இதழ் குறுக்கிட்டுப் பேசத் தொடங்குகிறது.)

சிறுவர் இதழ்: அம்மா! இன்னும் சிலவற்றை மறந்துவிட்டீர்கள். அறிவியல் விந்தைகள், குழந்தைப் படைப்புகள், பிறந்தநாள் வாழ்த்துகள் ஆகியவற்றையும் நான் கொண்டிருக்கிறேன்.

கவின் : அப்படியா? தங்களுடன் பிறந்தவர்கள் யாரேனும் உள்ளனரா?

சிறுவர் இதழ்: ஆம், எங்கு நோக்கினும் இதழ்த் தம்பிகளும் தங்கைகளும்தான்! இளைஞர் இதழ், மகளிர் இதழ், மருத்துவ இதழ், ஆன்மீக இதழ், சோதிட இதழ் முதலான உடன்பிறந்தவர்கள் பலரும் எனக்கு உண்டு.

(அப்போது, எங்கிருந்தோ சிரிப்பொலி கேட்கிறது)

கவிமதி: யார் இப்படிச் சிரிப்பது?

நாளிதழ்: அது வேறுயாருமில்லை, எங்கள் வீட்டில் செல்லமாய் வளரும் கேலிச் சித்திரம்தான். யாரையாவது விளையாட்டாகப் படம் வரைந்து நகைக்கச்செய்வதே அதன் வேலையாய்ப் போய்விட்டது.

கவின்: உள்ளே வேறு யாரெல்லாம் உள்ளார்கள்?

நாளிதழ்: உள்ளே கருத்துப்படம், கதைப்படம், செய்திப்படம், துணுக்குச்செய்தி போன்ற செல்லப் பிள்ளைகள் பலரும் இருக்கின்றனர். காலை நாளிதழ், மாலை நாளிதழ் என ஒரு நாளில் இருமுறை வெளிவருகிறோம்.

கவின்: எதற்காக ஒரு நாளைக்கு இரண்டு முறை?

நாளிதழ்: நாம் தகவல் யுகத்தில் வாழ்கிறோம். அவ்வப்போது நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் கொண்டு சேர்ப்பதற்காக நான் ஒரு நாளைக்கு இரண்டு முறை வெளிவருகிறேன்.

கவின்: உங்கள் வீட்டில் விருந்தினர் பலர் வந்திருக்கிறார்கள்போல் தோன்றுகிறதே!

நாளிதழ்: ஆம், புத்தகத் திருவிழா என்று கேள்விப்பட்டு என்னுடைய தோழி பருவ இதழ், தன் குழந்தைகளுடன் வந்திருக்கின்றாள். உங்களுடன் பேச ஆசைப்படுகிறாள்.

கவிமதி: நாங்களும்தான்.

பருவ இதழ்: வணக்கம், நண்பர்களே!

இருவரும்: வணக்கம் பருவ இதழே! உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம்.

பருவ இதழ்: நான் இலக்கியம், விளையாட்டு, மகளிர் மேன்மை, சிறுவர் நலன், இளைஞர் நலன், தன்னம்பிக்கை, மருத்துவம், வேளாண்மை, வாணிகம், வேலைவாய்ப்பு, புலனாய்வு, ஆராய்ச்சி, தொழில்நுட்பம், திரைப்படம் போன்ற செய்திகளைத் தாங்கித் தனித்தனி இதழ்களாக வெளிவருகிறேன்.

கவிமதி: இலக்கிய இதழாய் எங்களுக்குக் கூற ஏதேனும் செய்தி உள்ளதா ?

பருவ இதழ்: இலக்கியத்தோடு எனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு. சமகாலப் படைப்பிலக்கியங்கள், படைப்பாளிகளின் நேர்காணல்கள், நவீன இலக்கியக் கோட்பாட்டுக்கட்டுரைகள்,சமூக,பொருளாதார, அரசியல் எதிர்வினைகள், இளம் படைப்பாளர் அறிமுகம் போன்றவற்றை இலக்கிய இதழான என்னுள் காணலாம். கதை, கவிதை, கட்டுரை போன்றனவும் எனக்குள் இடம்பெறும்.

கவின்: எனக்கு விளையாட்டு மிகவும் பிடிக்கும்.

பருவ இதழ்: நீங்கள் என்ன கூற வருகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. விளையாட்டு பற்றிய செய்திகள்தானே? உலகக் கோப்பைப் போட்டிகள், விளையாட்டு

வீரர்களின் நேர்காணல்கள் என விளையாட்டுச் செய்திகளுக்கென விளையாட்டு இதழாக நான் வெளிவருகிறேன். அதில் உங்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கான விடைகளைப் பெறலாம்.

கவிமதி: என் தாயாருக்கு அடிக்கடி உடல் நலமில்லாமல் போகிறது. அவர்களின் உடல்நலத்திற்கான வழிகாட்டுதல்களைத் தங்களால் கூற இயலுமா?

பருவ இதழ்: வந்தபின் வருந்துவதைவிட, வருமுன் காப்பதுதானே சிறந்தது. நலவாழ்வு தரும் விழிப்புணர்வுக் கருத்துகளோடு நான் மருத்துவ இதழாக வெளிவருகிறேன்; உடல்நலம் சார்ந்த இயற்கையான மருத்துவக் குறிப்புகளையும் மருத்துவர்களின் ஆலோசனைகளையும் வழங்குகிறேன்; உடல்நலம் குறித்த கட்டுரைகளையும் உளவியல் தொடர்பான வினாவிடைகளையும் தாங்கி வெளிவருகிறேன். இச்செய்திகள் உங்கள் தாயாருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கவிமதி: வேறு என்னென்ன செய்திகளை உன்னிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள இயலும்?

பருவ இதழ்: தொழில் முனைவோருக்கான கல்வித் தகுதிகள், வழிகாட்டுதல்கள், முதலீடுகள், அதற்கான அரசு மானியத்தொகை பற்றிய செய்திகளுடன் தொழில் இதழாக வெளிவருகின்றேன். வேளாண்மைக்கான அரசுத்திட்டங்கள், பங்குச்சந்தை முதலீடுகள், மேலாண்மைச் சிந்தனைகள், விளம்பர உத்திகள், வரிவிதிப்பு தொடர்பான ஆலோசனைகளோடு வாணிக இதழாகவும் வெளிவருகிறேன்.

கவின்: அப்படியா! சரி. நான் சிறந்த ஓர் ஆய்வாளராக வர விரும்புகிறேன். அதற்கு நீ வழிகாட்டுவாயா?

பருவ இதழ்: ஓ! புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கொண்டு ஆராய்ச்சி இதழாக வெளிவருகின்றேனே, அதுமட்டுமா? உங்களைப் போன்ற இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், சாதனை படைத்த ஆளுமைகள் பற்றிய செய்திகளைத் தாங்கித் தன்னம்பிக்கை இதழ்களாகவும் வெளிவருகிறேன்.

கவிமதி: புதிய தொழில் நுட்பங்களைப்பற்றி, உன்னிடம் தெரிந்துகொள்ள இயலுமா?

பருவ இதழ்: ஓ! தெரிந்துகொள்ளலாமே! கணினித் தொழில்நுட்பத்திற்கெனத் தனி இதழாகவே வெளிவருகிறேன். அதுமட்டுமின்றி மென்பொருள், இயந்திரங்கள், வாகனங்கள், வேளாண்மை முதலான தொழில்நுட்பம்

அறிவோம் தெளிவோம் — செய்தி நிறுவனங்கள்

உலகச் செய்தி நிறுவனங்கள்

1. அமெரிக்க அசோசியேட்டட் பிரஸ் (A.P)
2. இராய்ட்டர் நிறுவனம் (Reuter)
3. ஏஜென்சி பிரான்ஸ் பிரஸ் (A.F.P)
4. யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் (U.P.I)
5. டாஸ் செய்தி நிறுவனம் (Tass)

இந்தியச் செய்தி நிறுவனங்கள்

பொது நிறுவனம்

1. அசோசியேட்டட் பிரஸ் ஆப் இந்தியா (A.P.I)
2. பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா (P.T.I)
3. யுனைடெட் பிரஸ் ஆப் இந்தியா (U.P.I)
4. யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா (U.N.I)
5. பிரி பிரஸ் ஆப் இந்தியா (F.P.I)

தனியார் நிறுவனங்கள்

1. குளோப் நியூஸ் ஏஜென்சி (Globe News Agency)
2. ஓரியண்ட் பிரஸ் (Orient Press)
3. டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India)
4. இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express)

பற்றிய செய்திகளையும் என்னைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். இத்துடன் திரைப்படத் தொழில்நுட்பம் பற்றியும், திரைப்படக் கலை பற்றியும் கூறுவதற்காகத் திரைப்பட இதழ்களாகவும் வெளிவருகிறேன்.

கவின்: இவை எல்லாவற்றையும் நாங்கள் எப்படித் தெரிந்து கொள்வது?

பருவ இதழ்: இவை எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நீங்கள் என் பிள்ளைகளான வார இதழ், மாத இதழ், ஆண்டிதழ்களோடு நட்பு கொண்டு அவர்களை அவ்வப்போது படித்துவர வேண்டும். இதோ, எனது இளைய மகள் வார இதழ் வந்துவிட்டாள். அவளுடன் சற்று உரையாடுங்கள்.

கவிமதி: வணக்கம் தோழி!

வார இதழ்: வணக்கம். நண்பர்களே! உங்களின் நட்பு கிடைத்ததில் நான் மிகவும் மகிழ்கிறேன். நமது நட்பு தொடர என்னைப் பற்றிய சில செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

கவிமதி: சொல்லுங்கள், தெரிந்து கொள்கிறோம்.

வார இதழ்: நான் வாரம் ஒரு முறை இதழாகவும், வாரம் இரு முறை இதழாகவும் வாரம் மும்முறை இதழாகவும் வெளிவருகிறேன். அரசியல், தொழில், கல்வி, மகளிர், இளைஞர், மருத்துவம், திரைப்படம் சார்ந்த தனித்தனி இதழ்களாகவும் வருகின்றேன்.

கவிமதி: எதற்காக இத்தனை இதழ்களாக வெளிவருகின்றீர்கள்?

வார இதழ்: மக்களனைவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பச் செய்திகளைத் தேடிப் படிக்கின்றனர். எனவே, அவரவர் விருப்பத்திற்கு ஏற்பத் தனித்தனி இதழ்களாக வெளிவருகிறேன்.

கவின்: உங்களுடன் வந்துள்ள மற்ற உடன்பிறந்தவர்களைப் பற்றியும் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறோம்.

வார இதழ்: கட்டாயமாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். முதலில், என் உடன்பிறந்தவளான மாத இதழை அழைக்கிறேன்.

மாத இதழ்: வணக்கம். நண்பர்களே!

இருவர்: வணக்கம். மாத இதழாரே! நீங்கள் மாதம் ஒருமுறை வருவதாக அறிந்தேன்.

மாத இதழ்: மாதம் ஒருமுறை மட்டுமல்ல, மாதம் இரு முறையாகவும் வெளிவருகிறேன்.

கவிமதி: நீங்கள் என்னென்ன செய்திகளைத் தருவீர்கள்?

மாத இதழ்: நான், ஒருமாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைத் தாங்கி வெளிவருகிறேன். மருத்துவம், வேளாண்மை, தொழில், விளையாட்டு, வாணிகம், வேலைவாய்ப்பு, திரைப்படம் போன்ற பல செய்திகளுடன் சிறுகதை, கட்டுரை, தொடர்கதை போன்றவற்றையும் கொண்டு வெளிவருகிறேன். என் மற்றொரு தோழியான ஆண்டு இதழ் உங்களிடம் பேச விருப்பப்படுகிறாள்.

கவிமதி: பேசச்சொல்லுங்கள். நாங்களும் கேட்க ஆவலாக இருக்கிறோம்.

ஆண்டு இதழ்: நண்பர்களே! வணக்கம். ஆண்டிற்கு ஒரு முறை வெளியாவதால் என்னை ஆண்டு இதழ் என்று அழைக்கின்றனர். நான், ஓர் ஆண்டு முழுவதும் நடைபெறும் உலகச் செய்திகளைத் தொகுத்து மொத்தமாகத் தந்திடுவேன். மேலும், போட்டித் தேர்விற்குத் தேவையான பொதுஅறிவு தொடர்பான செய்திகளையும் வெளியிடுவேன். எனவே, என்னை எல்லாரும் விரும்பிப் படிப்பர். மேலும், காலாண்டிற்கு ஒருமுறை காலாண்டிதழும், அரையாண்டிற்கு ஒருமுறை அரையாண்டிதழும் என்னைப்போலவே வெளிவருகின்றன.

கவிமதி: உங்களுக்குள் செய்திகளின் தன்மை அடிப்படையில் ஏதேனும் வேறுபாடுகள் உண்டா?

இதழ்கள்: உண்டு. பொருள் நிறைந்த தகவல்களைக்கொண்டு புலமைமிக்கவர்கள் மட்டும் படிக்கும் இதழ்களைச் 'செவ்வியல் இதழ்கள்' என்றும், அனைத்து மக்களும் எளிதாகப் படிக்கக் கூடிய இதழ்களை 'மக்கள் இதழ்கள்' என்றும் அழைப்பர்.

கவின்: வேறு ஏதேனும் புதிய செய்திகள் இருந்தால் கூறுங்கள்?

இதழ்கள்: எங்களுடைய குழந்தைகளான இணைய இதழ்கள் பற்றியும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

கவின்: இணைய இதழ்களா? அவை என்ன செய்கின்றன? அவர்களை நாங்கள் எப்படிச் சந்திப்பது?

ஆண்டு இதழ்: கவலை வேண்டாம். எங்களையாவது பார்ப்பதற்கு நீங்கள் எங்கள் இருப்பிடம் தேடி வருதல் வேண்டும். ஆனால், நீங்கள் இணைய இணைப்பைப் பெற்றிருந்தால் எங்கள் குழந்தைகளான மின்னிதழ்களை உங்கள் இல்லத்திற்கே வரவழைக்கலாம். அவை உடனுக்குடன் செய்திகளை உங்களுக்குக் கொண்டு வந்துசேர்க்கின்றன.

கவிமதி: மிகவும் வியப்பாக உள்ளதே! இதுவரை உங்களின் பெருமை தெரியாமல் நாங்கள் உங்களைப் படிக்காமல் இருந்துவிட்டோம். இனி, நாங்கள் உங்களின் நண்பர்கள். எங்களின் அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தேவையான கருத்துகளை உங்களிடமிருந்து பெறக் காத்திருக்கின்றோம்.

இதழ்கள்: மிக்க மகிழ்ச்சி! உங்களின் ஆர்வம் எங்களை வியக்கவைக்கிறது. உங்களின் முன்னேற்றத்திற்காகவும், பயனுள்ள முறையில் நேரத்தைச் செலவிடவும் பல செய்திகளை உங்களுக்கு வழங்கவும் காத்திருக்கின்றோம். மேலும், உங்களின் படைப்புகளை வெளியிடவும் காத்திருக்கின்றோம். கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் போன்ற உங்களின் படைப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அவற்றுள் சிறந்த படைப்புகள், இதழ்களில் வெளிவரும். அவற்றிற்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

கவின்: மிக்க நன்றி. உங்கள் அனைவரையும் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. கல்வித் திருவிழா நாளன்று நல்லறிவைப் பருகிய நிறைவுடன் செல்கின்றோம். படிப்பதில் உள்ள இன்பம் இப்பொழுது புரிகின்றது. நேரம் போனதே தெரியவில்லை. புத்தகத் திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வீட்டில் அம்மா தேடுவார்கள். நாங்கள் செல்கிறோம். மீண்டும் சந்திப்போம்.

கட்டுரை

சமுதாய முன்னேற்றத்தில் இதழ்கள்

நாடோடிகளாக வாழ்ந்த மனிதஇனம் படிப்படியாக நாகரிக வளர்ச்சி பெற்று வாழ முற்பட்டது. அவர்களுக்குள்ளே செய்திப் பரிமாற்றங்கள் தேவைப்பட்டன. இதுவே மொழி தோன்றுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது. தீப்பந்தங்களை எரித்தும், பறை அறிவித்தும் ஓர் இடத்தில் நிகழும் செய்திகளை மற்றவர்களுக்கு அறிவித்தனர். மேலும், ஆட்களை அனுப்பியும் புறாக்களின் கால்களில் ஓலைகளைக் கட்டியும் செய்திகளைத் தெரிவித்தனர்.

இதழ்களின் தோற்றம்

செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு முறையினை ஜூலியஸ் சீசர் பொ.ஆ.மு. 60 இல் அறிமுகப்படுத்தினார். அவர் தினசரி செய்தி (Acta Diurna) என்ற பெயரில் கற்பலகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் அரசுச்செய்திகளை எழுதிப் பொதுமக்களின் பார்வைக்கு வைத்தார். எனவே, அவர் "இதழியலின் தந்தை" என அழைக்கப்படுகிறார். இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.

அச்சு இதழ்கள்

சீனர்களால் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அச்சுக்கலை தோன்றி வளர ஆரம்பித்தது. இதழ்களின் வளர்ச்சிக்கு அச்சுக்கலை பெருந்துணை புரிந்தது. பொ.ஆ. 1450இல் ஜோஹன்னஸ் கூடன்பர்க் (Johannes Gutenberg

செய்திப் பரிமாற்றத்தின் வளர்ச்சி நிலைகள்



புகைமூட்டிச் செய்தி அறிவித்தல்

குறியீடு வழியாகச் செய்தி அறிவித்தல்

முரசறைந்து செய்தி அறிவித்தல்

பொது இடங்களில் செய்தியை எழுதி வைத்தல்

1398-1468) என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப்பொறியினைக் கண்டுபிடித்தார். இதனால், அச்சிட்ட இதழ்கள் நம் கரங்களில் தவழ்ந்து, சமுதாயம் பல மாற்றங்களைப் பெறக் காரணமாக அமைந்தது.

இந்தியாவில் இதழ்கள்

1780-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29ஆம் நாள் பெங்கால் கெஜட் (Bengal Gazette or Calcutta General Advertiser) என்ற முதல் இந்தியச் செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி வெளியிட்டார்.

சென்னையில் 1785 அக்டோபர் 12-இல் முதன் முதலாக ரிச்சர்டு ஜான்சன் (Richard Johnson) என்பவர் "மெட்ராஸ் கூரியர்" (Madras Courier) என்ற ஆங்கில வார இதழை வெளியிட்டார்.



ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி

தமிழ் இதழ்கள்

தமிழ்மொழியில் முதன்முதலில் வெளிவந்த நாளிதழ் எது என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரியவில்லை. 1856-இல் பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தொடங்கிய "தினவர்த்தமானி" தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும். இந்த இதழ் செய்திகளோடு கலை, இலக்கியம், அறிவியல் சார்ந்த கட்டுரைகளையும் கொண்டு வெளிவந்தது. 1870-இல் கல்வித்துறையின் ஆதரவில் "ஜனவிநோதினி" என்ற தமிழ் மாத இதழ் வெளிவந்தது. கல்வி வளர்ச்சியே இதன் தலையாய குறிக்கோளாக இருந்தது.

விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இதழ்கள்

1882இல் ஜி.சுப்பிரமணியம் என்பவரால் வார இதழாகத் தொடங்கப்பெற்ற "சுதேசமித்திரன்" 1889-இல் நாளிதழாக மாறியது. 1904-இல் மகாகவி பாரதியார் சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்தார். தமிழக மக்களின் துயில் நீக்க, புரட்சிகரமான கருத்துகளாலும் சுவைமிகு உரைநடையாலும் சுதேசமித்திரன் புதுப்பொலிவோடும் வலுவோடும் வெளிவந்தது.

மகாகவி பாரதியார், 1907-இல் "இந்தியா" என்ற தமிழ் மாத இதழையும், "பால பாரதம்" என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார். இதன்மூலம் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வை வளர்த்தார். 1917-இல் திரு.வி.க. அவர்கள் "தேசபக்தன்" என்னும் நாளிதழைத் தொடங்கினார். சுதேசமித்திரனுக்குப் பிறகு தமிழ் மண்ணில் விடுதலை வேட்கையின் வித்தாய் விளங்கிய இதழ் இதுவே. இதைத் தொடர்ந்து நவசக்தி, திராவிடன், தமிழ்நாடு, ஜெயபாரதி, சுதந்திரச்சங்கு, ஜனசக்தி போன்ற இதழ்களும் தோன்றி மக்களிடையே விடுதலை வேட்கையை ஏற்படுத்தின.

விடுதலைப் போரில் தேசிய இதழ்கள்

இந்தியா, ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்தபோது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மக்களை ஒன்று திரட்டி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டெடுக்கவும் போராட்டம் செய்த தலைவர்களுக்கு இதழ்கள் உறுதுணையாக இருந்தன. திலகரின் "கேசரி" அரவிந்தரின் "வந்தே மாதரம்" சுவாமி விவேகானந்தரின் "சகோதரர்" போன்ற இதழ்கள் உரிமை வேண்டித் தொடர்ந்து குரல் கொடுத்தன.

அதன் பின், அண்ணல் காந்தியடிகளின் சுதந்திரப் போராட்டங்கள் பல புரட்சிகரமான

மாற்றங்களை ஏற்படுத்தின. அண்ணலின் அரசியல் நுழைவு, இதழ்களின் வளர்ச்சியில் இன்றியமையாத இடத்தைப் பெற்றது. அவர் தென் ஆப்பிரிக்காவில் "இந்தியன் ஒபினியன்" இதழையும் நம் நாட்டில் "யங் இந்தியா", "ஹரிஜன்", "நவஜீவன்" ஆகிய இதழ்களையும் அறத்தோடும் தரத்தோடும் நடத்தி வந்தார்.

1942இல் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்திற்குப் பின்னர், பெரும்பாலான இதழ்கள் தேசிய இயக்கத்தோடு ஒன்றிணைந்தன. இந்திய மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்த்தன. இதன் விளைவாக, நாட்டு மக்கள் அந்நியர்களை நாட்டைவிட்டு விரட்டும் முயற்சியில் பல போராட்டங்களை நடத்தி விடுதலை பெற்றனர்.

விடுதலை இந்தியாவில் இதழ்கள்

சிறையிலிருந்து விடுபட்ட பறவையைப்போல, இந்திய மக்களின் இதயங்களும் சிறகடித்துப் பறக்கத் தொடங்கின. இதயங்கள் மட்டுமல்ல, இதழ்களும் கருத்துச் சுதந்திரம் பெற்றன. அடிமை இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் அடக்குமுறையை எதிர்த்துச் சில இதழ்களே வெளிவந்தன. விடுதலைக்குப் பின் எண்ணற்ற இதழ்கள் தோன்றிச் சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கின.

இதழ்கள் நாட்டுநடப்புகளையும் அறிவுசார் செய்திகளையும் அரசின் செயல்பாடுகளையும் மக்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கோடு வெளிவருகின்றன. சமுதாயத்தில் நடக்கும் சீர்கேடுகளைக் கண்டறிந்து வெளியிடுவதன்மூலம் சமுதாயத்தை நெறிப்படுத்த அவை துணைபுரிகின்றன. சமுதாயத்தின் பல எதிர்ப்புகளைத் தாண்டி நடுநிலையோடு செய்திகளை வெளியிட்டு, நாட்டு மக்களின் வளமான வாழ்விற்கான அடித்தளத்தை அமைப்பதில் இதழ்களின் பணி இன்றியமையாததாகும்.

சமுதாய முன்னேற்றத்தில் இதழ்களின் பங்கு

மக்கள் ஒன்றாய்க் கூடி வாழும் அமைப்பே சமூகம் ஆகும். அது மொழி, இன, அரசியல் தொடர்புகளினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. அத்தகைய சமூகத்தின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொளிக்கும் கண்ணாடியாய் இதழ்கள் விளங்குகின்றன. இதழ்கள் அடிமையாய் இருக்கும் நாடுகளின் விடுதலைக்கு வித்திடுவதுடன், விடுதலை பெற்ற நாடுகளுக்கு மக்களாட்சிக் காவலனாகத் திகழ்கின்றன. மேலும், சமுதாயத்தில் நிகழும் குற்றங்களையும், ஊழல்களையும் அச்சமின்றி எடுத்துரைத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இதழ்கள் பெருந்தொண்டு ஆற்றுகின்றன.

மொழி வளர்ச்சியில் இதழ்கள்

தமிழ்மொழியின் வளர்ச்சியில், இதழ்களின் பங்கு அளப்பரியது. எழுத்துருவாக்கம், புதுமையாக்கம், கலைச்சொல் படைத்தல் போன்றவற்றிற்கு இதழ்கள் பெருந்துணை புரிகின்றன. தொடக்கக்கால இதழ்களில் பிறமொழி கலந்தே எழுதிவந்தனர். பின்னர் வந்த இலக்கிய இதழ்களும் தனித்தமிழ் இயக்க இதழ்களும் பிறமொழிக் கலப்பின்றி வெளிவந்தன. தமிழ் இதழியலில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்கிய பெருமை திரு.வி.கலியாண சுந்தரனாரையே சாரும். அவரின் இதழ்களில் கலப்பில்லாச் செந்தமிழ், சிறப்போடு வளர்ந்து வந்தது. புதுப்புதுத் தமிழ்ச் சொற்கள் உலா வந்தன. தமிழ் உரைநடை வரலாற்றில் அவரது நடை குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்ந்தது.

தனித்தமிழ் இயக்க இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. மறைமலை அடிகளின் 'அறிவுக்கடல்', சி.பா.ஆதித்தனாரின் 'தமிழன்', 'தமிழ்க்கொடி' பாரதிதாசனின் 'குயில்' பெருஞ்சித்திரனாரின் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' போன்றவை தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய இதழ்களாகும்.

தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தோடு வெளிவந்த பெரியாரின் 'விடுதலை', 'குடியரசு' ஆகிய இதழ்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின.

பண்பாட்டு வளர்ச்சியில் இதழ்களின் பங்கு

பண்பாட்டை உருவாக்குவதிலும் இதழ்கள் ஆற்றல் வாய்ந்தனவாக உள்ளன. வ.வே.சு-வின் பாலபாரதம் என்னும் இதழ் விடுதலை உணர்வை உண்டாக்கியது. பாரதியாரின் 'இந்தியா' இதழில் விடுதலை உணர்வு, சமூகச்சீர்திருத்தம், பண்பாடு ஆகியன வலியுறுத்தப்பட்டன. மணிக்கொடி இதழ் சமூகச் சீர்திருத்தம், தமிழ் மொழி மேம்பாடு ஆகியவற்றை வெளியிடுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு விளங்கியது. சுதந்திரச் சங்கு, ஜெயபாரதம், லோகோபகாரி போன்ற இதழ்கள் பண்பாட்டுப் பாதுகாப்பு, தமிழ் மறுமலர்ச்சி ஆகியவற்றிற்காகப் பாடுபட்டன.

கல்வி மறுமலர்ச்சி

ஒரு நாட்டின் அறிவு வளத்தை உறுதிசெய்வது அந்நாட்டில் வழங்கப்படும் கல்வியே. அக்கல்வியை வளர்ப்பதற்காகத் தமிழ்க்கல்வி (1897), முதியோர்கல்வி (1951), கல்விக்கதிர் (1969) போன்ற இதழ்கள் தொடர்ந்து பாடுபட்டுவந்தன. மருத்துவத்திற்காக ஆயுர்வேத பாஸ்கரன், ஆரோக்கியம், மூலிகை மணி, மூலிகை ரகசியம் முதலான இதழ்கள் வெளிவந்தன. தற்போது வார மாத இதழ்களிலும் நோய்கள் பற்றியும், நோய்க்கான மருத்துவம் பற்றியும், மருத்துவக் குறிப்புகளும் கட்டுரைகளும் வெளிவருகின்றன.

அறிவியல் முன்னேற்றம்

ஒவ்வொரு நாளும் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இத்தகைய புதிய கண்டுபிடிப்புகளையும் ஆராய்ச்சிகளையும் அறிவியல் இதழ்கள் உடனுக்குடன் வெளியிடுகின்றன. எதையும் ஏன்? எப்படி? எதற்கு? என்னும் வினாக்களுக்கு விடை கிடைத்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளும் அறிவியல் பார்வையை இவ்விதழ்கள் வளர்க்கின்றன.

தமிழில் புகழ்பெற்ற அறிவியல் இதழான 'கலைக்கதிர்' 1948முதல் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் குறித்து நுட்பமாகவும் விரிவாகவும் அமைந்த கட்டுரைகளை அவ்விதழ்

அறிவோம் தெளிவோம்

பேரரசர் அசோகர் பொ. ஆ. மு. 262இல் மக்களுக்கு வெளியிட்ட அரசு செய்தி



'பிரியமான மன்னர் பியாதசி இவ்வாறு சொல்கிறார்: 'இதற்குமுன் அரசாங்க வேலைகளைச் சரியாகக் கவனிக்க முடியாமலும், சரியான நேரத்தில் சரியான தகவல்களைப் பெற முடியாத நிலையும் இருந்து வந்தது. அதனால், இந்தப் புதிய ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மாமன்னராகிய நான் எந்த நேரத்திலும், உணவு சாப்பிட்டுக்கொண்டு இருந்தாலும், தேரில் பயணம் செய்துகொண்டு இருந்தாலும், வேறு எந்த இடத்தில் எப்படி இருந்தாலும், அரசாங்க அலுவலர்கள் மூலம் மக்களின் பிரச்னைகள் தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் எனக்கு அனுப்பப்பட வேண்டும். கொடை மற்றும் நலத் திட்டப் பொது அறிவிப்புகள் தொடர்பாக நான் வாய் வார்த்தைகளாகப் பிறப்பித்து இருக்கும் ஆணைகள் தொடர்பாக யாருக்காவது ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அது தொடர்பான தகவல்கள் உடனடியாக மன்னராகிய என்னிடம் வந்து சேரவேண்டும். இது என்னுடைய ஆணை. வேலையைக் கவனமாகச் செய்வதிலும் அதற்காகக் கடுமையாக உழைப்பதிலும் போதும் என ஒரு நாளும் நான் திருப்தி அடைவது இல்லை. மக்கள் அனைவரது நலத்தையும் பேணுவதை என்னுடைய கடமையாக நினைக்கிறேன். அதைச் சிறப்பாகச் செய்ய நான் கடும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது, ஆகவே, வேலைகளைத் தாமதமின்றி உடனே முடிக்க வேண்டும். மக்களின் நலத்தை முன்னெடுப்பதைவிட முக்கியமான வேலை ஏதும் இல்லை. இது தர்ம ஆணை.

வெளியிடுகிறது. 'துளிர்' என்னும் அறிவியல் இதழ்சிறுவர்களிடையேஅறிவியல்ஆர்வத்தைத் தூண்டும் வகையில் செய்திகளையும், செயல்பாடுகளையும் வெளியிட்டு வருகிறது. 'கம்ப்யூட்டர் உலகம்', 'தமிழ் கம்ப்யூட்டர்' போன்ற கணினி இதழ்கள் கணினி அறிவை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பல புதிய தொழில்நுட்பச் செய்திகளைத் தாங்கி வெளிவருகின்றன.

வேளாண்மை

மனிதர் உட்பட அனைத்து உயிரிகளும் வேளாண்மையை நம்பியே உயிர் வாழ்கின்றன. அப்படிப்பட்ட வேளாண்மைத் துறையில் ஏற்படும் மாற்றங்களை மக்கள் தெரிந்துகொள்வது மிகவும் தேவையான ஒன்றாகும். பெரும்பாலும் வேளாண்மைத் தொழில் செய்வோர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் புரிந்துகொள்ளும் எளிய நடையில் வேளாண்மை இதழ்கள் வெளிவருகின்றன. உற்பத்தியைப் பெருக்குதல், பயிர்ப் பாதுகாப்பு பற்றிய கட்டுரைகள் இவ்விதழ்களில் வெளிவருகின்றன.

பெண்ணுரிமை

பெண்கல்வியும், கைம்பெண் மறுமணமும் மறுக்கப்பட்ட காலத்தில் பெண்களுக்காக இதழ்கள் பெரிதும் போராடின. இராஜாராம் மோகன்ராய் 'சம்பத் கௌமுதி' என்ற இதழில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து வன்மையாகக் கண்டித்து எழுதினார். குறிப்பாகப் பெண்கள் உடன்கட்டை ஏறுவதைத் தீவிரமாக எதிர்த்தார். இவரின் முயற்சியால் 1829-இல் வில்லியம் பெண்டிங் பிரபு

உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நீக்கினார். தற்போது அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கக் கோரி இதழ்கள் வெளிவருகின்றன. மேலும், பெண்களுக்கென்றே இதழ்கள் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது.

குழந்தை நலம்

வளமான நாடு, நலமுடன் வளரும் குழந்தைகளாலேயே உருவாகும். எனவே, குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் சிறுவர் இதழ்கள் பல வெளிவருகின்றன. அவற்றில் வெளியாகும் படக்கதைகள், விடுகதைகள், குழந்தைகளின் ஓவியங்கள் ஆகியன அவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கின்றன.

இவ்வாறு அன்றாட நிகழ்வுகளின் பதிவுகள், அறிஞர்களின் படைப்புகள், கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் செயல்பாடுகள், தொழில், பொருளாதார வளர்ச்சி நிலைகள், சுகாதாரம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு நடைமுறைகள் முதலிய அனைத்து வாழ்வியல் கூறுகளையும் வெளியிடுவதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கான மிகச்சிறந்த காரணிகளாக இதழ்கள் விளங்குகின்றன.

அறிவோம் தெளிவோம் — தமிழ்ச் சிற்றிதழ்கள்

ஒரு குறிப்பிட்ட குழுவிலிருந்து குறிப்பிட்ட வாசகர்களை நோக்கி வலிமையான சமூக நோக்கங்களோடு வெளியிடப்படும் இதழ்களே சிற்றிதழ்கள். இவை மாத, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டு இதழ்களாக வெளிவருகின்றன. தமிழ் இலக்கியப்போக்கில் மாற்றங்களைச் சிற்றிதழ்களே ஏற்படுத்தியுள்ளன. ஒரு வணிக இதழ், தனக்குச் சார்பான நிலையில் அமைந்த பொழுதுபோக்கு எழுத்துகளை மட்டும் வெளியிடும் நிலையில் சிற்றிதழ்கள், மக்களின் வாழ்வியல் பதிவுகளைத் தாங்கி வரும் சமூக மாற்றத்திற்கான கருத்தாயுதங்களாகத் திகழ்கின்றன. தமிழின் புகழ்பெற்ற சிற்றிதழ்களுள் சில... மணிக்கொடி, கிராம ஊழியன், கலாமோகினி, எழுத்து, கசடதபற, ழ, வானம்பாடி, இலக்கிய வட்டம், சூறாவளி, சலங்கை, கலைமகள், சுபமங்களா, கணையாழி, நிகழ்.

கட்டுரை

ஊடகவியலில் தமிழ் ஆளுமைகள்

பாரதியார் (1882–1921)

கருத்துப்படம்

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் புதுமைகளைத் தொடங்கி வைத்த பாரதியார், இதழியலிலும் புத்தெழுச்சியை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

கருத்துப்படம்

அன்றாடம் நடைபெறும் அரசியல் சமூக நிகழ்வுகள் மீதான எள்ளலும் நகைச்சுவையும் நிறைந்த திறனாய்வுக் கருத்தின் வரைகோட்டு ஓவியமே கருத்துப்படம். கருத்துப்படம் என்பதும் ஒரு தலையங்கமாகவே கருதப்படுகின்றது. பல சொற்கள் வெளிப்படுத்துவதை ஒரு கருத்துப்படம் சில கோடுகளின்வழி எளிதில் உணர்த்திவிடுகின்றது. ஆங்கிலத்தில் 'கார்ட்டூன்' (cartoon) என்று அழைக்கப்படும் இது தமிழில் கருத்துப்படம், விகடசித்திரம், வேடிக்கைசித்திரம், கேலிச்சித்திரம், விளக்கப்படம், கூடார்த்த படம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இதனைப் பாரதியார் 'விகடசித்திரம்' என்று குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் கருத்துப்படம்

1850 ஆம் ஆண்டு முதல் தில்லியிலிருந்து வெளியான, 'தில்லி ஸ்கெட்ச் புக்' (Delhi Sketch Book), என்ற இதழ்தான் இந்தியாவில் முதன்முதலில் கருத்துப்படங்களை வெளியிட்ட இதழாகும். வங்காளத்திலிருந்து வெளியான அமிர்த பஜார் பத்திரிகா, தில்லியிலிருந்து வெளியான 'இந்தியன் பஞ்ச்', 'அவத் பஞ்ச்' ஆகிய இதழ்களும் தொடக்க கால கருத்துப்படங்களுக்காக அறியப்படுகின்றன.

பாரதியின் கருத்துப்படம்

தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா' (1907) இதழே ஆகும். இதனைப் பாரதி, "புதிய அபிவிருத்தி" என்ற கட்டுரையில் (13.3.1909) "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகையொன்றுதான் விகடசித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்" என்று குறிப்பிடுகின்றார். மேலும், அவர் "அடுத்த வாரம்முதல் தலைப்பக்கத்தில் உள்ள ஒரு சித்திரம் மட்டுமே அன்றி, பக்கத்துக்குப் பக்கம் உள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு ஆங்காங்குச் சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம்" என்றும் குறிப்பிடுகிறார்.

கருத்துப்படங்களின் வழியாகச் செய்திகளை எளிமையாகக் கொண்டுசெல்ல முடியும் என்று பாரதி நம்பினார்.

மார்ட்டின் லூதர்கிங், தமது புரட்சிக் கருத்துகளை ஜெர்மனியில் பரப்புவதற்குக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தினார். அதேபோன்று, பாரதியும் தமது கருத்துப்படங்கள்வழி அன்றைய அரசியல், சமூகச் சூழல்களையும் சுட்டிக்காட்டி விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பங்குபெறவேண்டும் என்கிற உணர்வினை ஏற்படுத்தினார்.இக்கருத்துப்படங்களுக்காகவும், கட்டுரைகளுக்காகவும் 'இந்தியா' இதழுக்கு ஆங்கிலேய அரசு தடை விதித்ததிலிருந்து அவை மக்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வினை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது.

வெள்ளையரின் சுரண்டலை வெளிக்காட்டிய படங்கள்

ஆங்கிலேயர்கள் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய்க்கும் குறையாமல் இந்தியாவிலிருந்து உறிஞ்சிவிடுகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரம் ஒன்றையும் (இந்தியா இதழ் - 8.9.1906). இந்தியர்களை எலும்பும் தோலுமாகவும் வெள்ளையர்களைச் செல்வச்செழிப்புடனும் அமைத்து, இந்தியாவின் நிலையை விளக்கியிருந்தார்.



சுதந்திர விடியல்

எங்கு உரிமை மறுக்கப்படுகின்றதோ அங்குப் புரட்சி எழும் என்ற கருத்திற்கேற்ப ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளால் இந்தியாவில் விடுதலை உணர்வு மேலோங்கியது. கடுமையான சட்டங்கள் என்ற கோழி, குப்பைமேட்டிலிருந்து கூவுகின்றது. இக்கோழியின் குரலைக் கேட்டவுனே 'சுதந்திர சூரியன்' உதிப்பது போன்ற (19.12.1908) சித்திரம் வரைந்தார். இவ்வாறு சித்திரங்களின்வழி, மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டினார்.

பொருளாதாரம் சார்ந்த படங்கள்

பாரதியார் ஒரு பன்முக ஆளுமைத் தன்மை கொண்டவர். அவருடைய பொருளாதார அறிவு வியக்கத்தக்கது. 'பஞ்சம்' என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, அதில் பஞ்சத்திற்குக் காரணம் பருவநிலை மாற்றம் இல்லை. இந்திய உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

ஆங்கிலேய அரசின் வரிவிதிப்புச் சார்ந்து 30.03.1907-இல் 'இந்திய யானையும் ஸர்க்கார்ப் பாகனும்' என்னும் தலைப்பில் வெளியான கருத்துப்படம் மக்களிடையே பெரிதும் பேசப்பட்டது. அமைதியும், பலமும் கொண்ட இந்தியா என்ற யானையின்மீது சுங்கவரி, நிலவரி, தொழில்வரி, வருமான வரி முதலிய சுமக்க முடியாத வரிச்சுமைகளை ஏற்றி, அதன் கழுத்தின்மீது அமர்ந்து ஜான் புல் துரை (ஆங்கிலேய அரசு) சவாரி செய்வதுபோல

இக்கருத்துப்படம் அமைந்துள்ளது. இதில் சிறு வரிச்சலுகையாக உப்பு மூட்டையைத் தூக்கி எறிந்துவிட்டுப் பெரிய சுமையைக் குறைத்துவிட்டதாக ஆங்கில அரசு மகிழ்வதாகவும், யானை தன் மனத்திலே என்ன எண்ணம் வைத்திருக்கிறதோ யார் அறிவார்? என்ற வினாவையும் பாரதி படவிளக்கத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளமை அவரது நுட்பமான வெளிப்பாட்டு உத்தியைக் காட்டுகிறது.





சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்

மிதவாதிகளை எள்ளி நகையாடுதல் போலவும், ஆங்கிலேய அரசை விமர்சிப்பது போலவும் கருத்துப்படங்கள் அமைந்திருந்தன. நாடு விரைந்து சுதந்திரம் அடைய போராடியவர்களுக்கு முட்டுக்கட்டை போட்ட மிதவாதிகளைப் பாரதி தயக்கமின்றி எதிர்த்து எழுதினார். சித்திரம் ஒன்றில் அவர்களைச் 'சுதேசி ஒளிக்கு அஞ்சும் ஆந்தைகள்' என்று பழித்தார். இவர்களை நிதானக் கட்சியினர், பழைய கட்சியினர் என்று அழைத்தார். அத்துடன் உலக அரசியல் நிகழ்வுகளைக் கூறியும் மிதவாதிகளை விமர்சித்தார். ''கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி'' (*23.3.1907*) என்று அமெரிக்கா, ஜப்பான் நாடுகளின் அரசியல் சூழ்ச்சிகளைப் படம் பிடித்துக்காட்டியுள்ளார்.



சுதேசிக் கப்பலின் கருத்துப்படம்

பாரதியின் கருத்துப்படங்களில் தமிழகத்தைக் குறித்த படங்கள் மிகவும் குறைவு. இதற்குக் காரணம், பாரதியின் கனவு தேசியமே. ஆனால், சுதேசிக்கப்பலின் தேவையை உணர்ந்து நான்கு படங்களை வரைந்துள்ளார். இதில் மூன்று படங்கள் சுதேசிக்கப்பலுக்கு உதவுவது நமது கடமை என்பதனை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளது. ஒன்றில் பாரதமாதா தம் மக்களிடம் "இதற்கு உதவுங்கள்" என்று கூறுவதாக அமைத்திருக்கின்றது.

பாரதியின் கருத்துப்படக் கனவு

முழுவதும் கேலிச்சித்திரம் அடங்கிய இதழையும் வெளியிடும் எண்ணம் பாரதிக்கு இருந்தது. மேலும், 'இந்தியா' இதழில் முதல் பக்கச் சித்திரம் மட்டுமல்லாது ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள முதன்மை நிகழ்வுகளை விளக்கும் பொருட்டும் சித்திரம் வரைவதற்குத் தாம் எண்ணியுள்ளதாகவும் பாரதி கூறுகிறார். (இந்தியா இதழ்-13.3.1909).

கருத்துப்படத்தின் வெற்றி

கருத்துப்பட வடிவத்தினை இவ்வளவு வெற்றிகரமாகப் பயன்படுத்திக் காட்டியவர் பாரதியே. கருத்துப்படங்களுக்காகவே 'இந்தியா' இதழினை அனைவரும் விரும்பிப் படித்தனர். பாரதியின் கருத்துப்படங்களைப் பற்றிப் பாரதிதாசன் எழுதும்போது, "அந்தச் சித்திரம்தான் முதலில் என்னை அவர்தம் பரிவாரங்களின் பக்கமாக இழுத்தது. அந்தச் சித்திரம்தான் என்னை இன்னாரென்று எனக்குக் கூறிற்று" என்று கூறுவதிலிருந்து, பாரதியின் கருத்துப்படத்திற்குக் கிடைத்த வெற்றியினை நாம் அறியலாம்.

அறிவோம் தெளிவோம்

இந்திய அளவிலான இதழியல் படிப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களுள் சில.....

1. வெகு மக்கள் தொடர்புக்கான இந்திய நிறுவனம், புது தில்லி. (Indian Institute of Mass Communication. New Delhi.)
2. இதழியல் மற்றும் நவீன ஊடகங்களுக்கான இந்திய நிறுவனம், பெங்களூரு (Indian Institute of Journalism and News Media, Bangalore.)
3. முதுரா தகவல் தொடர்பு நிறுவனம், அகமதாபாத் (Mudura Institute of Communications, Ahamadabad.)
4. ஆசிய இதழியல் கல்லூரி, சென்னை. (Asian College of Journalism, Chennai.)
5. சிம்பியோசிஸ் தகவல் தொடர்பு நிறுவனம், புனே. (Symbiosis Institute of Mass Communication. Pune.)
6. சேவியர் தகவல் தொடர்பு நிறுவனம், மும்பை (Xavier Institute of Communication, Mumbai.)
7. எ.ஜெ. கித்வாய் மக்கள் தொடர்பு ஆராய்ச்சி, ஜமியா, புதுதில்லி. (AJ Kidwai Mass Communication Research, Jamia, New Delhi.)
8. மனோரம்மா தகவல் தொடர்புப் பள்ளி, கோட்டயம், கேரளா. (Manoramma School of Communication, Kottayam, Kerala)
9. இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், புனே. (Film and Television Institute of India, Pune.)
10. டைம்ஸ் இதழியல் பள்ளி, புதுதில்லி. (Times School of Journalism, New Delhi.)
11. திரைப்படக் கல்லூரி, அடையாறு, சென்னை.
12. அண்ணா பல்கலைக் கழகம், சென்னை (ஊடக அறிவியல் துறை)
13. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.
14. ஸ்யாம் இந்திய அரசு நிறுவனம் (இணையவழிக் கல்வி)

பெரியார் (1879 – 1973)

எழுத்துச் சீர்திருத்தம்

பெரியாரின் வாழ்க்கை, சமுதாயச் சீர்திருத்தத்திற்கான வரலாறாகும். சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழவேண்டும் என்பதே பெரியாரின் குறிக்கோளாக இருந்தது.

அவரது குறிக்கோள்களை நிறைவேற்ற, ஆட்சியில் பங்கேற்காமல் ஆட்சியாளர்களை இயக்கிய ஆளுமையாகத் திகழ்ந்தார். அவரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு; ஒன்று மேடைப்பேச்சு; மற்றொன்று எழுத்து. மேடைப்பேச்சு, அவரது நேரிடையான களப்பணிக்கு உதவியது. எழுத்து, அவரது கொள்கைகளை மிகப்பெரிய வீச்சில் மக்களிடையே கொண்டு சென்றது. தமது எழுத்துகளை வெளியிடத் தாமே இதழ்களைப் பொறுப்பேற்று நடத்தியதன்மூலம், அவர் ஒரு புரட்சிகரமான இதழாளராகவும் அறியப்படுகிறார்.

தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் பெரியாருடைய இதழ்ப்பணி முதன்மையானது. எதனையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, பெரியார் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்.

பெரியாரும் இதழ்ப்பணியும்

பெரியார், நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைப்பற்றி மிக விரிவான பரப்புரைகளை மேற்கொண்டார். அவரின் சுயமரியாதை, சமதருமம், பெண்ணுரிமை, வகுப்புரிமை போன்ற பரப்புரைகளை வெளியிட எந்த இதழும் முன்வரவில்லை. எனவே, தெளிவும் திட்பமும் உடைய நோக்கத்தினை மக்களிடையே கொண்டுசெல்லவேண்டும் என்று விரும்பிய பெரியார் நாளிதழ் ஒன்றைத் தொடங்க எண்ணினார். *1922*இல் கோயம்புத்தூர்



சிறையில் தம் நண்பர் தங்கப்பெருமாளோடு இருக்கும்போது, 'குடி அரசு' என்னும் பத்திரிகையைத் தொடங்க முடிவு செய்தார். அதன்படி *02.05.1925* முதல் 'குடி அரசு' வார இதழைத் தொடங்கினார்.

*1935*இல் நீதிக்கட்சிக்காக, வாரம் இருமுறை ஏடாகத் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை', சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்கு வந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது. பெரியார் பல்வேறு இதழ்களில் பணியாற்றினாலும் 'குடி அரசு' இதழும்,

PHONE NO. 86977

விடுதலை

VIDUTHALAI

ESTD: 1935

தமிழ்நாடு அசெம்பிளியில் பெரியார் கருத்து எதிரொலி

'விடுதலை' இதழுமே அவரின் முழுமையான மனக்கருத்தை வெளிப்படுத்தின.

தாம் பகுத்தறிந்து கண்டதைப் பிறருக்குச் சொல்லுதல், இதழ்களின் மூலம் கொள்கையை விளக்கி ஒத்த கருத்துடைய மக்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் குடி அரசு, விடுதலை இதழ்களில் எழுதி வந்தார். மேலும் புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் (ஆங்கிலம்) ஆகிய இதழ்களையும் நடத்தினார்.

பெரியார் குடி அரசு, விடுதலை ஆகிய இதழ்களில் பெண் விடுதலை, இந்தியச் சமூக அமைப்பு, அதில் பிற்படுத்தப்பட்டோரின் நிலை, சுயமரியாதையோடு கூடிய அரசியல் சுதந்திரம், சமயம் சார்ந்த கருத்தாடல்கள், பொருளியல் கொள்கை போன்றவற்றை எழுதியதன் மூலம் மிகச்சிறந்த எழுத்தாளராகவும் அறியப்படுகிறார்.

R. No. M. 2041 "KUDI-ARASU" தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

(20—11—1938)

தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு.

தலைவர் திருவரங்க நீலாம்பிகை அம்மையார் தலைமைப்பேருரை.

"நான் சாதாரணமாக ஒரு வெறும் பேச்சாளியல்ல அல்லது விஷயங்களை எல்லாம் படித்து அறிந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படியான படிப்பாளியும் அல்ல நான் ஒரு கருத்தாளி. உலகத்தைப் பார்த்து, எப்படி நடந்தால் அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லது என்று நான் சொந்தமாகக் கொண்ட கருத்தினைக் கூறிவருபவன்" என்றும் "என்னைப் பொருத்த வரையிலும், நான் என்றும் கட்சிக்காரனாக இல்லை. எப்பொழுதும் நான் ஒரு கொள்கைக்காரனாகவே இருந்தேன்" என்றும் தனது விடுதலை இதழில் பெரியார் எழுதியுள்ளார். இதிலிருந்து அவர் மக்களிடம் தாம் சிந்தித்த கருத்துகளை அவர்களின் நலம் சார்ந்து கூறுபவர் என்பது நமக்குப் புலனாகிறது.

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்

உலகில் நடைமுறையில் உள்ள பெரும்பாலான மொழிகள் ஓசை, குறியீடு, வடிவம், எழுத்துகள் குறைப்பு, தேவையான எழுத்துகள் சேர்ப்பு ஆகிய செயல்களால் தொடர்ந்து மாறுதல் அடைந்துகொண்டே இருக்கின்றன. வளர்ந்து வரும் நவீன காலகட்டத்தின் தேவைக்கேற்பத் தமிழ் மொழியில் குறிப்பாக, அதன் எழுத்துருக்களில் மாற்றங்கள் தேவை என்று பெரியார் கருதினார்.

தமிழைக் கற்போர் மற்றும் பயன்படுத்துவோர்க்கு எளிமையாகவும் சுமை இல்லாமலும் எழுத்துருக்கள் இருக்கவேண்டும். மேலும் தமிழை விரைவாகவும் வடிவ ஒழுங்கோடும் அச்சிடுவதற்கு எழுத்துருக்களில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையை அவர் வலியுறுத்தினார்.

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தப் பரிந்துரை

உயிர்மெய் எழுத்துகளான 18 எழுத்துகளிலும் ஒவ்வொன்றுக்கும் உள்ள இ-கரம், ஈ-காரம், உ-கரம், ஊ-காரம் ஆகிய நான்கு ஓசைகள் கலந்த எழுத்துகள் தனித்தனி வடிவத்தில் அதாவது கி, கீ கு, கூ என்றமைந்த முறையில் தனித்தனியாக (18 x 4) 72 எழுத்துருக்களாக இருந்து வருகின்றன.

இந்தத் தனித்தனி வடிவங்கள் தேவையில்லை அனைத்து உயிர்மெய் எழுத்துகளுடனும் ஆ-காரம், ஏ-காரம் ஆகிய ஓசைகளுக்கு ா, ே ஆகிய குறியீடுகளைச் சேர்த்து கா, கே என்று ஆக்கிக்கொள்வதுபோல கி, கீ கு, கூ ஆகிய ஓசைகளுக்கும் நாம் தனிப்பட்ட ஒரு குறியீட்டைச் சேர்த்துக்கொள்ள முடியும்.

எழுத்துக்காட்டாக ஜ, ஷ ஸ போன்ற வடமொழி எழுத்துகளோடு உ -கர, ஊ-கார ஓசைகளுக்கு கு, கூ போன்ற தனி எழுத்துகள்

இல்லாமல் உ-கரத்துக்கு ு என்ற குறியையும் ஊ-காரத்துக்கு ூ என்ற குறியையும் பயன்படுத்தி ஜு, ஜூ, ஷு, ஷூ, ஸு, ஸூ, ஹு, ஹூ என்றவாறு ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதுபோல் தமிழ் எழுத்துகளிலும் கி, கீ, கு, கூ போன்றவற்றோடு ு, ூ என்ற குறிகளைச் சேர்த்தால் அச்சில் 72 தனி எழுத்துகள் தேவையில்லை என்பதோடு தமிழ் கற்கும் மாணவர்களுக்கும் சுமை குறையும் என்று பெரியார் கூறியுள்ளார்.

பெரியார் நடைமுறைப்படுத்திய எழுத்துரு மாற்றம்

பெரியார்தாம்நடத்தியபகுத்தறிவுஇதழில் (30.12.1934) தாம் மேற்கொள்ளப்போகும்

பழைய வடிவம்	சீர்திருத்த வடிவம்	சான்று
ணா	ணா	அண்ணா - அண்ணா
ணை	ணை	அணை - அணை
ணொ	ணொ	மண்ணொடு - மண்ணொடு
ணோ	ணோ	கண்ணோடு - கண்ணோடு
லை	லை	தலை - தலை
ளை	ளை	களை - களை
றா	றா	சிறார் - சிறார்
றொ	றொ	மற்றொரு - மற்றொரு
றோ	றோ	காற்றோடு - காற்றோடு
னா	னா	மன்னா - மன்னா
னை	னை	வினை - வினை
னொ	னொ	என்னொடு - என்னொடு
னோ	னோ	என்னோடு - என்னோடு

எழுத்துரு மாற்றங்கள் குறித்து அறிவித்தார். அதற்கு அடுத்த இதழிலிருந்து அட்டவணையில் உள்ளபடி எழுத்துருக்களை மாற்றம் செய்து பதிப்பித்தார்.

டி.எஸ்.சொக்கலிங்கம் (1899 – 1966)

தலையங்கம்

1934இல் தினமணி நாளிதழ் தொடங்கப்பட்டபோது அதன் முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் டி.எஸ்.சொக்கலிங்கம். இவர், தமது தலையங்களுக்காகவும், கட்டுரைகள் மற்றும் கருத்துப்படங்களுக்காகவும் அறியப்படுகிறார். நாளிதழ்கள் என்பவை வீடு வீடாகச் சென்று விற்கும் பொருளாக இல்லாமல் மக்கள் முந்திச் சென்று வாங்கும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கருதினார்.

இதழாளராகவும் எழுத்தாளராகவும் விளங்க ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமையுடையவராய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தாக்கத்தை உடைத்தார். மக்கள் செய்யவேண்டியதைத் தலையங்கம் மூலம் உணர்த்தும் ஆற்றல் இவரின் எழுத்துகளில் இருந்தது.

மக்களாட்சி உரிமைகளைக் காக்கும் இதழியல் பணியில் வருமானம் குறைவாக இருந்தாலும் அதில் மகிழ்ச்சி கண்டார். காந்தி, தினமணி, தினசரி, ஜனயுகம், நவசக்தி போன்ற இதழ்களில் பணியாற்றினார். தம் நாளிதழ் வளர வேண்டும் என்பதைவிட மக்களைப்

பாதிக்கும் சிக்கல்கள் தீரவேண்டும் என்பதே இவரின் முதன்மை நோக்கமாக இருந்தது.

1934ஆம் ஆண்டு 'காந்தி' இதழில் பீகார் நிலநடுக்கத்தையொட்டி, 'சர்க்கார் எங்கே?' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதினார். இதனால், ஆங்கிலேய அரசு இவர் மீதும் இவ்விதழின் மீதும் தேசத்துரோகக் குற்றம்சாட்டி வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கில் முன்பிணை (முன்ஜாமின்) வழங்கப்படாததால் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்து வெற்றி பெற்றார். இவர் தினசரி என்ற நாளிதழில் 'ராஜபாட்டை' என்ற

தலைப்பில் எழுதிய அரசியல் சிந்தனைக் கட்டுரைகளும், 'ஊதல், உண்ணல், உறிஞ்சல்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எழுதிவந்த எழுத்தோவியங்களும் பரவலான வரவேற்பைப் பெற்றன.

லியோ டால்ஸ்டாயின் புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தார். இதழாளர்களுக்குப் பயன்படும் வகையில் ஆங்கில - தமிழ் அகராதியை உருவாக்கினார். விடுதலை போராட்டக் காலத்தில் டி.எஸ். சொக்கலிங்கத்தின் தலையங்கங்களும், கட்டுரைகளும் வீறுமிக்க வகையில் அமைந்து மக்களிடையே விடுதலைவேட்கையைத் தூண்டின. தமது தலையங்கங்களுக்காகத் தினமணி புகழ்பெற்றிருப்பதற்கு மூலகாரணமாக அமைந்தவர் டி.எஸ்.சொக்கலிங்கம் என்றால் மிகையாகாது.

ஆங்கிலேய அரசைப் பணியவைத்தவர்

குற்றாலம் அருவியில் வெள்ளையரைத் தவிர வேறு யாரும் குறிப்பிட்ட நேரத்தில் குளிக்கக்கூடாது என்ற அறிவிப்புப் பலகையைத் தொங்கவிட்டிருந்தார்கள். அந்தப் பலகையை எடுக்க வேண்டுமென்று சொக்கலிங்கம் அறப்போர் நடத்தினார். இருபதே வயது நிறைந்திருந்த டி.எஸ். சி.யின் அறப்போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு வலுத்தது. நாடெங்கும் இந்த அறப்போராட்டச் செய்தி பரவியது. "தேச பக்தன்" நாளிதழ், இளைஞர் சொக்கலிங்கத்தின் போராட்டத்தை ஆதரித்து எழுதியது. இக்கிளர்ச்சிக்கு ஆங்கிலேய அரசு பணிந்தது. உடனே அந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டது.

சி.பா. ஆதித்தனார் (1905 – 1981)

மொழிநடை

ஒரு செய்தித்தாள் என்பது, மெத்தப் படித்தவர்களுக்கு மட்டுமல்லாது சாதாரண வாசகனுக்கும் சென்று சேர வேண்டுமென்றால் அது எளிய மொழிநடையில் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். பேச்சுத்தமிழைக் கொச்சை நீக்கி, மக்களின் மொழியில் எழுதவேண்டும் என்பது, ஆதித்தனார் தமது நாளிதழ்களுக்காக ஏற்படுத்திய பொன்விதி.

ஜவஹர்லால் நேருவின் வியப்பு

1951-52இல் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தினத்தந்தி நாளிதழ் 3 இலட்சத்திற்கும் மேலாக விற்பனையானது. பத்திரிகைப் பதிவாளரின் அறிக்கையில் இந்த விவரங்களைப் படித்த நேரு வியப்படைந்து, 'தமிழ் ஒரு மாநில மொழி, அப்படியிருந்தும் இந்தியப் பத்திரிகைகளைவிடத் தமிழ்ப் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாகின்றன'. இதற்குக் காரணம் என்ன என்று அலுவலர்களிடம் விசாரித்தார். "தினத்தந்தி, ராணி ஆகிய சி.பா. ஆதித்தனாரின் இதழ்கள் அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய பேச்சுத் தமிழில் நடத்தப்படுகின்றன. ஆகவே அவை அதிகமாக விற்பனை ஆகின்றன" என்று நேருவிடம் தெரிவித்தார்கள்.

அதன்பின் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டில் இதுபற்றி நேரு குறிப்பிடும்போது, "தமிழ்ப் பத்திரிகைகள் எளிய நடையில் எழுதப்படுவதால் அதிகமாக விற்பனையாகின்றன. இந்தியப் பத்திரிகைகள் கடினமான இலக்கியநடையைக்கையாள்வதால் குறைவாக விற்பனையாகின்றன. அவர்கள் எழுதுவதை என்னால்கூடப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் கடின நடையைக்

படிப்போம் சுவைப்போம்

சி.பா. ஆதித்தனாரின் பத்திரிகை எழுத்தாளர் கையேட்டிலிருந்து ...

கள்ள ரூபாய் நோட்டுச் செய்தியை எழுதும்போது 'கத்தை கத்தையாக நோட்டு அச்சடிப்பு' என்றும் அரசாங்கம் நோட்டு அச்சடிக்கும்போது 'கோடிக்கணக்கில் ரூபாய்நோட்டு அச்சடிப்பு' என்றும் சொல்லவேண்டும்.

மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை ஆஸ்பத்திரியைப் 'பெரிய ஆஸ்பத்திரி' என்று எழுதவேண்டும்.

மாஜி மந்திரி சேலம் ஜில்லாவுக்கு வருகை தந்தபோது இந்தப் பிரச்சினை சீக்கிரமே விவாதிக்கப்படும் என்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கக்கூடாது என்றும், பாரபட்சமற்ற லெவி உத்தியோகஸ்தர்களுக்குப் போலிஸ் பந்தோபஸ்து அளிக்கப்படும் என்றும் சொன்னார்.

மேலே குறிப்பிட்டிருக்கும் தொடரை ஆதித்தனாரின் கையேட்டின்படி திருத்தினால், 'முன்னாள் அமைச்சர் சேலம் மாவட்டத்திற்கு வந்தார், இந்தச் சிக்கல் விரைவில் தீர்ந்துவிடும், கடையடைப்பு கூடாது. ஒருதலையாக இல்லாமல் கொள்முதல் அதிகாரிகளுக்குக் காவல் பாதுகாப்புத் தரப்படும்.' இவ்வாறு அவர் சொன்னார் என்று மாறும்.

செய்வினையில் எழுத வேண்டும்.

'காரால் மோதப்பட்டு கிழவி சாவு' – தவறு 'கார் மோதி கிழவி சாவு' – சரி

ஒரு வாக்கியத்தை எந்த இடத்தில் நிறுத்திப் படித்தாலும் தவறான பொருள் கொடுக்கும்படி எழுதக்கூடாது.

'உணவு அமைச்சர் மண்டையைப் பிளக்கும் வெயிலில் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்.' – தவறு

'மண்டையைப் பிளக்கும் வெயிலில் உணவு அமைச்சர் துறைமுகத்தைச் சுற்றிப் பார்த்தார்.' – சரி

தலைப்பில் கூடியவரை ஒரே கதாநாயகன் அல்லது நாயகிதான் இருக்கவேண்டும். சுப்பிரமணியம் மனைவி மகளுடன் அமெரிக்கா போவதற்குப் பதிலாக சுப்பிரமணியம் அமெரிக்கா போகிறார். மனைவியையும் அழைத்துச் செல்கிறார் என்று இரண்டாகப் பிரிப்பது நல்லது.

கைவிட்டு எளிய நடையைப் பின்பற்றி எழுதவேண்டும்" என்றார். இதன்பிறகு, இந்திய நாளிதழ்கள் சி.பா.ஆதித்தனாரின் மொழிநடையைப் பின்பற்ற ஆரம்பித்தன.

ஆதித்தனாரின் எழுத்துநடை பற்றி எழுத்தாளர் சுஜாதா

செய்தித்தாள் வாசித்தல் என்பது, நன்கு படித்தவர்களுக்கான செயல் என்கிற காலம்மாறிச் சற்றே தமிழ் தெரிந்தவர்களும் படிக்குமாறு தமிழை எளிமைப்படுத்தி, கொஞ்சம் பரபரப்புச் சேர்த்து, குழப்பம் இல்லாத வகையில் செய்தியைத் தரும் உத்தியைத் தமிழ்நாட்டில் முதலில் கொண்டுவந்தவர் ஆதித்தனார். அவர், எழுத்துநடை குறித்துப் பத்திரிகை எழுத்தாளர் கையேடு என்ற பெயரில் ஒரு வழிகாட்டி நூலை வெளியிட்டிருக்கிறார். பேச்சுத்தமிழைக் கொச்சை நீக்கி எழுது என்பதே இக்கையேட்டின் பொன்விதி. 'நான்மாடக்கூடலை நண்ணினோம்' என்று சொல்வதற்குப் பதில் 'மதுரைக்குப் போனோம்' என்று சொல்லவேண்டும். புரிகிற தமிழில் மட்டும் எழுதினால் போதாது, பேசுகிற தமிழில் எழுதவேண்டும்.

ஆதித்தனார் எழுத்துக்கூட்டிப் படிப்பவர்களையும் மனத்தில் வைத்துத்தான் இதழ் நடத்தினார். ஆகவேதான், கலைச்சொற்களைத் தவிர்த்துப் பேச்சுமொழிச்சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தினார். "செந்தமிழில் எழுதுவது பெருமையாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாளிதழில் எழுதினால் அது பலருக்குப் புரியாது. பேச்சுத்தமிழையே எழுதவேண்டும். இதுவே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஒரு நாளிதழ் செய்யவேண்டிய தொண்டு" என்று ஆதித்தனார் குறிப்பிட்டுள்ளார்.

பயிற்சியற்ற வாசகர்களின் படிப்பறிவை வளர்ப்பதைத் தம் நோக்கமாகக் கொண்ட அவர், தமது தினத்தந்தி நாளிதழின் மொழிநடையை அவர்களுக்கு ஏற்றாற்போல் எளிமையாக அமைத்துக்கொண்டார். இவ்வாறு தமது மொழிநடையால் பாமரரையும் நாளிதழ் படிக்கவைத்தன் மூலம் ஆதித்தனார் இந்தியப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

ஏ.என். சிவராமன் (1904 – 2001)

அறிவியல் கட்டுரைகள்

தினமணி நாளிதழின் ஆசிரியரான ஏ.என். சிவராமன் தமது அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கட்டுரைகளுக்காக அறியப்படுகிறார். இவர், தொடக்கக் கல்வியைத் திருநெல்வேலியில் பயின்றார். தமது பதினேழாவது வயதில் காந்தியின் அழைப்பினை ஏற்று ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றுச் சிறைத்தண்டனையைப் பெற்றார். இதனால், இவரது கல்லூரிப் படிப்பு இடையிலேயே தடைப்பட்டது. பின் காங்கிரஸ் கட்சியில் இணைந்து தொண்டாற்றினார். பின்னர் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றிய போது வரலாறு, அரசியல், தத்துவம், பொருளாதாரம் ஆகிய துறைகளின் நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இக்காலகட்டத்தில் அவர் வாசித்துச் சேர்த்த அறிவே, அவர் சிறந்த பத்திரிகையாசிரியராக விளங்க அடித்தளமாக அமைந்தது. ஒரு நாளில் எட்டு மணி நேரத்தை வாசிப்புக்காகச் செலவிடுவதைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1988ஆம் ஆண்டு, இவர் தமது சிறந்த இதழியல் பணிகளுக்காகக் 'கோயங்கோ விருது' பெற்றார். இவர் பிரெஞ்சு, சமஸ்கிருதம், உருது உள்ளிட்ட பதினேழு மொழிகளை அறிந்திருந்தார் என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

டி.எஸ்.சொக்கலிங்கம் நடத்திய 'காந்தி' இதழில் ஒரு பத்திரிகையாளராகத் தம் பணியைத் தொடங்கிய ஏ.என்.சிவராமன், பின் அதிலிருந்து விலகி வேதாரண்யத்தில் இராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றார். 1934 இல் டி.எஸ்.சொக்கலிங்கம் தினமணி ஆசிரியராகப் பொறுப்பேற்றவுடன் சிவராமன் அதில் துணையாசிரியராக இணைந்தார்.

சொக்கலிங்கம் மறைவுக்குப் பின்னர்த் தினமணியின் ஆசிரியராகப் பொறுப்பேற்ற சிவராமன் 1987 வரை பணியாற்றினார். ஒரு செய்தித்தாளின் பணியென்பது, செய்திகளை ஆதாரப்பூர்வமாகவும் துல்லியமாகவும் வழங்குவது மட்டுமன்று; ஒரு நாட்டின் ஜனநாயகத் தன்மையிலும் வளர்ச்சியிலும் வாசகர்களைப் பங்கேற்கச் செய்வதுமாகும் என்று ஏ.என். சிவராமன் கருதினார்.

விண்வெளி, அறிவியல், அரசியல் தத்துவங்கள், தேர்தல் சீர்திருத்தம், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரப்பதிவுகள் ஆகியவற்றை எளிய தமிழில் மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர் ஏ.என். சிவராமன்.

ஜி. கஸ்தூரி (1924 – 2012)

தொழில்நுட்பம், வணிக உத்தி

திரு. ஜி.கஸ்தூரி தி ஹிந்து ஆங்கில நாளிதழில் 1965 முதல் 1991 வரை ஆசிரியராகப் பணியாற்றியவர். அவர், செய்தித்தாள் விநியோகத்தில் மேற்கொண்ட புதுமையான முயற்சிகளுக்காகவும், அச்சுத் தொழில்நுட்பத்தில் கையாண்ட நவீன முறைகளுக்காகவும் பத்திரிகை உலகில் போற்றப்படுகிறார்.

இந்தியாவில் தொலைக்காட்சி பயன்பாட்டிற்கு வந்தபோது அதனைச் செய்தித்தாளுக்கான போட்டியாகக் கருதினார். செய்தித்தாள்கள் அதனை ஈடு செய்யும் வகையில் செய்திகளை வழங்குவதில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்; பல்வேறு ஆதாரங்களில் இருந்து வெவ்வேறு வடிவங்களில் செய்திகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் செயல்பட்டார்.

மக்கள் செய்திகளின் உள்ளடக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பகத்தன்மையே ஒரு நாளிதழின் மிகப்பெரும் சொத்து எனக் கருதினார். தென்னகம் முழுமைக்கும் விரைவாக அதிகாலையிலேயே நாளிதழ்கள் கிடைக்கும்பொருட்டு, முதன்முதலில் விமானச்சேவையைப் பயன்படுத்தியது அவரது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

செய்திகளை விரைந்து சேகரிக்க மாவட்ட , மாநிலத் தலைநகரங்களில் முதன்மைச் செய்தி அலுவலர்களை (STAFF CORRESPONDENT) நியமித்தது அவரது புதுமையான முயற்சியாகும். 1977இல் அவர் தி ஹிந்து நாளிதழில் அறிமுகப்படுத்திய OUTLOOK, SPECIAL REPORT, OPEN PAGE ஆகிய பகுதிகள் வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

நாளிதழின் அச்சமைப்பில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி ஜி.கஸ்தூரி. சென்னைத் தலைமை அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்ட தி ஹிந்து நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து, (Facsimile Transmission System) பல்வேறு நகரங்களில் அச்சிட்டு வெளியிடுகிற முறையை முதலில் தொடங்கியவர் இவரே. ஆசியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுத்தப்பட்ட இம்முறையினால் செய்தித்தாள் விநியோகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியினைச் சாத்தியப்படுத்தினார். இம்முறையிலான முதல் வெளியூர்ப் பதிப்பு 1969இல் கோயம்புத்தூரிலிருந்து வெளிவந்தது.



1980இல் உலோக எழுத்துருக்களைக் கோத்து அச்சிடும் முறையிலிருந்து தட்டச்சு செய்து பக்கங்களைத் தயார் செய்யும் முறைக்கு மாறியபோதும் பின்னர், ஒளியச்சுக் கோவைக்கு மாறியபோதும் அவர் ஏற்கெனவே பணிபுரிந்து கொண்டிருக்கும் எந்தவொரு ஊழியரையும் மாற்றவில்லை. மாறாக அவர்களுக்கு நவீனத் தொழில்நுட்பத்தில் போதுமான அளவில் பயிற்சியளித்துத் தொடர்ந்து பணியாற்ற வாய்ப்பளித்தார். 1990இலிருந்து மின்னணுப்பக்கங்களாகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது தி ஹிந்து நாளிதழ்.

வண்ண அச்சுமுறை நடைமுறைக்கு வந்தபோது வண்ணப்படங்களுக்காகவே தி ஹிந்து நாளிதழும் அதன் குழும இதழ்களும் புகழ்பெற்றன. நேர்த்தியான புகைப்படக் கலைஞன் ஒருவனின் கைவண்ணத்தில் உருவாகும் ஒரு வண்ணப்படம் அதே தரத்துடன் நாளிதழில் வெளியாகும்போதும் அமையவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். கஸ்தூரி, தமது தொலைநோக்குமிக்க வாணிக மேலாண்மையாலும், காலத்திற்கேற்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தியதிலும் தேசிய அளவில் நாளிதழ் ஆசிரியர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

வை.மு. கோதைநாயகி (1901 – 1960)

மகளிர் இதழ்

வை.மு. கோதைநாயகி. 1925இல் "ஜகன்மோகினி" என்னும் நாவல் இதழினை அதன் பதிப்பாளராகவும் ஆசிரியராகவும் இருந்து நடத்தியவர். முதலில் மாத நாவலாக வெளிவந்துகொண்டிருந்த "ஜகன்மோகினி" 1937–இல் மகளிருக்கான இதழாகத் தன்னை மாற்றிக்கொண்டது. பண்டிதத் தமிழில் ஏனைய பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில் எளிய நடையில் பாமரரும் படித்தறியும் வகையில் இவர் எழுதியதும் ஜகன்மோகினியின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம்.

தமிழ் இதழியல் வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண்ஆசிரியர் பொறுப்பேற்று நடத்திய 'ஜகன்மோகினி' இதழ் வெள்ளிவிழா கொண்டாடியது ஒரு சாதனையாகும். இன்றைய மகளிர் இதழ்களின் தவிர்க்க முடியாத தன்மையாக விளங்கும் சமையல், கோலம், அழகுக் குறிப்பு, சோதிடம் போன்றவை அன்றைய ஜகன்மோகினியில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"ஜகன்மோகினி"யின் துணைவெளியீடாக நந்தவனம் என்ற இதழையும் வெளியிட்டு, அதன்மூலம் நூற்றைம்பதுக்கும்

மேற்பட்ட எழுத்தாளர்களை வை.மு.கோ. அறிமுகப்படுத்தினார்.

35 ஆண்டுகள் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய கோதைநாயகி பள்ளிப்படிப்பு இல்லாதவர்.இவர்எழுதியுள்ள 115 நாவல்களில் 'அனாதைப்பெண்', 'தயாநிதி' போன்றவை திரைப்படங்களாக வெளிவந்துள்ளன. எழுத்தாளர், பத்திரிகையாளர், தேசியவாதி, இசைக்கலைஞர், திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினர் என்று பன்முகத்தன்மை கொண்டிருந்த வை.மு.கோ. மிகச்சிறந்த இதழாளர் என்பதோடு பின்னாட்களில் உருவான பெண் இதழாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார் .

படிப்போம் சுவைப்போம்

வை. மு. கோதைநாயகி, தம் வீட்டருகே உள்ளே சிறுவர் சிறுமிகளுக்குக் கதை சொல்வது வழக்கம். அவர் கதையில், கற்பனைவளம் நிறைந்திருக்கும். அக்கதைகளைக் கேட்டு, அனைவரும் வியப்படைவர். அவருடைய தோழி, டி. சி. பட்டம்மாள் என்பவரும் கதை சொல்லச் சொல்வார். வை. மு. கோவின் கற்பனைக் கதைகளைக் கேட்ட பட்டம்மாள், 'நீ நன்றாகக் கதை சொல்கிறாய், ஏன் கதை எழுதக்கூடாது?' எனக்கேட்டு, அவரைக் கதை எழுதத் தூண்டினார். எழுதப் படிக்கத் தெரியாத வை. மு. கோ. தன்னால் எப்படி எழுத முடியும்? என வருத்தமுற்றார். அவரின் முகக் குறிப்பை உணர்ந்த பட்டம்மாள், 'நீ சொல்லச் சொல்ல நான் எழுதுகிறேன்' என்று கூறி, அவருக்கு ஊக்கமூட்டினார். வை. மு. கோவின் முதல் படைப்பு, 'இந்திர மோகனா' என்னும் நாடகமாகும். பின்னர், எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு படைப்புகளை வெளியிடத் தொடங்கினார்.

பிறமொழிச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள்

நிருபர்	– செய்தியாளர்	தேசம்	– நாடு
வாசகர்	– படிப்பவர்	விமர்சனம்	– திறனாய்வு
பத்திரிகை	– இதழ்	சுதந்திரம்	– விடுதலை
ஆச்சர்யம்	– வியப்பு	பரிவாரங்கள்	– உறவினர்கள்
விஞ்ஞானம்	– அறிவியல்	வசூல்	– தண்டல்
சித்திரம்	– ஓவியம்	ஜாமின்	– பிணை
சந்ததி	– வழித்தோன்றல்	பிரசுரித்தல்	– வெளியிடுதல்
உத்தேசம்	– கருதுகை	தீர்மானம்	– முடிவு
அபிவிருத்தி	– மிகுவளர்ச்சி		

கலைச்சொற்கள்

Art Editor	– கலைப்பகுதி ஆசிரியர்	Journalism	– இதழியல்
Anchor	– நெறியாளர்	Journalist	– இதழாளர்
Beat Reporter	– செய்திக்கள நிருபர்	Little Magazines	_ சிற்றிதழ்கள்
Bit News	– துணுக்குச் செய்திகள்	Local news	– உள்ளூர்ச் செய்திகள்
Bureau	– செய்தி நிறுவனம்	Magazine	– இதழ்
Caricature	– கேலிச்சித்திரம்	Mass communication	– செய்தித் தொடர்பு
Cartoon	– கருத்துப்படம்	Mass Media	– மக்கள் தொடர்புச் சாதனம்
Composing	– அச்சுக்கோத்தல்	News agencies	– செய்தி நிறுவனங்கள்
Copy	– படி	News Paper	– செய்தித்தாள்
Copy Editor	– எழுத்துப்படி திருத்துநர்	News Services	– செய்திப்பிரிவு
Crime News	– குற்றச் செய்திகள்	Page Layout	– பக்க வடிவமைப்பு
Editor	– ஆசிரியர்	Part–time reporter	– பகுதிநேரச் செய்தியாளர்
Editorial	– தலையங்கம்	Periodicals	– பருவ இதழ்கள்
Fake News	– பொய்யான செய்தி	Press Conference	– செய்தியாளர் கூட்டம்
Filler	– துண்டுச் செய்திகள்	Print	– அச்சு
Graphics	– வரைபடங்கள்	Printed form	– அச்சிட்ட படிவம்
Green Proof	– திருத்தப்படாத அச்சுப்படி	Proof	– மெய்ப்புத் திருத்தப்படி
Headlines	– தலைப்புச் செய்தி	Proof Reader	– மெய்ப்புத் திருத்துநர்
Hot News	– அண்மைச்செய்தி	Publisher	– வெளியிடுபவர், பதிப்பாளர்.
Illustration	– விளக்கப்படம்	Revised edtion	– திருத்தப்பதிப்பு
Impression	– அச்சுப்பதிப்பு	Re–edition	– மறுபதிப்பு
Interview	– நேர்காணல்	Reporter	– செய்தியாளர்
Interviewee	– நேர்காணல் தருபவர்	Review	– மதிப்புரை
Interviewer	– நேர்காணல் நிகழ்த்துபவர்		

கண்ணாடி

9DEYJ8

விளக்கம் கண்டு விடை தருக.

1. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இதழ் -------------

2. செய்தித்தாளின் ஒரு பக்கத்தில் எவை, எந்த இடத்தில் எப்படி அமைய வேண்டும் ? எனத் தீர்மானிப்பது ----------------------------

3. உடுக்கின் உருவம்போல அமையும் தலைப்பு இது --------------

4. பொருத்துக.

உள்ளடக்கம்	இதழின் பெயர்
1. கல்வி வளர்ச்சி	– அ) சம்பாரத் கௌமதி
2. மருத்துவம்	– ஆ) கலைக்கதிர்
3. பெண் உரிமைகள்	– இ) மூலிகை மணி
4. அறிவியல்	– ஈ) ஜனவிநோதினி

அ) 1–அ 2–இ 3–ஈ 4–ஆ　　ஆ) 1–ஆ 2–ஈ 3–இ 4–அ

இ) 1–ஈ 2–இ 3–அ 4–ஆ　　ஈ) 1–இ 2–அ 3–அ 4–ஆ

5. பொருத்துக.

இதழின் பெயர்	ஆசிரியர்
1. ரிவோல்ட்	– அ. ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி
2. மெட்ராஸ் கூரியர்	– ஆ. பெரியார்
3. பெங்கால் கெசட்	– இ. காந்தி
4. யங் இந்தியா	– ஈ. ரிச்சர்டு ஜான்சன்

அ) 1–அ 2–இ 3–ஆ 4–ஈ　　ஆ) 1–இ 2–ஈ 3–ஆ 4–அ

இ) 1–ஆ 2–ஈ 3–அ 4–இ　　ஈ) 1–ஆ 2–அ 3–ஈ 4–இ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

6. தமிழ்நாட்டில் முதலில் வெளிவந்த நாளிதழ் எது?

அ) மதராஸ் மெயில்　ஆ) சுதேச மித்திரன்　இ) இந்தியா　ஈ) சக்ரவர்த்தினி

7. மக்களாட்சியின் நான்காவது தூண் என்று அழைக்கப்படுவது எது?

அ) காவல் துறை　ஆ) நிதித்துறை　இ) அரசு நிருவாகம்　ஈ) ஊடகம்

8. பாரதியார், கருத்துப்படங்களை எவ்வாறு அழைத்தார்?

அ) கேலிச்சித்திரம்　ஆ) விளக்கப்படம்　இ) விகடசித்திரம்　ஈ) கூடார்த்த படம்

9. "இதழ்களை அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே கணிக்கின்றன" என்றவர்

அ) ஆலன் ஹோம் கோம்ப் ஆ) சி.பா. ஆதித்தனார்

இ) அகஸ்டஸ் ஹிக்கி ஈ) ஏ.என்.சிவராமன்

10. கீழ்க்காணும் இதழ்களுள் விடுதலைப் போராட்ட காலத்தில் வெளிவராதது எது?

அ) சுதேசமித்திரன் ஆ) தேசபக்தன் இ) இந்தியா ஈ) அரும்பு

11. இந்தியாவில் முதன் முதலில் கருத்துப்படம் வெளியிட்ட இதழ்

அ) இந்தியா ஆ) மதராஸ் மெயில்

இ) தில்லி ஸ்கெட்ச் புக் ஈ) அமிர்தபஜார் பத்திரிகா

12. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

அ) இந்தியா – கருத்துப்படம் ஆ) விடுதலை – எழுத்துச் சீர்திருத்தம்

இ) தேசபக்தன் – விடுதலை வேட்கை ஈ) தினத்தந்தி – கடின நடை

13. பொருந்தும் இணையைக் கண்டறிந்து எழுதுக.

அ) பெரியார் – தொழில்நுட்பம் ஆ) ஏ.என்.சிவராமன் – அறிவியல் கட்டுரை

இ) ஜி.கஸ்தூரி– தலையங்கம் ஈ) டி.எஸ்.சொக்கலிங்கம் – பொன்விதி

14. பொருந்தாததனைக் கண்டறிக.

அ) இந்தியா ஆ) பால பாரதி இ) தேசபக்தன் ஈ) விஜயா

15. கூற்று : பெரியார் குடி அரசு என்னும் வார இதழைத் தொடங்கினார்.

காரணம் : தம் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

16. கூற்று : தலையங்கம் ஓர் இதழின் கருத்துக்கண்ணாடி ஆகும்.

காரணம்: அன்றைய நாளிதழின் செய்திகளைத் தொகுத்து வழங்குகிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

கோடிட்ட இடத்தை நிரப்புக.

17. ஜெர்மனியில் புரட்சிக் கருத்துகளைப் பரப்புவதற்குக் கருத்துப்படங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தியவர் ---------------------

18. ஆசியாவிலேயே முதல்முறையாக நாளிதழின் பக்கங்களைத் தொலைநகல் மூலம் பரிமாற்றம் செய்து வெளியூர்ப் பதிப்புகளை ஆரம்பித்தவர் ------------

19. சரியான கூற்றுகளைக் கண்டறிக.

அ) பெருஞ்சித்தரனாரின் தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றின.

ஆ) பாரதியாரின் 'பால பாரதம்' என்னும் இதழ் விடுதலை உணர்வைத் தூண்டியது.

இ) 'துளிர்' என்னும் இதழ் பொழுதுபோக்குத் தன்மை கொண்டது.

ஈ) 'தமிழ்க் கல்வி', 'கல்விக் கதிர்' போன்ற இதழ்கள் கல்வி மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட இதழ்கள்.

அ) அ மற்றும் ஆ சரி ஆ) அ மற்றும் ஈ சரி

இ) ஆ மற்றும் ஈ சரி ஈ) அ மற்றும் இ சரி

20. நாளிதழ்கள், காலை மாலை என இருவேளையும் வெளிவருதற்கான காரணம்.

அ) அவ்வப்போது நடைபெறும் செய்தியை மக்கள் உடனுக்குடன் அறிய

ஆ) மக்களைப் பதற்றத்திலேயே வைத்திருக்க.

இ) வியாபாரத்தைப் பெருக்க.

ஈ) அனைத்து மக்களும் செய்திகளை அறிந்துகொள்ள.

ஆ) அ சரி ஆ) அ, இ சரி இ) நான்கும் சரி ஈ) நான்கும் தவறு

குறுவினா

1. ஊடகத்தின் வகைகளைக் கூறுக.
2. மக்களாட்சியின் நான்கு தூண்கள் யாவை?
3. இன்றியமையாத செய்திக் களங்கள் யாவை?
4. நாளைமுதல் காலையில் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டம் ஆரம்பம். இச்செய்தியைத் தெளிவுபடத் திருத்தி எழுதுக.
5. ஆகிய இரண்டு குறிகளும் மெய்ப்புத் திருத்துதலில் எவற்றைக் குறிக்கின்றன?
6. கீழ்க்காணும் கருத்துப்படங்களுக்குப் பொருத்தமான வாசகத்தை உருவாக்குக.





7. தலைகீழ்க் கூம்புத் தலைப்பு என்பது யாது?
8. சமநிலைப் பக்க அமைப்பைச் சுட்டுக.
9. கருத்துப்படத்திற்கான வேறு பெயர்களை எழுதுக.
10. ஆதித்தனார் இதழாளர்களுக்குக் கூறும் பொன்விதி யாது?

சிறுவினா

1. தலையங்கம் – குறிப்பு வரைக.
2. இதழ் உருவாக்கம் குறித்து எழுதுக.
3. பருவ இதழ்களை வரையறுக்க.
4. கொடுக்கப்பட்ட பகுதியை எளிய நடையில் மாற்றி அமைக்க.

   இஞ்ஞாலத்தில் மிகப்பழைமையான நிலப்பகுதியென்று தமிழ்வரலாற்றால் அறியப்பட்டதும், நிலநூல், கடல்நூல், உயிர்நூல் ஆராய்ச்சியாளரால் உய்த்துணரப்பட்டதும் மாந்தன் பிறந்தகமென்று மாந்தனூலாராற் கண்டுபிடிக்கப்பட்டதும் தெற்கே இந்து மாவாரியில் மூழ்கிப் போன குமரிக்கண்டம் ஆகும்.

5. 'பஞ்சம்' என்ற தலைப்பில் அமைந்த கருத்துப்படம் மூலம் பாரதி விளக்கும் செய்தி யாது?
6. இந்தியப் பத்திரிகைகளுக்கு நேரு கூறிய அறிவுரை யாது?
7. தமிழ் எழுத்துருக்களில் மாற்றம் தேவை என்பதற்குப் பெரியார் கூறிய காரணங்கள் யாவை?
8. தலையங்கத்தின் இயல்புகளைக் கூறுக.
9. மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றிய இதழ்களைக் குறிப்பிடுக.
10. நாளிதழ்கள் மக்களை விரைவாகச் சென்றடைய ஜி.கஸ்தூரி பயன்படுத்திய உத்திகள் மூன்றனை எழுதுக.

நெடுவினா

1. செய்தித்தாளின் மூன்று வகை பக்க அமைப்புகளை விளக்குக.
2. சுதந்தரப் போராட்டத்திற்குத் தமிழ் இதழ்களின் பங்கினை விவரிக்க.
3. இதழ்களின் உருவாக்கம் குறித்து விவரிக்க.
4. 'இதழ்களுடன் ஒரு சந்திப்பு' பகுதியிலிருந்து இதழ்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
5. பருவ இதழ்களிலிருந்து நாளிதழ்களை வேறுபடுத்திக் காட்டுக.
6. சமுதாய முன்னேற்றத்திற்கு இதழ்களின் பங்கினைத் தொகுத்து எழுதுக.
7. ஆதித்தனாரின் எழுத்துநடை பற்றிச் சுஜாதா கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
8. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து விவரிக்க.
9. செய்தித்தாளில் வெளியிடுவதற்குக் கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, ஒரு விளம்பரம் உருவாக்குக.

   1. மென்பொருள் நிறுவனம் – சென்னை உட்பட நான்கு மாவட்டத்தில் பல்வேறு

   பணிகளுக்கு வேலைவாய்ப்பு – தகுதி, பணியனுபவம் ஆகியவற்றிற்கேற்ற ஊதியம்

படிப்போம் பயன்படுத்துவோம்

மாதிரி மெய்ப்புத் திருத்தம்



1. பின்வரும் செய்தியில் உள்ள பிழைகளை அச்சுப்படித் திருத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தித் திருத்துக.

புவனேஸ்வர் ஹாக்கி எங்களுடைய தேசிய விளையாட்டு என்பதை, பெல்ஜியம் அணிக்கு இந்திய ஹாக்கி அணி நிரூபித்துக் காட்டியது. ஹாக்கி விளையாட்டு உலக லீக் பைனல் சின்காலிருதியில் நேற்று இந்தியவீரர்கள் காட்டிய ஆக்ரோஷம், அற்ப்பணிப்பு ராணுவவீரர்களிடம் மட்டுமே பார்க்க முடியும். மைதாணத்தையும், எதிரணியையும் உறையவைத்தது நமதுஅணியின் ஆட்டம் இந்த ஆண்டின் சிரந்த ஆட்டமாக அமைந்துள்ளது. ஹாக்கி உலக லீக்பைனல்ஸ் போட்டிகள் ஒடிசாவின் புவனேஸ்வரில் நடக்கிறது. உலக தரவரிசையில்முதல் 8 இடங்களில் உள்ளஅணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில், போட்டியை நடத்தும்நாடு என்ற அடிப்படையில் இந்தியா பங்கேற்றுள்ளது

2. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.

நிருபர்கள் தங்கள் பகுதிகளில் தினந்தோறும் நடைபெறும் சம்பவங்களைச் சேகரித்துத் தங்களது பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பர். சம்பவங்களோடு சித்திரங்கள், விஞ்ஞான செய்திகள், சர்க்கார் திட்டங்கள் போன்றவைகளும் பத்திரிகையில் இடம்பெறும். எடிட்டர் அச்செய்திகளை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் எந்த நியூசை எந்தப் பேஜில் பிரசுரிப்பது என்று தீர்மானிப்பார். பிறகு அச்சடிக்கப்பட்ட பத்திரிகைகளை வினியோகஸ்தர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு சென்று விற்பனையாளர்கள் மூலம் வாசகர்களுக்குக் கொண்டு செல்வர்.

3. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

தயிர் தோய்க்கப்பட்டப் பாலில் இரண்டுத் தவளைகள் தவறி விழுந்து விட்டன. அவைகளுக்கு பாத்திரத்தை விட்டு வெளியே வர தெரியவில்லை. முதல் தவளை இதிலிருந்து நான் எப்படித் தப்பிக்கப் போகிறேன் அவ்வளவுதான் என் கதை முடிந்தது என்று புலம்பியது. அதன் கால்கள் சக்தி இழந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் அது பாலில் மூழ்கி இறந்துப்போனது. இரண்டாவது தவளையோ, தன்னம்பிக்கையோடு சோர்வில்லாமல் கால்களால் உதைத்துக் கொண்டே இருந்தது. இதனால் பால் நன்றாகக் கடையப்பட்ட நிலையை அடைந்தது. வெண்ணெய் திரண்டு மேலே மிதக்க தொடங்கியது. சற்று நேரத்தில் அந்தத் தவளை மிதந்த வெண்ணெயின் மீதேறி நலமாக அமர்ந்து பிறகு ஒரே தாவலில் பாத்திரத்தை விட்டு வெளியேக் குதித்துத் தப்பித்தது.

செயல்திட்டம்

1. நீங்கள் படித்த ஏதேனும் ஓர் இதழுக்கு வாசகர் கடிதம் எழுதுக.
2. உங்கள் படைப்புகளை நாள், வார, மாத இதழ்களுக்கு எழுதி அனுப்புக.
3. உங்கள் ஊரில் நடைபெற்ற விளையாட்டு விழா நிகழ்வுகளைச் செய்தித்தாளுக்கு அனுப்பும் வகையில் ஒரு செய்தியாக எழுதி வருக.
4. கருத்துச் சித்திரத்திற்கான உங்கள் எண்ணங்களை ஓவியமாகவோ, வரைவதற்கான குறிப்புகளாகவோ தருக.
5. வகுப்புத் தோழர்களுடன் இணைந்து கையெழுத்துப் பிரதி ஒன்றைத் தயாரிக்க.

மாதிரி கையெழுத்து இதழ்

இயல்
ஆறு

கணித்தமிழியல்

9DNUKV

இன்றைய சூழலில் கணினியில் தமிழின் பயன்பாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. ஐந்திணைகளோடு விண்ணும் விண்சார்ந்த இணையமும் இன்று ஆறாம் திணையாக உருவெடுத்துள்ளது. இன்று தமிழில் இணைய வெளித் தொழில்நுட்பம் சிறப்பாகக் கையாளப்படுகிறது.

இப்பாடப்பகுதியில் இணையம் குறித்த செய்திகள், ஓலைச்சுவடி முதல் மின்னூல் வரையிலான தமிழ் நூல்களின் வளர்ச்சிப் போக்குகள், தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பங்கள், வலைப்பூவினை உருவாக்கிப் பயன்படுத்துதல் ஆகியன பொருத்தமான செயல்முறைகளுடன் விளக்கப்பட்டுள்ளன. அவை இணையம் கற்போருக்கான வழிகாட்டுதல்களாக அமைந்துள்ளன.

கற்றல் நோக்கங்கள்

- இணையத்தின் தோற்றம், வரலாறு இணையத்தில் தமிழின் வளர்ச்சிப் போக்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்
- தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளில் தொடங்கி அச்சு நூல்கள் வழியாக மின்னூல்களாக இணையம் ஏறிய வரலாற்றைப் புரிந்து கொள்ளுதல்.
- கணினி, இணையத்தில் தமிழை உள்ளீடு செய்யும் பல்வேறு தொழில் நுட்பங்கள், தமிழ்ச் சொற்செயலிகளைக் கற்று நடைமுறை வாழ்வில் பயன்படுத்துதல்
- மின்னஞ்சல் கணக்கைத் தொடங்கவும், வலைப்பூ மற்றும் சமூக ஊடகங்களில் தம் படைப்புகளைப் பதிவேற்றவும் திறன் பெறுதல்.

பாடப் பகுதி

- இணையக்களம் – இணையம் கற்போம் உலகை அறிவோம்
- இலக்கியக்களம் – பனையோலைப் பாட்டனும் மின்னூல் பேரனும்
- உள்ளீட்டுக்களம் – தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பம்
- செயற்களம் – இணைய ஊடகம் – உருவாக்கமும் பயன்பாடும்

இயல் ஆறு

1. இணையம் கற்போம் உலகை அறிவோம்

இன்றைய சூழலில் அனைத்து நடைமுறைகளிலும் கணினியின் பயன்பாடு தவிர்க்க இயலாத அளவிற்குப் பெருகியுள்ளது. அலுவலகப்பணிகள் மட்டுமன்றி அன்றாடப் பணிகள் பெரும்பாலும் கணினி சார்ந்தே உள்ளன.

கணினியில் தமிழின் பயன்பாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தமிழைப் பயன்படுத்துவோரால் இன்று இணையத் தொழில் நுட்பம் சிறப்பாகக் கையாளப்படுகிறது. இணையத்தின் பரப்பும் வீச்சும் அதன் தகவல் புரட்சியும் பயன்பாட்டுச் சிறப்பும் அளவில்லாதவை.

இணையம்

இணையம் என்பது, உலக அளவில் பல கணினி வலை அமைப்புகளின் கூட்டிணைப்பான பெரும் வலையமைப்பாகும். இது உலகம் முழுவதும் உள்ள கணினிகளை இணைத்து, அவற்றில் உள்ள தகவல்களைப் பரிமாறிக்கொள்ள உதவுகிறது.

இணைய வரலாறு

அமெரிக்க இராணுவம் தனது கட்டளைகளையும் தகவல்களையும் பிற நாடுகள் அறியாவண்ணம் பாதுகாக்கவும், பரிமாறிக் கொள்ளவும் எண்ணியது. அதற்காகச் சார்லஸ் ஹெர்ஸ்ஃபீல்டு என்பவரை இயக்குநராகக் கொண்டு 1957இல் ஆர்பா நெட் (ARPA – Advanced Research Projects agency Network) என்ற அமைப்பை ஏற்படுத்தியது.

இவ்வமைப்பு எம்ஐடி (MIT – Massachuseits Institute of Technology) என்ற கல்வி நிறுவனத்துடன் இணைந்து, புவிப் பரப்பில் பிரிந்துகிடக்கும் கணினிகளை இணைத்தது. அதன் அடிப்படையில் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளத் தேவையான தொழில்நுட்பம் குறித்து ஆராய்ந்தது. ஆய்வின் முடிவில் தகவல் பரிமாற்றத்திற்காக 1966இல் தரவு மாற்றத் தொழில்நுட்பம் ஒன்றைக் கண்டறிந்தது. இத்தொழில்நுட்பம் இராணுவத்திற்கு மட்டுமல்லாது பல்கலைக் கழகங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

1969இல் அதிகாரப்பூர்வமாகச் செயல்படத் தொடங்கிய ஆர்பா நெட், 1971இல் ஹார்வர்டு பல்கலைக்கழகம், நாஸா உள்ளிட்ட 15 இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அதன்பின் 1974இல் வின்டர்ன் செர்ப், பார்ப் கான் ஆகியோர் விரைவான செய்திப் பரிமாற்றத்திற்கான தொழில்நுட்பத்தைக் கண்டறிந்தனர்.

1982இல் தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்துடன் செய்திப் பரிமாற்றத் தொழில்நுட்பம் (TCP), இணைய நெறிமுறை (IP) என்னும் இரு நெறிமுறைகளை உருவாக்கினர். 1982இல் ஓர் அறைக்குள் இருக்கும் கணினிகளை ஈதர்நெட் என்னும் வலை இடைமுக அட்டைகளைப் பயன்படுத்தி இணைத்தனர். இவ்விணைப்பிற்குக் குறும்பரப்பு வலைப்பின்னல் என்று பெயர்.

அதன்பின் இத்தகைய குறும்பரப்பு வலைப்பின்னல்கள் இணைக்கப்பட்டு அகன்ற பரப்புவலைப்பின்னல்களாக உருவாக்கப்பட்டன. இத்தொழில்நுட்ப வளர்ச்சியைத் தொடர்ந்து 1991இல் டிம் பெர்னர்ஸ் லீ என்பவரால் அகன்ற பரப்பு வலைப் பின்னல்கள் இணைக்கப்பட, அது உலகளாவிய வலையமைப்பாக (www) உருவெடுத்தது. அதனால், இன்று இணையப் பயன்பாடு எளிதாகியுள்ளது.

இணையச் செயல்பாடு

டிம் பெர்னர்ஸ் லீ உலகளாவிய வலையமைப்பினை மூன்று நுட்பங்களின் உதவியைக் கொண்டு உருவாக்கினார். அவை:

1. மீஉரைக் குறிப்பு மொழி
   (HTML – Hypertext Markup Language)
2. மீஉரைப் பரிமாற்ற நெறிமுறை
   (HTTP – HyperText Transfer Protocol)
3. சீரான வள இடங்காட்டிகள்
   (URLs – Uniform Resource Locators)

1. மீஉரைக் குறிப்பு மொழி

இணையத்தில், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்ல, குறிப்புகள் எழுதப் பயன்படும் நுட்பமே மீஉரைக் குறிப்பு மொழி. இது, தகவலின் தலைப்பாகவும் தகவல் பகுதியாகவும் பிரிக்கப்பட்டிருக்கும்.

2. மீஉரைப் பரிமாற்ற நெறிமுறை

இணையத்தளத்தில் தகவலைப் பெறுவதற்கான நெறிமுறைக்கு "புரொட்டக்கால்" என்று பெயர். ஓர் இணையத்தளத்தில் தகவல்கள் எந்தெந்த இடங்களில் எவையெவை இருக்க வேண்டும் என்பதை இந்நெறிமுறைகளைக்கொண்டு முன்பே தீர்மானிக்க இயலும்.

3. சீரான வள இடங்காட்டிகள்

இணையத்தில் உள்ள தகவல்களைப் பெறுவதற்கான முகவரியே சீரான வள இடங்காட்டிகள் ஆகும். இவற்றைப் பயன்படுத்தியே இணைய உலவிகள் தகவல்களைக் கண்டறிந்து கேட்பவர்க்கு விரைந்து வழங்குகின்றன.

இணைய முகவரி

இணையத்தில் ஒவ்வொரு தளத்திற்கும் ஒரு முகவரி உண்டு. இது நான்கு பகுதிகளை உடையதாக இருக்கும். இவை சொற்களின் தொகுப்பாக உள்ளதால் எளிதாக நினைவுகூர முடிகிறது. எ.கா: http//www.tamilvu.org

இதன் முதற்பகுதி மீஉரைப் பரிமாற்ற நெறிமுறையையும் (http) இரண்டாம் பகுதி உலகளாவியவலை(www)என்பதையும்மூன்றாம் பகுதி இணையத்தளத்தின் பெயரையும் (tamilvu) இறுதிப்பகுதி இணையத்தின் தன்மையையும் (.org) குறிக்கின்றன.

இணைய நிருவாகம்

இணையத்திற்கெனத் தனி நிருவாக அமைப்பு ஏதுமில்லை. இணையக் கூட்டமைப்பு என்பது, பல நிறுவனங்கள் பங்கு வகிக்கும் ஒரு நிறுவனம். இது தகவல்களைத் திறம்படப் பரிமாற்றம் செய்வதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

ஐகான் என்னும் நிறுவனம், இணைய முகவரிப் பதிவை நிருவகிக்கிறது. ஒரே முகவரி இருவருக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதை இது உறுதி செய்கிறது.

இணைய இணைப்பு

இணைய இணைப்பினைப் பெற தேவையானவை

1. கணினி/ திறன்பேசி
2. தொலைபேசி – திறன்பேசி இணைப்பு
3. இணையக்கணக்கு
4. இணக்கி/அருகலை

கணினி அல்லது திறன்பேசியுடன் இணையத்தை இணைக்க, இணைப்பு வழங்கும் நிறுவனத்தின் மூலம் கணக்கைப் பெற்றுப் பயன்படுத்தலாம். இணையத்தைப் பயன்படுத்த விரிவான தொழில்நுட்ப அறிவோ, ஆங்கிலப் புலமையோ தேவையில்லை. சில அடிப்படைச் செயல்களைத்தெரிந்துகொண்டால்போதும்;நம் மொழியிலேயே எளிதாகப் பயன்படுத்தலாம்.

இணையத்தளம்

இணையத்தைப் பல்லூடகப் பகுதி எனலாம். இதில் உலகத்தின் பல சேவையகங்கள் இணைந்துள்ளன. இவை உரை, ஒலி. படங்கள், நகரும் படங்கள் முதலான பல்லூடகத் தகவல்களைச் சேமித்து வைத்து, கேட்போருக்குத் தருகின்றன. இதில் பலகோடிப் பக்கங்கள் உள்ளன. இவை இணையப் பக்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல இணையப் பக்கங்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, ஒரு சேவையகத்தில்

வைக்கப்பட்டிருக்கும். அது இணையத்தளம் எனப்படும். தேடுபொறிகள், நிதி தகவல்கள், கல்வி, ஆராய்ச்சி, விளையாட்டு, பொழுதுபோக்கு, இணைய அங்காடி போன்ற பல்வேறு வசதிகளை இவை வழங்குகின்றன.

உலவி

இணையத்தில் உள்ள பக்கங்களைப் பார்ப்பது உலவுதல் எனப்படும். இதற்கு உலவி என்னும் மென்பொருள் உதவுகிறது. இது செய்தித்தளங்களிலிருந்து பக்கங்களைப் பெற்று, அவற்றைத் திரையில் காட்டுகின்றது.

கூகுள் குரோம், இன்டெர்நெட் எக்ஸ்புளோரர்,சஃபாரி,ஒபரா,எபிக்,மோசில்லா பயர்பாக்ஸ், பிங் என்பவை உலவிகளுள் சில. தேவையான வலைத்தளத்தின் முகவரியை ஓர் உலவியின் முகவரிப் பெட்டியில் இட்டு, அத்தளத்தைப் பெறலாம்.

தேடுபொறி

இணையத்திலும் கணினியிலும் நமக்குத் தேவையானவற்றைத் தேடித்தரும் செயலைச் செய்கின்ற ஒரு கணினி நிரலே தேடுபொறி. அது உலகமெங்கும் நிறுவப்பட்டுள்ள வழங்கிகளுக்குச் சென்று, அவற்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தரவுகளில் நாம் கொடுத்துள்ள குறிப்பின்படி நமக்குத் தேவையான இணையத்தளங்களின் பட்டியல்களைத் தொகுத்துத் தரும்.

இணையமுகவரி ஏதும் தெரியாதபோது தேடுபொறியில் நமக்கு வேண்டிய தரவைக் குறிக்கக்கூடிய சொற்களை இட்டு அவை குறித்த செய்திகளைப் பெறலாம்.

கூகுள், அல்டாவிஸ்டா, யாகூ, பிங், பாய்டு, அலெக்ஸா, லைகோஸ், ஆஸ்க்ஜீவ்ஸ், எம்எஸ்என் போன்றவையும் குழந்தைகளுக்கெனச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கிடில் தேடுபொறியும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் தேடுபொறிகளாகும்.

இணையத்தளங்களின் வகைகள்

1. நிலையான இணையத்தளம்

இது நிலையான தகவல்களைக் கொண்ட இணையத்தளம். இதில் உள்ள தகவல்கள் அடிக்கடி மாற்றப்படுவதில்லை. தளம் புதுப்பிக்கப்படும்போது மட்டுமே தகவல்கள் மாற்றப்படுகின்றன.

2. தனியர் இணையத்தளம்

தனியர் சிலர் தங்களது சொந்தத் தகவல்களையும் தமக்கு விருப்பமான துறைகளைப்பற்றியும் வெளியிடும் தளம். வழக்கமாக ஒருவரின் குடும்பம், நண்பர்கள், குறிப்பிட்ட பயனர்கள், வாசகர்கள் ஆகியோரை மட்டும் நோக்கித் தகவல்களை அளிக்கும் இத்தளம், பெரும்பாலும் தனிப்பட்ட ஆளுமைகளின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அமையும்.

3. நிறுவன இணையத்தளம்

ஒரு நிறுவனத்தின் மதிப்பை நன்முறையில் உயர்த்துவதே இதன் நோக்கமாகும். நிறுவனத்தைப்பற்றி மட்டும் கூறாமல் அதன் இலக்குகளையும் தொலைநோக்குப் பார்வையையும் இத்தளம் வெளிப்படுத்தும்.



4. தகவல் களஞ்சிய இணையத்தளம்

குறிப்பிட்ட ஒரு துறைகுறித்த மிக விரிவான தகவல்களை வழங்கும் தளம். இம்மாதிரியான தளங்கள் தம் தகவல்களைப் பெரும்பாலும் வாணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்துகின்றன.

5. இயங்கு இணையத்தளம்

இத்தளத்தில் பயனர்களின் பங்கேற்புக்கும் செயல்பாடுகளுக்கும் ஏற்ப அடிக்கடி தகவல்கள் தொடர்ந்து மாற்றம் பெறும். இவ்வகைத் தளங்கள் பயனர் பங்கேற்பு வசதிக்கேற்ப வடிவமைக்கப்பட்டிருக்கும்.

6. மின் வணிக இணையத்தளம்

பயனர் ஒருவர் பொருளை அல்லது ஒரு சேவையை இணையவழிப் (Online) பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள இத்தளம் உதவுகிறது.

7. இணைய அடிப்படையிலான செயல்பாடுகளின் தளம்

இத்தளம் இணைய வங்கிச் சேவை, இயங்கலைத் தேர்வுகள், இணையவழிக்கூட்டங்கள் முதலான பல்வேறு செயல்பாடுகளைச் செய்ய உதவுகிறது. மேலும் எழுத்துச் சரிபார்ப்பான், படத்திருத்தி, கோப்புமாற்றி போன்ற கருவிச்சேவைகளையும் தருகிறது.

8. விளையாட்டு இணையத்தளம்

இணைய விளையாட்டுகளுக்கான அளப்பரிய வசதிகளை இத்தளம் வழங்குகிறது.

9. மின்கற்றல் இணையத்தளம்

பல இணையத்தளங்கள், கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றன. சில தளங்கள் பட்டப்படிப்புகளையும் வழங்குகின்றன.

அறிவோம் தெளிவோம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி ஆய்வு நிறுவனம். உலக அளவில் செம்மொழித் தமிழுக்கென்று நிறுவப்பெற்றுள்ள உயராய்வுமையம் ஆகும். இந்நிறுவனம் தமிழ்ச் செவ்விலக்கியங்களைப் படித்து இன்புறவும் தனிப்பயிற்சி மூலம் தெளிவு பெறவும் இணையவழிச் செம்மொழித்தமிழ் (Classical Tamil Online) என்னும் மின்கற்றல் (e–Learning) முறையைத் தொடங்கியுள்ளது. இதில் இணைய வகுப்பு உரைகளாகக் (Virtual Class Room Speeches) காணொலிக் காட்சிகளும் உள்ளன. கற்றவற்றைச் சரிபார்த்து விடைகளைக் கண்டறியும் முறையில் தன்மதிப்பீட்டுத் தேர்வுகளும் அமைந்துள்ளன. செம்மொழித் தமிழ்இலக்கியங்களைப் பற்றிக் கல்வி பெறுவதற்கும் இணையவழி மின்னூல்களைப் பெறுவதற்கும் இந்நிறுவனத்தின் இணையத்தளத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மின் கற்றல் முறையில் மதிப்பீடும் அதற்கான பின்னூட்டமும் உடனுக்குடன் வழங்கப்படுவதால் மாணவர்கள் தங்களது கற்றல் அடைவினை உடனே தெரிந்துகொண்டு மேம்படுத்திக்கொள்ள முடியும்.

10. இணையத்தளத் தொகுப்பு

பல்வேறு இணையத்தளங்களின் தொகுப்பை இணையத்தளத் தொகுப்பு எனலாம். ஒன்றோடொன்று தொடர்புடைய துறை சார்ந்த பல்வேறு தகவல்களையும் தகவல் மூலங்களையும் இவ்வகையான தொகுப்புகளிலிருந்து பெறலாம்.

இணையத்தில் தமிழ்

தமிழர்கள் தங்கள் வாழிடங்களை ஐந்திணைகளாக வரையறுத்தனர். இன்று விண்ணும் விண்சார்ந்த இணையமும் ஆறாம் திணையாக உருவெடுத்துள்ளது. தன் வளத்தால் வாழும் செம்மொழியான தமிழ், காலத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் தன்மையால் இன்று இணையத்திலும் கோலோச்சுகிறது.

இணையத்தில் ஏறிய முதல் இந்திய மொழி

1995இல் சிங்கப்பூரில் தொடங்கப்பட்ட மலாய், ஆங்கிலம், மாண்டரின், தமிழ் ஆகிய நான்கு தேசிய மொழிக் கவிதைகளுக்கான வலைத்தளத்தில் முதலில் அரங்கேறியது தமிழ்.

சிங்கப்பூர் நாவ்யாங் பல்கலைக்கழகப் பேராசிரியர் நா. கோவிந்தசாமி சீனக்கணினி வல்லுநர்களோடு இணைந்து 'தமிழ்நெட்' என்ற எழுத்துருவினை உருவாக்கி, இணையத்தில் தமிழ் இடம்பெறக் காரணமாய் இருந்தார். அவரால்தான் இணையத்தில் ஏறிய முதல் இந்திய மொழி என்ற பெருமை தமிழுக்குக் கிடைத்தது.

தமிழ் இணையத்தின் வளர்ச்சி

1996இன் இறுதியில் உலகெங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்கள் பலரும் தமிழ் எழுத்துருக்களை உருவாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இணையத்தில் தமிழ்த் தகவல் பரிமாற்றத்திற்கான முதல் உலக மாநாடு 1997ஆம் ஆண்டு 'தமிழ்நெட் 97' என்ற பெயரில் சிங்கப்பூரில் நடைபெற்றது. அதில் தமிழ் எழுத்துரு குறித்துக் கணித்தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் கலந்துரையாடினர். 1999இல் நடைபெற்ற இரண்டாவது கணினி மாநாட்டில் கணித்தமிழ்ச் சங்கம் உருவானது.

அவ்வாண்டில் தமிழ்நாடு அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் ஆய்விற்குப்பின், 'தமிழ் 99' விசைப்பலகை உருவாக்கப்பட்டது. பல்வேறு

ஒருங்குறி விசைப் பலகை

சோதனைகளுக்குப்பின், தமிழக அரசு அதனை ஏற்று அரசாணை வெளியிட்டது.

பின்னர் 'ஒருங்குறிக் கூட்டமைப்பு' உலக அளவில் அனைத்து மொழிகளுக்கும் 'ஒருங்குறி' என்னும் எழுத்துருக் குறியேற்ற முறையை உருவாக்கியது. அவ்வமைப்பில் தமிழக அரசு தமிழ்மொழிக்கான உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டது.

தமிழ் ஒருங்குறிக் குறியேற்ற முறையில் இருந்த குறைகளைக் களைய, அரசுடன் தமிழ் இணையக் கல்விக் கழகமும் கணித்தமிழ்ச் சங்கமும் இணைந்து, முயற்சிகளை மேற்கொண்டன. அதன் விளைவாகத்தான் இன்று இணையத்தில் தமிழை எளிதாகப் பயன்படுத்த முடிகிறது.

இணையத்தில் தமிழின் பயன்பாட்டைச் செழுமைப்படுத்தவும் தமிழரின் தொன்மை, மரபு, பண்பாட்டுச் செல்வங்களை உலகிற்கு வழங்கவும் அரசும் தன்னார்வ நிறுவனங்களும் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துகின்றன. அவற்றுள் தமிழ் இணையக் கல்விக்கழகம், மதுரைத்திட்டம், தமிழ் விக்கிப்பீடியா போன்றவை குறிப்பிடத்தக்கவை.

தமிழ் இணையக் கல்விக்கழகம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் 2001ஆம் ஆண்டு பிப்ரவரி 17இல் நிறுவப்பட்டது. இந்தியாவில் இணையம் வழியே கல்வி வளங்களையும் வாய்ப்புகளையும் வழங்க நிறுவப்பட்ட முதல் அமைப்பாக இது விளங்குகிறது. 1999ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தமிழ் இணைய மாநாட்டின் நிறைவு விழாவில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. முழுநேர இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் செயற்படும் இது, தமிழ் இணையக் கல்விக்கழக ஆட்சிக்குழுவால் வழி நடத்தப்படுகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தளத்திற்குச் செல்ல இதனைத் திறன்பேசியால் வருடவும்.

இணையக் கல்விக்கழகம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்கான திட்டங்களுடன் செயல்படுகிறது.

- உலகளாவியதமிழ்ச்சமுதாயத்தினர்க்கும் தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.

- உலகெங்கும் வாழும் தமிழர்கட்கு, அவர்களின் தேவைக்கேற்பப் பாடத் திட்டங்களை உருவாக்கி அளித்தல்: அவர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புகொண்டு வாழத் துணைபுரிதல்.

- உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து, அவற்றைத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத் திட்டங்களை வகுத்தல்.

- மொழியறிவுக்காகவோ, சான்றிதழ், பட்டயம், பட்டம் பெறுவதற்காகவோ கற்போருக்கு வாய்ப்பளித்தல்.

- தகுதிக்கு ஏற்பத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாகச் சான்றிதழ்/ பட்டயம்/பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

மேலும் ஐம்பது இலட்சம் பக்கங்களுக்குமேல் பதிவேற்றம் செய்யப்பட்ட

மின்நூலகம், கணித்தமிழ் ஆய்வுகள், மென்பொருள், செயலிகள் உருவாக்கம், கணித்தமிழ்ப் பேரவை முதலியன இதன் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்கன.

மதுரைத்திட்டம்

மதுரைத்திட்டம் எவ்வித அரசு, தனியார் உதவியோ, வாணிக நோக்கமோ இன்றி நடைபெறுகின்ற ஒரு தன்னார்வ முயற்சி. 1998ஆம் ஆண்டு தமிழர் திருநாள் அன்று தொடங்கப்பட்ட இத்திட்டம், இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. உலகில் வெவ்வேறு நாடுகளில் வாழும் முந்நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்களும் தமிழார்வலர்களும் ஒன்றுகூடி இத்திட்டத்தைச் செயலாக்கம் செய்து வருகின்றனர்.

அதற்கென உலகின் பல நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர்கள், கூட்டு முயற்சியாக அவரவர் தங்களுக்குக் கிடைக்கும் நேரங்களில் தமிழ் இலக்கியங்களைக் கணினியில் உள்ளிட்டு, பிழை திருத்தி மின்பதிப்புகளாகத் தயாரிக்கின்றனர். பின்னர் இவற்றை மதுரைத் திட்டத்தில் பதிவேற்றம் செய்கின்றனர். தமிழ் இலக்கியங்களை மின்நூல்களாகப் பாதுகாத்துப் பகிர்ந்து கொள்வதில் விருப்பமுள்ள அனைவரும் இத்திட்டத்தில் பங்கு பெறலாம்.

தமிழ் விக்கிப்பீடியா

கட்டற்ற பன்மொழிக் களஞ்சியத் திட்டமான விக்கிப்பீடியாவின் ஒரு பகுதியே தமிழ் விக்கிப்பீடியா. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட விக்கிமீடியா அறக்கட்டளை எனப்படும் வாணிக நோக்கற்ற அமைப்பு இதனை நிருவகித்து வருகிறது. உலகெங்கும் உருவாகும் தமிழின் அறிவுத்தொகுப்பைத் திரட்டி, கட்டணமின்றியும், காப்புரிமைகள் போன்ற கட்டுப்பாடுகள் இன்றியும் அனைவருக்கும் வழங்குவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

இன்றைய நவீன வாழ்வில் பல்துறைச் செயல்பாடுகளுடன் நாம் பொருத்தமுற வாழ்வதற்கு, இணையம் சார்ந்து செயல்படவேண்டியுள்ளது. மேலும், இணையத்தில் தமிழ்மொழியின் அனைத்துப் பயன்பாடுகளையும் புரிந்துகொண்டு, நடைமுறைப்படுத்திவாழ்வையும்மொழியையும் மேம்படுத்துதல் நம் கடமையாகும்.

2. பனையோலைப் பாட்டனும் மின்னூல் பேரனும்

ஒரு கற்பனை உரையாடல்



அந்த அழகிய மலைநாடு, உயர்ந்து அடுக்கடுக்காய்ப் பரந்து கிடந்த மலைகளின் ஊடாக அமைந்திருந்தது. வானோக்கி வளர்ந்து கிடந்தன அடர்ந்த மரங்கள். மரங்களின் உச்சியிலிருந்த இடைவெளித் துளைகள் வழியாக ஞாயிறு வெள்ளிமழையாகத் தன் கதிர்களைச் சொரிந்து கொண்டிருந்தது. மலைக்காடெங்கும் மகிழ்வூட்டும் பச்சை வெளிச்சம்.

செடிகளின் சிரிப்பாய் எங்கெங்கும் பூத்துக் கிடந்த பூக்கூட்டம் அந்த மலைநாட்டுக்கு வருவோரை வரவேற்பதுபோல் இருந்தது. ஆங்காங்கே கீழிறங்கும் அருவிகள் மலைகளின் மேனிகளில் நீளமான வெள்ளிக் கம்பளங்களை விரித்ததுபோல் காணப்பட்டன.

அந்நாட்டின் அரண்மனைக்குச் செல்லும் ராஜபாதை எங்கும் வாழையும் கமுகும் கட்டப்பட்டு, கரும்புச் சரங்களாலும் காய்கனித் தோரணங்களாலும் அழகுபடுத்தப்பட்டிருந்தன. மலைநாட்டுத் தலைவனான மன்னனின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் அவை அமைக்கப் பட்டிருந்தன.

மலைப்பாதை எங்கும் மக்கள் அணியணியாய்த் திரளத் தொடங்கியிருந்தனர். மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தது போலவே அக்குழுவினர் வரத்தொடங்கினர். பாணர், பாடினியர், விறலியர் குழுவினராய்ப் பறை, முழவு, துடி, போன்ற கருவிகளை யாழின் இராகத்திற்கேற்ப இசைத்தவாறு ராஜபாதையைக் கடந்து அரண்மனைக்குள் நுழைந்தனர். மன்னன் பெருமகிழ்வோடு பொன்



இருக்கையிலிருந்து இறங்கி, அவர்களை நோக்கி இருகைகளை நீட்டி வரவேற்றான்.

அவையின் நடு மண்டபத்தில் கூடிய அக்கலைக்கூட்டம் மலைநாட்டு மன்னனின் பெருமைகளைப் பலவாறாகப் புகழ்ந்து, பாடியும் ஆடியும் போற்றினர். அவையில் பாணர் பாடும் பாடல்களைக் 'கேட்டுச்சொல்லிகள்' சொல்லச் சொல்ல, ஓலைச் சுவடிகளோடும் எழுத்தாணிகளோடும் அமர்ந்திருந்த சுவடி எழுதும் 'கற்று எழுதிகள்' அதைக் கேட்டு எழுதினார்கள்.



அதற்கு முன்திங்களில்தான் அந்த ஓலைச்சுவடிகள் தேர்ந்த பனை ஓலைகளில் இருந்து நறுக்கப்பட்டிருந்தன. பின் பெரிய பானைகளில் கொதித்த மூலிகை நீரில் அவித்துப் பதப்படுத்தப்பட்டிருந்தன. எழுதுவதற்கான மைக்குழம்பு சிலவகைத் தாவரச் சாறுகளில் இருந்து தயாரிக்கப்பட்டிருந்தது.

அன்றும் அடுத்தடுத்த நாள்களிலும் அந்த மலைநாட்டிலும் பிறநாடுகளிலும் வாழ்ந்து வந்த பெரும்புலவர்கள் மன்னனின் அவைக்கு வந்து அவனது வீரம், கொடைத் தன்மையினை மெச்சி, பலவாறாகப் பாடல்கள் புனைந்தனர். அவற்றை ஓலைச்சுவடிகளில் பதிவாக்கி மன்னனுக்கு அளித்தனர்.

இவ்வாறான ஓலைச்சுவடிகளில்தான் நம் பழந்தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவை எழுத்தாணிகொண்டு எழுதப் பட்டன.

2

கடலலை வந்து வந்து கரையேறி, விளையாடிக் கொண்டிருந்த தரங்கம்பாடியில் அன்றொரு தொடக்க விழா. அங்குச் சீகன் பால்கு என்பவரால் ஓர் அச்சு இயந்திரம் நிறுவப்பட்டிருந்தது. அந்த அச்சுக்கூடத்தில் தொழிலாளர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மரப்பெட்டிகளைத் திறந்தார்கள். அப்பெட்டிகள், கப்பல்மூலம் ஜெர்மனி நாட்டிலிருந்து வந்திருந்தன.

உலோகத்தால் செய்யப்பட்ட தமிழ் எழுத்துருக்கள் பெட்டிகள் முழுவதும் இருந்தன. அவற்றைப் பயன்படுத்தி அச்சுக்கோக்கும் பணியை ஆரம்பித்தார்கள். அச்சு இயந்திரம் இயக்கப்பட்டு, கோக்கப்பட்ட பக்கங்கள் தாள்களில் அச்சிடப்பட்டன.

அதற்கு முன்பே கொல்லத்தில், ஹென்றிக் ஹென்றிக்சு என்பவரால் எழுதப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூல் அச்சிடப்பட்டது. தமிழில் அச்சிடப்பட்ட முதல் நூலாக இந்நூல் கருதப்படுகிறது. இந்திய மொழிகளில் முதலில் அச்சேறிய மொழி தமிழ் என்ற பெருமையைத் தந்தது இந்நூலே ஆகும்.

அதன்பின்னர் ஏற்பட்ட ஒரு தேக்கநிலைக்குப் பிறகு தரங்கம்பாடியில் அமைக்கப்பட்ட அச்சுக்கூடம் தமிழ்ச் சான்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பல தமிழ் நூல்கள் அச்சேறத் தொடங்கின.

அதைத்தொடர்ந்து, பல்வேறு காலகட்டங்களில் ஓலைச்சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் அறிஞர் பெருமக்களால் பதிப்பிக்கப்பட்டன.

3

கணினி அறை என்ற வாசகம் தாங்கிய அந்தக் குளிரூட்டப்பட்ட அறைக்குள் இளைஞர்கள் விசைப்பலகையைப் பயன்படுத்தித் தமிழ் எழுத்துருக்களின் மூலம் கணினித் திரையில் தமிழ்க் கட்டுரைகளைத் தட்டச்சு செய்து கொண்டிருந்தார்கள். அறையின் சுவரில் 1980ஆம் ஆண்டின் நாட்காட்டி தொங்கிக்கொண்டிருந்தது.

அனைத்துப் பக்கங்களையும் தட்டச்சு செய்து சேமித்தபின், அதை ஒன்றாகத்

தொகுத்து அச்சிட்டு நூலாக வடிவமைத்துக் கொண்டு தமது பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தினார்கள்.

கோடையும் வசந்தமும் மழையும் குளிருமாய்ப் பருவங்கள் வந்துவந்து போய்க் கொண்டிருந்தன. தொண்ணூறுகளின் வனப்பும் வளமும் நிரம்பிய கணினிகளில் இளைஞர்கள் இணையத்தளங்கள் வழியே தமிழில் உலகம் முழுவதும் தமது கருத்தாடல்களை நிகழ்த்தினர்.

அந்த நகரத்தின் தெருக்களில் புதிதாய்த் தோன்றியிருந்தன இணைய மையங்கள். பலகைகளால் பிரிக்கப்பட்டு வரிசையாக அமைக்கப்பட்டிருந்த சிறுசிறு அறைகளுக்குள் கணினிகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவற்றில் மாணவர்களும் ஆர்வலர்களும் உலாவி மூலம் வாசித்துக் கொண்டிருந்தனர்.

முதல் அறையில் இருந்த இளைஞன் அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரத்தின் ஓர் அறையில் கணினிமுன் அமர்ந்திருந்த தனது நண்பனோடு மின்வரிகளில் உரையாடிக்கொண்டிருந்தான். அமெரிக்க நண்பனின் கோரிக்கைக்கு ஏற்பக் குறுந்தொகை மின்னூலினைச் சிப்பம் செய்து, மின்னஞ்சல் வழியாக அனுப்பினான்.

சிப்பத்தைப் பெற்ற அமெரிக்க நண்பன் அடுத்த சில மணித்துளிகளில் கனடா, ஆஸ்திரேலியா, நார்வே ஆகிய நாடுகளில் வசிக்கும் தன் நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான்.

4

தமிழகத்தின் முதன்மையான நூலகங்களுள் ஒன்றான அண்ணா நூற்றாண்டு நூலகம். ஒரு கணினித் திரையில் மின்னூல் ஒன்று விரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதன் பக்கங்களின்மீது சொடுக்க சொடுக்க ஒவ்வொரு பக்கமாகப் புரளத் தொடங்குகிறது.

அதன் எதிரே பார்வை படும்படியான ஒரு கோணத்தில் உள்ள ஓர் அழகிய கண்ணாடிப் பேழைக்குள் பழந்தமிழ் இலக்கியம் ஒன்றின் ஓலைச்சுவடி பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருக்கிறது.

அங்கு வரும் பார்வையாளர்களும் வாசகர்களும் அதை மிகுந்த மரியாதையுடனும் பெருமிதத்துடனும் பார்த்துச் செல்கின்றனர். அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் மின்னூலுக்கு நாளுக்கு நாள் ஓர் ஆசை வளர்ந்துகொண்டே வருகிறது. ஓலைச்சுவடியுடன் ஒருநாள் மனம்விட்டு உரையாடவேண்டும் என்பதே அதன் அவா.

அதேபோல் கணினித்திரையில் அழகாய்ப் பக்கம்பக்கமாய்ப் புரண்டு கொண்டிருக்கும் மின்னூலோடு பேசிட வேண்டுமென்பதும் ஓலைச் சுவடியின் அடிமன விருப்பம். நூலகப் பராமரிப்பாளர் ஒருநாள் கண்ணாடிப்பேழையைக் கணினி அருகில் மாற்றி வைத்தபோது, இருவரின் விருப்பமும் நிறைவேறியது.

மின்னூலும் ஓலைச்சுவடியும் உரையாடத் தொடங்கின

மின்னூல்: ஆ... என் அன்புக்குரிய ஓலைச்சுவடி அண்ணா... உங்களுக்கு என் பணிவான வணக்கம்.

ஓலைச்சுவடி: வணக்கம் மின்னூல் தம்பி. ஆனால் ஒன்று... நான் உன்னைத் தம்பி என்றழைக்கலாம். நீ என்னை அண்ணா என்று அழைக்கலாகாது. ஒருவேளை நானுன் பாட்டனுக்கு முப்பாட்டனாகக் கூட இருப்பேன்.

மின்னூல்: அடேயப்பா... உங்களுக்கு அவ்வளவு வயதாகிவிட்டதா?

ஓலைச்சுவடி: ஆம்... சில ஆயிரம் வருடங்கள்.

மின்னூல்: அவ்வளவு காலமாகவா நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்?

ஓலைச்சுவடி: பாதுகாப்பாக ஆக்கியிருக்கிறார்கள். அறிஞர்கள் பலர் என்னைப் பலமுறை படியெடுத்துப் பாதுகாத்திருக்கிறார்கள். ஒரு முதியவர்



தள்ளாத வயதில் என்னைக் காப்பாற்றி வைத்துள்ளார். உனக்கு அவரைத் தெரியுமா?

மின்னூல்: தெரியும் முப்பாட்டனாரே! தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் தானே அவர்.

ஓலைச்சுவடி: மிக நல்லது தம்பி. நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாய். அவர் எங்களைப் பாதுகாக்க எவ்வளவு துன்பப்பட்டுள்ளார் தெரியுமா?

மின்னூல்: சொல்லுங்கள் முப்பாட்டனாரே.

ஓலைச்சுவடி: ஈரோடு மாவட்டம் கொடுமுடியின் காவிரிக் கரையில் உள்ள ஒரு வீட்டில் பழந்தமிழ் இலக்கியச் சுவடிகள் இருப்பதை அறிந்து அவர்களிடம் கேட்டபோது, ஆற்றில் ஆடிப்பெருக்கன்று ஓலைச்சுவடிகளை விட்டுவிடுதலே அறம் என்று கூறித் தர மறுத்து விட்டனர். பார்த்தார் உ.வே.சா. அவ்வாறு அவர்கள் ஆற்றில் போடும்போது, அடுத்த படித்துறையில் அதிகாலைக்குளிரில் காவிரியில் இறங்கி, தமது முதிய உடல் தாளாது நடுங்க, அச்சுவடிகளைச் சேகரித்துப் பதிப்பித்தார்.

உ.வே.சா. பதிப்பித்த 'மணிமேகலை' நூலின் சுவடி

மின்னூல்: கண்கலங்குகிறது பாட்டனாரே!

ஓலைச்சுவடி: ஆமாம் தம்பி. அவர்தான் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற பல நூல்களையும் சிற்றிலக்கியங்களையும்பதிப்பித்துப்பாதுகாத்தார். அவர் மட்டுமல்லர். சி.வை.தாமோதரனாரும் பண்டைக்காலத் தமிழ் நூல்களை மீட்டெடுத்துப் பதிப்பித்துப் பாதுகாத்தார்.

மின்னூல்: சி.வை.தாமோதரனார் பதிப்பித்த நூல்களைச் சொல்லுங்கள் பாட்டனாரே.

ஓலைச்சுவடி: இவர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், சூளாமணி, நீதிநெறி விளக்கம், வீரசோழியம், திருத்தணிகைப்புராணம், தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருளதிகாரங்களுக்கான உரைகளைத் தேடிப் பதிப்பித்துள்ளார். அந்தப் பெரியவர்களுக்கு நாம் எக்காலத்தும் நன்றியோடு இருக்க வேண்டும். சரி தம்பி. உன்னைப் பார்த்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. உன்னைப் பற்றிச் சொல்வாயா?

மின்னூல்: நிச்சயமாகச் சொல்வேன் பாட்டனாரே. உங்களைத் தேடித்தேடிப் பாதுகாத்து அச்சுநூல்களாக்கினார்கள்

அறிவோம் தெளிவோம்

கணித்தமிழ்ப் பேரவை

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பரப்புரை அமைப்பே கணித்தமிழ்ப் பேரவை. இஃது, இணையத்தில் தமிழின் பங்களிப்பை வளப்படுத்துதல், கணித்தமிழ் பயன்பாட்டு மென்பொருள்களை உருவாக்கம் செய்ய ஊக்குவித்தல், கணிப்பொறியில் தமிழ் உள்ளீட்டுப் பயிற்சியினை ஆசிரியர்கள், மாணவர்கள், கணிப்பொறி ஆர்வலர்களுக்கு வழங்குதல். தமிழ் மென்பொருள், குறுஞ்செயலி உருவாக்கம், கோடை கால முகாம், கலைக்களஞ்சிய உருவாக்கம் ஆகியனவற்றை இலக்குகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அல்லவா! அதுபோல 2001ஆம் ஆண்டு தமிழகத்தில் பழந்தமிழ் நூல்களை மின்னூலாக்கி வெளியிட்டனர்.

உங்களைத் தேடி அலைந்து சேகரித்தார்கள். எங்களை ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டு தேடுகிறார்கள். ஒருமுறை என்னைத் தரவேற்றம் செய்தால் போதும். உலகமே என்னைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது.

ஓலைச்சுவடி: அடேயப்பா! எண்ண எண்ண எனக்கு வியப்பாய் இருக்கிறது தம்பி. அது எப்படி கணினியில் இருக்கும் உன்னை உலகமெங்கும் படிக்க முடிகிறது?.

மின்னூல்: கணினிகள் ஆங்காங்கே உள்ள வழங்கிகளின் வழியாக இணையத்தால் இணைக்கப்பட்டுள்ளன. தகவல்களைப் பரிமாற விண்வெளியில் தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் இயங்கி வருகின்றன.

ஓலைச்சுவடி: ஓ! விண்வெளியில் செயற்கைக் கோள்கள் இயங்குகின்றனவா? அது எப்படி?

மின்னூல்: நமது அறிவியல் அறிஞர்கள் பலதுறைச் செயல்பாடுகளுக்காக விண்வெளியில் செயற்கைக் கோள்களை இயங்கச் செய்துள்ளனர். எவ்வாறு நீர்நிலைகளிலுள்ள நீரை மேகம் வாங்கி மழையாகப் பொழிகிறதோ அதுபோலத் தகவல் தொடர்புச் செயற்கைக்கோள் வழங்கிகளிலிடமிருந்து மின் சைகைகளைப் பெற்று, வாங்கிகளுக்கு அனுப்புவதால் என்னைப் படிக்க முடிகிறது.

ஓலைச்சுவடி : ஓ சிறப்பு!

மின்னூல்: அது மட்டுமன்று பாட்டனாரே. என்னை உருவாக்கத் தொடங்கியவுடன் இன்னொரு பயனுள்ள வசதியும் மக்களுக்குக் கிடைத்தது. அதுதான் மின்நூலகங்கள். பல்லாயிரக் கணக்கான நூல்களை ஓர் இடத்தில் அமர்ந்தபடி கணினியிலோ அல்லது திறன்பேசியிலோ மிக எளிதாக எடுத்து வாசிக்கலாம்.



ஓலைச்சுவடி: அனைத்து மின்னூல்களையும் வாசிக்கக் கட்டணங்கள் ஏதும் உண்டா? எவ்வளவு பொற்காசுகள் செலுத்த வேண்டும் தம்பி?

மின்னூல்: (சிரித்துக் கொண்டே ...) பாட்டனாரே! தமிழ் இணையக் கல்விக்கழகம் ஐம்பது இலட்சம் பக்கங்களுக்கும் மேலாகக் கொண்ட தமிழ் நூல்களை இணையத்தில் பதிவேற்றியுள்ளது. அவற்றைக் கட்டணம் ஏதுமின்றி நாம் வாசிக்கலாம். வேறுசில இணையத்தளங்களில் கிடைக்கும் சில மின்னூல்களுக்காக நாம் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். அச்சுநூல் விலையை ஒப்பிட்டுப் பார்த்தால் மின்னூலுக்கானக் கட்டணம் மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

ஓலைச்சுவடி: அதாவது ஒரு சிறிய கணினியின்முன் அமர்ந்துகொண்டு அனைத்துத்துறை நூல்களையும் வாசிக்க முடியும் என்பது எவ்வளவு பெரிய வாய்ப்பு தம்பி. இந்த அளவுக்கு முன்னேறியிருப்பதை அறியும்போது, மிகவும் பெருமையாய் இருக்கிறது.

மின்னூல்: இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் காகிதமில்லாப் புத்தகங்கள் என்ற நிலையை நோக்கி, விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறோம் நாங்கள்.

(அப்போது மின்னூல் பேசிக் கொண்டிருக்கும் கணினியை நோக்கி இரண்டு இளைஞர்கள் வந்தமர்கிறார்கள். உடனே, சுவடியும் மின்னூலும் தங்கள் பேச்சை நிறுத்திக்கொள்ள, இளைஞர்கள் பேசிக்கொள்கின்றனர்.)

அமுதன்: நமது மின்னூலின் வடிவமைப்பைத் தொடங்கி விட்டாயா?

எழிலன்: பக்கங்களையெல்லாம் சரிபார்த்துத் தொகுத்துவிட்டேன். அதைச் சிறப்பாக வடிவமைக்க நல்லதொரு வார்ப்புருவைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

தெரியுமா?

இயற்கை மொழியாய்வு – Natural language Processing

மனித மூளையைப் போன்றே கணினிக்கு இயற்கை மொழி அறிவைப் பெறவைத்து ஒரு மொழியிலுள்ள மொழிக்கூறுகளை எளிமையாகப் புரிந்து கொள்ளவும் அம்மொழிக் கூறுகளைச்செயற்கையாக உருவாக்கவும் செயலாற்றவைக்கும் முயற்சியே இயற்கை மொழியாய்வு (Natural Language Processing) ஆகும். மனிதருக்கு இணையாகப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் பேசுவதற்கும் கணினியியல் மாதிரிகளை (Computational Models) உருவாக்குவதே இதன் முதன்மை நோக்கம்.

அமுதன்: இது தமிழ் இலக்கிய நூல்தானே! அதை ஓலைச்சுவடி வடிவ வார்ப்புருவில் வைத்தால் சிறப்பாக இருக்குமே.

எழிலன்: (கணினியில் தேடிக்கொண்டே ...) ஓ ... நிச்சயமாக. இதோ ஓலைச்சுவடி மாதிரியில் ஒரு வார்ப்புரு இருக்கிறதே!

அமுதன்: நல்லது. அதையே வை.

அவன் ஓலைச்சுவடி வார்ப்புருவில் மின்னூலின் பக்கங்களை வைத்து, அந்த நூலை வடிவமைத்தான். சிறிது நேரத்தில் ஓலைச்சுவடிகளைப் புரட்டுவது போன்ற வடிவமைப்பில் மின்னூலின் பக்கங்கள் விரிந்துகொண்டிருந்தன. அதைப்பார்த்து, சுவடியும் மின்னூலும் புன்னகைத்துக் கொண்டன.

உள்ளீட்டுக்களம்

3. தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பம்

தமிழைக் கணினிக்குக் கொண்டுசெல்லும் பொருட்டுப் பல பயன்பாட்டு உள்ளீட்டுக் கருவிகளும் மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தித் தமிழை உள்ளீடு செய்வதற்குக் கீழ்க்காணும் தொழில்நுட்பங்கள் அடிப்படையாய் அமைகின்றன.

1. எழுத்துரு (Font)
2. குறியேற்றம் (Encoding)
3. விசைப்பலகை (Keyboard)
4. தட்டச்சு இடைமுகச் செயலி (Interface Tool)

எழுத்துரு

ஆதிகாலத்தில் கையால் எழுத்துகளை எழுதிய மனிதன் அச்சுப்பொறி வந்தபிறகு அச்சிலும் தட்டச்சிலும் பதிக்கப்படும் எழுத்துகளுக்குரிய உருக்களை வடித்தான். கணினியில் எழுத்துகளை உள்ளீடு செய்ய எழுத்து வரிவடிவங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு வடிக்கப்பட்டு உருவாக்கப்படும் ஒரு மொழியின் எழுத்து வரிவடிவம் 'எழுத்துரு' (Font) எனப்படும்.

குறியேற்றம்

உருவாக்கப்பட்ட எழுத்துருக்களைக் கணினியில் பயன்படுத்த வேண்டுமானால், அம்மொழியின் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வோர் எண்ம மதிப்பைக் கொடுக்க வேண்டும். ஏனெனில், கணினி 0,1 ஆகிய இரும (Binary) எண்களைத்தான் புரிந்து கொள்ளும். இவ்வாறு எழுத்துகளுக்கு எண்ம மதிப்பை வழங்குதலே 'குறியேற்றம்' (Encoding) எனப்படுகிறது.

விசைப்பலகை

விசைப்பலகை அல்லது தட்டச்சுப்பலகை கணினியில் தகவல்களை உள்ளீடு செய்ய உதவும் ஓர் உள்ளீட்டுக் கருவியாகும். விசைப்பலகை எழுத்துகள், எண்கள், குறிகள், கட்டளைகள் ஆகிய விசைகளைக் கொண்டிருக்கும். தேவைக்கேற்ப இந்த விசைகளைத் தட்டுவதன்மூலம் கணினிக்குக் கட்டளைகளையும் உள்ளீடுகளையும் வழங்கலாம்.



தட்டச்சு இடைமுகச் செயலி

தற்போது கணினியில் எளிமையாகத் தமிழைத் தட்டச்சு செய்ய, பல இடைமுகச் செயலிகள் பயன்பாட்டில் உள்ளன. ரோமன் விசைப்பலகை கொண்டு இடைமுகச் செயலிகள் வழியாகத் தமிழ் எழுத்துகளை நாம் உள்ளீடு செய்யலாம். அவற்றுள் சில இடைமுகச் செயலிகளைக் கீழ்க்காணும் இணையத்தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். ஆங்கிலம் தெரிந்தால்தான் கணினியைப் பயன்படுத்த முடியும் என்ற நிலையை இந்த இடைமுகச் செயலிகள் மாற்றியுள்ளன.

உள்ளீட்டில் புதிய முறைகள்

நாம் தட்டச்சு செய்யாமலே தமிழ் எழுத்துகளை உள்ளீடு செய்யும் தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. அதன் முறைகள் சிலவற்றைக் காண்போம்.

தட்டச்சு இடைமுகச் செயலிகள்	இணைய முகவரி	இயங்குதளம் (Operating System)
என்.ஹெச்.எம்.	*http://software.nhm.in/products/writer*	விண்டோஸ்
இ – கலப்பை	*http://thamizha.com*	விண்டோஸ்
குறள் தமிழ்ச்செயலி	*http://www.kuralsoft.com/kural-tamil-software.html*	விண்டோஸ்
அழகி	*http://azhagi.com*	விண்டோஸ்
கீமேன்	*www.Keyman.com/tamil/*	விண்டோஸ், ஆண்ட்ராய்டு, ஐபோன்
கூகுள் உள்ளீட்டுக் கருவி	*https://www.google.co.in/inputtools/*	விண்டோஸ், ஆண்ட்ராய்டு
செல்லினம்	*www.Sellinam.com*	ஆண்ட்ராய்டு, ஐபோன்
தமிழ் விசை	*http://play.google.com/store/apps/details?id=com.tamil.visai&hl=en*	ஆண்ட்ராய்டு
எழுத்தாணி	*http://play.google.com/store/apps/details?id=and.mms.ezhuthani*	ஆண்ட்ராய்டு

கையெழுத்து உணரி (Handwritten Recognition)

கையெழுத்து உணரி என்பது நம் கையெழுத்தை மின்வரிகளாக மாற்றும் தொழில்நுட்பமாகும். இந்த மென்பொருளைக் கொண்டு கையால் எழுதினால் அவற்றை உடனடியாக மின்வரிகளாகப் (Digital text) பெறமுடியும்.

இவ்வசதியைப் பயன்படுத்த விசைப்பலகைக்குப் பதிலாக உங்கள் விரல்களைக் கொண்டோ எழுதுகுச்சி கொண்டோ சுட்டியை அழுத்திப் பிடித்து எழுதும் முறையிலோ நேரடியாகத் திரையில் எழுதலாம். கணினி, செல்பேசி ஆகியவற்றில் வழங்கும் கையெழுத்து உணரி சிறப்பாகச் செயல்படுகிறது. தட்டச்சுச் செய்யத் தெரியாதவர்களும் கணினியை எளிதாகப் பயன்படுத்த இம்மென்பொருள் உதவுகின்றது.

ஒளி வழி எழுத்தறிவான் (Optical Character Recognizer)

வருடியால் நகலெடுக்கப்பட்ட தட்டச்சு, கையெழுத்து ஆவணங்களையும் புகைப்படத்திலுள்ள வரி ஆவணங்களையும் ஒளி வழி எழுத்தறிவான் மூலமாக மின்வரிகளாக மாற்றலாம். கூகுள் வழங்கும் ஒளி வழி எழுத்தறிவான் சிறப்பாகச் செயல்படுகிறது. மின்னூல் ஆக்கத்திற்கும் கையெழுத்துப் படிகளை மின்வரிகளாக மாற்றுவதற்கும் இம்மென்பொருள் உதவுகின்றது.

பேச்சுரை மாற்றி (Speech Recognizer)

இந்த மென்பொருள் தமிழில் நாம் பேசுவதை மின்எழுத்துகளாக மாற்றித் தரும். கூகுள் நிறுவனம் இந்தக் குரல்வழி உள்ளிடும் வசதியை ஜி போர்டு என்னும் செயலி மூலம் வழங்குகிறது. யாருடைய பேச்சையும் எழுத்து வடிவமாக்க இம்மென்பொருள் உதவுகின்றது.

தமிழ்ச் சொற்செயலி (Tamil Word Processor)

தமிழ்மொழியைக் கணினியில் உள்ளீடு செய்யும்போது ஏற்படும் சொற்பிழை, எழுத்துப்பிழை, சந்திப்பிழை, இலக்கணப்பிழை போன்றவற்றைக் கணினி புரிந்துகொண்டு, அவற்றில் உள்ள பிழைகளைச் சரிசெய்து தருவதற்கான மென்பொருளையே தமிழ் சொற்செயலி என்கிறோம். மென்தமிழ், பொன்மொழி போன்ற சொற்செயலிகள் இதற்குப் பயன்படுகின்றன.

கணினியில் தமிழ்மொழியைத் தவறில்லாமல் பயன்படுத்துவதற்கு உதவும் மென்பொருள்கள் இப்பகுதியில் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

சொற்பிழை திருத்தி (spell checker)

தட்டச்சில் ஒரு சொல்லை உள்ளிட்டவுடன் அதில் ஏதேனும் எழுத்துப் பிழை இருந்தால் அதைச் சுட்டிக்காட்டுவதோடு அதற்குச் சரியான பரிந்துரையைக் கொடுப்பதும் தமிழ்ச் சொற்பிழை திருத்தியின் பணியாகும்.

தெரியுமா?

வைரஸ் தாக்குதலும் பாதுகாப்பும்

1. இணையத்திலிருந்து நம்பிக்கைக்குரிய நிறுவனங்கள் வழங்கும் மென்பொருள்களையே பயன்படுத்தவேண்டும்.
2. களவு நகல் மென்பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது. (Pirated Softwares)
3. உரிமம்பெற்றமுறையான மென்பொருள்களையே பயன்படுத்தவேண்டும் (Original – Licenced)
4. நண்பர்கள் தரும் விரலிகளை (Pendrive) வைரஸ் பரிசோதனை செய்யாமல் பயன்படுத்தக்கூடாது.
5. இணையவழி வங்கிக்கணக்கு மற்றும் கடன் அட்டை பயன்படுத்துவோர் கடவுச்சொல்லை உள்ளீடு செய்யும்முன்பு, அது சரியான இணையத்தளம்தானா என்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும்.

சந்திப்பிழை திருத்தி (Sandhi Checker)

தட்டச்சு செய்யும்போது இரண்டு சொற்களுக்கு இடையில் ஏற்படும் சந்திப் பிழைகளைச் சரிசெய்யும் மென்பொருளுக்குச் சந்திப்பிழை திருத்தி என்று பெயர். இது விடுபட்ட ஒற்றுகளை இடுவதுடன், தவறாக இடப்பட்ட ஒற்றுகளையும் சரிசெய்யும்.

செய்கிறோம்.பேச்சுத் தமிழில் செய்யும் தவறுகளை யாரும் கண்டு கொள்வதில்லை. ஆனால் எழுதும்போது நாம் செய்யும் தவறுகள், பளிச்சென்று தெரிகின்றன.அவற்றைக் களைந்து நல்ல தமிழில் எல்லோரும் எழுதவேண்டும் என்பதே இந்த வலைப்பூவின் நோக்கம்.

http://mutiru-nallatamil.blogspot.in/2011/11/61-80_07.html

61	பிழை சரி	~~தமிழ் தாய் வாழ்த்து பாடினான்.~~ தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினான்.
62	பிழை சரி	~~பலக் கலைகள் பயின்றான்.~~ பல கலைகள் பயின்றான்.
63	பிழை சரி	~~ஆயிரத்தி தொளாயிரத்தி எண்பத்தி ஒன்பது.~~ ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பது.
64	பிழை சரி	~~சாமிக்கு வெள்ளி கவசம் அணிவித்தனர்.~~ சாமிக்கு வெள்ளிக்கவசம் அணிவித்தனர்.
65	பிழை சரி	~~பாலை நன்றாய் குடிக்குது கன்று குட்டி.~~ பாலை நன்றாய்க் குடிக்குது

தமிழ்ச்சொல் சுட்டி (Native Word Suggestion)

கணினியில் தமிழைப் பயன்படுத்தும்போது தமிழ்ச் சொற்களுடன் பிறமொழிச் சொற்கள் கலந்து அப்படியே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை நீக்கித் தனித்தமிழில் எழுதுவதற்குத் துணை செய்யும் வகையில் பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களை மாற்றித்தரும் மென்பொருள் தமிழ்ச்சொல் சுட்டி என்பதாகும்.

இலக்கணப்பிழை திருத்தி (Grammar Checker)

கணினியில் தமிழைப் பயன்படுத்தும்போது ஏற்படும் ஒருமை-பன்மை மயக்கம், உயர்திணை-அஃறிணை மயக்கம், சொற்றொடர் பிழை போன்றவற்றைக் கண்டறிந்து, திருத்தித் தருவதை இலக்கணப்பிழைதிருத்தி என்கிறோம்.

மின் அகராதி (e–Dictionary)

மின்னணு அகராதி என்பது எண்ம வடிவத்தில் தரவுகளைக் கொண்ட அகராதியாகும். பல்வேறுபட்ட மின்னணு சாதனங்களின் மூலம் இவ்வகராதிகளை நாம் அணுகலாம். கணினிகள், திறன்பேசிகள், இணையப்பயன்பாடுகள், நிறுவப்பட்ட மென்பொருள்கள், திறன்பேசிச்செயலிகள், இணையச்செயலிகள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் மின்னணு அகராதிகள் கிடைக்கின்றன.

இதில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, ஆங்கிலம் – தமிழ் அகராதி, தமிழ் – தமிழ் அகரமுதலி, பால்ஸ் அகராதி, தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் ஒலிப்புடன் கூடிய மின் அகராதி, சங்க இலக்கிய அகராதி, காலக் குறிப்பு அகராதி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

இயந்திர மொழிபெயர்ப்பு (Machine Translation)

ஒரு செய்தியை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மென்பொருள்மூலம் மொழிபெயர்க்கும் முறை இயந்திர மொழிபெயர்ப்பாகும். கூகுள் மொழிபெயர்ப்பி என்ற இணையவழி மொழிபெயர்ப்பு மென்பொருள் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் பயன்பட்டு வருகின்றது.

வேறு மொழியில் வடிவமைக்கப்பட்ட ஓர் இணையத்தளத்தின் உள்ளடக்கத்தை அம்மொழி தெரியாதவர்கூட தமக்குத் தெரிந்த மொழியின் மூலம் மொழிபெயர்த்துப் பார்க்க முடிகிறது.

மேற்கண்ட மென்பொருள்கள் மூலம் கணினி மற்றும் திறன்பேசி ஆகியவற்றில் பல்வேறு தமிழ் உள்ளீட்டுச் செயல்பாடுகளை விரைவாகவும் செம்மையாகவும் நம்மால் செய்யமுடியும்.

4. இணைய ஊடகம் – உருவாக்கமும் பயன்பாடும்

இன்றைய இணையவெளியில் மின்னஞ்சல், வலைப்பூ, இணைய இதழ்கள், முகநூல், கீச்சகம், புலனம், இசுகை போன்ற எண்ணற்ற தகவல் பரிமாற்ற ஊடகங்கள் மக்கள் பயன்பாட்டிற்கெனக் கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்திக் கல்வி, சமூகம் சார்ந்த செயல்பாடுகளில் நாம் ஆக்கப்பூர்வமாக ஈடுபடலாம்.

மின்னஞ்சல்

கணினிகளுக்கிடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல் சேவையாகும். இணையத்தில் மின்னணுத் தொடர்புக் கருவிகளைக்கொண்டு செய்திகள், படங்கள், காணொலிகள், கோப்புகள் முதலானவற்றைச் சிலநொடிகளில் பரிமாறிக் கொள்ளலாம். கூகுள், யாகூ, ரெடிஃப்மெயில், வேர்டுபிரஸ் போன்ற உலகின் பெரும்பான்மையான மின்னஞ்சல் நிறுவனங்கள் இச்சேவையைக் கட்டணமின்றி வழங்குகின்றன.

இத்தகைய நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் நாம் மின்னஞ்சல் பயனர் கணக்கைத் தொடங்கவேண்டும். அதற்கான படிவத்தில் நம் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். அதன் மூலம் மின்னஞ்சல் முகவரி ஒன்றையும்



கடவுச்சொல் ஒன்றையும் நாம் பெறலாம். தற்போது பல இணையத்தளங்கள் பயனரின் நம்பகத் தன்மையை மின்னஞ்சல் முகவரியைக் கொண்டே உறுதி செய்கின்றன. இதனால் இணையத்தின் சேவையை முழுமையாகப் பயன்படுத்த மின்னஞ்சல் முகவரி தேவைப்படுகிறது.

வலைப்பூ (Blogspot)

இணையவெளியில் வழங்கப்படும் நமக்கான கட்டணமில்லா ஊடகக்களமே வலைப்பூ. ஒரு குறிப்பிட்ட தனிநபரோ குழுவோ தாம் விரும்பும் வகையில் செய்திகளைத் திரட்டி, படைப்புகளைத் தாமே எழுதி, பிறவகைகளில் சேகரித்துப் பதிவு செய்யும் ஊடகமே வலைப்பூ. இதில் ஒலிஒளி வசதிகளைப் பயன்படுத்துவது கூடுதல் சிறப்பு.

படைப்பாற்றல்மிக்க ஒருவருக்குத் தணிக்கைக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி வழங்கப்படும் முழுச்சுதந்திர வெளியாக இது அமைகிறது. இவ்வசதியினை கூகுள், யாகூ, ரெடிஃப் மெயில், எம் எஸ் என் போன்ற நிறுவனங்கள் தம் பயனருக்கு வழங்குகின்றன.

வலைப்பூ உருவாக்குவோம்

நமக்கான வலைப்பூவினை கூகுளில் எப்படி எளிமையாக உருவாக்கிப் பயன்படுத்துவது என்பதைக் காண்போம்.

படி – 1 முதலில் கூகுளில் ஒரு மின்னஞ்சல் கணக்கைத்தொடங்குக. மின்னஞ்சல் கணக்கைத் தொடங்கியவுடன் வலைப்பூ வசதிக்குச் செல்க.



படி-2 சென்றவுடன் "புதிய வலைப்பதிவை உருவாக்குக" என்ற பக்கம் வரும்.



படி-3 அதில் உமது வலைப்பூவிற்கான பெயரையும் வலைப்பூ முகவரியையும் தட்டச்சு செய்து, "வலைப்பதிவை உருவாக்கு" என்பதைச் சொடுக்கவும்.



படி-4 வலைப்பதிவை உருவாக்கு என்பதைச் சொடுக்கியவுடன் நமக்கான வலைப்பதிவின் முகப்புத் தோற்றம் கிடைத்துவிடும்.



படி-5 இப்போது நமது வலைப்பக்கத்தில் வலப்பக்க மூலையில் உள்ள 'வடிவமைப்பு' என்பதைச் சொடுக்கி, புதிய இடுகைக்கான பக்கத்திற்கு வரவேண்டும்.



படி-6 'புதிய இடுகையை உருவாக்குக' என்பதைச் சொடுக்கினால், புதிய இடுகைக்கான பக்கம் பின்வருமாறு வரும்.



படி-7 அதில் நமது படைப்பைத் தட்டச்சு செய்ய வேண்டும்.



படி-8 'வெளியிடு' என்பதைச் சொடுக்கினால் படைப்புடன் கூடிய வலைப்பக்கம் கிடைத்துவிடும்.

படி-9 படைப்பைப் படிப்பவர் அதுபற்றிய பின்னூட்டம் இட்டால் அது பின்வருமாறு வெளிப்படும்.



இப்போது நாம் எளிய முறையில் ஒரு வலைப்பூவினை உருவாக்கி, வெற்றிகரமாக நமது படைப்பை வெளியிட்டிருக்கிறோம்.

வலைப்பூ உருவாக்கும் நுட்பங்கள்

1. மேற்கண்ட வலைப்பூ உருவாக்கம் ஓர் எளிய வழிமுறையே. அதன் விரிவான செயல்பாடுகளைப் பயன்பாட்டின்வழி அறிவது வலைப்பூவைச் சிறப்பாக அமைக்க உதவும்.

2. வலைப்பூவில் நம்மைப்பற்றிய விவரங்கள், ஒளிப்படம், ஒலிக்கோப்பு, போன்றவற்றைச் சேர்க்க முடியும்.

3. வலைப்பூவிற்கான பெயரையும் வலைப்பூ முகவரியையும் இதுவரை யாரும் பயன்படுத்தாத ஒன்றாக, புதுமையானதாகத் தேர்வு செய்வதும் நலம். அது நம் வலைப்பூவினைத் தேடுபொறியில் தேடுவோருக்கு எளிதாகக் கிடைக்கச் செய்யும் உத்தி.

அறிவோம் தெளிவோம்

வலைப்பூ திரட்டிகள்

1. திரட்டி.இன் (http://www.thiratti.in)
2. வலைப்பூக்கள் (http://www.valaipookkal.com)
3. தமிழ்மணம் (: http://www.tamilmanam.net)
4. திரட்டி.காம் (http://www.thiratti.com)
5. தகவல் இன்போ (http://www.thakaval.info/blogs)
6. தேன்கூடு (:http://www.thenkoodu.com)
7. தமிழ்வெளி (http://www.tamilveli.com)
8. சங்கமம் (http://tamil.blogkut.com)
9. தமிழ்பாரதி (http://www.thamizhbharathi.com

வலைப்பூவினைப் பயன்படுத்தும் முறை

1. நமது படைப்புகளை வெளியிட்டு, அதை உலகளாவிய வாசகர்களை வாசிக்கச் செய்யலாம்.

2. வலைப்பூக்களைத் தொகுத்து வாசகர் பார்வைக்குத் தரும், திரட்டிகளில் நம் வலைப்பூவை இணைப்பதன்மூலம் வாசகர் எண்ணிக்கையினை அதிகரிக்கலாம்.

3. வலைப்பூவின் தளவமைப்பினைப் பயன்படுத்தி, நமக்குத் தேவையான பொருண்மைகளில் பக்கங்களை உருவாக்க இயலும்.

4. நாம் வெளியிடும் படைப்புகளைக் கால, பொருள் அடிப்படையில் தலைப்பிட்டுச் சேமித்து வைக்கலாம்.

5. வகுப்பறைக்கெனத் தனி வலைப்பூவினை உருவாக்கி, மாணவர்களின் பாடம் சார்ந்த செயல் திட்டங்களைப் பதிவேற்றலாம். மற்ற மாணவர்கள் பின்னூட்டம் இடலாம். ஆசிரியர்கள் செயல் திட்டங்களை மதிப்பிடலாம்.

6. பள்ளிக்கெனத் தனி வலைப்பூவினை உருவாக்கி, வகுப்பறை வலைப்பூக்களை இணைக்கலாம். அதில் சிறந்த பள்ளிச் செயல்பாடுகள் அனைத்தையும் பலர் அறியவும் மதிப்பிடவும் வழங்கலாம். பள்ளி ஆண்டு மலர்களை வெளியிடலாம்.

7. நம் படைப்புகளுக்கு உடனுக்குடன் கிடைக்கும் பின்னூட்டம் இதன் சிறப்பு. அவ்வகையில் நாம் எவற்றை வெளியிடலாம் என்பதில் சுதந்தரமும் கட்டுப்பாடும் நம்கையில் உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வலைப்பூவில் எழுதுதல்

நம் அனுபவங்கள், எதிர் கொள்ளும் சவால்கள், ஏற்படும் பிரச்சினைகள் குறித்து

நாம் எதிர்வினையாற்ற வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் சமூக அக்கறையோடு கருத்துகளை உலகோடு பகிர்ந்துகொள்ள வலைப்பூ மிகச்சிறந்த படைப்புக் களமாக விளங்குகிறது.

அச்சில் வெளியாகும் நாளிதழ், வார, மாத இதழ்கள் குறிப்பிட்ட ஒரு நிறுவனம் சார்ந்த கருத்தாக்கங்களோடு படைப்புகளை வெளியிடுகின்றன . அவை பெரும்பாலும் வாசகர்களுக்கான பொழுதுபோக்குப் படைப்புகளைத் தாங்கி வருபவை. அவற்றில் நமது சொந்தக்கருத்துகளுக்கு ஏற்பப் படைப்புகளை எழுதுவது சாத்தியமில்லை.

ஆனால், வலைப்பூ நாம் நமக்காகவே உருவாக்கிக் கொள்ளும் களம். அதில் கட்டற்ற சுதந்தரத்தோடு நமது கருத்துகளை வலிமையாக வைக்கலாம்; உலக அளவிலான

அறிவோம் தெளிவோம்

மூடுல் (Moodle)

மூடுல் என்பது Modular Object–Oriented Dynamic Learning Environment என்ற ஆங்கிலத் தொடரின் சுருக்கமாகும். 1999ஆம் ஆண்டிலிருந்து மெல்ல வளர்ந்து வரும் மூடுல் தற்போது உலகின் 100 மொழிகளில் செயலாற்றி வருகிறது. கற்கும் மாணவர்களை மனத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த மென்பொருள் இணையவழிக் கல்விக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஆசிரியர்கள் திறம்படச் செயல்பட மூடுல் உதவுகிறது. மூடுல் ஒரு திறவூற்று மென்பொருள் என்பதால், இதை அனைவரும் கட்டணமின்றிப் பயன்படுத்தலாம். இதனை எடுத்து மாற்றங்களையும் செய்து கொள்ளலாம். மூடுலின் முக்கியக் கூறுகளான மாணவ மன்றம் (Forum) கலந்துரையாடல் (Chat) விக்கி (Wiki) வலைப்பூ (Blog) ஆகியவற்றைத் தேவைக்கேற்பப் பயன்படுத்தவும் தேவையில்லை என்றால் மூடிவைக்கவும் முடியும். எல்லா வகையான விளக்கக் குறிப்புகள், தரவுகள் ஆகியவை மிகவும் பாதுகாப்பாக இருக்கும் வகையில் மூடுல் செயலாற்றுகிறது.

வாசகர்களின் பின்னூட்டங்களை உடனுக்குடன் பெறலாம்.

வலைப்பூவில், ஒரு குறிப்பிட்ட பொருளில் எதிர்பாராத தெறிப்பான முடிவோடு எழுதப்படும் சிறுகதை, பரந்த தளத்தில் ஒரு மையப்பொருளை விரித்து, வாழ்வியல் உண்மைகளைக் கண்டடைய முயலும் புதினம், கதைமாந்தர்களின் உரையாடல்களாக, காட்சிகளாக அமையும் நாடகம் ஆகியவற்றை நாம் பதிவேற்றலாம்.

நடப்புக்கால அரசியல், சமூகம், அறிவியல், கலை நிகழ்வுகள், இலக்கியத் திறனாய்வுகள் போன்றவற்றை மையப்படுத்தி அமையும் கட்டுரைகள் வாசகர்களை மிகவும் ஈர்க்கும்.

நேர்காணல்கள், மொழிபெயர்ப்பு ஆகியவற்றோடு, முத்திரை வாசகங்கள், நகைச்சுவைத் தெறிப்புகளை எழுதலாம்.

முகநூல், புலனம், கீச்சகம் முதலான சமூக ஊடகங்களில் நாம் அஞ்சல் செய்யும் அல்லது பகிரும் நிலைத் தகவல்கள், ஒளிப்படங்கள் போன்றவை சமூகப்பயணம், கல்விப் பயணம் கொண்டவையாக அமையவேண்டும். வெறும் மேலோட்டமான பொழுதுபோக்குச் செயல்கள் அவ்வூடகத்தின் வலிமையைக் குறைக்கும். நம் நேரத்தையும் வீணாக்கும்.

விக்கிப்பீடியாவில் எழுதுதல்

தமிழ் விக்கிப்பீடியாவில் நம் பயனர் கணக்கின்வழியே சென்று கட்டுரைகளை எழுதலாம். அதில் எழுதும்போது ஒரு கட்டற்ற தகவல் கலைக்களஞ்சியம் அது என்பதை மனத்தில் கொள்ளவேண்டும்.

அதில் புனைவு இலக்கியங்கள், தனிப்பட்ட ஆளுமைகள் குறித்த கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள் போன்றவற்றை எழுதமுடியாது. தகவல் கட்டுரைகளை எழுதவோ, ஏற்கெனவே உள்ள கட்டுரைகளைச் சான்றுகளின் அடிப்படையில் திருத்தவோ முடியும்.

இணைய இதழ்களில் படைப்புகள்

இணைய இதழ் என்பது இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழாகும். இது முழுக்க

முழுக்க இணைய வாசகர்களை மட்டுமே சென்றடைந்தாலும் இன்று அச்சிதழ்களும் வலைப்பூவில், இணைய இதழ்களில் வெளியானவற்றை மீள்பதிவு செய்கின்றன. அவ்வகையில் இணைய இதழ்கள் இன்று சிறந்த ஊடகமாக வளர்ந்து வருகின்றன.

அச்சிதழ்களுக்கு நம் படைப்புகளை அனுப்பும்போது, அவை ஒதுக்கப்படுவதும் தணிக்கைக்கு உட்படுவதும் நடக்கும். ஆனால் இணைய இதழ் நல்ல படைப்பாளிக்குக் கட்டற்ற சுதந்திரத்தைத் தருகிறது.

இணைய இதழ்களில் நம் பயனர் கணக்கின் வழியே சென்று, நமது படைப்புகளைத் பதிவேற்றம் செய்யலாம். ஆசிரியர் குழுவினர் அவற்றைத் தேர்வு செய்து வெளியிடுவர்.

சில இணைய இதழ்கள் அவற்றின் மின்னஞ்சல் முகவரி வழியாகப் படைப்புகளைப் பெற்று, பின்னர்த் தேர்வுசெய்து, வெளியிடுகின்றன. இந்த இதழ்களின் உள்ளடக்கத்தினை நன்கு புரிந்துகொண்டு, நம் படைப்பை அனுப்புதல் நலம். நம் வலைப்பூவினையே நாம் இணைய இதழாகவும் மாற்ற முடியும். அதில் படைப்புகளை இதழ் வடிவில் பதிவிட்டு வார, மாத காலமுறைப்படி வெளியிடலாம்.

பள்ளிகளில் மாணவர்களால் உருவாக்கப்படும் கையெழுத்து இதழ்களின் படைப்புகளை இணைய இதழாகத் தொடங்கிப் பதிவேற்றலாம். பள்ளி ஆசிரியர்களிடமும் படைப்புத்தளத்தில் இயங்கும் ஆளுமைகளிடமும் படைப்புகளைப் பெற்று வெளியிடலாம்.

இணைய இதழ்கள் இன்று உலகளாவிய வாசகர்களால் வாசிக்கப்படுகின்றன. தமிழில் வெளியாகும் சில மின்னிதழ்களைப் பற்றிக் கீழே காண்போம்.

திண்ணை: இது வணிக இதழ்கள் வெளியிடாத ஆழமான உரத்த சிந்தனையுள்ள கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. ஒவ்வொரு துறைசார்ந்த வல்லுநர்களின் பார்வைகளை விரிவாகப் பதிவு செய்கிறது. தமிழ் இலக்கிய இலக்கணங்கள் தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், அவை வெளியாகியுள்ள நூல்கள் குறித்துத் தொகுத்துத் தருகிறது. உலகிலுள்ள தமிழ்ச்சங்கங்கள் பற்றிய தகவல்களையும் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் இவ்விதழ் விரிவாகத் தருகிறது.

பதிவுகள்: இந்தியப் பல்கலைக் கழக மானியக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு இதழ்களின் பட்டியலில் 'பதிவுகள்' மின்னிதழ் உள்ளது. தனி நபர்கள், நிறுவனங்களின் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளும் இவ்விதழில் வெளியிடப்படுகின்றன.

கீற்று: இணைய இதழ்களுக்கு என்றே கிடைத்த கட்டற்ற வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மிகக் கூரான வகையில் வெளிப்படுத்துவதில் இவ்விதழ் சிறந்து விளங்குகிறது. அன்றாட நிகழ்வு, மற்றும் பிரச்சினைகளை விவாதிக்கும் முனைப்பான கட்டுரைகளைத் தருகிறது.

வார்ப்பு: தமிழ்க்கவிதைகள், கவிதைத் திறனாய்வுகள், தமிழ்க் கவிஞர்தம் நேர்காணல்கள் என முழுவதும் கவிதைகளுக்காகவே வெளியிடப்படும் இதழ் இது. கவிதைகள் குறித்த ஆழமான புரிதலுக்கு இவ்விதழ் உதவுகிறது.

சொல்வனம்: நவீன இலக்கியத் தளத்தில் மிகுந்த செவ்வியல் தன்மையோடு படைப்புகளை மாதமிருமுறை இவ்விதழ் வெளியிடுகிறது. அரசியல், சமூகம், இந்தியத் தத்துவத்துடன் உலக இலக்கியங்களையும் செம்மையாய் வழங்குகிறது.

முத்துக்கமலம்: ஒரு பொழுதுபோக்கு இதழுக்குரிய பொதுவான தகவல்களுடன் வெளிவருகிறது இவ்விதழ். மின்புத்தகங்கள், வலைப்பூக்கள் தொடர்பான தகவல்களைத் தருகின்றது. இதுவும் இந்தியப் பல்கலைக் கழக மானியக்குழுவால் ஏற்பளிக்கப்பட்ட இதழ்.

ஊடறு: பெண்களுக்காகப் பெண்களே நடத்தும் இதழ். அதிகார வெளியினை ஊடறுக்கும் பெண்களின் குரல் என்ற முத்திரை வரிகளோடு பெண் வாழ்வியலின் அனைத்துக் கூறுகளின் ஊடாகப் பதிவுகளைத் தரும் இதழ்.

வல்லமை: பொதுவாசகர்களைக் கவரும் வண்ணம் பல்வேறு வகைமைகளிலும் வாசிப்புச் சுவையோடு படைப்புகளைத் தரும் இதழ். இதுவும் இந்தியப் பல்கலைக் கழக மானியக்குழுவால் ஏற்பளிக்கப்பட்ட இதழ்.

இதுபோன்ற பல்வேறு மின்னிதழ்களும் இணைய வாசகர்களை நோக்கித் தமது பங்களிப்பைச் செய்துவருகின்றன. அவற்றில் கல்விப்பயன் சார்ந்த இணைய இதழ்களை வாசித்து நாம் பயனடையலாம்.

சமூக ஊடகங்கள்

சமூக ஊடகங்கள் நட்புக்கெனத் தொடங்கிய நிலைமாறி, இன்று பொது நோக்கத்திற்காக இணைந்து செயலாற்றும் களங்களாக உயர்ந்துள்ளன. அவை அவசரக் காலங்களில் மக்களை விரைவாக ஒருங்கிணைக்கக்கூடிய வலிமையான கருவிகளாக உள்ளன. அவற்றுள் முகநூல், புலனம், கீச்சகம் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

முகநூல் (Facebook)

இணையத்தில் உலகளாவிய நண்பர்கள் குழுவை உருவாக்கித் தம்முடைய தகவல்கள், காணொலிகள், புகைப்படங்கள் போன்றவற்றைப்பகிர்ந்து கொள்ளும் சமூக ஊடகமே முகநூல். இதில் விருப்பங்களையும் பின்னூட்டங்களையும் உடனுக்குடன் பெறமுடியும். இதில் மாணவர் குழுக்களை அமைத்து, கல்விச் செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்தலாம். தமிழ் அறிஞர்களை மாணவர்களுடன் கலந்துரையாட வைக்கலாம். தமிழ் மொழி, கலை, இலக்கியம் சார்ந்த நண்பர்கள் குழுக்களுடன் இணைந்து நம்முடைய கருத்துகளைப் பகிரலாம்.

கீச்சகம் (Twitter)

செல்பேசியில் குறுந்தகவல் அனுப்புவதுபோல் இணையத்தின்வழி குறுந்தகவல் அனுப்பப் பயன்படும் சமூக ஊடகமே கீச்சகம். இதில் சொற்கள், படங்கள், சிறுகாணொளிகளைப் பதிவிடலாம். நம்மை யார் பின்தொடர்கிறார்கள், நாம் யாரைப் பின்தொடர்கிறோம் என்ற அடிப்படையில் கீச்சகம் அமைகிறது.

கீச்சகக் குறும்பதிவுகளைக் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம். ஆசிரியர்களிடம் மாணவர்கள் ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். வகுப்புவாரியாகக் குழுக்களை அமைத்து விவாதிக்கலாம். காலவரையறைக்கு அப்பாற்பட்ட வகுப்பறைச் சூழலைக் கீச்சகம் உருவாக்குவது குறிப்பிடத்தக்கது.

புலனம்/கட்செவி (Whatsapp)

திறன்பேசியில் தனிப்பட்ட முறையிலும் நண்பர்கள் குழுக்களை உருவாக்கியும் தங்களுக்குள் தகவல்கள், காணொலிகள், புகைப் படங்கள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளும் சமூக ஊடகச் செயலியே புலனம். இன்று பெருமளவில் எளிதாகத் தகவல் பரிமாறிக் கொள்ளப் பயன்படும் ஊடகமாக இது விளங்குகிறது. கல்வி நிறுவனங்கள் பாடவாரியாகக் குழுக்கள் அமைத்துக் கல்விச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம்.

இசுகை (Skype)

உலகின் எந்தவோர் இடத்தில் உள்ளவருடனும் இணையத்தின்வழிக் கட்டணமின்றிப் பார்க்கவும் பேசவும் வழிசெய்யும் ஊடகமே இசுகை. இதில் ஒருவர் மற்றொருவருடனோ, பலருடனோ சொற்கள், ஒலி, காணொலி

வழியாகத்தொடர்புகொள்ளலாம்.மின்னஞ்சல், முகநூல், கீச்சகம் போன்று இதற்கும் கணக்குத் தொடங்கவேண்டும்.

இசுகையிலுள்ள காணொலி வசதியைப் பயன்படுத்தி, ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலைப் பல்வேறு இடங்களில் உள்ள மாணவர்குழுக்கள் பார்த்து, உரையாடிப் பயனடையலாம்.

இணையப்பாதுகாப்பு

அனைத்துத் துறைகளிலும் தவிர்க்க இயலாத வலிமையான சாதனமாக இணையம் இன்று விளங்குகிறது. இக்காலக்கட்டத்தில் இணையத்தை ஆக்கப் பூர்வமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாதது. இணையத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த, பின்வரும் வழிகாட்டல்களைப் பின்பற்றலாம்.

இணையம் சார்ந்த அனைத்துப் பரிமாற்றங்களையும் நமக்கான தனிப்பட்ட கணினி, திறன்பேசி ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளுதல் நலம்.

நமது அனைத்துப் பயனர் கணக்குகளின் கடவுச்சொற்களை யாருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடாது.

பாதுகாப்பற்ற இணையத்தளங்களில் பதிவேற்றவோ, பதிவிறக்கவோ கூடாது.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரும் தகவல்களைத் தவிர, பிறவற்றைக் மிகக்கவனமாகக் கையாளவேண்டும்.

இணையத்தை முடக்குதல், தகவல்களைத் திருடுதல் போன்ற இணையக்குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு பெற வேண்டியது மிகவும் தேவை.

கணினி, திறன்பேசி ஆகியவற்றை நாம் தொடர்ந்து பயன்படுத்தும்போது குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

நம்பகமற்ற தகவல்களைப் பெறும்போது விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

அறிவோம் தெளிவோம்

திறவூற்றும் கட்டற்ற மென்பொருளும்
(Open Source and Free Software)

மென்பொருள் உருவாக்கத்தின் போது எழுதிய நிரல்களையும் (Programs) உருவாக்க முறையினையும் சேர்த்து அனைவருக்கும் தெரியும் வகையிலும் பலரும் ஒரு மென்பொருளை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையிலும் கட்டணமின்றி வழங்குவதற்குத் திறவூற்று அல்லது திறமூல மென்பொருள் (Open Source Software) என்று பெயர்.கட்டற்ற மென்பொருள் (Free Software) என்பது, எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் பயன்படுத்த, நகலெடுக்க, கற்க, மாற்றம் செய்ய, மறுவிநியோகம் செய்ய உதவும் மென்பொருளாகும். மென்பொருள்களுக்கான கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலையுறுதலே இதன் அடிப்படைக் கருத்துருவாகும். திறவூற்று மென்பொருளை நாம் மேம்படுத்திப் புதிய மென்பொருளாக வெளியிட முடியாது. ஆனால் கட்டற்ற மென்பொருள்களை நாம் மேம்படுத்திப் புதியதொரு மென்பொருளாக வெளியிடலாம்.

கணினி, திறன்பேசி ஆகியவற்றில் உள்ள விளையாட்டு, பொழுதுபோக்கு சார்ந்த பகுதிகளைப் புத்துணர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அவற்றில் தொடர்ச்சியாக ஈடுபடுவது நமது உடல், மனநலத்தையும் செயல்திறனையும் பாதிக்கும்.

மேற்கண்டவற்றை மனத்திற்கொண்டு இணைய வெளியை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தி, நவீன அறிவியல் வாழ்வோடு நம்மைத் தகவமைத்துக் கொண்டு, வெற்றி பெறுவோம்.

தெரியுமா?

கணினித்தமிழ் விருதுகள்

சிறந்த தமிழ் மென்பொருளை உருவாக்கும் நிறுவனம்/ உருவாக்குபவர்க்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் 'முதலமைச்சர் கணினித்தமிழ் விருது' வழங்கப்படுகிறது

கலைச்சொற்கள்

AltaVista	–	அல்டாவிஸ்டா
ARPANET	–	ஆர்பாநெட்
Ask Jeeves	–	ஆஸ்க்ஜீவ்ஸ்
Bing	–	பிங்
Browser	–	உலவி
Browsing	–	உலவுதல்
Client	–	வாங்கி
Corporate Website	–	நிறுவன இணையத்தளம்
Cyber Crime	–	இணையக்குற்றம்
Digital	–	எண்மம்
Dynamic Website	–	இயங்கு இணையத்தளம்
E Commerce Website	–	மின் வணிக இணையத்தளம்
E Learning Website	–	மின்கற்றல் இணையத்தளம்
Encoding	–	குறியேற்றம்
Epic	–	எபிக்
Ethernet Card	–	ஈதர்நெட்
Facebook	–	முகநூல்
Font	–	எழுத்துரு
Gaming Website	–	விளையாட்டு இணையத்தளம்
Google	–	கூகுள்
Google Chrome	–	கூகுள் குரோம்
Hand Written Recognition	–	கையெழுத்து உணரி
History of Internet	–	இணைய வரலாறு
Host Computer	–	கணினிச் சேவையகம்
HTML – Hypertext Markup Language	–	மீஉரைக் குறிப்பு மொழி
HTTP – HyperText Transfer Protocol	–	மீஉரைப் பரிமாற்ற நெறிமுறை
Interface Tool	–	இடைமுகச்செயலி
Internet	–	இணையம்
Internet explorer	–	இன்டெர்நெட் எக்ஸ்புளோரர்
Internet Protocal – IP	–	இணைய நெறிமுறை
ISP – Internet Service Provider	–	இணைப்பு வழங்கும் நிறுவனம்
ISP Account	–	இணையக் கணக்கு
Keyboard	–	விசைப்பலகை
LAN – Local Area Network	–	குறும்பரப்பு வலைப்பின்னல்

Lycos	–	லைகோஸ்
Modem	–	இணக்கி
Mozilla Firefox	–	மோசில்லா பயர்பாக்ஸ்
MSN	–	எம்எஸ்என்
Network Interface	–	இடைமுக அட்டை
Opera	–	ஓபரா
Operating System	–	இயங்குதளம்
Optical Character Recognizer	–	ஒளி வழி எழுத்தறிவான்
Password	–	கடவுச்சொல்
Personal Website	–	தனியாள் இணையத்தளம்
Pocket Switching Technology	–	தரவு மாற்றத் தொழில்நுட்பம்
Safari	–	சஃபாரி
Scanner	–	வருடி
Search engines	–	தேடுபொறி
Server	–	வழங்கி
Skype	–	இசுகை
Speech Recognizer	–	பேச்சுரை மாற்றி
Static Website	–	நிலை இணையத்தளம்
TCP Transmission Control Program	–	செய்திப்பரிமாற்றத் தொழில்நுட்பம்
Text to Speech	–	எழுத்து – பேச்சு மாற்றி
Twitter	–	கீச்சகம்
Typing Interface Tool	–	தட்டச்சு இடைமுகச் செயலி
Unicode	–	ஒருங்குறி
URLs – Uniform Resource Locators	–	சீரான வள இடங்காட்டிகள்
Username	–	பயனர் பெயர்
WAN – Wide Area Network	–	அகன்ற பரப்பு வலைப்பின்னல்
Web Directories	–	தகவல் களஞ்சிய இணையத்தளம்
Web Portal	–	இணையத்தளத் தொகுப்பு
Web pages	–	வலைப்பக்கங்கள்
Website	–	வலைத்தளம் / இணையத்தளம்
WhatsApp	–	புலனம்/கட்செவி
WIFI	–	அருகலை
Word Processor	–	சொல்லாளர்/சொற்செயலி
World Wide Web – WWW	–	உலகளாவிய வலை
Yahoo	–	யாகூ
Zip File	–	சிப்பம்/குறுக்கக்கோப்பு

கண்ணாடி

9DXQHI

விளக்கம் கண்டு விடை தருக

1. இது இணையத்தில் நமக்குத் தேவையானவற்றைத் தேடித்தரும் செயலைச் செய்கிறது. ______________________.

2. தமிழில் அச்சிடப்பட்ட முதல்நூலாகக் கருதப்படும் நூல் இது. ___________.

3. கணினியில் எழுத்துகளை உள்ளீடு செய்யும் வரிவடிவங்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. _________________.

4. இவை கணினியில் எளிமையாகத் தமிழைத் தட்டச்சு செய்யப் பயன்படுகின்றன. _____

5. இந்தியாவில் முதன் முதலாக அச்சில் ஏறிய மொழி என்று இதனைச்சொல்வர்_______.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

6. பத்துப்பாட்டினைப் பதிப்பித்தவர்

அ) உ.வே. சாமிநாதர் ஆ) சி.வை. தாமோதரனார்

இ) ஆறுமுகநாவலர் ஈ) வ.உ. சிதம்பரனார்

7. கையெழுத்தை மின்வரிகளாக மாற்றித்தரும் செயலி

அ) விசைப்பலகை ஆ) கையெழுத்து உணரி இ) சொற்செயலி ஈ) பேச்சுரை மாற்றி

8. வலைப்பூவினை உருவாக்க நாம் முதலில் தொடங்க வேண்டியது

அ) மின்னஞ்சல் கணக்கு ஆ) பயனர் கணக்கு இ) முகநூல் கணக்கு ஈ) வலைப்பூ கணக்கு

9. இணையவெளியில் வழங்கப்படும் நமக்கான கட்டணமில்லா ஊடகக்களம்.

அ) புலனம் ஆ) மின்னஞ்சல் இ) முகநூல் ஈ) வலைப்பூ

10. இந்தியப் பல்கலைக்கழக மானியக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைய இதழ்

அ) திண்ணை ஆ) பதிவுகள் இ) வார்ப்பு ஈ) கீற்று

பொருந்தாத இணையைக் கண்டறிக

11. அ) தேடுபொறி - உலவி ஆ) தரவிறக்கம் - தரவேற்றம்

இ) வருடி - தரவு ஈ) இணக்கி – அருகலை

12. அ) எழுத்துரு – ஒருங்குறி ஆ) மோசில்லா–பிங்

இ) தமிழ்நெட் 97 – தமிழ் 99 ஈ) விக்கிப்பீடியா– விக்கிமீடியா

சரியா? தவறா?

13. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைச் சுட்டுக.

இணைய நிருவாகம்,

1. இணையத்திற்கெனத் தனி நிருவாக அமைப்பு ஏதும் இல்லை.
2. இணையக் கூட்டமைப்பு என்பது, பல நிறுவனங்கள் பங்கு வகிக்கும் ஒரு நிறுவனம்.
3. கூகுள் என்னும் நிறுவனம், இணைய முகவரிப் பதிவை நிருவகிக்கிறது.
4. கூகுள், ஒரே முகவரி இருவருக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

அ) 1, 2 ஆ) 2, 3 இ) 3, 4 ஈ) 1, 4

14. பின்வரும் கூற்றுகளில் தவறானவற்றைச் சுட்டுக.

கையெழுத்து உணரி,

1. நம் கையெழுத்தை மின்வரிகளாக மாற்றும் தொழில்நுட்பமாகும்.
2. இதில் கையால் எழுதினால் அவற்றை உடனடியாக மின்வரி (Digital text) களாகப் பெறமுடியும்.
3. கணினி, செல்பேசியில் கூகுள் வழங்கும் கையெழுத்து உள்ளீடு சிறப்பாகச் செயல்படவில்லை.
4. தட்டச்சுச் செய்யத் தெரிந்தவர்கள் கணினியை எளிதாகப் பயன்படுத்த இம்மென்பொருள் உதவுகின்றது.

அ) 1, 2 ஆ) 2, 3 இ) 3, 4 ஈ) 1, 4

கூற்றும் காரணமும்

15. சரியான விடையைக் கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்வு செய்க.

கூற்று (கூ) : எழுத்துருக்களைக் கணினியில் பயன்படுத்த வேண்டுமானால், அம்மொழியின் ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வோர் எண்ம மதிப்பைக் கொடுக்க வேண்டும்.

காரணம் (கா) : கணினி 0,1 ஆகிய இரும (Binary) எண்களைத்தான் புரிந்து கொள்ளும்.

அ) கூற்று சரி, காரணம் தவறு.

ஆ) காரணம், கூற்று இரண்டும் தவறு.

இ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம்.

16. சரியான விடையைக் கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்வு செய்க.

கூற்று (கூ) : உ.வே.சா அவர்கள் அரிதின்முயன்று தமிழ் இலக்கியங்களின் ஓலைச்சுவடிகளைச் சேகரித்தார்.

காரணம் (கா) : அவற்றைக் கொண்டு சுவடிச்சாலை அமைக்க விரும்பினார்.

அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

ஆ) கூற்று சரி, காரணம் தவறு.

இ) காரணம், கூற்று இரண்டும் தவறு.

ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம்.

பொருத்துக

17. 1. இணையக்குற்றம் – அ. Skype

2. இடைமுகச்செயலி – ஆ. WIFI

3. இசுகை – இ. Interface Tool

4. அருகலை – ஈ. Cyber Crime

அ) 1–ஈ	ஆ) 2–இ	இ) 3– அ	ஈ) 4–ஆ
ஆ) 1–இ	ஆ) 2–ஈ	இ) 3– அ	ஈ) 4–ஆ
இ) 1–அ	ஆ) 2–ஆ	இ) 3– இ	ஈ) 4–ஈ
ஈ) 1–ஆ	ஆ) 2–இ	இ) 3– ஈ	ஈ) 4–ஆ

18. 1. எழுத்துரு – அ. உள்ளீட்டுக்கருவி

2. குறியேற்றம் – ஆ. மென்தமிழ்

3. விசைப்பலகை – இ. எழுத்து வரிவடிவம்

4. தமிழ்ச் சொற்செயலி – ஈ. எண்ம மதிப்பு

அ) 1–ஈ	ஆ) 2–இ	இ) 3– அ	ஈ) 4–ஆ
ஆ) 1–இ	ஆ) 2–ஈ	இ) 3– அ	ஈ) 4–ஆ
இ) 1–அ	ஆ) 2–ஆ	இ) 3– இ	ஈ) 4–ஈ
ஈ) 1–ஆ	ஆ) 2–இ	இ) 3– ஈ	ஈ) 4–ஆ

கோடிட்ட இடத்தை நிரப்புக

19. இணையத்தில் தமிழ் இடம்பெறக் காரணமாய் இருந்தவர்______________.

20. இந்தியாவில் இணையவழியே கல்வி வளங்களையும் வாய்ப்புகளையும் வழங்க நிறுவப்பட்ட முதல் அமைப்பாக விளங்குவது________________.

குறுவினா

1. இணையம் என்றால் என்ன?

2. ஆர்பா நெட் (ARPANET) உருவாக்கப் பட்டதன் நோக்கம் யாது?

3. சீரான வள இடங்காட்டி என்பது யாது?

4. இணைய முகவரி எவ்வாறு அமையும்?
5. உ.வே.சா பதிப்பித்த நூல்களைப் பட்டியலிடுக.
6. சி.வை.தாமோதரனார் பதிப்பித்த நூல்கள் யாவை?
7. எவையேனும் நான்கு தட்டச்சு இடைமுகச் செயலிகளைக் குறிப்பிடுக.
8. பேச்சுரை மாற்றி நமக்கு எவ்வாறு உதவுகிறது?
9. இணையத்தில் கிடைக்கும் மின் அகராதிகளுள் நான்கினைச் சுட்டுக.
10. மின்னஞ்சல் சேவை என்பது யாது?

சிறுவினா

1. இணையத்தின் தோற்றம் குறித்து எழுதுக.
2. குறும்பரப்பு வலைப்பின்னல் என்பதை விளக்குக.
3. இணைய இணைப்பைப் பெறச் செய்யவேண்டியவை யாவை?
4. இணையம் எவ்வாறு இயங்குகிறது?
5. வேறுபடுத்துக: உலவி – தேடுபொறி.
6. மதுரைத்திட்டம் பற்றி எழுதுக.
7. உலகளாவிய வலைப்பின்னல்–வரையறு.
8. சொற்பிழைதிருத்தி, இலக்கணப் பிழைதிருத்தி ஆகியவை நமக்கு எவ்வகையில் உதவுகின்றன?
9. எந்திர மொழிபெயர்ப்பு குறித்து விவரி.
10. வலைப்பூ உருவாக்கத்தில் உள்ள நுட்பங்களைத் தருக

நெடுவினா

1. இணையத்தளங்களின் வகைமைகளை விளக்குக.
2. இணையத்தில் தமிழ் இடம்பெற்ற விதத்தினை விவரி.
3. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தோற்றத்தையும் குறிக்கோளையும் எழுதுக.
4. இடைமுகச்செயலிகளின் பட்டியலைத் தருக.
5. உமக்கான வலைப்பூவை உருவாக்க நீவிர் பின்பற்றவேண்டிய படிநிலைகள் யாவை?
6. இணைய இதழ்களின் தன்மையும் போக்கும் குறித்து எழுதுக.
7. தமிழ் உள்ளீட்டுத் தொழில்நுட்பம் குறித்து விளக்குக.
8. முகநூல், புலனம், கீச்சகம் குறித்து எழுதுக.
9. இணையத்தை நீவிர் எவ்வாறு பாதுகாப்பாகப் பயன்படுத்துவீர்?
10. அன்றாட வாழ்வில் இணையப் பயன்பாடு குறித்து உம் தோழன்/ தோழிக்கு அனுப்புவதற்காக மின்னஞ்சல் ஒன்றை உருவாக்குக.

படிப்போம் பயன்படுத்துவோம்

1. **ஏதேனும் ஓர் இடைமுகச் செயலியைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் உரைப்பகுதியை உன் ஆசிரியரின் துணையோடு கணினியில் பிழையில்லாமல் தட்டச்சு செய்து பழகுக.**

"பொல்லாக் கடலே! தென்னவனுக் குரிய எத்தனை ஊர்களைத் தின்றுவிட்டாய்! எத்தனை ஆறுகளைக் குடித்து விட்டாய்! எத்தனை மலைகளை விழுங்கி விட்டாய்! பழங்காலத்தில் பஃறுளி (பல்துளி) என்ற ஆறு பாண்டியனுக்கு உரியதாயிருந்ததென்று தமிழ்க் கவிதை கூறுகின்றதே! அந்த ஆற்றின் அழகைச் சங்கப் புலவராகிய நெட்டிமையார் பாடினாரே! அந்த ஆறெங்கே? அதன் பரந்த மணல் எங்கே? அவ் வாற்றைக் கொள்ளை கொண்ட உன் கொடுமையை அறிந்து, கண்ணீர் வடித்தானே எங்கள் பாண்டியன்! அன்று அவன் அழுத குரல், இன்றும் உன் காற்றின் வழி வந்து என் காதில் விழுகின்றதே! இம்மட்டோ உன் கொடுமை? எங்கள் பழந்தமிழ் நாட்டின் தென்னெல்லையாகத் திகழ்ந்த குமரியாற்றையும் குடித்து விட்டாயே! 'தமிழகத்தின் வடக்கு எல்லை திருவேங்கடம், தெற்கு எல்லை குமரியாறு' என்று பனம்பாரனார் பாடினாரே! அக் குமரியாறு எங்கே? 'தமிழ் கூறும் நல்லுலகத்தின்' எல்லையாக நின்ற அந்த ஆற்றையும் கொள்ளை கொண்டு எங்கள் வரம்பழித்து விட்டாயே! பஃறுளி யாற்றுக்கும் குமரி யாற்றுக்கும் இடையே அமைந்த நாடு நகரங்கள் எல்லாம், இருந்த இடந் தெரியாமல் உன் கொடு மையால் கரைந்து ஒழிந்தனவே! அந் நிலப்பரப்பில், அடுக்கடுக்காக உயர்ந்து ஓங்கி நின்ற குமரி என்னும் பெருமலையும் உன் பாழும் வயிற்றில் பட்டு ஒழிந்ததே! ஐயோ! நீ எங்கள் மண்ணைக்கடித்தாய்; ஆற்றைக் குடித்தாய்; மலையை முடித்தாய் இப்படி எல்லாவற்றையும் வாரி எடுத்து வயிற்றில் அடக்கும் உன்னை 'வாரி' என்று அழைப்பது சாலவும் பொருந்தும்! நீ வாரி உண்டாய்! நீங்காத வசையே கொண்டாய். உன் கொடுமையால் தமிழ் நாடு குறுகிற்று; என் உள்ளம் உருகிற்று.

2. கையெழுத்து உணரியைப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட தொடர்களை உள்ளீடு செய்க.

அ) இணையத்தளங்களைத் தகுந்த முன்னெச்சரிக்கையோடு பயன்படுத்த வேண்டும்.

ஆ) இணையத்தளங்களில் தனிப்பட்ட தகவல்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றைப் பதிவேற்றம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

இ) பரிசு விழுந்துள்ளது எனப் போலியாக வரும் மின்னஞ்சல்களை நம்பி ஏமாறக்கூடாது.

ஈ) தொடர்ச்சியாக நெடுநேரம் கணினியைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

3. கீழ்க்காணும் தொடர்களுக்குரிய விடைகள் கட்டங்களில் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டறிந்து, வட்டமிடுக.

அ) உலக அளவில் பல கணினி வலை அமைப்புகளின் கூட்டிணைப்பான பெரும் வலையமைப்பு.

ஆ) இணைய முகவரிப்பதிவை நிருவகிக்கும் அமைப்பின் பெயர்.

இ) இணையத்தில் இணைப்பைப் பெற இது தேவை.

ஈ) இஃது ஓர் உலவி.

உ) இணையத்தில் முதன்முதலில் ஏறிய இந்திய மொழி.

ஊ) உ.வே.சா. ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பித்த நூல்களுள் ஒன்று.

எ) தமிழைக் கணினியில் உள்ளீடு செய்ய உதவும் ஓர் உள்ளீட்டுக் கருவி.

ஏ) நாம் பேசுவதை மின்னெழுத்துகளாக மாற்றித் தருவது.

ஐ) இணையவெளியில் நமக்காக வழங்கப்படும் கட்டணமில்லா ஊடகக்களம்.

ஒ) சமூக ஊடகங்களுள் ஒன்று.

இ	ணை	ய	ம்	வ	ஐ	லி	த	யா	கூ
தொ	ழி	ல்	ள	ரு	கா	ய	மி	ர்	டு
லை	லை	அ	த	டி	ன்	செ	ழ்	லை	வ
க்	க	பே	மோ	ம	ணி	மே	க	லை	இ
கா	ரு	ச்	சி	கை	ல	ப	ப்	சை	வி
ட்	அ	சு	ல்	மு	கா	பூ	உ	ல	வி
சி	லை	ரை	லா	க	ம்	க	ச	ச்	கீ
ப்	பே	மா	ப	நூ	ற	ற்	வே	தி	ப
ப	சி	ற்	ய	ல்	ற்	லை	ழை	மி	த
ம்	வ	றி	ர்	றை	கு	உ	ள்	ளீ	டு

4. உங்களுக்கான வலைப்பூவை உருவாக்கிவிட்டீர்களா? அதில், உடல்நலம் என்னும் தலைப்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பதிவேற்றம் செய்யுங்கள். பதிவேற்றம் செய்வதற்குமுன் அவற்றிலுள்ள மயங்கொலிப் பிழைகளை நீக்க மறந்துவிடாதீர்கள்.

அ) மாளை வேலைகளில் கடர்க்கறையில் உளாவி வருதல் நண்று.

ஆ) நால்தோறும் மேற்கொல்லும் உடர்பயிர்ச்சி, நம் உடளை நோய் அனுகாமல் காக்கும்.

இ) நம் உடளும் மணமும் தூய்மையானால், நம் சொள்ளும் செயளும் தூய்மையாகும்.

ஈ) நோயின்றி வாள விறும்பினால், விடிவதர்க்குமுண் எலுந்து குழிர்ந்த நீரில் குழிக்க வேன்டும்.

உ) நண்கு பசித்த பிண்ணறே உனவு உன்னுதல், உடள் நளத்தைக் காக்கும்.

5. மின் அகராதியைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்களுக்குப் பொருளறிந்து வருக.

அ) Access ஆ) Adaptor இ) Back up ஈ) Blogger உ) chat

ஊ) Chips எ) Design ஏ) Desktop ஐ) Encoding ஒ) Encyclopedia

6. படைப்பாற்றல்

அ) மின்னஞ்சலும் கடிதமும் கற்பனையாகப் பேசுவதுபோல் ஓர் உரையாடல் எழுதுக.

ஆ) வலைப்பூ ஒன்றைத் தொடங்கி உம் படைப்புகளைப் பதிவேற்றம் செய்து பழகுக.

7. செயல்திட்டம்

அ) தமிழ் விக்கிப்பீடியாவில் கணக்கினைத் தொடங்கி உங்கள் கட்டுரைகளைப் பதிவேற்றம் செய்க.

ஆ) உம் பள்ளிக்கான வலைப்பூவின் முகப்பினை வடிவமைக்க.

இணையச்செயல்பாடு

சுவடிக்காட்சியகம்

சுவடிகளைப் புரட்டிப் பார்ப்போமா !



படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கத்திற்குச் செல்க.
2. நூலகம் என்னும் தெரிவுக்குள் கொடுக்கப்பட்டிருக்கும் சுவடிக்காட்சியகத்துள் செல்க. அதிலுள்ள அறிமுகவுரையைச் சொடுக்கிச் சுவடிகள் குறித்த விவரங்களை அறிக.
3. இலக்கணம், சங்க இலக்கியம், காப்பியங்கள், சமய இலக்கியங்கள் முதலான தெரிவுகளுள் ஒன்றைத் தேர்வுசெய்து, அவற்றின் ஓலைச் சுவடிகளைப் பார்க்க.

   எடுத்துக்காட்டாக, இலக்கணத்தைத் தேர்வுசெய்து, அதில் தொல்காப்பியம் என்பதைச் சொடுக்கி, அதன் ஓலைச்சுவடிகளைப் பார்வையிடலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1

படி 2



படி 3

சுவடிக்காட்சியகம் இணையப் பக்கத்தின் உரலி

http://www.tamilvu.org/ta/library-suvadi-html-suvd0swf-162081

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

பார்வை நூல்கள்

1. கவிதையியல்

வ. எண்	பார்வை நூல்கள்	நூலாசிரியர்கள்
1	நவீன கவிதை (கருத்தரங்கக் கட்டுரைகள்)	முனைவர் து. சீனிச்சாமி,
2	கசடதபற இதழ் தொகுப்பு	சா. கந்தசாமி,
3	மணிக்கொடி இதழ் தொகுப்பு	சிட்டி(பெ.கோ.சுந்தரராஜன்)
		அசோகமித்திரன்
		ப. முத்துக்குமாரசாமி
4	ஈரோடு தமிழன்பன் கவிதைகள் (தொகுதி – 4)	வ. ஜெயதேவன்,
5	புதுக்கவிதை இலக்கணம்	முனைவர் இரா. இராசேந்திரன் (தேவிரா)

2. கதையியல்

வ. எண்	பார்வை நூல்கள்	நூலாசிரியர்கள்
1	கதையியல்	பூரணச்சந்திரன்
2	படைப்புக்கலை	மு. சுதந்திரமுத்து
3	நவீனத் தமிழிலக்கிய அறிமுகம்	ஜெயமோகன்
4	எழுதும் கலை	ஜெயமோகன்
5	தமிழில் முதல் சிறுகதை	மாலன்
6	நகுலன் வீட்டில் யாருமில்லை	எஸ். ராமகிருஷ்ணன்
7	போர்ஹேயின் வேதாளம்	எச். ஜி. ரசூல்
8	சார்வாகன் கதைகள்	சார்வாகன்

3. அரங்கவியல்

வ. எண்	பார்வை நூல்கள்	நூலாசிரியர்கள்
1	நாடகக் கலை	ஔவை டி. கே. சண்முகம்
2	அரங்க ஆட்டம்	அஸ்வகோஷ்
3	தமிழ் நாடகம் – நேற்று இன்று நாளை	முனைவர் மு. பகவதி
4	பேசும் கலை	கு. ஞானசம்பந்தன்
5	மேடையில் பேசலாம் வாருங்கள்	அறந்தை நாராயணன்
6	ஊருக்கு நல்லது சொல்வேன்	தமிழருவி மணியன்

4. இலக்கணவியல்

வ. எண்	பார்வை நூல்கள்	நூலாசிரியர்கள்
1	இலக்கண வரலாறு	புலவர் இரா. இளங்குமரன்
2	தொல்காப்பியத் தொடரியல்	செ. வை. சண்முகம்
3	இலக்கணத்தில் தொடரியல் கற்பிக்கும் முறைகள்	கி. நாச்சிமுத்து
4	தமிழ்மொழி வரலாறு	டாக்டர். சு. சக்திவேல்
5	தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு	வ. ஜெயதேவன்
6	மொழிபெயர்ப்பு நுட்பம் – ஓர் அறிமுகம்	இ. முருகையன்

5. ஊடகவியல்

வ. எண்	பார்வை நூல்கள்	நூலாசிரியர்கள்
1	இதழியல் கலை	முனைவர் மா. பா. குருசாமி
2	தமிழ் இதழ்களின் கட்டமைப்புக் கூறுகள்	முனைவர் நா. வேலம்மாள்
3	இதழியல் நுணுக்கங்கள்	முனைவர் ஸ்ரீ. குமார்
4	பத்திரிகைகளின் வகைகளும் வேறுபாடுகளும்	லேனா தமிழ்வாணன்
5	எல்லாம் தரும் இதழியல்	மா. லெனின்
6	பாரதியின் கருத்துப்படங்கள்	ஆ. இரா. வேங்கடாசலபதி

6. கணித்தமிழியல்

வ. எண்	பார்வை நூல்கள்	நூலாசிரியர்கள்
1	கணினித் தமிழ்	இல. சுந்தரம்
2	தமிழும் கணினியும்	ராதா செல்லப்பன்
3	இணையம் கற்போம்	மு. இளங்கோவன்
4	NCERT 12 ஆம் வகுப்புப் பாடநூல் Graphic Design for interactive media chap–12 page 135	NCERT
5	சிங்கப்பூர் தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2012, 2014 பல்கலைக் கழகப் புகுநிலை	துரையரசன்

மின் தரவுகள்

- www.tamilvu.org
- eluthu.com
- keetru.com
- azhiyasudargal.blogspot.in
- malaigal.com
- sirukathaigal.com
- azhiyasudargal.blogspot.in
- malaigal.com
- www. eegarai.net
- sekarsgz.blogspot.in
- www.tamilheritage.org
- ncert.nic.in/textbook
- www.textbookcorp.tn.nic.in
- ta.wikipedia.org
- www.projectmadurai.org
- www. eegarai.net
- http://www.kattaikkuttu.org
- http://ramasamyezhuthukal.in
- http://siragu.com